தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—149

பொருளாதார ஆய்வு நூல் - II

(TEXT BOOK OF ECONOMIC ANALYSIS)

ஆசிரியர்
எட்வர்ட் நெவின்

தமிழாக்கம்
கோ. இராதாகிருட்டினன், எம்.,ஏ.,
பொருளாதாரப் பேராசிரியர்,
அரசர் கல்லூரி, புதுக்கோட்டை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—April, 1967

B.T.P. No. 149

Textbook of Economic Analysis

EDWARD NEVIN

Translation

G. RADHAKRISHNAN

PRICE Rs. 7–00

This translation of 'Textbook of Economic Analysis' by Edward Nevin is published by arrangement with Macmillan and Company, London.

Printed by

THE SUNDAY TIMES PRESS,
69, Peters Road, Madras-6

அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வியமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்லமெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன் வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வாணிகவியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'பொருளாதார ஆய்வு நூல்—II'** என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 149ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 184 நூல்கள் வெளிவந் துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலை மண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக்கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத் துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

மடல் VI

பணவியலும் பாங்கியலும்

மடல் VII

வேலைக் கோட்பாடு

மடல் VIII

பன்னாட்டுப் பொருளாதாரம்

பொருளாதார ஆய்வு நூல் - II

மடல் VI

பணவியலும் பாங்கியலும்

20. பணவியல், பாங்கியலின் தன்மை
(The Nature of Money and Banking)

1. பணம் ஏன் தேவைப்படுகிறது ?

பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்தல், உற்பத்தி செய்த பண்டங்களைப் பிற பண்டங்கள் பணிகளுக்குப் பரிவர்த்தனை செய்தல் ஆகிய நடவடிக்கையை மையமாகக் கொண்டே பொருளாதார வாழ்வு இயங்கிவருகிறது. நாம் முன்னோர் இடத்தில் ஆராய்ந்தபோது, தனி நபர்களும் நாடுகளும் உற்பத்தியில் தன்னிறைவு (self-sufficiency) பெறுவதை நோக்கமாகக் கொண்டிருத்தலைவிட, எந்தப் பொருள்களைத் தாம் சிறப்பாகச் செய்யமுடியுமோ அப் பொருள்களைச் செய்வதிலேயே தேர்ச்சித் திறன் (specialization) அடைவது இலாபமானதென் பதனைத் தெளிந்தோம். தொழிற் பகுப்பு (division of labour), தேர்ச்சித் திறன் (specialisation of labour) இவற்றினின்றும் பெறக் கூடிய இலாபங்கள் வெகு அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அவற்றைப் புறக்கணிப்பதரிது. பரிவர்த்தனை என்பது அவசியமானதொரு செயலாகும். மக்கள், தங்களது பொருளாதாரத் தேவைகளைப் பொறுத்தவரையிலும் தந்நிறைவுடையவர்களாக இல்லாதிருக்கும்போது, தாம் தம்முடைய தேர்ச்சித் திறனால் (specialisation) என்ன பொருள்களை உற்பத்தி செய்கின்றார்களோ அவற்றைப் பரிவர்த்தனையாகக் கொடுத்துவிட்டு, தமக்கு வேண்டியனவும் தாமே உற்பத்தி செய்துகொள்ள முடியாதனவும்

ஆகிய பொருள்களைப் பெறல் வேண்டும். இவ்விதந்தான் அவர்கள் தேர்ச்சித் திறனுல் கிட்டுகின்ற இலாபத்தையும், பரிவர்த்தனை யால் கிட்டுகின்ற இலாபத்தினையும் பெறுகின்றனர். ஈண்டு, நாம் ஏற்கெனவே மூன்றும் அத்தியாயத்தில் கண்ட ஒன்றை மனத்தில் கொள்ளவேண்டும். கொடுக்கப்பட்டுள்ளதொரு வருமானத்தில் மக்கள், வேறு பிறருடைய பொருள்களையல்லாது தங்களின் பொருள்களையே நுகர்வதைக் காட்டிலும் அதிகமான அளவு மன நிறைவைப் (a higher degree of satisfaction) பரிவர்த்தனையின் (exchange) மூலம் பெறக்கூடும் என்பதனை மூன்றும் அத்தியாயத் தில் கண்டோம்.

பண்டங்களைக் கொடுத்துவிட்டுப் பண்டங்களைப் பெறுவதற் காகவே பரிவர்த்தனை முறை (the process of exchange) கடைப் பிடிக்கப்பட்டது. ஆயினும், நடைமுறையில் மக்கள் இவ்வாறு பரிவர்த்தனை செய்துகொள்வதில்லை. ஓர் உற்பத்தியாளர் தனது உற்பத்திப் பொருள்களை மற்றப் பொருள்களுக்காகப் பரிவர்த் தனை செய்துகொள்வதில்லை; பணத்திற்காகவே பரிவர்த்தனை செய்கிருர். தான் பிறரிடமிருந்து பண்டங்களைப் பெறவேண்டு மாயின், பணம் கொடுத்தே அவற்றைப் பெற்றுக்கொள்கின்ருர். எனவே, பரிவர்த்தனை முறையில், கூடுதலான ஒரு நிலை (an extra stage) புகுத்தப்படுகிறது. பண்டங்களைப் பண்டங்களுக்காகப் பரிவர்த்தனை செய்வதைக் காட்டிலும் [இம் முறை பண்டமாற்று முறை (barter) எனப்படும்] மக்கள் தம் பண்டங்களைப் பணத்திற் காகப் பரிவர்த்தனை செய்கின்றனர்; பிறகு பணத்தைப் பரிவர்த் தனை செய்து தாம் விழையும் பண்டங்களைப் பெறுகின்றனர். பரிவர்த்தனை முறையில் இது கூடுதலாகப் புகுத்தப்பட்டதொரு சிக்கலாகும். இச் சிக்கலானது போதிய அளவிற்கு இடர்ப்பாடு களையும் குழப்பத்தினையும் விளைவித்ததென்பதனைப் பின்னர் காணப்போகின்ருேம். இத்தகைய சிக்கலானதொன்று ஏன் புகுத்தப்படல் வேண்டும்?

பண்டமாற்று முறையைக் காட்டிலும் பணத்தின்மூலம் மறைமுகமாகப் பரிவர்த்தனையை நிகழ்த்துவதில் மூன்று முக்கிய நன்மைகள் இருக்கின்றன. முதலாவதாக, பணத்தைப் பயன் படுத்துவதால் பரிவர்த்தனை முறையே (the process of barter) மிக வும் எளிதாக்கப்பட்டுள்ளது. பண்டமாற்றுச் செய்வதில் ஈடு பட்டுள்ள இரு நபர்களில் ஒருவர், மற்றவர் எப் பொருளினைத் தர

முன்வருகின்ருரோ அதனையே ஏற்கத் தயாராக இருக்கவேண்டும்; இதனைச் சொல்லுதலில் காணப்பெறும் இடர்ப்பாடுகளைக் காட்டிலும் நடைமுறையில் இன்னும் அதிகமான இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. நான் ஒரு கைக்கெடிகாரம் செய்பவன் (watch maker) என வைத்துக்கொள்வோம். நான் செய்த ஒரு கைக் கெடிகாரத்தைப் பண்டமாற்ருகக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக ஒரு ஜோடி கால் புதையரணங்கள் (a pair of shoes) பெற விழைகின்றேன் எனில், கால்புதையரணங்களைக் கொடுக்கத் தயாராக இருப்பதோடு நான் செய்யும் வகைக் கைக்கெடிகாரத்தினை அவைகளுக்குப் பதிலாகப் பெற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கும். யாராவது ஒருவரை நான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்; இவ்வாறு ஒருவரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் நெடுங் காலமாகக்கூடும். இத்தகைய பண்டமாற்று முறையில் தன் மனைவிக்கு ஆடை வாங்க விழையும் கருமான் ஒருவர் (a black-smith) அல்லது ஒரு மிதிவண்டியை (cycle) வாங்க முயலும் ஒரு ரொட்டி தயாரிப்பாளர் (baker) படக்கூடிய இடர்ப்பாடுகளை எளிதாக ஊகித்தறியலாம்.

இந்தக் கதை இத்துடனே முடிந்துவிடவில்லை. தொழில் தேர்ச்சித்திறனும் பகுப்பும் (specialisation and division of labour) உள்ளதோர் உலகத்தில் பண்டமாற்று முறையில் பரிவர்த்தனை முறை இயங்க முடியாது. ஒருவர் ஒரு பொறியியல் தொழிற் கூடத்தில் (engineering workshop) ரயில் நீராவி இயந்திரங்களைச் (locomotives) செய்யும் ஐயாயிரம் தொழிலாளர்களில் ஒருவராகப் பணியாற்றுகிருரென்ருல், அவர் தனது வாழ்க்கைக்கு இன்றியமையாதனவற்றை (necessities of life) எந்தப் பொருளைப் பண்டமாற்ருகக் கொடுத்துப் பெறக்கூடும்? ஒரு காவல்துறையாள் (policeman) தனது உழைப்பின் ஆக்கத்தை (product of labour) எவ்வாறு பண்டமாற்றுச் செய்யக்கூடும்? கார் ஓட்டுபவர் ஒருவரால் தனது உணவைப் பெறுவதற்கு நூறு கல் தொலைவிலுள்ள ஒரு விவசாயிக்கு எதனைப் பரிவர்த்தனையாகக் கொடுக்க முடியும்? எனவே, பண்டமாற்று முறையானது கணிசமான அளவிற்குத் தேர்ச்சித் திறனை அடைந்துள்ள உற்பத்தி முறையிலோ, அல்லது மிகச் சாதாரணமானவையும் (simplest) வெகுவாக யாவரும் பயன்படுத்தக்கூடியனவாயுமுள்ள பொருள்களைத் தவிர்த்து மற்றப் பொருள்களை உற்பத்தி செய்யும் ஓர் உற்பத்தி முறையிலோ பொருந்தாததொன்ருகும்.

ஆகவே, பொருளாதார வாழ்வில் பணமானது ஆற்றுகின்ற முதலாவதும் முக்கியமானதுமான பணி யாதெனில், அது ஒரு 'மாற்று மத்திமமாக' (medium of exchange) இருத்தலேயாம். பணமானது பரிவர்த்தனையை (exchange) வாங்குதல் (buying), விற்றல் (selling) என இருவேறு செயல்களாகப் பிரிப்பதுடன், விற்பனையாளர் தன்னிடம் பண்டங்களை வாங்குகின்றவரிடமிருந்தே தனக்கு வேண்டிய பண்டங்களை வாங்கிக்கொள்ளவேண்டும், அல்லது வாங்குபவர் தன்னிடம் பண்டங்களை விற்பவரிடமே தனக்கு வேண்டிய பண்டங்களையும் வாங்கிக்கொள்ள வேண்டுமென்கிற நியதியையும் நீக்குவதாக உள்ளது. இத்தகையதொரு சூழ்நிலை ஏற்படுவதால், உற்பத்தியாளர்கள் (producers) தங்களது பண்டங்களை விற்பனை செய்வதற்கு மிகத் தகுதியான இடத்தைக் கண்டுபிடிப்பதில் தங்களது முழுக் கவனத்தையும் செலுத்த முடியும்; இதைப்போன்றே வாங்குபவர்களும் தாங்கள் கொள்முதல் செய்ய விழையும் பண்டங்களை எங்கு மிக மலிவாகக் கொள்முதல் செய்யக்கூடுமென்பதில் தங்களது முழுக் கவனத்தையும் செலுத்துதல் இயலும். இம் முறையால் தேர்ச்சித் திறன் (specialisation) வளர்க்கப்படுகிறது. மேலும், சிலர் உற்பத்திக்கு திடப்பொருள் எதனையும் தமது பங்காக ஆற்றுது உற்பத்திப் பணியினைத் தமது பங்காகச் செலுத்துபவராக இருக்கலாம்; அதுவும் அப்பணியினுல் முழுப் பண்டத்தினையும் உற்பத்தி செய்வதாக அல்லாமல் அப் பண்டத்தினை உற்பத்தி செய்யும் பலரில் தாமும் ஒருவராக இருக்கலாம். இத்தகைய ஒருவருக்கு அப் பண்டத்தில் அவருடைய பங்கிற்குச் (share) சமமான அளவிற்குப் பணத்தைக் கூலியாகக் கொடுக்க இயலும். அப் பணத்தினைக்கொண்டுதான் விழைகின்றவற்றை அவர் வாங்கிக்கொள்ளலாம்.

பணத்தின் மற்றொரு பணி அது 'மதிப்பளவையாகப்' (measure of value) பயன்படுவதாகும். அதனை ஓர் அலகாக (unit) வைத்துப் பல்வேறு பண்டங்களின் தராதர மதிப்பினைக் (relative values)கூற முடிகின்றது. பண்டமாற்று (barter) அடிப்படையிலுள்ள ஒரு பொருளாதார முறையில், சான்ருகப் பார்ப்போமானுல், ஓர் அந்தர் (hundredweight) கச்சாப் பருத்திக்கு (raw cotton) எத்தனை மின்விளக்குக் குமிழ்கள் (electric-light bulbs) சமம், அல்லது ஒரு டன் நிலக்கரியைப் (a ton of coal) பெறுவதற்கு எத்தனை ஊற்றுப் பேனுக்களைப் (fountain pens) பரிவர்த்தனையாகக் கொடுத்துப் பெறமுடியும் என்பன போன்றவற்றைத்

தீர்மானிப்பது இடர்ப்பாடானதும் காலவிரயமானதுமான ஒரு செயலாகவே இருக்கும். இவ்வாறு தராதர மதிப்புகளை நிர்ணயிக்கும் வேலையினை ஒவ்வொரு பரிவர்த்தனைச் செயலிலும் மேற்கொள்ள வேண்டியிருப்பதோடு, ஒரு பண்டத்திற்கு நிகராகப் பரிவர்த்தனை செய்வதற்கு முன்வருகின்ற பண்டங்களைப் பொறுத்தும், பரிவர்த்தனையில் ஈடுபட்டுள்ள குறிப்பிட்ட நபர்களைப் பொறுத்தும் தராதர மதிப்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டியனவாகவுள்ளன. சான்றாக, நான் ஒருவரிடம் மீன்களைப் பரிவர்த்தனை செய்துவிட்டுக் கிண்ணங்களையும் (cups) சிறு தட்டுகளையும் (saucers) கொள்ளலாமென முனைகின்றேனென வைத்துக் கொள்வோம். முதலில், அம் மனிதர், கிண்ணங்களையும் சிறு தட்டுகளையும் இவ்வாறு மீனுக்காகக் கொடுக்கத் தயாராக இருக்கின்றாரா இல்லையா என்பதனை ஆராய்வது ஒரு பிரச்சினையாகும்; அவர் மீன்களைப் பெறுவதில் ஆர்வமுடையவராக இருக்கின்றாரா இல்லையா என்பதனை ஆராய்வது மற்றொரு பிரச்சினையாகும்.

பண்டமாற்று முறையில் பண்டங்களின் தராதர மதிப்பை நிர்ணயிப்பது, காலத்தினையும் முயற்சியையும் விரயமாக்கும் ஒரு செயலாகவே இருக்கும். இதுமட்டுமன்று; இதில் இன்னும் குறைபாடுகள் உள. இத்தகையதொரு முறையில் பரிவர்த்தனைகளின் விளைவை (the outcome of exchanges) நிச்சயமாகக் கூற முடியாதாகையால், தொழில்முயல்வோர்கள் எவரும் தேவைக்கு முன்பாக உற்பத்தியினை ஏற்று நடத்த முன்வரத் துணிவதில்லை. தேர்ச்சித்திறன் (specialisation), பேரளவு உற்பத்தி (large-scale manufacture) ஆகியவற்றைக்கொண்ட உற்பத்தி முறையில் தொழில் முயல்வோன் (entrepreneur), உற்பத்திப் பொருள் விற்கப்படுவதற்கு வெகு முன்பாகவே கூலிகள் (wages), வட்டி (interest), வாரம் (rent) என்று உற்பத்திப் பொருளின் மதிப்பில் ஒரு பெரும் பகுதியைக் கொடுத்தாகவேண்டும். உற்பத்திப் பொருள் என்ன விலைக்கு விற்கப்படக்கூடுமென்பதனை ஏதோ ஓரளவிற்காவது எதிர்பார்த்தல் இயலாமற்போகுமாயின், உற்பத்தியில் உள்ள ஆபத்தானது (risk) மிக அதிகமானதாகவே இருக்கும்; தொழில்முயல்வோருக்கு (entrepreneur), உற்பத்திச் செலவுகளை (costs of production) உற்பத்தியானது விற்கப்படக் கூடிய விலையோடு ஒப்பிட்டு நோக்கி, அதன்மூலம் ஒரு பண்டத்தின் உற்பத்தியானது இலாபந் தரக்கூடியதொரு திட்டமாக

இருக்ுமா இல்லையா என்பதனை முடிவு செய்வதும் இயலாமற் போகும்.

பணத்தின் மூன்றாவது பணி, அது செல்வத்தின் நிலைக்களனாக் (store of wealth) விளங்குவதே. பண்டமாற்று முறையில் சேமிப் புக்கு இடமில்லை. சான்றாக, பணிகளைச் செய்யும் மக்கள் (person rendering services), தங்கள் உற்பத்தியினின்றும் (பணிகளை) ஒரு பகுதியை எடுத்து வருங்காலத் தேவைக்கு என்று ஒதுக்கிவைத்துக் கொள்ளவியலாது. இதேபோன்று ஒரு பண்டத்தின் ஒரே ஒரு பகுதியைமட்டும் உற்பத்தி செய்யும் ஒருவர், தனது உற்பத்தியின் ஒரு பகுதியைச் சேமித்துவைத்துக்கொள்ள இயலாது ; காரணம், அவர் உருப்படியாக எதனையும் செய்யாததே. அப்படியே ஒருவர் ஒரு முழுப் பொருளையும் தான் உற்பத்தி செய்வதாக இருப்பினும், அப் பொருளைச் சேமித்துவைப்பதில் இடர்ப்பாடுகள் நிறைய உண்டு. பெரும்பாலான பண்டங்கள் நீண்ட நாளைக்குச் சேகரித்து வைக்கப்படும்போது பொருளளவிலோ (physically) அல்லது அதன் மதிப்பிலோ குன்றுவனவாகவுள்ளன. அப்படியே பண்டங் களைச் சேமித்துவைப்பதானது சாத்தியமாக இருப்பினும், பண் டங்களைப் பல ஆண்டுகட்குச் சேமித்துவைத்தலில் பல தீமைகள் உள. ஒரு நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி தனது வயோதிக காலத்தில் பயன்படுத்துவதற்காக நிலக்கரியைச் சேமிக்க முனை கின்றாரெனக் கொள்வோம். இவரது செயலில் எத்தனை இடர்ப் பாடுகள் உள்ளனவென்பதை எளிதில் கற்பனை செய்து பார்க்க முடியும். செல்வத்தை ஓரளவு ஒதுக்கிவைத்து அதனை இடர்ப் பாடுகளின்றிச் சேமித்துவைக்க இயலாதெனில், எதிர்காலத் தேவைகளைச் சமாளிப்பதெங்ஙனம் ? அல்லது, உற்பத்தியை அதிகரிக்கத் துணை செய்யும் முதல் ஆக்கத்தினைத் (capital formation) தோற்றுவித்தல் எப்படி? இவ்விடர்ப்பாடுகள் யாவற் றிற்கும் பணமே (money) தீர்வு காண்பதாகவுள்ளது. ஓர் உற்பத்தி யாளர் பருப்பொருளியலான (physical) பண்டங்களைச் சேமித்து வைப்பதைக்காட்டிலும் பணத்தைச் சேமித்துவைப்பாராகில், எதிர்காலத்தில் தனக்குத் தேவையான நோக்கங்களுக்கு அதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பணம் இல்லாதபோது ஒருவர் கடன் வாங்கவேண்டுமெனில் குறிப்பிட்ட பண்டங்களைத்தான் கடனாகப் பெறமுடியும். தற்காலத்தில் முதல் வைத்துத் தொழில் செய்வதற்குப் பல்வேறு மக்களிடமிருந்தும் நிலையங்களி னின்றும் (institutions) பெறப்பட்ட பணத்தொகைகளிலிருந்தும்

நிதியளிக்கப்படுவதைப் போன்றதொரு முறை, அப்போது சாத்தியமில்லை.

மிக அதிகமான வளர்ச்சியினையுடையதொரு பொருளாதார முறையில் காணப்படும் இன்றியமையாத அம்சங்களில் பெரும்பாலானவை—தேவையை எதிர்பார்த்துச் செய்யப்படும் பேரளவு உற்பத்தி (large-scale production) பரவலான மாற்று (wide-spread exchange), முதல் குவிப்பு (capital accumulation)—ஆகியவை பணத்தைப் பயன்படுத்துவதுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. உண்மையில் பணம் இல்லையாயின், பரிவர்த்தனை, உற்பத்தி, சேமிப்பு இவைகள் ஒரு பொருளாதார அமைப்பில் வளர்ச்சி அடைய முடியாது. அப்படிப் பணமின்றி இருக்கும் ஒரு பொருளாதார முறையின் வளர்ச்சி, ஆதிவாசிகளின் நிலையில் என்ன வளர்ச்சி இருந்ததோ அந்த வளர்ச்சிதானிருக்கும்! இத்தகையதொரு வளர்ச்சியே, தங்களது 'பொருளாதார நடவடிக்கைகளை இன்னும் பண்டமாற்றின் அடிப்படையில் செய்துவரும் சில சமூகத்தினரிடம் காணப்படுகிறது.

2. திறமையான பணத்திற்கான தகுதிகள் (Requirements for an Efficient Money)

பணத்திற்கு அதன் பணிகளைக் கொண்டுதான் விளக்கந்தர முடியும். இதனால் மாற்று மத்திமமாக, மதிப்பளவையாக, செல்வத்தின் நிலைக்களனாகப் பணிபுரியும் எதுவும் பணம் எனப் பொருள்படும். எது பணத்தின் வேலைகளையெல்லாம் செய்கின்றதோ அதுவே பணமாகும். இன்னும் முறையாகவும் இதற்கு விளக்கம் சொல்லலாம். 'நீர்மை' (liquidity) என்னும் சொல்லிற்கு இதனை 'ரொக்கநிலை' எனவும் அழைக்கலாம்—'செல்வத்தை. எந்த வகையாகவும் (into any form) இழப்பு அல்லது காலம் நீட்டித்தல் இன்றி மாற்றி அமைத்துக்கொள்ளும் ஒரு திறன்' என்று பொருள் சொல்லக்கூடுமெனின், பணத்தைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம் ; "அதனை வைத்துக்கொண்டிருப்பவருக்குப் பூரண 'நீர்மையை' அளிக்கவல்ல எந்த ஒரு பொருளும் பணமெனப்படும்" என விளக்கலாம். இதனால் விளங்குவதென்ன ? ஒரு பண்டமானது, அது பணமாக இருக்கவேண்டுமெனில், எந்த வகையான பண்டங்கள் அல்லது பணிகளுக்கும் பரிவர்த்தனையாகவும், கடன்களைத் தீர்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும் இருக்கவேண்டும். எந்தச் சரிநுட்பமான உறுபொருளால்

(precise substance) பணம் உருவாக்கப்பட வேண்டும் அல்லது அதன் உருவம் (shape), அளவு (size) இவை எத்தகையனவாக இருத்தல் வேண்டுமென்பனவெல்லாம் வசதியையும் (convenience) வழக்கத்தையும் (convention) பொறுத்தனவாகும்; இதில் எது முக்கியமெனில், பணமென்பது பூரண 'நீர்மையை' (ரொக்க நிலையை) அளிக்கவல்லதாக இருக்கவேண்டுமென்பதே.

வரலாற்றின் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தோமானால், பல்வேறு உறுபொருள்களும் (substances), பண்டங்களும், பல்திறப்பட்ட சமூகத்தினரால், பல்வேறு காலங்களில் பணமாகப் பயன்படுத்தப் பட்டனவென்று விளங்கும். அவற்றுள் சிப்பிகள் (shells), விலங்கினங்களின் பற்கள் (animal teeth), குறிப்பிட்ட வகைக் கற்கள் (particular types of stones), கால்நடைகள் (cattle), எல்லாவகையான உலோகங்கள் (all kinds of metals) ஆகியவைகள் இடம் பெற்றிருந்தன. போருக்கு முந்திய ஜெர்மனியில் (in post-war Germany) சிகரெட்டுகள் (cigarettes) பெரிதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதொரு மாற்று மத்திமமாக இருந்தன. சமீப நூற்றுண்டுகளில், பெரும்பாலான மேற்கத்திய நாடுகள் (western countries) பொன்னையும் (gold) வெள்ளியையும் (silver) பணமாகப் பயன் படுத்திவந்தன. இந்த நூற்றுண்டில் அவை தாள்பணத்தால் (paper money) வழக்கினின்றும் வெளியேற்றப்பட்டுவிட்டன. அதுவரையிலும் அந் நாடுகளில் பொன்னும் வெள்ளியுமே பணமாகப் பயன்படுத்தப்பட்டுவந்தன. இவ்வாறு பணமாகப் பயன் படுத்தப்பட்ட பொருள்கள் யாவற்றிலும் பொதுவாகக் காணப் பட்ட தகுதி யாதெனில், அவை பயன்படுத்தப்பட்ட சமூகங்களின் நம்பிக்கைக்கு (confidence) அவைகள் பாத்திரமானவைகளாக இருந்தன. ஒரு பொருளானது பணத்தின் பணிகளை நிறைவேற்ற வேண்டுமாயின், அதற்கு இன்றியமையாத தகுதி இதுவே. அதாவது, சமூகம் அதனை ஒரு மாற்று மத்திமமாகவும், கடன்களைத் தீர்ப்பதற்காகவும் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நம்பிக்கை இல்லாதுபோகுமாயின், பண மேலாண்மையாளர்கள் (monetary authorities) பணம் என்று நன்கு விளங்கும்படி முத்திரையிட்டு வெளியிடும் எந்த ஒன்றும் பணமாக நீடிக்க முடியாது. வரலாற்றின் ஏடுகளை ஊடுருவிப் பார்க்கும்போது, ஒரு காலத்தில் தவக்கமேதுமின்றி ஏற்கப்பட்டனவும், நிலையானவைகளாக இருந்தனவுமாகிய பண அலகுகள் (monetary units), பொதுமக்கள் ஏதாவது ஒரு சில காரணங்களை முன்னிட்டு

அவைகளின்மீது வைத்துள்ள நம்பிக்கையை இழந்ததால், அவைகள் வல்லந்தமாகப் புழக்கத்தினின்றும் வெளியேற்றப்பட்டன. பணமாகப் பயன்படுத்தப்படும் பண்டத்தை வைத்துக்கொண்டு ஒருவர் தனக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொள்ளலாம் என்று தான் நம்புகின்றவரையிலும், தன்னுடைய பண்டங்கள் பணிகளுக்குப் பதிலாக அப் பணத்தை (அது எந்த வடிவத்திலிருந்தபோதிலும்) ஏற்றுக்கொள்வார். ஆனால், ஒன்று, பணமானது அது எந்த மதிப்பிற்கு ஏற்கப்படுகிறதோ ஏறக்குறைய அதே அளவுள்ள பொருள்களைப் பெறமுடியாதுபோயின், மக்கள் அப் பணத்திற்காகத் தங்களது பண்டங்களையும் பணிகளையும் கொடுப்பதற்கு இசையமாட்டார்கள். இதன் காரணமாக, பணமானது வழக்கினின்றும் மறைந்துபோகும்.

முக்கியத்துவத்தில் சற்றுக் குறைவான இன்னும் சில பண்புகள் உண்டு—குறிப்பாக, இப் பண்புகள் பணம் செய்யப்படும் மூலப்பொருள் சம்பந்தப்பட்டவைகளாகும். பணமானது ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு எளிதாக இருக்கவேண்டும் (portable). சான்றாக, ஈயத்தால் செய்யப்பட்ட பணம் (lead money) அதிகப் பளுவாக இருக்குமாதலால் ஆளுவதற்கு வசதியாக இருக்காது. இதைப்போன்றே பணமானது ஒருமித்த தன்மையானதாகவும் (homogeneous) இருக்கவேண்டும்; அதாவது, பணத்தின் ஓர் அலகும் மற்றோர் அலகும் ஒருமித்து இருக்கவேண்டும். அப்படியில்லையெனில், மக்கள் பெரும்பாலும் மற்ற அலகுகளைக் காட்டிலும் (other units) சில அலகுகளுக்கே அதிக மதிப்பை அளிக்கக்கூடும். மேலும், பரிவர்த்தனையின்போது பணத்தின் பல திறப்பட்ட அலகுகள் கொடுக்கப்படுமானால், பல்வேறு விலைகளைக் கோரும் ஒரு போக்கு (tendency) தோன்றக்கூடும். மூன்றாவதாக, பணமானது வசதியான அலகுகளாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் பகுக்கப்படத்தக்கதாக (divisible) இருக்கவேண்டும். மேலும், அது நீடித்து உழைக்கக்கூடியதாகவும் (durable) இருக்கவேண்டும்; அதனைப் பத்திரப்படுத்திவைக்கும்போது அதன் தரம் (quality) குறைந்துபோகக்கூடாது. மக்கள் பசுக்களைப் (cows) பணமாகப் பயன்படுத்தத் தயங்கக்கூடும்; காரணம், இவ்வாறு பசுக்களைப் பணமாகப் பயன்படுத்துவதில் ஓர் ஆபத்து உளது. பசுவைப் பணமாகக் கொள்ள நேர்ந்தால், அப் பசுவை (பணத்தை) வைத்து ஒரு பொருளை வாங்குவதற்கு முன்னரே பசு இறந்துபடவும் நேரிடலாம்.

மேற்கூறிய பண்புகளனைத்தும் பொன்னுக்கும் வெள்ளிக்கும் உள்ளன. எனவேதான், பல நூற்றுண்டுகளாக அவைகள் மட்டுமே பணமாகப் போற்றப்பட்டுவந்தன. அவை நீடித்து உழைக்கக்கூடிய உலோகங்களாகும். அவற்றின் எடைக்கு (weight) ஒப்ப அவைகளின் மதிப்பு மிக அதிகமானதாகும்; மேலும், ஆண்டுதோறும் அவைகளைச் சுரங்கங்களினின்றும் வெட்டி எடுக்கும் ஆண்டு உற்பத்தியானது, அவைகளின் நிலவுகின்ற மொத்த இருப்பில் (total stock in existence) ஒரு சிறு பகுதியேயாகும். எனவே, அவைகளின் மொத்த அளிப்பில் (total supply) எல்லையின்றி ஏற்றஇறக்கங்கள் (unsettling fluctuations) ஏற்படுவதற்கும் வழியில்லை. ஆயினும். இவைகளும் இன்னும் மற்ற நிகழ்ச்சிகளும், அவைகள் பணத்தின் தகுதிக்கு இன்றியமையாதன என்று கூறுவதைக்காட்டிலும், வசதியானவைகள் என்றுதான் கூறலாம். பல பொருள்கள், அவைகள் மிகவும் வசதியற்றவைகளாக இருந்தபோதிலும், நெடுங்காலம்வரையிலும் பணமாகப் பயன்படுத்தப்பட்டுவந்துள்ளன. சான்றாக, ஊஆப் (Uap) என்னும் பசிஃபிக் தீவிலுள்ள மக்கள், பல நூற்றுண்டுகளாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கடத்திச் செல்வதில் மிகவும் இடர்ப்பாடுள்ள அளவிற்கு மிகப் பெரிய கற்களைப் (enormous stones) பணமாகப் பயன்படுத்தி வந்தனர்.

3. பாங்குச் செலாவணியின் தன்மை (The Nature of Bank Credit)

பணம் என்னும் சொல் பொதுமக்களின் மொழியில் அன்றாட வாழ்க்கையில் கையாளுகின்ற பணநோட்டுகள் (notes), நாணயங்கள் (coins) இவற்றையே குறிப்பதாக உள்ளது. இவைகள் நிச்சயமாகப் பணமே. ஆனால், தற்காலப் பொருளாதார அமைப்பில், பேரங்களில் (transactions) பத்தில் ஒன்பது பங்கு—வாணிப நிறுவனங்கள், அரசாங்கத் துறைகள், தனிப்பட்ட நபர்கள் நிகழ்த்தும் பேரங்கள்—நோட்டுகள், நாணயங்கள் இவற்றால் நிகழ்த்தப்படுவதில்லை. அவை பாங்குச் செலாவணியால் நிகழ்த்தப்படுகின்றன. அப்படியாயின், பாங்குச் செலாவணி என்பது என்ன? எவ்வாறு அது, தற்காலப் பொருளாதார அமைப்பில், பரிவர்த்தனைகளை நிறைவேற்றி வைக்கின்ற மிக முக்கிய சாதனமாக அமைந்தது?

பிரிட்டனைப் பொறுத்தமட்டில், பாங்கு நோட்டுகள் (bank notes), பாங்குச் செலாவணி ஆகியவற்றின் வரலாறு பதினேழாம்

நூற்றுண்டில் தோன்றியதெனக் கூறலாம். அப்போது நடந்த உள்நாட்டுப் போரின் காரணமாக (Civil War) செல்வந்தர்கள் தங்களுடைய விலைமதிப்புள்ள சொத்துகளை (valuable assets) —குறிப்பாகப் பொன் பாளங்களை—பொற்கொல்லர்களிடம் (goldsmiths) கொடுத்துவைப்பது வழக்கமாக இருந்தது. பொற்கொல்லர்கள் இவைகளை அடிக்கடி கையாளுவது வழக்கமாகையினுல், அவர்கள் இருப்பறைகளையும் (vaults) பாதுகாப்பான அறைகளையும் வைத்திருப்பது வழக்கம். மேலும், அவர்கள் நாணயமானவர்களென (integrity) மக்களால் மதிக்கப்பட்டும் வந்தனர். இத்தகைய சொத்துகள் பொற்கொல்லர்களிடம் வைப்பாக வைக்கப்பட்டதும், பொற்கொல்லர்கள் அவைகளைப் பெற்றுக்கொண்டதற்காகவும், அவைகளை சம்பந்தப்பட்ட வைப்பாளியின் சார்பில் தாம் வைத்திருப்பதற்காகவும், சொத்துகளின் மதிப்பு இன்னதெனவும் ஆகிய விளக்கங்களைக்கொண்ட ஓர் இரசீதை (receipt) சம்பந்தப்பட்ட வைப்பாளிக்குக் கொடுப்பார்கள். சொத்துகளின் உரிமையாளர் கேட்கும்போது அவற்றைத் திருப்பிக்கொடுத்துவிடுவதாக ஒரு நிபந்தனையும் இந்த இரசீதில் அடங்கியிருக்கும்.

இந்தக் காலத்தின்போது பொன் நாணயங்கள் (gold coins) புழக்கத்திலிருந்தன. யாவரும் அரசாங்கத்தின் நாணயசாலைக்குப் பொன் பாளங்களைக் கொண்டுபோய்க் கொடுத்து, அவற்றை நடப்பில் உள்ள பொன் உட்கிடையைக்கொண்ட பொன் நாணயங்களாக அவற்றை உருக்கி அச்சடித்துப் பெற்றுக் கொள்ளலாம். பொற்கொல்லரிடம் பொன்னை வைப்பாக (deposit) வைத்திருப்பவர்கள் தங்களுடைய கடன்களைச் செலுத்த விழையும்போது. அவர்கள் தங்களது இரசீதுகளை சம்பந்தப்பட்ட பொற்கொல்லரிடம் கொடுத்துவிட்டுப் பொன்னைப் பெற்று, அவைகளை நாணயசாலைக்குக் கொண்டுசென்று நாணயங்களாக அச்சடித்துப் பின்னர் கடன் கொடுத்தவர்களுக்குக் கடனைத் திருப்பி அடைப்பர். நாளடைவில் இத்தகைய கடனடைப்பு முறையில் ஒரு மாற்றம் செய்யப்படுமாயின், அது இடர்ப்பாட்டினையும் செலவையும் மிச்சப்படுத்துமெனத் தோன்றியது. அதாவது, பொன் பாளங்களைப் பொற்கொல்லரிடமிருந்து மீட்டுப் பிறகு அவற்றை நாணயசாலைக்கு எடுத்துச் சென்று அச்சிட்டுக்கொள்ளுதலைக் காட்டிலும், பொற்கொல்லரின் இரசீதையே கடன் கொடுத்தவருக்குக்

(creditors) கொடுத்து, அந்த இரசீதில் கண்ட சொத்தின் உரிமையானது கடனாளியிடமிருந்து கடனீவோனுக்கு மாற்றப் பட்டுவிட்டதாகப் புறக்குறிப்பும் செய்து (endorse), கடனை எளிதாகத் திருப்பி அடைத்துவிடலாம் என்பது தெளிவா கியது. கடனீவோன், பொற்கொல்லரானவர் நாணயமும் நேர்மையுமானவர் என்று நம்பும்பட்சத்தில், இந்த இரசீ தையே பொற்கொல்லரின் இருப்பறையில் பொன் நாணயங்கள் வடிவில் வைத்திருக்கும் பொன்னைச் செலுத்தியதாகவே கருதிப் பெற்றுக்கொள்வார். உண்மையில் இம் முறையானது கட னீவோன் (creditor), கடனாளி (debtor) ஆகிய இருவருக்குமே மிக்க வசதியானதாகக் கருதப்பட்டது.

இந்த நிலையின்போதுதான் தற்காலத்தில் மிகவும் பழக்க மான 'பாங்கு நோட்டு' (bank note) என்பது தோன்றியது. பொற்கொல்லரின் இரசீதே (receipt)—இரசீது அளிக்கும் பொன்னையன்று—கடன்களைத் திருப்பி அடைப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஈண்டு ஒன்றைக் கவனிக்கவேண்டும். அதாவது, இரசீதானது இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுதலில் நம்பிக்கையே (confidence) முக்கியப் பணியினை ஆற்றுகின்றது. கடனீவோர்கள் (creditors) பொற்கொல்லரின் வகையுள்ளமை யிலும் (solvency) நேர்மையிலும்(honesty) நம்பிக்கை வைத்ததால் தான் அவருடைய இரசீதை ஏற்றனர். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் இத்தகைய இரசீதுகள் கடன்களைத் தீர்க்கும் வகையான் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குக் கைமாறிச் சென்றுகொண்டே யிருக்கக்கூடும். இதில் மற்றுமொன்றும் கவனிக்கத்தக்கது. இவ்வாறு கைமாறிச் செல்வதில் எந்த ஒரு நிலையிலும் யாரும் இரசீதைச் செலுத்திப் பொன் பாளத்தைக் (அது ஆரம்பத்தில் எவ்வளவு பொன் பாளத்திற்காகக் கொடுக் கப்பட்டதோ அதனை) கொடுக்கும்படி கேட்பதில்லை. இந் நிகழ்ச்சியை ஏறக்குறையத் தொடர்ந்தே அறுதியிட்ட தொகைகளுக்கான (fixed sums) இரசீதுகளை வெளியிடுதல்—£ 50, £100 ஆகிய தொகைகளுக்கான இரசீதுகளை—சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் அதிக வசதியாக இருக்குமென்பதைப் பொற் கொல்லர்கள் உணர்ந்தனர். அப்படி வெளியிடுவதன்மூலம் சம்பந்தப்பட்டவர்கள் அவைகளைக்கொண்டு தங்களின் பல் வேறு தொகைகளைக்கொண்ட பேரங்களுக்குக் (transactions) கணக்குத் தீர்த்துக்கொள்ள முடியுமென்பதையும் உணர்ந்தனர்.

இத்தகையதோர் ஏற்பாடு, இரசீதுகளைத் தற்காலத்திய பாங்கு நோட்டிற்கு (the modern bank note) இன்னும் நெருக்கத்தில் கொண்டுவந்தது.

ஆயினும், இந் நிலைவரையிலும் பாங்குச் செலாவணி (credit) என்பது தோன்றவில்லை. பொற்கொல்லரின் இரசீதுகள் ஏற்கப் படுவதற்கு அவருடைய 'வகைமை' (credit) அல்லது வணிகத் தகைமை (business standing) என்பது முக்கியக் காரணியாக இருந்தது. இக் கருத்தில்தான் மேற்படி 'credit' என்னும் சொல் ஆட்சியில் இருந்துவந்தது. இந்த நிலையின்போதும் பொற் கொல்லரின் இரசீதுகள் அவருடைய இருப்பறையிலுள்ள (vaults) பொன்னால் தாங்கப்பட்டே (backed by) வந்தன; இந் நிலையில் ஒவ்வொருவரும் (பொற்கொல்லரின் நேர்மையைக் கருத்தில் வைத்து நோக்கும்போது), அவருடைய இரசீதுகள் ஒவ் வொன்றும் ஒரேசமயத்தில் ஏற்பு செய்யப்படத்தக்கதாகவே (honoured) இருந்துவந்தன. ஒருவகையில் பொன் புழக்கத்தி லிருந்ததாகவே கூறவேண்டும்; இரசீதுகள் கைமாற்றம் செய்யப் படுவதற்கு வசதிமிக்கதொரு சாதனமாகவே பயன்பட்டு வந்தன. நாளடைவில் பொற்கொல்லருக்கு ஒன்று புலப்பட லாயிற்று. தனது இரசீதுகள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குக் கைமாறிச் சென்றுகொண்டே இருக்கின்றனவென்றும், ஏதோ ஒரு சமயத்தில்தான் இரசீதைப் பெறுகின்ற ஒருவர் தன்னை அணுகி இரசீதுக்குப் பதிலாகப் பொன்னைத் தருமாறு கேட்கின்ற ரென்பதும் பொற்கொல்லருக்குத் தெரியவந்தது. இவ்வாறு பொன்னைத் தருமாறு வேண்டுபவர், வழக்கத்திற்குப் புறம்பான தோர் ஐயப்பாட்டு மனநிலையைக் கொண்டவராகவோ அல்லது தனது பேரங்களுக்குப் (கூலிகளைச் செலுத்துதல் போன்ற) பொன் இரசீதுகள் பொருத்தமில்லாமலிருப்பது காரணமாக அவைகளைச் சிறிய இனங்களாக மாற்றும்பொருட்டு அவற்றிற்கு மாறாகப் பொன் பாளத்தைப் பெற்றுப் பின்னர் அப் பாளத்தைப் பொன் நாணயங்களாக ஆக்கவேண்டியதொரு தேவையிலிருப் பவராகவோதான் இருப்பார். ஆக, பொற்கொல்லர்கள் தங்க ளிடமுள்ள பொன்னின் மதிப்பிற்குக் கணிசமான அளவிற்கும் அதிகமாகவே நோட்டுகளை வெளியிடக்கூடும் என்பதும், ஆனால், பொன்னுக்கான தேவை ஏற்படும்போதெல்லாம் அதனைச் சமாளிக்கும் அளவிற்குத் தங்கள் இருப்பறைகளில் போதிய அள விற்குப் பொன்னை எப்போதும் வைத்திருந்தால்தான் இது சாத்

தியமாகும் என்பதுமான நிலை ஏற்பட்டது. இவ்வாறு அதிகமான நோட்டுகளை வெளியிடுவதில் பொற்கொல்லர்கள் லேவாதேவிக்காரர்களின் (money-lenders) செயலையே பின்பற்றினர். யாதானும் ஒரு காரணத்திற்காகக் கடன் வாங்க விழையும் மக்கள் எப்போதுமுள்ளனர். வாங்கிய கடன்களுக்கு வட்டி கொடுக்கவும் அவர்கள் தயாராக இருப்பார்கள். பொற்கொல்லர்கள் கடனுகக் கொடுத்த நோட்டுகள் (ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட நோட்டுகளைப் போலல்லாது) பொன்னுல் தாங்கப்படவில்லை (had no gold backing) என்பது ஒரு பொருட்டாகவே கருதப்படவில்லை. அந் நோட்டுகள் ஒருமித்தனவாக (identical) இருந்ததுடன், ஒன்றுக்கொன்று சமானமான தகுதியுடன்தான் புழக்கத்திலிருந்துவந்தன.

இது புதிரானதொன்றாகையால், இதனைச் சற்று விரிவாக ஆராய்தல் நலம். பொன் இரசீதுகள் (gold receipts) அல்லது பொன் சான்றிதழ்கள் (gold certificates) பரவலாக ஏற்கப்பட்ட போது, பத்தில் ஒருவர்தான் இரசீது ஏற்பு செய்யப்பட வேண்டுமெனக் (honoured) கோரிப் பொன்னைத் தருமாறு வேண்டுவார் என்ற நிலை ஏற்பட்டது. பொற்கொல்லரொருவர் £1,000 மதிப்புள்ள பொன்னைப் பத்திரப்படுத்திவைப்பதற்காகப் பெற்றுரெனின், அதில் எந்த ஒரு சமயத்திலும் £100 அளவிற்கே பொன்னை அவர் திருப்பித்தரவேண்டியிருக்கும். இதனை நன்குணர்ந்திருக்கும் பொற்கொல்லர், £9,000-க்கு கையொப்பமிட்ட பொன் ரசீதுகளைக் (gold receipts) கடன் வழங்குவார்; வழங்கிய கடனுக்கு வட்டியும் பெறுவார். எனவே, தற்போது அவர் கையொப்பத்தைக்கொண்டு பொன் இரசீதுகள் £10,000 அளவிற்குப் புழக்கத்திலிருக்கும். இந்த இரசீதுகளைப் பெற்றிருப்பவர்களில் நம்பிக்கையற்ற 10 சதவீதத்தினரில் ஒருவர் கையில் பொன் இரசீது சென்று, அவர் பொன் இரசீதை வைத்திருப்பதைக்காட்டிலும் பொன்னே மேலெனக் கருதிப் பொன்னைக் கோரும்போது, பொற்கொல்லர், தான் இருப்பறையில் வைத்துள்ள £1,000-களைக்கொண்டு அத்தகைய தேவைகளை எளிதில் சமாளித்துவிட முடியும். £10,000 மதிப்புள்ள இரசீதுகளில் சராசரியில் 10 சதவீதமே பொன்னுக மாற்றப்படுவதற்குத் திரும்பிவருமாகையால், வரக்கூடிய தேவைகளை £1,000 மதிப்புடைய பொன்னை வைத்துக்கொண்டே சமாளித்துவிடலாம். பொன்வேண்டுமென்று பொன்னைப் பெற்றுச் செல்லும் நம்பிக்கை

யற்ற நபர், £1,000 மதிப்புடைய பொன்னைப் பெற்றுச் செல்கிறாரெனக் கொள்வோம். நாளடைவில் அவர் அதனைச் செலவிட்டுவிடுவார். பொன்னானது, தங்களது சொத்தினைப் பொற்கொல்லரின் இருப்பறைகளில் வைக்க விழையும் பொற்கொல்லரின் பெரும்பான்மையான வாடிக்கைக்காரர்களில் ஒருவர் கையில் வந்து சேரும்; தற்போது £1,000 மதிப்புள்ள பொன் மீண்டும் பொற்கொல்லரிடம் வந்து சேரும். இந்தப் பொன், நம்பிக்கையற்ற 10 சதவீதத்தினரில் அடுத்து வரும் ஒரு வாடிக்கைக்காரரின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தயாராக வைக்கப்பட்டிருக்கும். பெரும்பான்மையினர், தங்களது செல்வத்தை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பொன் இரசீதுகள் வடிவில் கைமாற்றிக்கொண்டிருப்பர்; பொற்கொல்லர், தான் கொடுத்துள்ள கடன்களின்மூலம் வருமானத்தை அடைந்து கொண்டேயிருப்பார். இம் முறையானது இப்படி நீடித்துக் கொண்டேயிருக்கும். ஈண்டு ஒன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். பெரும்பான்மையினரில் 90 சதவீதத்தினர் தங்களது செல்வத்தை, சிறுபான்மையினரைப் போலவே, பயன்படுத்தாது சோம்பியிருக்கும்படி விடுவதில்லை. அவர்கள் தங்களது பரிவர்த்தனைகளைப் பொன் நாணயங்களைக் கொண்டு செய்துகொள்வதைக்காட்டிலும் பொற்கொல்லரின் இரசீதுகளைக் கொண்டே செய்துகொள்கின்றனர்.

மீண்டும் நம்பிக்கையே (confidence) இம் முறை முழுவதற்கும் அடிப்படையாக உள்ளது. மக்களில் பெரும்பான்மையினர், தாம் விற்கும் பொருள்களுக்குப் பதிலாகப் பொன் இரசீகளைத் திருப்தியுடன் ஏற்றுக்கொள்கின்றனர்; இரசீதைப் பொற்கொல்லரிடம் கொடுத்ததும் தாம் பொன்னைப் பெறக்கூடும் என்ற நம்பிக்கையை அவர்கள் கொண்டுள்ளதே இதற்குக் காரணம். அவர்களிடமிருந்து மற்றவர்களும் தங்களது பொருள்களுக்குப் பரிவர்த்தனையாக இரசீதுகளைப் பெற முன்வருகின்றனர். ஆனால், யாதானும் ஒரு காரணத்தால் நம்பிக்கை இழக்கப்படுமேயானால், அதன் பின்னர் பொற்கொல்லரின் இரசீதை ஏற்க ஒருவரும் (பொற்கொல்லர் அந்த ரசீதை ஏற்பதற்கு இசைவார் என்றோ, அவரால் ஏற்க இயலுமென்றோ நம்பிக்கை இல்லாதவர்களாக) முன்வரமாட்டார்கள். தங்களது கடன்களை அடைப்பதற்குப் பயன்படாத இரசீதுகளை ஒவ்வொருவரும் பொற்கொல்லரிடம் செலுத்திப் பொன்னைப் பெற முனைவர். பொற்

கொல்லர் தனது பொன் இருப்புகளுக்கு அதிகமாக இரசீதுகளை வெளியிட்டிருந்திருப்பாராகில், அப்போது இரசீது கொண்டு வந்து பொன்னைத் தரும்படி கேட்கும் யாராவது ஒருவர் நிச்சயம் ஏமாற்றப்படவேண்டியே இருக்கும்; பொற்கொல்லரானவர் தனது கடன்காரர்களுடைய கடன்களை உடனடியாகப் பொன்னைக் கொடுத்துத் தீர்த்துவிடுவதாக அவர்களை நம்பச் செய்தாலொழிய, பொற்கொல்லர் தன் தொழிலை விட்டேகவேண்டி வரும். பொன் இரசீதுகளைப் பயன்படுத்துவதில் உள்ள இந்த வளர்ச்சி நிலைக்கும் (this stage of development) இதற்கு முன்னரிருந்த வளர்ச்சி நிலைக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடு யாதெனில், தற்போதைய நிலையில், பொற்கொல்லரின் இருப்பறைகளில் (goldsmiths vault) இணையான (corresponding) பொன் வைப்புக்கானவுமற்ற இரசீதுகள் (அல்லது நோட்டுகள்) புழக்கத்திலிருந்துவருகின்றன. ஆரம்ப நிலையில் பல பேரங்களுக்கு (transactions) பொன்னைக் கொண்டுதான் கணக்குத் தீர்ப்பது வழக்கமாக இருந்தது; இரசீதுகள் பொன்னை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றும் சாதனங்களாகவே இருந்தன. இரண்டாவது நிலையில் (second stage), பொற்கொல்லருடைய செலாவணியே (credit) பெரும்பாலான பரிவர்த்தனைகளில் (majority of exchanges) பயன்படுத்தப்பட்டது. பொற்கொல்லரின் இரசீதுகளின்மீது நம்பிக்கை வைக்கப்படும்வரையில் அவருடைய செலாவணியானது கடன்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது; ஆகவே, அதுவே பணமாயிற்று.

தற்போது பொற்கொல்லர்கள் ஏறக்குறைய மறைந்தே விட்டனர். செலாவணிச் சிருட்டிப்பைப் பொறுத்தமட்டிலும் அவர்களது தொழிலைத் தற்போது பாங்குகள் மேற்கொண்ளன. இது ஒருபுறமிருப்பினும், மேற்கூறிய நிகழ்ச்சிக் குறிப்புகள் தற்போதுள்ள நிலைக்கும் பொருந்துவனவாகவுள்ளன. தற்காலத்தில் செலாவணிக்கான காப்பு (reserve) அல்லது ஆதாரம் (backing)—அதாவது, செலாவணி தாங்கப்படுதல்—இங்கிலாந்து பாங்கின் நோட்டுகளாகவே (Bank of England notes) உள்ளன; இதேபோன்று பொற்கொல்லர்களின் இரசீதுகளுக்குப் பதில் செக்குகள் (cheques) தோன்றியுள்ளன. இவற்றைப்பற்றியெல்லாம் விரிவாக அடுத்த அத்தியாயத்தில் காண்போம். செக்குகளின் தோற்றமானது வசதியின் வளர்ச்சியைக் காட்டுகின்றதேயொழிய, வேறு

புதிய மாற்றங்களைக் கூறுவதாக இல்லை. பொற்கொல்லரின் இரசீதானது ஒரு குறிப்பிட்ட அளவு பொன்னைத் திருப்பித் தருவதற்கான ஒரு வாக்குறுதியாகும் (promise); ஆரம்ப வைப்பாளியால் அந்த இரசீது புறங்குறிக்கப்படும்போது (endorsed) வாக்குறுதியின் பயன் (the benifit of promise), மூன்ருவது நபருக்கு (to a third party) மாற்றப்படுகிறது. அடிப்படையில் பார்க்கப்போனுல் செக்கும் (cheque) இதனை யொத்ததாகவே இருக்கிறது. அது வைப்பாளிக்கு (depositor) பாங்கு கொடுக்கவேண்டிய ஒரு குறிப்பிட்ட தொகையைக் குறிக்கப்பட்டுள்ள மனிதருக்கு மாற்றித் தருமாறு கோரப்படும் ஒரு வேண்டுகோளாகும் (request). நோட்டுகளைக்காட்டிலும் செக்கு வசதி மிக்கதாகும் ; ஏனெனில், தேவைப்படும் சரியான தொகையை செக்கின்மேல் எழுதிக் கொள்ளலாம். இதன்மூலம் பேரங்களைச் சரி நுட்பமாகக் கணக்குத் தீர்த்துக்கொள்ள முடியும்.

தற்காலத்திய பாங்கும் பதினேழாம் நூற்ருண்டில் பொற்கொல்லர்கள் கடைப்பிடித்த முறையினையே பின்பற்றுகிறது. யாவராலும் பணம் என்று ஏற்கப்படத்தக்க பணத்தை அடிப்படையான காப்பு ரொக்கமாக (basic reserve of cash) அது வைத்துள்ளது. வைப்பாளிகளில் (depositors) ஒரு சிறு விகிதத்தினர்தாம் (only a small proportion), தம்மிடம் வைப்பாக வைக்கப்பட்டுள்ள செல்வத்தை ரொக்க வடிவில் (in the form of cash) பயன்படுத்துகின்றனர் என்பதை பாங்கானது, தனது அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்து வைத்துள்ளது ; பெரும்பாலான வைப்பாளிகள் தங்களின் கடன்களை அடைக்கக் கடனீவோர்களுக்கு (creditors) பாங்குமீது தமக்குள்ள உரிமைகளை (claims) மாற்றுகின்றனர் (செக்குகளின்மூலம்); கடனீவோர்கள் இச் செக்குகளைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதுடன் தாம் பிறருக்குக் கொடுக்கும் கடன்களையும் செக்குகள்மூலமாகவே கொடுக்கின்றனர். பாங்கானது, தங்களது செல்வத்தை ரொக்கமாகப் பெற விழையும் சிறுபான்மையினருடைய (minority) — தற்போது இவர்கள் பன்னிரண்டில் ஒரு பங்கினராக உள்ளனர் — தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்குப் போதிய ரொக்கக் காப்புகளை (cash reserves) வைத்திருக்கின்றவரையில், தனது வாடிக்கைக்காரர்களுக்குத் தன்னிடமுள்ள ரொக்கக் காப்புகளுக்கும் மிக அதிகமாகவே கடன்களைக் கொடுக்க முடியும். பொருளாதார முறையில் நடைபெறுகின்ற பெருவாரியான பேரங்கள்

(majority of the transactions), பாங்குச் செலாவணிமூலமே நடைபெறுகின்றன. எனவே, பாங்கானது ஒரு சிறு ரொக்கக் காப்பினுலும், பாங்கு முறையில் பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கையாலும் இயங்கி வருகிறது. 1961ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிரிட்டிஷ் பாங்கு முறையில் (the British banking system) பெருமளவில் இடம் பெறுகின்ற 11 பாங்குகளின் மொத்தக் கடன் தொகையானது £8,000 மில்லியனுக இருந்தது; ஆனுல், பாங்குகளோ £664 மில்லியன் அளவிற்கே ரொக்கம் வைத்திருந்தன.

4. பாங்குச் செலாவணி பணமாகுமா ? (Bank Credit as Money)

நவீன பாங்கு முறையில் மொத்தக் கடன் தொகையில் எந்த ஒரு சமயத்திலும் ஒரு சிறிய அளவினையே திருப்பிக் கொடுக்க இயலும் என்கின்றபோது, கடனை ஒரு நபரிடமிருந்து மற்ளுருவருக்கு மாற்றுகின்ற செக்கைப் (cheque) 'பணம்' (money) என அழைக்கலாமா ? பணத்தின் பணிகளைச் (functions of money) செய்கின்ற எதுவும் பணமாகும் என்பதனை ஏற்கெனவே பார்த்தோம் — எதுவும் என்று ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது ஒரு கடனைத் தீர்ப்பதற்குப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் எந்த ஒரு பொருளும் என்று பொருள்படும். பெரும்பாலான பேரங்கள் நடைமுறையில் பாங்குச் செலாவணியால் (bank credit) நிகழ்த்தப்படுவதால்—அதாவது, செக்கின் (cheque) மூலம் —பாங்கிக் கடன் (bank debt) நிச்சயமாகப் பணமாகவே இருக்க வேண்டும். பொதுவாக, ஒரு பாங்கை நோக்கி அதன் எல்லாக் கடனீவோர்களும் (creditors) தங்கள் வைப்புகளை ரொக்கமாகத் திருப்பித் தரும்படி கூட்டமாகச் சென்று கேட்பார்களாளுல், அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு பாங்கானது பணமில்லை என்று சொல்லி மறுத்துவிடும் என்பது பொருத்தமற்ற ஒன்ருகவே இருக்கிறது. பாங்குகளின்மீது நம்பிக்கை வைத்துள்ள வரையிலும் பொதுமக்கள் யாவரும் ஒரே சமயத்தில் சென்று ரொக்கம் தருமாறு கேட்கமாட்டார்கள் ; பாங்கின் கடனில் ஒரு சிறு விகிதமே (a small proportion) எப்போதும் ரொக்கமாக மாற்றப்படுவதற்குத் தேவைப்படுகின்றது. இந்த அளவிற்கு ரொக்கம் தருவதற்கு பாங்குகள் போதிய அளவு ரொக்கத்தை எப்போதும் வைத்துக்கொண்டிருக்கும். பெரும்பாலான மக்களுக்கு, கடனீவோன் ஒருவருக்குத் தமக்கு பாங்கு கொடுக்கவேண்டிய கடனை மாற்றுவதென்பது, நோட்டுகளையும் நாணயங்களையும்

பயன்படுத்திக் கடனை அடைப்பதைப்போன்றே பயனளிப்பதாக வும், இன்னும் கூறப்போனால், நோட்டுகள் நாணயங்களைக்காட்டிலும் இன்னும் வசதிமிக்கதாகவும் உள்ளது. ஆக, பாங்கு முறைக்கு (banking system) பொது மக்களின் நம்பிக்கையே முற்றிலும் இன்றியமையாததாகவுள்ளது; அத்தகைய நம்பிக்கையில்லை யெனில் பாங்குச் செலாவணியும் பயனற்றதொன்றாகப் போய் விடும்: ஆனால், இது எந்த வகையான பணத்திற்கும் (any form of money) பொருந்தும். பிரிட்டிஷ் பொதுமக்கள் திடீரென்று ஐயத்தால் உந்தப்பட்டு பவுண்டு நோட்டுகள் (pound notes) பண்டங்களை வாங்கும் திறமையின்மீது தாம் வைத்துள்ள நம்பிக்கையை இழக்கின்றனரெனக் கொள்வோம். அப்படியாயின் பவுண்டு நோட்டுகளை ஒருவரும் ஏற்கமாட்டார்கள்; எனவே, இங்கிலாந்தின் பவுண்டு நோட்டானது (England pound notes) பணமாக இருக்காது.

தற்போது பிரிட்டனில் உள்ள மொத்தப் பண அளிப்பானது (total supply of money in Britain), பல்வகையான பணத்தைக் கொண்டதாகவுள்ளது. முதலாவது,பெரும்பாலும் செம்பினாலும் (copper) வெள்ளியாலும் (silver) செய்யப்பட்ட நாணயங்க ளாகும். இரண்டாவதாக. இங்கிலாந்து பாங்கினால் பல்வேறு இனங்களில் (various denominations) வெளியிடப்பட்ட நோட்டு களையும், ஸ்காட்லாந்து (Scotland), வடக்கு அயர்லாந்து (Northern Ireland) ஆகியவற்றிலுள்ள பாங்குகள் வெளியிட்ட நோட்டுகள் சிறிதளவையும் கூறலாம். கடைசியாக, வர்த்தக பாங்கு முறையிலுள்ள (commercial banking system) வைப்பு களையும் (அல்லது வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன்களையும்) கூறலாம். 1962 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இத்தகைய பல்வேறு இனங்களின் மொத்தத் தொகை கீழ்க் கண்டவாறு இருந்தது (தொகைகள், இத்தனை மில்லியன் பவுண்டுகள் என்பதனைக் குறிக்கின்றன):

நாணயங்கள்	213
இங்கிலாந்து பாங்கு நோட்டுகள்	2,350
இதர நோட்டுகள்	131
நோட்டுகள், நாணயங்களின் மொத்தத் தொகை	2,694
பாங்குகள் இருப்பாக வைத்திருந்த நோட்டுகளும் நாணயங்களும் தள்ளுபடி (less bank holdings)	551

பொதுமக்களிடமிருந்த நோட்டுகளும் நாணயங்களும்	2,143
வர்த்தக பாங்கு வைப்புகள்	8,574
	10,717

இவற்றுள் இங்கிலாந்து பாங்கு நோட்டுகளே வரையறையற்றதொரு சட்டச் செலுத்தாக (legal tender) இருக்கின்றன. நாணயங்கள் £ 2 அளவிற்கே சட்டச் செலுத்தாக இருக்கின்றன. சட்டச் செலுத்து என்பது என்ன? சட்டச் செலுத்து என்பது கடனீவோர்கள் தங்கள் கடனைத் திரும்பப் பெற்றுக் கொள்வதில் சட்டப்படி ஏற்றுக வேண்டிய செலாவணியின் ஒருவகையாகும் (a form of meney). பாங்குச் செக்கு (bank cheque) சட்டச் செலுத்தல்ல. கடனீவோர், தமக்குச் சேரவேண்டிய கடன் தொகைகளை இங்கிலாந்து பாங்கின் நோட்டுகளாகத்தான் கொடுக்க வேண்டுமென்ற, தமது கோரிக்கையைச் சட்டப்படி நிறைவேற்றிக்கொள்ளலாம். ஏற்கெனவே கூறியது போன்று நடை முறையில், கடனீவோர்கள் (creditors) பாங்குச் செக்குகளைப் (bank cheques) பொதுவாக ஏற்றுக்கொள்கின்றனர். எனவே, வர்த்தகப் பாங்குகளின் (commercial banks) செலாவணியானது, பணத்தின் மொத்த அளிப்பில் மிக முக்கியமானதொரு அங்கமாக இருக்கிறது.

கடைசியாக உள்ளதொரு கருத்தும் முக்கியம் வாய்ந்ததாகும். சாதாரணப் பேச்சு வழக்கில் ‘ பணம் ’ என்னும் சொல் வருமானத்தை உணர்த்தவே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது : ஒருவர் அதிகப் பணத்தை ஈட்டுகிருர் அல்லது வாழ்க்கை நடத்துவதற்குக்கூட ஒருவரிடம் பணமில்லை என்றெல்லாம் கூறுவது வழக்கம். ஆனுல், பணம் என்பது வேறு, வருமானம் என்பது வேறு. இவைகளை ஒன்றுபடுத்தி விளக்கம் கூறுவது குழப்பத்தையே ஏற்படுத்தும். பணம் என்பது, எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்திலும் நோட்டுகள் (notes), நாணயங்கள், பாங்கு வைப்புகள் (bank deposits) ஆகியவற்றின் தீர்மானமான இருப்பைக் குறிக்கும் ; வருமான மென்பது ஒரு குறிப்பிட்ட கால அளவின் போது (over a period of time.) ஒருவரிடம் அல்லது ஒரு நிலையத்தினிடம் (institution) சேருகின்ற செல்வத்தின் உட்புகுதலாகும் (flow of wealth). உதாரணமாக, ஒருவருடைய வருமானம் அதிகமாக இருக்கலாம் ; ஆனுல், அவரிடம் பணம் இல்லாதிருக்க

லாம். அவர் தாம் பெறுகின்ற வருமானத்தை மிக விரைவில் செலவழிப்பதாலும் அல்லது தனக்குக் கிடைக்கின்ற வருமானத்தைப் பணம் தவிர்த்த மற்ற வகைகளில் சேமிப்பதாலும் அவர் பணமின்றி இருக்கக்கூடும். எனவே, பணத்தின் கணியமும் (the quantity of money) வருமானங்களின் மட்டமும் (level of incomes) எதிரிடையான இரு துருவங்களாக இருக்கக்கூடும். 1930, 1933 ஆகிய ஆண்டுகட்கிடையே ஐக்கிய அரசாங்கத்தின் நாட்டு ஆக்கமானது (National product of the United Kingdom) — அதாவது, வருமானங்களின் மட்டம் — 8 சதவீதம் குறைந்தது ; அதே சமயத்தில், நிலவுகின்ற பணத்தின் மொத்த இருப்பானது (total stock of money in existense) 9 சதவீதம் அதிகரித்தது. வருமானங்கள் (incomes) வழக்கமாக (எப்போதுமே அவ்விதமாக இல்லையாயினும்) பணமாகக் கொடுக்கப்படுவதை வைத்துக்கொண்டு பணத்திற்கும் வருமானத்திற்கும் உள்ள வேறுபாட்டின் முக்கியத்துவத்தை நாம் குறைத்துவிடுதல் கூடாது. மின்சக்தியானது (electric current) கம்பிகளின் வழியாகச் செலுத்தப்படுகிற தென்பதற்காக மின் சக்தியும் கம்பியும் ஒன்றே என்று கூறுவதற்கில்லை யல்லவா ?

மேலும் படித்தற்குரியநூல்கள்

R. S. Sayers, *Modern Banking* (5th ed., Oxford University Press, London, 1960) ch. **I**.

Sir Dennis Robertson, *Money* (Cambridge University Press, London, 1948) chs. I–III.

J. M. Keynes, *A Treatise on Money* (Macmillan, London, 1930), vol. I, chs. 1–2.

20. பிரிட்டிஷ் பாங்கு முறை
(The British Banking System)

1. வளர்ச்சி வரலாறு

பதினேழாம் நூற்றுண்டின் இறுதிவரையில் எவ்வாறு பொற்கொல்லர்கள் நோட்டு வெளியிடும் தொழிலை வளர்த்து வந்தனர் என்பதைச் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம். இந்தத் தொழில் மிகவும் இலாபமானதொன்றாக இருந்த காரணத்தால், பொற்கொல்லர்கள் இத் தொழிலில் தங்களது முழு கவனத்தையும் செலுத்திவந்தனர். தங்களது மூலதனக் காப்புகளை வைத்துக்கொண்டு அவற்றை ஆதாரமாகக்கொண்டு நோட்டுகளை வெளியிடலாம் என்று கண்ட மற்ற வணிகர்களும் இத் தொழிலில் முழு கவனத்தையும் செலுத்திவந்தனர். இவர்களனைவரும் இத்தகைய தொழிலில் முழு கவனத்தையும் செலுத்தியதன் காரணமாகத் தங்களது பூர்வீகத் தொழில்களை விட்டுவிட்டனர். கடைசியில் இவர்கள் வெளி சாதனங்களினின்றும் வைப்புகளை நிறையப் பெற்று, முழு நேர பாங்கர்களாகவே மாறிவிட்டனர்; தங்களுடைய பாங்குகளுக்கு வெளி சாதனங்களிடமிருந்தும் வைப்புகளைப் பெற்றனர். பிரிட்டிஷ் பாங்கு வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முக்கியமானதொரு பணியினை ஆற்றிய பெருமை இங்கிலாந்து பாங்கினையே (Bank of England) சேரும். இந்த பாங்கு 1694ஆம் ஆண்டுத்தோற்றுவிக்கப்பட்டது. இந்த பாங்கும் மற்ற வர்த்தக பாங்குகளைப் போலவே இயங்கி வந்தது. அப்போதைய அரசாங்கத்திற்கு அது ஒரு கடனைக் கொடுத்து உதவியதற்குக் கைமாருக, அரசாங்கம் அதற்கு இணையற்றதொரு பேருரிமையான, நிறுவன அமைப்பு உரிமைப் பத்திரத்தை (charter of incorporation) அளித்தது. இதனுல் இப் பாங்கு கூட்டுப் பங்குக் கம்பெனியாகத் தன்னை நிறுவனம் செய்துகொள்ளும் அதிகாரத்தினைப் பெற்றது. இந்த அதிகாரத்

தின்மூலம் ஏராளமான பங்குதாரர்களிடமிருந்து (share holders) வைப்புகளைப் பெற்று ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனியாக (joint stock company) அது வளர்ச்சியடைந்தது. 1826ஆம் ஆண்டு வரையிலும் இப்படிக் கூட்டுப் பங்குக் கம்பெனி அடிப்படையில், வேறு எந்த பாங்கும் இயங்க முடியவில்லை. ஒரு நூற்றுண்டிற்கு மேல், இங்கிலாந்து பாங்கானது கணிசமான அளவிற்கு வேறு எந்த பாங்கைக்காட்டிலும் அதிகமான வரவுகளைப் பெற்று பிரிட்டிஷ் பாங்கு முறையில் முதன்மையானதொரு இடம் பெற்றிருந்தது. அதனுடைய ஒப்பீடான மதிப்பு (relative value) மிக அதிகமாக இருந்த காரணத்தால், அது வெளியிட்ட நோட்டுகளுக்கு, தனிப்பட்ட பாங்குகள், பொன் காப்பிற்குப் (gold reserve) பதிலிகளாகப் (substitutes) பயன்படுத்துமளவிற்குப் பெரு மதிப்புக் கொடுத்து வந்தன.

தங்களது காப்புகளுக்கு (reserves) அதிகமாக நோட்டுகளை வெளியிட இயன்றமையால், பாங்குகள் இந்த ஒரு பழக்கத்தை மிதமிஞ்சிக் கையாள ஆரம்பித்தன. இதன் விளைவாகப் பதினெட்டு, பத்தொன்தாம் நூற்றுண்டுகளில் அவ்வப்போது பாங்கு நெருக்கடிகள் (banking crisis) ஏற்பட்டன. ஒரு பாங்கானது தான் வெளியிட்ட நோட்டுகளுக்கு, அவை பொன்னுக மாற்றப்பட நேர்ந்தபோது, பொன்னைக் கொடுக்க இயலாமற் போகுமேயானுல் இந்தச் செய்தி, அந்த பாங்கின் வைப்பாளிகளிடையே (depositors) பீதியை (panic) விளைவிக்கும். இது சம்பந்தப்பட்டதொரு பாங்கில்தான் பீதியை ஏற்படுத்துமென்பதில்லை; இன்னும் மற்றத் தனிப்பட்ட பாங்குகளிலும் பீதி பரவிச் செல்லும். பாங்குகளில் இத்தகைய பீதி நெருக்கடிகள் (runs) ஏற்படும்போது (அதாவது, நோட்டுகளை வைத்திருக்கின்ற ஒவ்வொருவரும் அவற்றை வெளியிட்ட பாங்கை நோக்கி விரைந்து சென்று நோட்டுகளைப் பொன்னுக மாற்றித் தருமாறு கேட்கும்போது), பாங்கானது தான் கொடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ள யாவற்றையும் ஒரே சமயத்தில் அதனுல் கொடுக்க முடியாதல்லவா ? இவ்வாறு பாங்குகள் பேரளவில், அடிக்கடி முறியலாயின. இத்தகைய முறிவுகள் பாங்குகளிடம், கடன் கொடுக்கும் வகையிலோ அல்லது கடன் வாங்கும் வகையிலோ சம்பந்தப்பட்டுள்ள தொழில்களில் மந்தத்தை (depression) ஏற்படுத்தும்.

இவ்வாறு திரும்பத் திரும்ப நிகழ்கிற பாங்கு நெருக்கடிகளால் (crisis) இரு பெரிய விளைவுகள் மெள்ள ஏற்படலாயின.

முதலாவதாக, தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட சட்டங்களாலும், பாங்குகள் இத்தகைய முறிவுகளால் பெற்ற துன்ப விளைவுகளின் பயனாகவும் தனிப்பட்ட பாங்குகள் ஐக்கியங்களாக (amalgamations) ஒன்று சேர்ந்து வலிமை பெற்றன. இதைவிட முக்கியமான நிகழ்ச்சி யாதெனில், இத் தனிப்பட்ட பாங்குகளின் கைக்கோளில் ஓர் அடிப்படையான மாற்றம் ஏற்பட்டதேயாகும்; பாங்குகள் குறிப்பிட்ட வாணிப பேரங்களுக்குப் பணம் கடனாகக் கொடுத்துதவுதலில் பெரிதும் அக்கறை காட்டின; நோட்டுகளை வெளியிடுதலின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்தது. இரண்டாவதாக, இங்கிலாந்து பாங்கானது மிக அதிகமான வரவுகளைப் பெற்றிருந்த காரணத்தாலும் [கூட்டு நிறுவனமாக (partnership) இல்லாமல், கூட்டுப் பங்குக் கம்பெனியாக இருந்ததன் காரணமாக], அரசாங்கத்தினிடம் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த காரணத்தாலும் பாங்கு முறை என்னும் சக்கரத்தின் குடமாக (hub) அத்துணை முக்கியம் பெற்று விளங்கியது. பாங்கு நெருக்கடிகள் ஏற்பட்டபோது, இங்கிலாந்து பாங்கானது காப்புகளிலிருந்து நோட்டுகளை அல்லது பொன் பாளங்களை (gold bullions) நெருக்கடியால் தவிக்கும் பாங்குகளுக்கு அவ்வப்போது கடன் கொடுத்துதவியது. இவ்வாறு கடனைப் பெற்ற பாங்குகள் தங்களது கடன்களைத் தீர்ப்பதன்மூலம் ‘பீதி’ என்னும் பேரலையை, அது பாங்கு முறை முழுவதையும் அடித்துக்கொண்டு போகு முன்னரே, எதிர்த்து நின்று தணிக்க முடியும். இத்தகைய சந்தர்ப்பங்களில் இங்கிலாந்து பாங்கின் காப்புகள் (reserves) தீர்ந்துபோகும்போது, அரசாங்கமானது இங்கிலாந்து பாங்கின் நோட்டுகளின் பொன் மாற்றுத் தன்மையை (convertibility) நிறுத்தி வைக்கும். அதாவது, இதன்படி இங்கிலாந்து பாங்கானது தனது நோட்டுகளுக்குப் பதிலாக பொன் கேட்கப்பட்டால் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. மேலும், இங்கிலாந்து பாங்கின் நோட்டுகளைச் சட்டச் செலுத்தாக, இது போன்ற சந்தர்ப்பங்களில், அரசாங்கமானது அறிவிக்கும். அரசாங்கம், இங்கிலாந்து பாங்கை வரையறை ஏதுமற்ற கணியங்களில் (unlimited quantities) நோட்டுகளை வெளியிடும் அதிகாரத்தை அளிக்கக்கூடுமாகையால், எந்த பாங்கிற்கும் தனது வைப்பாளிகளுக்கு வைப்புகளைச் சட்டச் செலுத்தில் திருப்பி அளிப்பதற்கு இயலாமற் போகின்றதோர் ஆபத்து ஏற்பட முடியாதல்லவா? இவ்விதமாக நெருக்கடிகள் தணிக்கப்படுகின்றன.

இந்த இரு நிகழ்ச்சிகளும் 1844 ஆம் ஆண்டில் பாங்கு உரிமைப் பத்திரச்சட்டத்தை (Bank Charter Act) உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தன. இச் சட்டமானது இங்கிலாந்து பாங்கை ஐக்கிய அரசாங்கத்தின் மைய பாங்காக (Central Bank) நிறுவியதுடன், பிரிட்டிஷ் பாங்கு முறைக்கான இன்றியமையாத அமைப்பு முறைகளையும் வகுத்துக் கொடுத்தது. இம் முறைகள் தற்போதும் பின்பற்றப்பட்டு வருகின்றன. 1844 ஆம் ஆண்டின் சட்டத்தின்படி, இங்கிலாந்து பாங்கிற்குமட்டுமே நோட்டுகளை வெளியிடும் அதிகாரம் வழங்கப்பட்டது. இதைத் தவிர்த்து ஏற்கெனவே நோட்டுகளை வெளியிட்டுக்கொண்டிருந்த தனிப்பட்ட பாங்குகளும் அவ்வாறு நோட்டு வெளியிடும் அதிகாரத்தினைத் தொடர்ந்து வைத்துக்கொள்ள (ஆனால், அவை இந்த அதிகாரத்தை அதிகப்படுத்தவோ அல்லது வேறொரு பாங்கிற்கு மாற்றவோ கூடாது) அனுமதிக்கப்பட்டன. பாங்கு முறையிலுள்ள ஏனைய பாங்குகள் தங்களின் நோட்டு வெளியிடும் அதிகாரத்தை கொஞ்சங் கொஞ்சமாகக் கைவிட்டுவிடும்படி கட்டாயப்படுத்தப்பட்டன. ஏற்கெனவே பாங்குகளிடையே பழக்கத்திலுள்ள வைப்புகள் முறைக்கு (deposit banking) நிறைய ஊக்கம் அளிக்கப்பட்டது—அதாவது, பொது மக்களிடமிருந்து நிதிகளை வைப்புகளாகப் பெறுவதும், குறிப்பிட்ட நபர்களுக்குக் கடன் கொடுப்பதும் அல்லது 'நீர்மையுள்ள' (ரொக்க நிலையான) சொத்துகளை வாங்குவதும் ஆகிய முறைக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. எனினும், 1844 ஆம் ஆண்டில் விளக்கப்பட்டதற்குப் புறம்பாக, இங்கிலாந்து பாங்கின் முக்கிய அமைப்புகளில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை. மற்ற பாங்குகளும் வளர்ச்சியில் வலுத்தன; அவைகள் ஐக்கியங்களாக (amalgamations) இணைந்து எண்ணிக்கையில் குறைந்தன. எனவே, தற்போது பிரிட்டனில் நடைபெறும் வர்த்தக பாங்கு நடவடிக்கைகளில் 95 சதவீதத்தை பன்னிரண்டிற்கும் குறைவான பாங்குகளே நடத்திவருகின்றன. 1844ஆம் ஆண்டுச் சட்டத்தால் இங்கிலாந்து பாங்கிற்குக் கொடுக்கப்பட்ட சிறப்பு நிலையானது (special position), அதனை மற்ற பாங்குகளிடம் போட்டியிட்டுச் சாதாரண பாங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலா வண்ணம் செய்துவிட்டது; பாங்கு உரிமைப் பத்திரச் சட்டத்தை இயற்றியவர்கள், இதனை ஊகித்திருக்கமாட்டார்கள் போலும்; பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதியில் இங்கிலாந்து பாங்கானது பொது மக்களிடம் கணிசமான அளவிற்கு எவ்வித பாங்கு பேரமும் வைத்துக்கொள்ளவில்லை.

இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் பாங்கு முறையின் முக்கிய அம்சங்கள் வகுக்கப்பட்டன. இவ்வமைப்பின்படி இங்கிலாந்து பாங்கானது (Bank of England) பாங்குகளின் மையமாக உள்ளது. அதுவே பாங்கு முறை முழுவதையும் கட்டுப்படுத்தியும் வழிநடத்தியும் வருகிறது. சாதாரண வர்த்தக பாங்கு நடவடிக்கைகளை அது எந்த ஒரு கணிசமான அளவிலும் மேற்கொள்வதில்லை. இங்கிலாந்து பாங்கைச் சுற்றிலும் குறைந்த எண்ணிக்கையுள்ள வர்த்தக பாங்குகள் உள்ளன. இப் பாங்குகள் பொதுமக்களிடம் பாங்குத் தொழிலை நடத்தி வருகின்றன. இவைகள் தங்களது சொந்த நோட்டுகளை வெளியிடுவதில்லை. பாங்கு முறையின் இந்த இரு பகுதிகளும் எவ்வாறு தொடர்புகொண்டுள்ளன? ஒவ்வொரு பகுதியின் வேலைகள் யாவை என்பனவற்றையெல்லாம் அடுத்துவரும் உட்பிரிவுகளில் (sections) காண்போம்.

2. இங்கிகிலாந்து பாங்கு (Bank of England)

பிரிட்டிஷ் பாங்கு முறையின் வளர்ச்சி வரலாற்றினைச் சுருக்கமாக ஆராயுமிடத்து, இங்கிலாந்து பாங்கின் நான்கு சிறப்பு இயல்புகளைக் காணலாம். இந்த இயல்புகள் யாவும், தற்போதைய ஐக்கிய அரசாங்கத்தின் பணமுறையில் (monetary systems) உள்ள பாங்கின் நான்கு பணிகளுக்கொப்பாக இருக்கின்றன. முதலாவதாக, இங்கிலாந்து பாங்கு நோட்டுகளை வெளியிடுகின்றது; அவ்வாறு வெளியிடும் சர்வாதீன அதிகாரத்தைப் பெற்றுள்ளது. 1844ஆம் ஆண்டு வரையிலும் நோட்டுகளை எந்த பாங்கும் வெளியிடலாம் என்றிருந்தமையை நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம். பாங்கு உரிமைப் பத்திரச் சட்டமானது, இங்கிலாந்து பாங்கு இரு பிரிவுகளைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்றும், அதில் ஒரு பிரிவு வெளியீட்டுத்துறை (issue department) யாக இருக்க வேண்டுமென்றும், நோட்டுகளை வெளியிடும் பொறுப்பு அதற்கே உண்டெனவும், மேற்கொண்டு புதிய நோட்டுகளை வெளியிடும் உரிமையும் அதற்கு மட்டுமே உண்டென்றும் விளக்கம் தந்தது. 1914-18 ஆகிய ஆண்டுகளில் நடந்த போரின்போது கருவூலமே (treasury) நோட்டுகளை வெளியிட்டு வந்தது. ஆனுல், 1928ஆம் ஆண்டில் இந் நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டு (withdrawn) நோட்டுகளை வெளியிடும் பொறுப்பு முழுவதுமே இங்கிலாந்து பாங்கின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. தற்போது இங்கிலாந்து பாங்கின்

நோட்டுகள் மட்டுமே புழக்கத்திலிருந்து வருகின்றன; இவற்றுடன் ஸ்காட்லாந்து (Scotland), வட அயர்லாந்து (Northern Ireland) ஆகிய இடங்களிலுள்ள ஒரு சில குறிப்பிட்ட பாங்குகள் சிறிய அளவில் வெளியிடுகின்ற நோட்டுகளும் [இந்த பாங்குகள் தாம் வெளியிடும் ஒவ்வொரு நோட்டிற்கும் இணையாக ஒரு இங்கிலாந்து பாங்கு நோட்டு ஒன்றைத் தமது இருப்பறைகளில் (vaults) வைத்திருக்க வேண்டும்] புழக்கத்திலிருந்து வருகின்றன.

1931ஆம் ஆண்டு வரையிலும் [நெருக்கடியுள்ள காலங்களில் அவ்வப்போது மாற்றுத் தன்மையானது (convertibility) நிறுத்தி வைக்கப்பட்ட காலங்கள் தவிர்த்து] இங்கிலாந்து பாங்கானது தனது நோட்டுகளைத் தேவைப்படும்போது பொன்னுகச் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டதொரு வீதத்தில் மாற்றித்தர வேண்டுமென்ற நியதி இருந்துவந்தது. சாதாரண பாங்கு ஒன்று, எவ்வாறு தன்னிடம் வைக்கப்பட்டுள்ள வைப்புகள் திரும்பத் தரப்படுமாறு தேவைப்படும்போது கொடுப்பதற்கு ஒரு குறிப்பிட்ட ரொக்கக் காப்பு நிதியை (reserve) வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நியதி உள்ளதோ அதைப் போலவே இங்கிலாந்து பாங்கும் தனது நோட்டுகளை எந்தச் சமயத்திலும் பொன்னுக மாற்றித்தரும்படி கேட்கப்படும்போது அதனை நிறைவேற்றுவதற்காகப் போதிய அளவில் பொன் காப்புகளை (gold reserve) வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நியதியுள்ளது. ஆனால், 1931 ஆம் ஆண்டு முதல் இத்தகையதொரு கடப்பாடு (obligation) இங்கிலாந்து பாங்கியிடமிருந்து எடுபட்டுவிட்டது; அது நோட்டுகளை வெளியிடுதலானது, முற்றிலும் நம்பிக்கை வெளியீட்டு (fiduciary) அடிப்படையில்தான் இருக்கின்றது. அதாவது. அதன் நோட்டுகள் மாற்றப்படுவதற்கு (பொன்னுகவோ அல்லது வேறு எவ்விதமாகவோ) பொன் அல்லது வேறு எதனுலோ தாங்கப்பட (backing) வேண்டுமென்ற அவசியமில்லை. இங்கிலாந்து பாங்கில் மக்கள் பூரண நம்பிக்கை வைத்திருந்த காரணத்தால், மேற்சொன்ன மாற்றமானது அதன் நோட்டுகளின் ஏற்புத்தன்மையை (acceptability) எவ்விதத்தும் பாதிக்கவில்லை. அதனுடைய நோட்டுகளை இன்னும் அதிகமான ஏற்புத்தன்மையை உடைய பண வகையாக (some more acceptable forms of money) மாற்றிக்கொள்ள எவருமே வேண்டுவதில்லை. 1928ஆம் ஆண்டுவரையிலும் நிறைவேற்றப்பட்ட செலாவணி, பாங்கு நோட்டுகள் ஆகியவை சம்பந்தமான பல்

வேறு சட்டங்களின்படி, இங்கிலாந்து பாங்கு வெளியிடும் நோட்டுகளின் அளவைக் கட்டுப்படுத்தும் பூரண அதிகாரம் அரசாங்கக் கருவூலத்திற்கு இருந்து வந்துள்ளது. கருவூலமானது, பாங்கிற்கு நோட்டுகளை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ அதிகாரம் அளிக்கலாம். ஆனால், ஒரு நிபந்தனை; இங்கிலாந்து பாங்கானது, தான் இரண்டு ஆண்டுகட்குமேல் கடைப்பிடித்து வந்த நோட்டுகளின் அளவை அதிகரிக்க அனுமதிக்கும்போது மட்டும், கருவூலமானது பாராளுமன்றத்தின், ஏறக்குறைய முறைப்படியான (more or less formal) சம்மதத்தைப் பெற்றாக வேண்டும்.

1844 ஆம் ஆண்டின் சட்டம், பாங்கானது தனது ஒவ்வொரு துறை சம்பந்தமான தகவல்கள் அடங்கிய ஒரு வார அறிக்கையை (weekly return) வெளியிட வேண்டுமென்று கோரியது. இந்த அறிக்கை ஒவ்வொரு புதன்கிழமை அன்றும், அந்த நாளின் முடிவின்போது பாங்கின் நிலவரம் என்னவென்பதைக் காட்டுவதாகும். 1962ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 25 ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையைச் சான்றாக எடுத்துக்கொள்வோமானால், அதில் வெளியீட்டுத் துறையின் (issue department) நிலை கீழ்க் கண்டவாறு குறிக்கப்பட்டுள்ளது.

(மில்லியன் £ களில்)

சொத்துகள் (assets)		**பொறுப்புகள்** (liabilities)	
அரசாங்கக் கடன் பத்திரங்கள்	2,373.9	வெளியிடப்பட்ட நோட்டுகள்:	
பிற கடன் பத்திரங்கள்	0·8	புழக்கத்திலிருப்பவை	2347·7
பொன் நாணயங்களும் பாளங்களும்	0·4	பாங்குத் துறையிலிருப்பவை	27·7
பிற நாணயம்	0·3		
	2,375·4		2,375·4

அறிக்கையின் பொறுப்புகள் பகுதிக்கு விளக்கம் தேவையில்லை; ஏனெனில், வெளியீட்டுத் துறையின் (issue department) ஒரே வகையான பொறுப்புகள் வெளியிடப்பட்டுள்ள நோட்டுகளே. வரலாற்றுக் கண்கொண்டு பார்க்கும்போது இவைகள் பொறுப்புகள் என்றழைக்கப்படுவதற்குக் காரணம், அவைகள்

வெளியிட்ட நோட்டுகளுக்குப் பதிலாக அறுதியிட்டதொரு வீதத்தில் (fixed rate) பொன்னைத் தருமாறு பாங்கு கேட்கப் படும் என்பதாகவே காணப்படுகிறது. ஆனால், இத்தகையதொரு நிலை தற்போது இல்லையாயினும், இருப்புநிலைக் குறிப்புக் கணக்கானது, இத்தகையதொரு தொன்றுதொட்ட முறையில் எழுதப்பட்டுவரும் வழக்கமானது இன்றும் கடைப்பிடிக்கப் பட்டே வந்துள்ளது. இதற்குக் காரணம், மாற்றத்தைக் கடைப் பிடிக்க விருப்பமின்றி இருந்தமையே. சொத்துகள் பகுதியும் இத்தகைய பழைய வழக்கத்திற்கு ஆளாகியுள்ளது. பாங்கு, தனது நோட்டுகளுக்குப் பதிலாகப் பொன்னைத் தருமாறு கேட்கப்படும்போது, அதனுடைய இந்தப் பொறுப்பைச் சமாளிப்பதற்கு அதனிடம் சொத்துகள் உள்ளன என்பதனைக் காட்டியாக வேண்டுமென்று கூறப்பட்டது. தான் கொடுக்க வேண்டியவற்றை (obligation) எப்போதும் ஏற்புசெய்யும் (honour) திறமை தனக்கு உண்டென்பதனை நிரூபிப்பதற்காகவே இவ்வாறு காட்டியாக வேண்டுமென்ற நியதி இருந்துவருகிறது. தற்போது, மரபு குறித்தும், செயலாட்சி வசதிக்காகவும் (administatrive convenience) பாங்கானது ஒரு சிறிதளவு நாண யங்களையும் பொற்பாளங்களையும் (bullions) வைத்திருப் பதைத் தவிர்த்து, பாங்கு வைத்திருக்கும் ஒரே சொத்துக் கடன் பத்திரங்களே (securities) - அதாவது, இவைகள் கடன் பெறு பவரால் தாம் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒரு குறிப்பிட்ட தேதியில் அல்லது தேதியைக் குறிப்பிடாமலும் திருப்பித் தருவதாகவும், திருப்பித் தருவதற்குள் உள்ள காலத்திற்கு அத் தொகைக்கு வட்டியைச் செலுத்துவதாகவும் அளிக்கப்படும் வாக்குறுதிகளாகும். இத்தகைய கடன்களில் பெரும் பகுதியும் பிரிட்டிஷ் அரசாங்கமானது தரவேண்டிய கடன்களாகையால், அவைகள் நோட்டுகள் வெளியிடப்படுவதற்கு வேண்டிய எவ்வகைத் 'தாங்குதலுக்குமான' (backing) முக்கியத்துவத் தைப் பெற்றுள்ளனவென்று கூறமுடியாது. (பத்தொன்பதாம் அத்தியாயத்தில் குறிப்பிட்டவாறு அரசாங்கத்தினிடமிருந்து * ஐ. ஓ. யு.க்களைப் (I. O. U.) பெற்றுக்கொண்டு — அதாவது, கடன் வாக்குறுதிகளைப் பெற்றுக்கொண்டு கடன் வழங்கும்போது

*(I. O. U.) என்பது (I owe you) என்பதன் சுருக்கமாகும். அதாவது, 'நான் உங்களுக்குக் கடன்பட்டிருக்கிறேன்', என்பதை அறிவிப்பதாகும். இச் சொல் பொதுவாகக் கடன் வாக்குறுதிகளுக்குப் பயன்படுத்தப் படுவது மரபாயிற்று.

நோட்டுகள் அதிகரிக்கப்படுகின்றன. இதைப் போன்றே நோட்டுகள் வெளியிடுவது குறைக்கப்படும்போது அரசாங்கம் தனது கடன் வாக்குறுதிகளுக்குப் பணத்தைத் திருப்பித் தந்தாகவேண்டிய நிலேயேற்படும்). உண்மையில், வெளியீட்டுத் துறையானது (issue department) தனது வார அறிக்கையைக் கணக்கிடும்போது வரலாற்று மரபைப் பின்பற்றிக் கணக்கீடு செய்கிறதே தவிர, அதில் தர்க்கரீதியான (logical) அம்சம் ஒன்றுமில்லை யென்றே கூறவேண்டும்.

பாங்கு வளர்ச்சியில் இரண்டாவது முக்கிய அம்சம், அரசாங்கத்தோடு அது கொண்டுள்ள சிறப்பான தொடர்பாகும். (அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்ததே, பாங்கின் தோற்றத்திற்கு வழி கோலிற்று.) தற்போது பாங்கானது (இங்கிலாந்து பாங்கு) அரசாங்கத்தின் பாங்காக (government's bank) இருந்து வருகிறது. வரி வருவாயினை ஆளுதல் (in the handling of tax revenue), நாட்டுக் கடனுக்கான வட்டி செலுத்துதல் (payments of interest on the national debt), கடன்களைத் தோற்றுவித்தல், திருப்பி அளித்தல் முதலிய அரசாங்க நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தின் பதிலாண்மையாக (agent) இங்கிலாந்து பாங்கு இருந்து வருகிறது. இந்த நோக்கத்திற்காக அரசாங்க வைப்புகள் (public deposits) என்றழைக்கப்படுகிறவற்றை வைத்துக்கொண்டிருக்கிறது. இவைகள் முக்கியமான வருவாய் தண்டல், செலவழித்தல் துறைகளின் (major revenue collecting and spending department) பாங்குக் கணக்குகளாகும். அரசாங்கத்தின் எல்லா வரவுகளும் (all government receipts) இக் கணக்கின் கீழ் வரவு வைக்கப்படுகின்றன; இதைப் போன்றே அரசாங்கம் செலுத்தவேண்டிய எல்லாச் செலுத்துகளும் (all payments) இதனின்றும் செலுத்தப்படுகின்றன. எனவே, ஒரு தனி நபருக்கு (private individual) ஒரு வர்த்தக பாங்கு (commercial bank) எப்படியோ, அப்படியே அரசாங்கத்திற்கும் இங்கிலாந்து பாங்கு உளது.

பாங்கு வரலாற்றின் மூன்றாவது நிகழ்ச்சி, அது பாங்கர்களின் பாங்காக (bankers bank) வளர்ந்தமையே. ஆரம்ப முதற்கொண்டே லண்டனிலுள்ள தனிப்பட்ட பாங்குகள் தங்களது காப்புகளின் (reserves) ஒரு பகுதியை இங்கிலாந்து பாங்கில் வைப்பாக வைத்திருப்பது வழக்கமாக இருந்தது. இந்த வைப்புகளையும், இங்கிலாந்து பாங்கின் நோட்டுகளையும்

அவைகள் பொன்னுக்குச் சமமாகவே மதித்துவந்தன. இந்த ஒரு பாகத்தை இங்கிலாந்து பாங்கு தொடர்ந்து ஏற்று நடத்திவந்தே யிருக்கிறது. தற்போது எல்லா வர்த்தகப் பாங்குகளும் இங்கி லாந்து பாங்கினிடம் கணக்கு வைத்துக்கொண்டிருக்கின்றன. இத்தகைய கணக்குகள் பாங்கர்களின் வைப்புகள் (Bankers Deposits) என அழைக்கப்படுகின்றன. இவ்வாறு கணக்குகளை வைத்திருப்பதன்மூலம் பாங்குகள் தங்களுக்குள்ள கடன்களைத் தீர்த்துக்கொள்கின்றன. உதாரணமாக, ஒரு நாளில் பாங்கு நடவடிக்கையினிறுதியில் கணக்குப் பார்க்கும்போது லாயிட்ஸ் பாங்கு (Lloyd's Bank) பார்க்லே பாங்கின் (Parclay's Bank) வாடிக்கைக்காரர்களுக்கு பில்லியனைக் கொடுக்க வேண்டியதாக யிருப்பதைக் கண்டால் லாயிட்ஸ் பாங்கானது தான் இங்கிலாந்து பாங்கில் வைத்திருக்கும் பாங்குக் கணக்கிலிருந்து £ 1 பில்லிய னுக்கு செக்கு எழுதி பார்க்லே பாங்கிற்குக் கொடுத்துத் தனது கடனைத் தீர்த்துக் கொள்ளும். இங்கிலாந்து பாங்கு £ 1 பில்லியனை லாயிட்ஸ் பாங்கு வைப்பினின்றும் எடுத்துப் பார்க்லே பாங்கின் வைப்பிற்கு மாற்றிவிடும்.

1960ஆம் ஆண்டுவரையிலும் வர்த்தக பாங்குகள் இங்கி லாந்து பாங்கினிடம் வைத்திருந்த வைப்புகள் பாங்குகளுக் கிடையேயுள்ள கடன்களைத் தீர்வு செய்து (clearing) கொள்வ தற்காகவே பயன்படுத்தப்படும் இயல்பானவையாகவும் (normal) வழக்க முறையானவையாகவும் (routine) ஆன தன்மை களைக் கொண்டவையாக இருந்தன. 1959ஆம் ஆண்டில், பிரிட் டிஷ் பண முறை எவ்விதம் இயங்குகிறதென்பதனை ஆராயும் பொருட்டு நியமிக்கப்பட்ட ராட்கிளிஃப் கமிட்டியானது (Radcliffe Committee) தனது அறிக்கையில் (இது ராட்கிளிஃப் அறிக்கை என வழங்கப்படுகிறது) கூறியதற்கிணங்க, இங்கிலாந்து பாங்கிற்கு கிரேட்பிரிட்டனிலுள்ள வர்த்தக பாங்குகள் (commercial banks) தங்களின் சிறப்பு வைப்புகளை (special deposits) அதனிடம் வைக்குமாறு அவைகளைக் கேட்கக்கூடிய தொரு அதிகாரம் வழங்கப்பட்டது. இத்தகைய வைப்புகள் இங்கிலாந்து பாங்கில் வைக்கப்படும் இயல்பான வர்த்தக பாங்குகளின் வைப்புகளினின்றும் (Normal commercial bank deposits) இரு விதங்களில் வேறுபட்டனவாக இருக்கின்றன. முதலாவதாக இத்தகைய வைப்புகள் கட்டாயமானவை; ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வர்த்தக பாங்குகள்

(commercial banks) தமது மொத்த வைப்புக் கணக்குகளில் (total deposit account) ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை இங்கிலாந்து பாங்கில் வைப்புகளாக வைக்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இத்தகையதொரு அறிவிப்பு ஒரு கட்டாய உத்தரவாகவே இருந்தது. இரண்டாவதாகச் சிறப்பு வைப்புகளை, அவைகளை வைக்கும் பாங்குகள் தமது விருப்பம் போல் பயன்படுத்திக்கொள்ள முடியாது. வர்த்தகப் பாங்குகள் சென்ற அத்தியாயத்தில் கூறியபடி ரொக்கக் காப்புகளை (cash reserves) இந்த அளவிற்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தவிர்த்து, இங்கிலாந்து பாங்கிலுள்ள தங்களது இயல்பு வைப்புகளைத் (normal deposits) தங்கள் விருப்பம்போல் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், சிறப்பு வைப்புகளை (special deposits) மட்டும் இங்கிலாந்து பாங்கின் அனுமதிபெற்றே திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும். இத்தகைய சிறப்பு வைப்புகளின் இயங்கு முறை (operations). பணிகள் (functions) இவைகள் அடுத்து வரும் 24ஆம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்து பாங்கின் இரண்டாவது மூன்றாவது பணிகளைக் கருதும்போது, பாங்கின் மற்றொரு துறையான பாங்கியல் துறை (Banking department) வார அறிக்கையை (weekly return) ஆராய்தல் மூலம் மேற்கொண்டும் விளக்கம் பெறலாம். 1962ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் தேதியின் அறிக்கையை மீண்டும் உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

மில்லியன் £ களில்

சொத்துகள்		பொறுப்புகள்	
அரசாங்கக் கடன் பத்திரங்கள்	517.3	முதல்	14.6
		இலாபப் பிடிப்பு	3.2
பிற கடன் பத்திரங்கள் :		அரசாங்க வைப்புகள்	13.4
கழிவுகளும் முன்பணமும்	32.2	பாங்கர்களின் வைப்புகள்:	
கடன் பத்திரங்கள்	18.9	இயல்பானவை	261.0
நோட்டுகள்	27.7	சிறப்பானவை	231.8
நாணயம்	0.8		
		மொத்தம்	492.8
		பிற வைப்புகள்	73.0
	596.9		596.9

முதலில் அறிக்கையின் 'பொறுப்புகளின் பகுதியை' ஆராய்வோம். சிறு இனங்களாகிய 'முதல்', 'இலாபப் பிடிப்பு' (rest) ஆகிய இவ்விரண்டையும் சற்றுச் சுருக்கமாக விளக்கவேண்டும். 'முதல்' எனப்படுவது ஆரம்பப் பங்குதாரர்களால் பாங்கிற்குச் செலுத்தப்பட்ட பங்குத் தொகைகளைக் குறிக்கின்றது. எனவே, பாங்கு மூடப்படும் தறுவாயில் இத் தொகைகள் அப் பங்குதாரர்களுக்குள் கொடுக்கப்படவேண்டும். 'இலாபப் பிடிப்பு' என்றும் ஒரு புதுமையான இனம் பாங்கின் பிரித்துக் கொடுக்கப்படாத இலாபங்களை (undistributed profits) குறிக்கின்றது; இந்த இலாபங்களும் சட்டப்படி பாங்கின் பங்குதாரர்களுக்கே உரிய சொத்தாகும். 1946ஆம் ஆண்டுவரையிலும் இந்த பாங்கானது (இங்கிலாந்து பாங்கு) பங்குதாரர்களுக்குச் சொந்தமான முற்றிலும் ஒரு தனியார் கார்ப்பரேஷனாகவே (purly private corporation) (பல ஆண்டுகளுக்கு இலாப நோக்கமானது அதன் கைக்கோளாக இல்லையெனினும்) இருந்துவந்தது; எனவே, இத்தகைய இனங்களுக்குச் சிறிதளவு கருத்தியலான முக்கியத்துவம் (theoretical significance) இருந்துவந்தது. 1946ஆம் ஆண்டின் இங்கிலாந்து பாங்குச் (நாட்டுரிமை) சட்டத்தின்படி அரசாங்கத்திற்கே பாங்கினை வைத்துக்கொள்ளும் உரிமை பூரணமாகக் கொடுக்கப்பட்டது; ஆக, மேற்சொல்லப்பட்ட இனங்கள் இந் நிகழ்ச்சிக்குப் பிறகு பொருளற்றனவாகிவிட்டன (no longer have any real meaning).

அடுத்த இரு இனங்களாகிய 'அரசாங்க வைப்புகள்' (public deposits) 'பாங்கர்களின் வைப்புகள்' (bankers' deposits) என்பவற்றைப்பற்றி ஏற்கெனவே ஆராய்ந்துள்ளோம்; அவைகள் முறையே, அரசாங்கத்தின் பாங்கு என்ற முறையிலும், பாங்கர்களின் பாங்கு என்ற முறையிலும் (banker's bank) பாங்கானது ஆற்றும் பணிகளுக்கு இணையானவைகளாக இருக்கின்றன. கடைசி இனமாகிய 'பிற வைப்புகள்' என்பது—பிரிட்டிஷ் அரசாங்கம், பிரிட்டிஷ் பாங்குகள் தவிர்த்த வாடிக்கைக்காரர்களின் முக்கியமாக காமன்வெல்த் அரசாங்கங்கள், காமன்வெல்த் பாங்குகள் இன்னும் சில அயல்நாட்டு மைய பாங்குகள் (Foreign Central Banks)—கணக்குகளைக் கொண்டதாகும். சில பழைமையான வாணிப அகங்கள் (some old established business homes) இன்னும் இங்கிலாந்து பாங்கில் கணக்கு வைத்துக் கொண்டிருக்கின்றன. இங்கிலாந்து பாங்கானது ஏனைய தனியார் பாங்குகளிடம் வணிக நடவடிக்கையில் (commercial business)

போட்டியிட்டுக்கொண்டு பாங்குத் தொழில் புரிந்த காலந் தொட்டு அவை கணக்கு வைத்திருக்கின்றன ; எனினும், அவை அதிக அளவில் இல்லை.

சொத்துகளின் பகுதியில் — தன்னிடம் வைப்பாக வைக்கப் பட்டுள்ள தொகைகளை (தனது பொறுப்புகளை) ஏதாவது ஒரு வகையில் பயன்படுத்தியாக வேண்டுமாகையால், ஒவ்வொரு பாங்கரும் ஒவ்வொரு பொறுப்பிற்குச் சரிநிகரான ஒரு சொத்தினைப் பெற்றுகவேண்டும் — முதலாவதாக உள்ளதும் மிக முக்கியமானதுமான இனம் 'அரசாங்கக் கடன் பத்திரங்கள்' (Government securities) அல்லது பாங்கானது வட்டி பெறுகின்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடன்களாகும். இரண்டாவது இனமாகிய 'பிற கடன் பத்திரங்கள்' (other securities) என்பது 'கழிவுகளும் முன்பணங்களும்' (discounts and advances) என்றும் 'பிற' (other) என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முன்னதாகக் கூறப்பட்டுள்ள பிரிவு, பண அங்காடியிலுள்ள (money market) பண நிறுவனங்களுக்காக உண்டியல்கள் கழிவு செய்யப்படுதலையும் அவைகளுக்கு குறுந்தவணைக் கடன்கள் (short term loans) கொடுக்கப்படுவதும் பற்றியதாகும் ; இந்த இனத்தைப்பற்றிப் 'பண அங்காடி செயல்படுதல்'பற்றிக் கூறுகின்ற அடுத்த அத்தியாயத்தில் மிகத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். 'பிற கடன் பத்திரங்கள்' (other securities) என்னும் இனமானது பிரிட்டிஷ் அரசாங்கம் தவிர்த்த அரசாங்க அமைப்புகளின் கடன் பத்திரங்களைக் கொண்டதாகும்—குறிப்பாக, காமன்வெல்த் அரசாங்கங்களும் (commonwealth governments) அயல் நாடுகளின் அரசாங்கங்களும் 'பிற பிணையங்கள்' (other securities) என்னும் இனத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் தவிர்த்த அரசாண்மைகளின் பிணையங்கள் இடம்பெறுகின்றன. குறிப்பாக, காமன்வெல்த், அயல்நாட்டு அரசாங்கங்கள், பிரிட்டிஷ் தொழில் வளத்தைப் பெருக்குமுகத்தான் பாங்கோடு (bank) சேர்ந்து செயலாற்றும் குறிப்பிட்ட செயலாண்மைகள் (agencies) ஆகியவை வெளியிடும் பிணையங்கள் இவ் இனத்தின்பாற்படும். நோட்டுகள் (notes) என்னும் இனம் வெளியீட்டுத்துறை (Issue Department) தனது அறிக்கையில் (return) குறிப்பிடும் 'பாங்குத் துறையிலுள்ள நோட்டுகள்' (Notes in the Banking Deparment) என்னும் இனத்தை ஒத்ததாக உள்ளது. அடுத்துள்ள இனமாகிய 'நாணயம்' (coin) என்பது, வைப்புகளுக்கு மாற்றாக (in exchange for deposits) ரொக்கத்தைப் பெற விழையும் பொது

மக்களுடைய (சிறப்பாக வர்த்தக பாங்குகளின்) தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு பாங்கு தன்னிடம் வைத்துக்கொண்டிருக்கும் காப்புத் தொகையைக் (reserve) குறிக்கின்றது. கடந்த காலத்தெல்லாம், பாங்கு; அதன் நோட்டுகளுக்கு அல்லது அதனிடம் வைக்கப்பட்டுள்ள வைப்புகளுக்கு மாற்றுகப் பொன்னைத் தருமாறு கேட்கப்படும்போது (on demand) அவ்வாறு கொடுக்க வேண்டிய கடமையில் இருந்தமையான், அது வைத்துக்கொள்ள வேண்டிய ரொக்கத்தின் (அதாவது, பொன்னின்) அளவு கணிசமான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. தற்காலத்தில் பாங்கு அதன் நோட்டுகளுக்கு அல்லது அதனிடம் வைக்கப்பட்டுள்ள வைப்புகளுக்கு மாற்றுகப் புதிய இங்கிலாந்து பாங்கு நோட்டுகளைத் தரவேண்டுமென்ற கடப்பாடு (obligation) உள்ளதே தவிர வேறொன்றுமில்லை. ஆக, இந்த ஒரு நிலையில், பாங்குத் துறை (Banking Department) ரொக்கக் காப்பு (cash reserve) வைத்திருப்பதற்கு ஒரு செயல்முறை முக்கியத்துவம் (administrative significance) உள்ளதே தவிர வேறு முக்கியத்துவமில்லை.

பாங்கினுடைய இரு துறைகளின் அறிக்கைகளின் (returns) துணைகொண்டு நோக்குமிடத்து நமக்கு பாங்கின் மூன்று பணிகள் நன்கு விளங்கும். அவையாவன, நோட்டுகள் வெளியிடுதலைக் கட்டுப்படுத்துதல், அரசாங்கத்திற்கு பாங்கராகப் (government's banker) பணிபுரிதல், பாங்கருக்கு பாங்காகப் (banker's bank) பணிபுரிதல் ஆகியவையாம். இப் பணிகள் ஒன்று சேர்ந்து, பாங்கினுடைய மிக முக்கியமான நான்காவது பணிக்கு—அதாவது, பண முறை, பாங்கு முறை முழுமையையும் கட்டுப்படுத்தும் பணிக்கு — தனித்தன்மையானதொரு தெம்பினை ஊட்டுகின்றன. இப் பணியினை பாங்கு எவ்வாறு செயல்புரிகின்றதென்பதனைப் பிறிதொரு மடலில் காண்போம்.

3. பிரிட்டிஷ் வர்த்தக பாங்குகள் (The British Commercial Banks)

பிரிட்டிஷ் பாங்கு முறையின் மிகச் சுருக்கமான வரலாற்றினைக் கண்ணுற்றகாலையில், பத்தொன்பதாம் நூற்றுண்டின் போது நாடு முழுவதிலும் முளைத்தெழுந்த தனியார் பாங்குகள் ஒன்றிணைந்து (amalgamation) செயல்படத் தொடங்கியதைக் கண்டோம். இத்தகையதோர் இணைப்பு முறையின் வளர்ச்சியால் தற்காலத்தில் நாட்டின் பொதுமுறையான பாங்குத் தொழிலில் (ordinary banking business) 9.5 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு லண்டன் தீர்வகத்தைச் (London clearing house)

சார்ந்த பதினெரு பாங்குகளால் மேற்கொள்ளப்பட்டது. லண்டன் தீர்வகத்தைப்பற்றி விரைவில் ஆராய்வோம். இந்தப் பதினெரு பாங்குகளில், 'பேரைந்து' (Big Five) என அழைக்கப் படும் பார்க்லேஸ் (Barclays), லாயிட்ஸ் (Lloyds), மிட்லண்ட் (Midland), நேஷனல் புரவின்ஷியல் (National Provincial), வெஸ்ட்மின்ஸ்டர் (Westminster) என்னும் பாங்குகள் சிறப்பிடம் வகிக்கின்றன. நாட்டின் மொத்த பாங்கு வைப்புகளில் 80 சத வீதத்திற்குமேல் இந்த ஐந்து பாங்குகளிடம் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இப் பாங்குகள் ஒவ்வொன்றுக்கும் ஏராளமான கிளை பாங்குகள் உள்ளன.

வர்த்தக பாங்குகளின் பணிகள் யாவை? முதலாவதாக, வாடிக்கைக்காரர்கள் தங்களிடம் வைப்பாக வைக்கின்ற ரொக் கத்தைப் பத்திரப்படுத்தும் பணியினை (safe-keeping) அவை மேற்கொள்கின்றன. இரண்டாவதாக, இத்தகைய ரொக்கக் காப்புகளை (cash reserves) வைத்திருத்தல், அவைகளை, முன்னர் விளக்கிய வகையில், செலாவணிப் பெருக்கத்தை உண்டு பண்ணத் துணை செய்கின்றது. அதாவது, பாங்குகள் அவை களின் செக்குகள் (cheques) வாயிலாகக் கடன் பெறுகின்றன. அச் செக்குகள் ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்குக் கைமாறிச் செல்கின்றன. இவ்வாறு செல்வதில் ஒரு சிறு பகுதி செக்குகள் தாம் ரொக்கமாக மாற்றப்படுகின்றன. வைத்திருத்தலானது பாங்குகளை ஏற்கெனவே விவரித்துள்ளது போல் செலாவணிப் பெருக்கம் செய்வதற்கு (to expand credit) வழிகோலுகின்றது—அதாவது, பாங்குகள் கடன்படும்போது அக் கடன்களை செக்குகள்மூலம் (cheques) ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அக் கடன்களைக் கைமாறச் செய்துகொண்டே யிருக்கலாமென்பதனையும், ஒருசில சிறுபான்மையான சந்தர்ப் பங்களின்போதுதான் அவை ரொக்கமாக மாற்றப்படுகின்றன என்பதை அனுபவவாயிலாக அவைகள் நன்கு தெரிந்துவைத் திருக்கின்றன. தற்காலத்திய பிரிட்டிஷ் பாங்கர், தனது மொத்தக் கடன்களின் (his total debts) பன்னிரண்டில் ஒரு பகுதியே கடன் ஈவோரால் (creditor) ரொக்கமாகப் பயன்படுத்தப்படுகிறதென் பதனை நன்கறிவார்; தனது இருப்பறைகளில் £ 100 அளவிற்கு ரொக்கம் இருக்குமானல், £ 1,200-க்கு அவை எந்தவித இடர்ப் பாடுமின்றிப் பொறுப்புகளைப் (liabilities) பெறக்கூடும். இந்த £ 1,200-ல் பெரும்பகுதியும் வைப்பாளிகளால் (depositors) செக்குகள் வடிவமாகப் (செலுத்துகளைச் செலுத்துவதற்கு) பயன்

படுத்தப்படும். ஆக, அவர்கள், ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்குப் (பாங்கிற்குள்) பணத்தை மாற்றுகின்றனரே யொழிய, பணத்தைப் பெரும்பாலும் ரொக்கமாகப் பாங்கினிடம் பெற்றுக்கொள்வதில்லை. ஒரு பாங்கு எவ்வாறு பொறுப்புகளைப் பெறுகின்றது? ஒரு பாங்கின் வாடிக்கைக்காரர் £ 100ஐ வைப்பாக வைக்கின்றாரெனக் கொள்வோம்; இதனால் பாங்கானது வைப்பாளியின் கணக்கு (depositor's account) வடிவில் பொறுப்பினைப் பெறுகிறது. இத்தகையதொரு கணக்கிலிருந்து வைப்பாளி எந்தச் சமயத்திலும் பணத்தைத் திரும்பப் பெறலாம். ஆனால், பாங்கானது எவ்வாறு அதிகப்படியாக £ 1,100-க்கு பொறுப்புகளைப் பெறுகின்றது? ஆக, £ 100 ரொக்கக் காப்பினை வைத்துக்கொண்டு மொத்தம் £ 1,200 அளவிற்கு இடரேதுமின்றிப் பொறுப்புகளைப் பெறலாமென்று எவ்வாறு பாங்கிற்குத் தெரிந்துள்ளது?

இவற்றிற்கு விடையைப் பதினொன்று தீர்வு பாங்குகளும் (eleven Clearing Banks) ஒவ்வொரு மாதமும் வெளியிடுகிற சொத்துகள், பொறுப்புகள் அறிக்கைகளை (statements of assets and liabilities) ஆராய்ந்து காணலாம். எடுத்துக்காட்டாக, 1962ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திய தீர்வு பாங்குகளின் கூட்டறிக்கையினை (combined return) நோக்குவோம். பாங்கு வைத்திருந்த பொறுப்புகளின் விவரம் பின்வருமாறு:

	மில்லியன் £-களில்	மொத்த சதவீதம்
கையிருப்பிலுள்ள ரொக்கமும் இங்கிலாந்து பாங்கியில் வைக்கப்பட்டுள்ள ரொக்கமும்	595	8·0
*அழைப்புக் கடன் (money at call), குறுந்தவணைக் கடன்	678	9·5
கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் (Bills discounted :		
கருவூல உண்டியல்கள்	927	16·7
பிற உண்டியல்கள்	264	
சிறப்பு வைப்புகள் (Special Deposits)	229	3·2
முதலீடுகள் (investments)	1095	15·4
கடன்கள் (Advances)	3337	46·0
	7125	100·0

*அழைப்புக் கடன்களென்பவை நாள் தவணைக் கடன்களாகும்.

பாங்கின் ஒரு முழு இருப்புநிலைக் குறிப்பில் (in a full bank balance-sheet) ஒப்பீடான சில சிறிய இனங்களும் (பங்குதாரர்களால் பங்காகச் செலுத்தப்பட்ட மூலதனம், பாங்கு அமைந்துள்ள இடத்தின் மதிப்பு முதலியவை) காட்டப்பட்டுள்ளன. ஆனால், முக்கியமான இனங்களெனப்படுபவை மேலே காட்டியுள்ள மாத அறிக்கையைப்போன்றவற்றில் இடம்பெற்றுள்ளவையே. அறிக்கையில் சொத்துப் பகுதியில் (asset side) முதலாவதாகவுள்ள இனம் 'ரொக்கக் காப்பாகும்' (cash reserve). இது, பாங்குகளின் பேழைகளிலுள்ள (tills) நோட்டுகளும் நாணயமும் (notes and coin), இங்கிலாந்து பாங்கிலுள்ள அவைகளின் வைப்புகளும் அடங்கியதாகும்; இங்கிலாந்து பாங்கில் வைக்கப்பட்டுள்ளதொரு வைப்பானது (இங்கிலாந்து பாங்கின் ஒரு நோட்டைப் போன்று) மைய பாங்கின் மீதுள்ளதோர் உரிமைப் பொருளாதலால் (claim), நோட்டுகள், நாணயம் ஆகியவைபோன்றே அதனை ரொக்கமாகக் கருதுதல்கூடும். தற்போது பிரிட்டிஷ் பாங்குகள் ஓர் உறுதியான வழக்க முறையினைக் (firm convention) (பிற நாடுகள் சிலவற்றில் இது சம்பந்தமாக எந்தவிதமான சட்டமும் இல்லாதிருப்பதுபோலன்றி) கையாளுகின்றன. அதாவது, பாங்குகளின் ரொக்கக் காப்புகள் (cash reserves) அவைகளுடைய பொறுப்புகளின் மொத்தத்தில் (total liabilities) குறைந்தது 8 சதவீத அளவிற்காவது இருக்க வேண்டும். பாங்குகள் தாம் அதிகமான அளவு பெறுமானமுள்ள சொத்துகளைப் பெறுவதன்மூலம் இலாபமடைவதால், அவைகள் இயல்பாகத் தமது ரொக்க விகிதம் 8 சதவீதத்திற்கு மேல் அதிகமாக இருக்க அனுமதிக்கமாட்டா. ரொக்கக் காப்புகளில் £ 1 மில்லியன் குறையுமானல், பாங்குகள் தமது மொத்தப் பொறுப்புகளில் (total liabilities) £ 12 மில்லியனை அல்லது அதற்கு நெருங்கிய அளவில் குறைத்துக்கொள்ள வேண்டும்; இதற்கு எதிரிடையாக அவர்களின் ரொக்கத்தில் £ 1 மில்லியன் அதிகரிக்குமானல், அது அவைகளின் மொத்தப் பொறுப்புகளை £ 12 மில்லியன் அளவிற்கு அதிகரித்துக்கொள்ள அனுமதிக்கும்.

சொத்துகளின் பகுதியில் காணப்படும் அடுத்த இரண்டு இனங்கள் அழைப்புக் கடன், குறுந்தவணைக் கடன்களும் (money at short notice) கழிவு செய்யப்பட்ட உண்டியல்களுமாகும் (discounted bills). இவையிரண்டும் பண அங்காடியோடு (money market) சம்பந்தப்பட்டவைகளாகும். பண அங்காடியைப்பற்றி

அடுத்த அத்தியாயத்தில் நெடிது விளக்கப்பட்டுள்ளது. முன்னதாகஉள்ள இனம் பண அங்காடியிலுள்ள தனிப்பட்ட மனிதர்கள் (persons), நிறுவனங்கள் (institutions)ஆகியவற்றிற்குக் கொடுக்கப்படும் குறுங்காலக் கடன்களைக் (loans to short duration) கொண்டதாகும்; பின்னதாகக் கூறப்பட்டுள்ள இனம் பண அங்காடியில் வாங்கப்படுகின்றனவும் விற்கப்படுகின்றனவுமான குறுங்காலக் கடன் பத்திரங்களைக் (அல்லது கடன் பெற்றதற்கான அத்தாட்சி ரசீதுகளைக்) கொண்டதாகும். சிறப்பு வைப்புகள் (இங்கிலாந்து பாங்கிலுள்ள) என்னவென்பதை ஏற்கெனவே சுருக்கமாக விளக்கியுள்ளோம். இவைகளைப்பற்றி இன்னும் அதிகமாகப் பிறிதோர் இடத்தில் ஆராய்வோம். இவைகளினின்றும், பாங்கானது, நடப்புக் கருவூல உண்டியல் வீதத்திற்குச் (current treasury bill rate) சமமாக வட்டி பெறுகின்றது. அடுத்துள்ள இனம், முதலீடுகளாகும் (investments). இவைகள் பங்கு மாற்றுச் சந்தையில் (stock exchange) விலைகூறப்படுகின்ற நெடுந்தவணைக் கடன் பத்திரங்களாகும் (larger-term securities); இவைகளைப் பங்கு மாற்றுச் சந்தையில் வாங்கவும் விற்கவும் கூடும். பிரிட்டிஷ் பாங்குகள் வைத்துக்கொண்டுள்ள பெரும்பகுதி கடன் பத்திரங்கள், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடன் பத்திரங்களாகும்; பாங்கு வைத்துள்ள நெடுந்தவணைக் கடன்பத்திரங்களில் சில, காமன்வெல்த் அரசாங்கங்களிலும் நாட்டுரிமையாக்கப்பட்ட பல்வேறு தொழில்களிலும் (various nationalised industries) வெளியிடப்பட்டவைகளாகும். கடைசியாக, கடன் (advances) என்னும் ஓர் இனம் உளது. இவைகள், தொழில்கள் (businesses), அரசாங்கக் கார்ப்பரேஷன்கள் (public corporations) அல்லது தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களாம். இக்கடன்கள் மிகு பேற்றுரிமைச் சீட்டாகப் (overdraft) பழக்கப்படுவது வழக்கம். மிகு பேற்றுரிமைச் சீட்டென்பது ஒரு கணக்கினின்றும் ஒப்புக்கொள்ளப்பட்டபடி உச்சமானதொரு தொகை வகையிலும் மிகுபற்று (overdraw) பெறக்கூடியதோர் உரிமையாகும். அக் கணக்கினின்றும் அவ்வாறு எடுக்கப்படும் பணத்திற்குமட்டுமே வட்டி வசூலிக்கப்படுகிறது. பொதுவாக பிரிட்டிஷ் பாங்குகள் நெடுங்காலக் கடன்களை அளிப்பதற்கு விரும்புவதில்லை. தொழில்களின் நடைமுறை முதலுக்கே (working capital) கச்சாப் பொருள்கள், பண்டங்களின் இருப்பு முதலியவை—அவைகள் கடன்களை வழக்கமாக அளித்துவருகின்றன; நிலை முதலுக்கு (fixed capital) அவை கடன் வழங்குவ

தில்லை. அவ்வாறு நிலை முதலுக்குக் கடன் கொடுத்தால் காலங் கடந்தே கடன் திரும்பிவரும் என்பதனை அவை தெரிந்துவைத் துள்ளன.

ஒரு பாங்கானது தனது செலாவணியைப் (credit) பெருகச் செய்துகொள்ள முடியும் என்று கருதும்போதும், (அதாவது) ரொக்கக் காப்புகள் அதனுடைய பொறுப்புகளில் 8 சதவீதத் திற்கும் அதிகமாக இருக்கும்போதும், கீழ்க்காணும் சொத்துகளை வாங்குவதன்மூலம் அவ்வாறு செலாவணியைப் பெருகச் செய்ய முடியும்; அது பண அங்காடிக்கோ (money market) அல்லது பங்கு மாற்றுச் சந்தைக்கோ (stock exchange) சென்று உண்டி யல்களை (bills) அல்லது நெடுந்தவணைக் கடன் பத்திரங்களை (long-term securities) வாங்கக்கூடும் அல்லது பண அங்காடி வணிகர் களுக்கும் (money-market dealers), சில வகையான முதற்கருவிப் பொருள்களை (capital goods of some sort) வாங்கும்பொருட்டுக் கடன் பெற விழையும் வர்த்தகர்களுக்கும் (business-men) அல்லது தனி நபர்களுக்கும் (private individuals) கடன் வழங்கக்கூடும். இவைகளில் எந்த வகையான சொத்துகளினின்றும் பாங்கு வட்டி பெறும். சொத்துகள் பெறுவது சம்பந்தமான முடிவுகளை எடுப்பதில் பாங்குகள் முக்கியமானதொரு நோக்கத்தை மனத் தில் கொள்கின்றன. அதாவது, பெறப்படும் சொத்துகள் 'நீர்மை யுடையவையாக' (liquidity) இருக்கின்றனவா என்று பார்க்கின் றன. நீர்மை எனப்படுவது யாது? இந்த ஒரு நிலையில் நீர்மை எனப்படுவது பொதுவாக, சொத்துகளை, ரொக்கமாக மாற்றிக் கொள்ளும் திறன் (the ability to convert assets into cash) என்று பொருள் கொள்ளவேண்டும். ரொக்கம் கோரிவரும் தேவை களைச் சமாளிப்பதற்கு ஒரு பாங்கானது 8 சதவீதம் ரொக்கக் காப்பு வைத்திருந்தால் போதுமானது என்றாலும், ரொக்கம் தேவைப்படும் எல்லா வைப்பாளிகளுக்குமே அவர்கள் உடனடி யாக ரொக்கம் தருமாறு கேட்டாலும் அல்லது குறுகிய கால முன் அறிவிப்புச் (short notice) செய்துவிட்டு ரொக்கம் கேட்டாலும் கொடுக்கவேண்டிய கடமை பாங்கருக்கு உண்டு. எனவே, பாது காப்பான நிலை குறித்து ஒரு பாங்கரானவர், தனது காப்பு நிதிகள் (reserves) முற்றிலும் காலியாகிவிடக்கூடிய அளவிற்கு வழக்கத்திற்குப் புறம்பான ரொக்கத் தேவை ஏற்படும்போது தனது மற்றச் சொத்துகளை ரொக்கமாக மாற்ற இயலும்படி இருக்கவேண்டும். ஆக, ரொக்க நிலைக்கும் (liquidity) இலாபத்

தன்மைக்கும் (profitability) இடைநிலையாக உள்ளதொரு தன்மையைக் கொண்ட சொத்துகளைப் பெறுவதில் பாங்கு நாட்டம் செலுத்தவேண்டும். வட்டிக் கோட்பாட்டினை ஆராய்ந்த பின்னர் நமக்குத் தெரியவரும் காரணங்களால், ஒரு சொத்து அதிகமான ரொக்க நிலை வாய்ந்ததாக இருப்பின் அது குறைந்த வட்டியைப் பெறுவதாக இருக்கும். உதாரணமாக, தொழில்களுக்குக் கொடுக்கப்படும் கடன்கள் பாங்குகளின் சொத்துகளிலேயே மிகவும் இலாபம் பயப்பவையாகும்! ஆனால், அவை மிகவும் ரொக்க நிலையற்றவைகளாக (illiquid) உள்ளன. பாங்கிற்கு அதிகப்படியாக ரொக்கம் தேவைப்படும்போது, தான் கடன் கொடுத்துள்ளதொரு தொழில்முயல்வோனை (entrepreneur) அணுகிக் கடனைத் திருப்பித் தருமாறு கேட்குந் தறுவாயில் அத் தொழில்முயல்வோனால் கடனைத் திருப்பித்தர இயலவில்லையெனில், அத்தகைய சொத்தினை வைத்துக்கொண்டு பாங்கு அதிகப் பயனை ஒன்றும் அடைந்துவிட முடியாதல்லவா! ரொக்கம் (cash) என்பது மிகவும் நீர்மையை (ரொக்க நிலையை) உடையதுதான்; ஆனால், அதனைக் கையில் வைத்துக்கொண்டே எவ்வித வருவாயையும் பெற முடியாது. [ஆகவேதான், 37ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள அறிக்கையில் சொத்துகள் அவைகள் நீர்மை வரிசைப்படியும் அவைகளின் இலாபத்தன்மையின் (profitability) தலைகீழ் வரிசைப்படியும் காட்டப்பட்டுள்ளன.] பிரிட்டிஷ் பாங்குகள், பல ஆண்டுகளாக, தங்களின் வருவாய்களில் 30 சதவீதத்தை (30 percent of their resources) நீர்மையுள்ள ரொக்க வகைகளாக (liquid forms of cash) வைத்திருக்கவே விழைந்தனவென்று பொதுவாகக் கூறப்பட்டது. இந்த சதவீதம் (30 சதவீதம்) 'இரண்டாவது படியான நீர்மை வீதம்' (secondary liquidity ratio) என்று சில சமயங்களில் அழைக்கப்படுகிறது. அழைப்புக் கடன்களும் (money at call) குறுந்தவணைக் கடன்களும் உண்டியல்களும் (money at short notice and bills) நீர்மையுள்ள ரொக்கவகைகளே யாகும். ஏனெனில், பின்னதாகக் கூறப்பட்டுள்ள இரு இனங்களையுமே ரொக்கமாகச் சுமாராக விரைவிலும் குறிப்பிடும்படியான நஷ்டமேதுமின்றியும் ரொக்கமாக மாற்றிக்கொள்ளலாம். ராட்கிளிஃப் குழுவினரின் (Radcliffe Committee) அறிக்கை 1959ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. அதுவரையிலும் நடைமுறையில் இந்த 30 சதவீத விதியானது, 8 சதவீதக் குறைந்தபட்ச ரொக்க வீத விதியைப் போலன்றித் தெளிவற்றதொரு (vague) விதியாக இருந்தது;

பெரும்பாலும் அறிக்கையின் விளைவாலும் 24ஆம் அத்தியாயத்தில் இனிக் கூறப்போகின்ற காரணங்களாலும் 30 சதவீத நீர்மை விகிதமானது (30 percent liquidity ratio) திட்டமாகவே கடைப்பிடிக்கப்பட்டது. வர்த்தக பாங்குகள் தம்மிடமுள்ள வைப்புகளில் 30 சதவீதத்தை நீர்மையுள்ள சொத்துகளாக (liquid assets) வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், இது குறைந்தபட்ச விகிதமே என்றும், எதிர்காலத்தில் இந்த விகிதம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் குறையக்கூடாதெனவும் அரசாங்க பாங்கு, வர்த்தக பாங்குகளை, இங்கிலாந்து பாங்கின்மூலம் 'கேட்டுக்கொண்டது' (requested). ஆகவே, தற்போது, இவ் விகிதமானது ஏறக்குறைய ரொக்க விகிதத்திற்குச் (cash ratio) சமமான ஆற்றலுடன்தான் செயல்பட்டுவருகிறது. இன்னும் கூறப்போனால், இவ் இரு வீதங்களின் சம காலத்திய பிரிட்டிஷ் பாங்கு முறையில் (in the contemporary British banking system) 30 சதவீதத்தின் நடைமுறை முக்கியத்துவமானது, உண்மையில் ரொக்க விகிதத்தைக் (cash ratio) காட்டிலும் அதிகமானது என்று வாதிடுவதில் பொருள் இருக்கிறது.

ஒரு பாங்கின் பங்குதாரர்களால் (stockholders) பங்குகளாக அளிக்கப்படும் மூலதனம் ஒருபுறமிருக்க [ஏற்புகள் (acceptances) என்ற ஓர் இனத்தையும் தவிர்த்து—இந்த இனமானது சொத்தாகவும் பொறுப்பாகவும் உள்ளதால் தானே சமனப்படுத்திக் கொள்ளும் (self-balancing) ஓர் இனமெனக் கருதப்பட்டுப் பொருட்படுத்தப்படுவதில்லை], ஒரு பாங்கின் பொறுப்புகளென்பவை (liabilities) அதனுடைய வைப்புகளால் (deposits) உணர்த்தப்படுகின்றன — வைப்புகளென்பவை வாடிக்கைக்காரர்களுக்குச் சேரவேண்டிய தொகைகளாகும். ஒரு பாங்கானது ஒரு சொத்தினைப் (asset) பெறும்போது தன்னியக்கமாக (automatically) அது அதற்குச் சமமான பொறுப்பினை (liability) ஏற்கவேண்டும். பாங்கானது ரொக்கத்தைப் (cash) பெறுகிறதெனில், எந்த நபர்களிடமிருந்து ரொக்கம் பெறுகின்றதோ அவர்களுடைய வைப்புகளில் பெற்ற ரொக்கத்திற்குச் சமமான மதிப்பளவு உள்ள தொகையை வரவு வைக்கும். பாங்கானது ஒரு கடனை வழங்கும்போது கடன் பெறுபவரின் பெயரில் அந்தத் தொகைக்கு ஒரு வைப்பினை (deposit) ஏற்படுத்தித் தரும். அது கடன் பத்திரங்களை வாங்கும்போது (if it buys securities) அவைகளுக்கு எவ்வாறு பணம் செலுத்துகிறதெனில், கடன்

பத்திரங்களை விற்றவருடைய கணக்கில், தான் எவ்வளவு கடன் வாங்கியதோ அவ்வளவு தொகையை வரவு வைப்பதன்மூலம் செலுத்துகிறது. சொத்துகளை வாங்குதலானது (the purchase of assets) பாங்குச் செலாவணியின் சிருட்டிப்புக்குத் (creation of bank credit) தலைகீழாக உள்ளதொன்றாகும்; ஒன்று மற்றொன்றின் துணைகொண்டே அடையப்பெறுகின்றது. பாங்கு வைப்புகள் இருவகைப்படும். நடப்புக் கணக்குகள் (current accounts) என்பன ஒரு வகை; இக் கணக்குகளை வைத்துக்கொண்டிருப்பவர்கள் அவர்களுடைய வைப்புகளை (ரொக்கம் பெறுவதற்கோ அல்லது செக்கு —cheque—மூலம் அவைகளை வேறு பிறருக்கு மாற்றுவதற்கோ) எந்தச் சமயத்திலும் யாதொரு முன்னறிவிப்பும் இன்றிப் பயன்படுத்திக்கொள்ளலாம். வைப்புக் கணக்குகள் என்பன மற்றொரு வகையாகும். இவ் வைப்புகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஒரு வாரம் அல்லது அதற்கும் மேற்பட்ட கால முன்னறிவிப்பு வேண்டும். இவ் வைப்புகளுக்காக (இத்தகையதொரு தடைக்கு ஈடு செய்யும்பொருட்டு) வைப்பாளிக்கு வட்டி தரப்படுகின்றது.

இதுவரையிலும், ஒன்றுக்குமேற்பட்ட வர்த்தக பாங்குகள் இருப்பதால் ஏற்படும் சிக்கல்கள்பற்றி யாதொன்றும் கூறப்படவில்லை. பாங்கு வைப்புகளில் 12-ல் 11 பங்கு ரொக்கமாக மாற்றப்படுவதில்லை. அவைகள் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு செக்குகள் (cheques) வாயிலாகவே மாற்றப்படுகின்றன. ஒரு பாங்கின் வைப்பாளி ஒருவரால் எழுதப்பெற்ற செக்குகள், மற்ற பாங்குகள் வாடிக்கைக்காரர்கள் கையில் வந்து சேரும். மற்ற பாங்குகள் தங்களது வாடிக்கைக்காரரின் (customer) கணக்குகளில் சம்பந்தப்பட்ட தொகையை வரவு வைத்த பின்னர், தமக்கு பாக்கித் தொகை சேரவேண்டியிருப்பின் அவைகளைச் செலுத்துமாறு கேட்கும். முதலில் கூறப்பட்ட பாங்கானது தான் அந்த பாங்குகளில் (தான் செலுத்தவேண்டிய தொகைக்கு) கணக்கு வைத்துக்கொள்வதாகக் கூறும் வகையாலும் தேவையைச் சமாளித்துவிட முடியாது: ஏனெனில், மற்ற பாங்குகள் தமது போட்டி பாங்குகளில் ஒன்றில் வைப்பு வைத்துக்கொள்ள நிச்சயம் விரும்பமாட்டா.

பாங்குகளுக்கிடையே ஏற்படும் கடன் (indebtedness) பிரச்சினையைத் தீர்ப்பதற்கே லண்டன் தீர்வகம்—London Clearing House—ஏற்படுத்தப்பட்டது. லண்டன் தீர்வகத்தின் அங்கத்

தினர்களுடைய [பதினொரு 'தீர்வு பாங்குகள்' (Clearing Banks)] பிரதிநிதிகள் (representatives) தினமும் கூடிப் பல்வேறு பாங்குகளுக்கிடையே ஏற்பட்டுள்ள கடன்களைத் தீர்த்துக்கொள்வர். உதாரணமாக, பார்க்லேஸ் பாங்கின் (Barclays Bank) வாடிக்கைக்காரர்கள் வெஸ்ட்மின்ஸ்டர் பாங்கின் (Westminste rBank) வாடிக்கைக்காரர்களுக்கு £ 10 மில்லியனுக்கு செக் எழுதித் தந்திருக்கின்றனரென வைத்துக்கொள்வோம்; இது போலவே வெஸ்ட்மின்ஸ்டர் பாங்கின் வாடிக்கைக்காரர்கள் £ 10 மில்லியன் மதிப்புள்ள செக்குகளை பார்க்லேஸ் பாங்கின் வைப்பாளிகளுக்கு எழுதித் தந்திருக்கின்றனரெனக் கொள்வோம். அப்படியாயின், இவ் இருதரப்பட்ட உரிமைகளும் (claims) ஒன்றுக்கொன்று தள்ளுபடி செய்துகொள்ளப்பட்டுவிடுமாகையால் (cancelled against each other), ரொக்கம் கைமாறவேண்டிய தேவையில்லை. பொதுவாக, ஒரு குறிப்பிட்ட பாங்கின் வைப்பாளிகளால் (depositors) மற்ற பாங்குகளுக்குக் கொடுக்கப்பட்ட செக்குகள் மற்ற பாங்குகளிடமிருந்து அப் பாங்கின் வைப்பாளிகளுக்கு வரும் செக்குகளால் நீண்ட காலத்தில் பெரும்பாலும் சரிக்கட்டப்படுவது வழக்கம். தங்களுக்கு வந்து சேருகின்ற தொகைகளைக் காட்டிலும் அதிகமான தொகைகளை யாரும் தொடர்ந்து கொடுத்துக்கொண்டேயிருக்கமாட்டார்களல்லவா? ஆயினும், எந்த ஒரு நாளிலும் இத்தகைய நிலுவை (balance) வழக்கமாக ஏற்படுவதில்லை. எல்லாத் தள்ளுபடிகளும் செய்தான பின்னர், தீர்வகத்தின் ஒவ்வோர் அங்கத்தினருக்கும் ஒவ்வொரு நாளின் இறுதியின்போதும் தான் பிற பாங்குகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைகளோ அல்லது பிற பாங்குகள் அதற்குச் செலுத்தவேண்டிய நிலுவைகளோ இவ்வளவு என்று தெரிய வரும். இந்த நிலுவைகள் எவ்வாறு தீர்த்துக்கொள்ளப்படுகின்றன? ஒவ்வொரு பாங்கும் தான், இங்கிலாந்து பாங்கில் வைத்திருக்கும் கணக்கிலிருந்து செக்குகளை எழுதி நிலுவைகளைத் தீர்த்துக்கொள்ளும்.

செக்கை ஒரு செலுத்து சாதனமாகப் பெருமளவில் பயன்படுத்துவதானது, பிரிட்டிஷ் வர்த்தக பாங்குகளை எந்த ஒரு சமயத்திலும் தாம் வைத்திருக்கும் ரொக்கத்தைக்காட்டிலும் கணிசமான அளவிற்கு அதிகமாக பாங்குச் செலவாணியைச் சிருட்டிக்க வகை செய்கின்றது; ஒரு சிறு விகிதத்தைத் தவிர்த்து அவைகளுடைய மற்றக் கடன்களையெல்லாம் மற்றொரு பாங்கின்

கணக்கில் செலுத்தித் தீர்த்துக்கொள்ளலாம் என்ற வழியினை அவை பெரிதும் நம்பியிருக்கின்றன. சம்பந்தப்பட்ட கணக்குகள் ஒரே பாங்கில் இருக்குமானால், கணக்குப் பதிவியல் பதிவைச் செய்வதன் (book-keeping entry) மூலமே கடனைத் தீர்த்துக்கொள்ள முடியும். பாங்குக் கணக்குகள் (accounts) பல்வேறு பாங்குகளில் இருக்குமானால், ஒரு பாங்கிலிருந்து அப் பாங்குகளுக்குப் பணம் மாற்றப்படுமானால், இம் மாற்றமானது (transfer) அந்த பாங்குகளினின்றும் இப் பாங்கிற்கு மாற்றப்படும் (மேற்கூறிய மாற்றத்திற்கு) இணையான மாற்றங்களால் (corresponding tranfers) நெடுங்காலத்தில் சரிக்கட்டப்பட்டுவிடும். இதனால் பாங்குகள் செலாவணியைச் சிருட்டிக்கும் அதிகாரத்தினை எல்லையின்றி உடையனவாகவுள்ளன என்று பொருளாகுமா? நிச்சயமாக அவ்வாறு கூறுவதற்கில்லை. எந்த ஒரு தனி பாங்கிற்கும் தனது பொறுப்புகளை (liabilities) அதிகரிக்கும் அதிகாரமானது தெளிவான மூன்று வரையறைகளால் (three distinct) கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முதலாவதும் மிக முக்கியமானதுமான வரையறையானது, ஒவ்வொரு பாங்கும் ஒரு 8 சதவீத ரொக்கக் காப்பினை (a cash reserve of 8 per cent) வைத்துக்கொள்ள வேண்டும் என்பதாகும். அதனுடைய ரொக்கக் காப்பு (cash reserve) அதிகரிக்கப்பட்டாலொழிய பாங்கானது தனது மொத்தப் பொறுப்புகளை, தனது ரொக்கத்தைப்போன்று பன்மடங்கு அளவுள்ள பொறுப்புகளின் மொத்தத்திற்கும் மேற்பட்டு, அதிகரித்துக்கொள்ள இயலாது. இரண்டாவதாக, ஒவ்வொரு பாங்கும் பிற பாங்குகளுடன் ஒத்து இயங்கவேண்டும். உதாரணமாக, ஐந்து பாங்குகளில் ஒரு பாங்கானது மற்றவைகளைக்காட்டிலும் வெகு விரைவாகச் செலாவணியை அதிகரிக்க ஆரம்பித்தால், அதனால் சிருட்டிக்கப்பட்ட கூடுதலான வைப்புகளினின்றும் பெறப்பட்ட செக்குகளில் சுமார் ஐந்தில் நான்கு பங்கு, மற்ற நான்கு பாங்குகளிடம் வந்துசேரும்; எனவே, தீர்வகத்தில் தீர்வு செய்யப்படும்போது அது ரொக்கத்தை மற்ற பாங்குகளுக்குத் தொடர்ந்து இழந்துகொண்டேயிருக்கும். மூன்றாவதாக, பாங்குகள் தங்களது வருவாய்களைக்கொண்டு நீர்மையுள்ள சொத்துகளையும் (liquid assets) நீர்மையற்ற சொத்துகளையும் (illiquid assets) எந்தெந்த அளவுகளில் பெறவேண்டும் என்பதற்கெல்லாம் பாங்குகள் செயல் விதிகளை (working rules) வைத்துக்கொண்டிருக்கின்றன. எந்த ஒரு காரணத்தாலாவது அவைகள் சரியான வகையான சொத்துகளைச் சரியான விகிதங்

களில் (the right type of assets in the right proportions) பெற இயலாதுபோனுல், அவைகள் ரொக்கக் காப்புகளை (cash reserves) வசதியான அளவிற்கு எவ்வளவுதான் வைத்திருந்தபோதிலும், அவைகளுடைய மொத்தப் பொறுப்புகளில் அதிகரிப்பை உண்டுபண்ண இயலாமலிருப்பதை அறியக்கூடும். 30 சதவீத நீர்மை விகிதத்தைப்பற்றி (30 per cent liquidity ratio) ஏற்கெனவே கூறப்பட்டது. அத்தகைய விகிதம் கட்டாயமாகப் பின்பற்றப்படவேண்டியதொரு குறைந்தபட்ச விகிதமென (as a minimum which must be maintained) பிரிட்டிஷ் பாங்குகள் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளன. இதற்கு நேர்மாருக, 'வர்த்தக பாங்கர்கள்' (commercial bankers) பல்வகைக் கடன் பத்திரங்களை வாங்குவதைக்காட்டிலும் (the purchase of securities of various kinds) கடன்களை அளித்தலையும் பெறுதலையுமே தங்களது முக்கியமான தொழிலாக வைத்துக்கொண்டிருக்கின்றன. அவைகளுடைய சொத்துகளில் கடன்கள் 40, 45 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கும்படி விட்டுவிடத் தயங்கக்கூடும்.

ஆயினும், குறைந்தபட்ச ரொக்க விகிதம் (the minimum cash ratio) என்னும் காரணியானது (factor) தற்கால பாங்கு முறைக்கு மிகவும் இன்றியமையாததொன்ருகும். இது இருப்பதன் காரணமாகத்தான், 24ஆம் அத்தியாயத்தில் கூறப்போவதைப் போன்று, இங்கிலாந்து பாங்கானது, வர்த்தக பாங்கு முறை நடவடிக்கைகளை நெருங்கியும் தொடர்ந்தும் ஆளுதல் செய்ய முடிகின்றது.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

Report of the Committee on the Working of the Monetary System (the Radcliffe Report), Cmd. 827, H.M.S.O., London, 1959, 124 to 161 and Chs. V.

Sayers, Modern Banking, Chs. 2, 4, 5 and 9.

R. J. Truptil British Banks and the London Money Market (Cape, London, 1936), Chs. I and III.

T. Balogh, Studies in Financial Organization (Cambridge University Press, London, 1947), Chs. 1-6.

22. பண அங்காடிகளும் மூலதன அங்காடிகளும்
The Money and Capital Markets

1. மாற்று உண்டியல் (The Bill of Exchange)

சென்ற அத்தியாயத்தில் மாற்று உண்டியல் (the Bill of Exchange) என்னும் புதிரானதொன்றைப்பற்றி பல தடவை குறிப்பிட்டோம். இங்கிலாந்து பாங்கின் பாங்குத்துறை (the Banking Department of the Bank of England), வர்த்தக பாங்குகள் (commercial banks) ஆகிய இவ் இரண்டின் அறிக்கைகளிலும் மாற்று உண்டியல் என்பது இடம்பெற்றது. அப்படியாகில், மாற்று உண்டியல் என்பது என்ன? செயல் வடிவில் அது ஒரு வருங்காலத் தேதியிட்டதொரு செக்கு (a post-dated cheque) எனலாம். ஆனால், செக்கைப்போன்று பாங்கினிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளும் வகையில் எழுதப்பட்டிருப்பதில்லை; குறிப்பிட்ட நபரிடமிருந்து பணம் பெற்றுக்கொள்வதற்கேற்ப எழுதப்பட்டுள்ளது. குறுகிய கால அளவிற்கு ஒரு கடனைப் பெறுவதே மாற்று உண்டியலின் நோக்கமாகும். மாற்று உண்டியல் வெகுவாகப் பயன்படுத்தப்படும் பழக்கம் வளர்ந்த வரலாற்றின் ஏடுகளைச் சற்றுத் திருப்பிப்பார்ப்போமாகில், அதன் பணியினை நாம் நன்கறிந்துகொள்ள முடியும். ரயில் முறை (railway system) தோன்றி ஒரு நூற்றுண்டுக்குமேல் இருக்காதல்லவா? ரயில் தோன்றிய காலத்து முன்னருள்ள காலத்திலெல்லாம் செய்பொருள் உற்பத்தியாளரிடமிருந்து (manufacturer) அவர் உற்பத்தி செய்த பொருள்களை வாங்குகின்ற வியாபாரிக்குப் பண்டங்களைக் கடத்துவதற்கும் (transport) பண்டங்களை வாங்கிய வியாபாரி அவைகளை விற்பதற்கும் நீண்ட காலமாகும். பண்டங்கள் பிரிட்டனுக்குள்ளேயே உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படுவதிலும் இவ்வாறே கால இடைவெளி

அதிகமாக இருந்தது; இதைப்போன்றே பண்டங்கள் வெளி நாடுகளில் உற்பத்தி செய்யப்படுவதிலோ அல்லது விற்கப்படுவதிலோ காலம் அதிகம் தேவைப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் தான், மூலதனப் பிரச்சினை தோன்றியது; ஒரு வியாபாரி, பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டவுடனேயே அவைகளை விலை கொடுத்து வாங்கியபோதிலும், அவைகள் கடத்தப்படுவதிலும் (transported) கடத்தப்பட்டுக் கடைசியாக விற்கப்படுவதிலும் ஆகின்ற காலம் முழுவதிலும், அவருடைய மூலதனம் முடக்கப்பட்டே (locked up) கிடக்கும் ; இதேபோன்று செய்பொருள் உற்பத்தியாளரும் (manufacturer) தனக்குச் சேரவேண்டியவற்றைப் பெறுவதற்குப் பண்டங்கள் கடைசியாக விற்கிறவரையிலும் காத்துக்கொண்டிருக்கவேண்டும்.

தற்காலத்தில் மூலதனமானது (capital) ஒரு கிடைப்பருமையான காரணியாக (scarce factor) இருந்துவருகிறது. வியாபாரியோ அல்லது செய்பொருள் உற்பத்தியாளரோ மூலதனமளிப்பது (provisions of capital) என்னும் பணியைத் தன் பணியின் ஓர் அங்கமாக ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. ஆக, ஈண்டு, இவ் இருசாராருக்குமிடையே அவரவர் தனி நலத்தின் அடிப்படையில் பிணக்கு உள்ளது; தான் பண்டங்களை அனுப்பியவுடனேயே தான் அதற்குண்டான பணத்தைச் செலுத்த வேண்டுமென விற்பவர் (seller) கருதுகிறார்; அதேசமயத்தில் பண்டங்களைக் கொள்முதல் செய்பவர் (buyer) தான் அப்பண்டங்களை மறுவிற்பனை (resale) செய்கின்றவரையிலும் பண்டங்களுக்கான பணத்தைச் செலுத்துதலைத் தள்ளிப்போடுவதையே சிறந்ததெனக் கருதுகின்றார். இத்தகைய தனி நலப் பிணக்குகள், மாற்று உண்டியலால் (Bill of Exchange) சமரசப்படுத்தப்படுகின்றன. இத்தகைய வணிக பேரங்களில் மாற்று உண்டியலானது, மூலதன அளிப்பு (capital provisions) என்னும் வேலையை அதற்கெனவே தகுதிவாய்ந்த நபர்கள் (individuals) அல்லது நிலையங்கள் கைகளில் ஒப்படைக்கின்றது.

இந்த உண்டியலில் வியாபாரி குறிப்பிட்டுள்ள ஒரு வாசகம் (statement) அடங்கியிருக்கும். அதாவது, தான், செய்பொருள் உற்பத்தியாளரிடமிருந்து வாசகத்தில் குறிப்பிட்டுள்ள மதிப்புடைய பண்டங்களை வாங்கியிருப்பதாகவும் அதற்குண்டான தொகையை, தான், மூன்று அல்லது ஆறுமாத கால அளவில், அல்லது பண்டங்கள் கடைசியாக விற்கப்படுவதற்கு எவ்வளவு

காலம் பிடிக்கும் என்று கருதுகிறாரோ அந்தக் கால அளவில் பண்டங்களுக்கான பணத்தைக் கொடுத்துவிடுவதாக ஒரு வாக்குறுதியும் (promise) அடங்கியிருக்கும். பண்டங்களை அனுப்பும்போது செய்பொருள் உற்பத்தியாளர் (manufacturer) வியாபாரிக்கு உண்டியலை (bill) அஞ்சல் மூலம் (post) அனுப்புவார். வியாபாரி அதனைக் கையெழுத்திட்டு திருப்பி அனுப்புவார். செய்பொருள் உற்பத்தியாளர் அதனை வணிக நிதியளிப்பில் (trade finance) தேர்ச்சித் திறன் வாய்ந்த யாராவது ஒருவரிடமோ அல்லது நிறுவனத்தினிடமோ (அடுத்த உட்பிரிவில் இத்தகைய தேர்ச்சியாளர்களைப்பற்றி அதிகமாகக் கூறப்படும்) எடுத்துச்சென்று, அந்த உண்டியலைக் கழிவு செய்து தருமாறு (discount) அதாவது வாங்கிக் கொள்ளுமாறு—வேண்டுவார். வியாபாரி நன்மதிப்பு வாய்ந்தவராக இருப்பின் (of sound reputation) உண்டியலானது செய்பொருள் உற்பத்தியாளரிடமிருந்து வாங்கிக்கொள்ளப்படும். அதனுடைய முழு மதிப்பில் (full value) சற்றுக் குறைத்து உண்டியல் வாங்கப்படும் (உதாரணமாக £100 மதிப்புடைய உண்டியல் £99-க்கு வாங்கப்படும்); உண்டியலைக் கழிவு செய்பவர் (persons discounting the bill) அவ் வியாபாரியிடமிருந்து அதன் முழு மதிப்பையும் (its full value) அதில் குறிப்பிட்ட காலஅளவு முடிவடைந்ததும் பெற்றுக்கொள்வார்.

இவ்விதமாக இந்தப் பேரத்தில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரும் திருப்தி அடைகின்றனர். வியாபாரி, தான், பண்டங்களை விற்பனை செய்யக்கூடிய காலம்வரை பொறுத்திருந்து, விற்பனை ஆதாயத்திலிருந்து இம் முறையால் பணம் செலுத்த முடிகின்றது. செய்பொருள் உற்பத்தியாளரோ, குறைந்த அளவுச் செலவில் பண்டங்களில் முடக்கப்பட்டுள்ள நடைமுறை முதலினை (working capital)—உழைப்பு, மூலப் பொருள்கள் முதலியவற்றிற்கான செலவு—மீட்டு, அம் முதலினை மேற்கொண்டும் உற்பத்தியினைச் செய்வதற்குப் பயன்படுத்த இயலுகின்றது. உண்டியலைக் கழிவு செய்பவரின் இலாபத்தைப் பார்ப்போம். உண்டியல் வாங்கப்படும் விலைக்கும், அது முதிருந் தறுவாயில் (at maturity) அதற்கிருக்கும் முழுமதிப்பிற்குமிடையேயுள்ள வேறுபாட்டுத் தொகையினை அவர் இலாபமாக அடைகின்றார்; இத்தகைய வேறுபாடு உண்மையில், ஒரு வட்டி விகிதத்தையே ஒக்கும். உண்டியல் முதிரும்போது அது வாங்கப்பட்டதைக்காட்டிலும் அதிகமான மதிப்புடையதாக இருத்தலை சதவீதத்தில் கணக்கிட்டுப்

பார்க்கும்போது, உண்மையில், அது இத்தகைய பேரத்திற்குக் (transaction) கடனாக அளிக்கப்பட்ட முதலின் வட்டிவீதமாகவே தோன்றுகிறது — இந்த வீதம், கழிவு வீதம் (discount rate) என்றழைக்கப்படுகிறது. ஒரு £100 பெறுமான மூன்று மாத கால உண்டியலானது £99-க்கு வாங்கப்படுமானால் அது 4-சதவீத கழிவு வீதத்தைத் தாங்கியுள்ளதென்று பொருள்—அதாவது வேறுபாட்டுத் தொகையை (£ 1ஐ) முதிருந் தறுவாயிலுள்ள மதிப்பினால் (£ 100 ஆல்) வகுத்து, வகுத்துவரும் தொகையை ஆண்டொன்றுக்கு (per annum) இவ்வளவு வீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பண்டங்கள்பற்றிய பேரங்களில் புழங்குகின்ற உண்டியல்கள் வாணிப உண்டியல்கள் (trade bills) எனப்படும்; அவைகள் உள்நாட்டு உண்டியல்களெனவும் (inland bills) வெளி நாட்டு உண்டியல்களெனவும் (foreign bills) வகைப்படுத்தப்பட்டுள்ளன. பொருள்கள் நாட்டிற்குள்ளேயே கடத்தப்படுமானால் அவை சம்பந்தமான உண்டியல்கள் உள்நாட்டு உண்டியல்களென வும், வெளிநாட்டிற்கு அனுப்பப்படுமானால் அவை சம்பந்தமான உண்டியல்கள் வெளிநாட்டு உண்டியல்கள் எனவும் வழங்கப்படு கின்றன. குறுங்கால மூலதனத்தை அடைவதில் உண்டியல்களின் பெரும் பயனானது, நிதிய உண்டியல் (finance bill) என்ற மற்றொரு வகை உண்டியல் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது. நிதிய உண்டியலுக்கும் வாணிப உண்டியலுக்கும் உள்ள ஒரே வேறு பாடு என்னவெனில், நிதிய உண்டியல் பண்டங்கள் சம்பந்தப் பட்டவையல்ல; அது, குறுங்கால மூலதனத்தைக் கடனாகப் பெற விழையும் ஒருவர் தாம் குறிப்பிட்ட தொகையை வரப்போகும் ஒரு தேதியில் (on a date in the future) கொடுப் பதாக அளிக்கப்படும் ஒரு வாக்குறுதியாகும். நிதிய உண்டிய லில் மிக முக்கியமானதொரு வகை, கருவூல உண்டியலாகும் (Treasury bill). இது பிரிட்டிஷ் அரசாங்கத்தால் பெரிதும் பயன் படுத்தப்படுகிறது; அவ் அரசாங்கத்திற்கு வருவாயைக்காட்டி லும் செலவு அதிகமாக இருக்கும்போதெல்லாம் நிலைமையைச் சமாளிக்க இவ் உண்டியல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பொதுவாக அரசாங்கத்தின் செலவானது ஆண்டு முழுவதி லும் சீரானதாக இருந்துகொண்டேயிருக்கும்; ஆனால், அதன் வரு வாயைப்பற்றி அப்படிக் கூற முடியாது. வருவாயானது நிதிய ஆண்டின் (financial year) கடைசி மூன்று மாதங்களில்தான்

ஏராளமாக வந்து குவிகின்றது. இதன் காரணமாகவே, செலவுகள் அதிகமாக இருந்து வருவாய் குறைவாக உள்ள மாதங்களில், அரசாங்கம் கடன் வாங்க நேரிடுகின்றது. இத்தகைய கடன்களை, பத்தொன்பதாம் நூற்றுண்டினிறுதியில், பிரிட்டிஷ் அரசாங்கமானது கருவூல உண்டியல் என்னும் ஒருவகை உண்டியல்மூலம், எழுப்பத் திட்டமிட்டது. நாளடைவில் இவ்வகை உண்டியல் மிக பிரபலமான குறுங்கால வாணிபக் கடன் பத்திரமாக (instrument of short-term credit) வளர்ந்தது.

ஆக, கருவூல உண்டியல் என்பது அதனை வைத்திருப்பவருக்கு (holder) குறிப்பிட்ட தொகையை வருங்காலத்தில் ஒரு குறிப்பிட்ட தேதியில் தருவதாக அரசாங்கத்தின் சார்பில் அளிக்கப்படும் ஒரு வாக்குறுதியாகும். தற்காலத்தில் இத்தகைய உண்டியல்கள் பெரும்பாலும் 91 நாள் உண்டியல்களாக (91 day bills) இருக்கின்றன—அதாவது, அவை வெளியிடப்பட்ட தேதிக்குப் பிறகு 91 நாட்கள் கழித்து, அதில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ள தொகை கொடுக்கப்படும். இவ்வுண்டியல்கள் £ 5000 இனங்களாகவும் (denominations) அல்லது £ 5000 மடங்குகளின் (multiples of £ 5000) இனங்களாகவும் வெளியிடப்படுகின்றன. அங்காடியில், விலை கூறப்பட்டு, விற்பனைக்கு முன் வரும் கருவூல உண்டியல்களுக்கு விலைகூறு உண்டியல்கள் (tender bills) என்பது பெயர். கருவூலமானது ஒவ்வொரு பாரமும் விற்பனைக்கு மொத்தம் எவ்வளவு உண்டியல்கள் அளிக்கப்படவிருக்கின்றன என்பதனை அறிவிக்கின்றது; பண அங்காடியிலுள்ள நிறுவனங்களை, அவைகள் எந்த அளவிற்கு உண்டியல்களை வாங்கத் தயாராக இருப்பினும், விலை கோர [அதாவது, இன்ன விலைக்குத் தர முடியுமா என்று கேட்க (to bid)] அரசாங்கம் அழைக்கின்றது. உண்டியல்களுக்கு அதிக விலை பெறப்படும்போது அரசாங்கமானது தனது கடன்களுக்குக் (borrowings) குறைந்த கழிவு வீதத்தை அளிக்கும்படி நேரிடுகிறது; இந்நிலையில் கருவூலமானது விலை அதிகமாகக் கேட்பவர்களுக்கு இயன்ற அளவிற்கு அதிகமான உண்டியல்களை விற்கும். கருவூல உண்டியல்களில் மற்றொரு வகை கறவல் உண்டியல்களாகும் (tap bills). இவ்வுண்டியல்கள், பயன்படுத்தப்படாத நிதிகளை (idle funds) நிறைய வைத்துக் கொண்டிருக்கின்றனவும், அரசாங்கக் கருவூலத்திற்கு அந் நிதிகளைக் கடனாகத் தருவதற்கு முன் வருகின்றனவுமான பல்வேறு அரசாங்க மேலாண்மைகளுக்கு நேரடியாக அனுப்பப்படுகின்

றன. கறவை உண்டியல்களுக்கு எவ்வளவு கழிவு வீதம் கொடுக்கப்பட வேண்டும், ஒவ்வொரு வாரமும் அவைகளை எவ்வளவு வெளியிட வேண்டுமென்பனவற்றையெல்லாம் யாது காரணத்தாலோ, கருவூலமானது மிக்க இரகசியமானவைகளாகவே கருதி வருகின்றது.

இந்த நூற்றுண்டில் பல்வேறு வகை மாற்று உண்டியல்களின் ஒப்பீடான முக்கியத்துவத்தில் கணிசமான அளவிற்கு மாற்றம் காணப்படுகிறது. முதல் உலகப் போருக்கு உடனடி முன்பாக, லண்டனில் புழக்கத்திலிருந்த வாணிப உண்டியல்களின் அளவு (Volume of trade bills in circulation in London) £ 500 மில்லியனாக இருந்தது; அப்போது விலை கூறு கருவூல உண்டியல்களின் (tender treasury bills) அளவு £ 16 மில்லியனாக இருந்தது. 1936ஆம் ஆண்டின்போது வாணிப உண்டியல்களின் அளவு £ 300 மில்லியனுக்கும் குறைவாகவே இருந்தது; அதே சமயம் விலைகூறு கருவூல உண்டியல்கள் ஏறக்குறைய £ 600 மில்லியனாக அதிகரித்திருந்தன. 1960ஆம் ஆண்டில், லண்டன் பண அங்காடியில் புழக்கத்திலிருந்த வாணிப உண்டியல்களின் அளவு (the volume of commercial bills) £ 400 மில்லியனிலிருந்து £ 500 மில்லியன் வரை இருந்திருக்கக்கூடும்; அதே சமயம் விலை கூறு உண்டியல்களின் வெளியீடானது £ 2500 மில்லியனுக்குமேல் அதிகமாக இருந்தது. தற்போது பண அங்காடியில் கருவூல உண்டியலே ஈடு இணையற்ற முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இத்தகையதொரு வளர்ச்சிக்குக் காரணம் என்ன? கருவூல உண்டியல்களின் அளவு மிக அதிகமாக அதிகரித்தமைக்குக் காரணம் பிரிட்டிஷ் நாட்டுக் கடன் (British national debt) பெருகியதேயாகும். பிரிட்டிஷ் நாட்டுக் கடன், முழுவதுமாக, 1900ஆம் ஆண்டில் £ 600 மில்லியனுக்கும் குறைவாக இருந்ததானது 1962ஆம் ஆண்டில் £ 29,000 மில்லியனுக்கும் அதிகமாகப் பெருகியது ; இத்தகையதோர் அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் இரு உலகப் போர்களால் ஏற்பட்ட செலவுகளைச் சமாளிக்க அரசாங்கம் கடன் வாங்கியமையே. இந்த நூற்றுண்டில் போக்குவரவு சாதனங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும் பாங்குகளின் வளர்ச்சியுமே வாணிப உண்டியல்கள் குறைந்து வருவதற்கு முக்கிய காரணங்களாக உள்ளன. போக்கு வரவு சாதனங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமானது, உற்பத்தி (production), விற்பனை (sale) ஆகிய இவ்விரண்டிற்குமிடையேயுள்ள கால

இடைவெளியை (time-lag) வெகுவாகக் குறைத்துவிட்டது. இதன் காரணமாகவே, வாணிபத்திற்குக் கடனாகத் தேவைப்படும் மூலதனத்தின் அளவும் வெகுவாகக் குறைந்தது. வணிகர்கள் தங்களது பேரங்களுக்கு (transactions) இணக்கமானவையும் (flexible) வசதியானவையுமான (convenient) பாங்குக் கடன் (bank credit) மூலம் பணம் பெறுவதற்கு பாங்குகளின் வளர்ச்சி துணை செய்தது. லண்டன் பண அங்காடியில். உண்டியல்களின் அளிப்பில் ஏற்பட்ட இத்தகைய மாறுதல்கள் அங்காடியின் வேலையிலேயே பல முக்கிய விளைவுகளை ஏற்படுத்திவிட்டன. இவ் விளைவுகளைப் பின்னர் ஆராய்வோம்.

2. பண அங்காடியின் இயல்பும் பணிகளும் (The Nature and Functions of the Money Market).

சுருக்கமாகக் கூறுமிடத்து, பண அங்காடியின் நோக்கம் குறுங்கால மூலதனம் அளித்ததும் (supply of capital), இவ்வாறு அளிப்பதில் ஏற்படும் ஆபத்தினைத் (risk) தாங்குதலுமாகும். இத்தகைய பணிகளைச் செய்வதற்கு அங்காடி அடைகின்ற ஊதியம் (reward) கழிவு வீதமாகும் (discount rate). அங்காடிக்கு நேரக்கூடிய ஆபத்துகள் (risks) இரு வகைப்படும். ஒன்று வாணிப ஆபத்து (trade risk); மற்றொன்று பண ஆபத்து. கடன் பெறுபவர் தமக்குக் கடன் கொடுக்கப்பட்ட கடனைத் திருப்பித் தர இயலாமற்போவதால், அல்லது திருப்பித்தர மறுப்பதால் ஆபத்து நேரிடக்கூடும். சான்றாக, ஓர் உண்டியல், கழிவு செய்யப் பட்டதும், அந்த உண்டியலில் எழுதப் பெற்றவர் (அதாவது, குறிப்பிட்ட தொகையை 3 அல்லது 6 மாத கால அளவில் திருப்பித் தருவதாக வாக்களித்திருக்கும் நபர்) உண்டியலானது முதிருந்தறுவாயில் வக்கற்றவராகப் (bankrupt) போகக்கூடும். இவ்வாறே ஒரு நிகழ்ச்சி ஏற்படுமாயின், உண்டியலைக் கழிவு செய்த நபர் (the person who has discounted the bill), உண்டியலைக் கழிவு செய்யப்படுவதற்காகத் தன்னிடம் உண்டியலைக் கொண்டு வந்த நபரிடமிருந்து—அதாவது, ஆரம்பக் கடனீவோரிடமிருந்து (original creditor) பெற்றுக்கொள்ளலாம். அதாவது, கடனாளி தான் திருப்பித் தந்துவிடுவதாக அளித்த வாக்குறுதியின்பேரில் முதலினைக் கடன் வாங்கிய ஆரம்பக் கடனீவோரிடமிருந்து உண்டியலில் கண்டுள்ள தொகையை வசூல் செய்துகொள்ள லாம். இந்த வழியாலும் உண்டியலில் கண்டுள்ள தொகை

திரும்பப் பெறப்பட இயலவில்லையெனில், உண்டியலைக் கழிவு செய்தவர் தமது முதலினை இழக்க வேண்டியதுதான். பண அங்காடியிலுள்ள நிறுவனங்கள் (the institutions in the money market) தமது வணிகத்தில் மிக்க தேர்ச்சியினை உடையனவாக இருத்தலின், எந்த உண்டியலில் ஆபத்து வரக்கூடும், எது ஆபத்தற்ற உண்டியல் என்பனவற்றையெல்லாம் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றன. ஆனால், எவ்வளவு எச்சரிக்கையாக இருப்பினும் ஆபத்து (risk) என்பது வாணிப உண்டியல் (commercial bill) கழிவு செய்யப்படுதலில் ஓரளவிற்கு இருக்கத்தான் செய்கிறது.

பணவழி ஆபத்து (monetary risk) என்பது ஒரு தனி வகையான ஆபத்தாகும். இந்த ஆபத்து எவ்வாறு நிகழுகின்றதெனப் பார்ப்போம். உண்டியல்களைக் கழிவு செய்யும் நிறுவனங்களில் பெரும்பான்மையும், பணத்தைக் கடன் வாங்கியே கழிவு செய்து தருகின்றன. [இந்நோக்கத்திற்காக அவைகள் வாங்கும் கடன்களில் பெரும்பகுதி வர்த்தக பாங்குகளால் (commercial banks) அளிக்கப்படுகின்றன.] இவ்வாறு கடன் பெறப்படும் தொகைகளுக்கு அந் நிறுவனங்கள் வட்டி அளிக்க வேண்டும். பெரும்பாலும் இக்கடன்கள், தேவைப்படும்போது மிகக் குறுகிய கால அறிவிப்புக் கொடுத்துவிட்டு, பணத்தைத் திருப்பித் தருமாறு கேட்கப்படும் குறுங்காலக் கடன்களாகும். அந் நிறுவனங்கள் எவ்வாறு இலாபமடைகின்றனவென்று பார்ப்போம். தாம் உண்டியல்களைக் கழிவு செய்யும்போது, தாம் கடன் வாங்கியுள்ள (கழிவு செய்யப்படும் உண்டியல்களுக்குப் பணம் தருவதற்கு) தொகைகளுக்கான வட்டி வீதத்தைக் காட்டிலும் அதிகமான வீதத்தைக் கழிவு வீதமாகப் பெறுவதன்மூலம் இலாபமடைகின்றன. அங்காடியிலுள்ள நடப்புக் கழிவு வீதமானது (the current market rate of discount) அதிகரிக்க ஆரம்பித்ததற்குச் சிறிது காலத்திற்கெல்லாம் (இவ்வாறு அதிகரிப்பதற்கு என்ன காரணம் என்பதனை 24ஆம் அத்தியாயத்தில் காண்போம்) நிறுவனங்கள் தாம் வாங்கிய கடனை உடனடியாகத் திருப்பித் தர வேண்டுமென்று கேட்கப்படுமானால், அவைகளுக்கு, இச் சூழ்நிலையில் இருப்பன இரு வழிகள்தாம். ஒன்று, அவைகள் கழிவு செய்த உண்டியல்களைத் தம்மிடமே வைத்துக்கொண்டு, தமது கடனீவோர்களுக்கு (creditors) வேறு இடத்தில் நடப்பு (அதாவது, அதிகமான) வட்டி வீதத்தில் கடன் வாங்கிப் பணத்தைக் கொடுக்

கலாம். இத்தகைய முறை கையாளப்படுமானுல், புதியதாகக் கடன் வாங்கியுள்ள இடங்களுக்கு, தாம் வைத்திருக்கும் உண்டியல்களினின்றும் பெறுகின்ற வருமானத்தைக் காட்டிலும், அதிகமான வட்டியைக் கொடுத்தாக வேண்டும். இதனுல் அவைகளுக்கு இலாபத்தைக் காட்டிலும் நஷ்டமே ஏற்படும். இரண்டாவது வழியினைப் பார்ப்போம். அதாவது, அவைகள் கழிவு செய்து தம்மிடம் வைத்துக்கொண்டிருக்கிற உண்டியல்களை விற்றுவிட்டு—அதாவது, அவற்றை மறுகழிவு (by re-discounting) செய்து—தமது கடன்களைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனுல், இதிலும் ஒரு சிக்கல் உளது. உண்டியல்களை அவைகள் விற்குந்தறுவாயில் நடப்புக் கழிவு வீதமானது (current discount rate) அதிகரித்திருக்குமானுல், அவைகள் உண்டியல்களை ஏற்கெனவே வாங்கிய விலையைக் காட்டிலும் குறைத்தே தற்போது விற்க முடியும். உதாரணமாக, கழிவு வீதமானது (discount rate) 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக அதிகரித்துவிட்டதெனக் கொள்வோம்; அப்படியாகில், ஒரு மூன்று மாத கால உண்டியலானது பழைய வட்டி வீதத்தில் £ 99—ஐயும் (3 மாதங்களுக்கு £1 வட்டியென்ருல் அது ஆண்டொன்றுக்கு சுமார் 4 சதவீத வட்டியாகும்), புதிய அதிகரித்த வட்டி வீதமான 5 சதவீத வட்டியின்போது அவ்வுண்டியல் மறுகழிவு செய்யப்படும்போது (re-discounted) அவ்வுண்டியில் £ 98 15 s— தான் பெறும் (உண்டியல் முதிருவதற்கு இன்னும் மூன்று மாத காலம் இருக்கிறது என்ற எடுகோளில்) மேற்கூறிய இரு வழிகளில் எந்த ஒரு வழியிலும், உண்டியலைக் கழிவு செய்யும் நிறுவனமானது, அங்காடி வட்டி வீதங்களில் (market interest rates) ஏற்படும் மாற்றத்தால் நஷ்டத்தினையே அடைகின்றது.

பண அங்காடியில் உண்டியல் வணிகத்தில் தேர்ச்சித் திறன் வாய்ந்த முக்கிய நிறுவனங்கள் நான்கு. முதலாவதாக, தரகர் நிறுவனங்களைக் (the firms of brokers) கூறலாம். இந் நிறுவனங்கள் ஓராள் தொழில்களாகவோ (one-man businesses) அல்லது கூட்டுத் தொழில்களாகவோ (partnerships) நடத்தப்படுகின்றன. இவைகள் தங்களது சொந்த மூலதனத்துடன் பாங்குக் கடன்களையும் வாங்கித் தொழில் செய்கின்றன. இதில் பெரும்பான்மையான நிறுவனங்கள் பதிலாண்மைகளாகவே (agents) செயல்புரிகின்றன. அதாவது, இவை, கடன் வாங்க வரும் வணிகர்களின் உண்டியல்களைக் கழிவு செய்தும், கழிவு செய்த உண்டியல்களை மீண்டும்,

அவைகள் முதிரும் வரையிலும் தாம் வைத்திருக்க விழையும் நிறுவனங்களுக்கு விற்றும் வருகின்றன. தரகர்களில், ஒரு சிறுபான்மையினரைத் தவிர்த்து, ஏனையோர்க்கு உண்டியல்களை அவைகளின் முதிருங்காலமாகிய மூன்று அல்லது ஆறு மாத கால அளவு முழுவதும் வைத்திருக்கக்கூடிய அளவிற்கு நிதி வசதியிருப்பதில்லை. ஆகவேதான், அவைகள் வாங்குவோருக்கும் விற்போருக்குமிடையே இடையாட்களாக (intermediaries) இருக்கின்றன. கழிவு செய்யும் வேலையில் பெரும்பகுதியினைக் கழிவு அகங்கள் (discount houses) செய்கின்றன. இத்தகைய கழிவகங்கள் லண்டனில் பன்னிரண்டு உள்ளன; அவற்றுள் மூன்று முதன்மையான கூட்டுப்பங்கு அகங்களும் (dominant joint-stock houses) உள்ளன. இவைகள் கீழ்க்கண்டவைகளினின்றும் நிதி வசதிகளைப் பெறுகின்றன. அவையாவன : (அ) கூட்டாளிகள் (partners) அல்லது பங்குதாரர்களால் (shareholders) பங்காகத் தரப்பட்ட முதல், (ஆ) வர்த்தக பாங்குகள், (இ) பொது மக்களின் வைப்புகள் (deposits from the general public). இத்தகைய நிதி சாதனங்களைக் கொண்டுதான் அவைகள் ஏராளமான அளவு உண்டியல்களை, அவைகளுக்குப் பணம் செலுத்தப்படும் கால அளவு வரையிலும், வைத்திருக்க முடிகின்றது.

ஏற்பகங்கள் (acceptance houses) இத்தகைய நிறுவனங்களில் மூன்றாவது வகையாகும். இவைகள் வாணிப நிதியியலில், சிறப்பாக, பன்னாட்டு வாணிப நிதியியலில், நீண்ட அனுபவம் பெற்றிருத்தலால் அவை ஓர் உண்டியலின் (bill) தகுதி பற்றித் தீர்ப்பளிக்க வல்லவையாக இருக்கின்றன. உண்டியலை அவை தரகு (commission) பெற்றுக்கொண்டு, ஏற்பு செய்வதன்மூலம் (by accepting) தமது சொந்த நாணயத் தன்மையையும் (credit-standing) உண்டியலின் தகுதியுடன் இணைத்துவிடுகின்றன. உதாரணமாக, ஒரு மாற்று உண்டியலில் (bill of exchange) கண்டுள்ள பெயரானது கடன் பெறுபவருக்கு (borrower) நன்கு தெரியாத பெயராக இருப்பின், அத்தகைய உண்டியல் அங்காடியால் வணிக ஆபத்துடையதொன்றாகக் கருதப்படுமாகையால், அவர் அவ்வுண்டியலை, அவ் வணிகத்தைப்பற்றி அல்லது அவ்வுண்டியல் தோன்றிய நாட்டைப்பற்றி நன்கு தெரிந்துள்ளதோர் ஏற்பகத்திற்குக் கொண்டு சென்று, அதனை ஏற்பு செய்யுமாறு கேட்பார். ஏற்பகமானது, அத்துறையில் தனக்குள்ள மிக்க தேர்ச்சித் திறமையின் காரணமாக, உண்டியல் நாணய

மானதொன்று, இல்லையா என்பதைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருக்கும் (அல்லது குறைந்தபட்சம் அதன் நாணயத் தன்மையைப்பற்றி ஆராயக்கூடிய வழி வகையையாவது பெற்றிருக்கும்): ஏற்பகத்திற்கு உண்டியல் திருப்தியென்று படின், அவ்வுண்டியலை அது ஏற்பு செய்யும்—அதாவது, உண்டியலில் குறிப்பிட்டுள்ள நபர் உண்டியல் முதிரும் தேதியில் பணம் செலுத்தத் தவறினால், உண்டியலின் தொகையைத் தான் தருவதாக ஏற்பகம் உத்தரவாதம் அளிக்கும். நம்பிக்கையும் நற்பெயரும் வாய்ந்ததொரு நிறுவனம் செய்யும் அத்தகையதோர் ஏற்பு (such an acceptance), உண்டியலில் ஏற்படக்கூடிய ஆபத்தினைக் (risk) குறையச் செய்கின்றது; எனவே. இத்தகைய உண்டியல் மிகக் குறைந்த வீதத்திற்குக் கழிவு செய்யப்படும் (discounted at a lower rate).

கடைசி வகை நிறுவனங்கள் வர்த்தக பாங்குகளாகும் (commercial banks). அங்காடியில் இவை மூன்று வகையான பணிகளைச் செய்கின்றன. முதலாவதாக இவை, உண்டியல்களை, கழிவகம் கழிவு செய்வதைப் போன்று, நேரடியாகக் கழிவு செய்கின்றன (சென்ற அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ள பாங்கு அறிக்கையில் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் மூன்றாவது சொத்து வகையாகக் காட்டப்பட்டுள்ளதை ஈண்டு நினைவு கொள்ளுதல் வேண்டும்). வர்த்தக பாங்குகள், கழிவகங்களிலிருந்து (discount houses) தம் கால அளவில் ஒரு பகுதியே கழிந்துவிட்ட உண்டியல்களை வாங்குவதன் வாயிலாகவும் உண்டியல்களைக் கழிவு செய்கின்றன. (தற்காலத்தில் பாங்குகளிடமுள்ள கருவூல உண்டியல்கள் இவ்வாறு கழிவகங்கள் மூலமாக வாங்கப்பட்டவையே. இரண்டாவதாக, பாங்குகள், குறிப்பாக நமக்குப் பழக்கமான வாடிக்கைக்காரர்களின் உண்டியல்களை ஏற்பு செய்யும் வேலையினையும் (acceptance bussiness) மேற்கொண்டுள்ளன. கடைசியாக, அவைகள் தரகர்களுக்கும் (brokers) கழிவகங்களுக்கும் (discount houses) அழைப்புக் கடன்களையும் குறுந்தவணைக் கடன்களையும் (money at call and short notice) அளித்து வருகின்றன. இக் கடன்கள் ஒரு நாள், ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் ஆகிய கால அளவிற்கு அளிக்கப்படுகின்றன. இக் கடன்கள் திருப்பித் தரப்பட வேண்டிய சமயத்தில் புதுப்பிக்கப்படுதலும் வழக்கம்.

ஈண்டு ஒரு வினு எழுகின்றது. பாங்குகள் கழிவகங்களுக்குக் கடன் கொடுப்பதற்குப் பதிலாக, ஏன், கழிவகங்களைப் போன்றே தாமும் உண்டியல்களைக் கழிவு செய்து அக் கழிவகங்கள் இலாபம் அடைவதைப் போன்று அடையக் கூடாது? வாணிப உண்டியல் களைப் பொறுத்த அளவில், கடந்த ஆண்டுகளிலெல்லாம் கூறப் பட்ட பதில் இதுதான். அங்காடியின் கையில் சில உண்டியல்களை விட்டு வைத்தலால், பாங்குகள் நீர்மையுள்ளதொரு சொத்தினை (a liquid asset)—அழைப்புக் கடனைப் போன்று—அடைய முடிகின்றது. இவ்வாறு கடன் அளித்தலில், வாணிப உண்டியல் களிலுள்ள வணிக ஆபத்துகளும் (commercial risks) இருப்பதில்லை. ஆயினும், இத்தகையதொரு வாதமானது, வாணிப உண்டியல் களின் முக்கியத்துவம் குறைந்துவிட்ட தற்போது, திண்மை யிழந்தே காணப்படுகின்றது. கருவூல உண்டியல்களில் (Treasury bills) அத்தகைய ஆபத்துகள் இல்லை; கருவூல உண்டியல்களையும் இன்னும் மற்றக் குறுங்கால அரசாங்கக் கடன் பத்திரங்களையும் (treasury bills and other short-term government securities) வாங்கு வதில்தான் அங்காடியானது, பாங்குகளிடமிருந்து தான் பெறும் கடன்களில் பெரும்பகுதியையும் பயன்படுத்துகிறது.

தற்காலத்தில் பண அங்காடியில் அரசாங்கக் கடன் பத்திரங் களே முதன்மையாகவுள்ளன. இவைகள் எந்தவித வாணிப ஆபத்தையோ (trade risk) அல்லது கொடுபடுதலில் தவக்கமோ (default) உடையனவாக இருப்பதில்லை. அங்காடியின் இத்தகைய சூழ்நிலையில் வாணிப (trade) வர்த்தக (commercial) ஆபத்துகளை மேற்கொண்டு தொழில் செய்யும் பல்திறப்பட்ட நிறுவனங்களை இன்னும் வைத்துக்கொண்டிருப்பது அவசியம்தானு என்ற கேள்வி எழுகின்றது. பாங்குகள், கழிவகங்கள் மூலமாக அல்லாது, அவைகளிடம் வருகின்ற எல்லா உண்டியல்களையும் அவைகளே கழிவு செய்யினும், பண அங்காடிக்குத் தற்போது கடனுகக் கொடுக்கப்பட்டுள்ள நிதிகள் யாவற்றையும் தாமே கொண்டு, அவற்றின் துணை கொண்டு உண்டியல்களைக் கழிவு செய்யினும், பண அங்காடி என்பதே மறைந்து போகும் என்பதற்கு ஐயமில்லை. பண அங்காடி அவ்வாறு மறைந்து போகாமல் ஏன் இன்னும் வைத்திருக்கப்படவேண்டும்; இந் நிறுவனங்கள், ஆபத்துத் தன்மையுள்ள வாணிப உண்டியல்களில் பேரம் நிகழ்த்துவதன்மூலம் ஓரளவிற்குப் பயனுள்ள பணியினையே செய்துவருகின்றன. இத்தகைய வாணிப உண்டியல்கள்

தற்காலச் சூழ்நிலையில் மீண்டும் முக்கியத்துவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பும் இருந்துவருகிறது. அவைகள், தற்காலத்தில், தவணைக் கொள்முறை வணிகத்திற்குப் (hire-purchase business) பெரிதும் பயன்படுகின்றன. இன்னும் மிக முக்கியமானதொரு பணியினையும் இந் நிறுவனங்கள் செய்துவருகின்றன; இங்கிலாந்து பாங்கிற்கும் வர்த்தக பாங்குகளுக்குமிடையே ஓர் இடையாளாக (intermediary) அவை செயல்புரிகின்றன. பணக்கட்டுப்பாட்டு முறையில் இத்தகையதோர் உறவு எவ்விதம் செயற்படுகிறதென்பதனை 24ஆம் அத்தியாயத்தில் காண்போம். மைய பாங்கிற்கும் வர்த்தக பாங்குகளுக்குமிடையேயுள்ள இந்தத் தொடர்பானது இல்லாதுபோனால், இவையிரண்டுக்குமிடையே வேறு எம்முறையாலும் ஏற்படும் தொடர்பானது அவ்வளவு திருப்தியானதொரு தொடர்பாக இருக்காதென்பதனைப் பண அங்காடியின் தொடர்பு இல்லாமலுள்ள மற்ற நாடுகளின் அனுபவத்தினின்றும் தெரிந்துகொள்ளலாம்.

3. நெடுங்காலக் கடன் பத்திரங்கள் (Long-term Securities)

மாற்று உண்டியல்களைக் கழிவு செய்து தருவதன்மூலம், பண அங்காடியிலுள்ள, கடன் கொடுப்பதில் தேர்ச்சி பெற்ற பல நிறுவனங்கள், வாணிப ஓட்டத்திற்கு வகை செய்து வருவதை ஏற்கெனவே பார்த்தோம். அவ்வாறு அளிக்கப்படும் நிதிகள் குறுங்காலக் கடன்களாகவே உள்ளன. பெரும்பாலான உண்டியல்களுக்கான பணம் மூன்று மாதங்களுக்குள்ளாகவே திருப்பி அளிக்கப்படுகிறது. இவற்றில் சிறுபான்மையாகவுள்ள சில உண்டியல்களே ஆறு அல்லது ஒன்பது மாத உண்டியல்களாகவுள்ளன. இத்தகைய கால அளவினைக் கொண்ட கடன்கள்—உதாரணமாக, பன்னிரண்டு மாத கால அளவு வரையிலும் உள்ள கால அளவைக் கொண்ட கடன்கள்—நடைமுறை முதலுக்கு நிதியளிக்கப் போதுமானவைகளாகயிருக்கின்றன. இத்தகைய நடைமுறை முதலானது (working capital) உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களாக உருவாக்கப்பட்டு, ஒருசில மாதங்களுக்குள் அங்காடியில் விற்கப்பட்டுவிடுகின்றன.

இத்தகைய மூலதனத்தை மட்டுமேயல்லாது ஏராளமான அளவு மூலதனம் நெடுங்காலங்களுக்குத் தேவைப்படுகின்றன. ஒரு நிறுவனம் தொழிற்சாலையொன்றைக் கட்ட விழையக்கூடும்; அல்லது விலையுயர்ந்த தளவாடத்தையும், இயந்திரத்

தொகுதியையும் (plant and machinery) மறுநிர்மாணம் செய்ய விரும்பக்கூடும். தன்னிடம் போதிய அளவிற்குக் காப்பு நிதிகள் இருந்தாலொழிய மேற்சொன்ன விருப்பங்களை நிறைவேற்ற வேண்டுமாயின் கடன் வாங்கியே தீர வேண்டும். அப்படிக் கடன் வாங்குமானால், இத் திட்டங்களுக்கான கடனை ஒரு சில மாதங்களில் திருப்பிக் கொடுத்துவிட அதனால் வாக்களிக்க முடியாது. புதிய இயந்திரத் தொகுதி அல்லது புதிய தொழிற்சாலைக்காகும் செலவினைத் திருப்பித்தர வேண்டுமாயின், தொழில் முயல்வோருக்கு (entrepreneur) பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளாவது ஆகும். எனவே, நீண்ட காலத்தில் (கணிசமான அளவிற்கு) திருப்பித்தரக்கூடிய கடனே அவருக்குத் தேவைப் படுகிறது.

இத்தகைய நெடுங்காலக் கடன்களில் மிக முக்கியமானது பிணையங்களாகும் (securities) (கடன் பத்திரங்கள் எனவும் கூறலாம்). ஒரு பிணையம் என்பது (security) கடன் பெறுபவர் பிணையத்தின் சொந்தக்காரருக்கு காலந்தோறும் ஒரு நிலையான அல்லது பல அளவுகளில் தொகையைத் திருப்பிச் செலுத்துவதாக அளிக்கப்படும் வாக்குறுதியைக் கொண்ட ஆவணமாகும் (document). பிணையத்தின் சொந்தக்காரருக்கு ஆண்டொன்றுக்கு ஓர் அறுதியிட்ட தொகை (a fixed amount) செலுத்தப்பட்டு வருமானால் (இந்தத் தொகை பிணையத்தின் பெயரளவு மதிப்பில் இத்தனை சதவீதம் என்று அறிவிக்கப்படுவது வழக்கம்), அத்தகைய பிணையம் (security) அறுதியிட்ட வட்டிப்பிணையம் (fixed-interest security) அல்லது பிணைப் பத்திரம் (bond) என அழைக்கப்படும். இத்தகையதொரு பிணையம் முதலின் அளிப்புப் பற்றியதாகவேயுள்ளது; அது கடன் ஒன்றின் உரிமைப் பத்திரமாக மட்டுமே (mere title to a debt) உள்ளது. திருப்பி அடைக்கப் படும் தொகையானது அறுதியிடப்படாமல், ஈட்டப்படும் இலாபங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதாக இருப்பின், அப்போது (17ஆம் அத்தியாயத்தின் கருத்தியல்படி) மூலதனத்துடன் தொழில் முயல்வோரது அளிப்புப்பற்றியதாகவும் இருக்கும்; இத்தகைய பிணையமானது (security) ஒரு நிறுவனத்தின் சொத்துரிமையில் பங்கு பெற்றுள்ளமைக்குச் சான்றாக விளங்குகிறது; எனவே அது கடனாக மாட்டாது. எட்டாம் அத்தியாயத்தில் கூறப்பட்டது போன்று இத்தகைய பிணையங்கள் (securities) பங்குகளாகும் (shares).

எனவே, அறுதியிட்ட வருமானம் அல்லது இலாபங்களில் ஒரு பங்கு ஆகியவற்றிற்கானதோர் உரிமையாக (claim) உள்ள பிணையமானது அங்காடியில் வாங்கப்படவும் விற்கப்படவும் கூடியதொரு சொத்தாக (asset) உள்ளது. பிணையங்களை விற்பதன்மூலம் தொழில் முயல்வோன் தனக்கு வேண்டிய முதற் கருவிப் பொருள்களை வாங்குவதற்கான பணத்தைப் பெற இயலுகின்றது; இதற்குப் பதிலாக, பிணையத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் விதிக்கின்ற கடமைகளை அவர் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இத்தகைய பிணையங்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல் ஆகிய பேரங்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து, 'மூலதன அங்காடி' (capital market) எனப்படுகின்றன. இவைகளை இரு தொகுதிகளாகப் பிரிக்கலாம். அவற்றில் ஒரு தொகுதி (group) முதல் தடவையாக வெளியிடப்படும் பிணையங்களில் பேரங்களை நிகழ்த்துகின்றன. இதற்குப் 'புதிய வெளியீட்டு அங்காடி' (the new issue market) என்று பெயர். மற்றொரு தொகுதிக்கு, 'பங்கு மாற்றுச் சந்தை' (stock exchange) என்று பெயர். இவைகள் அங்காடியில் ஏற்கெனவே வெளியிடப்பட்டவையும் அதன் பின்னர் ஓர் உரிமையாளரிடமிருந்து மற்றோர் உரிமையாளருக்கு கைமாறிச் செல்கின்றனவுமான பிணையங்களில் (கடன் பத்திரங்களில்) பேரங்களை நிகழ்த்துகின்றன.

4. புதிய வெளியீட்டு அங்காடி (The New Issue Market)

வெளியீட்டங்காடியில் முதன்மையாக உள்ள நிறுவனங்கள் வெளியீட்டகங்களும் (Issuing Houses) உறுதிக்காப்பாளர் நிறுவனங்களுமாகும் (firms of underwriters). ஒரு தொழில் நிறுவனமானது பொதுமக்களிடமிருந்து கடன்களை வாங்க முனையும்போது சட்டப்படியும் அல்லது தகுதி வாய்ந்த கடன் கொடுப்பவர்களைக் கவருவதற்கும் அதிகமான முன்னேற்பாடு (a good deal of preparations) தேவைப்படுகிறது. முதலில் அது முன் விவரணத்தைத் (prospectus) தயாரிக்க வேண்டும். கம்பெனியானது இன்னதுபற்றியதெனவும், அண்மை ஆண்டுகளில் அது பெற்ற இலாப விவரங்களையும், அதன் எதிர்காலத் திட்டங்களையும் (future plans) இந்த முன் விவரணம் விளக்கியாக வேண்டும். அடுத்து, எந்த வழிகளில் நிறுவனத்திற்கான பணத்தைத் திரட்டலாம் என்பதுபற்றிய அறிவுரையைத்

தேடிக்கொள்ளுதல் வேண்டும். பொதுவாக, கடன் பெறுபவர் இயன்றவரை எளிதான நிபந்தனைகளின்பேரில் கடன் பெறவே விழைவார். தேவைப்படுகின்ற முதல் அத்தனையையும் பெற வேண்டுமெனில் பொதுமக்களைப் போதிய அளவிற்கு நன்கு கவர வேண்டும். இப் பணிகள் யாவற்றையும் வெளியீட்டகங்கள் (Issuing houses) செய்து வருகின்றன. இவற்றுடன் நிதியெழுப்பும் வெளியீட்டினை விளம்பரப்படுத்துதல் (advertising the issue), பங்குத் தொகைகளை வசூலித்தல், பிணையங்களை (கடன் பத்திரங்களை) அதன் உரிமையாளர்களுக்கு அனுப்பி வைத்தல் போன்ற செயலாட்சிப் பணிகள் யாவற்றையும் (all the administrative work) வெளியீட்டகங்கள் செய்து வருகின்றன. அவைகள் செயலாட்சி செய்து வருவது மட்டுமல்லாமல், புதிய கடன்களுக்கு அங்காடியின் நிலவரம் எப்படியுள்ளதென்பதனையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்; தம்மால் இயன்றவரை வெளியீட்டுத் தொழில் வெற்றியுடன் இயங்கச் செய்வதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். அவர்களது பணிகளுக்கு வழக்கமாக தரகு (commission) தரப்படுகிறது.

உறுதிக் காப்பாளர்கள் (underwriters) என்பவர்கள் கடன் பெறுபவர்களுக்கு (borrowers) ஒருவகைக் காப்புறுதியை (a form of insurance) அளிக்கின்றனர். கடன் பெறும் ஒருவர் தாம் பெற விழையும் கடன்கள் முழுவதையும் பெறக்கூடும் என்பதனை நிச்சயப்படுத்திக்கொள்ள ஆவலுடையவராக இருப்பின், வெளியீட்டு அகம் அந்த ஆவலைக் கீழ்க்கண்ட வகையில் நிறைவேற்றி வைக்கிறது; அங்காடியிலுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுதிக் காப்பாளர்களைக் கொண்டு வெளியீட்டினை (issue) உறுதிக் காப்பளித்துத் தரச் செய்கின்றது. தரகு தொகையைக் கொடுத்தால், இவ்உறுதிக் காப்பாளர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கைப் பிணையங்களை (securities) ஒப்புக்கொள்ளப்பட்ட விலைக்கு வாங்கிக்கொள்வதாக வாக்களிப்பார்கள். பொதுமக்கள் வெளியீடு முழுவதையும் (the whole issue) வாங்கிக் கொண்டால், உறுதிக்காப்பாளர்கள் அழைக்கப்படமாட்டார்கள்; ஒருசில பிணையங்கள் விற்கப்படாது வெளியீட்டகங்களின் கைகளில் தங்கிவிடுமானல் அப்போது உறுதிக்காப்பாளர்கள் தமது சொந்த சாதனங்களைக்கொண்டு அவற்றை வாங்கிக் கொள்ள வேண்டும். உறுதிக்காப்பாளர்கள் இவற்றைப் பங்கு மாற்றுச் சந்தையில் (stock exchange) விற்றுவிடுவர். ஆனால்,

இவ்வாறு விற்கும்போது, அவர்களுக்கு ஆபத்து நேரிடவும் வாய்ப்பிருக்கும். பங்குமாற்றுச் சந்தையில் அவர்கள் பிணையங்களை விற்கும் விலையானது தாம் ஏற்கெனவே அவற்றை வாங்கிய விலையைக் காட்டிலும் குறைவாக இருப்பின் நஷ்டம் என்னும் ஆபத்தினை அவர்கள் தாங்கிக்கொள்ளத்தானே வேண்டும்?

புதியதாக வெளியிடப்படும் பிணையங்களை வாங்குவோர் யாரெனப் பார்ப்போம். முதலீடு செய்கின்ற தனி நபர்கள் (individual investors) தங்களது தனிப்பட்ட சேமிப்புகளினின்றும் பிணையங்களில் சிலவற்றை வாங்கிக் கொள்கின்றனர். தற்காலத்தில் காப்புறுதிக் கம்பெனிகள் (insurance companies), ஓய்வுச் சம்பள நிதிகளை நிருவகிக்கும் நிறுவனங்கள், தொழில் நிலையங்களை நிருவகிக்கும் நிறுவனங்கள் தங்களிடம் சேர்ந்துள்ள காப்பு நிதிகளினின்றும் (accumulated reserves) அங்காடியில் புழங்குகின்ற பெருவாரியான தொகைகளைக் கடனாக அளித்து வருகின்றன.

புதிய மூலதன அங்காடியில் (new capital market) தேர்ச்சித் திறன் பெற்றுள்ள நிறுவனங்கள் சில உள்ளன. கட்டடச் சங்கங்கள் (building societies) பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் (deposits) பெற்று, அவற்றைப் பெரும்பான்மையும் தனி நபர்களும் (individuals) கம்பெனிகளும் (companies) சொத்துக்களை (properties) வாங்கிக்கொள்ளும் பொருட்டுக் கடனாக அளிக்கின்றன. பாங்குகளாலும், காப்புறுதிக் கம்பெனிகளாலும் உதவி அளிக்கப்படுகின்ற தொழிலுக்கான நிதிக் கார்ப்பரேஷன் (finance corporation for industry), தொழில் நிதிக் கார்ப்பரேஷன் (industrial and finance corporation) போன்ற பல நிறுவனங்களும் உள்ளன. இவைகள் அங்காடியின் புதிய வெளியீடு (new issue in the market) போன்ற செலவு மிக்க முறையில் கடனை வாங்க முடியாத அளவிற்கு மிகச்சிறிய தொகைகளைக் கடன் வாங்க விழைபவர்களுக்குக் கடன் அளிப்பதில் தேர்ச்சித் திறன் (specialiations) வாய்ந்தனவாக உள்ளன. நிறுவனங்கள் மிகப் புதியனவாக இருந்து, அவை தங்களது நீண்டகால இலாபப் பதிவேட்டினைக் காட்டி, சாதாரண முதலீடு செய்பவர் ஒருவரைக் கவருதற்கு இயலாதாகையால், அத்தகைய நிறுவனங்களுக்கும் கடனளிப்பதில் இவை தேர்ச்சி பெற்றுள்ளன. நாம் ஏற்கெனவே பார்த்தவாறு, பிரிட்டிஷ் வர்த்தக பாங்குகள்

நீர்மையற்ற (ரொக்க நிலையற்ற) தொழில் மூலதனத்தில் முதலீடு செய்வதற்குத் தயக்கமுறுகின்றன. ஆனால், அவைகள் தொழில்களுக்கான குறுங்காலக் கடன்களை (short-term credit) அளித்து வருகின்றன; இத்தகைய கடன்களை அவ்வப்போது புதிப்பித்துக் (renew) கொள்ள வேண்டும்; இவ்வாறு புதுப்பிக்கப்படுதலால், நடைமுறையில், இவைகளும் நெடுங்காலக் கடன்களாகவே (long-term loans) ஆகிவிடுகின்றன.

5. பங்குமாற்று நிலையம் (The Stock Exchange)

சில கம்பெனிகள் தங்களது கடன்களைத் தீர்ப்பதற்கெனவே நிதிகளின் ஒரு பகுதியைத் தனியே எடுத்துவைத்து வட்டியிட்டு வைப்பது வழக்கம். வட்டியுடன் அந் நிதிகள் பெருகியவுடன் அவற்றைத் தமது கடன்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளும். இத்தகைய நிதிகளுக்கு, 'கடன் தீர்வு நிதிகள்' (sinking funds) என்று பெயர். நஷ்டம் வந்த காலத்து, கம்பெனியின் சொத்துகள் முழுமையையும் விற்றுக் கடன் தீர்ப்பதைவிட இது சிறந்த முறையென்றாலும், முதலீடு செய்பவர்கள் இத்தகைய முறையினை விரும்புவதில்லை. தனிப்பட்ட முதலீடு செய்பவர்கள் (individual investors) இவ்வாறு கடன் தீர்வு நிதிகளை (sinking funds) ஒதுக்கி வைப்பதைக் கையாளுவதேயில்லை. இருக்கின்ற பிணையங்களை (existing securities) விற்பனைமூலம் வேறு பிறருக்கு அளிக்கும் வேலையைத்தான் பங்குமாற்றுச் சந்தை (stock exchange) செய்து வருகிறது. உதாரணமாக, திரு X என்பவர் 'அ' என்னும் கம்பெனி ஒன்றில் £ 1000 முதலீடு செய்துள்ளார் எனக் கொள்வோம்; உடனடியாக அவர் தமது முதலீடான £ 1000-ஐ திரும்பப் பெற விழைகின்றாரெனக் கொள்வோம். அவர் தமது பிணைப் பத்திரங்கள் (bonds), அல்லது பங்குகள் (shares) அல்லது பிணையங்களை (securities) பங்குமாற்றுச் சந்தையில் திரு Y-க்கு விற்பதன்மூலம் தமது தொகையைத் திரும்பப் பெறலாம். ஆக X என்பவர் தமது தொகையைத் திரும்பப் பெற்றுவிட்டார்; Y என்பவர் கம்பெனி 'அ'-வில் £ 1000 முதலீடு செய்திருப்பவராக ஆகிவிட்டார். இவ்வாறு முதலீடு செய்துள்ள தொகைகளைத் திரும்பப்பெற இயலுவதானது, இயலாதபோது இருந்த நிலையைக் காட்டிலும், தொழிலில் இடப்பட்ட மூலதனத்தினை ஆபத்துக் குறைந்ததாகவே செய்கின்றது. எனவே, இம்முறையினால், தொழிலில் நிதிகள் வந்து பாய்வதை வெகுவாகத் தூண்டுகிறது.

பிரிட்டனில், லண்டனில் உள்ள பங்குமாற்று நிலையமே மிகப் பெரியதாகும். பிரிட்டனில் பல மாநிலங்களில் (provincial cities) பங்குமாற்று நிலையங்கள் (stock exchanges) உள்ளன. லண்டன் பங்குமாற்று நிலையத்துடன் ஒப்பிடும்போது, அவை முக்கியத்துவத்தில் குறைந்தவையே எனக் கூறவேண்டும்; ஆயினும், அவைகள் லண்டன் பங்குமாற்று நிலையத்தின் அடிப்படையில்தான் அமைக்கப்பட்டுள்ளன. தரகர்கள் (brokers) என்பவர்கள் பொதுமக்களிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு பேரங்களை நிகழ்த்துகின்றனர். பிணையங்களுக்கான தேவைகளைச் சேகரிப்பது பிணையங்களை அல்லது அவற்றின் ஆதாயங்களை (proceeds) உரியவர்களுக்கு அனுப்பிவைத்தல் ஆகிய பணிகளைச் செய்வதன்மூலம் பொதுமக்களிடம் அவர்கள் நேரடியான தொடர்பு கொண்டுள்ளனர். பங்கு வர்த்தகர்கள் (jobbers) என்பவர்கள் மற்றொரு வகையினராவர். பங்குமாற்று நிலையத்தின்கண் உள்ள பிணையங்களில் அவர்கள் வாணிப நடவடிக்கைகளை நிகழ்த்துகின்றனர். அவர்கள் தரகர்களிடமே தொடர்பு கொண்டுள்ளனர்; பொதும்க்களிடம் அவர்கள் எந்தவிதத் தொடர்பும் வைத்துக்கொள்வதில்லை.

பிணையங்களை வாங்குவதற்கோ அல்லது விற்பதற்கோ தரகரை அணுகியதும், அவர் பங்குமாற்றுச் சந்தைக்குச் சென்று தேவைப்படும் பிணையங்களில் தேர்ச்சித் திறன் வாய்ந்த பங்கு வர்த்தகரைத் தேடிக் கண்டுபிடிப்பார். சில பங்கு வர்த்தகர்கள், உத்தரவாதம் அளிக்கப்பட்ட பங்குகளில் மட்டுமே (gilt-edged) பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டவைகளிலும், இன்னும் சில உயர்ரகப் பிணைப்பத்திரங்களிலும் வணிக பேரங்களை நிகழ்த்துவர்; சிலர் எண்ணெய்ப் (நல்லெண்ணெய், மண்ணெண்ணெய் முதலியன) பங்குகளிலும், சிலர் அயல்நாட்டு அரசாங்கப் பங்குப் பத்திரங்களிலும் (foreign government stocks) இப்படித் தனித்தனியான துறைகளில் தேர்ச்சித் திறன் பெற்றவர்களாக இருப்பர். தரகரானவர் (brokers) பங்கு வர்த்தகரை அணுகி, தாம் பிணையங்களை வாங்கப் போகின்றாரா அல்லது விற்கப்போகின்றாரா என்பதனைத் தெரிவிக்காமல், சம்பந்தப்பட்ட பிணையத்திற்கு விலை குறிப்பிடும்படி (to quote the price) கேட்பார். இதற்குப் பதிலாகப் பங்கு வர்த்தகர் இரண்டு விலைகளைக் குறிப்பிடுவார்; தாம் பிணையத்தை விற்க விழையும் அதிகமான விலையையும், அதனை வாங்க விழையும்

மிகக் குறைவான விலையினையும் குறிப்பிடுவார். தரகரானவர் தமக்குத் திருப்தி எனப்படுகிற விலைக் குறிப்பீட்டினைப் பெற்ற வுடன் வணிக பேரமானது (deal), முறைப்படியில்லாத, ஆனால், பிணைப்பதில் குறைவு ஒன்றுமில்லாததோர் உடன்பாட்டினால் (informal but none the less binding agreement) முடிவடையும்.

பங்குமாற்றுச் சந்தையின் ஆண்டானது (stock exchange year) 'கணக்குகள்' (accounts) எனப்படும் தொடர்ந்த கால அளவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளன; இக் கால அளவுகள் பெரிதும் இரு வாரங்களாக உள்ளன; சில கால அளவுகள் மூன்று வாரங் களாகவும் இருப்பதுண்டு. ஒவ்வொரு 'கணக்கு' முடிவிலும் 'தீர்வு நாள்' என்று ஒன்றுண்டு. இந்த நாளில் பேரங்கள் (transactions) யாவற்றிற்கும் தீர்வு காணப்படுகிறது—அதாவது, பிணையங்கள் பட்டுவாடா செய்யப்படவும், அவற்றின் கொள் முதல் விலை (purchase price) கொடுக்கப்படவும் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் வாங்குபவர் ஒருவரோ அல்லது விற்பனையாளர் ஒருவரோ பிணையங்களின் இறுதிப் பட்டுவாடாவையும் (final delivery) செலுத்த வேண்டிய தொகையையும் ஒத்தி வைக்க (postpone) எண்ணும்போது மற்றொரு நபரிடம் அடுத்த தீர்வு நாளின்போது (next settlement day) நிறைவேற்றுவதாக ஒப்பந்தம் செய்துகொண்டு தமது எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். இத்தகையதொரு தனிச் சிறப்பு வாய்ந்த பேருரிமையை அடைவதற்கு [1]'கொள்முதல் மாற்ற ஒத்தி வைப்புக் கட்டணம்', (contango) [2]'பின் ஒப்படைப்புக் கட்டணம்' (backwardation) ஆகிய புதுமையான பெயர்களைத் தாங்கியுள்ள சிறப்புக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

தரகர்களுக்கும் (brokers) பங்கு வர்த்தகர்களுக்கும் (jobbers) தரகுகளை அளிப்பதைக்காட்டிலும் பங்குமாற்றுச் சந்தை ஏதாவது பயனுள்ள பணியைச் செய்கின்றதா? ஐயமே இல்லை; பயனுள்ள பணிகளைச் செய்தே வருகின்றது. பங்குமாற்றுச்

[1] இக் கட்டணம் பங்குகளை வாங்குபவரால் செலுத்தப்படுவதாகும். தாம் கொள்முதல் செய்கின்ற பங்குகளை உடனடியாக அவற்றைத் தமக்கு மாற்றிக்கொள்ளாமல் மாற்றத்தை விற்பனையாளர் ஒத்திவைப்புச் செய்ய அவருக்குச் செலுத்தப்படுவதாகும்.

[2] இக் கட்டணம் விற்பனையாளரால் பங்குகளைக் கொள்முதல் செய் பவருக்குச் செலுத்தப்படுவதாகும். தாம் விற்கின்ற பங்குகளைக் காலங் கடத்தி ஒப்படைப்பதற்காக வாங்குபவருக்குச் செலுத்தப்படும் கட்டணமாகும்.

சந்தை இரு வழிகளில் பயனுள்ளதாக இருக்கின்றது. முதலாவதாக, முதலீடு செய்யப்பட்டுள்ள நிதிகளின் பெயர்ச்சியை (mobility of invested funds) வெகுவாக அதிகரிக்கின்றது. இதனுல் மூலதனக் கடனளிப்பில் ஏற்படக்கூடிய ஆபத்து (risk) குறைக்கப் படுகிறது. பங்குமாற்றுச் சந்தையின்மூலம் எந்த ஒரு முதலீடு செய்பவரும் பிணையங்களைத் தம் விருப்பப்படி வாங்கவோ அல்லது விற்கவோ முடியும். ஆனுல், நடப்பில், பிணையங்களுக்கு என்ன விலை இருக்கின்றதோ அதனைக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். மேலும், மிகவும் வளர்ச்சியும் தேர்ச்சித்திறனுமுள்ள பிணைய அங்காடியில் (a highly-developed and specialised securities) பல்வேறு வகைப் பிணையங்களில் எவை சிறந்தவை என்பதைத் தெரிந்துகொள்வதற்கான அறிவுரையைப் பெறுவதற்கும் வாய்ப்பு உள்ளது. பங்குமாற்றுச் சந்தைக் குழுவானது (stock exchange committee), கம்பெனிகள் தங்களது பங்குகளின் விலைகளைக் கூறுவதற்கு முன்னர் தங்களது கம்பெனிகளைப்பற்றிய நிலவரங்களை வெளியிட வேண்டுமென்று கோருவதால், பங்குகளைப் பெறுகின்றவர்கள் மோசடிக் கம்பெனிகளால் ஏமாற்றப் படுவதனின்றும் காக்கப்படுகின்றனர்.

இரண்டாவதாக, பங்குமாற்றுச் சந்தையின்மூலம் சொத்தின் பல்வேறு வகைகளுடைய மதிப்பின் நடப்பு மதிப்பீடு (current assessment of the value of different types of asset) என்ன என்பதனை நாம் தெரிந்துகொள்கிறோம். சான்ருக, கப்பல் கம்பெனிகளின் பங்குகளுக்கான தேவை குறையுமானுல் பங்குமாற்றுச் சந்தையில் அப் பங்குகள் குறைந்த விலையில் விலை கூறப்படும். புதிய கப்பல் கம்பெனியை ஆரம்பிப்பதைக் காட்டிலும் விலை குறைவாகவுள்ள பழைய கம்பெனியின் பங்குகளை வாங்கி அக் கம்பெனியைப் பெறுவது செலவு குறைவானதாக இருக்கின்ற அளவிற்குப் பங்குகளின் விலைகள் குறையக் கூடும். இத்தகையதொரு நிலையானது, நாட்டில் கப்பல்களின் அளிப்புத் தேவைக்குமேல் அதிகமாக இருப்பதை உணர்த்துகின்றது. இதனுல், புதிய கப்பல்களைக் கட்டுவதில் முதலீடு செய்வதைக் குறைத்துக்கொள்ளலாம். இதற்கு மாருக, மோட்டார் கார்களுக்கான தேவையானது அளிப்பைக்காட்டிலும் அதிகமாக ஏற்படக்கூடும் என்று எதிர்பார்த்தலானது (expectation) மோட்டார் தொழிலின் பங்குகளுடைய விலைகள் அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கும். இவ்வாறு மோட்டார்

பங்குகளின் கிடைப்பருமையானது (scarcity) இலாபங்களையும், அதன்மூலம் இலாப ஈவுகளையும் (dividends) அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம். மோட்டார் கார்களின் பங்குகளுடைய விலையதிகரிப்பானது, சமுதாயம் அதிகமான அளவில் மோட்டார் கார் தொழிற்சாலைகளைத் தேவைப்படுகிறதென்பதனை, முதலினை வைத்துக்கொண்டு தொழில்களை அமைக்க முற்படுபவர்களுக்கு உணர்த்தும் ஒரு சுட்டியாக (indicator) அமையும்.

இவ்வாறு பிணையங்களில் ஏற்படும் மாற்றங்கள் ஊகபேரத்திற்கு (speculation) அடிகோலுகின்றன. பிணையங்கள் நிரந்தரமான முதலீடாக (permanent investment) வைத்துக்கொள்ளலாமா என்பதைவிடப் பின்னர் லாபத்திற்கு விற்கலாம் என்னும் நோக்கத்துடன்தான் வாங்கப்படுகின்றன. அத்தகையதொரு ஊகபேரமானது சற்றுமுன்னர் ஆராய்ந்த கருத்துகளின் அடிப்படையில் இருக்குமானால்—பல்வேறு வகைச் சொத்துகளுடைய பொருளாதார மதிப்பில் ஏற்படும் மாற்றங்களை உண்மையாக மதிப்பீடு செய்தால்—அது முற்றிலும் பயனுள்ளதாகவும் நலம் பயக்கத்தக்கதாகவும் இருக்கும். காரணம், அது பல்வேறு வகை முதற்கருவிப் பொருள்களின் (capital goods) எதிர்காலக் கிடைப்பருமைகளை (future scarcities) அல்லது உபரிகளை (surpluses) நன்கு முன்னறிந்து நடப்பு முதல் ஆக்கத்திற்கு (current capital formation) வழிகாட்டியாக இருப்பதேயாகும்.

ஆயினும், சில சமயங்களில் ஊகபேரமானது சூதாட்டத்தினை (gambling) ஒத்ததாக இருக்கிறது. பிணையங்களில் வணிகம் செய்பவர்கள், விலைப் போக்குகளை (price movements) முன்னறிந்து, அவற்றிற்குத் தக்கவாறு பிணையங்களை வாங்கவும் அல்லது விற்கவும் செய்கின்றனர். இவ் விலைப்போக்குகள் ஆதாரமானவைகள்தாமா அல்லது நியாமானவைகள்தாமா என்று அவர்களுக்கு நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவற்றிற்குத் தகுந்தவாறு பிணையங்களை வாங்கவோ அல்லது விற்கவோ இவ்வாறு பங்குகளில் வணிகம் செய்கின்றவர்கள் 'காளைத் தரகர்கள்'—ஏற்றுத் தரகர்கள் (bulls) என இவர்கள் அழைக்கப்படுவதற்குக் காரணம், தாமே ஒருசில பங்குகளை அதிக விலை கொடுத்து வாங்க முன்வருவதன்மூலம் பங்குகளின் விலைகளை அதிகரித்து அதன்மூலம் தம்மிடமுள்ள பங்குகளை (பிணையங்களை) அதிக விலைக்கு விற்று இலாபமடைவர் எனவும், 'கரடித்' தரகர்கள் (bears) எனவும் அழைக்கப்படுகின்றனர். கரடித் தரகர்கள்

தம்மிடமுள்ள ஒருசில பங்குகளைக் குறைந்த விலைக்கு விற்க முன் வருவதன்மூலம் பிணையங்களின் விலைகளைக் குறையச் செய்து, விலை குறைந்தவுடன் நிறையப் பிணையங்களைத் தாம் விலைக்கு (பின்னர் அதிக விலைக்கு விற்கும் நோக்கத்துடன்) விற்பவர். இத்தகைய ஊகபேரமானது முற்றிலும் அறிவுக்கு முரணான சக்திகளின் அடிப்படையில் இயங்குவதால், பல சமயங்களில் நிலை கட்டுக்கடங்காமல் மனவெழுச்சி பீரீட்டதொரு வலிப்பு நோயாக (hysteria) தரத்தில் குறைவதை அனுபவ வாயிலாகத் தெரிந்துகொள்ளலாம். பிணையங்களின் (securities) விலைகள், மக்கள் கூட்டத்தின் மனவெழுச்சி பரப்புகின்ற செய்தியைப் பொறுத்து ஏறவோ அல்லது இறங்கவோ செய்கின்றன. இத்தகைய நிகழ்ச்சிகளில் தனி மனிதர் ஒருவரின் நன்னம்பிக்கை மனப்பான்மை (optimism) அல்லது எதிலும் கெடுதலையே காணும் மனப்பான்மை (pessimism) இவற்றையொத்த மனப் பான்மைகளைப் பிற மக்களிடையேயும் பன்மடங்கு அதிகமாகப் பரப்புகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் அங்காடியில் பிணையங் களுக்குக் கூறப்படும் விலையானது அவைகளின் உண்மையான சொத்து மதிப்பைப் பிரதிபலிப்பனவாக இருப்பதில்லை. இதன் காரணமாக ஏற்படும் விலைகளின் கோர ஊசலாட்டங்கள் (wild swings of prices) பொருளாதார அமைப்பு முழுவதையுமே சீர்குலையச் செய்யும். மிகச் சாமர்த்தியசாலிகளாக (அல்லது நற்பேறுடைய) உள்ள ஊகவணிகர்கள் கணிசமான அளவிற்கு இலாபங்களை அடைவதில் வெற்றி காண்கின்றாரெனினும், பொது வாக, பொருளாதார நிலை முழுவதும் சீர்குலையவே செய்கின்றது.

மனிதர்களால் தோற்றுவிக்கப்படும் பெரும்பாலான நிலை யங்களைப் போலவே பங்குமாற்றுச் சந்தையும் சமூகத்திற்கு மிகவும் பயனளிக்கவல்லதாயும், அதே சமயத்தில் ஒருசிலரின் சுயநல நடவடிக்கைகளால் தீமை பயப்பதாயும் உள்ளது. இலாப வேட்கையில் இச் சுயநலமிகள் அறிவிழந்து தகாதன புரிந்து கேடு விளைவிக்கின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் 1929ஆம் ஆண்டில் ஏற்பட்ட வால்தெரு முறிவானது (great Wall Street crash) பண மேலாண்மையாளர்களை (monetary) தகுந்த ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டியது. பங்குமாற்றுச் சந்தை களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதலும், பங்குப் பத்திர வணிகத்திற்கு பாங்குகளின் கடன்கள் வெகுவாக அளிக்கப் படுதலைக் கட்டுப்படுத்துதலுமான நோக்கத்துடன், பண

மேலாண்மையாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி வால் தெரு முறிவு வலியுறுத்தியது. ஆனால், இத்தகைய சட்ட ரீதியான அதிகாரங்களை பிரிட்டன் மேற்கொள்ளவில்லை. பிரிட்டனிலுள்ள பாங்குகள் இருக்கின்ற சட்ட அமைப்பைக்கொண்டே (existing frame-work) பாங்குக் கடனால் நடத்தப்படுகிற அமித மான ஊக பேரத்தைத் (excessive speculation) தடுத்துவிட முடியும் என்று நம்புவதும் இதற்குக் காரணமாக இருக்கக்கூடும். மற்றொரு காரணத்தையும் கூறலாம். அரசாங்க மேலாண்மையாளர் லண்டன் பங்குமாற்றுச் சந்தையில் உள்ள பங்கு விற்பனையாளர்களில் தற்போதைய பரம்பரையினர் பங்கு மாற்றுச் சந்தையில் நிலைபேற்றை உண்டுபண்ணத்தக்கவர்களாகவும், எச்சரிக்கையுடன் நடந்துகொள்பவர்களாகவும் இருப்பதை நன்கு தெரிந்து வைத்திருப்பதும் ஒரு காரணமாகும்!

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

'Radcliffe Report', Ch. IV, Paras, 162–320.

Sayers, 'Modern Banking', Ch. 3.

Balogh, 'Studies in Financial Organisation', Chs. 8–11.

N. Macrae, 'The London Capital Market' (Staples Press, London, 1955), Chs. VIII–XIV and XX.

Truptil, 'British Banks and the London Money Market,' Chs. III–IV.

23. வட்டிக் கோட்பாடு

1. நீர்மை விருப்பம் என்றால் என்ன?

பண முறையின்கண், பணத்தின் பணிகளும் பணநிலையங்களும் (monetary institutions) அடங்கியவையாகும். இவற்றையெல்லாம் நாம் ஆராய்ந்தோம்; தற்போது, ஏற்கெனவே ஐந்தாம் பாகத்தில் பல்வேறு வருமானக் காரணிகளைப்பற்றி ஆராய்ந்த போது பின்னர் ஆராய்ந்துகொள்ளலாம் என விட்டுவைத்திருந்ததொரு பிரச்சினையை—அதாவது, வட்டி வீதம் நிர்ணயித்தலை—தற்போது ஆராய்வோம். வட்டி என்பது முதலின் சொந்தக்காரர்களுக்குச் செலுத்தப்படுவதாகும். வட்டி ஏன் செலுத்தப்படவேண்டும்? வட்டியை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

இத்தகையதொரு ஆய்வினை நிகழ்த்த, கீழ்க்கண்டதொரு வினாவினை ஆழ்ந்து ஆராய்தல் வேண்டும்: பணத்தை ஒவ்வொருவரும் விரும்பக் காரணமென்ன? பணத்தை விரும்புவதற்கான காரணம் ஒவ்வொருவருக்கும் தெரிந்தே உள்ளது. வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நிறையப் பெறவேண்டுமென்று நினைப்பனவற்றுள் பணம் ஒன்று. ஏன்? பணத்தினை விழையக் காரணமென்னவென்பதனை இன்னும் சற்று ஆழ்ந்து ஆராயுமிடத்து, மக்கள் தம்முடைய வாழ்க்கையை வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்துக்கொள்ளத் துணைசெய்யும் சடப்பொருள்களை (material things) வாங்குவதற்கே பணத்தை விரும்புகின்றனர். சான்றாக, புதிய கார், அல்லது வெளிநாட்டில் கழிப்பதற்கான விடுமுறை, அல்லது வீடு அல்லது இன்னும் பிற ஆயிரமாயிரம் பொருள்கள் ஆகிய இன்னோரன்னவற்றை வாங்குவதற்கே பணத்தை விரும்புகின்றனர். வேறுவிதமாகக் கூறுவோமாயின், மக்கள் பணத்தைத் தம்மிடம் வைத்துக்கொண்டேயிருப்பதற்காக அதனை விழைவதில்லை—அதனை விட்டொழிக்கவே (to get

rid of it) விரும்புகின்றனர். அதாவது, அவர்கள் விழையும் பொருள்களை வாங்குவதற்காகப் பணத்தைச் செலவிடவே விழைகின்றனர். பணம், தானே பயனுள்ளதொன்றாக இருப்பதில்லை. செல்வத்தின் ஒரு வகையான பணத்தால் எந்த மன நிறைவையோ (satisfaction) அல்லது மகிழ்ச்சியையோ அளிக்க வியலாது. பணத்தை உண்ணவோ அல்லது குடிக்கவோ அல்லது ஆடையாக அணிந்துகொள்ளவோ முடியாது. பணம் என்பது மலட்டுத்தன்மை வாய்ந்ததும் (barren) ஆக்கமற்றதுமான (umproductive) தொரு சொத்தாகும் (asset). பணத்தை மூட்டை கட்டி வைத்துக்கொண்டு அதனின்றும் மகிழ்ச்சியைப் பெறக் கூடிய விதிவிலக்கான மனிதர்—கஞ்சன் (miser) ஒருவர்தான்! கஞ்சனை சமூகம் சிறிதளவு பைத்தியங்கொண்ட ஒருவராகவே கருதுகிறது. இருப்பினும், நாம் முன்பு பார்த்ததுபோல், எந்த ஒரு சமயத்திலும் (at any moment of time) பணத்தின் ஏராள மான அளவு இருப்பு (an enormous stock of money)—நாணயங்கள், நோட்டுகள், பாங்கு வைப்புகள் ஆகியவை—வைத்துக் கொள்ளப்பட்டே வருகிறது. இந்த இருப்பில் ஒவ்வொரு பென்னியும் (Penny) யாராவது ஒருவரால் இருப்பாக வைத்துக் கொள்ளப்பட்டேயிருக்கும். இவ்வாறு அவற்றை வைத்துக் கொண்டிருக்கும் அனைவருமே கஞ்சரல்லர். செல்வத்தின் பெரியதோர் இருப்பு, வாழ்க்கை நலனை நேரடியாக அதிகரிக்கச் செய்யும் பண்டங்கள் (goods), பணிகள் (services) ஆகியவற்றை வாங்குவதற்குப் பயன்படுத்தப்படாமல் ஆக்கமேதும் விளைவிக்க வியலாத பணமாக வைத்துக்கொள்ளப்படுவதற்குக் காரணம் என்ன?

பணத்தின் பணிகள் (the functions of money) இதற்கு விடையளிக்கும். பணமானது, அதனை வைத்திருக்கும் ஒருவருக்குப் பூரண நீர்மையை (liguidity)—ரொக்க நிலையை—அளிக்கின்றது. அதாவது, செல்வத்தினை (wealth) எந்த வகையாகவும் (into any form) எந்தவித இழப்போ அல்லது கால தாமதமோ இன்றி மாற்றிக்கொள்ளும் திறமையே நீர்மையாகும். பணத்திற்குள்ள இந்தப் பண்பானது (quality) ஒவ்வொரு மனிதரும் அல்லது நிறுவனமும் (by every person or institutions) நீர்மையை ஏதாவது ஓர் அளவிற்குப் பெற விழைவதனையொத்தே இருக்கிறது. இவ்வாறு நீர்மையைப் பெறவேண்டுமென்கின்ற உளப்பாங்கான தொரு பண்பே நீர்மை விருப்பமாகும் (liquidity preference).

ஆக, நீர்மை விருப்பு என்பது நீர்மையற்ற சொத்துகளைக் காட்டிலும் நீர்மையான (ரொக்க நிலையான) சொத்துகளைப் பெறுவதில் உள்ள ஒருதலைப்பட்ட விருப்பத்தைக் குறிக்கும். நீர்மை விருப்பம் (liquidity preference) சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாகத் தோன்றுகிறது. அதேபோன்று நீர்மை விருப்பமானது சில சமயங்களில்தான் மற்றச் சமயங்களைக் காட்டிலும் அதிகமாகக் கொள்ளப்படுகிறது. ஆனால், ஏதாவ தோர் அளவில் ஒவ்வொருவரும் நீர்மை விருப்பத்தினைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். நீர்மை விருப்பத்திற் கான நோக்கங்கள் என்னவென்பதைப் பார்ப்போம்.

முதலாவதாக உள்ளது பேர நோக்காகும் (transactions motive). பெருவாரியான மனிதர்களுக்குச் செலவானது (expenditure) இடையறுமல் தொடர்ச்சியாக (constantly) இருந்துகொண்டேயிருக்கிறது. சான்ருக, அன்ருடம் கடைகளில் வாங்கப்படும் பொருள்கள், படக்காட்சி முதலியவற்றிற்கான செலவு தொடர்ந்தே ஏற்படுகிறது. இது போன்ற தொழில் களும் கூலிகள் (wages), கச்சாப் பொருள்களுக்கான செலவுகள் ஆகியவற்றை மேற்கொள்ளவேண்டியுள்ளது. செலவுப் பகுதி இவ்வாறு இருக்க, வருமானமானது குறிப்பிட்ட அறுதியிட்ட கால இடைவேளைகளின்போதுதான் (at fixed intervals) கிடைக்கப் பெறுகின்றது. சம்பளத்தைப் பெறுகின்றவர்கள் வாரமொரு முறையோ அல்லது மாதமொரு முறையோ சம்பளம் அல்லது கூலி பெறுகின்றனர். தொழில்களுக்கு அப்படியல்ல; அவை பண்டங்களின் விற்பனைகளிலிருந்தே வருமானத்தையடைய வேண்டும். உற்பத்திக்கான ஆரம்பச் செலவுகளைச் செய்து விட்டுப் பல மாதங்கள் அல்லது ஆண்டுகள்கூடக் கழிந்த பின்னரே விற்பனைகளினின்றும் வருமானம் பெறக்கூடியதாக இருக்கும். இவ்வாறு ஒரு வருமானத்திற்கும் மற்ற வருமானத் திற்குமிடையேயுள்ள கால இடைவெளியைச் சமாளிப்பதற்கு ஓரளவிற்கு ரொக்கம் (some cash) வைத்துக்கொள்ள வேண்டியதாகவுள்ளது. இவ் வருமானங்களுடன் நிலுவைகளும் (balances) அதிகமாகத் தேவைப்படுகின்றன. உதாரணமாக, ஒருவர் வாரமொன்றுக்கு £ 7 சம்பாதிக்கின்ருர் எனக் கொள் வோம். அவர் நாளொன்றுக்கு £ 1 வீதம் செலவழிக்கின்ரு ரெனில், சராசரியில் அவர் £ 3-10 ஷில்லிங் ரொக்கம் கையிருப் பாக வைத்துக்கொள்ள வேண்டியவராக இருப்பார்—£7-ஐ

வாரத்தின் முதல் நாளில் வைத்துக்கொண்டும், கடைசி நாளில் ஒரு £-ம் இல்லாதவராகவும் இருப்பார். ஆனால், அவர் இத்தகைய வார வருமானத்தை எவ்வித மாறுதலுமின்றி மாத வருமானமாகக் கொள்கிறார் எனக் கொள்வோம். இப்போதும் வருமான வீதத்தையும் செலவு வீதத்தையும் முன்பிருந்த வீதத்திலேயே வைத்திருக்கின்றாரெனில், அவருடைய சராசரி ரொக்கக் கையிருப்பு (average cash holding) £ 15-ஆக இருக்கும்—அதாவது, மாத ஆரம்பத்தில் £ 30-ஐ வைத்திருப்பார்; மாத இறுதியில் அவரிடம் கையிருப்பாக ஒன்றும் இராது. இதைப் போன்றே, ஒரு தொழிலில், உற்பத்தியின் ஓர் அலகு (a unit of output) உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்படுவதற்கும், அது இறுதியாக விற்கப்படுவதற்கும் இடையில் உள்ள அதிகமாகச் செல்லச் செல்லக் கையிருப்புகளும் (balances) அதிகமாகத் தேவைப்படும். கால இடைவெளி (time-interval) ஒருபுறமிருக்க, பேரங்களுக்குத் தேவைப்படும் ரொக்கமானது நாட்டிலுள்ள வருமான மட்டத்தையும் (level of incomes) விலைமட்டத்தையும் பொறுத்திருக்கும். விலைகளும் கூலிகளும் திடீரென இரு மடங்காக அதிகரிக்கின்றன எனக் கொள்வோம்; அப்போது சராசரியான தொரு கூலி பெறுவோன் (an average wage-earner) முன்னர் வைத்திருந்த கையிருப்பைப்போல் ஏறக்குறைய இரட்டிப்பான கையிருப்பைத் தேவைப்படுவார்—இதில் அவர் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றை நுகர்வதில் அதே வீதத்தையே கடைப்பிடித்துவருகிறார் என்றும் எடுகோளினைக் (assumption) கொள்ள வேண்டும். குறிப்பிட்டதொரு, ஏறக்குறைய நிலையானதொரு விலை மட்டத்தில் (a more or less stable price-level) பேர நோக்கங்களுக்கான (transactions purpose) ரொக்கத் தேவையானது (the demand for cash), எந்த ஒரு குறுங்காலத்திலும் (in any short period) ஊசலாடிக்கொண்டிருக்குமென்று கூறுவதற்கில்லை; ஏனெனில், வருமானச் செலுத்து (income-payment), செலவு (expenditure) ஆகியவற்றில் உள்ள பழக்க முறைகள் குறுங்காலத்தில் விரைவாக மாற்றத்தை அடைந்துவிடுவதில்லை.

ரொக்கத்தினைக் கையிருப்பாக வைத்துக்கொண்டிருப்பதற்கான இரண்டாவது நோக்கம் ஊக இலாப நோக்கமாகும் (speculative motive). இந்த நோக்கத்தைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமாயின், வட்டியின் நடப்பு அங்காடி வீதங்களுக்

கும் (current market rates of interest), பிணையங்களின் (securities) விலைமட்டத்திற்குமிடையேயுள்ள தொடர்பினைச் சற்று ஆராய் தல் வேண்டும். ஒரு வாக்குறுதிப் பத்திரமானது (bond) ஆண்டொன்றுக்கு £ 5 வருமானத்தைச் செலுத்துவதாக ஒரு வாக்கினை (promise) உடையதாக இருக்கிறதெனக் கொள்வோம். தற்போது, நடப்பு அங்காடியில் புதிய பிணையங்களுக்குக் கொடுக்கப்படும் வட்டி வீதமானது 5 சதவீதமெனக் கொள் வோம்—அதாவது, கடன் பெறுபவர்கள் தாம் கடனாக வாங்கும் ஒவ்வொரு £ 100-க்கும் ஆண்டொன்றுக்கு 5 சதவீதம் வட்டியைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றனரென்று பொருள். இத்தகைய நிலையில் அந்த வாக்குறுதிப் பத்திரத்தின் விலையானது, அதன் பெயரளவினதான மதிப்பு (nominal value) (இந்த மதிப்பு எவ்வாறாக இருக்குமெனில், அந்த வாக்குறுதிப் பத்திரம் ஆரம் பத்தில் வெளியிடப்பட்டபோது என்ன மதிப்பு இருந்ததோ அந்த மதிப்பே வழக்கமாக இருக்கும்) எவ்விதமாக இருப்பினும், நிச்சயமாக £ 100-ஆகவே இருக்கும். மற்றொரு நிலையினைப் பார்ப்போம். அங்காடியில் புதிய பிணையங்களுக்கு (new securities) 6 சதவீதம் அளிக்கப்படும் வட்டி வீதமானது 6 சதவீதமாக அதிகரித்துள்ளதெனக் கொள்வோம். (அதாவது, கடன் பெறுப வர்கள் ஒரு £ 100 கடனுக்கு £ 6 வட்டி கொடுக்க முன்வருவர்.) இந்த நிலையில் மேற்சொல்லப்பட்ட வாக்குறுதிப் பத்திரத்தின் மதிப்பு $\frac{5}{6} \times 100$ ஆகவே இருக்கும்—அதாவது, £ 83ஆக இருக்கும். இது இவ்வாறு இருப்பதற்குக் காரணம் என்னவெனில், £ 100 பெறுமான புதிய பிணையம் ஆண்டொன்றுக்கு £ 6 வருமானத்தை அளிக்கும்போது, £ 5 வருமானத்தை அளிக்கவல்லதொரு வாக் குறுதிப் பத்திரத்திற்கு அதற்குத் தகுந்த விலையினை அளிப்பது இயற்கையே—அதாவது, £ 83-ஐயே அவ் வாக்குறுதிப் பத்திரத் திற்கு அளிப்பர். இதற்கு எதிரிடையாகப் புதிய பிணையங் களுக்கு நடப்பிலுள்ள வட்டி வீதமானது 4 சதவீதமாகக் குறை கின்றதெனக் கொள்வோம். வாக்குறுதிப் பத்திரத்தின் விலை யானது $\frac{5}{4} \times$ £ 100 அல்லது £ 125 ஆக அதிகரிக்கும்; £ 125-க்கு வாங்கப்பட்ட ஒரு பிணையத்தினின்றும் கிடைக்கக்கூடிய ஆண்டு வருமானமானது 4 சதவீத நடப்பு வீதத்திற்குச் சமமாக இருக் கின்றது.

மேற்கூறியதை வேறு வழியில் கூற முற்படுவோம். மாறு வட்டிப் பிணையமொன்றின் விலையானது (the price of a fixed-

interest security) அங்காடியின் நடப்பு வட்டி வீதத்திற்கு (current market rate of interest) எதிரிடையாகச் செல்வதாக உள்ளது. பிணைப் பத்திரத்தின் ஆரம்பமான பெயரளவிலான மதிப்பானது (the original nominal value of the bond) அதன் நடப்பு அங்காடி விலை நிர்ணயத்தோடு (determination of its current market price) எவ்விதத் தொடர்பையும் பெற்றிருப்பதில்லை. (ஈண்டு ஆரம்பமான பெயரளவிலான மதிப்பென்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிணையமானது ஆரம்பத்தில் விற்கப்பட்ட விலையினைக் குறிப்பதாகும்.) இதனுடைய மதிப்பானது கீழ்க்கண்டவற்றைப் பொறுத்திருக்கும்: (அ) அது அளிக்கின்ற வருமானம்; (ஆ) அங்காடியின் நடப்பு வட்டி வீதம் (the current market rate of interest). அங்காடியின் நடப்பு வட்டி வீதமானது பிணைப்பத்திரம் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டபோது நிலவிய வட்டி வீதமாகவே யிருப்பின், பிணைப்பத்திரத்திற்குக் கூறப்படும் விலையும், அதன் பெயரளவிலான மதிப்பும் (its nominal value) ஒன்றுகவேயிருக்கும். நடப்பு வட்டி வீதமானது (current rate of interest) பிணைப்பத்திரம் வெளியிடப்பட்டபோதிருந்த வட்டி வீதத்தினின்றும் வேறுபட்டதாக இருப்பின், பிணைப்பத்திரமானது, தற்போது ஏற்கெனவேயிருந்த அதன் விலையைக்காட்டிலும் கூடுதலான அல்லது குறைந்த விலையினையுடையதாக இருக்கும். விலை கூடுதலாக இருப்பதோ அல்லது குறைவாக இருப்பதோ பிணைப்பத்திரம் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டதிலிருந்து வட்டி வீதமானது குறைந்துள்ளதை அல்லது அதிகரித்துள்ளதைப் பொறுத்திருக்கும்.

இவற்றையெல்லாம் மனத்திற்கொண்டு பார்த்தால், ரொக்கம் வைத்திருப்பதற்கான ஊகபேரத் தேவை (speculative demand for cash) ஏன் ஏற்படுகிறதென்பதை (அதாவது, ஊகபேர நோக்கத்திற்கான தேவை) எளிதாக ஆராயலாம். மக்கள் வட்டிவீதமானது அதிகரிக்கப் போகிறதென்று நம்பும்போதுதான், இத்தகைய தேவை ஏற்படுகிறது. நடப்பு அங்காடி வீதமானது (the current market rate) 3 சதவீதமாகவுள்ளதெனக் கொள்வோம். இந்நிலையில் ஒருவர் ஆண்டொன்றுக்கு £ 4 வருமானத்தை அளிக்கக்கூடிய ஒரு பிணைப்பத்திரத்தை வைத்துக்கொண்டு அங்காடி வீதமானது அண்மையில் 5 சதவீதமாக உயரக்கூடுமென்றும் நம்புவதாகக் கொள்வோம். நிச்சயமாக அவர் தமது செல்வத்தைப் பிணையங்களாக (securities) வைத்திருப்பதைக்

காட்டிலும் ரொக்க வடிவில் வைத்திருப்பதற்கே விழைவார்; ரொக்கமாக வைத்திருந்தால் வட்டி ஏதும் ஈட்ட முடியாதெனத் தாம் கருதியபோதிலும், இச் சூழ்நிலையில் ரொக்கத்தைக் கையிருப்பாக வைத்துக்கொண்டிருப்பதில்தான் அவருடைய நாட்டம் இருக்கும். அவருடைய பிணைப்பத்திரமானது (bond) £ 133 நடப்பு விலையைக் கொண்டதாக இருக்கிறதெனக் கொள்வோம் (நடப்பு வட்டி வீதமானது 3 சதவீதமாக இருக்கும் போது பத்திரத்தின் தொகைக்குக் கணக்கிட்டால் ஆண்டொன்றுக்கு £ 4 வருமானம் கிடைக்கும்); அவர் நினைத்தது போன்று வட்டி வீதங்கள் அதிகரித்துவிட்டன என்று கொள்வோம். அப்போது அவருடைய பிணைப்பத்திரத்தின் விலையானது £ 80 ஆகக் குறையும். (5 சதவீத நடப்பு வீதத்திற்குக் கணக்கிட்டால் ஆண்டொன்றுக்கு £ 4 வருமானம் கிடைக்கும்.) அவர் தமது பிணைப்பத்திரத்தைத் தற்போது விற்றுவிட்டு, பின்னர் வட்டி வீதமானது அதிகரித்த பின்னர் அதனைத் திரும்ப விலைக்கு வாங்கிக்கொள்கிறார் எனில், அவருக்கு £ 53 இலாபம் கிடைக்கும் (அதாவது, £ 133-க்கு விலைக்கு விற்று அதனையே திரும்பவும் £ 80 விலைக்கு வாங்கிக்கொள்வதன் மூலம்). இதனால் கிடைக்கக்கூடிய இலாபமானது, ரொக்கத்தை இவ்வாறு விலை குறைந்தவுடன் பிணைப்பத்திரத்தை வாங்கலாம் என்னும் ஊக இலாப நோக்குடன் வைத்துக்கொண்டிருப்பதால் ஏற்படும் வட்டி நஷ்டத்தை ஈடு செய்வதற்கும் மேலாகவே அதிகமாக வுள்ளது. வட்டி வீதங்கள் அதிகரிக்கப்போகின்றனவென்ற நம்பிக்கையானது உறுதியாக இருக்க இருக்க, ரொக்கத்திற்கான ஊக இலாபத் தேவையும் (the speculative demand for cash) அதிகரித்துக்கொண்டே செல்லும். ஆகவேதான், இத்தகைய தொரு தலைப்பின்கீழ் எப்போதும் ரொக்கத்திற்கான ஓரளவு தேவை (some demand) இருந்துகொண்டேயிருக்கிறது; முதலீடு செய்பவர்களில் பலர் தமது செல்வத்தின் ஒரு பகுதியை, வட்டி வீதங்கள் அதிகரிக்குமானால் அதனைப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன், ரொக்கமாகக் கையிருப்பு வைத்துக்கொள்ள விழைகின்றனர். இவ்வாறு வட்டி வீதங்கள் அதிகரிக்கும் என அவர்கள் நம்பாதுபோயினும், இவ்வாறு வைத்துக்கொள்ளவே விழைவர்.

வட்டி வீதம் உயரக்கூடும் என்று நினைக்கும்போது முதலீடு செய்பவர் தமது முதலினை (capital) எந்த வகையான சொத்தாக

வும் மாற்றி வைத்துக்கொள்ளலாம் என்பதற்கு மறுப்பு இருக்கக்கூடும். ஏன், அவர் அம் முதலினை ரொக்கமாகவே வைத்துக்கொள்ள விழைய வேண்டும்? இதற்கு விடையினைக் கூறுவோம். வட்டி வீதங்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் (fluctuations) நிலையான வருமானத்தை அளிக்கக்கூடிய எந்த ஒரு சொத்தின் (any asset), உதாரணமாக, வீடு அல்லது ஒரு பொறி (a machine), அல்லது ஒரு துண்டு நிலம் (a piece of land) போன்ற சொத்துகளின்—அங்காடி மதிப்பிலும் எதிரிடையான போக்குகளை (inverse movements) உண்டுபண்ணும். ஒரு வீடு ஆண்டொன்றுக்கு £ 50 நிகர வாடகையைத் (net rent) தருகிறதெனக் கொள்வோம். நடப்பு வட்டி வீதமானது 5 சதவீதமாக இருக்குமானால், அந்த வீட்டின் மதிப்பு (தடையிலா அங்காடி உள்ளதென்னும் எடுகோளில்) £ 1,000ஆக இருக்கும்; £ 1,000 முதலீட்டில் £ 50 வருமானம் வருகிறதென்பது 5 சதவீத வட்டியைக் குறிக்குமாதலால், இதன் அடிப்படையில்தான் மெற்சொல்லப்பட்ட வீட்டின் மதிப்பு £ 1,000ஆக இருக்குமென்று கணக்கிட்டோம். நடப்பு வட்டி வீதமானது (current interest rate) $5\frac{1}{2}$ சதவீதமாக அதிகரிக்கும்போது, அவ் வீட்டின் மதிப்பு £ 909-ஆகக் குறையும்; £ 909 முதலீட்டில் ஆண்டொன்றுக்கு £ 50 வருமானம் கிடைக்கின்றதென்பது அம் முதலீட்டிற்கு $5\frac{1}{2}$ சதவீதம் வட்டி கிடைப்பதற்குச் சமமாகும். வீட்டின் சொந்தக்காரர், அவ் வீட்டை இந்த விலையைக் காட்டிலும் அதிக விலைக்கு விற்க முயற்சி செய்வாராகில், அதனை ஒருவரும் (முதலீட்டு நோக்கங்களுக்கு) வாங்கமாட்டார்கள். காரணம் என்னவெனில், வீட்டினால் கிடைக்கக்கூடிய வருமானமானது அதன் மதிப்புள்ள பிணையங்கள் (securities) அங்காடியில் நடப்பில் அளிக்கக்கூடிய வருமானத்தைக்காட்டிலும் குறைவாகவே இருக்கும். ஆக, செல்வமானது ரொக்க வடிவில் இருக்கும்போது மட்டுமே அதன் மூலதன மதிப்பில் (capital value) ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங்களினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ள முடியும்.

வட்டி வீதங்கள் அதிகரிக்கக்கூடும் என்று கருதப்படும்போது, வருமானத்தைக் கொடுக்கக்கூடிய சொத்துகளின் (income-yielding assets) மூலதன இழப்புகளைத் (capital losses) தவிர்க்க முற்படுபவர்களிடமிருந்து ரொக்க இருப்புகளுக்கான (cash balances) தேவை ஏற்படும். மற்றவைகள் சமமாக இருக்கும்

போது (other thing being equal) வட்டி வீதங்களின் மட்டம் (the level of interest rates) குறைவாகச் செல்லச் செல்ல, எதிர் காலத்தில் அவை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறு (possibility of a rise) அதிகமாக இருந்துகொண்டேயிருக்கும் ; இதன் காரணமாக, ரொக்கத்திற்கான ஊக இலாபத் தேவையானது (speculative demand for cash) அதிகமாக இருக்கும். மற்றொரு புறம் நடப்பு வட்டி வீதங்கள் (current interest rates) அதிகமாக இருக்குமானால், மேற்கொண்டும் அவை அதிகரிப்பதற்கான வாய்ப்புக் குறைவாகவே இருக்குமாதலால், ஊக இலாப நோக்கத்திற்கான ரொக்கத் தேவையும் (speculative demand for cash) குறைவாகவேயிருக்கும்.

ரொக்க இருப்பு வைத்துக்கொள்வதற்கான மூன்றாவது நோக்கம் (the third motive), பேரங்கள், ஊக இலாப நோக்கங்கள் கலந்ததொரு கலவையாக (mixture) உள்ளது. இது, எச்சரிக்கை நோக்கம் (precautionary motive) என அழைக்கப்படுகிறது. இது சில குறிப்பிட்ட ஆள்சார்புடைய அல்லது தொழில்சார்புடைய (personal business) எதிர்பாராத செலவுகள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என்றும், அதற்கு ரொக்கம் தேவைப்படக்கூடும் என்றும் மக்கள் நம்புவதால் ஏற்படுகிறது. உதாரணமாக, எதிர்பாராதவிதமாக ஏற்படும் ஒரு வெளியூர்ப் பயணம் அல்லது இலாபமான பேரத்தை உடனடியாக முடித்துக்கொள்வதற்கான தொரு சாத்தியக் கூறு அல்லது பழுதுபார்த்தல் செலவுகளை விளைவிக்கும் ஒரு விபத்து (accident) இதுபோன்ற எதிர்பாராத செலவினங்கள் ஏற்படக்கூடும். இதைப்போன்ற செலவினங்கள் ஏற்பட்டால் அவற்றைச் சமாளிப்பதற்கு முன்னெச்சரிக்கை யாகவே ரொக்கத்தைக் கையிருப்பாக வைத்துக்கொள்கின்றனர். ரொக்கமாக வைத்துக்கொள்ளாமல் வேறு எவ்வகையான சொத்தாக (உதாரணமாக, ஒரு பிணையமாக) வைத்துக் கொண்டிருந்தால், மேற்சொல்லப்பட்டதுபோன்ற செலவினங் களுக்குப் பணம் தேவைப்படும்போது அச் சொத்தின் விலை மிகவும் பாதகமான முறையில் விலை குறைவாக இருக்கக்கூடும்; அத்தகையதொரு சூழ்நிலையில் நஷ்டத்திற்கே அச் சொத்தினை ரொக்கமாக மாற்ற இயலும்படியாக இருக்கும். இத்தகைய எதிர்பாராத செலவுகளைப் பணத்தைக்கொண்டு உடனடியாகச் சமாளிக்கவேண்டுமாதலின், அங்காடியில் நல்ல விலை கிடைக்கு மளவும், சொத்தினை விற்காமல் காத்திருப்பதற்கும் இயலாது.

இத்தகைய தேவையும் பேரங்களுக்கான தேவையும் ஒரு விதத்தில் ஒத்திருக்கின்றன. இரு நோக்கங்களிலும் கையிருப்புத் தொகையானது நடப்புச் செலவுகளைச் (current expenditure) சமாளிப்பதற்கே தேவைப்படுகின்றது. இவையிரண்டுக்கு மிடையேயுள்ள வேறுபாடு யாதெனில், முன்னெச்சரிக்கை நோக்கத்திற்கான செலவுகள் இன்னவை என்று முன்கூட்டியே கூற முடியாதவாறு இருக்கும்; பேரநோக்கத்திற்கான செலவினங்கள் ஏறக்குறைய சிரமமாக நிகழக்கூடியனவாகவும் (regular), முன்கூட்டியே தெரிந்து வைத்துக்கொள்ளக்கூடியனவாகவும் இருக்கின்றன. முன்னெச்சரிக்கை நோக்கத்தில், வருமானத்தைத் தரக்கூடிய சொத்துகளாக வைத்துக்கொள்ளாமல் ரொக்கத்தைக் கையிருப்பாக வைத்துக்கொள்வதற்கு, சொத்தின் மூலதன மதிப்பில் ஏற்ற இறக்கம் (fluctuation) ஏற்படுமோ என்ற பயமே காரணமாக இருக்கிறது. இவ்விதத்தில் இந்த நோக்கத்திற்கும் ஊக இலாப நோக்கத்திற்கும் ஒற்றுமை காணப்படுகிறது. முன்னெச்சரிக்கை நோக்கத்திற்கும் ஊக இலாப நோக்கத்திற்குமுள்ள மற்றுமொரு வேறுபாட்டினைக் காண்போம். ஊக இலாப நோக்கத்தில், ஊகவணிகர் (speculator) எதிர்காலத்தில் வட்டி வீதங்கள் பாதகமான முறையில் அதிகரிக்கக்கூடுமென்பதை எதிர்பார்க்கின்றார் (anticipates). முன்னெச்சரிக்கை நோக்கக் கையிருப்பானது (precautionary balance) எதிர்காலத்தைப்பற்றிய அத்தகைய குறிப்பிட்டதொரு நோக்கத்திற்காக விழையப்படுவதில்லை; இந்த நோக்கமானது, அவப்பேறான (unfortunate) தொரு நேரத்தில் சொத்தினை விற்க வேண்டிவருமே என்ற எண்ணத்தின் அடிப்படையில் எழுவதாகும்; பிணையங்களின் விரைவானதும் தற்காலிகமானதுமான விலைக்குறைவு மறையுமளவும் காத்திருக்கவேண்டிய அவசியத்தை அவசர நிலையானது பொருட்படுத்தாது என்னும் காரணத்தின் அடிப்படையில் இந்த நோக்கு அமைந்துள்ளது.


இந்த மூன்று நோக்கங்களும் ரொக்கத்திற்கான மொத்தத் தேவையினை (the total demand for cash) ஏற்படுத்துகின்றன. சேமிப்பு நோக்கங்களுக்கும் (motives for saving) இவற்றிற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. அம் மூன்று நோக்கங்களும் செல்வமானது எந்த வடிவில் வைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பது பற்றியனவாகும். ஒரு மனிதர் தனது வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமித்துவைப்பதற்கான காரணங்களைப் பல காரணி

கள் விளக்கக்கூடும். அவருடைய சேமிப்புகளை எந்த வடிவில் (form) வைத்துக்கொள்கின்ருர் என்னும் பிரச்சினைமட்டும் முற்றிலும் தனிவேருனதாகும். இப் பிரச்சினையை 'நீர்மை விருப்பம்' (liquidity preference) என்னும் கருத்தே தெளிவாக விளக்குகின்றது. மக்கள், தமது செல்வத்தை, பயன்பாடு (utility) அல்லது வருமானத்தை (income) அளிக்கக்கூடிய சொத்துகள் வடிவில் வைத்துக்கொள்ளாமல், ரொக்க இருப்புகள் வடிவில் வைத்துக்கொண்டிருப்பதற்கான காரணத்தை இக் கருத்து விளக்குகின்றது.

ரொக்கத் தேவைக்கான இத்தகைய காரணங்களையெல்லாம் தொகுத்து, ரொக்க விருப்ப அட்டவணை என்னும் ஓர் அட்டவணையை எழுதலாம். இந்த அட்டவணையானது, பல்வேறு வட்டி வீதங்களில், பொதுமக்கள் கையிருப்பாக வைத்துக் கொள்ள விழையும் ரொக்கத்தின் அளவுகளைக் காட்டுகின்றது. இந்த அட்டவணையின் அடிப்படையில் வரையப்பட்ட வரை கோடானது படம் 43-ல் காட்டப்பட்டுள்ள LP என்னும் கோட்டின் வடிவத்தைக் கொண்டதாக இருக்கும். இக் கோடு எதனை உணர்த்துகின்றதென்பதனைப் பார்ப்போம். வட்டி வீதங்கள் அதிகமாக இருக்கும்போது ரொக்கத்திற்கான தேவை சிறிதளவாகவும், வட்டி வீதங்கள் குறைவாக இருக்கும்போது ரொக்கத்திற்கான தேவை யதிகமாகவும் இருக்குமென்பதை அது உணர்த்துகிறது. இதனை வேறு வழியில் கூறப்போனல், பொதுமக்களுக்குக் கிடைக்கும் ரொக்கமானது குறைந்து கொண்டே செல்லுமாயின், அவர்களிடமிருந்து அந்த ரொக்கத் தொகைகளைக் கடனகப் பெறுவதற்கு அதிகமான வட்டி வீதங்களைக் கொடுத்தே பெறும்படியாக இருக்கும். இதற்குக் காரணம் என்னவெனில், ரொக்கக் கையிருப்புகள் குறைவாக இருக்கும்போது அவர்களிடம் கடன் கேட்கப்படும்போது அதிகமான அளவில் அவர்கள் தியாகம் செய்தே கடனை அளிக்க முடிகின்றது. மிகக் குறைந்த அளவு வட்டி வீதங்களில், அட்டவணையானது முற்றிலும் நெகிழ்வுள்ளதாக (completely elastic) உள்ளது—வட்டி வீதங்கள் மிகவும் குறைவாக இருக்கும்போது, எதிர்கால அதிகரிப்பின் சாத்தியக் கூறு (the possibility of a future rise) மிகவும் வலிமையுற்று (இதன் காரணமாக மூலதன இழப்பும்) காணப்படும் ; பிணையங்களின் விலைகள் இறங்கு முன்னரே ஒவ்வொருவரும் பிணையத்தைக் கொடுத்துவிட்டு ரொக்கமாக வைத்துக் கொள்ளவே விழைவர்.

6

அட்டவணையானது பணத் தேவைபற்றியும் சுட்டு கிறது. இதற்கு முன்னருள்ள அத்தியாயங்கள், பணத்தின் மொத்த அளிப்பானது எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறதென்பதனை விளக்கின. நோட்டுகளையும் நாணயங்களையும் ஒரு பொருட்டாகக் கருதாமல் கணக்கிடாமல் விடுவோமானால் (பணத்தின் மொத்த அளிப்பில் இவை அவ்வளவு முக்கியம் வாய்ந்தனவல்ல), பணத்தின் மொத்த அளிப்பானது பாங்குகளின் ரொக்கக் காப்புகளையும், பாங்குகள் தம்மிடமுள்ள வைப்புகளுக்கு விகிதப்படி வைத்துக்கொண்டிருக்கும் ரொக்கத்தையும் பொறுத்துள்ளது. இந்த ரொக்கக் காப்புகள் எவ்வளவு பாங்குகளிடம் இருக்க வேண்டுமென்பதைப் பண மேலாண்மையாளர்கள் (monetary



படம் 43

authorities) நிர்ணயிக்கின்றனர். ஆகவே, எந்த ஒரு சமயத்திலும் (at any moment) பணத்தின் அளிப்பானது, வட்டி வீதங்களின் மாற்றங்களுக்கேற்ப ஏற்ற இறக்கத்தினையுடையதாக இருப்பதில்லை; எனவே, இதனைப் படம் 43-ல் காட்டப்பட்டிருப்பது போன்று ஒரு செங்குத்துக் கோட்டினால் (vertical curve)—முற்றிலும் நெகிழ்வற்றதொன்றாக—காட்டலாம். இரு கோடுகளும் ஒன்றையொன்று வெட்டுகின்ற புள்ளியில்தான் வட்டி வீதமானது அமைகின்றது.

எல்லாத் தேவை (demand), அளிப்புக் (supply) கோடுகளைப் போன்றே, நீர்மை விருப்ப அட்டவணையின் அடிப்படையில் வரையப்படும் கோடு, பண அளிப்புக் கோடு (money-supply curve) ஆகிய இரண்டும் வலப்புறமாக அல்லது இடப்புறமாக இடம் மாறுவதாகவுள்ளன. பொதுமக்களின் நீர்மை விருப்பம் திடீரென அதிகரிக்கும்போது [செல்வத்தை ரொக்க வடிவில் வைத்துக்

கொள்வதில் உள்ளதொரு கவர்ச்சிகரமானது (atractiveness) ஏதாவதொரு காரணியால் அதிகரிக்கப்படும்போது] அட்டவணை யின் அடிப்படையில் வரையப்பட்ட கோடானது படம் 43-ல் உள்ள LP கோட்டினைப்போன்று வலப்பக்கமாக இடம் மாறி அமையும். பணத்தின் கணியமானது மாறாமல் நிலையானதாக இருக்குமானால், அப்போது வட்டி வீதமானது அதிகரிக்கும்—படம் 43-ல் வட்டிவீதமானது R_1-லிருந்து R_2-ஆக அதிகரித் துள்ளதைக் காணலாம். இதுபோன்றே, மாறா விருப்பத்தர அட்டவணை உள்ளபோது பண அளிப்புக் கோடானது (money-supply curve) வலப்பக்கமாக இடம் மாறி அமையுமானால் (அதாவது பணத்தின் கணியம் பெருகும்போது) வட்டி வீதம் குறையும்.

எனவே, வட்டி என்பதனை நீர்மையைப் பிரிந்திருப்பதற்கான தோர் ஊதியம் எனக் கூறலாம். பண மேலாண்மையாளர் களால் (monetary authorities) நிர்ணயிக்கப்படும், கொடுக்கப் பட்டுள்ளதொரு பண அளிப்பில், ஒருவர், ரொக்கத்தைப் பெற வேண்டுமாயின்,ரொக்கத்தை ஏற்கெனவே பெற்றுள்ள யாராவது ஒருவரை அணுகி, ஏதாவது ஒரு சொத்திற்கு (any asset) மாற்றாக ரொக்கத்தைத் தருமாறு அவரை இணங்கச் செய்தல் (persuade) வேண்டும். இவ்வாறு இணங்கச் செய்வதற்கு மிகப் பொருத்த மான ஆயுதம், வட்டியேயாகும். ரொக்கந் தருவதில் மக்கள் எந்த அளவிற்கு அதிகமாகத் தயக்கமுறுகின்றனரோ அந்த அளவிற்கு வட்டிவீதமும் அதிகரித்துச் செல்லும்—அதாவது, தற்போது விளக்கப்பட்ட ரொக்கத் தேவைக்கான சக்திகள் அதிக வலுப்பெற்றனவாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையில் ஏனைய சொத்துகளை மாற்றாகப் பெற்றுக்கொண்டு, ரொக்கம் தருவதைத் தூண்டும்பொருட்டு அதிகமான வட்டிவீதம் தேவையாக இருக்கும்.

2 குறுங்கால (short-term), நெடுங்கால (long term) வீதங்கள்

இதுவரையிலும் வட்டி 'வீதம்' என்பதுபற்றி ஆராய்ந் தோம்; இதுவரையிலும், அங்காடியில் ஒரே ஒரு வட்டிவீதமே நிலவுகிறதென்றதோர் எடுகோளினைக்கொண்டு ஆராய்ந்து வந்தோம். உண்மையில் பார்க்கப்போனால், பல்வேறு வகை யானவையும் (different types), பலதரப்பட்டவையுமான (different grades) பிணையங்களுக்குப் பலவிதமான வட்டிவீதங்கள்

உள்ளன. இவ்வாறு வட்டிவீதங்களுக்குள் இருக்கின்ற வேறுபாடுகள், சிறப்பாகப் பிணையங்களின் பல்வேறு கால அளவுகளின் அடிப்படையில்தான் அமைந்துள்ளன. அவைகள் முதிருமுன்னர் அதாவது அவைகளுக்கான ரொக்கம் கொடுபடு முன்னர்—அவைகளை வைத்திருக்கவேண்டிய கால அளவுகளின் அடிப்படையில்தான் இந்த வட்டிவீதங்கள் அமைந்துள்ளன. குறுங்காலப் பிணையமானது நெடுங்காலப் பிணையத்தைப் பல வகைகளில் ஒத்திருந்தபோதிலும், இயல்பாக, குறுங்காலப் பிணையம் நெடுங்காலப் பிணையத்தைக்காட்டிலும் குறைந்த வட்டி வீதத்தை அளிப்பதாகவேயுள்ளது. இதற்குக் காரணம் என்ன? பிணையத்தின் (security) காலவரையறை நீடித்துச் செல்லச் செல்ல, அது விலையின் ஏற்ற இறக்கங்களால் பாதிக்கப்படுவதும் அதிகமாக இருக்கிறது; இதன் காரணமாக அதனுடைய நீர்மை (liquidity)—ரொக்கநிலை—குறைக்கப்படுகிறது. இதனை, மேற்கண்ட கேள்வியினுக்கு விடையாகக் கூறலாம். விலையின் ஏற்ற இறக்கங்களால் (price fluctuations) பிணையங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனவென்பதை எளிதான ஓர் உதாரணத்தின் மூலம் நன்கு தெரிந்துகொள்ளலாம். சராசரி நடப்பு அங்காடி வீதமானது (average current market rate of interest) 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக அதிகரிக்கின்றதெனக் கொள்வோம். ஆண்டொன்றுக்கு 4 சதவீத வருமானத்தை அளிக்கக்கூடியதும் பணத்தைத் திருப்பி அளிப்பதில் எவ்வித தேதியும் நிர்ணயிக்கப்படாததுமான (மீட்கப்படா பிணையம்—irredeemable security) ஒரு பிணைப்பத்திரத்தின் விலையானது தற்போது குறையும். ஏற்கெனவே, கணக்கீடு செய்துபார்த்ததுபோன்று, £ 100-லிருந்து $\frac{4}{5}\times$£ 100 ஆக, அல்லது £ 80 ஆக விலை குறையும். தற்போது, இப் பிணைப்பத்திரத்தினை எல்லா வகையாலும் ஒத்த, ஆனால், பணம் திருப்பித் தரப்படுதலில்மட்டும் மாற்றமுள்ள—அதாவது, ஆண்டு இறுதியின்போது குறிப்பிட்ட தேதியில் பிணையம் முதிரும்போது பணம் திருப்பித் தரப்படவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்ட ஒரு பிணைப்பத்திரம் இருப்பதாகக் கருதுவோம். இத்தகையதொரு பிணைப்பத்திரம் விலையானது £ 80 ஆகக் குறைந்துவிட்டதெனில், அதற்கு ஏராளமான தேவை ஏற்படும். ஆண்டு இறுதியில் அப் பிணைப்பத்திரத்தை வைத்திருப்பவர் £ 100 ரொக்க மறு செலுத்தையும் (cash repayment) அதனுடன் £ 4 வட்டியையும் ஆக மொத்தம் £ 104ஐ அல்லது தான் செலுத்தியதைவிடக் கூடுதலாக £ 24ஐப் பெறுவார். £ 80

முதலீட்டிற்கு ஆண்டொன்றுக்கு இலாபம் £ 24 கிடைப்பதென்பது 30 சதவீதம் வட்டி கிடைப்பதற்குச் சமமாகும்—புதிய பிணையங்களுக்கு நடப்பில் அளிக்கப்படும் 5 சதவீத வருமானத்தைக்காட்டிலும் இது கணிசமான அளவிற்கு அதிகமாகும்.

இத்தகைய கவர்ச்சிமிக்கதொரு பிணையத்தினை வாங்குவதற்கு ஒவ்வொருவரும் விரைந்து முனைவர். இதன் காரணமாக அதன் விலையானது அதிகரிக்கும். அதனுடைய விலையானது £ 99 ஆக ஆகும்வரையிலும் விலையானது தொடர்ந்து அதிகரித்துக்கொண்டேயிருக்கும். இந்த விலைக்கு அப் பிணையத்தை வாங்கும் மக்கள் ஆண்டு இறுதியின்போது £ 100 மறுசெலுத்தையும் (repayment), அதனுடன் £ 4 வட்டியையும், ஆக, மொத்தமாக £ 104ஐயும் £ 5-க்கும் குறைவான (less than £ 5) நிகர இலாபத்தையும் (net gain) பெறுவார். £ 99 முதலீட்டிற்குக் கிடைக்கும் இந்த இலாபமானது, ஆண்டொன்று 5 சதவீத வருமானத்திற்குச் சமமானதாகும்—அதாவது, தற்போது அங்காடியில் நடப்பிலிருக்கும் வட்டி வீதத்திற்குச் சமமானதாகும். எனவே, ஒரு சமநிலை (equilibrium) எய்தப்படுகின்றதெனக் கூறலாம்.

தற்போது, பத்தாண்டு காலத்தில் பணத்தைத் திரும்பப் பெறக்கூடிய இதைப்போன்றதொரு பிணைப் பத்திரத்தை ஆராய்வோம். இப் பத்திரத்தின் விலையானது £ 80 ஆகக் குறைந்ததெனில், பத்தாவது ஆண்டின் இறுதியில் அப் பிணைப் பத்திரத்தை வாங்கியவர் £ 100 ரொக்கத்தைப் பெறுவார்—அதாவது மொத்தத்தில் கணக்குப் பார்க்கும்போது £ 140ஐயும் ஆரம்பக் கொள்முதலோடு (பிணைப்பத்திரத்தின்) ஒப்பிடும்போது £ 60 இலாபத்தையும் பெறுவார். கூட்டு வட்டியாகக் கணக்கிடாமல் சாதாரண வட்டியெனக் கணக்கிடுவோமானால், 10 ஆண்டுகளில் £ 60 இலாபம் கிடைப்பதென்பது, ஆரம்ப முதலீடான £ 80-க்கு ஆண்டொன்றுக்கு £ 6 வருமானம் கிடைப்பதற்குச் சமமாகும்—அதாவது, ஆண்டொன்று 7·5 சதவீத வட்டி கிடைப்பதைக் குறிக்கும். இத்தகையதொரு முதலீட்டில் உள்ள கவர்ச்சியானது (புதிய பிணையங்களுக்கு நடப்பில் உள்ள 5 சதவீத வருமானத்துடன் ஒப்பிடும்போது) அதனுடைய விலையை அதிகரிக்கச் செய்யும். விலையானது £ 93ஆக உயரும் வரையில் இவ்வதிகரிப்பு நீடிக்கும். இந்த விலைக்கு, வாங்குவோர் ஒருவர், அப் பிணையத்தை வாங்குவாரானல் 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு அதற்கு £ 140ஐப் பெறுவார்; அவர் £ 47 மொத்த

இலாபத்தை அல்லது ஆண்டொன்றுக்கு £ 4·7 வருமானத்தை அடையக்கூடும். £ 93 முதலீட்டில் ஆண்டொன்றுக்குக் கிடைக்கும் £ 4·7 வருமானமானது, அங்காடியில் நடப்பில் உள்ள 5 சதவீத வட்டி வீதத்திற்குச் சமமானதாக இருக்கும்.

ஈண்டு ஒன்று நமக்குப் புலப்படுகின்றது. நடப்பு வட்டி வீதத்தில் ஏற்படுகின்ற எந்த ஒரு மாற்றத்தின் விளைவாகக் கால அளவில் வேறுபாடுகளையுடைய பிணையங்கள் அவைகள் முதிருவதற்கு முன்னரே ரொக்கமாக்கப்படும்போது விலையில் பல்வேறு அளவுகளில் ஏற்ற இறக்கங்களையுடையனவாக உள்ளன என்பது நமக்கு விளங்குகின்றன. நாம் தற்போது ஆராய்ந்த கருதுகோளான (hypothetical) உதாரணத்தை நோக்குவோம். 4 சதவீத வட்டி வீதமானது 5 சதவீதமாக அதிகரித்ததும், ஓராண்டுப் பிணைப்பத்திரத்தின் விலை £ 99 ஆகக் குறைந்தது. இதைப்போன்று பத்தாண்டுப் பிணைப்பத்திரமானது (ten-years bond) £ 93 ஆகவும், மீட்க இயலாப் பிணைப்பத்திரமானது (அதாவது கால வரையறையே இல்லாத நெடுங்காலப் பிணைப் பத்திரம்) £ 80 ஆகவும் விலை குறைக்கப்பட்டது. ஆக, நெடுங் காலப் பிணையங்கள் (long term securities) குறுங்காலப் பிணையங்களைக்காட்டிலும் நீர்மை குறைந்தனவாக (less liquid) உள்ளன. கணிசமான அளவில் நஷ்டமேதுமின்றி, அவைகளை ரொக்கமாக மாற்றிக்கொள்வதில் நிச்சயமான நிலை (certainty) குறைந்தே காணப்படுகிறது. பொதுவாக, வட்டி வீதங்களில் ஏற்படும் இறக்கமானது (fall), எதிரிடையான விளைவுகளையே தருவதாக உள்ளது. வட்டி வீதமானது எதிர்காலத்தில் தற்போதுள்ளதைக் காட்டிலும் குறைவாகப் போகக்கூடும் என்னும் எண்ணமானது அங்காடியில் தீவிரமாக இருக்குமானால், நெடுங்கால வட்டி வீதங்கள் (long-term interest rates) குறுங்கால வட்டி வீதங்களைக் காட்டிலும் குறையக்கூடும். ஆயினும், இயல்பான காலங்களில் (in normal times) எதிர்காலத்தைப்பற்றிய எண்ணங்களுக்கு (expectations about the future) அதிக அளவில் நிலையான தன்மை பொருத்தப்படுவதில்லை. மேலும், ஒரு குறிப்பிட்ட மூலதன நஷ்டத்தால் வரக்கூடிய ஆபத்தே (risk), அதற்குச் சமமாகக் கிடைக்கக்கூடும் மூலதன இலாபத்தைக்காட்டிலும், முதலீடு செய்பவர்களின் மனத்தில் ஆழமாக இடம் பெறுகின்றது. (குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியானது—the law of diminishing marginal utility) வருமானத்திற்கும் பொருந்து

மென்ற எடுகோளினைக் கொண்டோமானால், ஒருவருடைய சொத்தானது £ 100-லிருந்து £ 90 ஆகக் குறைவதால் ஏற்படும் பயன்பாட்டு இழப்பானது, அச் சொத்து £ 100-லிருந்து £ 110 ஆக அதிகரிக்கும்போது ஏற்படும் இலாபத்தினைக் காட்டிலும், அதிகமான அளவில் வைத்து எண்ணப்படுகிறது.

3. மற்ற ஆபத்துகளும் நிலையின்மைகளும் (Other Risks And Uncertainties)

பிணையங்கள் நெடுங்காலப் பிணையங்களாக இருந்தால் மட்டும்தான் அவைகளின் நீர்மை (liquidity) பாதிக்கப்படுகிறதென்பதில்லை ; முன்பின் தெரியாததொரு கம்பெனியின் பிணையமானது, ஐ.சி.ஐ (I.C.I.) கம்பெனி அல்லது பிரிட்டிஷ் மோட்டார் கார்ப்பரேஷனின் (British Motor Corporation) பிணையங்களைப்போன்று, அதனை வைத்திருக்கின்றவர் முனைந்தால் உடனடியாக விற்றுவிட முடியாது; அதனை விற்பதற்கு, வாங்குவோர் கிடைப்பது அரிதாக இருக்கும். ஓர் அயல் நாட்டுப் பிணைப் பத்திரத்திற்குத் தனி வகையான ஆபத்துகளும் (special risks) ஏற்படுகின்றன. அந்த நாட்டின் அரசாங்கமானது, அப் பிணைப்பத்திரத்தைப் பறிமுதல் (expropriation) செய்யக்கூடும்; அல்லது அயல் நாட்டு நிதிகள் யாவையும் அந்நாட்டு அரசாங்கம் செயற்படாவண்ணம் முடக்கி வைக்கக்கூடும். இத்தகைய நிகழ்ச்சிகள் யாவும் பிணையத்தின் (security) அங்காடி மதிப்பை (market value) வெகுவாக பாதிக்கும். பிணையங்களின் எல்லையைவிட்டு நெடுந்தூரம் வெளியே செல்லும்போது நிலம் அல்லது வீடுகள்போன்ற சொத்துகளின் நீர்மையானது (liquidity) விற்பனையில் ஏற்படுகின்ற செலவு, இடர்ப்பாடு அல்லது அவைகளுக்கான அங்காடிகளின் நிறைகுறையான நிலை (imperfection of the markets for them) இவற்றால் பாதிக்கப்படும். ஆக, சொத்துகளின் நீர்மையைப் பல்வேறு காரணிகள் பாதிப்பதாக இருப்பதால் அச் சொத்துகளை வைத்திருப்பதற்கு வட்டிவீதமானது ஒரு ஊக்கியாக அளிக்கப்பட வேண்டியுள்ளது.

சொத்துகளானவை மாறும் இலாபத்தைத் (variable returns) தருவனவாக இருக்கும்போது—எல்லா வகையான சலுகை அல்லது சாதாரணப் பங்குகளினின்றும் கிடைக்கின்ற—மேலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஏனெனில், இத்தகைய இலாப விளைவுகளில் தொழில்துணிவு என்னும் காரணியும் (factor of enterprise)

மூலதனமும் (capital) சம்பந்தப்பட்டுள்ளன. ஒரு சாதாரணப் பங்கை வாங்குவதானது (ஒரு பிணையத்தைப் போன்று— like that of a debenture), முதலினை நீர்மையற்ற வடிவில் (relatively illiquid form) வைப்பதாகும். ஆக, பங்குகளினின்றும் கிடைக்கும் வருமானத்தில் (return on shares) நீர்மையைத் தியாகம் செய்வதற்கான ஓர் ஊதியத்தையும் உள்ளடங்கியுள்ளது. பங்குதாரர், இவ்வாறு நீர்மையைத் தியாகம் செய்வதுடன் நிறுவனத்தில் ஏற்படும் நிலையின்மைகளையும் (uncertainities) தாங்கவேண்டியுள்ளது. பங்குதாரர் என்ற முறையில் அவர் தமது சொத்தினை நிறுவனத்திற்குக் கடன் கொடுப்பதோடு மட்டுமே இருந்துவிடுவதில்லை; அவர், கம்பெனியினுடைய ஒரு பகுதியை விலைக்கு வாங்கி, அதனுடைய தொழில் முயல்வோர் பொறுப்புகளையும் தாம் மேற்கொள்பவராக இருக்கிறார். பிணையத்தை வைத்திருப்பவருக்குக் (debenture-holder) கம்பெனிக்கு எவ்வளவு இலாபம் கிடைக்கின்றதோ, அதில் பங்கு கிடைக்கின்றது (பிணையம் முதிருந்தறுவாயில் அதன் முதலும் திருப்பித் தரப்படுகிறது). ஆயினும். நாம் ஏற்கெனவே 17ஆம் அத்தியாயத்தில் பார்த்தவாறு, பங்குதாரருக்குக் கிடைக்கும் இலாபத்தில் இலாப ஈவு (dividend) மட்டுமே கிடைக்கின்றது. அப்படியாகில், பங்குகளுக்காகப் பெறப்படும் வருமானத்தில் (income received on shares) வட்டி ஒரு பகுதியாக உள்ளது. வருமானத்தில் இலாபமும் ஒரு பகுதியாக உள்ளது; ஆனால், இலாபமானது எதிர்க்கணியத்திலும் (negative) இருக்கக்கூடும். சாதாரணப் பங்கிற்கு எவ்வித இலாப ஈவும் பெறப்படவில்லையெனில் அதனை வைத்திருப்பவர் அதனால் ஒன்றையும் ஆதாயமாகப் பெறவில்லை என்பதுடன் அப் பங்குத் தொகையைப் பங்குகளில் முதலீடு செய்யாமல், அவர் அறுதியிட்ட வட்டி சொத்தாக (fixed-interest asset) முதலீடு செய்திருப்பாரேயாகில் அவருக்குக் கிடைத்திருக்கக்கூடும் வட்டியையும் இழந்தவராவார். இலாபம் என்னும் அத்தியாயத்தில் நாம் ஆராய்ந்தது போல, சாதாரணப் பங்குகளின் ஈட்டங்கள் (earnings as ordinary shares), பல்வேறு தொழில்களின் நடவடிக்கைகளின் விளைவினைச் (outcome) சூழ்ந்துகொண்டிருக்கின்ற நிலையின்மையின் அளவினைப் பொறுத்தே உள்ளன.

ஆனால், இத்தகைய இடர்ப்பாடுகள் யாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைப்பது போன்று ஒரு நன்மை சாதாரணப் பங்குகளில் உள்ளது. ஒரு நிறுவனத்தின், அல்லது பொதுவாக ஒரு தொழி

வில், இலாபங்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கக்கூடுமானால், அதன் பங்குகளின் விலை இயற்கையாக அதிகரிக்கத் தலைப்படும். உதாரணமாக, கொடுக்கப்படும் இலாப ஈவானது (dividend), £ 100 பங்கு ஒன்றுக்கு £ 15-லிருந்து £ 20-ஆக அதிகரிக்குமானால், பங்கின் அங்காடி மதிப்பும் ஏறக்குறைய அதே வீதத்தில் அதிகரிக்கும். விலைகளும் அதன் வழியாக இலாபங்களும் அதிகரிக்கும் காலங்களில் சாதாரணப் பங்குகள் பண வீக்கத்திற்கு (inflation) ஒரு நல்ல வேலியாக அமைகின்றன. உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையமானது (a gilt-edged security) ஓர் அறுதியிட்ட தொகையை (பண வடிவில்) அளிக்கின்றது; பொது விலை மட்டம் (general price level) அதிகரிக்கும்போது அது அளிக்கின்ற வருவாயின் (yield) உண்மை மதிப்புக் (real value) குறையும். ஆயினும், முதலீடு செய்கின்ற ஒருவர், இத்தகைய நஷ்டத்தை, சாதாரணப் பங்குகளை வாங்குவதன்மூலம் தடுத்துக்கொள்ள முடியும்; விலைகள் 10 சதவீதம் அதிகரிக்கும்போது பங்கின் இலாப ஈவும் 10 சதவீதம்—அதன் வழியாக அதன் மூலதன மதிப்பும்—10 சதவீதம் அதிகரிக்கக்கூடும். விலைகளும் இலாபங்களும் உள்ளபடியாக அதிகரிக்கின்ற காலங்களிலும் அல்லது அதிகரிக்கக் கூடுமென எதிர்பார்க்கக்கூடிய காலங்களிலும் சாதாரண பங்குகளின் வருமானத்தில் ஏற்படும் மாற்றமானது தீமையாக இருப்பதைவிட நன்மையாகவே உள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் அறுதியிட்ட வட்டியினைப் பெறக்கூடிய பிணையமே (fixed-interest security) ஆபத்தினை (risk) யுடையதாகவுள்ளது. அதன் உண்மை வருமானத்தின் (real income) மதிப்பானது சீராக அரிக்கப்படுவதே (steady erosion) அவ்வாபத்தாகும்.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

Keynes, 'The General Theory of Employment, Interest and Money' (Macmillan, London, 1936), Chs. 13—15.

W. T. Newlyn, 'Theory of Money' (Oxford University Press, London, 1962), Chs. 1–X.

A. H. Hansen, 'A Guide to Keynes' (McGraw-Hill, New York, 1953), Chs. 6-7.

D. Dillard, 'The Economics of J. M. Keynes' (Crosby & Lockwood, London, 1950), Ch. 8.

E. T. Nevin, 'Mechanism of Cheap Money' (University of Wales Press, Cardiff, 1955), Ch. II.

24. பணக் கைக்கோளின் செயல்முறை
(The Mechanism of Monetary Policy)

1. மைய பாங்கின் ஆயுதங்கள் (The Weapons of the Central Bank)

முன்னருள்ள ஓர் அத்தியாயத்தில், தற்காலத்தில் பெரும்பாலான பொருளாதார வளர்ச்சியினையுடைய நாடுகளில் நடப்பது போன்றே, ஐக்கிய அரசாங்கத்திலும் (United Kingdom) பணத்தின் கணிசமானது (the quantity of money) மைய பாங்கினுல் [அரசாங்கத்தின் பதிலாண்மை (agent) என்ற வகையில்] கட்டுப்படுத்தப்படுகிறது. தற்காலப் பணமுறையில் உள்ள நல்ல அம்சங்களில் ஒன்று யாதெனில், பணத்தின் அளிப்பானது மிக நெருங்கியதும் உள்ளார்ந்ததுமானதொரு (conscious) கட்டுப்பாட்டின் கீழிருப்பதாகும்; பணத்தின் கணிசமானது விலையுயர்ந்த உலோகங்கள் என்றழைக்கப்படுபவைகள் புதியனவாக வெட்டியெடுக்கப்படுவதாலும் அல்லது விலையுயர்ந்த கற்கள் அல்லது சிப்பிகள் (shells) கண்டுபிடிக்கப்படுவதாலும் தற்செயலாக நிர்ணயிக்கப்படுவதொன்றன்று. நாட்டில் பண அளிப்பை ஆட்சி செய்கின்ற ஓர் அதிகாரமானது மிக முக்கியமானதோர் அதிகாரமாகையால் அத்தகையதோர் அதிகாரத்தை அரசாங்கத்தைத் தவிர்த்து வேறு எவர் கையிலும் ஒப்படைக்க இயலாது. வட்டி வீதமானது பெரிதும் பணக்கணிசத்தைப் பொறுத்தே உள்ளதென்பதை நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம். வேலைக் கோட்பாட்டினை (the theory of employment) ஆராயும்போது, வட்டிவீதமானது எவ்வாறு விலைகளின் மட்டம் (the level of prices), வருமானங்கள் (incomes), உற்பத்தி (out put) ஆகியவற்றைப் பாதிக்கின்றதென்பது தெரியவரும். பணமுறையை அரசாங்கம் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றதென்பதனை ஆராய்வதே நமது தற்போதைய நோக்கமாகும். இந்

நூலின் ஏழாம் மடலானது பண முறையில் ஏற்படும் மாற்றங்கள் பொருளாதார முறை முழுவதையும், பரந்த கருத்தில், எவ்வாறு பாதிப்பனவாக உள்ளன என்பதுபற்றிக் கூறுகிறது.

அத்தியாயம் 21-ல் குறிப்பிட்டுள்ளதுபோன்று, பொதுப் பணமுறையினை (general monetary system), பாங்குச் செலாவணியை ஆட்சி செய்கின்றதோர் அதிகாரத்தின் மூலம், இங்கிலாந்து பாங்கானது (Bank of England) கட்டுப்படுத்தும் பொறுப்பினை நிறைவேற்றிக்கொண்டு வருகிறது. இத்தகையதொரு பணியினை நிறைவேற்றுவதற்கு அதற்கு நான்கு ஆயுதங்கள் உள்ளன; இவற்றை ஒன்ருேடொன்று இணைத்து, இங்கிலாந்து பாங்கு செயற்படுத்துவது வழக்கம். முதலாவது ஆயுதம் பாங்கு வீதமாகும் (Bank rate)—அதாவது அந்த வீதத்தில் முதல் தரமான மாற்று உண்டியல்களைக் கழிவு செய்யவோ (discount) அல்லது மறுகழிவு (re-discount) செய்யவோ, பாங்கு தயாராக இருக்கும். இங்கிலாந்து பாங்கே இறுதிக் கடனீவோராக (lender of the last resort) இருக்கும் தொன்றுதொட்டதொரு பணியினைச் செய்து வருகிறது. அதே சமயத்தில் அந்த பாங்கு தன்னுடைய சொந்த விலைக்குத்தான் (at its own price) கடனளிக்கும். இந்த விலையே பாங்கு வீதமாகும் (Bank rate). பாங்கானது சாதாரண பாங்குத் தொழிலை (ordinary banking business) எவ்வித முக்கியமான அளவிலும் மேற்கொள்வதில்லை. ஆனல், பண அங்காடியில் (money market) உள்ள தரகர்களுக்கும் (brokers) கழிவகங்களுக்கும் (discount houses) இங்கிலாந்து பாங்கிற்கு உண்டியல்களை (bills) எடுத்துச் சென்று, அவற்றை பாங்கிற்கு விற்பனை செய்யும். அதாவது அவைகளை மறுகழிவுகள் (re-discount) செய்யும்—பேருரிமை (privilege) உள்ளது. அல்லது, தரகர்களும் கழிவகங்களும் பாங்கினிடம் உண்டியல்களைப் பிணையமாக (security) வைத்துக் கடன்களைப் (குறைந்தது, ஏழு நாட்கள் கால அளவு உள்ள கடன்களை) பெறலாம். இக் கடன்களுக்குத் தரகர்களும் கழிவகங்களும் பாங்கு வீதத்திற்கு மேல் $\frac{1}{2}$ சதவீதம் கூடுதலாக வட்டி கொடுக்கவேண்டும்.

இங்கிலாந்து பாங்கானது, பாங்கு வீதத்தை (Bank rate) அங்காடியின் நடப்புக் கழிவு வீதத்திற்கும் (current market rate of discount) அதிகமாக வைத்திருப்பதிலேயே கவனமாக இருக்கும். உதாரணமாக, உண்டியல்கள் அங்காடியில் 3 சதவீத

அளவிற்குக் கழிவு செய்யப்படுமானால், பாங்கு வீதமானது, குறைந்தபட்சம் $3\frac{1}{2}$ சதவீதமாக இருக்கவேண்டும்; இதனால், £ 100 பெறுமானமுள்ள ஒரு மூன்று மாத கால உண்டியலானது (a 3-month bill worth £ 100) கழிவகங்களுக்கு £ 99-5s.க்கு விற்கப்படுமென்றும், ஆனால், அது இங்கிலாந்து பாங்கிற்கு £ 99-2s. க்கே விற்கப்படுமென்பதும் (மறுகழிவு செய்யப்படுமென்பதும்), தெளிவாகிறது. இந்த நிலை வேறுவிதமாக இருக்குமானால், அதாவது, பாங்கு வீதமானது நடப்பு அங்காடி வீதங்களுக்கும் (current market rates) குறைவாக இருக்குமேயாகில், கழிவகங்கள் (discount houses) பாங்கில் தமக்குள்ள மறுகழிவு செய்யும் பேருரிமையைப் பயன்படுத்த ஆரம்பிக்கும்—அதாவது அங்காடியிலிருந்து உண்டியல்களை வாங்கி, அவற்றை உடனடியாக பாங்கிற்கு மறுவிற்பனை (re-sell) செய்ய ஆரம்பிக்கும். இதன் விளைவாக, பாங்கில் ஏராளமாக உண்டியல்கள் வந்து குவிந்த வண்ணமாக இருக்கும்.

மைய பாங்கின் ஆயுதசாலையில் உள்ள இரண்டாவது ஆயுதம் வெளி அங்காடி நடவடிக்கைகளாகும் (open-market operations). வெளி அங்காடி நடவடிக்கைகளென்பவை, பாங்கானது பிணையங்களை (கருவூல உண்டியல்களையும் சேர்த்து) சாதாரணப் பிணைய அங்காடியில் வாங்குவதையோ அல்லது விற்பதையோ குறிக்கும். இத்தகைய கொள்முதல்களும் விற்பனைகளும் மிக முக்கியமான விளைவுகளை உண்டுபண்ணக் கூடியவைகளாக இருக்கும். முதலாவதாக, பிணையங்களுக்கான (securities) தேவையானது (demand) அதிகரிக்கும்போதும் அல்லது குறையும்போதும் நடப்பு வட்டிவீதமானது (current rate of interest) நேரடியாக பாதிக்கப்படும். இதைவிட முக்கியமானது யாதெனில், இத்தகைய நடவடிக்கைகள் (such operations) வர்த்தக பாங்குகளின் (commercial banks) ரொக்கக் காப்புகள் (cash reserves) மாற்றங்களை (changes) ஏற்படுத்தும். பாங்கானது பிணையங்களை வாங்கும்போது, பிணையங்களை விற்பவர் அவைகளுக்கு மாற்றாக இங்கிலாந்து பாங்கில் பணம் பெறத்தக்க செக்கு (cheque) ஒன்றினைப் பெறுவார். இந்தச் செக்கை, தாம் வாடிக்கைக்காரராக இருக்கின்ற, வர்த்தக பாங்கினிடம் வைப்பாக (deposit) வைப்பார். வர்த்தக பாங்கானது, அந்தச் செக்கினை, இங்கிலாந்து பாங்கிற்குப் பணம் செலுத்தப்படுவதற்காகக் கொடுக்கும். இத்தகையதொரு பணம் கோருரிமையை

(claim) பாங்கானது எவ்வாறு கையாளுகிறதெனில், வர்த்தக பாங்கு தனது வாடிக்கைக்காரரின் பணம் கோருரிமையை எவ்வாறு கையாண்டதோ அதைப்போலவே கையாளுகிறது— அதாவது அந்தச் செக்கிற்கான தொகையை இங்கிலாந்து பாங்கானது (Bank of England) வர்த்தக பாங்கின் வைப்புடன் சேர்த்துக்கொள்ளும். ஆக, பிணையங்களின் ஆரம்பக் கொள்முதலால் (original purchase) கிடைக்கக்கூடிய தொகையால் வர்த்தக பாங்கின் ரொக்கக் காப்புகள் (cash reserves) அதிகரிக்கப்படுகின்றன. ரொக்கக் காப்புகளில் ஒரு குறிப்பிட்ட அதிகரிப்பு ஏற்படின், வர்த்தக பாங்கானது தனது வைப்புகளைச் சுமார், அந்த அதிகரிப்புத் தொகையைப் போல், பன்னிரண்டு மடங்கு வைப்புகளைத் தனது மொத்த வைப்புகளில் (total deposits) கூடுதலாகச் சேர்த்துத் தன் வைப்புகளைப் பெருக்கிக் கொள்ள இயலும். மாறாக, இங்கிலாந்து பாங்கானது பிணையங்களை விற்கும்போது அவற்றிற்கு மாற்றாக (in exchange for them), வர்த்தக பாங்குகளொன்றில் கணக்கு வைத்திருக்கும், வாங்குவோரின் கணக்கினின்றும் பணம் பெறத்தக்கதொரு செக்கினைப் பெறும்; பாங்கானது இந்தச் செக்கிற்கான பணத்தை, வர்த்தக பாங்கு அதனிடம் வைத்துள்ள வைப்புத் தொகையினின்றும், அதாவது அவ் வைப்புத் தொகையிலிருந்து தனக்குச் சேர வேண்டியதைக் கழித்துக்கொண்டு, பணம் பெறுகின்றது. இதன் காரணமாக வர்த்தக பாங்கின் வைப்புத்தொகை குறைக்கப்படுதலால் (reduced), இதற்கிணையாக அதன் ரொக்கக் காப்புகளும் (cash reserves) குறைக்கப்படும். மீண்டும், வர்த்தக பாங்கின் மொத்த வைப்புகளில் மாற்றம் ஏற்படும்; ஏனெனில், மொத்த வைப்புகளுக்கும் ரொக்கக் காப்புகளுக்குமிடையே 8 சதவீத ரொக்க விகிதத்தைக் (cash ratio) (அதாவது மொத்த வைப்புகள் ரொக்கக் காப்புகளைப் போன்று 12 மடங்கு இருக்கும்) கடைப்பிடித்தாக வேண்டும்.

மைய பாங்கின் கைவசமுள்ள மூன்றாவது ஆயுதம், மற்ற பாங்குகளை, சட்ட ரீதியாக அல்லாது அறவழியாகவே இணங்கச் செய்தலாகும் (moral suasion). பாங்கு முறையின் தலைவன், கட்டுப்பாட்டதிகாரி என்ற வகையில் இங்கிலாந்து பாங்கிற்குத் தொன்றுதொட்ட பெருமை (long-established reputation) உண்டு; இங்கிலாந்து பாங்கானது மற்ற பாங்குகளுக்கு அனுப்பும் குறிப்புகளும் (hints) அல்லது ஆலோசனைகளும் மிக்க மரியாதை

யுடன் ஏற்கப்படுகின்றன. வேறு எவ்விதச் சட்டங்களோ அல்லது நடவடிக்கைகளோ தேவையின்றி, இவைகளே தேவையான விளைவுகளை நல்குவனவாக இருக்கின்றன. இங்கிலாந்து பாங்கானது இறுதி நடவடிக்கையாக எப்போதுமே தனது எண்ணத்தை நிறைவேற்றவல்லதென்பதனை வர்த்தக பாங்குகள் நன்கறியும். இதன் காரணமாகத்தான், இங்கிலாந்து பாங்கானது வர்த்தக பாங்குகள் அளிக்கும் கடன் தொகைகள் (bank advances) அதிக அளவில் இருக்கின்றனவென்றோ அல்லது பிணையங்கள் விற்கப்படும் அளவு, உத்தரவாதமுள்ள பிணையங்களுக்கான (gilt-edged securities) அங்காடியைப் பாழ்படுத்துமளவிற்கு (damage) அதிகமாக இருக்கின்றதென்றோ குறிப்பிடுமானால், அக் குறிப்பினையே வர்த்தக பாங்குகள் ஆணையாக மேற்கொண்டு, குறிப்புக் காட்டும் வழியில் நடக்க ஆரம்பிக்கும்; அவைகள், இங்கிலாந்து பாங்கானது அவைகள்மீது திணிக்கும் பாங்கு வீதம் (Bank rate), வெளி அங்காடி நடவடிக்கைகள் (open market operations) போன்ற நடவடிக்கைக்காகக் காத்திராமல், குறிப்பையே நடவடிக்கையாக மதித்து, அதன்படி ஒழுக ஆரம்பிக்கும்.

இங்கிலாந்து பாங்கானது நாட்டுரிமையாக்கப்பட்டபோது (nationalised), அதன் இத்தகைய அறவழியான அதிகாரமானது (moral power), *1946*ஆம் ஆண்டின் சட்டத்தினுடைய விதிமுறைகளால் (provisions of the Act of 1946) உறுதிப்படுத்தப்பட்டது. சட்டத்தின் விதி 4-ல் உள்ள துணை விதி (sub-clause) (*3*) கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

> இங்கிலாந்து பாங்கின் மேலாண்மையாளர்கள், பொது நன்மையை உத்தேசித்து பாங்கர்களிடமிருந்து தகவல்களைக் கோரலாம். அவைகள் இன்னவிதமாக நடந்துகொள்ள வேண்டுமென்ற பரிந்துரைகளை (recommendations) அளிக்கலாம். கருவூலத்தால் அதிகாரமளிக்கப்பட்டால், தனது கோரிக்கையை அல்லது பரிந்துரையை நிறைவேற்றியாக வேண்டுமென எந்த பாங்குகளுக்கும் உத்திரவிடலாம்.

இவ் விதியால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பரந்தே காணப்படுகின்றன. தெரிந்தவரையில், இத்தகைய அதிகாரத்தை பாங்கானது எந்த, குறிப்பிட்டதொரு சந்தர்ப்பத்

திலும் பயன்படுத்தியதில்லை. ஆனுல், பாங்கு இன்னவிதமாகச் செயற்படவேண்டுமென்று இங்கிலாந்து பாங்கு அனுப்பும் குறிப்புகளின் செல்வாக்கை (influence) இவ் வதிகாரங்கள் பேரளவில் அதிகரிக்கவே செய்கின்றன. இங்கிலாந்து பாங்கானது தேவைப்படும்போது, தனது விழைவுகளை (wishes) சட்டமுறையாகச் செயற்படுத்தக்கூடுமென்பதைத் தற்போது வர்த்தக பாங்குகள் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றன.

2. சிறப்பு வைப்பு முறை (The Special Deposit System)

சென்ற உட்பிரிவில் (section) கூறப்பட்ட மூன்று ஆயுதங்களும் மைய பாங்கானது வர்த்தக பாங்கு முறையைக் கட்டுப்படுத்தும் ஆயுதச்சாலையை (armoury) அமைத்தன. இங்கிலாந்து பாங்கிற்கு மற்றுமோர் அதிகாரம் அளிக்கப்பட்டது. அதாவது அது, வர்த்தக பாங்குகளிடமிருந்து சிறப்பு வைப்புகளை வைக்குமாறு கோரலாம். இந்த அதிகாரமானது அதன் ஆயுதச்சாலையிலுள்ள நான்காவது ஆயுதமாக விளங்கியது; ஆயினும் இது பாங்கின் அதிகாரத்தை அதிகரிப்பதாக இல்லாமல், ஏற்கெனவே உள்ள மூன்று ஆயுதங்களின் சக்தியை அதிகரிக்குமொன்ருகவே இருந்தது. இந்தப் புதிய அதிகாரம் ஏன் வழங்கப்பட்டது? அவ்வதிகாரம் எவ்வாறு செயற்படுத்தப்படுகிறது? இவற்றை விளக்குவது அவசியமாகிறது.

வர்த்தக பாங்குகள் வைத்திருக்கும் உண்டியல்களில் பெரும்பகுதியும் வாணிப உண்டியல்களாக (trade bills) இருக்கின்றவரை வெளி அங்காடி நடவடிக்கைகள் (open market operations) மூலமாகத் தமது ரொக்கக் காப்புகள் (cash reserves) குறைவதைத் தடுத்துக்கொள்ள ஒரு வழியுமில்லாதிருந்தது. ஏற்கெனவே கூறப்பட்டதுபோன்று, அவைகள் இங்கிலாந்து பாங்கினுல், தண்ட வீதங்களில்தான் (penal rates), மறுகழிவு செய்யப்படும் (re-discounted); இத் தண்ட வீதங்கள் மேற்சொன்ன முறையினை ஒடுக்கும் நோக்கத்துடன், தேவைப்பட்டபோது அதிகரிக்கவும்பட்டன. ஒரு பாங்கானது வாணிப உண்டியல்களை வெளி அங்காடியில் (open market) மறுகழிவு செய்யும்போது (மற்ருெரு பாங்கு ரொக்கத்தை இழப்பதன் மூலம்) தான் ரொக்கத்தைப் பெறுகிறது. மற்ற ஒரு பாங்கின் வாடிக்கைக்காரர் உண்டியல்களை வாங்கும்போது அவர் அந்த பாங்கியில் வைப்பாக வைத்துள்ள தொகையினின்று தானே

பணத்தை எடுத்துச் செலுத்துவாராதலால், அதற்கு ரொக்கம் குறையும். ஆக ஒன்றை இழக்கச் செய்து, மற்றொன்று பெறுகின்ற இம் முறையில், பாங்குகள் முழுவதுமாகத் தமது மொத்த ரொக்கத்தை அதிகரித்துக்கொள்ள இயலாது.

ஆயினும், அண்மை ஆண்டுகளில், வாணிப உண்டியலின் முக்கியத்துவம் குறைந்துவிட்டதையும் (குறைந்தபட்சம், ஒப்பீடாகவேனும்) கருவூல உண்டியல் (Treasury bill) உண்டியல் அங்காடியில் (bill market) முக்கியமானதோர் அங்கமாகவும் இருந்து வந்தமையையும், பாங்குகளின் நீர்மைச் சொத்துகளிலும் கருவூல உண்டியல்களே பெருமளவில் இடம் பெற்றிருந்தமையையும், சென்ற அத்தியாயம் விளக்கியது. இது, நிலைமையில், ஓர் அடிப்படையான மாற்றத்தைப் புகுத்தியது. பாங்கானது, நிறைய அளவு கருவூல உண்டியல்களை வைத்திருக்குமானால், அக் கருவூல உண்டியல்கள் முதிரும்போது அவைகளைப் பணமாக்கிக் (பாங்குவீத மட்டமானது எவ்வாறு இருப்பினும் இவ்வாறு நஷ்டமேதுமின்றிப் பணமாக்கிக்கொள்ளலாம்) கொள்வதன்மூலமும், அவ்வாறு கிடைத்த பணத்தைக் கொண்டு மீண்டும் கருவூல உண்டியல்களை (Treasury bills) வாங்காமலிருந்தாலும், எந்தச் சமயத்திலும் தனது ரொக்கத்தை அதிகரித்துக் கொள்ளலாம். கருவூல உண்டியல்கள் முதிரும்போது, அவைகளுக்கான பணத்தைத் திருப்பித்தர அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. இத்தகையதொரு கடனை அரசாங்கமானது எவ்விதம் நிறைவேற்றுகிறதென்பதனைப் பார்ப்போம். அது, இங்கிலாந்து பாங்கில், தான் வைத்திருக்கும் கணக்கினின்றும் —பொது வைப்புகளினின்றும் (Public Deposits) பணம் பெறத்தக்க ஒரு செக்கை (cheque) எழுதிக் கொடுத்துக் கடனை நிறைவேற்றும். இங்கிலாந்து பாங்கானது இந்தத் தொகையைச் சம்பந்தப்பட்ட பாங்கின் பெயருக்கு மாற்றி, (அதாவது அத் தொகையைப் பொது வைப்புகளிலிருந்தும் பாங்கர்களின் வைப்புக்கு மாற்றும்) தொகையை அதன் கணக்கில் சேர்த்துவிடும். எனவே, இங்கிலாந்து பாங்கானது வெளி அங்காடி நடவடிக்கைகளால் (open market operations) எவ்வளவு விரைவாக வர்த்தக பாங்குகளின் ரொக்கத்தைக் குறைக்கின்றதோ, அதே விரைவுடன் வர்த்தக பாங்குகள் கருவூல உண்டியல்களை ரொக்கமாற்றுச் செய்து, அவைகளின் ரொக்கத்தை நிரப்பிக்கொள்ள வியலும்.

ஆயினும், இத்தகையதொரு செயல்முறைக்கு ஒரு வரையறை (limit) உள்ளது. வர்த்தக பாங்குகள், தங்களிடமுள்ள கருவூல

உண்டியல்களைப் போதுமான அளவிற்கு விற்றுவிட்டபோதும் அவைகளின் நீர்மைச் சொத்துகளைப் போதுமான அளவு மட்டத்தில் (adequate level of liquid assets) வைத்திருக்க இயலும்போது மட்டுமே இங்கிலாந்து பாங்கை இந்த முறையில் குறுக்கிட முடியும். பாங்குகள் 30 சதவீதம் நீர்மை விகிதத்தைக் கடைப்பிடித்தேயாகவேண்டுமென்று நியதி ஏற்பட்ட பிறகு பாங்குகள் தமது மொத்த வைப்புகளில் 30 சதவீதத்திற்கு மேல் வைத்திருந்தாலொழிய இவ்வழியில் தாம் போதிய அளவு ரொக்கக் காப்புகளை வைத்திருக்கின்றன என்று வாதிட முடியாது. அண்மை ஆண்டுகளில், பொதுவாக, பிரிட்டனின் நாட்டுக் கடன் (British national debt) பெருமளவில் அதிகரித்தமையினுலும் குறிப்பாகக் கருவூல உண்டியல்கள் அதிக அளவில் வெளியிடப்பட்டமையாலும் வர்த்தக பாங்குகள் அநேக சமயங்களில் போதிய அளவில் நீர்மையான சொத்துகளை (liquid assets) வைத்துள்ளன; இங்கிலாந்து பாங்கானது அவைகளின் ரொக்கத்தைக் குறையச் செய்யும் முயற்சிகளை, குறைந்தது ஓரளவு காலத்திற்காவது முறியடிக்கும் நோக்கத்துடன்தான் இவ்வாறு நீர்மைச் சொத்துகளை வைத்துள்ளன.

இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இரண்டே வழிகள்தாம் இருந்தன. ஒன்று பாங்குகள் மிக இன்றியமையாத குறைந்தபட்ச 30 சதவீத நீர்மைச் சொத்துகளை ஏறக்குறைய வைத்துக்கொண்டும் அதற்குமேல் வைத்துக்கொள்ளாமல் இருக்கும்போதும் அரசாங்கமானது கருவூல உண்டியல் வெளியிடுதலைக் குறைத்துக்கொள்ளவேண்டும். ஆனுல், இத்தகையதொரு முறையைக் கையாளும்போது அரசாங்கத்திற்கு அதிகமான அளவில் வருவாய் உபரி தேவைப்படும். இவ் வருவாய் உபரியானது (revenue surplus) அதனுடைய குறுங்காலக் கடன்களை (floating debts) மீட்பதற்கும் இன்னும் நடப்பு, மூலதனச் செலவுகளை (expenditure commitments-current and capital) மேற்கொள்வதற்கும் தேவைப்படும். இது, அதிக வரி விதிப்பையோ அல்லது குறைந்த அரசாங்கச் செலவினையோ நாட்டில் ஏற்படுத்திவிடும். அதிக வரிவிதிப்பும் குறைவான செலவும் ஏற்கற்பாலதன்று. மற்ருெரு வழியினைப் பார்ப்போம். சிறப்பு வைப்புகள் திட்டம் (Special Deposits Scheme) போன்ற கைக்கோளால் பாங்கானது அவ்வப்போது வர்த்தக பாங்கு முறையிலுள்ள (commercial banking system) நீர்மையைக் குறையச் செய்யும். இது பாங்கின்

பணக் கைக்கோள் முறையானதொரு செயலாகும் (an act of monetary policy).

இத் திட்டத்தின் செயல்முறை கீழ்க்கண்டவாறு உள்ளது. உதாரணமாக, இங்கிலாந்து பாங்கானது வர்த்தக பாங்குகளின் செலாவணிச் சக்தியை (credit-power) கட்டுப்படுத்த விழைகிறதென்று கொள்வோம். ஆனால், அதே சமயத்தில், வர்த்தக பாங்குகள் தங்களது ரொக்கக் காப்புகளை, முன்னர் கூறியது போல, குறைந்தபட்ச அளவிற்குக் குறையாமல் வைத்திக்கின்றன எனவும் கொள்வோம். அப்படியாயின் அவைகளின் செலாவணிச் சக்தியைக் கட்டுப்படுத்துவதெங்ஙனம்? இங்கிலாந்து பாங்கானது, வர்த்தக பாங்குகளிடமிருந்து, அவைகளின் மொத்த வைப்புகளில் ஒரு சதவீதத்தைச் சிறப்பு வைப்புகளாக வைக்கும்படி கேட்கும். வர்த்தக பாங்குகள் இச் சிறப்பு வைப்புகளை, ரொக்க விகிதக் கணக்கீட்டிற்கு (for the purpose of calculating liquidity ratio), நீர்மைச் சொத்துகளாகக் (liquidity assets) கருத முடியாது; மேலும், வர்த்தக பாங்கானது இத்தகைய சிறப்பு வைப்புகளை அளிப்பதற்கு அதனிடமுள்ள நெடுங்கால அரசாங்கக் கடன் பத்திரங்களை (long-term government securities) வெளி அங்காடியில் விற்குமானால் அத்தகையதொரு செயலிற்கு இங்கிலாந்து பாங்கு, ஒரு சிறிதளவும் ஒப்புதல் செய்யாதென்பதனை நன்கு தெளிவுபடுத்தியது. இதன் காரணமாக, வர்த்தக பாங்குகள், தங்களது நீர்மைச் சொத்துகளினின்றும் இங்கிலாந்து பாங்கு கோரும் தொகையை எடுத்துக் கொடுக்கக்கூடும். இதனால் ஏற்படும் விளைவு யாதெனில், நீர்மைச் சொத்துகள் (liquid assets) என்னும் இனத்தினின்றும் ஒரு சதவீதம் நீர்மையற்ற சொத்துகளுக்கு (non-liquid assets) மாற்றப்படுகின்றது—நீர்மை விகிதம் (liquidity ratio) இதனால் குறைகின்றது. சிறப்பு வைப்புகளுக்கான (special deposits) இத்தகைய அழைப்புகளை இங்கிலாந்து பாங்கானது, வர்த்தக பாங்குகளின் நீர்மைச் சொத்துகள் இன்றியமையாத குறைந்தபட்ச அளவாகிய 30 சதவீத அளவாகக் குறையும்வரை, தொடர்ந்து விடுத்துக் கொண்டேயிருக்கும். இக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது, பாங்குகள் வெளி அங்காடி நடவடிக்கை கைக்கோளினை (open-market operations policy), கருவூல உண்டியல்களை (Treasury Bills) விற்பதன்மூலம் தோல்வியுறச் செய்துவிட இயலாது என்பது தெரியவருகின்றது. தம்மிடமுள்ள கருவூல உண்டியல்களை விற்பு

தனுல் அது ஒரு விகிதத்தை நிரப்புவதாகவும் (replenish)—ரொக்க விகிதத்தை—மற்ருெரு விகிதமாகிய நீர்மை விகிதத்தை (liquidity ratio) அனுமதிக்கப்பட்ட குறைந்தபட்ச விகிதத்திற் கும் குறைவாகச் செல்லாதபடியிருக்கத் துணை செய்வதாகவும் உள்ளது. ஆக, ரொக்கக் காப்புகளின் குறைவானது (a fall in the cash reserves) ஒரே ஒரு விளைவையே அளிப்பதாகவுள்ளது: பிணையங்களின் விற்பனை மூலமாக, கடன்கள், முன்பணம் ஆகிய வற்றின் குறைப்பு மூலமோ (reduction of loans and advances), மேற்சொல்லப்பட்ட ரொக்கக் குறைப்பின் இணையான (அல்லது அவ்வாறு இருக்கவேண்டுமென்று கருதப்பட்ட) அளவிற்கு வைப்புகளின் சுருக்கம் ஏற்படும்.

3. செயல்வகையில் மைய பாங்கின் அதிகாரங்கள் (Central Bank Powers in Action)

பணச் சூழ்நிலையை ஆளுதற்குப் பயன்படுத்தக்கூடிய இங்கிலாந்து பாங்கின் (Bank of England) ஆயுதங்களை விவரித்த பின்னர், அவைகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதையும் ஆராயவேண்டியது அவசியமாகின்றது. பாங்கானது, செலவைக் கட்டுப்படுத்த வேண்டுமென்னும் நோக்கத்துடன் வட்டிவீதங்களை உயர்த்துவது அவசியம் என்று கருதுகிறது என வைத்துக்கொள் வோம்; செலவானது (spending) ஏன் அதிக வட்டி வீதங்களின் விளைவாகவுள்ளதென்பதனை இந் நூலின் ஏழாம் பகுதியில் காண் போம். வர்த்தக பாங்குகள், அதன் கருத்தில், தாராளமாகவும் குறைந்த வட்டிக்கும் கடனளிப்பதாகவும் அவ்வாறு செய்வது நலமல்லவென்பதனையும் மைய பாங்கு முதலில் அறிவு புகட்டும். இத்தகைய அறிவுரையானது (advice) பலனளிக்காது போகுமே யானுல்—அதாவது, கடன் பெருக்கத்தைத் (expansion of credit) தணிக்காது போனுல் அல்லது மைய பாங்கானது நிலைமை மோச மாக இருக்கிறதென்றும் தான் உடனடியாக நடவடிக்கை எடுத் தாக வேண்டுமென்று கருதுமானுல்—மற்ற ஆயுதங்களை அது கையாள ஆரம்பிக்கும். பாங்கு வீதத்தை அதிகரிக்கும்; வெளி அங்காடியில் (open market) பிணையங்களை விற்கும்.

பாங்கு வீதத்தை அதிகரிக்கச் செய்தலானது (the raising of the bank rate) மற்றக் குறுங்கால வட்டி வீதங்களில் (short-term interest rates) வழக்கமாக உடனடியான அதிகரிப்பை ஏற்படுத் தும். உண்டியல்களின் கழிவு வீதங்களும் அதிகரிக்கக்கூடும்.

ஏனெனில், கழிவகங்கள் (discount houses), பாங்கில் உண்டியல்களை மறுகழிவு (re-discount) செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளதென்று கருதினால், அவைகளை அதிக வட்டி வீதத்தில்தான் கழிவு செய்ய இயலும்—அதாவது, அவைகள் உண்டியல்களை முன்பு விற்றிருக்கக்கூடிய விலையைக் காட்டிலும் குறைந்ததொரு விலைக்கே விற்க இயலும். ஆகவே, அவைகளின் சொந்தக் கழிவு வீதங்களும், இவ்வதிகமான நஷ்டந்தரக்கூடிய ஆபத்தினைச் சமாளிக்கும்பொருட்டு அதிகரிக்கப்படும். மேலும், வர்த்தக பாங்குகள் (commercial banks) மரபொழுக்கமாகவே (conventionally) பாங்குவீதத்திற்கும் அவைகளே வைப்பாளிகளுக்கு (depositors) அளிக்கும் வட்டிவீதங்களுக்கும் அவைகள் அளிக்கும் கடன்களுக்கு வசூலிக்கும் வட்டி வீதத்திற்குமிடையே நிலையானதொரு தொடர்பினைக் (stable relationship) கடைப்பிடித்து வருகின்றன. ஆக, கழிவகங்கள் தாம் வாங்கியுள்ள நாள் தவணைக் கடன்களுக்கும் (loans at call) குறுங்காலக் கடன்களுக்கும் அதிகமான வட்டியினை அளிக்கவேண்டியுள்ளது — இது, உண்டியல் வீதங்கள் (bill rates) மேல்நோக்கிச் செல்வதற்கு மேற்கொண்டும் தாண்டும் ஒரு தூண்டுகோலாக (stimulus) உள்ளது. வணிகர்களுக்கும், (அவர்கள் வாங்கும் கடன்களுக்கும் மிகுபற்றுச் சீட்டுகளுக்கும்—overdrafts) அதிகமான வட்டிவீதம் வசூலிக்கப்படும். இது, கடன் வாங்குவதையே (உதாரணமாக, புதிய இயந்திரத் தொகுதிகளையும், ஆலைகளை வாங்குவதற்கும் அல்லது பண்டங்கள் கச்சாப் பொருள்களை இருப்பாக வைத்துக்கொள்வதற்கும்) மறைமுகமாகத் தடை செய்யும்.

அதேசமயத்தில், பாங்கானது, பிணையங்களை (securities) வெளி அங்காடியில் விற்பனை செய்வதன் மூலம் அதிகரித்துள்ள பாங்கு வீதத்தை இன்னும் உறுதிப்படுத்தும்; வெளி அங்காடி நடவடிக்கைகளை (open market operations) இன்னும் பயன்தரத்தக்கவையாக அமைக்கவேண்டுமென்று தான் கருதும்பட்சத்தில், வர்த்தக பாங்குகளினின்றும் சிறப்பு வைப்புகளைக் (special deposits) கோரும். ஏற்கெனவே நாம் பார்த்ததுபோன்று, இது ஒரு பிரச்சினைக்கு வழிகோலுவதாக இருக்கும். இது, வர்த்தக பாங்குகளின் ரொக்கக் காப்புகளைக் (cash reserves) குறையச் செய்யும். அவைகள் 8 சதவீத ரொக்கக் காப்புகளை அவசியம் வைத்திருக்க வேண்டுமாதலால், ரொக்கக் காப்புகள் எவ்வளவு [illegible] அந்த அளவைப் போன்று பன்னிரண்டு

மடங்கு வைப்புகளைக் குறைத்துக்கொள்ள கட்டாயப்படுத்தப் படும். வைப்புகளை, எவ்வாறு, அவைகள் குறைத்துக்கொள்ளும்? முதலாவதாக, பண அங்காடிக்குக் கடன்கள் கோரப்படும்; கழிவகங்கள் வர்த்தக பாங்குகளினின்றும் தாம் வாங்கியுள்ள கடன்களைத் திருப்பி அடைப்பதற்கு, தங்களது உண்டியல்கள் சிலவற்றை மறுகழிவு (re-discount) செய்யவேண்டிவரும். வர்த்தக பாங்குகள் கடனைத் தடைசெய்ய (restrict) முயலு மாதலால், கழிவகங்கள் உண்டியல்களை இங்கிலாந்து பாங்கிற்கு எடுத்துச் சென்று அங்கு மறுகழிவு (re-discount) செய்தே ரொக்கத்தைப் பெற இயலும்; இத்தகையதொரு நிலையினை 'அங்காடி, பாங்கியினுள் உள்ளது' (market in the Bank) எனக் கூறுவர். கழிவகங்கள், பாங்கு வீதத்தில் (Bank rate), உண்டியல் களை மறுகழிவு (re-discount) செய்யும்படி கட்டாயப்படுத்தப்படு வதும் அல்லது பாங்கு வீதத்தைக் காட்டிலும் ½ சதவீதம் அதிக மாகப் பிணையங்களை வைத்துக் கடன் வாங்கும்படியாகவும் நிர்ப்பந்தப்படுத்தப்படுவதும், இங்கிலாந்து பாங்கானது தனது பாங்கு வீதத்தைத் திறம்பட நிறைவேற்றியிருப்பதற்குச் சம மாகும். மேலும், பாங்குகள் வேறொரு வழியிலும் வைப்புகளைக் குறையச் செய்யக்கூடும்; அவைகள் உண்டியல்களை வாங்கா மலும், அவைகளிடமுள்ள பிணையங்களில் (securities) சிலவற்றை விற்பதனாலும் பிணையங்களின் விலைகளைக் குறையச் செய்தும், வட்டிவீதங்களை அதிகரிப்பதன் மூலம் தமது வைப்புகளைக் குறையச் செய்யக்கூடும். கடைசியாக, பாங்குகள் தாம் அளித் துள்ள கடன்களில் சிலவற்றைத் திரும்பக் கொடுக்குமாறு கேட்கக் கூடும்; கடன் பெறுபவர்களுக்குப் புதிய கடன்கள் எதனையும் அளிக்கத் தயங்கவும் கூடும். இவ் வழிகளின் மூலமும் வைப்பு களைக் குறைத்துக்கொள்ளக்கூடும். இதன் காரணமாகக் குறுங் கால, நெடுங்காலக் கடன்கள் மிகவும் செலவு மிக்கனவாகவும், பெறுவதற்குச் சிரமமாக இருத்தலாலும், கடனை எதிர்பார்த் திருக்கும் செலவினங்கள் (முதலீட்டுச் செலவில் பெரும்பகுதியும் கடனையே எதிர்பார்த்துளது) மறைமுகமாகத் தடுக்கப்படும்.

இவ்வாறு கடனளிப்பு குறைக்கப்படுவது பாங்குகள், பண அங்காடியில் மட்டுமே இருந்துவிடாது. பாங்குகளால் ஆதரவு அளிக்கப்படாத எதிர்காலக் கடன் பெறுபவர்கள் (would-be borrowers) தம்முடைய பிணையங்களை விற்றும் பணம் பெற வேண்டியிருத்தலால் பாங்குகள் அதிகமான பிணைய விற்பனையில்

ஈடுபடுகின்றன. இதன் காரணமாக, தற்போதுள்ள பிணையங்களின் விலைமட்டம் (price level) குறைவதுடன் அவைகளின் வருவாயும் அதிகரிக்கும். இது, புதிய வெளியீட்டு அங்காடியில் விளைவெதிர் விளைவை (reaction) உண்டுபண்ணும். பங்குமாற்றுச் சந்தையில் (Stock Exchange) வாங்கக்கூடிய பிணையங்களின் விலையைக் காட்டிலும் அதிக விலைகொடுத்து எவரும் ஒரு புதிய பிணையத்தை வாங்கமாட்டார்கள்; எனவே, நடப்பு புதிய வெளியீடுகளுக்கான வீதத்தை (the rate on current new issues) அதிகரித்தாக வேண்டும். மேலும், பிணையங்களின் விலை குறைந்து கொண்டிருக்கிற காலங்களில் புதிய வெளியீடுகளை (new issues) வாங்குவதற்கு வெளியீட்டகங்களும் (issuing houses) காப்புறுதி அளிப்பவர்களும் (under writers) அவ்வளவாக ஆதரிப்பதில்லை; புதிய வெளியீடுகளின் ஒரு பகுதியை விலை குறைவாகவுள்ள அங்காடியில் அவர்கள் கையில் ஒப்படைப்பது இன்னும் ஆபத்தானதாகும். புதிய மூலதன வெளியீடுகள், ஏற்பாடு செய்யப்படுவதற்குக் கடினமானவையாகவும், செலவு மிக்கனவாகவும் இருக்கும். வீடுகள், கட்டடங்கள் ஆகியவைகளின் தவணைக் கொள்முதல் சங்கங்கள் (hire purchase and building societies) போன்ற தேர்ச்சித் திறன் வாய்ந்த கடன் நிறுவனங்கள் (specialised institutions) அவைகள் வழங்கும் கடன்களைச் செலவு மிக்கனவாகவும், பெறுவதற்குக் கடினமானவையாயும் அமைத்துக் கொள்ளும். அவைகள் வழக்கமாகக் கடன் அளிக்கின்ற சாதனங்களைப் (resources) பெறுவதற்கு அதிக வீதங்களை (higher rates) அளித்தாக வேண்டும்; இந்த வீதங்கள் நடப்பு வீதங்களோடு போட்டியிடுவதற்குத் தகுந்தாற்போல் இருக்க வேண்டும். இத்தகைய அதிக வீதங்களை அளித்தலைச் சரிக்கட்டுமளவிற்கு அவைகள் விதிக்கும் வட்டிவீதங்கள் அதிகரிக்கப்பட வேண்டியதாக இருக்கும்; பொதுவாக, கடனளிப்பு குறையுமாதலால் அவைகளின் வாணிப அளவு (volume of their business) குறைக்கப்படும். பாங்குவீதத்தை அதிகரிக்கவும், இங்கிலாந்து பாங்கானது பிணையங்களை விற்பதை அதிகரிப்பதற்கும் காரணமாயிருக்கும் இந்த உத்வேகமானது (impulse) மூலதன அங்காடியின் வெளி ஓரங்களுக்கும் (outer fringes) சென்று பரவி கடன் முறை முழுவதையும் பாதிக்குமென்பதை நாம் நன்கறியக்கூடும். இந்த முறையானது எதிர்த்திசையில் (reverse directions) எவ்வாறு செயல்படுமென்பதனை எளிதாகவே உய்த்துணரக்கூடும்; பாங்குகள் பிணையங்களை வாங்குதலால் பாங்கு முறையிலுள்ள

ரொக்கக் காப்புகள் அதிகரிக்கப்பட்டு, அவை கடன்களை அதிகமாகத் தருவதற்குத் தூண்டுகோலாக இருக்கும். இதனால் கடன்கள் மலிவானவையாகவும் பெறுவதற்கு எளிதானவையாகவும் இருக்கும். பாங்குகள் தமது முதலீடுகளை அதிகப்படுத்துவதால் பிணையங்களின் விலைகள் (security prices) அதிகரிக்கும்; புதிய் வெளியீட்டங்காடியும் (the new issue market) ஊக்குவிக்கப்படும்.

4. பணக் கைக்கோளின் வினைத்திட்பம் (The Effectiveness of Monetary Policy)

இங்கிலாந்து பாங்கானது தனது ஆயுதங்களைக் கொண்டு பொருளாதார நடவடிக்கையை எவ்வாறு ஆளுகின்றதென்பது குறித்துப் பெரும் சர்ச்சை ஏற்பட்டு வந்துள்ளது. கோட்பாட்டளவில் பார்க்கப்போனால், பாங்கானது கடன் அளவினை (volume of credit) சுருக்கவோ அல்லது அதிகரிக்கவோ இயலுவதாகத்தான் காணப்படுகிறது. இவ்வாறு செய்ய இயலுவதன்மூலம் வட்டி வீதங்களின் மட்டத்தை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ அதனால் இயலக்கூடும். சுருக்கமாகக் கூறப்போனால், பொருளாதார நிலையில் விருப்பமான விளைவை அது இவ்வாயுதங்களின் துணைகொண்டு அடைந்துகொள்ள இயலும் என்றே கூறலாம். ஆனால், நடைமுறையில் பார்க்கப்போனால் பொருளாதார முறையைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு அதன் பணக் கைக்கோள் (monetary policy) உண்மையில் அதிகாரம் பெற்றுள்ளதா என்பதில் ஐயமே ஏற்படுகிறது. எளிதாகக் கூறுமிடத்து, இந்த ஐயங்கள் (doubts) முதலாவதாக பாங்கினுடைய கடன் அளவை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தையும் (the power of the Bank to regulate the volume of credit) இரண்டாவதாக, பொருளாதார நடவடிக்கையை (economic activity) ஆளுகின்ற சாதனமாகக் கடன் அளவில் ஏற்படும் மாற்றங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளமையையும் கூறலாம்.

முதலாவதாகக்கூறப்பட்ட பிரச்சினையில், பாங்கானது தான் விழையும் எந்த அளவிற்கும் கடனைச் சுருக்க (contract) இயலும் என்பதும், அதன் வழியாக அங்காடி வட்டி வீதங்களை (market interest rates) அது விரும்புகின்ற அளவிற்கு உயர்த்தமுடியும் என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. வர்த்தக பாங்கானது, தன் ரொக்க விகிதத்தில் ஏற்படும் குறைவினால், தனது மொத்த வைப்புகளைக் குறைத்துக்கொண்டே யாகவேண்டும்;

இது சம்பந்தப்பட்ட வகையில் அதற்கு எந்தவிதத் தெரிதல் (choice) செய்வதற்கும் இடமேயில்லை. பாங்குகள் ஓரளவிற்குப் பண அங்காடியில் கொடுத்துள்ள கடன்களைத் திரும்பப் பெறுவதன்மூலம், இழக்கும் ரொக்கத்தை ஈடு செய்ய முடியும்; கழிவங்காடியானது (discount market) இங்கிலாந்து பாங்கினிடம் கடன் பெற்றுக் கிடைக்கின்ற தொகைகளை பாங்குகளுக்கு அளிக்கும். ஆனால், இத்தகைய முறையானது, இங்கிலாந்து பாங்கானது தான் கொண்டுவந்த கடன் குறைப்பு கைக்கோளானது (credit contraction policy) செயலற்றுப்போனால் போகட்டும் என்று கருதுகின்ற வரையில்தான் நீடித்து இயங்கும்; கணிசமான அளவிற்கு பாங்கு வீதமானது அதிகரிக்கப்படுமானால் கழிவகங்கள் தாம் இங்கிலாந்து பாங்கினிடம் அதிகரித்த வட்டி வீதங்களில் கடன் வாங்குவதானது சீரழிவு தரவல்லதாக இருப்பதாகக் கருதி, தமது உண்டியல்களை முதிரும்படி விட்டு விட்டு, அவைகளை மீண்டும் புதுப்பித்துக்கொள்ளாமல் விட்டுவிடும். இந்த வழியில் கழிவகங்கள் பாங்குகளுக்குத் தாம் செலுத்தவேண்டிய கடன்கள் யாவற்றையும் திருப்பிக் கொடுத்துவிடும்; பாங்குகளும், இங்கிலாந்து பாங்கானது, தங்களது ரொக்கக் காப்புகளைக் (cash reserves) குறைப்பதைத் தடுப்பதென்பதும் இயலாத காரியமாக இருக்கும்.

மற்றுமொரு முக்கியப் பிரச்சினை இருந்தது. சிறப்பு வைப்புகள் முறை (special deposit scheme) புகுத்தப்பட்டது வரையிலும் வர்த்தக பாங்குகள் (commercial banks) தங்களது ரொக்கக் காப்புகள் குறைவடைதலை (decline of their cash reserves), தங்களது கைவசமுள்ள முதிருந்தறுவாயில் உள்ள கருவூல உண்டியல்களை (மீண்டும் புதுப்பித்துக்கொள்ளாமல்) ரொக்கமாக மாற்றிக் கொள்வதன்மூலம், தடுத்துக்கொள்ள முடியும். ஆயினும், இத்தகையதொரு சாத்தியக்கூறு (possibility) இப்போது இயலாத தொன்றாக உள்ளது. போதிய அளவில் சிறப்பு வைப்புகளைக் கோருவதன்மூலம் (by making sufficient calls for special deposits) இங்கிலாந்து பாங்கானது பாங்குகளின் நீர்மை விகிதத்தைக் (liquidity ratio) குறைந்தபட்சம் 30 சதவீதமாக இருக்கும்படி குறைப்பதுடன் மேற்கொண்டும் அவைகள் கருவூல உண்டியல்களை விற்பனை செய்வதையும் தடை செய்யும். இங்கிலாந்து பாங்கானது தற்போது, ரொக்க விகிதத்தைக் காட்டிலும் (cash ratio) நீர்மை விகிதத்தின் (liquidity ratio) மூலந்தான், உண்மையில்,

பாங்குமுறையை ஆளுகிறதென்று பலர் கூறுவர்; ஆனால், அதே சமயம் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேவேண்டும்—அடிப்படைத் தேவையான 8 சதவீத ரொக்க வீதத்தை வைத்துக்கொள்ளும் நோக்கத்தின் பொருட்டே ஏற்கெனவே பாங்குகள் அவைகளிடமுள்ள கருவூல உண்டியல்களைக் (Treasury Bills) குறைத்துக்கொள்வதில் ஈடுபட்டன.

ஆயினும், கடனளிப்பைப் பெருக்குவதில் (in expanding credit) இங்கிலாந்து பாங்கின் அதிகாரமானது வரம்புக்குட்பட்டே உள்ளது. அதனல், பாங்குகளின் ரொக்கக் காப்புகளை (cash reserves), அதிகரிக்கக்கூடும்; ஆனல், அதிகமான காப்புகளை வைத்துக்கொண்டு அதன்மூலம் நன்மையடையும்படி அவைகளை, அதனல் வற்புறுத்த இயலாது. இதைப்போன்றே, இங்கிலாந்து பாங்கானது அவைகளை நீர்மைச் சொத்துகளையும் அதிகரிக்க இயலும். தான் கோருகின்ற சிறப்புவைப்புகளின் (special deposits) அளவினைச் சுன்னமாகக் (zero) குறைத்துவிடுவதன்மூலம் அவைகளின் நீர்மைச் சொத்துகளை அதிகரிக்கவியலும். பாங்குகள், எதிர்காலப் பொருளாதார சூழ்நிலையானது சுபிட்சமற்றதாக இருக்குமெனக் கருதி, பிணையங்களை (securities) ஏற்பதற்கு முன்வராமலும் (unwilling to take up securities) அல்லது மேற்கொண்டு கடன்களை வழங்காமலும் இருப்பதன் காரணமாகத் தமது ரொக்கக் காப்புகளை அதிகரித்துக்கொள்ளுமானல், அந்த ரொக்கக் காப்புகளை மேற்கொண்டும் வைப்புகளை அதிகரிப்பதற்குப் பயன்படுத்துதல் கூடாதென்றும் நியதி இருந்து வந்தது. இதைப்போன்றே, பணத்தின் அளவு குறையாகச் செல்லச் செல்ல வட்டி வீதங்கள் அதிகரித்தாக வேண்டுமென்றும் நியதி இருப்பினும், அதனல், பண அளிப்பானது தொடர்ந்து பெருகும்போது வட்டி வீதங்கள் சுன்னமாகக் (zero) குறையவேண்டுமென்று பொருளாகாது. நீர்மை விருப்பத்தரக் கோடானது (liquidity preference) குறைந்த வட்டி வீதங்களில் (low interest rates) படம் 43-ல் உள்ளதுபோல் முற்றிலும் நெகிழ்வுள்ளதொன்ருகக் (perfectly elastic) காணப்படும். பிணையங்களின் விலையானது, அவைகளுக்கான அங்காடியானது அண்மையில் மிகவும் விலை குறையக்கூடும் என்று நம்பும் அளவிற்கு, அதிகரிக்கக்கூடும் (அதாவது, வட்டி வீதங்கள் மிகவும் குறைவாக இறங்கக்கூடும்). இத்தகையதொரு கருத்து நிலவுமானல், கடன் பெருக்கமானது பிணையங்கள் பெருமளவில் வாங்கப்படாமலும்

(பிணையங்களின் விலையான்து, பாங்குகள் அவற்றை வாங்குதலால், மேலும் அதிகரிக்குமாதலால்) பயன்படுத்தப்படாத ரொக்க இருப்புகள் பெருமளவில் மல்கியும் இருக்கும்.

இதுவே, முதல் ஆக்கத்திற்காக (capital formation) கடன் வாங்கும் வீதமானது (the rate of borrowing) பண நிலைகளில் ஏற்படுத்தும் மாற்றங்களின் விளைவுகள் (effects of changes in monetary conditions) விஷயத்திலும், உண்மையாக இருக்கிறது. கடன் சுருக்கமானது (credit contractions) வழக்கமாக விலையதிகரிப்புக் காலங்களிலும் (periods of rising prices) இலாபங்கள் ஏற்படுகின்ற காலங்களிலும் முயலப்படுவதால், அத்தகைய காலங்களில் தொழில் முயல்வோர்கள் (entrepreneurs) நம்பிக்கை மனப்பான்மையுடன் (optimistic) இருப்பார்களாதலால், வட்டி வீதத்தில் ஏற்படும் எந்த ஓர் அதிகரிப்பும், அவர்கள் கடன் வாங்குவதற்கு ஒரு தடைக் கல்லாக இருப்பதில்லை. ஆயினும், கடன் பெறுவதென்பது கடினமானதொரு செயலாக வளர்ந்து செல்லுமாயின், அதற்கேற்ப கடன் வாங்குதலும் குறைத்துக் கொள்ளப்படும். இப்போது இங்கிலாந்து பாங்கானது வர்த்தக பாங்குகளின் (commercial banks) ரொக்கக் காப்புகளை (cash reserves) குறைக்குமானால், வர்த்தக பாங்குகள் வைப்புகளைக் குறைத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கும்; இதன் காரணமாகக் கடன் தொகைக்கு வட்டி வீதம் எவ்வளவு அதிகமாக அளிக்கப்பட்டபோதும், தொழில்முயல்வோர்களால் (அவர்கள் எவ்வளவுதான் நம்பிக்கை மனப்பான்மையுடன் இருப்பினும்) நிதிகளைக் கடனாகப் பெற இயலாது.

மைய பாங்கின் கடன் பெருக்கக் கைக்கோளினால், இம்முறையானது எதிர்த் திசையில் செயல்பட ஆரம்பிக்கும்போது நிலைமை மீண்டும் சற்று வலிமை குறைந்ததாகக் காணப்படுகிறது. வணிக வாய்ப்புகள் (business prospects) மோசமாக இருக்கும்போது, கடன் தொகைகள் வட்டியின்றிக் கிடைப்பதாக இருப்பினும், தொழில் முயல்வோர்கள் கடன் வாங்க முன்வரமாட்டார்கள். புதிய நிறுவனங்கள் நஷ்ட வாய்ப்புகளை உடையனவாக இருக்கும்போது கடன் வாங்கி அவைகளை நிறுவுதலில் பொருளில்லை அல்லவா? பாங்குகளே கடனைப் பெருக்கமாக அளிக்க (to expand credit) முன்வரினும், இலட்சாதி இலட்சம் கடன் பெறுவோர் கடன் பெற முன்வரமாட்டார்கள்.

இங்கிலாந்து பாங்கானது, தனது பணக் கைக்கோளின் மூலம், பொருளாதார நடவடிக்கையை ஆட்சி செய்யும் அதிகாரத்தினை மதிப்பீடு செய்யும்போது, எச்சரிக்கையாக இருக்க வேண்டியதற்கான சில தகுந்த காரணங்கள் உள்ளன. மிக அதிகமான சுபிட்ச காலங்களிலும் (periods of extreme prosperity), மிக அதிகமான மந்த காலங்களிலும் (periods of extreme depression), ஐயங்கள் (doubts) வலுத்துக் காணப்படுகின்றன.[மிக அதிகமான சுபிட்ச காலங்களில் இலாப நம்பிக்கைகள் (profit expectations), மிக அதிகமாக இருக்கும் காரணத்தால் இத்தகைய நம்பிக்கைகள் மிக அதிகமான வட்டி வீதங்களாலும் தகர்க்கப்படுவதில்லை; இதுபோன்றே இலாபங்கள் வருவதற்கே வழியில்லை என்னும் சூழ்நிலையில், வட்டி வீதங்கள் குறைவாக இருப்பினும் (even if the interest rates are so low) முதலீடு செய்வது தவிர்க்கப்படும்.] ஆனால், இவைகள் யாவும் விதிவிலக்கான சூழ்நிலைகளே யாகும் (exceptional situations). பணக் கைக்கோளின் நோக்கம் முழுவதுமே இத்தகைய தீவிரமான நிலைகளை அடையு முன்னரே அவற்றிற்கான போக்குகளைத் (tendencies) திருத்தி அமைத்தலே யாகும். சுபிட்சத்தை அல்லது மந்தத்தை (boom or slump) நோக்கிச் செல்லும் போக்குகள், அவைகள் அவற்றை நோக்கி நெடுந்தூரம் செல்லு முன்னரே பணக் கைக்கோளின் சாதனம் பயன்படுத்தப்பட்டிருக்குமாயின், பணக் கைக்கோள் அதிக அளவில் பயனுறுதி அளிக்க வல்லதாக (effective) இருக்கும். அப்போதும், அதனுடைய சரிநுட்பமான சக்தியானது (precise power) விவாதத்திற்குரிய தொன்றுகவேயுள்ளது. ஆனால், மைய பாங்கானது தகுந்த நடவடிக்கையைச் சரியான நேரத்தில் எடுக்குமாளுல் (if taken in time)—இவ்வாறு நடவடிக்கை எடுப்பதென்பது சொல்லுதற்கு எளியது, செயல்படுவதற்கரியதாகும்—பொருளாதார நடவடிக்கைகள், விலைகள் ஆகியவற்றில் நிலைபேற்றினை (stability) ஏற்படுத்துவதில் முக்கியமான பங்கினை ஆற்றும் என்பதை ஒருவருமே மறுப்பதில்லை.

5. தேர்ந்தெடுத்த கடன் கட்டுப்பாடுகள் (Selective Credit Controls)

பணக் கைக்கோளிற்கு—பணக் கைக்கோள் என்பது கடன் அளவு முழுமையையும் சரிசெய்தலாகும் (adjustment)—அதிகாரம் இருக்கிறதா அல்லது இல்லையா என்னும் பிரச்சினை ஒருபுறமிருக்க, அது தனது செயலில் தாறுமாறாக (indiscriminate)

நடந்துகொள்கிறதென்று குறை கூறப்படுகிறது. பொதுவான கடன் தடையினுல் (credit restriction) எல்லாக் கடன் பெறுபவர் களுக்குமே (all borrowers), அவர்கள் கடன் பெற விழையும் திட்டங்களின் சமூக மதிப்பினைச் சற்றும் ஆராய்ந்து பாராமல், கடன் கொடுப்பது நிறுத்தப்படுகிறது. பணக் கைக்கோளானது, ஓர் உள்ளாட்சி மன்றமானது (local authority) நகரின் கழிசடைப் பகுதிகளைக் களைந்து (slums-clearance) நல்ல வீடுகளைக் கட்டித் தரும் திட்டத்திற்காகக் கடன் கோருவதற்கும் தொழில் முயல் வோர் ஒருவர் யூக பேர நோக்கத்துடன் வேட்டை நாய் ஓட்டப் பந்தயத்திற்குத் (greyhound racing) திடல் அமைக்கக் கடன் கோருவதற்கும் எவ்வித வேறுபாட்டினையும் காட்டுவதில்லை. ஆனுல், பகுத்தறிவு ஆராய்ச்சி அறிவினையுடைய மனிதர்கள் இவையிரண்டிற்கு மிடையேயுள்ள வேறுபாட்டினை (சமூகத்திற்கு எது நலம் பயக்கத்தக்கதென்பதனை) நன்கறிவர்.

பொதுவான கடன் கட்டுப்பாடானது (general credit control) கடன் வாங்குவோர்களிடையே எவ்வித பாரபட்சமும் காட்டுவ தில்லை என்று கூறுவதும் அத்துணை உண்மையானதாக இல்லை. பணக் கைக்கோள் செய்வதெல்லாம் நிதிகளின் மொத்த அளவைப் பெருக்குவதோ அல்லது குறைப்பதோ தவிர வேறில்லை; கடனளிகளுக்கிடையே வேறுபாடு காண்பிக்கும் வேலையினை அது தனிப்பட்ட பாங்கு மேலாளர்களுக்கும் (individual bank managers), நிதியகங்கள் (financial houses), முதலீட்டாளர்கள் (investors) இவர்களுக்கே கடன் பெருக்கக் காலத்தின்போது யாருக்கு அதிக நிதிகளை அளிக்கவேண்டு மென்றும், கடன் சுருக்கக் காலத்து (period of credit contraction) யாருக்குக் கடன் மறுக்கப்பட வேண்டுமென்பதுமான முடிவினை எடுக்கும் பொறுப்பினை விட்டுவிடுகிறது. இத்தகைய நபர்கள் (இவர்கள் மூலமே பணக் கைக்கோள் செயல்படுகின்றது) திட்டங் களுக்கு முதலிடம் கொடுக்கும்போது அதனுல் விளையும் சமூகப் பயன் இன்னதென்று கருதாமல் இருப்பர் எனவும் கூறுவதற் கில்லை. ஆனுல், அவர்கள் திட்டத்திலடங்கியுள்ள சமூகப் பயனைக் கருதுவதைக் காட்டிலும் அத் திட்டத்தினுல் கிடைக்கக்கூடிய இலாபத்தினையே பெரிதும் கருதி முதலிடம் அளிப்பர்.

இதன் காரணமாகவே, மேற்கத்திய நாடுகளில் தேர்ந் தெடுத்த கடன் கட்டுப்பாடுகள் (selective credit controls) என்

னும் திட்டம் உருவாகியது. இதன் விளைவாக, அரசாங்க மேலாண்மையாளர்கள் (authorities) குறிப்பிட்ட வகை நடவடிக்கைகளுக்குக் கடனளிப்பதை மட்டுப்படுத்த அல்லது அதிகரிப்பதற்கான அதிகாரங்களைப் பெற்றனர். இவ்வாறு அதி காரங்கள் அளிக்கப்பட்டதன் நோக்கம் யாதெனில், பொருளா தார முறையிலுள்ள பல்வேறு துறைகளையும் (sections) கட்டுப் படுத்துவதற்காகவேயாகும்—அதிலும் குறிப்பாக, இன்றியமை யாத முக்கியத்துவத்தையுடைய துறைகளைக் கட்டுப்படுத்து வதற்காகவேயாகும். உதாரணமாக, போர் சம்பந்தமான தொழில்கள் அல்லது ஏற்றுமதிக்கான தொழில்கள் அல்லது யூக பேர பூரிப்பு நிலைகளை (speculative booms) விலக்கிச் சீரான நிலையை உண்டுபண்ணும் தொழில்கள் ஆகியவற்றைக் கட்டுப் படுத்தும் நோக்கத்துடன்தான் இத்தகைய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன.

ஐக்கிய அரசாங்கத்தில் இத்தகைய கட்டுப்பாடுகள் (such controls) இரு திறப்பட்டவைகளாக இருந்தன. முதலாவது வகை தவணைக் கொள்முதல் (hire purchase) நடவடிக்கைகளை அவைகள் எந்தவிதமாகச் செயற்படுத்தப்பட வேண்டுமென் பதனை ஒழுங்குபடுத்துவதாகும். இத் தவணைக் கொள்முதலில் வாங்குவோர் முதற்கண் எவ்வளவு விகிதம் தொகையைக் கொடுத்துத் தவணையில் பெறவேண்டுமென்பதனையும், தவணைக் காலமானது எவ்வளவு இருக்கவேண்டுமென்பதனையும் வர்த்தக சபை (Board of Trade) ஒழுங்கு செய்யும். பொதுவாகத் தவணைக் கொள்முதலானது நுகர்வோரது நெடுவாழ்வுப் பண்டங்களான (durable consumer goods) கார்கள் (cars), மின்சாரக் கருவிகள் (electrical equipments), தட்டுமுட்டுச் சாமான்கள் (furnitures) ஆகியவற்றில்தான் பெரும்பாலும் நிகழுமாதலால், இத்தகைய ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களை (regulatory power) நுகர்வோர் செலவினை அவசியமான அளவிற்குக் கட்டுப்படுத்தும் நோக்கத் திற்குப் பயன்படுத்தலாம்.

தேர்ந்தெடுத்த ஒழுங்கு முறைகளில் இரண்டாவதும், மிக முக்கியமானதுமான ஒழுங்குமுறை, புதிய மூலதனத்தை எழுப்பு வதற்குக் கருவூலமானது பயன்படுத்தும் கட்டுப்பாட்டு முறை யாகும். இந்தக் கட்டுப்பாட்டு முறையின்படி, நிரந்தரமான தொரு மூலதன வெளியீட்டுக் குழு (Capital Issues Committee) ஒன்று நியமிக்கப்பட்டது. இப் புதிய வெளியீட்டங்காடியில்

(in the new issue market) £ 10,000-க்கு மேற்பட்ட மூல தனத்தைக் கோரும் விண்ணப்பங்கள் யாவும் மூலதன வெளியீட்டுக் குழுவிற்கே சமர்ப்பிக்கப்பட வேண்டும். குழுவானது அவ் விண்ணப்பம் கோரும் தொகையை அளிக்கலாம் அல்லது கூடாது என்பதுபற்றிக் கருவூலத்திற்குத் தனது உதவியுரையினை (advice) வழங்கலாம். குழுவின் தீர்மானங்கள், கருவூல வேந்தர் (Chancellor of the Exchequer) அதற்குக் காலந்தோறும் (periodically) அனுப்புகிற அறிக்கைகளின் அடிப்படையில்தான், குழுவினுல் முடிவு செய்யப்பட்டன. இவ்வறிக்கைகள், புதியதாக மூலதன வெளியீடுகள் அதிகரிக்கப்படவேண்டுமா அல்லது தடுக்கப்பட வேண்டுமா என்றும், எந்தத் தொழில்களுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டுமென்றும் கூறின. இவ்வறிக்கைகளின் நகல்கள் (copies of the memoranda) வர்த்தக பாங்குகளுக்கும் அனுப்பப்பட்டன. அவற்றில், பாங்குகள் கடன்களைக் கோரும் விண்ணப்பங்களைக் கடனளிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கும் போது, கருவூல வேந்தரின் கருத்துகளுக்கிணங்கவே, தேர்ந்தெடுக்கவேண்டுமென்ற கோரிக்கையும் அடங்கியிருந்தது. ஆயினும், 1959ஆம் ஆண்டிற்குப் பிறகு இக் கட்டுப்பாட்டு முறையானது (system of control) கைவிடப்பட்டுவிட்டது.

இவ் விதிமுறைகளின் செயல் முறையானது எவ்வாறு இருந்ததென்று 1959ஆம் ஆண்டின் ராட்கிளிஃப் அறிக்கையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தவணைக் கொள்முதல் நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், கட்டுப்பாடுகள் குறுங்காலத்தில் நிச்சயமாகப் பயனளிப்பனவாகவே இருந்தனவென்று குழு (committee) கருதியது. எதிர்மறை வழியில், ஆனுல், நன்மை பயப்பதாக இக் கட்டுப்பாடுகள் இருந்தனவென்று—அதாவது, பொதுவான கடன் கைக்கோள் ஒன்றினுல் (general credit policy) குறைக்கவோ (reduce) அல்லது தவிர்க்கப்படவோ (prevent) கூடிய ஒரு குறிப்பிட்ட துறைகளில் செலவிடப்படும் செலவினங்களை இக் கட்டுப்பாடுகள் குறைக்கவோ அல்லது தவிர்க்கவோ உறுதுணையாக இருந்தனவென்னும் கருத்தை குழு (committee) கொண்டிருந்தது. பொதுவான கடன் கைக்கோள் போன்றே இக் கட்டுப்பாடுகளும் பெருக்கத் துறைகளில் (expansionary directions) வலுவிழந்தே காணப்படுகின்றன. தவணைக் கொள்முதல்களில் இருந்த தடைகளை நீக்க இயலுவதல்லால் வேறு ஒன்றையும் அவைகளால் செய்ய இயலாது; நுகர்வோர்கள்

(consumers) தமது வாங்குந் திறனைக் (purchasing power) கொடாமல் வைத்துக்கொள்வதற்கே விழையும்போது தடைகள் (restrictions) இல்லையென்பதால் மட்டும் அவ் விழைவினைத் தடுத்து நிறுத்த முடியுமா ?

ராட்கிளிஃப் குழுவானது (Radcliffe Committee) இத்தகைய கட்டுப்பாடுகள்—அவைகள் தடை செய்யும் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும்போதும்—பணக் கைக்கோளின் நிரந்தரமான ஆயுதங்களாக இருப்பதற்குத் தகுதி வாய்ந்தன வாக இருக்குமா என்பதில் வெகுவான ஐயப்பாட்டினையே கொண்டுள்ளது. மேலும், அவைகள் தொழில்களின் ஒரு குறுகிய எல்லையில் மட்டுமே—குறிப்பாக, மோட்டார் கார், மின்சாரப் பொறியியல் (electrical engineering), தட்டுமுட்டுச் சாமான்கள் (furniture) ஆகியவற்றின் தொழில்களில் மட்டுமே—பயனளிப்ப தாகவுள்ளன. இவ்வொழுங்கு விதிகள் தொழில்களின் ஒரு சிறு பகுதியை மட்டுமே செறிந்து பாதிப்பனவாக இருக்கும்படி இயற்றப்பட்டுள்ளதால் அறமுறைக்கும் (equity) புறம்பானவை களாக இருக்கின்றனவே என்னும் கேள்விக்கு இடமளிப்பனவாக உள்ளன. எதிர்காலத்தில், இத்தகைய தொழில்களுக்கு விவேக மான திட்டம் தீட்டப்பட வேண்டுமென்னும் பிரச்சினையையும் இது எழுப்புகிறது—கட்டுப்பாடுகளின் தன்மையால் ஏற்படும் உடனடியானவையும் கொடூரமானவையுமான மாற்றங்களுக்கு இத் தொழில்கள் ஆளாகக்கூடுமாதலால், இவைகளில் எதிர் காலத்திற்கான விவேகமான திட்டம் இன்றியமையாததே. ஆனால், இத்தகைய திட்டம் தீட்டுதலில் உள்ள இடர்ப்பாடும் அளவிலாததாகவே இருக்கும். மேலும், இத்தகைய விதிமுறைகள் (measures) குறுங்காலத்திற்கு மட்டுமே பலனளிப்பனவாக இருக்குமென்று குழு கருதியது; தேவையானது (demand) நிரந்தர மாகக் குறைக்கப்படுவதைக் காட்டிலும் வேறுவழியில் திருப்பப் படும் அல்லது ஒத்தி வைக்கப்படும்; நாளடைவில் இந்த ஒழுங்கு விதிகளை ஏய்ப்பதற்கான பல்வேறு வழிமுறைகள் (devices) கண்டு பிடிக்கப்படுமாதலால் அரசாங்க மேலாண்மையாளர்களுக்கு ஒழுங்கு விதிகளின் நோக்கத்தை நிறைவேற்றுவதென்பதும் கடினமாகப்போகும். இன்னோரன்ன கருத்துகளைக் குழு கொண்டிருந்தது.

மூலதன வெளியீடுகளைக் கட்டுப்படுத்தும் வகையிலும் இவ் விதி முறைகள் அவ்வளவு நன்றாகச் செயற்படவில்லையென்பதே

குழுவின் கருத்து. கட்டுப்பாடுகள் (controls) மூலதன ஓட்டமானது (capital flow) செல்லும் திசையைப் (அதன் அளவைக் காட்டிலும்) பாதிப்பனவாக இருந்தமையால்—எந்த ஒரு குறிப்பிட்ட கால அளவிலும் மூலதன வெளியீடுகளுக்கு முழுவதும் தழுவியதொரு வரையறையெதுவும் (no overall limit) குறிப்பிடப்பட்டதில்லை—அங்காடியில் எழுப்பப்பெற்ற புதிய மூலதனத்தின் மொத்த ஓட்டமானது (total flow of new capital) முக்கியமான அளவில் பாதிக்கப்பட்டிருந்திருக்குமென்பதில் குழுவுக்கு ஐயமே இருந்தது, மற்றுமொரு விந்தையும் வேடிக்கையுமான நிகழ்ச்சி! கடன் பெற விரும்பியவர்கள், மூலதன வெளியீட்டுக் குழு தனது அறிக்கைகளில் குறிப்பிட்டிருந்த செயல் விதிகளுக்கு உட்பட்டவர்களாகத் தம்மைக் காட்டி (திறமை மிக்கவர்களைக் கொண்டு விதி முறைகளுக்கு ஏற்றவாறு விண்ணப்பங்களை எழுதி) லாவகமாகத் தமது விழைவினை நிறைவேற்றிக்கொள்வதும் எளிதாகவேயிருந்தது. ஈண்டும், காலச்சக்கரமானது (the passage of time) விதி முறையின் விளைவுகளை வலுவிழக்கச் செய்தது; கடன் பெறுவோர் (borrowers) சட்ட முறையாகப் புதிய வெளியீட்டு அங்காடியில் (the new issue market), பெரும்பாலும் வேறு மாற்று வழிகளில் (alternative ways) தமக்கு வேண்டிய நிதிகளைப் பெறலாயினர். இத்தகைய சூழ்நிலையில், இம் மாற்று வழிகளை அளிக்கவல்ல பல புதிய நிறுவனங்கள் (new institutions) தோன்றலாயின.

தவணைக் கொள்முதல் கட்டுப்பாடுகளையும், பாங்குக் கடன் அளவைக் கட்டுப்பாட்டுடன் சேர்ந்த புதிய மூலதன வெளியீடுகளுக்கு ஓர் அளவைக் கட்டுப்பாட்டையும் (a quantitatively-defined control over new capital issues) கொண்டுள்ள அதிகாரங்களை, ஒரு குறுங்கால 'அவசர' (emergency) விதிமுறைகளாக வைத்திருப்பதற்கே குழு பரிந்துரைத்தது; அவைகள் பணக் கைக்கோளின் நிரந்தரமான ஆயுதங்களாகப் (permanent weapons of monetary policy) பயன்படுத்தப்படுவதை குழு ஆதரிக்கவில்லை. ராட்கிளிஃப் குழுவின் கருத்துரைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் யாவற்றிலும் (to all selective controls) மற்ற நாடுகளிலுள்ள பல்வேறு வகையான தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு விதி முறைகளிலும்—மாற்றங்கள் தேவை என்னும் எண்ணத்தை உருவாக்கின. அவைகளின் விளைவு என்ன என்பதனைத் திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லையாயினும், குடிமக்களுக்கிடையே

அறமுறைப் (equity) பிரச்சினைகள் தோன்றுவதற்கு அவை காரணமாக இருந்தன. ஆனால், செயல்நுட்ப வளர்ச்சியாலும் (growth of techniques), விதிமுறைகளை ஏய்ப்பதற்கென்றே தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்களின் (institutions designed to circumvent) வளர்ச்சியாலும் மேற்கூறிய விளைவுகள் காலத்தால் நாளடைவில் அரிக்கப்பட்டுவிடுகின்றன; விதிமுறைகள் பயனுறுதியானவைகளாக இருப்பதற்குப் பல பகுதிகளைக்கொண்டதாயும் பரந்த எல்லையையுடையதாயுமானதொரு கட்டுப்பாட்டு நிலையம் தேவை என்பதை இது உணர்த்துகிறது. விதிமுறைகளின் பயன், அவ் விதிமுறைகள் இடைநிகழ்வானவையாயும் (occassional) அவசரகாலத்திற்கே உரிய சட்டங்களாகவும் மட்டும் பயன்படுத்தப்படுவதைப் பொறுத்தேயுள்ளது. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் (selective controls) முழுவதும் தழுவியதொரு கடன் கைக்கோளுடன் சேர்த்து (in conjunction with overall credit policy) செயல்படுத்தப்படும்போதே விரைவாகவும் பயனுள்ளவையாகவும் செயலாற்றுகின்றனவென்பதை அனுபவம் நமக்கு விளக்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் எதிர்காலத்தில் கைவிடப்படக் கூடாதென்பதற்குத் தகுந்தவாறு அவைகள் மதிப்பு வாய்ந்தனவாயிருந்தபோதிலும், பொதுப் பணக் கைக்கோளை (general monetary policy) ஒரேயடியாக மாற்றியமைப்பதைக் காட்டிலும் அதற்குத் தெம்பூட்டி வீரியப்படுத்தவே செய்கின்றன.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

'Radcliffe Report', Chs. I, II, VI and VII.

Newlyn, 'Theory of Money', Ch. XII.

Sayers, 'Modern Banking', Ch. II.

Macrae, 'The London Capital Market', Chs. XV—XIX, XXI—XXII.

T. Wilson (Ed.), 'Oxford Studies in the Price Mechanism' (Oxford University Press, London, 1951).

Nevin, 'The Mechanism of Cheap Money', Ch. IX.

மடல் VII

வேலைக் கோட்பாடு

(The Theory of Employment)

25. சேமிப்பும் முதலீடும்

(Savings and Investment)

1. தொகுப்புத் தேவையும் வேலையும் (Aggregate Demand and Employment)

விருப்பங்கள் (wants) எல்லையற்றுள்ளன; அவைகளை நிறைவேற்றவல்ல சாதனங்களோ எண்ணிக்கையில் வரையறுக்கப்பட்டனவாகவுள்ளன; இவ் வரையறுக்கப்பட்ட சாதனங்களைக் கொண்டுதான் விருப்பங்கள் திருப்தி செய்யப்படவேண்டும். இதுவே பொருளாதார உலகத்தின் இன்றியமையாத பிரச்சினையாக இருக்கிறது. இதனால் நமக்குத் தெளிவாவது யாதெனில், சமூகமானது தன்னிடமுள்ள ஆக்க சாதனங்களுக்குத் (productive resources) தகுந்த பயன்களைக் காண்பதில் எவ்வித இடர்ப்பாடும் இருக்காது என்பதேயாம். நிலம் (land), உழைப்பு (labours), மூலதனம் (capital), தொழில்துணிவு (enterprise) இவற்றின் அளிப்பு (supply) சமூகத்தில் எப்போது அதிகமாக இருக்குமெனில், அச் சமூகத்தில் மனிதர்களின் தேவைகள் யாவும் பூரணமாகத் திருப்தி செய்தாகிவிட்டது என்று சொல்லுமளவிற்கு அதன் செல்வம் (wealth) மங்கியிருக்குமானால், அப்போதுதான் இருக்கும். ஆனால், இத்தகையதொரு நிலை பொருளாதார உலகத்தில் எப்போதுமே ஏற்பட்டதில்லை; தற்காலத்தில் இத்தகையதொரு நிலையை, கற்பனையில் இருப்பதாகப் பாவிப்பதும் இயலாது. ஆயினும், முற்காலத்தில் பல சமயங்களில், சாதனங்களின்

அளிப்பு அதிகமாகவே இருந்துள்ளது; உற்பத்திக் காரணிகள் (factors of production) பல நீண்ட காலங்களில் பயன்படுத்தப் படாமலேயே இருந்துவந்துள்ளன; மனிதர்களும் இயந்திரங் களும் பயன்படுத்தப்படாமல் (அச் சமூகத்தில் ஏழ்மையும் தேவையும் எல்லையற்றிருந்தபோதிலும்) சோம்பியிருக்கும் நிலை இருந்துவந்தது. எந்தவிதமாகவோ பொருளாதாரப் பொறி (economic machine) உடைந்து பழுதடைந்திருந்தது, அல்லது தனது உள்ளபடியான திறனுக்கும் குறைவாக ஏதோ சற்று உற்பத்தியைச் செய்துகொண்டிருந்ததெனலாம். ஏன்?

இதற்கு ஒரு விடையினைத் தற்போது காண்போம். நிறைவுப் போட்டியுள்ளதோர் உலகத்தில் உற்பத்திக் காரணிகள் (factors of production) ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பெயர்ந்து செல்லும் தன்மையை—பெயர்ச்சியை (mobility)—பூரணமாக உடையனவாக இருக்குமென்பது கோட்பாட்டளவில் உண்மை யானதாக இருந்தபோதிலும், நடைமுறை உலகத்தில் சாதனங் களின் பெயர்ச்சியானது (mobility of resources) அத்துணை நிறை வானதாக (perfect) இல்லை. சோம்பல், அல்லது சரியான தகவ லின்மை (limited knowledge) இன்னோரன்ன நூற்றுக்கணக்கான காரணங்களில் எந்த ஒரு காரணத்தாலும் சீரழிகின்றதொரு தொழிலில் (in a declining industry) வேண்டப்படாத உழைப்பு (lobour), மூலதனம் (capital) இவை வளர்ந்துசெல்லும் தொழில் களால் உடனடியாக அமர்த்திக்கொள்ளப்படுவதில்லை — அத் தகையதொரு பெயர்ச்சியை நிலவியலான காரணிகள் (geo-graphical factors) தடுக்கக்கூடும்; அவைகளை வேண்டும் தொழில் களின் தேர்ச்சித்திறனுக்குத் தகுந்தவாறு தம்மை அமைத்துக் கொள்ளுவதற்கு நெடுங்காலம் ஆகலாம்; அல்லது அவைகளை அமர்த்திக்கொள்ளக்கூடிய தொழில் அதிபர்கள், அவைகளை ஏற்கெனவே வேலைக்கமர்த்தியிருக்கும் தொழிலானது தாற்காலிக மானதொரு சீர்குலைவினையே அடைந்துள்ளதென்று நம்புவதும் ஒரு காரணமாக இருக்கலாம். எனவே, வளர்ந்துசெல்லும் ஒரு பொருளாதார அமைப்பில், காரணிகளின் பெயர்ச்சியில் (factor mobility) நிறைகுறைவான நிலைகள் (imperfections) ஏதாவதொரு வகை வேலையின்மையைக் (some unemployments) கொண்டுவந்தே தீரும். தேன் பிழியச் செல்பவன் குளவி கொட்டுதலைப் பொறுத் துக்கொள்ளவேண்டும். அதுபோல, தொழில்நுணுக்க வளர்ச்சிப் பயன்களைப் பெறும்போது இவ்விடர்ப்பாட்டினைத் தாங்கிக் கொள்ளவேண்டும்.

இத்தகைய காரணங்களே, ஒரு குறிப்பிட்ட தொழிலில் அல்லது ஒரு குறிப்பிட்ட தொழிற் கூட்டத்தில் (group of industries) காரணிகளின் வேலையின்மைக்கு (unemployment of factors) விளக்கந் தருவனவாகவுள்ளன. ஆனால், பொருளாதார முறை முழுவதிலுமே தற்காலத்தில் அவ்வப்போது பரந்ததாயும் கொடூரமானதாயுமுள்ள வேலையின்மை ஏற்பட்டுவந்துள்ளது. இத்தகையதொரு வேலையின்மைக்கு ஒரு பண்டத்தின் தேவையானது மற்றொரு பண்டத்திற்கு இடம்மாறிச் செல்வது (shift in demand from one product to another) தகுந்த காரணமாகாது. தேவையின் பகிர்வில் ஏற்படும் மாற்றத்தால் ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டுமே வேலையின்மை ஏற்படும். ஆனால், தொகுப்பு (aggregate) அல்லது மொத்தத் தேவையில் ஏற்படும் (total demand) குறைவானது பொது வேலையின்மையை விளைவிக்கும். தொழில் முயல்வோன் தனது இறுதிநிலைச் செலவுகளும் (marginal costs)—பல்வேறு காரணிகளின் ஊதியங்கள்—இறுதிநிலை வருவாயும் (marginal revenue) சமமாக இருக்கும் புள்ளியை அடைகின்ற வரையிலும் காரணிகளை வேலைக்கமர்த்திக்கொண்டேயிருப்பார்—இதனை, விலை நிர்ணய ஆய்வின்போது பார்த்தோம். இறுதிநிலை வருவாய் குறையும்போதுமட்டில் (காரணிகளின் விலைகள் உடனடியாகவும் பொதுவாகவும் அதிகரித்தாலன்றி)—அதாவது, தனது பண்டத்திற்கான தேவைக்கோடு (demand curve) இடப் பக்கமாக இடம் மாறி அமையும்போது—நிலம், உழைப்பு, முதல் ஆகியவற்றிற்கான தனது தேவையை அவர் குறைத்துக்கொள்வார்.

தொழில் முயல்வோர்கள் முழுவதுமாக (entrepreneurs as a whole) தாம் வேலைக்கமர்த்தியுள்ள காரணிக்கான வருமானங்களை, கூலிகள் (wages), வாரம் (rent), வட்டி (interest) இவைகளின் வாயிலாக அளிக்கின்றனர். தங்களுக்கான வருமானங்களாக இலாபங்களைப் (profits) பெறுகின்றனர். இத்தகைய, நன்கு பழக்கமானதொரு முடிவினைப் பொதுமைப்படுத்துவதோடு பொருளாதார முறை முழுவதற்குமே பொருந்துமாறு செய்யலாம். மொத்த வருமானங்களின் சீரான இந்த ஓட்டத்தினால், ஒரு தொழில் முயல்வோருக்கும் மற்றொரு தொழில் முயல்வோருக்குமிடையே காரணிகளின் மறுபகிர்வு (a redistribution of factors) ஏற்படக் கூடும்; ஆனால், இது முழுவதும் தழுவியதொரு வேலை மட்டத்தினைச் (overall level of employment) சற்றும் பாதிக்காது. இக்

காரணிச் செலவுகளும் (factor-costs)—அதாவது, சமுதாயத்தில் பெறப்படுகிற வருமானங்கள், அல்லது நாட்டு வருமானம் (national income)—தொழில் முயல்வோர்கள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ததன்மூலம் கிடைக்கப்பெற்ற மொத்த வருவாயும் சமமாக இருந்தாகவேண்டும். பொருளின் விலையானது (price of the commodity) அதன் உற்பத்தியில் கிடைக்கப்பெறும் வருமானங்களுக்கு (incomes derived from its production) — இலாபங்கள் அல்லது நஷ்டங்களைச் சேர்த்து — அவசியம் சமமாக இருந்தாகவேண்டும். தொழில் முயல்வோர்கள் பெறுகின்ற மொத்த வருவாயானது (the total revenue received by the entrepreneurs), பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின்மீது செலவழிக்கப்பட்ட செலவிற்குச் ('தொகுப்புத் தேவை') சமமாக இருக்கவேண்டும். ஆக, தொகுப்புத் தேவையானது (aggregate demand) நாட்டு வருமானத்திற்குச் சமமாக இருக்கும்; தொகுப்புத் தேவை குறையும்போதுதான் காரணிகளின் பொதுவான வேலையின்மை (general unemployment of factors) நிகழக்கூடும்; இவ்வாறு தொகுப்புத் தேவையானது குறையும்போது அது தொழில் முயல்வோர்களின் இறுதிநிலை வருவாயை (marginal revenue) இறுதிநிலை உற்பத்திச் செலவிற்கும் (marginal cost) குறைவாக இருக்கும்படி செய்வதோடு தொழில் முயல்வோர்களை அவர்கள் வேலைக்கமர்த்தியுள்ள காரணிகளைக் குறைத்துக்கொள்ளும்படி செய்வதுடன், அதன் வழியாக உற்பத்தியையும் அவர்கள் குறைத்துக்கொள்ளும்படி செய்கிறது. காரணிகளின் நிறைகுறைவான பெயர்ச்சியுடன் சேர்ந்த பண்டங்களுக்கிடையேயுள்ள தேவையின் மறுபகிர்வானது (a redistribution of demand between commodities taken in conjunction with factor mobility) குறிப்பிட்ட தொழில்களில் வேலையின்மை ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கும்; தொகுப்புத் தேவையில் (aggregate demand) ஏற்படும் குறைவுமட்டுமே ஒரே சமயத்தில் பல தொழில்களில் வேலையின்மை ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கும்.

ஆக, தொகுப்புத் தேவையானது எந்த ஒரு சமயத்திலும் உற்பத்திக் காரணிகளுக்குச் செலுத்துவதற்கு எவ்வளவு தொகை தயாராக உள்ளது என்பதனை நிர்ணயிப்பதாக உள்ளது. இது, 18ஆம் அத்தியாயத்தில் கூறியுள்ளதை—அதாவது, நாட்டுச் செலவானது (national expenditure) நாட்டு வருமானத்திற்குச் (காரணிகளுக்குச் செலுத்தப்படும் மொத்தச் செலுத்துகள்)

சமமே என்பதனை வேறு வழியில் கூறுவதாகவேயுள்ளது. கடைசியில், ஒவ்வொரு வருமானத்தினின்றும் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு பென்னியும் (penny) உற்பத்தியின் ஆதாயத்திலிருந்தே (proceeds of production) கிடைக்கப்பெறுகிறது. ஒரு சமுதாயத்தின் செலவானது அதிகரிக்குமானால் அதன் மொத்த வருமானமும் அதிகரிக்கும்--அதன் மொத்த வருமானமானது, நடப்புக் காரணிகளின் விலைகளில் (கூலிகள், வாரம் முதலியவை) உற்பத்திக் காரணிகள் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதாலோ அல்லது ஏற்கெனவே எல்லா உற்பத்திக் காரணிகளும் பயன்படுத்தப் பட்டிருக்குமானால் காரணிகளின் வருமானங்கள் (factor incomes) அதிகரிப்பதாலோ, அதிகரிக்கும் இத்தகையதொரு நிலையில் பன்னாட்டு வாணிபமானது (international trade)—இது இந் நூலின் எட்டாம் பாகத்தில் ஆராயப்பட்டுள்ளது—பல சிக்கல்களை ஏற்படுத்துகிறது. ஆயினும், அது காரணிகளின் வருமானங்களாகச் செலுத்தப்படும் மொத்த அளவானது (the total amounts paid out as factor incomes) பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்தத் தேவையைப் பொறுத்திருக்கும் என்னும் அடிப்படையானதோர் உண்மையைப் பாதிப்பதாக இல்லை.

2. தொகுப்புத் தேவையின் உறுப்புகள் (The Components of Aggregate Demand)

உற்பத்திக் காரணிகளின் பணிகளுக்குத் தொழில்முயல்வோர்கள் (entrepreneurs) அளிக்க முன்வரும் தொகைகளைத் தீர்மானிப்பதில், ஒரு குறிப்பிட்ட கால அளவில், பண்டங்கள், பணிகள் ஆகியவற்றிற்குச் செலவிடப்படும் மொத்தச் செலவுத் தொகையானது முக்கியமான பணியினை ஆற்றுகிறது. காரணிகளின் விலைகளிலும் (factor prices) வேலை மட்டத்திலும் (level of employment) முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தும் தேவையில் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங்களை மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதற்குத் தொகுப்புத் தேவையைப் பல உறுப்புகளாகப் பிரித்து நுணுகி ஆராய்தல் அவசியமாகும்.

தொகுப்புத் தேவையினை மூன்று உறுப்புகளாகப் பிரிப்பது வழக்கம். நுகர்வோர்களின் செலவு (consumers' expenditure), முதலீட்டுச் செலவு (investment expenditure), அரசாங்கச் செலவு (government expenditure) என மூன்று வகையாகப் பிரிப்பது வழக்கமாகும். இவ்வாறு பிரிப்பதற்குக் காரணம் இந்த அகன்ற

தொகுதிகள் (broad groups) ஒவ்வொன்றுமே தனி வேறு வகைகளில் பாதிக்கப்படுபவையாக இருப்பதே. ஏற்றுமதிகள், இறக்குமதிகள் பிரச்சினையைத் தற்போது ஒதுக்கிவைத்துப் பார்ப்போமேயானல், பொருளாதார முறையில் ஏற்படும் செலவினங்களில் ஒவ்வோர் இனமும் (every item of expenditure) மேற்சொன்ன மூன்று தலைப்புகளில் ஏதாவது ஒன்றின்பாற்பட்டதாகவேயிருக்கும். கடைகளில் நாம் அன்றடம் வாங்குகின்ற உணவு, இன்னும் மற்ற உடை, புகையிலை, தட்டுமுட்டுச் சாமான்கள் (furniture) ஆகியவைகளுக்கான செலவுகளும், களியாட்டங்கள் (entertainments), சலவையகங்கள் (laundries), பயணம் (travel) முதலியவைகளுக்குச் செலுத்தும் செலுத்துகளும் (payments) நுகர்வோர்களின் செலவாகும் (consumers' expenditure); வேறு வழியில் கூறப்போனல், மக்கள், தாம் தனிப்பட்ட முறையில் செலவழிக்கும் யாவும் இத் தலைப்பின்கீழ் அமையும் எனக் கூறலாம். முதலீட்டுச் செலவென்பது (investment expenditure) தொழிற்சாலைகள் (factories), கப்பல் கட்டும் துறைகள் (shipyards), இயந்திரங்கள் (machines) போன்ற உற்பத்தியாளர்களின் ஆக்கப் பொருள்களுக்குச் செலவிடும் செலவினமென்பதனை ஈண்டு நினைவுபடுத்திக்கொள்ளுதல் வேண்டும். பிணையங்களை வாங்குதல் (the purchase of securities) அல்லது வீடுகள் போன்ற ஏற்கெனவே இருக்கின்ற சொத்துகளை (existing assets) வாங்குதல் ஆகியவைகளைச் சில சமயங்களில் முதலீடுகள் என்று சாதாரணப் பேச்சு வழக்கில் கூறுவதுண்டு; ஆனல், சமூகத்தின் முழுவதும் தழுவியதொரு பொருளாதார நடவடிக்கையை (over-all economic activity of the society) ஆராயும் பொருளாதார நிபுணர் இத்தகைய பேரங்களை (transactions) முதலீடாகக் கருதுவதில்லை. ஏனெனில், அவைகள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றப்படுகின்ற சொத்துகளாகையால், பொருளாதார முழுமைக்கும் பார்க்கும்போது அவைகள் ஒன்றையொன்று தள்ளுபடி செய்துகொள்ளும் (cancel out). அரசாங்கச் செலவினங்களைப் (Government expenditure) பற்றிப் பார்ப்போம்; இவை அரசாங்க மேலாண்மைகள் (government agencies), நாட்டிற்காகக் கொள்முதல் செய்யும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றுக்குச் செலவிடப்படும் செலவினங்களாகும்; உடல்நலம் (health), கல்வி போன்ற நலத்திட்டங்களை அளித்தல், போருக்குத் தேவையான ஆட்கள், தளவாடங்கள் இவற்றிற்கான செலவுகள், நாட்டின் சிவில் சிப்பந்திகளுக்கும் உள்ளாட்சி மன்றங்களின் சிவில்

சிப்பந்திகளுக்கும் ஊதியமளித்தல் இன்னோரன்ன செலவுகள் யாவும் அரசாங்கச் செலவின்பாற்படும்.

இந்த மூன்று இனங்களுமே உள்நாட்டுச் செலவாகும் (domestic expenditure). இச் செலவிலிருந்து இறக்குமதிகளின் நிகர செலவைக் (net expenditure on imports) கழித்து வரும் தொகையிலிருந்தே காரணிகளுக்கான வருமானங்கள் (factor-incomes) செலுத்தப்படுகின்றன. ஐக்கிய அரசாங்கத்தில் 1961ஆம் ஆண்டில் இருந்த இச் செலவினங்களின் அளவு (அங்காடி விலைகளில்) கீழே தரப்பட்டுள்ளது :

நாட்டு உற்பத்தியின் மொத்தம் (Gross national product)	=	நுகர்வோர்களின் செலவு	+	முதலீடு	+	அரசாங்கச் செலவு	+	நிகர ஏற்றுமதிகள்
(மில்லியன்)		(மில்லியன்)		(மில்லியன்)		(மில்லியன்)		(மில்லியன்)
£ 26,740	=	£ 17,330	+	£ 4,800	+	£ 4,570	+	£ 40

மூன்றாவது வகையான செலவினத்தை ஆராய்வோம். இதனைப்பற்றி ஏற்கெனவே 19ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளதைக் காட்டிலும் அதிகம் ஒன்றும் கூறத் தேவையில்லை. இந்தச் செலவினமானது பொருளாதாரக் காரணிகளைக் காட்டிலும் அரசியல் காரணிகளால்தான் பெரிதும் தீர்மானிக்கப் படுகின்றன. இதன் அளவானது அரசாங்க நடவடிக்கையின் எல்லைப் போருக்கான தேவைகள் (defence requirements), சிவில் பணிகளின் அளவு முதலியவற்றைப் பொறுத்திருக்கும். தற்காலத்தில், தனியார் துறையில் செய்யப்படும் செலவுகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைச் சரிசெய்யக்கூடிய சக்தி அரசாங்கச் செலவின் உள்ளார்ந்த சக்தியே என்று வலியுறுத்தப்படுகிறது. அத்தியாயம் 27-ல் இதனைப்பற்றி நெடிது ஆராய்வோம். தற்சமயத்திற்கு, இதனை மொத்தச் செலவினங்களில் ஒரு கூறுகக் கருதுவதுடன் அமைவோம்; இக் கூறுனது (element) பொருளாதார நோக்கங்களைக் காட்டிலும் அரசியல் நோக்கங்களுக்கு ஏற்றவாறே மாற்றமடைவதாக (varies) உள்ளது. மேலும், ஒவ்வோர் ஆண்டிலும் இச் செலவினமே நிலைபேறுடையதாகவும் (stable) உள்ளது. ஏற்றுமதிகள் இறக்குமதிகள் பிரச்சினையையும் தற்சமயத்திற்கு சற்றுத் தள்ளிவைப்போம். தொகுப்புத் தேவையின் முக்கிய உறுபொருள்களானவையும் முற்றிலும் பொருளாதாரத் தன்மை வாய்ந்தவையுமான நுகர்வோர்கள் செலவு

(consumers' expenditure), முதலீடு (investment) என்பனவற்றை ஆழ்ந்து ஆராயலாம். வேலை மட்டத்திலும் காரணிகளின் வருமானங்களிலும் (factor incomes) ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கு (இத்தகைய ஏற்ற இறக்கங்கள் நவீன பொருளாதார முறையில் ஒரு முக்கிய அம்சமாக இருக்கின்றன) மேற்சொல்லப்பட்ட இரண்டிலும் அல்லது ஒன்றில் ஏற்படும் போக்குகள் (movements in one or both) காரணமாக இருக்கக்கூடுமா ?

3. நுகர்ச்சி நடத்தை (Consumption behaviour)

நுகர்வோரொருவர் கொடுக்கப்பட்டுள்ளதொரு வருமானத்தை எவ்வாறு பல்வேறு பண்டங்கள், பணிகள் ஆகியவைகளுக்கிடையே பகிர்வு செய்து செலவிடுகிறாரென்பதனை இந் நூலின் பெரும்பகுதியும் ஆய்வதாக உள்ளது. ஆயினும், தொகுப்புத் தேவையின் ஒரு கூறாக (an element in aggregate demand) நுகர்வோரது செலவினை ஆராயும்போது, பொருளாதார நிபுணர், பல்வேறு பொருள்களுக்கிடையே மொத்தச் செலவினை எப்படிப் பகிர்வு செய்வது என்பதைக் காட்டிலும், மக்கள் செலவிடுகின்ற மொத்தச் செலவுத் தொகையைத் (total amount which people spend) தீர்மானிக்கும் காரணிகளைப்பற்றிய பிரச்சினையைச் சமாளிக்கவேண்டியுள்ளது.

3. இவற்றுள், முதலாவதும் தெற்றென விளங்குவதுமான காரணி, நபரால் (person) பெறப்படும் வருமானமாகும். பெரும்பாலான மக்களுக்குத் தற்போது அவர்கள் செலவு செய்வதைக் காட்டிலும் அதிகமான செலவு இருக்கக்கூடும். ஆனால், அவர்களின் வருமானம் வரையறுக்கப்பட்டுள்ளதானது அவ்வாறு அவர்களைச் செலவு செய்ய இயலாதபடி கட்டுப்படுத்துகின்றது. ஒருவரின் வருமானம் அதிகரிக்குமானால், அவர் வாங்குகின்ற பண்டங்கள், பணிகள் (goods and services) ஆகியவற்றின் அளவும் அனேகமாக எப்போதும் அதிகரித்தே செல்லும்; அவருக்கு வருமானம் குறையுமானால் குறைத்துச் செலவு செய்யவேண்டிய நிலை ஏற்படும். இரண்டாவதாகவுள்ள காரணி, நுகர்வோர்களது சிக்கனத்தன்மையாகும் (thriftiness) ; பொதுவாக இதனை சேமிப்பு நாட்டம் (propensity to save) எனக் கூறுவர். இது வருமானத்தின் ஒரு பகுதி சேமிக்கப்படுவதை விளக்குவதாகவுள்ளது. சேமிப்பு நாட்டத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் பல உண்டு. உதாரணமாக, தற்காலத்திய தேவைகளைக் (present

needs) காட்டிலும் எதிர்காலத் தேவைகளுக்கே சிறப்பிடம் கொடுக்கப்படலாம்; அவசரச் செலவுகளைச் சமாளிக்கும் நிமித்தம் சாதனங்களைச் சேமித்து வைக்க விருப்பம் ஏற்படலாம்; பிணையங்களை (securities) வாங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் நிதிகள் ஈட்டக்கூடிய வட்டியின் கவர்ச்சியும் காரணமாக (the attraction of the interest) இருக்கலாம். தன்னை நம்பி வாழ்வோர்களுக்கு சேமித்து வைக்கவேண்டும் என்றும் விருப்பம் இருக்கலாம். இன்னோரன்ன காரணங்கள் யாவும் சேமிப்பு நாட்டத்தை (the propensity to save) வளர்ப்பனவாகவுள்ளன.

சேமிப்பு நாட்டத்தைத் (propensity to save) தீர்மானிப்பதற்கு நபரின் வருமானமும் ஒரு காரணியாக இருக்கிறது. மக்கள் ஏழைகளாக இருக்கும்போது அவர்களால் மிகமிக இன்றியமையாத தேவைகளை மட்டுமே வாங்க இயலும்; இந் நிலையில் அவர்களால் சேமிக்கவே முடியாது; தம்மிடமுள்ள சொத்து முழுவதும் தம்முடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ளுமளவிற்கே பயன்படுவதாகவுள்ளது. ஆயினும், வருமானம் அதிகரிக்கும்போது உடனடியான தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள இயலும்; இதில் ஒரு பகுதி வாழ்க்கையை வசதியாக வைத்திருக்கக்கூடியனவும், ஆனால், அவ்வளவு இன்றியமையாதனவாக இல்லாமலும் உள்ள பொருள்களை வாங்கி மகிழ்வதற்குப் பயன்படுத்தப்படலாம். இந் நிலையில் ஒருவருக்கு சேமிப்பதென்பது, குறைந்தபட்சம், இயலுகின்றதொரு காரியமாகவாவது இருக்கும்; நிறைவேற்றப்படாத உடனடியான தேவைகள் குறைந்துகொண்டே செல்லும்; இதனால் சேமித்தலில் குறைந்த அளவு தியாகமே தேவைப்படுவதாக இருக்கும். ஒருவர் மிகப் பணக்காரராக இருப்பின், அவருக்கு, மிக அதிக வீதத்தில் சேமிப்பு செய்வதைத் தவிர்த்தல் (avoid) என்பது மிகக் கடினமான செயலாக இருக்கும்; ஒருவர், சாப்பிடக்கூடிய சாப்பாடுகளின் (meals) அல்லது அவர் அணிந்துகொள்ளக் கூடிய உடைகள், அவர் வாழக்கூடிய வீடுகள் இவற்றின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் இருக்கமுடியாது. ஒரு பொது முடிவாக (as a general conclusion) வருமானம் அதிகரிக்கும்போது (as the income rises) சேமிப்பு நாட்டமும் (அதாவது, சேமிக்கப்படுகின்ற வருமானத்தின் ஒரு சிறு பகுதி) அதிகரிக்கும். இதனை வேறு வழியிற் கூறுவோமானால், இறுதிநிலை நுகர்ச்சி நாட்டமானது (marginal propensity to consume)—நுகர்

வோர் பொருள்களை (consumer goods) வாங்குவதற்காக ஒதுக்கப் படும் வருமான உயர்வுப்படிகளின் விகிதமானது (the proportion of increments of income)—வருமானம் அதிகரித்துச் செல்லச் செல்லக் குறைந்துகொண்டே செல்லும். ஒருவர் செல்வந்தராக வளர வளர, அவர் வருமானத்திற்குக் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு கூடுதல் வருமானத்திலும் செலவழிக்கப்படும் சிறு பகுதி (fraction) குறைந்துகொண்டே செல்லும். அவருடைய வருமானமானது அதிகரித்துச் செல்லச்செல்ல அவருடைய சராசரி சேமிப்பு நாட்டமானது (average propensity to consume)—மொத்த வருமானத்தின் ஒரு விகிதமாகவுள்ள நுகர்வோர் பண்டங்கள்மீது செலவழிக்கப்படும் மொத்தச் செலவு—நிச்சயம் குறைந்து கொண்டே செல்லும்; ஆனால் அது, இறுதிநிலை சேமிப்பு நாட்டத்தைக் காட்டிலும் குறைந்த வேகத்தில்தான் குறைந்து செல்லும். இது ஒரு குறிப்பிட்ட நபரின் விவகாரத்தில் வேண்டுமானால் நிகழாமல் இருக்கலாம்; ஆனால், பொதுவாக இவ் விதி செயல்படத்தக்கதொன்றாகவே உளது.

வருமானங்களின் மட்டம் (the level of incomes) நிலையானதாக இருக்கின்றவரையிலும் நுகர்வோர் செலவானது (consumer expenditure) முக்கியமான ஏற்ற இறக்கம் எதனையும் அடைவது சாத்தியமில்லை என்றே கூறலாம். மனிதர்கள் பழக்கம் (habit) என்பதற்கு அடிமைகளாக இருக்கின்ற காரணத்தால் குறிப்பிட்ட நுகர்ச்சித் தரங்களுக்கும் நுகர்ச்சிப் பாணிகளுக்கும் (standards and patterns of consumption) பழக்கப்பட்டுவிடுகின்றனர். சேமிப்பு நாட்டமானது (propensity to save) குறுங் காலத்தில் கணிசமான அளவிற்கு, தனி வகையான காரணங்களால் (special causes)—போர்க்காலங்களில் செய்யப்படும் சேமிப்புத் திட்ட நடவடிக்கைகளால் அதிக சேமிப்பு ஏற்படும்; மாறாக, போருக்குப் பிந்திய ஆண்டுகளில் தோன்றிய தொலைக் காட்சிப் பெட்டிகளால் (television sets) சேமிப்பு குறைந்தது—மாறக்கூடுமெனினும், இம் மாற்றங்கள் விதிவிலக்கானவையாகவே இருக்கும். வருமானங்கள் நிலையானவைகளாக இருக்கும் பட்சத்தில், பொதுவாக நுகர்வோர் செலவு மட்டமும் (consumer expenditure) நிலையானதாக (constant) இருக்கும். சாதனங்கள் வேலைக்கமர்த்திக்கொள்ளப்படாமையை (unemployment of resources) விளைவிக்கும் தொகுப்புத் தேவையில் ஏற்படும் தன்னியல்பான ஏற்ற இறக்கங்களை (independent fluctuations) நாம் ஆராய்ந்தாக வேண்டும்; நுகர்வோர் செலவில் ஏற்படும்

மாற்றமானது இத்தகைய ஏற்ற இறக்கங்களின் விளைவாக (effect) இருக்குமே தவிர (வேலையின்றி இருப்பவர்கள் தமது செலவினைக் குறைத்துக்கொள்வதால்) அவைகளுக்கான காரணமாக (cause) இருப்பதில்லை.

இதுவரையிலும் தனிநபர்களின் சேமிப்புபற்றியே ஆராய்ந்து வந்தோம். வணிக சேமிப்பு (business saving) என்பதும் ஒரு நவீன பொருளாதார அமைப்பில் முக்கியம் வாய்ந்ததொரு பகுதியாகும். வணிக சேமிப்பென்பது இலாபத்தினை பங்குதாரர்களுக்குப் பகிர்வு செய்து தராமல் அவற்றைசேமித்து வைத்தலாகும். வணிக சேமிப்பினை ஆழமாக ஆராய்ந்துபார்க்கும்போது இம் முடிவுகளே தோன்றுகின்றன. கம்பெனிகள் இலாபங்களைச் சேமித்துவைப்பதற்கு முதன்மையான காரணம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அவசரத் தேவைகளைச் (emergencies) சமாளிக்கும்பொருட்டு ஒரு காப்பு நிதியை (reserve) ஏற்படுத்துவதற்காகவாகும். கம்பெனிக்கு நஷ்ட காலங்கள் ஏற்படும்போது அவற்றைச் சமாளிக்கவும், எதிர்பாராத முதலீடுகளைச் செய்யவேண்டி நேர்ந்தால் அவற்றைச் செய்யவும், அல்லது வணிகத்தை மேற்கொண்டும் பெருக்குவதற்காக முதலீடு செய்யும்பொருட்டும் இத்தகையதொரு காப்பு நிதி சேமித்து வைத்துக்கொள்ளப்படுகிறது. இவ்வகைகளில், கம்பெனியின் நடைமுறைகளும் கைக்கோள்களும் உடனடியாக அல்லது அடிக்கடி மாறுவதில்லை. கம்பெனிகள் ஏறக்குறைய ஒரு நிலையான மட்டத்தில் (a fairly stable level of profits) இலாபங்களை ஈட்டிக்கொண்டிருக்கின்ற வரையிலும், அவைகளின் சேமிப்பு வீதத்தில் (the rate of saving), ஒன்று அல்லது இரண்டாண்டு காலத்திற்குள், பெரிய வேறுபாடுகள் ஏற்பட்டுவிடுவதில்லை. வணிக சேமிப்பு (business saving), விலைகள் இலாபங்களின் மட்டங்களில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாகத்தான் பெரும்பாலும் ஏற்ற இறக்கத்தையுடையதாக இருக்கும்; ஆனல், இத்தகைய மாற்றங்களுக்கு வணிக சேமிப்பானது தன்னுரிமையானதொரு (an independent) காரணமாக இருக்க முடியாது.

4. முதலீட்டைத் தீர்மானிப்பவைகள் (The Determinants of Investment)

தொழில் முயல்வோர்கள் தாம் முதலீடு செய்வது சம்பந்தமான முடிவுகளை எடுப்பதற்கு வழிகாட்டியாக இருக்கும் காரணி

களின் ஆய்வானது நமக்கு உணர்த்துவது யாதெனில், தொகுப்புத் தேவையிலுள்ள இந்த உறுபொருளானது (element) நுகர்வோரின் பழக்கம் (habit), நடவடிக்கையின் மரபு இவைகளோடு ஒப்பிடும் போது நிலைபேற்றினை அளிக்கவல்லதோர் உறுபொருளாக இல்லையென்பதனை உணர்த்துகிறது. மற்ற உற்பத்தி நடவடிக்கைகளைப் போன்றே, தொழில் முயல்வோரானவர் (entrepreneur) புதியதொரு மூலதனச் சாதனத்தை (new capital equipment) எப்போது வாங்குவாரெனில், அச் சாதனத்தினின்றும் அவர் பெறலாமென எதிர்பார்க்கக்கூடிய வருவாயானது (revenue), குறைந்தபட்சம் அதன் உற்பத்திச் செலவிற்கு (cost of production) சமமாகவாவது இருக்கும்போதுதான் வாங்குவார். ஒரு முதலீட்டுத் திட்டத்தில் (investment project) எதிர்பார்க்கப்படும் இலாபத்தில் ஏற்படும் உடனடியான மாற்றத்தாலோ அல்லது அதன் செலவில் ஏற்படும் மாற்றத்தாலோ தொழில் முயல்வோர், முன்னர் கவர்ச்சியாக இருந்த அத் திட்டத்தைக் கைவிடவேண்டி வரும், அல்லது மாறாக (conversely), முன்னர் சிக்கன நலனற்றது என்று கருதப்பட்ட முதலீட்டுத் திட்டத்தைத் தற்போதைய மாற்றத்தால் சிறந்ததாக இருக்கக்கூடுமெனக் கருதப்பட்டு, திட்டத்தை மேற்கொண்டும் நிறைவேற்றிச் செல்ல முடிவு எடுக்க நேரிடும். இத்தகைய உடனடியான மாற்றங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன ?

செலவுப் பகுதியில் (on the cost side) முக்கியமான இனங்களாக இருப்பவை, சொத்தினை வாங்கும் அல்லது அமைக்கும் செலவும் (the cost of purchasing or constructing the asset itself), அதில் முடக்கப்பட்டுள்ள நிதிகளுக்குச் செலுத்தப்படும் விலையுமாகும். முன்னர் கூறியுள்ள இனமாகிய உற்பத்தியின் பருப்பொருளியலான செலவுகள் (the physical costs of production) குறுங்காலத்தில், மற்றப்பண்டங்களில் ஏற்படுவதைப்போலன்றி, மாற்றம் எதுவும் அடைவதில்லை. ஆயினும்,—முதற்கருவிப் பொருள்களுக்கான தேவையில் ஏற்படும் ஊசலாட்டங்கள் (oscillations in the demand for capital goods) சில சமயங்களில் அவைகளின் விலைகளில் கணிசமான அளவிற்கு விளைவுகளை ஏற்படுத்துவதாகவேயுள்ளது. மேலும், நிதிகளின் விலையில், அதாவது, வட்டி வீதத்தில்—ஏற்படக்கூடிய மாற்றங்களும் முக்கியம் வாய்ந்தனவாகவுள்ளன. உதாரணமாக, ஒரு தொழில் முயல்வோன் ஓர் இயந்திரத்தை வாங்குகின்றாரெனக் கொள்

வோம்; அவர் அதனை வாங்குவதற்கான தொகையைக் கடனுகப் பெறுகின்முரெனில், கடன் கொடுப்பவருக்கு நடப்பு வட்டி வீதத்தில் வட்டி செலுத்தவேண்டும் [அதாவது, £ 1,000 ரொக்கத்தைக்கொண்ட நீர்மையை (liquidity) அவர் தியாகம் செய்வதற்கான ஊதியத்தைக் (reward) கொடுக்கவேண்டும்]. தொழில் முயல்வோன் தனது சொந்தப் பணத்தைப் போட்டு அந்த இயந்திரத்தை வாங்கியிருப்பினும், நடப்பு வட்டிவீதத்தில் வட்டி உற்பத்திச் செலவின் ஒரு பகுதியாகக் கணக்கிடவேண்டும். அவர் அந்த £ 1,000-ஐக் கொண்டு, இயந்திரத்தை வாங்குவதற்குப் பதிலாகப் பிணையங்களை (securities) வாங்கியிருந்திருப்பாராகில், ஓர் ஆதாயத்தை அடையக்கூடும்; எனவே, இவ் வட்டி இழப்பும் இயந்திரத்திற்காக அவர் செலுத்தும் விலையின் ஒரு பகுதியாகும். நாம் ஏற்கெனவே 24ஆம் அத்தியாயத்தில் பார்த்ததுபோல், குறுங்காலங்களில் (short periods) வட்டிவீதங்களில் முக்கியமான மாற்றங்கள் ஏற்படவே செய்கின்றன; உண்மையில், பண மேலாண்மையாளர்கள் அடிக்கடி, வேண்டுமென்றே, மாற்றங்களைக் கொணர்கின்றனர். ஆகவே, முதலீட்டுச் செலவில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் (sudden variations) காரணமாக முதலீட்டில் (investment) ஏற்ற இறக்கங்கள் (fluctuations) ஏற்படக்கூடும்.

முதலீட்டினைத் தீர்மானிப்பவைகளில் இன்னும் மற்றப் பெரிய தீர்மானிக்கும் காரணிகளில் அதிகமான நிலைபேறற்ற தன்மையை (greater instability) எதிர்பார்க்கலாம்—எந்த ஒரு முதலீட்டுத் திட்டத்தினின்றும் கிடைக்கக்கூடுமென்று எதிர்பார்க்கக்கூடிய வருவாயினை (revenue attributable to any given investment project) முதலீட்டின் இறுதிநிலைத் திறன் (marginal efficiency of capital) எனக் கூறுவது வழக்கம். ஓர் ஆலை அல்லது இயந்திரமானது அதனுடைய உதவியின்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் வழியாகக் கிடைக்கும் வருவாயினைப் (revenue) பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அளித்துக்கொண்டேயிருக்கும். தொழில் முயல்வோன் தனது முதற்கருவிப் பொருள்களில் கூடுதலாக இணைத்துள்ள ஒரு சாதனத்தினுல் (equipment) கிடைக்கக்கூடிய கூடுதல் வரவுகளை (extra receipts) கணக்கிடவேண்டுமானுல், கணிசமான அளவிற்குத் தொலைவுள்ள எதிர்கால ஆண்டுகள் வரை பொறுத்திருந்தே கணக்கிட இயலும்; ஏனெனில், வரவுகள் சில சமயங்களில் பல ஆண்டுகள் கழிந்தே

கிடைக்கக்கூடும். முதற்கருவிப் பொருள்கள் (capital goods) அவைகளின் செலவைச் சரிக்கட்டுமளவிற்குப் போதிய வருவாயை, இரண்டு அல்லது மூன்ருண்டுகால அளவிற்குள் அளிப்பது என்பது மிக அருமையாகும். மின்நிலையங்கள் (generating stations) அல்லது எஃகு ஆலைகள் (steel mills) போன்ற 'கனரக' முதற்கருவிப் பொருள்கள் (heavy capital goods) அவைகளின் செலவைச் சரிக்கட்டுமளவிற்குப் போதிய வருவாயை ஈட்டுவதற்கு இருபது அல்லது முப்பது ஆண்டுகளாவது ஆகும். மற்ருெரு நிலையினை ஆராய்வோம். இரண்டு அல்லது மூன்ருண்டு கால அளவிலும் தொழில் முயல்வோரின் எண்ணத்தைப் பொய்ப்பிக்குமளவிற்குப் பல பெரிய நிகழ்ச்சிகளும் ஏற்படுவதுண்டு; சம்பந்தப்பட்ட பொருளுக்கான அங்காடியைப் பாழ்படுத்துமளவிற்குத் தேவையில் (demand) மாற்றம் ஏற்படலாம்; எதிர்பாராத விதமாகப் புதியப் போட்டியாளர்கள் (new competitors) அங்காடியில் உட்புகுதல் கூடும்; நடப்பில் மிக நவீன இயந்திரமென்று கருதப்படுமொன்றைத் தொழில் நுணுக்க வளர்ச்சியானது (technological developments) ஒரே நாளில் வழக்கற்றதாகவும் பழைமையானதாகவும் செய்துவிடக்கூடும். எனவே, தொழில் முயல்வோர்களின் எதிர்பார்த்தலானது (expectations) தெளிவற்றதாகவும் (vague) மிகவும் யூகபேரத் தன்மை வாய்ந்ததாகவும் (speculative) உள்ளது. ஒரு நிகழ்ச்சியானது (உதாரணமாக, ஒரு போட்டியாளரின் வீழ்ச்சி, ஒரு புதிய பழக்கம், தாற்காலிகமான தொரு விலையிறக்கம் முதலியன) எதிர்நோக்குகளில் (expectations) பரந்த மாற்றத்தை ஏற்படுத்துவதன் காரணமாகப் புதிய முதலீட்டிலும் மாற்றத்தை விளைவிக்கும். எதிர்காலத்திற்கான கருத்துகள் தற்கால நிகழ்ச்சிகளால் உருவாக்கப்படுமாதலால், நடப்பிலுள்ள வணிகக் கருத்துகளில் ஏற்படும் மாற்றங்கள் தொத்துநோய் போன்று பரவிப் பற்றும் தன்மை வாய்ந்தனவாக இருக்கும். நன்னம்பிக்கை மனப்பான்மையின் (optimism) அல்லது சோர்வு மனப்பான்மையின் (pessimism) ஓர் அலையானது (wave) வணிக உலகம் முழுவதும் வெகு விரைவில் பரவிப் பாய்தல் கூடும். கடைசியாக, வாணிபம், அல்லது அரசியல், அல்லது மக்களின் விருப்பச் சுவைகள் (tastes) எதிர்காலத்தில் எப்படியிருக்குமென்று சொல்லக்கூடாத அளவிற்கு நிலையின்மை (uncertainty) அதிகமாக இருக்குமானுல், முதலீடு சம்பந்தமான முடிவுகளை (investment decisions) எடுப்பதில் அது தயக்க நிலையையே ஏற்படுத்தும். ஒரு முதலீட்டுத் திட்டத்தை ஆரம்பித்துவிட்டால் அதனை அவ்வளவு

எளிதாகக் கைவிட்டுவிடுவதும் இயலாது; தொழில் முயல்வோ ரொருவர் தவறுதலானதொரு முடிவை எடுப்பாராகில், அதன் காரணமாக அவர் பல ஆண்டுகட்கு நஷ்டத்தை அடையும் படியாக இருக்கும்.

உற்பத்திச் செலவுப் பகுதியிலும் வருவாய்ப் பகுதியிலும் முதலீட்டு முறையில் (investment process) நிலைபேறற்ற கூறுகள் (unstable elements) பல உள்ளன. இதன் காரணமாக முதலீட்டுச் செலவு வீதத்தில் முக்கிய மாறுதல்கள் (significant changes in the rate of investment expenditure), பல்வேறு காரணங்களால் ஏற் படக்கூடும். ஓர் உதாரணத்தின்மூலம் இதனைத் தெளிவாக விளக்கலாம். தொழில் முயல்வோரொருவர் £200 பெறுமான முள்ளதோர் இயந்திரத்தை நிறுவத் திட்டமிடுகிறாரென வைத் துக்கொள்வோம்; அந்த இயந்திரம் ஐந்தாண்டு காலம் உழைக்கு மெனவும், ஆண்டொன்றுக்கு அவருடைய மொத்த வருவாயில் அது [அதனுடன் பயன்படுத்தப்படும் உழைப்பு (labour), கச்சாப் பொருள் (raw material) இவைகளுக்கான செலவுகளைக் கழித்து] ஆண்டொன்றுக்கு £ 60-ஐக் கூடுதலாகச் செய்யக்கூடுமென்று நம்புவதாகக் கொள்வோம். அப்படியாகில், தனது வேலை வாழ் நாளில் (working life) அது £ 300-ஐ ஈட்டும்; இதில் £ 200 அதனுடைய துவக்கச் செலவை ஈடுசெய்வதற்காக ஒதுக்கி வைக் கப்பட்டு முதலீட்டின்மேல் கிடைக்கும் மொத்த இலாபமாக £ 100 கிடைக்கும். £ 200 முதலீட்டில், இது தோராயமாக 10 சதவீத ஆண்டு வட்டியாகும். கடன் வாங்கிய தொகைக்கு நடப்பு வட்டி வீதமானது 5 சதவீதமாக இருக்குமெனில், தொழில் முயல்வோர் ஆண்டொன்றுக்கு 5 சதவீதம் நிகர இலாபத்தை (net profit) அடைவார். இந் நிலையில் அத்தகைய வணிகத் திட்ட மானது (business proposition) இலாபத்தைத் தரவல்லதென்று கூறலாம். ஆயினும், பல காரணிகளில் ஏதாவதொரு காரணி யினுல் அதன் நிலையை நஷ்டத்தைத் தரவல்லதாகவும் மாற்ற முடியும். வட்டி வீதமானது 10 சதவீதம் அல்லது அதற்கும் அதிக மாக அதிகரிக்குமானுல் அது நிகர இலாபம் முழுவதையுமே போக்கிவிடும். இதைவிட சற்றுக் குறைவான அதிகரிப்பையுடைய வட்டியானது இலாபத்தைக் குறையச் செய்யும். இதைப் போன்றே, தொழில்நுட்ப மாறுபாடு காரணமாக, தொழில் முயல்வோன் தன்னுடைய இயந்திரமானது ஐந்தாண்டுகளுக்குப் பதிலாக நான்காண்டுகளே உழைக்குமென்று தனது மதிப்

பீட்டினை (estimate) திருத்தியமைக்கும்படி நேரும்போது, இயந்திரத்தினின்றும் எதிர்பார்க்கப்படும் வருவாயானது (expected revenue) £ 240ஆகக் குறையக்கூடும். இந்தத் தொகையிலிருந்து இயந்திரத்தின் விலையைக் கழித்தால் கழித்து வரும் தொகையான £40-ஆனது இயந்திரத்தின் வாழ்நாளாகிய நான்கு ஆண்டுக் காலங்களுக்குக் கிடைக்கக்கூடிய வருவாயானதால், அது ஆண்டொன்றுக்கு 5 சதவீத வருவாயினைக் குறிப்பதாகும். இவ் வருவாயானது 5 சதவீதம் வட்டி கொடுப்பதற்கேயல்லாது நிகர இலாபமெதனையும் தொழில் முயல்வோருக்கு அளிப்பதாக இல்லை. அல்லது, இயந்திரமானது உற்பத்தி செய்யும் பொருளின் விலையானது 20 சதவீதம் குறைகிறதெனில், ஐந்தாண்டுக் காலங்களில் எதிர்பார்க்கக்கூடிய மொத்த வருவாயானது அதற்கேற்றவாறு £ 300-லிருந்து £ 240 ஆகக் குறையும்; எனவே, இவ் வருவாயானது வட்டிக் கட்டணங்களைச் செலுத்தவோ அல்லது மூலதனக் கடனைத் திருப்பித்தரவோ போதுமானதாக இராது.

ஆகவே, பலப்பல காரணிகள் முதலீடு சம்பந்தமான முடிவுகளைத் (investment decisions) திடமாகப் பாதிக்கக்கூடும். இவைகளில் எந்த ஒன்றிலும் ஏற்படும் ஒப்பீடானதொரு சிறிய மாற்றமானது முதலீட்டுச் செலவு மொத்த மட்டத்தில் (total level of investment expenditure) முக்கியமான விளைவை ஏற்படுத்தக்கூடும். முதலீடுகளின் பெரும்பகுதியும் 'சமூக' முதலீடாக (social investment) உள்ளன—உதாரணமாக, வீடுகள், சாலைகள், பள்ளிகள் முதலியவற்றைக் கூறலாம். இவைகள் தற்காலத்தில் மத்திய அரசாங்கத்தாலும் உள்ளாட்சி மன்றங்களாலும் ஏற்று நடத்தப்பட்டு வருகின்றன; எனவே, இத்தகைய முதலீடுகள் அதிகரித்த அல்லது குறைந்த இலாப எதிர்பார்த்தலால் (increased or diminished profit expectations) ஏற்படும் ஊசலாட்டங்களுக்கு ஆளாவதில்லை. வாணிப முதலீட்டுத் திட்டங்களின் பரந்த எல்லைக்குள்ளும், பல திட்டங்கள் பழக்க மரபான தன்மை (routine nature) வாய்ந்தனவாக இருப்பதால் அவைகள், இலாபங்கள் அல்லது வட்டிவீதங்களில் ஏற்படும் குறுங்காலப் போக்குகளால் (short-term movements) அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை. இருப்பினும், எந்த ஒரு சமயத்திலும் உள்ள 'இறுதிநிலை'த் திட்டங்கள் (marginal projects) என்றழைக்கப்படும் திட்டங்கள் மட்டும் பொருளாதார, அரசியல் சூழ்நிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்களால் இலாபத்தின் எல்லைக்குள் சேர்த்துக்கொள்ளக்கூடிய

தாகவோ அல்லது விலக்கப்படக்கூடியதாகவோ இருக்கும். அடுத்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள காரணங்களால், முதலீட்டுச் செலவில் (investment expenditure) ஏற்படும் ஒப்பீடானதொரு சிறிய ஆரம்ப மாற்றமும் (a relatively small initial change in the level of investment expenditure) பொருளாதார முறை முழுவதற்கும் பரந்ததும் குவிதலுமான விளைவுகளை (widespread and cumulative effects) ஏற்படுத்தக்கூடும்.

5. சேமிப்பும் முதலீடும் (Savings and Investment)

இதற்கு முன்னருள்ள இரு உட்பிரிவுகளிலும் நுகர்வோர்களது செலவினையும், தொழில் முயல்வோர்களது செலவினையும் ஆளுகின்ற காரணிகளைப்பற்றி ஆராய்ந்தோம். இவ்விரு வகையான செலவினங்களும் முற்றிலும் வேறானவையும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவைகளாகவுமே உள்ளன; செலவு, சேமிப்பு ஆகியவைகட்கிடையே வருமானத்தைப் பங்கீடு செய்வதில் நுகர்வோர்களது முடிவுகள் தொழில் முயல்வோர்கள் முதலீட்டுச் செலவு வீதம் சம்பந்தமாகச் செய்யும் முடிவுடன் நேரடியான தொடர்பு எதனையும் கொண்டனவாக இல்லை. சாதாரண மக்களுடைய சேமிப்பு முடிவுகளுக்கும், தொழில் முயல்வோர்கள் முதலீடு சம்பந்தமாக எடுக்கும் முடிவுகளுக்குமிடையே முற்றிலும் பிரிவினை (complete separation) இருப்பினும், எந்த ஒரு சமயத்திலும் ஒரு பொருளாதார முறையில் சேமிக்கப்படும் மொத்தத் தொகைக்கும் (total amount saved), இதைப் போன்று முதலீடு செய்யப்படும் மொத்தத் தொகைக்குமிடையே (பொருளாதாரக் கருத்தில் இத் தொகையை முதற்கருவிப் பொருள்களை நிறுவுவதற்கான செலவு என அழைக்கலாம்) அதே கால அளவில் அடிப்படையானதும் ஒருமித்ததுமான தவிர்க்க முடியாததொரு தொடர்பு இருக்கவே செய்கின்றது. உண்மையில் கூறப்போனால், சேமிக்கப்பட்ட தொகையின் அளவும் முதலீடு செய்யப்பட்ட தொகையின் அளவும் எப்போதும் சமமாகவேயிருக்கும்.

இது ஒரு குறிப்பிடத்தக்க மகிழ்ச்சியாக இருக்கிறது—முற்றிலும் தொடர்பற்றவையும் தனி வேறானவையுமான இரு வேறுபட்ட மக்களுடைய முடிவுகள் (decisions) ஒருமித்த விளைவுகளைத் தருவது குறிப்பிடத்தக்கதாவேயுள்ளது. முதலீடு செய்வதன் தன்மையை இன்னும் ஆழமாக ஆராயும்போது, மேலெழுந்தவாரி

யாகத் தோன்றுகின்ற சிறிதளவு வேறுபாடும் மறைந்துவிடுகிறது. ஒரு பொருளாதார அமைப்பில், செல்வத்தை அதிகரிக்கும் செயலானது, நடப்பு உற்பத்தியளவில் (current output) ஒரு பகுதியை எடுத்து, அதனை நுகர்ச்சி தவிர்த்ததொரு நோக்கத்திற்காக ஒதுக்கிவைத்தலைக் கொண்டதாக இருக்கும். இது முதலீடு எனப்படுவதாகும்—அதாவது, சாதனங்களை (resources) நடப்பு நுகர்ச்சியினின்றும் ஒதுக்கித் தனியாக எடுத்து வைத்தலைக் குறிக்கும். எனவே, மற்றதன் பக்கத்திலிருந்து நோக்குமிடத்து, சேமிப்பானது (saving) இம்முறையினால் ஏற்படுவதாகவேயுள்ளது. ஒரு பவுண்டு பெறுமானமான சாதனங்கள் (a pound's worth of resources) சமூகத்தின் முதற்கருவிப் பொருள்களின் இருப்பைக் (society's stock of capital goods) கூடுதலாகச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும்போது எங்கோ, யாரோ அக் கூடுதல் இருப்பைச் சொந்தமாக வைத்திருக்கின்றனர் என்று பொருள். யாரொருவருக்கும் சொந்தமில்லாததொன்று பொருளாதார அமைப்பில் இருக்க இயலாதல்லவா? அந்த யாராவதொருவர், யாராக இருப்பினும் அல்லது எப்படிப்பட்டவராக இருப்பினும், அச் செல்வத்தை நடப்பு நுகர்ச்சிக்குச் செலவிடுவதைக்காட்டிலும் முதலாக்கத்திற்கே செலவிட்டிருந்திப்பார். சேமிப்பு என்பதற்கு இதுவே பொருள். மக்கள் சேமிக்கும் தொகைகள்—அவைகள் தமது சேமிப்பை எந்த வடிவில் வைத்துக்கொண்டிருந்தபோதிலும்—அவை, முதற்கருவிப் பொருள்களின் இருப்பினுடைய மதிப்பில் ஏற்படும் வளர்ச்சியைப் பணத்திற்குச் சம மதிப்பானவைகளின் அளவையைக்கொண்டு அவர்களுக்கு இவ்வளவு இருப்பு உள்ளது என்று அளந்து காட்டுவது போல் இருக்கின்றன. மக்கள் சேமிக்கும்போது தங்களது வருமான முழுவதையும் நுகர்ச்சிக்குச் செலவிடாது அடக்கிவைக்கின்றனர்; ஆனால், எல்லா வருமானமும் நடப்பு உற்பத்தியினின்றே (current production) தோன்றுகிறது. ஆக, நுகரப்படாத வருமானமானது நுகர்ச்சி செய்யப்பட்டிராத எங்கோ உள்ள உற்பத்தியால்—அதாவது, முதல் இருப்பினைக் (stock of capital) கூடுதலாகச் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கும் உற்பத்தியால்—சரிக்கட்டப்பட வேண்டும். சேமிப்பு இன்றி முதலீடு செய்தல் இயலாது; இதைப்போன்றே முதலீடின்றியும் சேமிப்பு இருக்க முடியாது—கொள்முதல் இன்றி எவ்வாறு விற்பனை இயலாதோ அல்லது கடன் வாங்குதல் இல்லாமல் எவ்வாறு கடனளித்தல் இயலாதோ அதுபோன்றே, முதலீடின்றியும் சேமிப்பு இருக்க

முடியாது. அவைகள் பொருளாதார முறையிலுள்ள ஒரு நிகழ்ச்சியின் இருபக்கங்களாகும்.

இத்தகையதோர் உண்மை நிகழ்ச்சியை எளிதானதொரு குறிக் கணக்கின்மூலம் நன்கு தெளிவுபடுத்தக்கூடும். Y என்பது மொத்த நாட்டு வருமானத்தையும் (total national income), I என்பது முதலீட்டுச் செலவையும் (investment expenditure), S என்பது மொத்த சேமிப்பையும் (total savings) குறிப்பதாகக் கொள்வோம். (தற்போதைக்கு, ஏற்கெனவே கூறப்பட்ட காரணங்களால், அரசாங்கச் செலவும் அயல்நாட்டு வாணிபமும் கருதப்படவில்லை.) எல்லா வருமானமும் உற்பத்தியிலிருந்தே பிறக்கின்றன. எனவே, நாட்டு வருமானத்தின் மதிப்பானது (the value of the national income) உற்பத்தி செய்யப்பட்ட எல்லாப் பண்டங்களின்—நுகர்வோர் பொருள்களுடையனவும் (consumer goods) முதற் கருவிப் பொருள்களுடையனவுமான (capital goods) --மதிப்பிற்குச் (value) சமமாக இருந்தாகவேண்டும். அதாவது,

$$Y = C + I \quad\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots (1)$$

மேலும், எல்லா வருமானமும் ஒன்று, நுகரப்படவேண்டும் (அதாவது நுகர்வோர் பொருள்களின்மீது செலவழிக்கப்படவேண்டும்) அல்லது சேமிக்கப்படவேண்டும். இதைத் தவிர வேறு மாற்று வழி ஒன்றுமில்லை. ஆகவே,

$$Y = C + S \quad\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots (2)$$

(1), (2) ஆகிய இவ்விரு குறிக்கணக்குகளிலும் (in both equations) நாட்டு வருமானத்தின் மதிப்பானது (the value of the national income) ஒன்றுகவே இருப்பதால், குறிக்கணக்குகளின் வலது கைப்புறம் கூறப்பட்டுள்ளவைகளும் ஒன்றுக்கொன்று சமமாகவே இருக்கவேண்டும்—அவைகள் இரண்டும் சேர்ந்து ஒன்றனுக்கே(Y) சமமாக இருப்பதால் அவைகள் ஒன்றுக்கொன்று சமமாகவே இருந்தாகவேண்டும். அதனுல்,

$$C + I = C + S \quad\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots\ldots (3)$$

என்பதாகிறது.

நுகர்பவர்களது செலவானது (C) குறிக்கணக்கின் (3) இரு பக்கங்களிலும் காணப்படுவதால், ஒவ்வொரு பக்கத்தினின்றும் அதனை எடுத்து (கழித்து)விட்டு வாசகத்தை

$$I = S$$

என அமைக்கலாம்.

சென்ற பத்தியில் நாம் ஆராய்ந்ததைத்தான், இது அறிகுறி மொழியில் (symbolic language) உணர்த்துகிறது. உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் நுகரப்படவில்லையெனில், அவை, முதல் ஆக்கத்தினை (capital formation) ஏற்படுத்துகின்றன; அதே போன்று வருமானம் பெறப்பட்டு நுகரப்படவில்லையெனில் அது சேமிப்பை அமைக்கின்றது. ஈண்டு, ஒன்று மற்றொன்றின் பிரதிபலிப்பாக இருக்கின்றதே தவிர, வேறில்லை.

இது வரையில் நாம் ஆராய்ந்ததனின்றும் சேமிக்கப்பட்ட தொகையானது (the amount saved) முதலீடு செய்யப்பட்ட தொகைக்குச் (the amount invested) சமமாக இருந்தாகவேண்டுமென்பது விளங்கிற்று. ஆனால், சேமிப்பவர்கள், தொழில் முயல்வோர்கள் ஆகிய பல்வேறு மக்கள் தொகுதியினர் எடுக்கும் முடிவுகளின் (decisions) அடிப்படையில் எவ்வாறு இச் சமன்பாடு (equality) ஏற்படுகிறதென்பது சம்பந்தமான பிரச்சினைகளுக்கே, தெளிவான விளக்கம் இல்லை. அத்தகையதொரு தெளிவான விளக்கத்தினை அடுத்த அத்தியாயத்தில் நாம் வருமான ஆக்க முறை (income-formation process) என்பதுபற்றி ஆராயும்போது தான் காணமுடியும்.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

Keynes, 'The General Theory of Employment, Interest and Money', Chs. 3, 6–12.

Hansen, 'A Guide to Keynes', Chs. 2–3, 5.

Dillard, 'The Economics of J. M. Keynes', Chs. 4 and 7.

Robinson, 'An Introduction to the Theory of Employment' (Macmillan, London, 1937), Chs. I–II.

26. வருமான ஆக்கமுறை

(The Process of Income Formation)

1. வருமான ஓட்டத்தின் தன்மை (The Nature of the Income Flow)

தேவையானது எப்போதும் அளிப்பிற்குச் (supply) சமமாக இருக்கவேண்டும்; ஆனால், நான்காம் பாகத்திலுள்ள ஆய்வானது, இத்தகையதொரு கூற்று, ஒரு குறிப்பிட்ட செயல்முறை இருப்பதால்தான் உண்மையாக இருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்டியது. அச் செயல் முறை என்ன? நுகர்வோர்களால் அங்காடியினின்றும் எடுத்துக்கொள்ளப்படும் குறிப்பிட்ட பொருளின் அளவானது, உற்பத்தியாளர்கள் அந்தப் பொருளில் கூடுதலை உண்டு பண்ணியதற்கு எப்போதும் சமமாகவே இருக்கும். இச் செயல் முறையே விலையாகும் (price). வருங்காலத் தேவையானது (prospective demand) வருங்கால அளிப்பைக் (prospective supply) காட்டிலும் அதிகமாக இருப்பதற்கானதொரு போக்கு காணப்படுமானால், விலை அதிகரிக்கும்; விலை அதிகரிப்பானது தேவையைக் குறைத்து அளிப்பை ஊக்குவிக்கும். வருங்காலத் தேவையானது எவ்வளவுதான் அதிகமாக இருந்தபோதிலும், அத் தேவையை எந்த ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்கும் அதனைக் குறைக்குமளவிற்கு ஏதாவதொரு விலை எப்போதும் இருக்கும். இதைப்போன்றே வருங்கால அளிப்பு எவ்வளவுதான் அதிகமாக இருந்தபோதிலும் எந்த ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்கும் அதனைக் குறைப்பதற்கு எதாவது ஒரு விலை (some price) எப்போதுமிருக்கும். எந்த ஓர் அங்காடியிலும் எந்தச் சமயத்திலும் உள்ளபடியான தேவையானது (actual demand) அளிப்பிற்கு எப்போதும் சமமாகவே இருக்கும். இதற்குக் காரணம் என்னவெனில். விற்பனை (அளிப்பு) ஒவ்வொன்றுக்கும் அதற்கிணையானதொரு கொள்முதல் (தேவை) உள்ளது.

சேமிப்பும் முதலீடும் (savings and investment), முன் அத்தியாயத்தில் விளக்கியவாறு, எப்போதுமே சமமாக இருந்தாக வேண்டும்; ஒரு குறிப்பிட்ட அங்காடி விலையில் தேவையும் அளிப்பும் வேருக இருக்கக்கூடும் என்ற நிலையைப்போன்று சேமிப்பும் முதலீடும் எவ்வகையாலும் ஒன்றையொன்று வேறுபட்டிருப்பதில்லை. எனவேதான், சேமிப்பை முதலீட்டிற்குச் சமமாகக் கொண்டுவருவதற்கு, விலைக்கு இணையானதொரு செயல்முறை எதுவும் இல்லை. ஆயினும், சேமிப்பு, முதலீடு இவை சம்பந்தமான முடிவுகளில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படும் எதிர்விளைவுகள் (repercussions) எவ்வாறு வருமான மட்டத்தில் (income level) மாற்றத்தை உண்டுபண்ணுகின்றனவோ அதே போன்று தனியொரு பொருளுக்கான அளிப்பு அல்லது தேவை மாறும்போது அங்காடி விலையில் (market price) எதிர் விளைவுகள் காணப்படுகின்றன; எனவே, தேவை அளிப்பு ஆகியவற்றிற்கும் சேமிப்பு முதலீடு ஆகியவற்றிற்குமிடையே இத்தகையதோர் இணைவகையானதொரு (parallel) தொடர்பு இருந்துவருகிறது.

இத்தகைய எதிர் விளைவுகளின் (repercussions) தன்மையை நன்கு தெளிதல் வேண்டுமாயின், வருமானங்களைப் பொறுத்த மட்டில் பொருளாதார அமைப்பிலுள்ள எல்லா அங்கத்தினர்களிடையே, ஒருவருக்கொருவர் கொண்டுள்ள சார்பினை (inter-dependence) ஆராய்தல் அவசியமாகும். ஒவ்வொரு தனி நபரும், தான் ஈட்டுகின்ற தொகைக்கும் (the amount that he earns), நூறு மைல்களுக்கப்பால் வாழும் மக்கள் ஈட்டுகின்ற தொகைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையெனக் கருதினால், அது அறிவீனமே யாகும். அவ்வாறு அவர்கள் எண்ணுவார்களேயாகில், அது அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கின்றனரென்று தான் பொருள். சான்ருக, கடைக்காரர் (shop-keeper) ஒருவரின் வருமானமானது அவருடைய அக்கம்பக்கத்தில் (neighbourhood) வாழ்கின்ற மக்களுடைய வருமானங்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது; அவர்கள் அக் கடைக்காரரின் வாடிக்கைக்காரர்களானபடியால், அவர்களுடைய கூலிகளில் ஏற்றம் ஏற்படுமாயின், கடைக்காரரின் வணிகம் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். இதில் சற்றுத் தெளிவு குறைவாகக் காணப்படுவது யாதெனில், வாடிக்கைக்காரர்களின் கூலிகள் கடைக்காரரின் இலாபங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தலே. இதனை ஆராய்வோம். கடையானது இலாபங்களைக்

கொண்டு சுபிட்சத்தை அடைந்துகொண்டிருக்கும்போது; கடைக்காரர் அதிக ஆடைகளை அல்லது மின் சலவைப் பெட்டிகளை (electric irons), அல்லது நூல்களை (books), அல்லது சாக்லெட்டுகளை (chocolates)—இவைகள் தன் து வாடிக்கைக்காரர்கள் தங்களது தொழிற்சாலைகளில் செய்தவைகளாகும்—தன் கடைக்காக வாங்குவார். ஒரு நிலக்கரி சுரங்கத் தொழிலாளி தனது கூலிக்கும் நாட்டுப்புற மருத்துவர் (country doctor) ஒருவரின் ஈட்டங்களுக்கும் (earnings) யாதொரு தொடர்புமிருப்பதாகக் கண்கூடாகக் காண முடியாது—ஆயினும் தொடர்பு இருக்கவே செய்கின்றது. அம் மருத்துவருக்கு ஓர் ஆண்டில் நல்ல வருமானம் கிடைத்துவிட்டதெனக் கொள்வோம். அப்போது அவர் புதிய கார் ஒன்றினை வாங்கக்கூடும்; புதிய கார் வாங்கப்படுதலால் கார் உற்பத்தியாளரின் எஃகு தேவைப்படுதல் அதிகரிக்கும்; இது, நிலக்கரிக்கான தேவையினைத் தூண்டும்; இதனால் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களின் கூலி அதிகரிக்கக்கூடும்.

ஆக, பொருளாதார முறையானது (economic system), வருமானத்தின் ஒரு பிரமாண்டமான வட்ட ஓட்டமாக (enormous flow of income) உள்ளது என்பது தெரிகிறது; பண்டங்கள், பணிகள் ஆகியவை மாற்று செய்யப்படும்போது வருமானங்கள் ஒருவர் கையிலிருந்தும் மற்றொருவர் கைக்கு மாறுகின்றன. ஒருவரின் செலவு மற்றவரின் வருமானமாக உள்ளது. நான் எனது காருக்குக் கல்லெண்ணெய் (petrol) வாங்கும்போது, இந்தப் பேரமானது எனக்குச் செலவையும் கார் நிறுத்திவைக்கும் குச்சிலின் (garage) உரிமையாளருக்கு வருமானத்தையும் ஏற்படுத்துகிறது; கார் குச்சிலின் உரிமையாளர் ஒரு புதிய வீட்டை வாங்கும்போது அது அவருக்குச் செலவாகவும் கட்டடம் கட்டுபவருக்கு வருமானமாகவுமுள்ளது; கட்டடம் கட்டுபவர் தன் மகனுக்காக எனது பொருளாதாரப் பாட நூலை வாங்கும்போது அது அவருக்குச் செலவாகவும் ஆனால், என் நூலை வெளியிட்டவர்களுக்கும் (publishers) எனக்கும் வருமானமாகவும் உள்ளது. பொருளாதார ரீதியில் பார்க்கும்போது, மக்கள் மிக முற்றிலுமாகவும் மோசமாகவும் ஒருவரையொருவர் எதிர்நோக்கியே வாழ்கின்றனர்; ஒருவர் தன் வருமானத்தை மாற்றி அமைப்பதன்மூலம் வேறு ஒருவருடைய வருமானத்தை மாற்றி அமைக்கக்கூடும்; எனக்கு முன்பின் தெரியாததொரு நபர் தனது வருமானத்தை மாற்றி அமைத்துக்கொள்ளுதலின்மூலம் எனது வருமானத்தை அவர் பாதிக்கக்கூடும்.

இதனை மனத்திற் கொள்ளுவோமாகில், சேமிப்பு, முதலீடு ஆகியவற்றின் முக்கியத்துவம் நன்கு புரியும். சேமிப்பிற்கு இலக்கணம் கூறுமிடத்து அது ஒரு செலவிடாத செயல் (the act of not-spending) என்பதாகிறது; சேமிக்கும் ஒருவர், தனது வருமானத்தின் ஒரு பகுதியை, பண்டங்கள், பணிகள் ஆகியவற்றில் செலவிடாது நிறுத்திவைத்தலாகும் (அவர் அவ்வாறு செலவிடாது சேமித்துவைத்த தொகைகளை வேறு யாராவது ஒருவருக்குக் கடனாகக் கொடுத்து அவர் அத் தொகையைச் செலவிடும்படி செய்வது முற்றிலும் வேறுபட்டதொன்றாகும்; ஆக அவர் தனது சேமிப்பைப் பத்திரமாகத் தன்னிடமே வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதனைத் தற்போதைக்குக் கருதுவோம்.) இது, வருமானத்தின் வட்ட ஓட்டத்தில் (circular flow of income) என்ன மாறுதலை உண்டுபண்ணும்? மேற்குறிப்பிட்ட நபர், தனக்குக் கிடைத்த வருமானத்தின் ஒரு பகுதியை மற்ற எவருக்கும் (பண்டங்களை வாங்காததன்மூலம்) கைமாறச் செய்யாமல் தன்னிடமே வைத்துக்கொண்டிருக்கிறார். இதன் காரணமாக வருமானத்தின் ஓட்டம் அந்த அளவிற்குத் தடைபடுகின்றது. ஒரு நீர்க்குழாயொன்றில் (water-pipe) ஏற்பட்டுள்ள ஒழுக்கானது (leak), எவ்வாறு அக் குழாயின் நீரோட்டத்தைக் குறைக்குமோ அதுபோன்றே வருமானத்தின் ஓட்டமும் தடைப்படுகின்றது. மேலும், ஒரு சான்றினைப் பார்ப்போம். சேமிப்பு செய்வதன் காரணமாக, மாத இதழ்களை (magazines) வாங்கிப் படிப்பதைக் குறைத்துக்கொள்வதன்மூலம், அவற்றை வெளியிடுபவர்களின் வருமானம் குறையும். அவ் விதழ்களை வெளியிடும் பணியிலமர்ந்துள்ள அனைவரின் வருமானமும் அந்த அளவிற்குக் குறையும். இத்துடன் கதை முடிவடைந்துவிடுவதில்லை. மாத இதழ்களை வெளியிடுகின்றவர்கள், அவற்றின் நுகர்ச்சிக் குறைவால் தாங்கள் முன்பிருந்த நிலையைக்காட்டிலும் ஓரளவிற்கு வறிய நிலையை அடைவதால், அவர்கள், தாம், ஏற்கெனவே புகைத்த சுருட்டுகளைக்காட்டிலும் குறைவான எண்ணிக்கையுடைய சுருட்டுகளையே புகைக்க நேரிடும். சுருட்டுகளின் நுகர்ச்சி குறைவடையும். இதனல் சுருட்டு செய்பவர்களின் வருமானம் குறையும். எனவே, இக் கதை தொடர்ந்து செல்லுகின்றது; சேமிப்பானது, குறைந்த வருமானங்களாக, பொருளாதார முறை முழுவதுமே, எதிரொலித்து மேற்செல்லும்.

முதலீடொன்றினைச் செய்வதானது, இதற்குச் சரிநிகரான தலைகீழ் விளைவுகளைத் தருவதாக உள்ளது. கம்பெனியொன்று,

கடன் வாங்கியோ அல்லது தன் சொந்தக் காப்பு நிதிகளாலோ, ஒரு புதிய தொழிற்சாலையினைக் கட்ட முடிவு செய்வதாகக் கொள்வோம். அவ்வாறு அது தொழிற்சாலையினைக் கட்டும் போது வருமான ஓட்டத்திற்குக் கூடுதலை உண்டுபண்ணுகிறது. தொழிற்சாலையின் அமைப்பு வேலையில் பல மனிதர்கள் வேலைக் கமர்த்தப்படுவதால் அவர்கள் கூலியினை ஈட்டுவர்; கச்சாப் பொருள்கள் அல்லது இயந்திரங்கள் வாங்கப்படும்; இதனால் அவைகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுடைய வருவாய் கூடுதலாகும்—இப்படி நீடித்துக்கொண்டே செல்லும். இத்தகைய கூடுதல் வருமானங்களைப் (extra income) பெறுகின்றவர்கள் கூடுதலாகச் செலவழிப்பர். இதன் காரணமாக ஆடைகள், அல்லது களியாட்டங்கள் (entertainments), அல்லது உணவு, அல்லது வருமானங்கள் செலவழிக்கப்படுகின்ற எந்த ஒரு பொருள்—ஆகிய இவற்றிற்கான தேவையானது தூண்டப்படும்; இதன் காரணமாக அப் பொருள்களை உற்பத்தி செய்வோரின் வருவாய் அதிகரிக்கும். உற்பத்தியாளர்கள், அதிகரித்த தேவையால் உற்பத்தியைப் பெருக்கத் தூண்டப்படுவர்; அதிக உற்பத்தியை நாடும் வகையால் கூலிகள், கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின்மீது அவர்களின் செலவினை அதிகமாகச் செய்வதன்மூலம் அவைகளின் வருமானத்தையும் அதிகரிக்கச் செய்வர். மீண்டும் பொருளாதார முறையில் தொடர்ந்ததொரு வினைவெதிர்வினைவு ஏற்படுகிறது. முதலீடானது, சம்பந்தப்பட்ட முதற்கருவிப் பொருள்களை உற்பத்தி செய்யும் காரணிகளுக்கு ஊதியங்களை அளிப்பதன்மூலம், நேரடியாக வருமானங்களை அதிகரிக்கின்றது; அதிகரித்த இவ் வருமானமானது அதிகரித்த செலவுகளாக வெளியேறுகின்றது.

எனவே, வருமான வட்ட ஓட்டமென்பதை (circular flow of income) சாதாரண நுகர்ச்சிப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின்மூலம் ஒருவர் கையிலிருந்து மற்றொருவருக்கு மாறும் வருமானம் என்று பொருள் கொள்ளலாம். இத்தகைய அடிப்படையானதொரு வருமான ஓட்டமானது சேமிப்பால், (சேமிப்பில், வருமானம் பெறப்படுகிறதே யொழிய மற்றொருவர் கைக்கு மாற்றப்படுவதில்லை) குறைக்கப்படுகிறது; ஓட்டமானது முதலீட்டால் அதிகரிக்கப்படுகிறது (முதலீடு என்பது முதற்கருவிப் பொருள்களின் இருப்பிற்குக் கூடுதலை உண்டுபண்ணுவதன்மூலம் வருமானங்கள் சிருட்டிக்கப்படுதலை உணர்த்து

கிறது). வருமான ஓட்டத்தைப்பற்றி இன்னும் இரண்டு கேள்விகளுக்கு நாம் விடை யளித்தாகவேண்டும். முதலாவது கேள்வி: புதிய சேமிப்பு அல்லது முதலீடுகளால் வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு வரையறைகள் ஏதேனும் உண்டா? எதிர் விளைவுகள் (repercussions) தொடர்ந்து நீடிப்பனவாக உள்ளனவா அல்லது அழிந்துபோகக்கூடியனவா? இரண்டாவது கேள்வி: சேமிப்பு, முதலீடு ஆகியவற்றின் சமநிலையால் எவ்வாறு, வருமான ஓட்டமானது ஏன், எவ்வாறு, பாதிக்கப்படுகின்றது? ஒன்றன்பின் ஒன்முக இவ் வினுக்களுக்கு விடை காண்போம்.

2. பெருக்கி (The Multiplier)

முன்பு கொடுக்கப்பட்ட உதாரணத்தில் ஒரு கம்பெனியானது புதிய தொழிற்சாலையைக் கட்டும்போது வருமானங்கள் நேரடியாக உண்டுபண்ணப்படுகின்றன. எளிதாக விளக்கம் கூறும் பொருட்டே தொழிற்சாலை கட்டடப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களது கூலிகள் சான்முகக் கூறப்பட்டது—தொழிற்சாலையை நிர்மாணிப்பதில் மற்றப் பணிகளும் ஈடுபட்டேயுள்ளன. இப் பணிகளுக்குக் கொடுக்கப்படும் கூலிகள் யாவும் உணவு (food), அல்லது ஆடைகள் (clothes), அல்லது புகையிலை முதலியவற்றை விற்பனை செய்யும் கடைக்காரர்களின் பேழைகளில் சென்று நிரம்புகின்றன; பின்னர், இவை அவைகளின் உற்பத்தியாளர்களிடம் சென்றடைகின்றன. இவைகளை அவ் வுற்பத்தியாளர்கள் தமக்குத் தேவையான பண்டங்கள்மீது செலவழிப்பர். இவ்வாமுக, இம் முறையானது நீடிக்கப்படுகிறது. இது, எப்போதுமே நீடித்துச் சென்றுகொண்டே யிருக்குமா? ஆரம்பத்தில் உட்செலுத்தப்பட்டதொரு வருமான ஓட்டமானது தனது ஓட்டத்தால் வருமானங்களை முடிவின்றி அதிகரித்துக்கொண்டே இருக்கக்கூடுமா?

அவ்வாறு முடிவின்றி அதிகரித்துக்கொண்டே செல்லாது என்றே கூறவேண்டும். இதற்கான காரணமானது சேமிப்பு என்னும் தலைப்பில் ஆராயப்பட்டுள்ளது. ஒவ்வொருவருடைய வருமானத்திலுமுள்ள ஒவ்வொரு பென்னியும் செலவழிக்கப்பட்டால் விளைவெதிர் விளைவின் தொடர் சங்கிலியானது நெடிது சென்றுகொண்டே யிருக்கும்; ஆரம்பத்தில் உட்செலுத்தப்பட்ட வருமானமானது ஒரு கையிலிருந்து மற்ருெரு கைக்கு முடிவின்றித் தொடர்ந்து நீடித்துக்கொண்டே யிருக்கும். ஆனுல், ஒவ்

வொரு வருமானத்திலுமுள்ள ஒவ்வொரு பென்னியுமே செல வழித்துவிடப்படுவதில்லே. மக்கள் வருமானத்தின் ஒரு பகுதி யைச் சேமிக்கின்றனர். சேமிப்பின் விளைவு காரணமாக வரு மானத்தின் ஓட்டம் குறைகிறது. சான்ருக, கூடுதல் கூலிகளாக (additional wages) ஆரம்பத்தில் உட்செலுத்தப்படும் £100 ஆனது ஆடைகளின்மீது கூடுதலாக £ 91 செலவழிக்கப்படுவதற் குக் காரணமாக இருக்கும்; இதைப்போன்றே ஆடை உற்பத்தி யாளர்களால் பெறப்படும் £ 90 கூடுதல் வருவாயானது £ 81 கூடுதல் செலவை (அவ் வுற்பத்தியாளர்கள் செலவழிக்கும்) ஏற் படுத்தும். இவ்விதமாக வருமான அலையானது பொருளாதார முறை முழுவதிலும் மேலும் மேலும் தாவிச் சென்று பாய்கிறது; அதன் வேகம் என்னவோ போகப்போகக் குறைந்துகொண்டு தான் செல்லுகிறது. இவ் வுதாரணத்தில், மேற்குறிப்பிட்ட தொடர் வரிசை (sequence) கீழ்க்கண்டவாறு இருக்கும்:

$$100+90+81+73+66+59+53+48+43+39\ldots$$

↑ (ஆரம்ப உட்செலுத்து)

இத்தொடரானது இவ்வாறு தேய்வடைந்து கடைசியில் ஒன்றுமேயில்லாத நிலேயில் முடிவடையும். இத்தகையதொரு நிலேயை இதைவிட இன்னும் சரிநுட்பமான முறையில் விளக்க முடியுமா? செலவழித்தலில் ஏற்படும் ஆரம்பமான அதிகரிப் பால் எவ்வளவு கூடுதலான வருமானத்தை (extra income) உண்டுபண்ணக் கூடுமென்பதனைக் கூறுதல் இயலுமா? உண்மையி லேயே இயலுமெனக் கூறலாம்; ஏனெனில், வருமான அதிகரிப் பின் வேகத்தைக் குறைக்கும் சக்கரத்தடுப்பே (brake) சேமிப்பு நாட்டந்தான் என்பதானது நன்கு தெரிந்ததொன்றேயாகும். எந்த ஒரு கூடுதல் வருமானத்திலும் எவ்வளவு விகிதத்தை (the proposition of any additional income) சேமிப்பிற்காக மக்கள் எடுத்துவைக்கின்றனர் என்பது தெரிந்தால், சேமிப்பு என்னும் ஒழுக்கிஞல் (leak) எவ்வளவு அளவு கூடுதல் வருமானம் மறைந்து போகிறது என்பதைக் கணக்கிடுதல் இயலும். இந்த உதாரணத் தில், மக்கள் தங்களின் கூடுதல் வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியைச் சேமிக்கின்றனரென்று கண்டோம்; இதனுல் மக்க ளுடைய சேமிப்பு சமநிலேமட்டம் (equilibrium level of savings) அல்லது 'இயல்புநிலே' சேமிப்பு மட்டம் (normal level of savings)

£ 100ஆக அதிகரிப்பதற்கு முன்பு மொத்த வருமானங்கள் (total incomes) £ 1,000ஆக அதிகரித்திருக்கவேண்டுமென்பதாகிறது. வருமானங்களில் ஒரு £ 100 ஆரம்பமான அதிகரிப்பு ஏற்படுமாயின், இந்த அதிகரிப்பானது 'இயல்பான' (normal) சேமிப்பினுல் எப்போது சரிக்கட்டப்படுமெனில், மொத்த வருமானங்கள் £ 1,000ஆக அதிகரிக்கும்போதுதான் என்று கூறலாம். மேலே கொடுக்கப்பட்டுள்ள தொடர் வரிசையில், ஆரம்ப உட்செலுத்தான £ 100ஐ ஆரம்பமாகக்கொண்டு பத்து இனங்கள் (items) கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளைக் கூட்டினுல் மொத்தம் £ 652 ஆகும். இதேபோன்று அடுத்த பத்து இனங்களைக் கணக்கிட்டு அவைகளையும் இத்துடன் கூட்டினுல் மொத்தம் £ 868 ஆகும்; இன்னும் பத்து இனங்களைக் கணக்கிட்டுக் கூட்டினுல் மொத்தம் £ 943 ஆகும். இத் தொடர்வரிசையை இவ்வாறு நீட்டித்துச் செல்வோமேயானுல் இனங்களின் குவிதல் மொத்தம் (cumulative total of the items) £ 1,000-க்கு மிக நெருக்கமாக வந்துகொண்டே யிருக்கும்.

இதனுல், பொருளாதாரமுறையில் உள்ள சேமிப்புகளின் மொத்த அளவானது, இத்தகையதொரு முறை (இதற்கு நிறைய காலம் பிடிக்கும்) ஒரு முடிவினை அடைந்த பின்னர்தான், £ 100ஆக அதிகரிக்கும் என்றும் கூறுவதற்கில்லை. முதலீடு உடனடியாக £ 100ஆக அதிகரிக்க ஆரம்பித்ததும், சேமிப்பும் அதற்குச் சமமாக அதிகரித்தாகவேண்டும். தொழிற்சாலையானது கட்டப்படும் அதே நாளில் அதனைக் கட்டுபவர்களுக்கு (constructors) £ 100 செலுத்தப்படுகிறது; இதனுல் அவர்களின் வருமானம் அதிகரிக்கிறது. அவர்களின் சேமிப்பும் £ 100 அதிகமாகவுள்ளது—சேமிப்பு என்பது வருமானத்திற்கும் (£ 100 அதிகரித்துள்ள) நுகர்ச்சிக்கும் (மாற்றமேதுமில்லாமல் அப்படியேயுள்ள) வேறுபாடு என்பதனை ஈண்டு மனத்திற் கொள்ள வேண்டும். அவர்கள் அந்த £ 100-ல் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் செலவழித்துவிட்ட பிறகு, அவ்வாறு செலவழிக்கப்பட்ட தொகையானது பிறரொருவருடைய வருமானமாக அமைந்து (கூடுதல் செலவாக இது மீண்டும் கைமாறுகின்றவரையில்) பிறரொருவருடைய சேமிப்பாகவும் அமையும். எந்தச் சமயத்திலும் இக் கூடுதல் சேமிப்பானது கூடுதல் முதலீட்டிற்குச் சமமாகவே இருக்கும். சான்றுக, மேலே கொடுக்கப்பட்டுள்ள எண் தொடர் வரிசையானது (numerical sequence),

மூன்றுவது பிரிவைச் சேர்ந்தவர்கள் அவர்களது கூடுதல் வருமானத்தை அடைந்தவுடனும், நான்காவது பிரிவினர் (fourth group) இன்னும் பாதிக்கப்படாத முன்பும் (அதாவது, மூன்றுவது பிரிவினர் தமது கூடுதல் வருமானத்தைச் செலவழிப்பதற்கு முன்னதாக) நின்றுவிடுகிறதெனக் கொள்வோம். அப்படியாயின், நிலைமை கீழ்க்கண்டவாறு இருக்கும்:

பெற்ற கூடுதல் வருமானங்கள்	=	100	90	81	
கூடுதல் செலவு	=	90	81	0	
எனவே, கூடுதல் சேமிப்பு	=	10 +	9 +	81	= 100

இதைப்போன்றே, தொடர் வரிசையானது, ஆறுவது பிரிவினர் (sixth group) தங்களது கூடுதல் வருமானங்களைப் பெற்றுக் கொண்டான உடனே நின்றுவிட்டதெனில் நிலைமை கீழ்க்கண்டவாறு இருக்கும்:

பெற்ற கூடுதல் வருமானங்கள்	=	100	90	81	73	66	59	
கூடுதல் செலவு	=	90	81	73	66	59	0	
எனவே, கூடுதல் சேமிப்பு	=	10 +	9 +	8 +	7 +	7 +	59	= 100

ஆனால், இவைகள் யாவற்றிலும் முக்கிய காரணியாக இருப்பது தொடர் வரிசையின் கடைசிப் பிரிவினர் (final group) செய்யும் சேமிப்பானது அவர்களின் சமநிலை சேமிப்பு வீதமாகாது (equilibrium rate of saving)—இது அவர்கள் தங்களது செலவை அவர்களுடைய புதிய வருமான மட்டத்திற்கு ஏற்றவாறு சரி செய்துகொள்ளுமளவிற்குப் போதிய அளவு காலம் கிடைக்கப் பெற்றுச் செய்யப்படும் சேமிப்பன்று. எனவே, முழுவதும் தழுவிய வருமானங்களின் மட்டத்தில் (overall level of incomes) ஏற்படும் மாற்றமானது தொடர்ந்து நீடிக்கும்; இவ்வாறு நீடித்துச் செல்வது எப்போது முடிவடையுமெனில், ஒவ்வொருவரும் (வருமான மாற்றங்கள் என்னும் தொடர் சங்கிலியில் கடைசியாக உள்ள பெறுபவர்களையும் சேர்த்து) தன்னுடைய புதிய வருமான மட்டத்திலிருந்து தன்னுடைய இயல்பான வீதத்தில் (at his normal rate) சேமிக்கவும் செலவழிக்கவும் செய்யும்போதுதான், முடிவடையும். சேமிப்பும் முதலீடும் எப்போதுமே சமமாகவே

யிருக்கின்றன; ஆனால், வருமானங்களின் போக்கானது, மேல் நோக்கிய போக்காக அல்லது கீழ்நோக்கிய போக்காக இருப்பது எப்போது நீங்குமெனில், ஒவ்வொருவரும் தனது சேமிப்பு வீதத்தில் சமநிலையை (equilibrium) எட்டிப்பிடிப்பதற்கான நேரத்தைப் பெற்றிருக்கும்போதுதான் நீங்கும் [ஈண்டுச் சமநிலை சேமிப்பு வீதமென்று குறிப்பிடப்பட்டிருப்பது ஒருவருடைய புதிய வருமானத்திற்கும் அவருடைய இயல்பான (normal) சேமிப்பு நாட்டத்திற்குமிடையே நிலவும் சமநிலையைக் குறிப்பதாகும்].

இதனை இன்னும் பொதுவாகவும் குறிப்பிடலாம். வருமான ஆக்க முறையிலுள்ள தொடர் வரிசை இனங்கள் (the sequence of items) ஒரு வடிவ கணிதத் தொடரினை (geometric series) அமையச் செய்கின்றன. இதற்குக் காரணம், தொடர் வரிசையிலுள்ள ஒவ்வோர் இனமும் அதற்கு முன்னருள்ள இனத்தை மாறாக் காரணியால் (constant factor) பெருக்கி வந்த தொகையாக இருப்பதேயாகும். [இந்தக் கட்டத்தில் (context), மாறாக்காரணியாக இருப்பது C என்னும் எழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ள சேமிப்பு நாட்டமாகும்.] குறிக்கணக்கியல் (algebra) சம்பந்தமான எந்தப் பாடநூலிலும் (text-book) அதிக எண்ணிக்கையுள்ள இனங்கள் அடங்கியுள்ள எந்தத் தொடர் வரிசைகளின் எண்ணிக்கையும்,

$$A \quad \frac{1}{1-r}$$

என்ற வாய்பாட்டின் (formula) மூலம் உணர்த்தப்பட்டிருக்கும். இந்த வாய்பாட்டில் A என்பது தொடர் வரிசையின் முதல் இனமாகும் (first item). வருமான ஓட்டத்திற்கு இந்த வாய்பாட்டினைக் கடைப்பிடிப்போமாகில் முதலீட்டின் ஓர் ஆரம்ப மாற்றத்தினின்றும் (an initial change in investment)—(I)— தோன்றுகிற வருமானங்களின் மொத்த மாற்றத்தை,

$$I' \quad \frac{1}{1-c}$$

என்னும் வாய்பாட்டினால் சுருக்கமாகக் கூறலாம். மேற்கண்ட உதாரணத்தில் I′ என்பது £ 100 ஆகவும், c என்பது $\frac{9}{10}$ ஆகவும் இருந்தது. எனவே, இவ் வாய்பாடு உணர்த்தும் வருமானங்களில்

ஏற்படும் மொத்த மாற்றமானது (total change in incomes),

$$£\,100 \times \frac{1}{1-\frac{9}{100}} = £\,1{,}000.$$

$\frac{1}{1-c}$ என்னும் எண் உருக்கோவையானது (expression), செலவில் ஏற்படும் ஆரம்ப மாற்றமானது எவ்வாறு வருமானத்தின் பொதுமட்டத்தில் மாற்றத்தை (change in the general level of income) உண்டுபண்ணுகிறதென்பதனை விளக்குகின்றது—இதுவே பெருக்கி (multiplier) யாகும்.

'பெருக்கி' (multiplier) என்பது பொருளாதார இயலில் மிக முக்கியம் வாய்ந்ததும் பயனுள்ளதுமானதொரு கருத்தாக வுள்ளது. பொதுமக்கள் தங்களுடைய நுகர்ச்சியை அதிகரித்துக் கொள்ளுவதற்காகப் பயன்படுத்தக்கூடும் கூடுதல் வருமானங் களின் ஒரு சிறு பகுதி (fraction of additional incomes) இவ்வளவு என்று நமக்குத் தெரியவருமாயின், செலவினத்தில் ஏற்படும் கருதுகோளானதொரு மாற்றத்தால் (any postulated change in expenditure) மொத்த வருமானங்களில் முடிவாக ஏற்படக்கூடிய விளைவுகளைக் கணக்கிடுவது இயலும்—சான்றாக, இறுதிநிலைச் சேமிப்பு நாட்டமானது (marginal propensity to consume) $\frac{3}{4}$ என்பது தெரிந்தால், சாலை அமைப்பு வேலைகளில் (roads) ஏற்படும் £ 100 மில்லியன் அதிகரிப்பானது வருமானங்களின் முழுவதும் தழுவிய மட்டத்தில் (in the overall level of incomes) £ 400 மில்லியன் அதிகரிப்பை ஏற்படுத்தும். ஈண்டு ஒன்றை மனத்திற் கொள்ளவேண்டும். நடைமுறை வாழ்க்கையில், வருமான மாற்றத்திற்கும், அது செலவில் ஏற்படுத்தக்கூடும் பூரண சரிசெய்தலுக்கும் (full adjustment to expenditure) இடையே கால இடைவெளிகள் (time-lags) உள்ளன. என்னுடைய வருமானம் இன்று அதிகரிக்கின்றதெனக் கொள்வோம்; அதிகரித்த என் வருமானத்தின் முழு விளைவையும் அதிகரித்த செலவு வடிவில் நான் மாற்றவேண்டுமாயின் அதற்குப் பல வாரங்கள், ஏன் பல மாதங்கள்கூட ஆகும். ஒவ்வொன்றும் நிலைத்துச் செயல்பட ஆரம்பிப்பதற்குக் காலம் பிடிக்குமாதலால், குறுங்கால நுகர்ச்சி நாட்டமானது (the propensity to consume in the short run) நெடுங்கால நுகர்ச்சி நாட்டத்தினின்றும் கணிசமான அளவிற்கு வேறுபட்டதாகவேயிருக்கும். நெடுங்காலச் செலவு அல்லது சேமிப்பு நாட்டங்களின் (long-run spending or saving propensities)

அடிப்படையிலுள்ள பெருக்கியானது (multiplier) மொத்த வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களை உணர்த்துவதாக உள்ளது.

இந்த மாற்றங்கள் எத்தகையன என்பதனைப் பார்ப்போம். ஒரு குறிப்பிட்ட கால அளவு கடந்த பின்னர், செலவில் ஏற்படும் ஆரம்ப மாற்றத்தின் விளைவாக ஏற்படுபவையே இவ்வருமான மாற்றங்கள். குறிப்பிட்ட கால அளவு என்று ஈண்டுக் குறிப்பிடப் பட்டிருப்பது மக்கள் தங்களின் வருமானங்களில் ஏற்படும் மாற்றங்களுக்குத் தக்கவாறு தங்களது செலவினைப் பூரணமாகச் சரி செய்து கொள்வதற்கு ஏற்ற போதிய அளவு காலம் என்று பொருள்படும். அடுத்த மாதம் அல்லது அடுத்த இருமாதங் களில் நிகழக்கூடிய மொத்த வருமானங்களில் ஏற்படும் மாற்ற மானது, பெருக்கியானது (multiplier) உணர்த்தும் நெடுங்கால விளைவினைக் காட்டிலும் கணிசமான அளவிற்குச் சிறியதாகவே யிருக்கும்.

3. முதலீட்டின் ஏற்ற இறக்கங்களும் வருமானமும் (Investment Fluctuations and Income)

முதலீட்டுச் செலவில் (investment expenditure) ஏற்ற இறக் கங்கள் (fluctuations) இருப்பினும் அல்லது பொதுமக்களின் சிக் கனத்தன்மையில் ஏற்ற இறக்கங்கள் இருப்பினும், சேமிப்பிற்கும் முதலீட்டிற்குமிடையேயுள்ள சம நிலையின் விளைவுகளை நாம் தற்போது ஆராய்வோம். நுகர்ச்சி நாட்டமானது $\frac{3}{4}$ ஆக இருக் கும் ஒரு பொருளாதார அமைப்பில் முதலீட்டுச் செலவில் (investment expenditure) £ 50 மில்லியன் குறைகின்றதெனக் கொள்வோம். இதன் ஆரம்பமான விளைவினைப் பார்ப்போம். நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முதலீட்டுத் திட்டங் களில் (investment projects) ஏற்கெனவே வேலையில் ஈடுபட்டுள்ள வர்களின் வருமானங்களில் £ 50 மில்லியன் குறையும். இத்தகைய வருமானக் குறைவினால் செய்யப்படும் செலவும் குறையும். இந்த £ 50 மில்லியன் குறையாமல் இருந்தால், மக்கள் அதில் $\frac{1}{4}$ பங்கைச் சேமித்திருக்கக் கூடுமாதலால் உண்மையில் செலவானது முழுவதுமாக £ 50 மில்லியனுக்குக் குறையாமல், அவர்கள் செல வழித்திருக்கக்கூடிய அதன் ஒரு பகுதி அளவிற்கே குறையும்— அதாவது சுமார் £ 37. 5 மில்லியன் அளவிற்கே குறையும். செல வினத்தில் ஏற்படும் இத்தகைய குறைதலானது (reduction in expenditure) மற்ற வருமானங்களையும் குறையச் செய்யும்—இம்

முறை, இவ்வாறு நமக்கு ஏற்கெனவே மிகவும் பழக்கமான, தொடர் வரிசையில் (sequence) நீடித்துச் செல்லும். இதனால் ஏற்படும் தொடர் எதிர்விளைவுகள் (series of repercussions)—வருமானத்தில் ஏற்படும் மாற்றங்கள் (மில்லியன் £ களில்)—கீழ்க் கண்டவாறு இருக்கும் :

—50 —37·5 —28.1 —21·1 —15·8 முதலியன. பெருக்கியின் வாய்பாட்டிலிருந்து (from the multiplier formula) வருமானங்களின் முடிவான மொத்த மாற்றமானது (the total ultimate change in incomes) —Y(′)— :

$$I' \frac{1}{1-c} \text{ ஆகும்.}$$

$$= -50\frac{1}{1-\frac{3}{4}}$$

$$= -\times 50\frac{1}{\frac{1}{4}}$$

$$= -200.$$

எனவே, முதலீட்டுச் செலவில் £ 50 மில்லியன் குறைந்ததன் விளைவாக, பொருளாதார முறையில் இதன் செயல் விளைவு, வருமானங்களின் முழுவதும் தழுவிய மட்டத்தை (overall level of income) ஏற்கெனவே இருந்ததைக் காட்டிலும் £ 200 மில்லியன் குறைவாக இருக்க நேருகிறது.

உண்மையில், சேமிப்பு, முதலீடு இவைகட்கிடையேயுள்ள சமநிலையானது இதனால் பாதிக்கப்படவேயில்லை. மக்கள் தங்கள் வருமானத்தின் இறுதிநிலைக் கூடுதல்களில் (marginal increments to their income) கால் பங்கை சேமிக்கின்றனரெனில், வருமானங்கள் குறையும்போது £ 200 மில்லியன் மொத்த சேமிப்பானது £ 50 மில்லியனுகக் குறையும்—அதாவது, முதலீட்டில் என்ன மாற்றம் ஏற்பட்டதோ, அதே அளவு தொகையாகக் குறையும். மாற்றத்திற்கு முன்பு சேமிப்பும் முதலீடும் (saving and investment) சமமாக இருந்ததெனில், மாற்றத்தின்போதும், மாற்றத்தின் பிறகும் அவை சமமாகவே இருக்கும். இத்தகைய சமநிலையால் (equality) வருமானங்களின் மட்டமும் (the level of incomes) மாற்றமடையும். முதலீட்டு வீதத்தில் ஏற்படும் ஒரு குறைவானது (a fall in the rate of investment) ஒவ்வொருவரையும், பண அளவில், போதிய

அளவு ஏழ்மையாக்கிவிடுகின்றது; இப் புதிய சம நிலையிலுள்ள (new equilibriums) மொத்த சேமிப்புகளும் (total savings) சரியாக அதே அளவில் குறைக்கப்படும். மாருக, முதலீட்டு வீதத்தில் அதிகரிப்பு ஏற்படுமாஞல், கூடுதல் வருமானங்கள் (extra incomes) தோற்றுவிக்கப்படுகின்றன. இதஞல் மக்கள், தம் சேமிப்புச் சம நிலை விதத்தையும் (equilibriums rate of saving) சரியாக அதே அளவில் அதிகரித்துக்கொள்ள வழி ஏற்படுகிறது. முதலீடானது எப்போதுமே சேமிப்புகளைத் தோற்றுவிக்கும். நாம் முன்பு கண்ட வாறு சேமிப்பானது முதலீட்டின் சரிநிகரான் பணத்தோழஞகும். இத்தகையதொரு சரி செய்தல் முறை முழுவதற்கும் காலம் பிடிக்கும்; பெருக்கி வாய்பாடானது (multiplier formula), பொருளாதார முறை நோக்கிச் செல்லக்கூடிய சமநிலை எது என்பதனை உணர்த்தக்கூடும்.

ஒரு குறிப்பிட்ட முதலீட்டு வீதத்திலும், சராசரி நுகர்ச்சி நாட்டத்திலும் (average propensity to consume) சமுதாயத்தின் மொத்த (நாட்டு) வருமானம் என்ன என்பதனை, உண்மையில், கணக்கிடுவது இயலும்—இதஞல், நாட்டு வருமானமானது (கொடுக்கப்பட்டுள்ள செலவு நாட்டங்களிலும் சேமிப்பு நாட்டங்களிலும்) முதலீட்டு வீதத்திற்குச் (the rate of investment) சமமான சேமிப்புத் தொகையை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் இருக்க வேண்டுமென்பதாகிறது. (இந்த ஆய்வானது வருமான மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றியதாக இராமல், வருமானத்தின் மொத்த மட்டத்தைப் (total level of income) பற்றியதாக இருப்பதால், தற்போது, இறுதிநிலை (marginal) நுகர்ச்சி நாட்டத்தைக் காட்டிலும் சராசரி நுகர்ச்சி நாட்டத்தினையே (average propensity to consume) தற்போது சம்பந்தப்பட்டுள்ளது). இதனை, நாம் ஏற்கெனவே பயன்படுத்திய குறி அடையாளங்களைக் (symbols) கொண்டு நன்கு தெளிவு படுத்தலாம். அரசாங்கச் செலவையும் (government expenditure) அயல் நாட்டு வாணிபத்தையும் கருதாது விடுத்தால், மொத்த வருமானமானது (total income), முதற்கருவிப் பொருள்கள், நுகர்வோர் பொருள்கள், உற்பத்தி மதிப்புகளின் தொகைக்குச் (the sums of the values of productions of capital goods and consumer goods) சமமாக இருக்கும்;

அதாவது, $Y = I+C$ and $Y = C-I$.........(7)

மொத்த நுகர்வோர் செலவானது (total consumer expenditure)

வருமானத்திற்கும், சராசரி நுகர்ச்சி நாட்டத்திற்கும் (C′) சமமாகவே இருக்கும். அதாவது C=C′ (Y).

(7)-ல் உள்ள C-க்குப் பதிலாக இந்த வாய்பாட்டினை அதன் இடத்தில் வைத்துப்பார்த்தால்,

$$Y - C'(Y) = I \text{ என வரும்.}$$

ஆகவே,

$$Y = I.\ \frac{S.C.}{S.C. - C'}$$

முதலீட்டுச் செலவானது £ 2,000 மில்லியனுக்குச் சமமாக இருக்கும்போது, சராசரி நுகர்ச்சி நாட்டமானது (average propensity to consume) $\frac{3}{4}$ ஆக இருக்குமானால், அப்போது மொத்த நாட்டு வருமானமானது கீழ்க்கண்டவாறு இருக்கும்:

$$£\ 2{,}000 \text{ மில்லியன் } \times \frac{1}{1-\frac{3}{4}} = £\ 8{,}000 \text{ மில்லியன்.}$$

மக்கள் தம்முடைய வருமானத்தில் முக்கால் பங்கை நுகர்வார்களேயாகில், $\frac{1}{4}$ பங்கைச் சேமிப்பார்கள்—அதாவது ஒரு மொத்த தொகையான £ 2,000 மில்லியனைச் சேமிப்பார்கள். ஆக, சேமிப்பு முதலீட்டிற்குச் சமம்.

இவற்றில் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது யாதெனில், சேமிப்பு, முதலீடு ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள சமநிலை யல்ல; இந்தச் சமநிலையால் நாட்டு வருமானத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள்தாம் (fluctuations) (முதலீட்டு வீதத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்ற எடுகோளில்) மிகவும் முக்கியமாகக் கருதற்பாலனவாகும். இறுதிநிலை நுகர்ச்சி நாட்டமானது (the marginal propensity to consume) ஒப்பீடானதொரு பெரிய பகுதியாக (a relatively large fraction) இருப்பின்—வழக்கமாக இது இவ்வாறுதானுள்ளது—பெருக்கியின் (multiplier) மதிப்பும் அதிகமாக இருக்கும்; இது, முதலீட்டு வீதத்தில் (rate of investment) ஏற்படும் ஏறக்குறைய சிறிய மாற்றங்கள் மொத்த நாட்டு வருமானத்தில் (total national income) கணிசமான அளவிற்கு விளைவினைத் (mpact) தருவதாக உள்ளனவென்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது. உதாரணமாக, இறுதிநிலை நுகர்ச்சி நாட்டமானது (marginal propensity to consume) $\frac{95}{100}$ ஆக இருக்கும்போது, பெருக்கியானது 20 ஆக இருக்கும்; சேமிப்பு வீதத்

தில் ஏற்படும் £ 1 மில்லியன் மாற்றமானது (a change of £ 1 million), மொத்த வருமானங்களில் (total incomes) £ 20 மில்லியன் மாற்றத்தை ஏற்படுத்தும். வருமானத்தில் ஏற்படும் பெரும் ஏற்ற இறக்கங்கள் தேவையிலும் (demand) பெரும் ஏற்ற இறக்கங்களை (large fluctuations) ஏற்படுத்தும் ; இதன் காரணமாக, அத் தேவையினைச் சமாளிக்கும் பொருட்டுத் தொழில் முயல்வோர்கள் வேலைக்கமர்த்திக்கொள்ளும் உற்பத்திக் காரணிகளின் அளவுகளிலும் (amounts of factors of production) ஏற்ற இறக்கங்கள் ஏற்படும்.

4. வருமானமும் சேமிப்பு நாட்டமும் (Income and the Propensity to Save)

பொதுவாக மக்கள், நிலையானதொரு வருமானத்தில் (constant income) சேமிப்பு, செலவழித்தல் ஆகியவற்றில் ஏறக்குறைய உறுதியான கொள்கைகளையே கடைப்பிடிக்கும் வழக்கமுடையவர்களாக இருக்கின்றனரென்பதை ஏற்கெனவே பார்த்துள்ளோம்; இதன் காரணமாகவே, நுகர்ச்சி நாட்டத்தில் (propensity to consume) உடனடியானவையும் கணிசமான அளவில் உள்ளனவுமாகிய மாற்றங்கள் (sudden and substantial changes) எவையும் அவ்வளவாக ஏற்படுவதில்லை. ஆயினும், அத்தகைய மாற்றங்கள் ஏற்படுவது இயலாது எனவும் கூறுவதற்கில்லை. சான்றாக, 'போர் வரப்போகின்றதென்று 'பீதி' (war scare) ஏற்படும்போது, நுகர்வோர்கள் (consumers), பொருள்களின் அளிப்பு, எதிர்காலத்தில் குறைந்துவிடுமோ என்ற அச்சத்தால், ஏராளமான அளவு பொருள்களை வாங்கி இருப்பாக வைத்துக்கொள்வார்கள். இதனால் அவர்களின் நடப்புச் சேமிப்பு வீதமானது (current rate of saving) வெகுவாகக் குறையும். அண்மையில் உள்ள எதிர்காலத்தில் (in the near future) விலைகள் குறையும் என்னும் எண்ணமானது இதற்கு எதிரிடையானதொரு விளைவினை ஏற்படுத்தும்; நுகர்வோர்கள் எதிர்பார்க்கும் விலைக் குறைவினால் வரக்கூடிய பயனை உத்தேசித்து, தங்களால் இயன்றமட்டும் செலவு செய்தலை ஒத்திப்போடுவர். இதைப் போன்றே, வாணிபச் சேமிப்பிலும் (business saving) சில சமயங்களில் உடனடியானவையும் (sudden) கணிசமானவையுமான (substantial) ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன; உதாரணமாக, கம்பெனிகள், தமக்கு எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய கடன் வசதிகளைப்பற்றிய கருத்துகளில் மாற்றம் காணப்படுமாயின்,

அவைகளுடைய நடப்பு இலாபங்களில் (current profits) அதிக மான (அல்லது குறைவான) பகுதியை எடுத்துக் காப்பு நிதியாக வைத்துக்கொள்ளும்; இதே போன்று, பிரித்துக் கொடுக்கப்பட்ட அல்லது பிரித்துக் கொடுக்கப்படாத இலாபங்களின்மீது விதிக்கப் படும் வரியில் ஏற்படும் ஒரு மாற்றமானது (a change in the rate of tax on distributed or undistributed profits) மேற் கூறப்பட் டவை போன்ற விளைவுகளை ஏற்படுத்தும்.

சேமிப்பு நாட்டத்தில் (propensity to save) ஒரு மாற்ற மானது, ஏற்படுத்தும் மாற்றத்திற்கொப்பாகவே, நாட்டு வரு மானத்தில் விளைவுகளை உண்டுபண்ணுகிறது. ஆனால், இதன் விளைவுகள் தலைகீழாக இருக்கின்றன. வருமானங்களின் மட்ட மானது (the level of incomes) (அ) முதலீட்டு வீதம் (ஆ) பெருக்கி ஆகியவைகளைப் பொறுத்துள்ளது; சேமிப்பு நாட்டத்தில் ஏற் படும் ஒரு மாற்றமானது, பெருக்கியின் மதிப்பில் (the value of the multiplier) மாற்றத்தை உண்டுபண்ணுகிறது. பொருளாதார அமைப்பொன்றில் முதலீட்டு வீதமானது £ 200 மில்லியனாக நிலையானதாக வைத்திருக்கப்படுமானால், சேமிப்பு நாட்டமானது 1/10 ஆக இருந்தது 1/5 ஆக அதிகரிக்குமானால், பெருக்கியானது 10-லிருந்து 5-ஆகக் குறையும்; எனவே, முழுவதும் தழுவிய வரு மான மட்டமானது (overall level of income) £ 2000 மில்லியனி லிருந்து £ 1,000 மில்லியனாகக் குறையும். ஆகவே, சேமிப்பு நாட்டித்திலேற்படும் ஓர் அதிகரிப்பால், முதலீட்டு வீதத்தி லேற்படும் ஒரு குறைவினால் (a fall in the rate of investment) ஏற்படும் விளைவுகளை சரிநுட்பமாக ஒத்த விளைவுகள் வரு மானங்களின் மட்டத்தில் (the level of incomes) ஏற்படும்.

சேமிப்பு நாட்டத்திலேற்படும் ஓர் அதிகரிப்பானது, சேமிப்பு, முதலீடு ஆகிய இவ்விரண்டிற்குமிடையேயுள்ள சம நிலையை (equality) நிலைகுலையச் செய்யுமா? செய்ய இயலாது என்றே நிச்சயமாகக் கூறலாம். சற்றுமுன்னர்க் கொடுக்கப்பட்ட உதாரணத்தில் சமூகமானது, நாட்டு வருமானம் £ 2,000ஆக இருக்கும்போது, தனது வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைச் சேமித்ததென்றும், நாட்டு வருமானம் £ 1,000ஆக இருக்கும் போது ஐந்தில் ஒரு பங்கைச் சேமித்ததென்றும் பார்த்தோம். இவ்விரு நிலைகளிலுமே சேமிக்கப்பட்ட மொத்த அளவு (total amount) ஒன்றுதான்—அதாவது, £ 2,000 மில்லியன். வேறு

வழியில் கூறப்போனல், சேமிப்பு நாட்டத்திற்கும் (propensity to save) சேமிக்கப்பட்ட மொத்த அளவிற்கும் (total amount saved) எவ்விதமான நேரடியானதும், உடனடியானதுமான தொடர்பும் இல்லே. முன்னதாகக் கூறப்பட்டுள்ளது (சேமிப்பு நாட்டம்) ஏற்கெனவே நாம் ஆராய்ந்த உளப்பாங்கான காரணிகளால் (psychological factors) தீர்மானிக்கப்படுகிறது; உதாரணமாக, எதிர்காலத்தைப்பற்றித் தற்போதுள்ள எண்ணம், சேமிப்பவரை நம்பி வாழுகின்றவர்களின் எண்ணிக்கை போன்ற உளப்பாங் கான காரணிகளைக் கூறலாம். பின்னதாகக் கூறப்பட்டுள்ளது (சேமிக்கப்பட்ட மொத்த அளவு) முற்றிலும் முதலீட்டு வீதத் தால் தீர்மானிக்கப்படுகிறது. பொருளாதார முறையில், சேமிப்பு நாட்டத்தின் பங்கு, சேமிப்புகளின் மொத்த அளவை ஆளுவதில் இல்லே; எந்த ஒரு குறிப்பிட்ட முதலீட்டு வீதத்தினேடும் தொடர்பு கொண்டுள்ள வருமான மட்டத்தை (level of income associated with any given rate of investment) நிர்ணயிப்பதில்தான் அது தன் பணியினைப் புரிகிறது.

ஒரு முக்கிய நிகழ்ச்சியினை ஈண்டு நோக்குவோம். தனி நபர்கள் தங்களது சேமிப்பு வீதத்தைத் (rate of saving) தமது விருப்பம்போல் மாற்றிக்கொள்ளலாம்; ஆனல், நாடு முழுவதற் கும் இதனை நோக்கும்போது இந் நிலே வேருக உள்ளது; நாடு, தனது முதலீட்டு வீதத்தை மாற்றினலொழிய, தனது சேமிப்பை யும் மாற்றி அமைத்துக்கொள்ள முடியாது. சமூகம் முழுவதற் கும் பார்க்கும்போது, முதற்கருவிப் பொருள்களில் (capital goods) ஏற்படும் அதிகரிப்பே சேமிப்பு எனப்படும்; ஒன்று அல்லது மற்றெரு வகையில் பண உரிமைகளின் இருப்பில் ஏற்படும் ஒரு அதிகரிப்பானது (an increase in the stock of monetary claims) சமூக செல்வத்தின் மொத்தத்திற்கு (the total wealth of the society) எந்த ஓர் அதிகரிப்பையும் ஏற்படுத்துவதில்லே. ஒரு தனி நபரானவர் நோட்டுகள் அல்லது பாங்கு வைப்புகளைக் கொண்ட தனது இருப்புகளைக் கூடுதலாகச் செய்வதன்மூலம் (by adding to his holdings of notes or bank deposits) தனது சேமிப்பை அதிகரித்துக்கொள்ள முடியும். ஆனல், அவர் அப்படிச் செய்வதன்மூலம் பொருள்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களின் (producers of goods) வருமானங்களைக் குறையச் செய்கின்ருர்; அவர் அவ்விதம் சேமிக்க முடிவு செய்ய

வில்லையெனில், அவ்வுற்பத்தியாளர்களின் பொருள்களை அவர்கள் வாங்கியிருக்கக்கூடுமல்லவா ?

இதனுல் சமுகமானது சிக்கனத்தை மேற்கொள்வதில் எவ்வித பொருளாதார முக்கியத்துவமும் இல்லையென்பது பொருளாகுமா ? சேமிப்பின் மொத்த அளவானது (the total volume of saving) முதலீட்டு வீதத்தால் (rate of investment) நிர்ணயிக்கப் படுவதால், மக்கள் தமது வருமானத்தில் பெரும் பகுதியை சேமிக்கின்றுர்களா? இல்லையென்பது முக்கியமல்லாததொரு பிரச்சினையாகவேயுள்ளது. அப்படியே அவைகளை முக்கியமானவைகளாக எடுத்துக்கொண்டாலும், அதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் முடிவுகள் குற்றமற்றவைகளாகவும் இருத்தலரிது. சேமிப்புகளின் அளவானது முதலீட்டால் தீர்மானிக்கப் பட்டபோதிலும், ஒரு நாட்டின் பண வருமான மட்டத்தை (the level of money incomes in an economy) நிர்ணயிப்பதில் சேமிப்பு நாட்டமானது (propensity to save) முக்கியமானதொரு பணியினை ஆற்றுகிறது. ஒரு குறிப்பிட்ட முதலீட்டு வீதமானது (a certain rate of investment) குறைந்த மொத்த வருமான மட்டத்தை ஏற்படுத்துகிறதா அல்லது அதிக மொத்த வருமான மட்டத்தை (high level of total money incomes) ஏற்படுத்துகிறதா என்பதில் பெருமளவு வேறுபாடு அடங்கியுள்ளதென்பதனை அடுத்த அத்தியாயத்தில் காண்போம். மேலும் சேமிப்பு நாட்டமானது (propensity to save) வருமான மட்டத்தில் (level of incomes) தனக்குள்ள ஆட்சியினுல் (through its influence), முதலீட்டு வீதத்தை மறைமுகமாக பாதிக்கக்கூடும். மற்றவைகள் சமமாக இருக்கும்போது (other things being equal), வருமான மட்டத்தினுல் எற்படும் குறைவானது (a fall in the level of incomes) நுகர்ச்சிப் பொருள்களுக்கான தேவையிலும் குறைவை உண்டுபண்ணும்; இதனுல் அப் பொருள்களை உற்பத்திசெய்யும் தொழில்களில் செய்யப்படும் முதலீடும் குறையும்.

எனவே, முதல் ஆக்க முறையானது (the process of income formation) முதலீட்டுச் செலவு வீதம் (the rate of investment expenditure), தங்களின் வருமானங்களைச் செலவழித்தல், சேமித்தல் சம்பந்தமாக ஒரு சமூகத்தில் உள்ள மக்களின் பழக்க வழக்கங்கள் ஆகிய இவ்விரண்டுடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டதாகவுள்ளது. தற்போது நமது ஆய்வினை, வருமானங்

களின் மட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் (change in the level of incomes) எவ்வாறு விலைகளின் மட்டத்தையும் வேலை மட்டத்தையும் (level of prices and employment) பாதிக்கின்றன என்னும் பிரச்சினையின் திசையை நோக்கிச் செலுத்துவோம்.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

Kenyes, 'The General Theory of Employment, Interest and Money', Ch. 10.

Hansen, 'A Guide to Keynes', Chs. 4, 9, 11 and 12.

Dillard, 'The Economics of J. M. Keynes', Ch. 5.

Robinson, 'An Introduction to the Theory of Employment,' Chs. III–V.

27. விலைகளிலும் வேலையிலும் ஏற்ற இறக்கங்கள்
(Fluctuations in Prices and Employment)

1. பணவீக்கமும் பண வடிப்பும் (Inflation and Deflation)

சென்ற இரு அத்தியாயங்களிலும் பொருத்தப்பட்டுள்ள கோட்பாட்டு ஆயுதப் பெட்டியின் (theoretical tool-box) துணை கொண்டு, பொருளாதார நடவடிக்கையின் அழிவுதரும் ஊசலாட்டங்களைப்பற்றி (இத்தகைய ஊசலாட்டங்கள் மேற்கத்திய சமூகங்களை, அவைகள் தொழில்மயமாக்கப்பட்ட நாள் முதற் கொண்டு, சீரழித்து வருகின்றன) நன்கு தெரிந்துகொள்ள முடிந்தது. பொதுவாக, தொழில் முயல்வோர்களின் உற்பத்திக் காரணிகளுக்கான தேவையானது (the demand of entrepreneurs in general for factors of production) அவர்கள் உற்பத்தி செய்து முடித்த பொருள்களுக்கான தொகுப்புத் தேவையையே பெரிதும் எதிர்நோக்கியுள்ளதென்பதனை ஏற்கெனவே பார்த்துள் ளோம். இரண்டாவதாக, நுகர்வோர் பொருள்களுக்கான தேவையானது (the demand for consumer goods) இயல் தகுதி வாய்ந்த நுகர்வோர்கள் (potential buyers) பெறுகின்ற வருமானங் களின் மட்டத்தைப் (the level of incomes) பொறுத்துளதென்றும், முதலீட்டுச் செலவானது (investment expenditure) தொழில் முயல்வோர்களது இலாப எதிர்நோக்குகளுடன் (profit expectations) நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதென்றும், அதன் காரணமாக அது, அவர்கள் உற்பத்தி செய்கின்ற முடிவான பொருள்களுக்கான தேவையுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதென்றும் நாம் ஏற்கெனவே பார்த்துள்ளோம். கடைசியாக, வருமானங்களின் மட்டமானது (the level of incomes) ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்குக் கைமாறு கின்ற வட்ட ஓட்டத்தினைக் (circular flow) கொண்டதாக

இருக்கிறதென்பதனையும், எந்த ஒரு சமயத்திலும் அதன் அளவானது முதலீட்டு வீதத்தாலும் (rate of investment) இறுதிநிலை நுகர்ச்சி நாட்டத்தாலும் (marginal propensity to consume) தீர்மானிக்கப்படுகிறதென்பதனையும் முன்பே கண்டோம்.

எந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் விலையும் தேவையினுலும் (demand)—நுகர்வோர்கள் அப் பொருளின்மீது செலவழிக்கத் தயாராக இருக்கும் தொகையின் அளவு-அளிப்பினுலும் (supply) —நடப்பில் அது உற்பத்தி செய்யப்படும் அளவு—தீர்மானிக்கப்படுகிறதென்பதனை இந் நூலின் ஆரம்பப் பகுதியிலேயே ஆராய்ந்துள்ளோம். குறிப்பிட்ட பண்டங்களுக்குப் பொருந்துவதாக உள்ளதே, பண்டங்கள் முழுமைக்கும் பொருந்துவதாக உள்ளது—அதாவது, பொதுவான விலை மட்டமானது (general price level) தொகுப்புத் தேவைக்கும் (முதற்கருவிப் பொருள்கள், நுகர்ச்சிப் பொருள்கள் இவைகளை வாங்குகின்ற எல்லா வாங்குவோர்களது செலவு) தொகுப்பு அளிப்பிற்கும் (நடப்பில் அங்காடிக்கு வருகின்ற பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் பருப்பொருளியலான அளவு (Physical volume) இடையேயுள்ள தொடர்பு முறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். பணத்திற்கான தொகுப்புத் தேவையானது (Aggregate Money Demand) கிடைப்பதாகவுள்ள பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் பருப்பொருளியலான அளிப்பிற்குத் தக்கவாறு அதிகரிக்கும்போது (rises in relation to the physical supply of goods and services available), பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் குறிப்பிட்ட உண்மைக் கணியங்களில் (given real quantities of goods and services) அதிகமான வருமானம் [பணவடிவில்] செலவழிக்கப்படுகின்ற தென்பது பொருள் இதனுல் இயல்பாக நிகழக்கூடும் ஒரே விளைவு யாதெனில், பொதுவாகப் பொருள்களின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பாகும். பண்டங்களின் நடப்பு அளிப்பிற்கு ஒப்பீடாக (relative to the current supply of goods) பணவருமான மட்டத்தில் (in the level of money income) ஏற்படும் அதிகரிப்பே பணவீக்கம் (inflation) ஆகும். இதற்கு நேரெதிரான நிலை—பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் அளிப்பிற்கொப்பீடாக பணவருமானங்களின் மட்டத்தில் (in the level of money incomes) ஏற்படும் குறைவு—பணவடிப்பு (deflation) எனப்படும்.

பொதுவாக, சற்றுப்பரந்த கருத்தில் பணவீக்க மென்னும் சொல், வெகு அதிகமான பணத்தேவையின் அழுத்தமானது

(the excess pressure of monetary demand) விலைகளை வெகு விரைவாக அதிகரிக்கச் செய்யும் ஒரு நிலையை உணர்த்துவதாகும். இதைப்போன்றே பண வடிப்பு (deflation) என்னும் சொல், பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் நடப்பு அளிப்பிற்கும் (current supply of goods and services) குறைவாகப் பணத்தேவை குறைந்து விட்டதன் காரணமாகப் பொதுவிலை மட்டமானது (general price level) குறைந்து செல்லும் ஒரு நிலையை உணர்த்துவதாகும். இப்படிப் பணவீக்கத்தை அதிகரித்து, விலைகளைக்கொண்டு அடையாளங் கண்டுகொள்ளலும், பணவடிப்பைக் குறையும் விலைகளைக் கொண்டு அடையாளங் கண்டுகொள்ளலும், பலவாற்றாலும் மிக்க வசதியாக இருப்பினும், அதில் இடர்ப்பாடுகளும் உள்ளன. சான்றாக, பணவீக்கமானது, (inflation) பொது விலை மட்டத்தில் அதிகரிப் பேதுமின்றியும் நிகழக் கூடும் ; உற்பத்தியளவிற் கொப்பீடாகப் பண வருமானங்கள் அதிகரிக்கக்கூடும். அதேசமயத்தில் இவ் விளைவுகள் உற்பத்திச் செலவுகளில் ஏற்படும் குறைவுகளால் (இவைகள், விலைகள் குறைதலை உண்டு பண்ணும்) சரிக்கட்டப் படக்கூடும் (offset). இதைப்போன்றே, பண வருமானத்தில் ஏற்படும் பணவடிப்புக் குறைவின் (deflationary fall in money income) விளைவுகள், உற்பத்திச் செலவில் ஏற்படும் அதிகரிப்புகளால் மறைக்கப்படக்கூடும்—ஆக விலைகளில் ஏற்படும் இத்தகைய முரண்பாடான அழுத்தச் சக்திகள் (conflicting pressures on prices) ஒரு நிலையான விலை மட்டம் (a stable price level) ஏற்படும் அளவிற்கு ஒன்றையொன்று சரிக்கட்டிக்கொள்வதாக (offsetting one another) இருக்கின்றன. இதனை வேறு வழியில் கூறப்போனால், விலைகளின் அதிகரிப்பானது பணவீக்கத்தால் மட்டுமே ஏற்படுவதில்லையெனக் கூறலாம் ; அதிகரித்த விலைகள், தேவையின் அழுத்தத்தால் ஏற்படுகின்றனவென்று கூறுவதைக் காட்டிலும், உற்பத்திச் செலவுகளில் ஏற்படும் மாற்றங்களால் (உதாரணமாக, இறக்குமதி செய்யப்படும் கச்சாப் பொருள்களின் அதிகரித்த விலைகள்) ஏற்படக்கூடுமெனலாம். இதைப்போன்றே, விலைகளில் ஏற்படும் குறைவானது பண வடிப்புச் சூழ்நிலையின் அறிகுறியுமாகாது; அதிகமான உற்பத்தித்திறன் (greater productive efficiency) அல்லது கச்சாப் பொருள்களின் குறைந்த விலைகள் (lower raw material costs) உற்பத்திச் செலவுகளைக் (உற்பத்தியளவிற்கொப்பீடாகப் பண வருமானங்களில் அதிகரிப்பு ஏற்பட்டபோதிலும் விலைகள் குறைவாக இருக்குமளவிற்கு) கணிசமான அளவிற்குக் குறையச்செய்யக்கூடும். முக்கியமானதொன்று நன்கு

கவனிக்கப்படுதல் வேண்டும். அறிகுறியைக் (symptom) கொண்டு பிணி இன்னதென்று கூறுவதில், அறிகுறி ஒன்ருக இருக்கப் பிணி வேருக இருக்கும் குழப்பம் இதிலும் ஏற்படுவதுண்டு. பொதுவான விலை மட்டத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (a rise in the general price level) பணவீக்கத்தை உண்டு பண்ணக்கூடிய தொரு விளைவாகும்; ஆனல், அதுவே பண வீக்கமாகிவிடாது. பணவீக்கமென்பது பண வருமானங்களுக்கும் (money incomes) அளிப்பின் அளவிற்கும் (volume of supply) இடையேயுள்ள தொடர்பில் ஏற்படும் ஒரு நிலைகுலைதலாகும்—விலைகளின் அதிகரிப்பானது அத்தகைய நிலைகுலைதலுக்கு ஒரு சான்ருக மட்டுமே உள்ளது.

இருப்பினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பணவீக்கமானது பொதுவான விலை மட்டத்தில் அதிகரிப்புடன் தொடர்பு கொண்டுள்ளதாயும், பணவடிப்பானது (deflations) விலைகளின் இறக்கத்துடன் (fall in prices) தொடர்பு கொண்டதாயுமுள்ளன. நடைமுறையில் இத்தகைய போக்குகள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதனை ஆராய்வதற்கு முன்னர், பொது விலை மட்டத்தில் அத்தகைய மாற்றங்கள் ஏன் விழையத்தக்கனவாக இல்லை (undesirable) என்பதனை ஆராய்வது நலம். ஒரு பெரிய இடர்ப்பாடு யாதெனில், பொது விலை மட்டங்களில் ஏற்படும் கணிசமான மாற்றங்கள் (substantial changes in the general level of prices) எல்லையின்றி வருமான மறுபகிர்வை எற்படுத்துபவையாக இருக்கும். உதாரணமாக, வேலை நிறைவின்போது, வரி விதிப்பில் அதிகரிப்பு ஒன்றும் செய்யப்படாமல், அரசாங்கத்தின் செலவு (government expenditure) அதிகரிக்கப்படுகிறதென்றும், இதன் காரணமாக, பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் நிலவும் அளிப்பானது அதிகரிக்கப்பட இயலாததொரு சமயத்தில் ஆரம்ப விலை மட்டத்தில் (at the initial level of prices) பண வருமானங்களின் முழுவதும் தழுவிய மட்டம் (the overall level of money incomes) அதிகரிக்கப்படுகிறதெனவும் கொள்வோம். இத்தகைய அதிகமான தேவை நெருக்கத்தால் நடப்புக் கூலி வீதங்களின் (current wage rates) உண்மையான மதிப்பு இயல்பாகக் குறைக்கப்படுகிறது. தங்களுடைய அங்கத்தினர்களின் உண்மை வருமானங்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொணரும் பொருட்டு, தொழிற் சங்கங்கள் (trade unions) அதிகமான கூலிகளைக் (higher wages) கேட்க ஆரம்பிக்கும். ஆனல், கூலி சம்பந்த

மான உடன்பாட்டு ஏற்பாட்டிற்கும் (wage negotiation) சரிசெய்த லுக்கும் (adjustment) காலம் பிடிக்கும். இவ்வாறு கூலிகள் சரி செய்யப்படும்வரையிலும், உழைப்பின் உண்மையை வருமானம் (the real income of labour) குறைக்கப்பட்டே இருக்கும்; கூலி களில் கடைசியாகச் சரிசெய்தல்கள் செய்தான பிறகு, தேவை யின் அமுக்கமானது (the pressure of demand) கூலி பெறு வோர்கள் கூடுதலாகச் செலவு செய்வதன் காரணமாக அதிகரிக் கப்படக்கூடும்; தேவையதிகரிப்பதால் விலைகள் உயரக்கூடும்; இதனால் கூலி சமரசத்தை மீண்டும் செய்யும்படியாக இருக்கும்.

கூலிகளில் எப்படியோ, அதைவிட அதிகமாகச் சம்பளங்கள் விஷயத்திலும் இது உண்மையாக இருக்கிறது. பொதுவாக, கூலி களைவிட சம்பளங்கள் (salaries) பொதுவாகவே மாற்றத்தை அடைகின்றன. ஆனால், உற்பத்திச் செலவுகளின் மற்ற இனங்க ளான வட்டி, வாடகை இவற்றிலும் ஓய்வுச் சம்பளங்களைப் பெறுகின்றவர்களின் வருமானங்களிலும் சரிசெய்தலுக்கான கால இடை வெளி (time-lag for adjustment) யாவற்றிலும் இருப் பதைவிட மிக அதிகமாக இருக்கிறது. இத்தகைய வருமானங்கள் பழக்கமாகப் பணக்கணக்கில்தான் (in money terms) நிர்ணயிக்கப் படுகின்றன. மேலும், அவைகள் ஒருதரம் நிர்ணயிக்கப்பட்டால், பிறகு கணிசமான அளவு காலத்திற்கு மாற்றப்படுவதில்லை. எனவேதான், சம்பளம் பெறுகின்றவர்களுக்கு, பொது விலையில் அதிகரிப்பு ஏற்பட்ட காலத்தும், தங்களது வருமானம் அதற் கேற்ப மாற்றமடையாமல் நிலையாக இருக்கின்றது. இதன் விளை வாக அவர்களது உண்மை வருமானம் குறைவதால், அதனால் வரும் நஷ்டத்தை அவர்கள் தாங்கவேண்டியுள்ளது. இவ்வாறு உற்பத்திச் செலவுகளில் மாற்றமேதுமின்றி, விலைகள்மட்டும் அதிகரித்துச் செல்லுமானால், இலாபங்கள் ஏறுமாறான விகிதத் தில் அதிகரித்துச் செல்லும் (result in a disproportionate rise in profits). எனவே, பணவீக்க விலை அதிகரிப்பானது (inflationary rise in prices) உண்மை வருமானத்தை இலாபம் ஈட்டுபவர்களுக் குச் (profit-earners) சாதகமாகவும், கடனீவோர் நிலச்சுவான் தாரர் போன்ற நிலையான வருமானத்தைப் பெறுபவர்களுக்கு (fiexd-income receivers) பாதகமாகவும், மறுபகிர்வு (re-distribute) செய்கிறது. கூலிபெறுபவர் (wage-earner) தமது வருமானத்தை விலைகளின் அதிகரிப்பிற்கேற்பச் சரி செய்துகொள்ளமுடியும்; ஆனால் விலைகளின் அதிகரிப்பிற்கும் கூலிகள் அவ்வதிகரிப்பை ஈடு

செய்யும்வகையில் அதிகரிப்பதற்குமிடையே வழக்கமாக ஒரு கால இடைவெளி (time-lag) இருந்தே தீரும். இதன் காரணமாக தொழிலாளர்களின் நிலை மோசமாகும். ஆனால், பணவடிப்பு காலத்தின்போது (people in receipt of fixed incomes) சரிநுட்ப மாக இதற்கு மாறான நிலை ஏற்படுகிறது. பணவடிப்பு காலத்தில் விலைகள் குறைவதால், நிலையான வருமானங்களைப் பெறும் மக்கள் (people in receipt of fixed incomes) தம் வருமானங்களின் உண்மை மதிப்பானது, விலைகளின் குறைவால் உயர்வதால் இலாபமடைவர். அதேசமயத்தில், இலாபம் ஈட்டும் துறைகளில் உள்ளவர்கள், உற்பத்திச் செலவுகள் (costs of production) விலைகளைப்போல் அவ்வளவு விரைவாக இறங்குவதில்லையாகையால், நஷ்டமடைவர். இச் சூழ்நிலையில், கூலியீட்டுபவரின் (wage earner) நிலையைப் பார்ப்போமானால், அவர் ஓர் இடை நிலையானதொரு நிலையிலிருப்பது தெரியவரும்; அவர் கூலியானது சரி செய்யப்படு வதில் கால இடைவெளி இருக்குமாதலால் அக்கால இடைவெளி யில் அவருடைய கூலியின் உண்மை மதிப்பு (real value) உயரும்.

ஆக, பணவீக்க காலங்களிலும், பணவடிப்பு காலங்களிலும் இலாபம் ஈட்டுபவர்கள் (profit-earners), நிலையான வருமானத் தைப் பெறுபவர்கள் (fixed-income receivers) இவர்களுக்கிடையே உண்மை வருமானத்தின் ஒரு மறுபகிர்வு (a redistribution of real income) ஏற்படுகிறது. இத்தகையதொரு மறுபகிர்வானது விழையத்தக்கதா, இல்லையா என்பது இத்தகைய வெவ்வேறு பகுதியைச் சார்ந்த மக்கள், அவர் தாம் பெறுகின்ற ஒப்பீடான செல்வம் அல்லது ஏழ்மையைப் பொறுத்துள்ளது. இந்த வகை யில், நிலை எத்தகையதாக இருப்பினும், சம்பந்தப்பட்ட மறு பகிர்வானது (redistribution involved) ஒழுங்கீனமாகவும் (haphazard) தற்செயலாகவும் (fortuitous) அமைவதால், இதனை அவ்வளவு சிறந்ததென்று கூறுவதற்கில்லாத ஒரு நிலையே ஏற்படுகிறது.

இன்னும் மற்ற ஆபத்துகளும் உள்ளன. பொதுவான விலை மட்டத்தில் அதிகரிப்பு ஏற்படுமாயின், அது நாட்டின் ஏற்றுமதி களை பாதிக்கும். அயல்நாட்டு அங்காடிகளில் அவ்வாறு அதி கரிப்பு ஏற்பட்டுள்ள பண்டங்களின் விலைகள் அதிகமாக இருக்கு மாகையால், அத்தகையதொரு பொருளாதார நிகழ்ச்சி நாட் டிற்குப் பயன் தருவதாக இராது. குறிப்பாக, ஐக்கிய அரசாங்

கம் (United Kingdom) போன்று அயல்நாட்டு வாணிபத்தையே (foreign trade) நம்பியிருக்கும் நாடுகளுக்கு இது ஒரு பாதக நிகழ்ச்சியாகவேயிருக்கும். விலைகள் அதிகரித்துள்ள காலங்களில் தொழில் திறமையும் குறையும். இத்தகைய காலங்களில் தங்களது இலாபங்கள் அதிகமாக்கப்படுவதால், தொழில் முயல்வோர்கள், தமது தொழில்களில் உற்பத்திச் செலவுகளைக் குறைத்து, சிக்கன நலனைக் கைக்கொள்ள வேண்டுமென்ற அக்கறையேதுமின்றியிருப்பர். எல்லாவற்றிலும் மிக முக்கியமாக, விலைகள் மிக விரைவாக அதிகரித்துச் செல்லுதலால், நாட்டின் செலாவணிமீது (national currency) மக்கட்கு நம்பிக்கை குறையும். விலைகள் கொடூரமாக அதிகரித்துச் செல்லுதலால், எந்த ஒரு காலத்திற்கும் இருப்பாக வைக்கப்படும் பணம், அதனுடைய உண்மையான மதிப்பில் கணிசமான அளவை இழந்துகொண்டே செல்லும். இந்த நிலை இவ்வாறு நீடிக்குமானால் பொருள்களுக்கு மாற்றாக ஒருவரும் பணத்தைப் பெற்றுக்கொள்ள முன்வரமாட்டார்கள். பணமாற்றுகளின் அடிப்படையில் இயங்கி வரும் தேர்ச்சித் திறன் வாய்ந்ததொரு பொருளாதார முறையை, இந்நிலை சீர்குலையச் செய்யும். இத்தகையதொரு சீரழிவானது, 1920ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகளின் ஆரம்பத்தில் (early 1920's) ஜெர்மனியிலும், இரண்டாவது உலகப்போரையடுத்த உடனடியான ஆண்டுகளில் பல ஐரோப்பிய நாடுகளிலும் (உதாரணமாக ஹங்கேரி) நிலவிய பாயும் பணவீக்கத்தினால் (runaway inflation) நிச்சயமாகக் கொண்டு வரப்படும். கோட்பாட்டளவில் பார்க்கும்போது, இவற்றிற்கு எதிரிடையான நிகழ்ச்சிகள் யாவும், விலைகள் குறையும்போது குறிப்பாக ஓர் ஆபத்துக் காணப்படுகிறது. விலைகள் குறைவதால் பணத்தின் உண்மை மதிப்பு (real value of money) அதிகரிப்பதன் காரணமாக மிகவும் அவசியம் நேர்ந்தாலொழிய, மற்றப்படி ஒருவரும் பணத்தைச் செலவிட (spend) விழையமாட்டார்கள். இவ்வாறு செலவானது தடுக்கப்படுவதால், தேவை (demand), வேலை (employment), வருமானங்கள் (incomes) மேற்கொண்டும் குறைவதற்கு அது காரணமாக இருக்கும்.

பொது விலை மட்டத்தில் (general price-level) ஏற்ற இறக்கங்களை (fluctuations) உண்டுபண்ணுவதால் பணவீக்கமும் (inflation) பணவடிப்பும் (deflation) விரும்பத்தகாதனவாக உள்ளன. கடந்த காலங்களில், அவைகளின் உள்ளார்ந்த தீமைகளால்

(inherent evils) தீமை நேராதவாறு, வேலை மட்டத்தில், பண வீக்கம், பணவடிப்பு இவற்றின் போக்குகளால் (inflationary movements on the level of employment) ஏற்பட்ட விளைவுகள் பாதுகாப்பளித்தன. இவற்றைப்பற்றி தற்போது நாம் ஆராயத் தலைப்படுவோம்.

2. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வாணிபச் சகடம் (The Historical Trade Cycle)

இரண்டாவது உலகப்போர் துவங்குவதற்கு ஏறக்குறைய ஒரு நூற்றுண்டிற்கு முன்னர், உலகத்திலுள்ள, அநேகமாக ஒவ்வொரு தொழிலியல் பொருளாதார முறையிலும் (almost every industrialised economy in the world) பணவீக்கம், பண வடிப்பு இவற்றின் காலங்கள் மாறி மாறித் தொடர்ந்து இருந்து கொண்டேயிருந்தன—பூரிப்புக் காலங்களும் (booms) மந்த காலங் களும் (slumps) அடுத்தடுத்துத் தொடர்ந்து இருந்துகொண்டே யிருந்தன. போர் நடந்த ஆண்டுகளில் தவிர்த்து, இவ்வாறு பூரிப் புக் காலமும் மந்த காலமும் மாறிமாறித் தொடர்ந்து இருந்து கொண்டேயிருந்தன. ஒரு பூரிப்புக் காலத்திற்கும் மற்ெருரு பூரிப் புக் காலத்திற்கும், அதுபோல் ஒரு மந்த காலத்திற்கும் மற்ெருரு காலத்திற்குமிடையே எட்டு அல்லது பத்தாண்டுக் கால இடை வெளியிருந்தது. இத்தகைய தொடர் நிகழ்ச்சியே வாணிபச் சகடம் (trade cycle) எனப்பட்டது. வாணிபச் சகடமென்பது, மேற்கத்திய நாடுகளின் முதலாளித்துவப் பொருளாதார முறை களின் (capitalistic economics of the western world) உள்ளார்ந்த தொரு பண்பாகக் (inherent characteristic) கருதப்பட்டது. இவ் வாறு திரும்பத் திரும்பவும், சிரமமாகவும் ஏற்படும் இந் நிகழ்ச் சிக்கு வரலாற்று முக்கியத்துவத்தைத் தவிர வேறு முக்கியத்துவம் இல்லையென்று கூறுவதற்கும் சில காரணங்களுண்டு. எவ்வாருயி னும், ஒழுங்காக ஏற்படும் இந்த ஊசலாட்டங்கள் (oscillations) 1939ஆம் ஆண்டிற்குப் பிறகு எந்த ஒரு நாட்டிலும் ஏற்பட வில்லை. எனினும், வாணிபச் சகடத்தின் பல்வேறு அம்சங்களை ஆழ்ந்து ஆராய்வது பயனுள்ளதாகவே இருக்கிறது. இதற்குக் காரணம், வாணிபச் சகடத்தின் அம்சங்கள் (the features of trade cycle) ஒருபுறம் பணவீக்கத்திற்கும் பணவடிப்பிற்குமிடையே யுள்ள தொடர்பினையும், மற்ெருரு புறம் வேலை மட்டத்தையும் (level of employment) பற்றி நாம் நன்கு தெரிந்துகொள்ளுமாறு நன்கு விளக்கம் தருவதாக உள்ளன.

பொருளாதார நடவடிக்கையிலுள்ள ஒவ்வொரு வாணிபச் சகடத்திற்கும் தனி வகையான அம்சங்கள் இருப்பினும், குறிப்பிட்ட பரந்த முகப்புகள் (certain broad phases) அவைகளிடம் பொதுவாகவேயுள்ளன. முதலாவதாக உள்ளது மீட்சி முகப்பாகும் (recovery phase). வேலைமட்டம், உற்பத்தியளவு, விலைகள் ஆகியவைகள் குறைந்த அளவில் இருக்கும் நிலையினின்றும் புறப்பட்டுப் பொருளாதார அமைப்பில் ஏதாவதொரு துறையில் (in some sector) முதலீட்டிற்கான ஆரம்ப ஊக்கியைப் பெறும் நிலையே இம் மீட்சி முகப்பாகும். (இத்தகைய மீட்சி முகப்பு ஏன் ஏற்படுகிறதென்பதனைத் தற்போது நமது ஆய்வு ஆராய வேண்டும்.) முதலீட்டில் ஏற்படும் இந்த அதிகரிப்பானது புதிய வருமானங்களைத் தோற்றுவித்து, தேவை அதிகரிப்பதுடன், வழக்கமான பெருக்கியின் தொடர் வரிசையில் (familiar multiplier sequence) மேற்கொண்டும் வருமான அதிகரிப்புகளை உண்டு பண்ணும். வாணிபச் சகடத்தின் இந்தக் கட்டத்தில் வேலையின்மையானது (unemployment) அதிக அளவில் இருந்த காரணத்தால், அதிகமான தேவையானது விலைகளில் முக்கிய அதிகரிப்பொன்றையும் ஏற்படுத்தவில்லை. மேலும், தொழில் முயல்வோர்கள் (entreprenuers) அதிகமான உழைப்பையும் (labour) மூலதனத்தையும் (capital) பயன்படுத்துவதன்மூலம் அதிகரித்த பொருள் அளிப்பினால் (supply) அதிகரித்த தேவையினைச் சமாளிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அதிகரித்த தேவை மட்டமானது (higher level of demand) பண்டங்கள் (goods), நிலையான முதல் (fixed capital) இவற்றின் இருப்புகளுக்கான முதலீட்டினை (இலாப வாய்ப்புகள் அதிகரித்திருக்கக்கூடுமாதலால்) மேற்கொண்டும் தூண்டுவதாக இருக்கும். இவ்வாறு அதிகரிக்கப்பட்ட முதலீடானது (increased investment) வருமானங்களில் மேற்கொண்டும் அதிகரிப்பைத் தோற்றுவிக்கும்; கூடவே தேவையையும் தூண்டி, அதன் காரணமாக முதலீட்டையும் அதிகரிக்கச் செய்யும். ஆக இத்தகைய முறையானது (process), குவிதல் முறையில் பனிக்கட்டி உருண்டை (snowball) மேலும் மேலும் உருண்டு வளர்வது போன்று தொடர்ந்து வளரும்.

ஆயினும், வேலைக்கமர்த்தப்படாத சாதனங்கள் (unemployed resources) இயன்றவரையில்தான் முடிவாக வேலைக்கமர்த்தப்பட இயலுமாதலால் [உற்பத்திக் காரணிகளின் பெயர்ச்சி (mobility) நிறைகுறைவான பெயர்ச்சியாக இருக்கும் காரணத்

தால் (imperfect mobility), எல்லா சாதனங்களையும் வேலைக் கமர்த்திக் கொள்ளப்படும் என்று கூறுவதற்கில்லை] இதன் விளைவாகத் தேவையில் மேற்கொண்டும் ஏற்படும் அதிகரிப்பை அதிகரித்த உற்பத்தியால் சமாளிப்பதென்பது இயலாது. இந்த புள்ளியின்போதுதான் வாணிபச் சகடத்தின் இரண்டாவது முகப்பு அல்லது பூரிப்பு (boom) முகப்பு ஆரம்பிக்கும். மிதமான இலாபங்களால் ஊக்குவிக்கப்பட்டு முதலீடானது தொடர்ந்து அதிகரிக்குமானால், அதனால் தோற்றுவிக்கப்படும், வருமான செலவு அதிகரிப்பானது பொது விலை மட்டத்தை அதிகரிக்கும். இதற்குக் காரணம், அதிகரித்த தேவையானது (பண அளவில்) ஏறக்குறைய நிலையான அளிப்பை (உண்மை மதிப்பில்) ஏற்படுத்தும். வேறுவழியில் கூறப்போனால், இத்தகையதொரு நிலையில் ஏற்பட்டுள்ள பணவீக்க நிலையில் (inflationary situation) ஏற்படும் அதிகரித்த முதலீடானது (increased investment) அதிகரித்த வேலை மட்டத்தையும் (higher level of employment) உற்பத்தியளவையும் ஏற்படுத்தாது விலைகளின் அதிகரிப்பையே முழுவதுமாக உண்டுபண்ணுவதாக இருக்கும். இத்தகையதொரு முகப்பு (phase) நீண்ட நாளைக்கு நீடித்திருப்பதென்பது இயலாது. ஒருபுறம், விற்பனைகளின் அளவில் ஏற்படும் அதிகரிப்பானது மேற்கொண்டும் அதிகரிக்காமல் நின்றுவிடுவதானது, உற்பத்தியளவினை அதிகரிக்கக்கூடிய முதற்கருவிப் பொருள்களுக்கான (capital goods) தேவையினைக் குறையச் செய்யும் (விற்பனைகள் பெருகாமற்போனாலோ, அல்லது மிகக் குறைந்த வீதத்தில் அதிகரிக்கும்போதோ தொழில் முயல்வோர்கள் தங்களது உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் இயந்திரங்களை வரவழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மாட்டார்கள்); மற்றொருபுறம், வருமான மட்டங்கள் (level of incomes) அதிகரிக்கும்போது, இறுதிநிலை நுகர்ச்சி நாட்டமானது (marginal propensity to consume) குறையும். ஆக, வருமான ஆக்கக் குறிக் கணக்கில் (in the income-formation equation) இவ்விரு கூறுகளும் (both the elements—முதலீட்டு வீதமும் (the rate of investment) பெருக்கியும் (the multiplier)—முடிவில் குறையவே செய்யும். இதன் காரணமாக வருமானங்களிலும் விலைகளிலும் உள்ள அதிகரிப்பானது சரிய ஆரம்பிக்கும்.

இத்தகைய நிகழ்ச்சி ஆரம்பிக்கத் தலைப்பட்டதும் வாணிபச் சகடத்தின் மூன்றாவது முகப்பான பின்னிடல் முகப்பு (recession

phase) ஆரம்பிக்கும். வாணிபத்தின் எதிர்நோக்குகள் (business expectations) யாவும் மாறும் தன்மையன (volatile) ஆதலின், தேவை குறைய ஆரம்பித்ததும், விலைகளும் இலாபங்களும் குறை வதற்கான ஆரம்ப அறிகுறிகள், பீதியின் அடிப்பண்டயிலெழும் கொடூரமானதொரு சோர்வு மனப்பான்மை அலையைத் (a violent wave of pessimism which might border upon panic) தோற்று விக்கும். விலைகள் மேற்கொண்டும் குறைவதற்கு முன்னரே தங்களது நஷ்டங்களைக் குறைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் வியாபாரிகள் அங்காடியில் விற்பனைத் திணிப்பு முறைகளைக் கையாள்வதன்மூலமும், புதிய முதற்கருவிப் பொருள்களுக்கான தங்களின் நிலுவையாகவுள்ள தேவைக் கோரிக்கைகளில் (outstanding orders) எவற்றையேனும் வேண்டாமென்று மறு தலிப்பதன் மூலமும், ஆக இவ்விரு வகையாலும் முதலீட்டு வீதத்தை வெகுவாகக் குறைத்துக்கொள்வர். முதலீட்டில் ஏற்படும் இத்தகையதொரு செங்குத்தான சரிவிறக்கமானது, பெருக்கியின் செயல்முறையால் (multiplier process), அதிக மாக்கப்பட்டு, வருமானங்கள் வெகுவாகக் குறைவதற்குக் காரணமாக இருக்கும்; தொழில்முயல்வோர்கள் விலைகள் குறை வதை எவ்வளவுதான் இலாவகமாகத் தடுக்க முயன்றாலும், விலை களின் குறைவை முதலீட்டின் சரிவிறக்கம் உண்டுபண்ணவே செய்யும். பொதுவான பீதியை (general panic) இது இன்னும் அதிகமாக்கும். ஆயினும், பூரிப்பு முகப்பினைப்போன்று (like the booms phase). இப் பின்னிடல் பருவமானது (recession period) நெடுங்காலத்திற்கு நீடிக்க முடியாது. மேலும், பண்டங்களின் இருப்புகளே இல்லாத அளவிற்கு முதலீடு குறைக்கப்படுவதாக இருந்தாலும், பண்டங்களின் இருப்புகளில் (stocks of goods) முதலீடு செய்வதைக் குறைத்துக்கொள்வதற்கும் ஓர் எல்லை (limit) இருக்கவே செய்கிறது; வரையறையின்றிக் குறைத்துக் கொள்வதென்பது இயலாத செயலாகும். இதைப்போன்றே நிலை யான முதல் ஆக்க வீதத்தை (the rate of fixed capital formation) வரையறையின்றிக் குறைத்துக்கொள்வதென்பதும் இயலாது. தொழில்முயல்வோர்கள், நிலுவையிலுள்ள தங்களின் தேவைக் கோரிக்கைகளை (outstanding orders) வேண்டியதில்லை என்று நீக்கம் செய்த பிறகு, தங்களிடமுள்ள முதற்கருவிச் சாதனங்களைக் (capital equipment) காலத்தால் தேய்வுறும்படி (wear out with passage of time) விட்டுவிடுவதன்மூலமே குறைத்துக்கொள்ள முடியும். பொறிகளையும் (machines) தொழிற்சாலைகளையும் இந்த

வகையில் அழிப்பதன்மூலம் எந்த ஓர் இலாபத்தையும் பெற இயலாதல்லவா? மேலும், வருமானங்கள் குறைவடையும்போது நுகர்ச்சி நாட்டமானது (prospensity to consume) அதிகரிக்கும்; மக்கள், தங்களுடைய சேமிப்புகள் சுன்னமாகக் (zero) குறையும் அளவிற்கு வறியவர்களாகிவிடுவர், அல்லது அவர்களின் நடப்புச் செலவினைச் சமாளிக்கும் பொருட்டுத் (in order to meet current expenditure) தாம் ஏற்கெனவே சேமித்துவைத்துள்ள சேமிப்புகளைச் செலவிடுவதால் அவர்களின் சேமிப்புகள் எதிர்க்கணியத்திலும் (negative) இருக்கக்கூடும்.

கடைசியில் வருமானங்களும் விலைகளும் கொடூரமாக இறங்கும் இத்தகையதொரு நெருக்கடியான காலம் (the crisis period) முடிவடைந்து, வாணிபச் சகடத்தின் கடைசி முகப்பான (last phase) மந்த காலம் (depression) ஆரம்பமாகும். வருமானங்கள் குறைவது நின்றுபோயினும் (although incomes ceased to fall), அவைகள் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதன் காரணமாக, கணிசமான அளவிற்கு வேலையின்மைக் காரணிகள் இருக்கக்கூடும் ; அங்காடியின் இத்தகைய மந்த நிலைகள் (depressed conditions) முதலீட்டினைக் குறைத்துப் பொருளாதார நிலையை ஏழ்மை, வேலையின்மை (poverty and unemployment) இவற்றின் வழியில் இழுத்துச் செல்லும். இத்தகைய முகப்பானது முடிவினை எய்துவதற்குக் காரணம் என்ன ? ஏற்கெனவே நாம் கூறியபடி, முதற்கருவிச் சாதனங்கள் பயனற்றுப்போவதாலும் (obsollescence) தேய்வடைவதாலும் (wearing out) இவ்வாறு நிகழ்கின்றதென விடையிறுக்கலாம். காலம் செல்லச்செல்ல, இருக்கின்ற முதற்கருவிப் பொருள்களின் இருப்பானது (existing capital stock) நடப்பிலுள்ள குறைந்த விற்பனைகள், வருமானம் ஆகியவற்றின் குறைந்த மட்டத்திற்கேற்ப அதன் அளவு அமையுமாறு மதிப்பிறக்கமடையும். இந்தப் புள்ளிக்குப் பிறகு, முதலானது தொடர்ந்து தேய்வடைந்து, முதல் இருப்பை (capital stock) குறைந்த நடப்பு உற்பத்தி மட்டத்திற்கே (low current level of output) போதிய அளவிற்கும் குறைவாக (below) இருக்கும்படி குறையச் செய்யும்; ஆனால், அதேசமயத்தில் முதற்கருவிப் பொருள்களை மீண்டும் வேலைக்கமர்த்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும். இதன் காரணமாக முதலீட்டு வீதம் அதிகரிக்கப்பட்டு, பொருளாதார முறையானது மீண்டும் சகடத்தின் மீட்சி முகப்பில் (recovery phase) பயணம் செய்ய ஆரம்பிக்கும்.

எடுத்துக்காட்டானதொரு வாணிபச் சகடத்தை விளக்கும்போது, அதன் இரண்டு அம்சங்கள் கூர்ந்து கவனிக்கத்தக்கனவாகும். முதலாவது, வரலாற்றில் பல்வேறு வாணிபச் சகடங்களிலும் மேற்கூறிய நான்கு முகப்புகளும் பொதுவானவைகளாகக் காணப்படினும், அவைகளின் தனிப்பட்ட பாணிகளில் (individual patterns) அவைகள் வேறுபட்டனவாகவே காணப்படுகின்றன; சில குறிப்பிட்ட காரணிகள் [புதிய உற்பத்திப் பொருள்கள், அரசியல் சூழ்நிலையால் ஏற்படும் பீதிகள், பண முறிவுகள் (financial crashes)] வாணிபச் சகடத்தின் சுழற்சிக் காலத்தில் உட்புகுவதால், அதன் விளைவாகச் சகடத்தின் பல்வேறு முகப்புகளின் கொடூர விளைவு (violence) அல்லது காலங்கள் (duration) குறைக்கப்படவோ அல்லது அதிகரிக்கப்படவோ நேரிடுகின்றன. இரண்டாவது, வாணிபச் சகடமென்பது பொருளாதார வரலாற்றின் ஒரு நிகழ்ச்சி என்பதனை ஈண்டு மீண்டும் வலியுறுத்திக் கூற வேண்டும்; பொருளாதார வரலாற்றின் ஒரு நிகழ்ச்சி என்பதால், முன்னர் நிகழ்ந்த ஊசலாட்டங்களின் துணை கொண்டு எடுக்கப்பட்ட முடிவுகளைத் தற்காலச் சூழ்நிலைக்கு முரட்டுத்தனமாகப் பொருத்திப்பார்ப்பது அறிவீனமேயாகும். சென்ற காலங்களில் நிகழ்ந்த ஏற்ற இறக்கங்களில் (past fluctuations) செயல்பட்ட சக்திகளைப்பற்றி நன்கு தெரிந்துகொண்ட பின்னர், அத்தகைய சக்திகளை (forces) ஏறக்குறைய நிலையான விலை மட்டத்துடன் கூடிய (with more or less stable price-level) அதிவீத உற்பத்தி நடவடிக்கையினைக் (a high rate of activity) கொண்டதொரு பொருளாதார முறையினை ஏற்படுத்தும் நோக்கத்திற்காக எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டுமென்பதே தற்போதுள்ள பிரச்சினையாக இருக்கிறது.

3. வேலை நிறைவுப் பிரச்சினைகள் (The Problems of Full Employment)

1939ஆம் ஆண்டிலிருந்து மேற்கத்திய நாடுகளின் பொருளாதார முறைகள் பெரும்பாலும் தொடர்ந்த வேலைநிறைவுக் காலங்களைக்கொண்டனவாக இருந்தன. இதனால், அந்த நாடுகளிலெல்லாம் யாருமே வேலையின்றி இருக்கவில்லை என்பது பொருளன்று; எப்போதுமே எந்த நாட்டிலும், பருவகால வேலையின்மையும் (seasonal unemployment) அல்லது பிறழ்ச்சிக் காரண வேலையின்மையும் (frictional unemployment) எப்போதும் இருந்துகொண்டேயிருக்கும். ஆனால், பொதுவாக அங்கெல்லாம் எந்த

ஒரு சமயத்திலும்; இருக்கின்ற உழைப்புச் சக்திகளில் ஒரு சிறு சதவீத அளவே வேலையின்றி இருக்கும் (ஐக்கிய அரசாங்கத்தில் பார்த்தால், இந்த வீதம் வழக்கமாக 2 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்துவந்துள்ளது). இதற்குக் காரணம் என்ன? எப்போதும் போலவே, இதற்கான விடையை, வருமானங்களை நிர்ணயிக்கும் இரு பெரிய தீர்மானிக்கும் காரணிகளின் (two major determinants) துணைகொண்டு கண்டுபிடிக்கவேண்டும். அவை யாவன—பெருக்கியின் (multiplier) மதிப்பினைத் (value) தீர்மானிப்பவையாகவுள்ள முதலீட்டு நாட்டமும் (investment to consume) நுகர்ச்சி நாட்டமும் (propensity to consume) ஆகும். இவை இரண்டிலும் விடைகாண வேண்டியதற்கான காரணம் என்னவெனில், வேலையானது உற்பத்திசெய்யப்பட்ட பொருள்களுக்கான அங்காடியின் தொகுப்புத் தேவையைப் (aggregate market demand) பொறுத்ததாக இருப்பதும், இத்தகைய தொகுப்புத் தேவையானது பெரும்பாலும் வருமானங்களையும் மட்டத்தையும் பொறுத்ததாக இருப்பதுமே யாகும்.

போரின்போதும் போருக்குப்பிந்திய ஆண்டுகளிலும் முதலீடானது (investment), பல்வேறு காரணங்களால் வெகு அதிகமாக இருந்தது. போரின்போது நிச்சயமாக மிக உயர்மட்டத்தில் போர்ச் செலவுகள் (expenditure on defence) இருந்தன. (வருமானத்தின் விளைவைப் பொறுத்தவரையிலும் இச் செயலினை முதலீடென்றே கூறவேண்டும்; நுகர்ச்சிப் பொருள்களின் நடப்பு அளிப்பினை அதிகரிக்காது இது வருமானத்தைத் தோற்றுவிக்கின்றது.) போருக்குப் பின்னர் சாலைகள் (roads), வீடுகள் (houses), தொழிற்சாலைகள் (factories), கப்பல்கள் (ships) இவைகளைச் சீரமைப்புச் செய்வதற்கான முதலீட்டுச் செலவு (investment expenditure) அதிகம் தேவைப்பட்டது. போருக்குப் பின்னரும் மேற்கத்திய நாடுகள் நாட்டின் பாதுகாப்புச் செலவுகளை (defence expenditure) அதிகரித்துக் கொண்டன. அதே சமயத்தில் பெரும்பான்மையான நாடுகளில் பொதுநலப் பணிகளான—மருத்துவ நிலையங்கள், பள்ளிகள், முதியோர் இல்லங்கள் (homes for the aged) முதலியவற்றிற்குச் செய்வதென்பது ஒரு பொருளாதார மரபொழுக்கமாக இருந்துவருகிறது. கடைசியாக, மேற்கு ஐரோப்பாவிலுள்ள பெரும்பாலான டாலர் வழக்கற்ற பகுதிகளில் (non-dollar areas) பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான தேவை உடனடியானதொரு பிரச்சினையாக இருந்துவருகிறது. இதற்

கான காரணங்களை விரைவில் ஆராயப்போகிறோம். மேலும், ஏற்றுமதிகளென்பவை ஒருவகையான முதலீடென்பதையும், அவை வருமானங்களைப் பெருக்குவதற்குத் துணை செய்யும் சாதனங்களெனவும் நாம் காணப்போகின்றோம்.

நுகர்ச்சி நாட்டத்தைப் பொறுத்தவரையில், ஐக்கிய அரசாங்கத்திலும் இன்னும் பிற இடங்களிலும் வருமானங்களின் மறுபகிர்வானது (redistribution of incomes) தனிப்பட்ட மனிதர்களிடையேயுள்ள முழுவதும் தழுவிய சேமிப்பு நாட்டத்தை (overall propensity to save) வெகுவாகக் குறைத்துவிடும் அளவிற்கு இருந்திருக்கக்கூடுமெனலாம். ஏற்கெனவே நாம் இந்நூலின் 18ஆம் அத்தியாயத்தில் பார்த்ததுபோல் பிரிட்டனின் வரவுசெலவுத் திட்டக் கைக்கோளின் ஒரு விளைவு யாதெனில் (the one effect of budgetary policy), செல்வந்தர்களிடமிருந்து ஏழைகளுக்குச் செல்வத்தை மாற்றுவதாகும் (to transfer income). சேமிப்பு நாட்டமானது (propensity to save) ஏழைகளைக் காட்டிலும் பணக்காரர்களிடையேதான் அதிகமாகக் காணப்படுகிறதென்று கூறப்படுவது உண்மையாயின், இத்தகைய மறுபகிர்வுக் கைக்கோள்களால் (redistributive policies) சமுதாயத்தின் முழுவதும் தழுவிய சேமிப்பு நாட்டமானது அதிகரிக்கப்பட்டாக வேண்டுமென்பது தெளிவாகின்றது.

வேலைநிறைவின் பிரச்சினைகள்தாம் என்ன? வேலைநிறைவின் பிரச்சினைகள் யாவற்றையும் தொகுத்து இரு தலைப்புகளின் கீழ்ப் பிரித்து அமைக்கலாம். அவையாவன—எதிர்காலத்தில் வேலை நிறைவைப் பாதுகாக்கும் பிரச்சினை என்பதும், வேலை நிறைவைப் பெறுவதால் ஏற்படும் பிரச்சினைகள் என்பதுமாகும். இவ்விரு வகையான பிரச்சினைகளுமே சிக்கலானவையும் (complex) ஆழமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவையுமாகும். அவைகளை ஈண்டு ஆராய்வோம்.

முதலாவது தலைப்பின்கீழ், அதிவீத முதலீட்டினைப் பராமரிக்கும் பிரச்சினைகளும், நுகர்ச்சி நாட்டம் சம்பந்தமான பிரச்சினைகளும் இடம்பெறுகின்றன. பாதுகாப்புச் செலவு எதிர்காலத்தில் அதிக மட்டத்தில் (high level) இருக்காது என்ற எடுகோளை வைத்துப் பார்ப்போமேயாகில், எதிர்காலத்தில் முதலீட்டுச் செலவானது (investment expenditure) வேலை நிறைவினைத் தோற்றுவிக்குமளவிற்கு அதிக வருமானங்களைத் தோற்றுவித்தல்

இயலுமா என்னும் வினு எழுகின்றது. மூன்று காரணங்களால், இயலும் என்று கூறுவதற்கு ஐயமே ஏற்படுகிறது. அம் மூன்று காரணங்கள் யாவை எனக் காண்போம். முதலாவதாக, மேற்கத்திய நாடுகளில் மக்கள்தொகை வளர்ச்சி வீதம் தற்போது குறைந்துவருகிறது. இரண்டாவதாக, எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்படும் புதிய கண்டுபிடிப்புகள் (future inventions) அவைகள் எந்தப் பொருள்களுக்கு அல்லது செய்முறைகளுக்குப் பதிலாகப் புகுத்தப்படுகின்றனவோ அவைகளைக் காட்டிலும் குறைந்த அளவு மூலதனத்தையே விரும்பக்கூடும். இவற்றிற்கான சான்றுகளைக் கூறவேண்டுமாயின், கடந்த காலத்தில் கம்பியில்லாத் தந்தி முறையானது (wireless telegraphy) தற்காலத்தில் வானொலியாலும்[1] (radio), ரெயில்வேக்கள், சாலைப்போக்குவரத்தாலும் (road transport) கைப்பற்றப்பட்டுவருகின்றன. மனம் பதற்றமடையக்கூடிய மற்றொரு நிகழ்ச்சியுமுளது. உலகத்தில் புதிய நிலப்பகுதிகளே தற்போது இல்லையென்று சொல்லுமளவிற்கு அரியவாக உள்ளன. புதிய நிலப்பகுதிகளில் துறைமுகங்கள் (ports), ரெயில்வேக்கள் (railways), பொதுவசதி நிலையங்கள் (public utilities) முதலியவை தேவைப்படுமாதலால், நிறைய மூலதனம் முதலீடு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் கடந்த காலங்களில் ஏராளம் இருந்தன. புதிய படைப்புகள் ஆரம்பத்தில் மூலதனச் சேமிப்பை உண்டுபண்ணினுலும், நாளடைவில் அவைகள் அதிகமான மூலதனம் பயன்படுத்தப்படுவதற்கே காரணமாக இருக்கின்றன என்னும் கொள்கையினையுடையவர்களது வாதத்தைப் பார்ப்போம். அவர்களின் கருத்துப்படி, புதிய கண்டுபிடிப்புகளின் பயனுகத் தோன்றியுள்ள வானொலி, மோட்டார் கார் தொழில் போன்றவைகள் மூலதனம் நிறைய அளவில் பயன்படுத்தப்படுதற்குக் காரணமாக இருக்கின்றன. அணுசக்தி (atomic power) அல்லது தன்னியக்கமற்ற இயந்திரத் தொகுதி (automatic transfer machinery) போன்றவைகளால் புதிய கண்டுபிடிப்புகள் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு அவைகள் பெருமளவு மூலதனம் பயன்படுத்தப்படுதற்குக் காரணமாயிருப்பதையும், இதன் காரணமாக உலகத்தில் மூலதனத் தட்டுப்பாடு (capital scarcity) ஏற்பட்டிருப்பதையும் அவர்கள் தெளிவாகச் சுட்டுகின்றனர். எனவே, எதிர்காலத்தில் முதலீட்டு வாய்ப்புகள் (investment opportunities) குறைந்துபோகக்கூடும் என்னும் கருத்தானது விவாதத்திற்குரியதொன்ருகவே இருக்கிறது.

நுகர்ச்சி நாட்டத்தைப்பற்றிய ஐயப்பாடுகள் கீழ்க்காணும் கருதுகோளால் எழுகின்றன. அதாவது, மக்கள் தமது செல்வத்தில் வளர்ச்சியுறும்போது, தமது வருமானத்தில் அதிகமான விகிதத்தைச் (increasing proportion) சேமிக்க விழைவதால் சேமிப்பு நாட்டம் குறையுமென்பதாகும். இத்தகைய விழைவானது வருமானங்கள் குறைவடைதலை (fall of incomes) ஏற்படுத்தவில்லையாகில் (அதிகரித்த சேமிப்பு நாட்டத்தால் இயல்பாக இது ஏற்படும்), வருமானங்கள் குறையாமலிருக்கும்போது தேவைப்படுவதைக் காட்டிலும்கூட அதிகமான முதலீட்டு வீதம் தேவைப்படும்; இது, சென்ற பத்தியில் விளக்கப்பட்ட இடர்ப்பாடுகளை இன்னும் அதிகரிப்பதாக இருக்கும். மீண்டும் இங்கொரு வினா எழுகின்றது. நெடுங்காலத்தில், நுகர்ச்சி நாட்டத்தின் (propensity to consume) போக்கானது குறைந்து செல்வதாக இருக்குமா என்பதே அவ் வினாவாகும். பொதுவாக, செல்வந்தர்கள் ஏழைகளைக்காட்டிலும் அதிக வீதத்தில் சேமிக்கின்றனர் என்பது உண்மையேயாயினும், மனித இனம் தனது வாழ்க்கைத் தரத்தினை (standard of living) தலைமுறைக்குத் தலைமுறை காலத்திற்கேற்றவாறு திருத்தி அமைத்துக்கொள்ளுதலால் ஒரு தலைமுறையில் எது போகப்பொருள் (luxury) என்று கருதப்பட்டுவந்ததோ, அதே பொருள் மற்றொரு தலைமுறையில் ஏறக்குறைய ஓர் அவசியப். பொருளாகக் கருதப்படுகிறது. இத்தகையதோர் அவசியப் பொருளை, சேமிப்பினைத் தியாகம் செய்தாகிலும் துய்க்க வேண்டியதோர் இன்றியமையாத நிலை ஏற்படுகிறது. இந்தத் தத்துவம் உண்மையெனில், பொருளாதார நிலைகள் உயரும்போது சேமிப்பு நாட்டமும் (propensity to save) உயரும் என்பது நிச்சயமற்றதொரு கோட்பாடாகவே அமையும்.

தற்போது, வேலை நிறைவானது (full employment) தோற்றுவிக்கக்கூடிய பிரச்சினைகளை ஆராய்வோம். இதில் அடிப்படையானதொரு பிரச்சினை யாதெனில், பொதுவான விலைமட்டத்தில் நிலைபேற்றினை எய்துவதேயாகும். வேலைநிறைவானது தோற்றுவிக்கக்கூடிய பணவீக்கத்தினால் வரும் கேடுகளை முன்னரே பார்த்தோம். சிலவற்றை ஈண்டு நினைவுகொள்வோம். வேலை நிறைவானது தோற்றுவிக்கும் பணவீக்கமானது வருமான மறுபகிர்வினை (redistribution of income) வரையறையின்றி அடுத்தடுத்துத் தோற்றுவிக்கின்றது. மேலும், ஏற்றுமதி அங்காடிகளைப் பொறுத்தும் அது தீமையினை விளைவிப்பதாகவேயுள்ளது. பணவீக்கத்தின்

போது அடிக்கடி கூலியுயர்வும் இன்னும் மற்றக் காரணிகளுக்கான ஊதிய உயர்வும் செய்யப்படவேண்டிய அவசியம் ஏற்படுவதால், சமூகத்தில் வேலை செய்வோர் வேலை வாங்குவோரிடையே பிணக்குகள் ஏற்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட தொழிலில் அல்லது இடத்தில் (in any given industry or locality) வேலையானது எப்போதும் கிடைக்கின்ற காரணத்தால், அங்குள்ள உற்பத்திக் காரணிகள் இடம் பெயரமாட்டா. இவ்வாறு காரணிகள் இடம்பெயராதிருத்தலானது (immobility of factors), புதிய உற்பத்திப் பொருள்கள், செய் முறைகள் (new products and processes) இவைகள் புகுத்தப்படுதற்குத் தடைக்கல்லாக இருக்குமாதலால், அது வளமானதொரு பொருளாதார வளர்ச்சியினைத் தடைசெய்வதாக அமையும். கடைசியாக ஒன்று கூறவேண்டும். வேலையிழப்பு அல்லது அங்காடிகளை இழப்பதற்கான சாத்தியக் கூறு இல்லாததொரு சூழ்நிலையில் முடுகுதல் ஏதுமில்லாத காரணத்தால், தொழிலாளர்களும் தொழில்முயல்வோர்களும் தூண்டுதலேதுமின்றி ஊக்கமிழந்து காணப்படுவர்.

இவை யாவற்றிலும் மிக இக்கட்டானதொரு பிரச்சினை, வேலை நிறைவானது தொழிற் சங்கங்களுக்கு அளித்துவரும் மாபெருஞ் சக்தியேயாகும். வேலைநிறைவுச் சூழ்நிலையில் தொழிற் சங்கங்களின் கூலிகள், வேலை நிபந்தனைகள் சம்பந்தமான கோரிக்கைகள் ஓரளவிற்கு எல்லை மீறியவைகளாகவே இருக்கும்; இவ்வாறு போராடுவதால் தங்களின் அங்கத்தினர்களுக்கு வேலையின்மை (unemployment) என்ற ஆபத்து அவர்களுக்கு ஏற்படாது என்று அவர்கள் கருதக்கூடும். மற்றொருபுறம் வேலையளிப்போரின் (employers) நிலையைப் பார்த்தால், தொழிற் சங்கங்களின் இத்தகைய கோரிக்கைகளை மறுதலிக்க அவர்கள் திறன் குறைந்து காணப்படுவதுபோன்றே உள்ளனர். தொழிலாளர்கள் கிடைப்பருமையாக (scarce) உள்ள காரணத்தால் அவர்களை எங்கே இழந்துவிடப்போகிறோமோ என்பதில் அவர்கள் கவலை கொண்டவர்களாக இருப்பார்களாதலால், தங்களது பேர சக்தியில் வலுவிழுந்தவர்களாகக் காணப்படுவர். இன்னொரு காரணமும் உண்டு. இத்தகைய காலங்களில், அங்காடியின் தெம்பூட்டுந் திறனானது (buoyancy of the market), உற்பத்திச் செலவுகளில் ஏற்படும் அதிகரிப்புகளை (increases in costs) வேலையளிப்போரை விலைகளை அதிகரித்து அவற்றினுள் புகுத்தும்படி செய்கின்றது. இதன் காரணமாகக் கூலி-விலைச்

சுருள் (wage-price spiral) என்னும் ஆபத்து எப்போதும் இருந்து கொண்டேயிருக்கிறது—கூலிகளில் ஏற்படும் அதிகரிப்பானது விலையதிகரிப்பை உண்டுபண்ணுகிறது; அதிகரித்த விலைகள் அதிகக் கூலிகளுக்கான புதிய கோரிக்கைகளை மீண்டும் தோற்றுவிக்கின்றன; இதன் காரணமாகப் பொது விலைமட்டம் (general price level) தொடர்ந்து அதிகரிக்கின்றன. உற்பத்திச் செலவுகளில் கூலிகளும் சம்பளங்களும் (wages and salaries) என்ற ஒரே ஒரு கூறுமட்டுமே (only element) அடங்கியிருக்கின்றது என்று கொள்வது தவறு. எனவே, நிலைபேருனது (stability) மற்ற வருமான வகைகளிலும் (other types of income) அடையப் பெறுதல் வேண்டும். ஆயினும், ஐக்கிய அரசாங்கம் (United Kingdom) போன்றதொரு பொருளாதார அமைப்பில் கூலிகளும் சம்பளங்களும் மட்டுமே மொத்த ஆள்சார் வருமானங்களில் (total personal incomes) 70 சதவீதத்திற்குமேல் இருப்பதால், அவைகளில் ஏற்படும் மாற்றங்கள் மொத்த வருமானங்களைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு கொள்கின்றன. இதன் காரணமாகத்தான், 'உற்பத்திச் செலவால் உந்தப்படும்' (cost-push) பணவீக்கம் என்னும் ஆபத்து விளைகின்றது. இத்தகைய பணவீக்கத்தில் விலைகளின் ஆரம்பமான மேல்நோக்கிய எழுச்சி (initial upward impetus)அதிகரித்த தேவையால் ஏற்படுவதில்லை—அல்லது குறைந்தபட்சம் இதனுல் மட்டுமே ஏற்படுவதில்லை என்ருவது கூறவேண்டும்—கூலிகளின் உயர்வுக்கான வற்புறுத்தலால்தான் ஏற்படுகின்றது எனலாம். இவ்வாறு அதிகக் கூலிகள் தரவேண்டியிருப்பதால் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கின்றன; அதிகரித்த இவ்வுற்பத்திச் செலவுகளைத் தொழில் முயல்வோர்கள், விலைகளை அதிகரிப்பதன்மூலம் சமாளிப்பர். எனவே, கூலிகள் (wages) விலைகளுக்கு வெகுதூரம் பின்னே இருக்கின்ற நிலையானது (சென்ற உட்பிரிவில் விளக்கப்பட்டதுபோன்று) ஒழிந்து, அதிகரித்த விலைகளுக்கு அவைகளே தலைமை தாங்கிச் செல்லும் நிலை ஏற்படக்கூடும். நச்சுச் சுருளானது தேவைப்பகுதியினின்றும் (from the side of demand) சுற்றப்பட்டிருப்பினும் அல்லது உற்பத்திச் செலவுகளின் பகுதியிலிருந்து சுற்றப்பட்டிருப்பினும், எப்படியாயினும், முடிவாக விளையக்கூடிய ஆபத்துகள் என்னவோ ஒன்ருகத்தான் இருக்கின்றன. அதிகரித்த உண்மை வருமானத்தால் (increased real income) இணையப்பெருத (unmatched) பண வருமானங்களில் ஏற்படும் அதிகரிப்புகளும் (rises in money incomes), வருமானப் பகிர்வில் ஏற்படும் ஏடா

கோட்டங்களும் (distortions in income distribution), இதன் காரண மாக உற்பத்தி வடிவமைப்பில் (pattern of production) ஏற்படும் ஏடாகோடங்களும், அயல்நாட்டு அங்காடிகளில் போட்டியிடும் திறன் குறைந்துபோதலும், நாட்டினுடைய செலாவணியின் நிலை பேற்றுக்குப் பங்கம் ஏற்படுதலும் ஆகிய இன்னோரன்ன ஆபத்து கள் ஏற்படுகின்றன.

வேலைகளின்மூலம் கிடைக்கக்கூடிய வருமானங்களில், தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளைக் குறைக்கும் ஒரு சாதன மாக வேலையின்மையைக் (unemployment) கொணராமல், எவ் வாறு நிலைபேற்றினைக் கொணர்வதென்பது அடிப்படையான தொரு பிரச்சினையாக இருக்கிறது. முற்றிலும் தடைகளேது மின்றித் தன்னியக்கமான தொழிற் சங்க முறையினைக் கொண்ட தொரு நாட்டில் இத்தகைய பணி அவ்வளவு எளிதன்று. விலை நிலைபேற்றினால் (price stability) ஒவ்வொருவரும் நன்மையடையக் கூடும் என்ற கருத்தினைத் தொழிற் சங்கங்கள் பொதுவாக நம்பிய போதிலும், தங்களின் அங்கத்தினர்களின் கூலிகள் சம்பந்தமாக ஒவ்வொரு தொழிற் சங்கமும் மேற்சொன்ன கருதுகோளினைச் (hypothesis) செயல்படுத்தி (கூலிகளைத் தன்விருப்பான கட்டுத் திட்டத்துடனிருப்பது (voluntary restraint) அரிதாகவேயுள்ளது. ஆக, இத்தகையதொரு நிலையில் நாட்டுக் கூலிக் கைக்கோள் ஒன்று (a national wages policy) இருக்க வேண்டுமென்று பல கருத்தாளர்கள் (many observers) கருத்துத் தெரிவித்துள்ளனர். இக் கைக்கோளின்படி ஒவ்வோர் ஆண்டும் அரசாங்கமும் தொழி லாளர்களும் கூடி, விலைகளை அதிகரிக்காவண்ணம் எவ்வாறு மொத்தக் கூலிகளை அதிகரிப்பது என்பதுபற்றி [நடப்பிலுள்ள தேவை (demand), வேலை நிலைமை (employment) உற்பத்தித்திறன் (productivity) இவைகளை மனத்திற்கொண்டு] ஓர் உடன்பாட் டிற்கு வருவர். இவ்வாறு மொத்தக் கூலிகளில் ஏற்படுத்தப்பட்ட அதிகரிப்புகளைத் தனிப்பட்ட தொழிற் சங்கங்கள் எப்படிப் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்பதைத் தொழிற் சங்க இயக்கம் (Trade Union Movement) முடிவு செய்யும். ஆனால், இதுவரையிலும் தொழிற் சங்க உலகத்தில் இத்தகைய திட்டங்களுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. இருப்பினும், இத் திட்டங்களை வைத்துக் கொண்டு போராடும் பொறுப்பு (grappling with the problem) ஏற்கெனவே நாம் குறிப்பிட்டுள்ள புதியதாக ஏற்படுத்தப்பட் டுள்ள நாட்டின் வருமானங்களின் குழுவிடம் (National Incomes

Commission) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக் குழுவின் முயற்சிகள் எந்த அளவிற்கு வெற்றியைத் தரவல்லன என்பதனை எதிர் காலம்தான் தீர்ப்பளிக்கக்கூடும்.

4. வரவுசெலவுத் திட்டமானது ஒரு நிலைபேறிருத்தியாகப் பணி புரிதல் (The Budget as a Stabiliser)

இதுவரையிலும் அரசாங்கச் செலவானது தொகுப்புத் தேவையில் (aggregate) நிலையாக இடம்பெற்றுள்ளதோர் உறு பொருள் (element) எனக் கூறப்பட்டுவந்ததே தவிர, அது வேலை மட்டத்தையும் (level of employment) விலைகளையும் (prices) எவ் வழிகளில் பாதிக்கத்தக்கதென்பது விளக்கப்படவில்லை. ஆயினும், பெரும்பாலான மக்களாட்சி வழியினைப் பின்பற்றும் அர சாங்கங்கள் (most democratic governments) தற்போது அதிக மானதும் (high) நிலைபேறுள்ளதுமான (stable) வேலைமட்டத் தைப் (level of employment) பின்பற்றுவதால், இவ்வாறு பின் பற்றும் இத்தகைய பொறுப்பினை அந்த அரசாங்கங்கள் நிறை வேற்ற முயலும் முக்கிய வழிகளை ஆராய்வது தற்போது அவசிய மானதாக இருக்கிறது.

இது சம்பந்தமாக அரசாங்கத்தின் முதல் முக்கியமான ஆயுதமானது பணக் கைக்கோளே ஆகும் (monetary policy). நாம் ஏற்கெனவே 24ஆம் அத்தியாயத்தில் பார்த்ததுபோன்று, கருவூலம் (Treasury) அல்லது இன்னும் மற்ற அரசாங்க மேலாண்மையாளரின் (other government authorities) அறி வுரையின்படி செயல்படும் மைய பாங்கானது (central bank) கடன் கிடைப்பு (availability of credit), கடன்வழி பிறக்கும் செலவு (cost of credit) ஆகியவற்றின்மீது போதிய அளவு தனது ஆளுகையைச் செலுத்தக்கூடுமாதலால், இது முதலீட்டு வீதத்தை அத்தியாயம் 25-ன் 4ஆம் உட்பிரிவில் (section) குறிப் பிட்டுள்ள வகையின்படி முதலீட்டு வீதத்தையும் (rate of investment) ஆளுதல் செய்ய இயலும் (can influence). பணக் கைக் கோளுக்குண்டான சக்திபற்றி (the power of monetary policy) பெருமளவில் கருத்துவேறுபாடு (a great deal of controversy) எழுந்துள்ளது; இலாப எதிர்நோக்குகள் (profit expectations) பெரும்பாலும் ஆர்வ நோக்கு அடிப்படையிலோ (optimistic) அல்லது சோர்வு நோக்கு அடிப்படையிலோ (pessimistic) அமைந் துள்ளனவாகையால் வட்டி வீதங்களில் — இவ் வட்டி

வீதங்கள் மொத்த உற்பத்திச் செலவுகளில் (total costs) ஒரு சிறிய உறுப்புப் பகுதியாகவே (a small fraction) இருத்தலால்—ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் (fluctuations) பெரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று கூறுவதற்கில்லை என்பது ஒரு வாதம். இத்தகையதொரு வாதத்தில் எந்த அளவிற்கு உண்மையுள்ளது என்பதும் சர்ச்சைக்குரியதொரு பிரச்சினையாகவே உள்ளது. ஆனால், நிதிகளின் கிடைப்பில் (availability of funds) ஏற்படும் ஒரு மாற்றமானது, அவைகளின் செயலில் ஏற்படும் மாற்றத்தைப்போலன்றி, முதலீடு சம்பந்தமான முடிவுகளை (investment decisions) நிச்சயம் பாதிக்கவே செய்யும் (is bound to influence). ஒரு தொழில் முயல்வோர் எவ்வளவுதான் ஆர்வ நோக்குக் கொண்டிருந்தபோதிலும் (however optimistic an entrepreneur may be), தனது உற்பத்தித் திட்டத்திற்குப் பணம் திரட்ட இயலவில்லையெனில், அவருடைய ஆர்வ நோக்கால் பயனேதுமில்லை.

வேலைசம்பந்தமாக அரசாங்கங்கள் கையாளுகின்ற முக்கியமான ஆயுதம் (main weapon) அரசிறைக் கைக்கோளாகும் (fiscal policy)—அதாவது, நாட்டின் செயல்திற மட்டத்தை (level of activity) ஆளும் வகையில் (to influence) ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தைப் (annual budget) பயன்படுத்துவதாகும். வரவு செலவுத் திட்டமானது (budget) இந்த நோக்கத்தைக் கீழ்க்காணும் மூன்று வழிகளில் எந்த ஒரு வழியாலும் அல்லது மூன்று வழிகளாலும் அடைதல்கூடும். முதலாவதான வழி, 20ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளபடி, பண்டங்கள், பணிகள் இவற்றின் மீது அரசாங்கம் செலவிடுகின்ற அதன் செலவாகும் (government's own expenditure on goods and services)—பாதுகாப்பு (defence), பொது ஆட்சிமுறை (Public Administration), உடல்நலப் பணிகள் (health services), கல்வி (education) போன்ற திட்டங்களுக்கு அது செலவிடுகின்ற செலவாகும். இச் செலவானது தொகுப்புத் தேவையில் (aggregate demand) முக்கியமானதொரு கூறுக (a significant element) உள்ளது. இத்தகைய செலவினை மாற்றியமைப்பதன்மூலம் (by varying this expenditure) தனியார் செலவின் போக்குகளைச் (the tendencies in private expenditure) அரசாங்கமானது சரிக்கட்ட (offset) இயலுகின்றது. சான்றாக, தொகுப்புத் தேவையில் (aggregate demand) மந்த நிலைக்கான அறிகுறிகள் தோன்றும்போது, அரசாங்கமானது பண்டங்கள்,

பணிகள் இவற்றை வாங்குவதன்மூலம் பணவடிப்புப் போக்கைத் (deflationary tendency) தடுத்துவிட முடியும். இதற்கு எதிரிடையாக, பணவீக்கக் காலங்களில் (inflationary periods) அரசாங்கத்தின் செலவில் ஏற்படுத்தப்படும் ஒரு குறைப்பானது (a reduction in government expenditure) தேவையின் பீறிடு சக்தியைத் (pressure) தணிக்கும். ஆயினும், இத்தகையதொரு செயல்முறையானது நடைமுறையில் உள்ளதைக் காட்டிலும் கோட்பாட்டளவில்தான் (in theory) மிக எளிதாகவுள்ளது. உண்மையில் பார்க்கப்போனால், அரசாங்கச் செலவின் பெரும் பகுதியும் அரசாங்கக் காரணங்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன; அது ஆண்டிற்கு ஆண்டு எளிதாக மாற்றப்படத்தக்கதாக இல்லை. உதாரணமாக, பாதுகாப்புச் செலவானது (defence expenditure), தொகுப்புத் தேவையின் வசதியின் நிமித்தம் மேற்கொள்ளப்படுவதைக் காட்டிலும், அவசியமானபோதுதான் மேற்கொள்ளப்படுகிறது; இதுபோன்றே, எதிர்காலத்தில் முழுவதும் தழுவிய தேவையானது (overall demand) போதிய அளவில் இருக்கப் போவதில்லை என்னும் காரணத்திற்காக வீடுகள், பள்ளிகள், மருத்துவமனைகள் முதலியவைகளை அமைத்தலைத் தள்ளிப்போட முடியாது. இத்தகைய கருத்துகள், நாட்டுரிமையாக்கப் பட்டுள்ள தொழில்களுக்கான முதலீட்டுச் செலவுகளுக்கும் (the investment expenditures of nationalised industries) பொருந்தும். எவ்விதத்தும் கோட்பாட்டளவில், இவைகள் அரசாங்கத்தால் தனியார் துறையின் முதலீட்டுச் செலவுகளில் ஏற்படும் விரும்பத்தகாத போக்குகளைச் சரிக்கட்டும் நோக்கத்துடன் (to offset undesirable movements in private investment expenditure), கட்டுப்படுத்தப்பட இயலும் எனக் கூறலாம். ஆனால், நடைமுறையில் வேறுவிதமாக உள்ளது. நடைமுறையில் மூலதன முதலீடானது (capital investment), அவசியத்தை முன்னிட்டு, சம்பந்தப்பட்ட தொழில்களின் நடப்புத் தேவைகளால்தான் பெரிதும் வரையறுக்கப்படுகிறது.

நிலைபேற்றினை உண்டுபண்ணும் பணியினை ஆற்றவல்லதும், அரசிறைக் கைக்கோளின் (fiscal policy) இரண்டாவது உறுபொருளாக (second element) உள்ளதுமாக இருப்பது, வரிவிதிப்பாகும் (taxation). முதலீட்டு விதமானது (the rate of investment) ஓரளவிற்கு வரி நிவாரணங்களால் (tax allowances) ஆளப்படக்கூடும் (may be influenced), அல்லது பிரித்துக் கொடுக்கப்பட்ட

இலாபங்களுக்கு ஒப்பீடாக (in companion with the distributed profits) பிரித்துக் கொடுக்கப்படாத இலாபங்களுக்கு (இவை, 'மடித்து உழப்பட்ட' இலாபங்கள் எனப்படும்—'ploughed-back profits') சலுகை அளிக்கும் வகையில் வேறுபாட்டு வீதமுடைய இலாப வரியின் (by a differential rate of profits tax) மூலமும் ஆளப்படக்கூடும். நுகர்வோரின் செலவானது (consumers' expenditure), பண்டங்களின்மீது விதிக்கப்படும் [கொள்முதல் வரி (Purchase Tax) அல்லது ஆயத் தீர்வைகள் (Excise Duties) போன்ற] வரிவிதிப்பு வீதத்திலேற்படும் மாற்றங்களால் பாதிக்கப்படக்கூடும்; அல்லது வருமான வரிவிதிப்புகளில் நபர்வாரி சேமிப்புகள் (personal incomes) உட்படுத்தப்படுதலில் ஏற்படும் மாற்றங்களாலும் (changes in the treatment) பாதிக்கப்படக் கூடும்.

கடைசியாக உள்ளதும், யாவற்றிலும் மிக முக்கியமானதாக உள்ளதுமான அரசிறைக் கைக்கோளானது, வரவு செலவுத் திட்டத்தின்மூலம் முழுவதும் தழுவிய உபரி (overall surplus) அல்லது பற்றுக்குறையை எய்துவதாகும். பணவீக்க அழுத்தத் தினைக்கொண்ட காலங்களில் (in times of inflationary pressure), கருவூல வேந்தர் (Chancellor of the Exchequer) கையாளும் கைக் கோளினைப் பார்ப்போம். செலவினங்களைக் காட்டிலும் வரவினங்கள் உபரியாக இருக்கும்படி, அதற்கேற்ப அரசாங்க வருவாயையும் (government revenue) செலவையும் (expenditure) சரி செய்து, அதன்மூலம் ஏராளமான அளவு வருமானத்தை (large amounts of capital) 'ஒற்றியெடுத்தல்' (mop up) கூடும். நிலுவையில் கணக்குப் பார்க்கும்போது, பண்டங்கள், பணிகள் இவற்றை வாங்குதலிலும் (purchases of goods and services) அல்லது மாற்றுச் செலுத்துகளிலும் (transfer payments) அரசாங்கம் வரி செலுத்துவோர்களுக்கு அளிக்கும் தொகையைக் காட்டிலும் வரி செலுத்துவோர் அரசாங்கத்திற்குச் செலுத்தும் தொகையே கணிசமான அளவிற்கு அதிகமாக இருக்கும்படி வரவு செலவுத் திட்டத்தை (budget) அமைத்தலானது பொருளாதார முறையில் நிச்சயமாகப் பணவடிப்பு நிலையையே (deflationary influence) ஏற்படுத்தும். ஆகவே, பணவீக்கமோ அல்லது பணவடிப்போ அச்சுறுத்தும்போது, வரவுசெலவுத் திட்டமானது இத்தகைய பரந்த நோக்குகளின் வழியில் செயல்படுகிறது; மரபொழுக்கமாக, அரசாங்கச் செலவிற்குப் போதிய அளவிற்கு வருவாயினை

எழுப்பும் குறுகிய வேலையை மட்டுமே வரவுசெலவுத் திட்டம் செய்துகொண்டிருப்பதில்லை. பணவீக்க காலங்களில் (in times of inflation) உபரி தரும் ஒரு வரவுசெலவுத் திட்டமானது (a budget surplus) விழையத்தக்கதாகும்—நிலுவையில் கணக்குப் பார்க்கும்போது; இத்தகைய வரவுசெலவுத் திட்டமானது வருமானங்களைக் குறைத்து அதன்மூலம் தேவையையும் குறையச் செய்யும். இதேபோன்று பணவடிப்புக் காலங்களில் (in periods of deflation), வருமானங்களின் பொது மட்டத்தை (the general level of incomes) அதிகரித்து, தேவையையும் தூண்டும் பொருட்டு ஒரு பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டமானது (deficit budget) இயற்றப்படும்.

ஆக, தற்காலத்திய வரவுசெலவுத் திட்டமானது 1939ஆம் ஆண்டிற்கு முன்னருள்ள ஆண்டுகளின் வரவுசெலவுத் திட்டங்களைப் போலன்றி வெகு பரந்ததொரு சூழ்நிலையில் இயற்றப்பட வேண்டியுள்ளது ; வரவுசெலவுத் திட்டத்தினை இயற்றும்போது கருவூல வேந்தர் அரசாங்கத்தின் நடப்புத் தேவைகளை மட்டுமே கருத்தில் கொண்டு இயற்றாமல், நாட்டின் முழுவதும் தழுவிய பொருளாதாரச் சூழ்நிலையில் கண்ணோட்டம் வைத்தே இயற்ற வேண்டியுள்ளது. இதனால்தான் தனி நபரின் அல்லது கம்பெனியின் வரவு செலவுக் கணக்கும் அரசாங்கத்தின் வரவு செலவுக் கணக்கும் வேறுபாடுடையனவாக உள்ளன. தனி நபர்கள் (private individuals) நாம் நடப்பில் ஈட்டுவதைக் காட்டிலும் (current by earning) அதிகமாகச் செலவழிப்பதன்மூலம் தங்களின் வருமானங்களை அதிகரித்துக்கொள்ளுதல் இயலாது. இத்தகையதொரு செலவு முறையை அவர்கள் கடைப்பிடிப்பார்களேயாகில், உண்மையில் கேட்டினையே அவர்கள் அடைவர். இதில் அரசாங்கங்களின் நிலை வேறு; அவைகள் நடப்பில் வரி விதிப்புமூலம் பெறுகின்ற வருமானங்களைக் காட்டிலும் அதிகமாகச் செலவு செய்வதன்மூலம் நாட்டின் முழுவதும் தழுவிய வருமானங்களை அதிகரிப்பதில் முக்கியப் பணியினைச் செய்தல் கூடும்; இதன் காரணமாக, வரி வரவுகளின் மட்டத்தையும் (the level of taxation receipts) அதிகரித்துக்கொள்ள முடியும். இதைப் போன்றே, நாட்டில் பண வீக்கத்தின் போக்குவரத்துக் காணப்படுமாயின், அதற்கு முன்னருள்ள அரசிறை ஆண்டில் (preceeding fiscal year) பெரிய அளவில் உபரியினைக் கொண்டதொரு வரவு செலவுத் திட்டம் (a large budget surplus) இயற்றப்பட்டிருந்த

தென்னும் காரணத்தையொட்டிக் கருவூல வேந்தர் வரித்தள்ளு படிகளைச் செய்வதற்குத் (tax remissions) தான் இசைவு தருதல் இயலாது. நடப்பிலிருக்கும் நிலைமையை உத்தேசித்துதான் ஒவ்வொரு வரவு செலவுத் திட்டமும் இயற்றப்படவேண்டும். தற்காலத்தில் செம்மையான வரவு செலவுத் திட்டமியற்று முறையில், பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து உபரி வரவுசெலவுத் திட்டங்களையோ அல்லது பற்றுக்குறை வரவு செலவுத் திட்டங் களையோ (நடப்பிலுள்ள பொருளாதார நிலைகள் அத்தகைய வரவுசெலவுத் திட்டங்கள் தேவைப்படுமாயின்) இயற்றும்படி நேரிடுகிறது. நாட்டு வருமானம், செலவு (national income and expenditure) ஆகியவற்றின் ஆண்டு மதிப்பீடுகளின் (annual estimates) துணைகொண்டு கருவூல வேந்தரின் அறிவுரையாளர்கள் (the chancellers' advisers) வரப்போகும் ஆண்டில் தொகுப்புத் தேவைக்கும் (aggregate demand) தொகுப்பு அளிப்பிற்குமிடையே (aggregate supply) உத்தேசமாக எந்தவிதத் தொடர்பு (probable relationship) இருக்குமென்பதைக் கணக்கிடுதல் இயலும். நடப்பு விலைகளில் வைத்து மதிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களின் தேவையானது (வரப்போகும் ஆண்டின்) வரப்போகும் அளிப் பைக் காட்டிலும் அதிகமாக இருக்குமென்று காணப்படின், இத் தகையதொரு 'பணவீக்கப் பிளவினை' (inflationary gap) நீக்கு வதற்கு ஓர் உபரி வரவுசெலவுத் திட்டத்தை (a budget surplus) இயற்றியாகவேண்டும்; நடப்பு விலைகளில் (at current prices) தேவையானது தொகுப்பு அளிப்புக்கும் (aggregate supply) குறை வாகக் குறையக்கூடுமென எதிர்பார்க்கப்படும்போது, அத்தகைய குறைவினைப் போக்க ஒரு பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டம் இயற்றப்படவேண்டும்.

இத்தகைய ஆயுதங்கள் யாவற்றையும் பெற்றிருந்தும், தற் காலத்திய அரசாங்கம் ஒன்றினுல் வேலையின்மை நிகழாமல் தன்னைக் காத்துக்கொள்ள இயலுமா? உண்மையில் பார்க்கப் போனுல், இன்றும் இத்தகைய முறையை ஒரு நிச்சயமான முறை என்று கருதுவதற்கியலாமல்தானுள்ளது. வேலைநிறைவை ஏற்படுத்தும் அரசிறைக் கைக்கோளின் செயல் முறையைப் பற்றிய நவீனக் கருத்துகள் நன்கு பரவியுள்ள காரணத்தால், கொடூரமான மந்தநிலையும் (a severe depression) மேற்கத்திய நாடுகளின் பொருளாதார நிலையை அச்சுறுத்திவிடவில்லை; ஆயி னும், இத்தகைய கைக்கோள்களின் செயல்திறம் இன்னும்

சரிவர சோதித்துப் பார்க்கப்படவில்லை. ஆனால், இவைகள் திறம்படச் செயலாற்றும் என்பதில் மட்டும் ஆர்வ நோக்கு (optimism) கொள்ள நிறைய இடமுள்ளது. தற்கால அரசுகள் (modern governments) வேலையின்மையைப் போக்குவதிலும் (to prevent unemployment) அல்லது தடுப்பதிலும், அதே போன்று வருமானங்களின் பொது மட்டத்திலும் விலைகளின் பொது மட்டத்திலும் (general level of incomes and prices) நிலை பேற்றினை (stability) ஏற்படுத்துவதிலும் அரியதொரு பணியினைச் செய்யக்கூடியனவாக உள்ளன ; மேலும், அவைகள் தங்களுடைய இவ்வதிகாரங்களையும் அவற்றின் பயனையும், இதற்கு முன்பெல்லாம் தெரிந்துவைத்திருந்ததைக் காட்டிலும் அதிகமாகத் தற்போது தெரிந்துவைத்திருக்கின்றன. ஒன்றைமட்டும் நிச்சயமாகக் கூறலாம். பணவீக்கம் அல்லது பணவடிப்பின் திசை நோக்கிச் செல்லும் ஒரு போக்கினை ஆரம்ப நிலையிலேயே அதற்குச் சீர்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டால், தடுத்து நிறுத்தவியலும்; ஆனால், இத்தகைய நடவடிக்கையானது ஆரம்ப நிலையில் எடுக்கப்படுவதுடன் பெருக்கியானது (multiplier) குவிதல் முறையில் முழுவதும் செயல்பட ஆரம்பிக்கு முன்னரேயும் எடுக்கப்பட வேண்டும். மேல்நோக்கிய அல்லது கீழ்நோக்கிய சுருள் (upward or downward spiral) செயல்பட ஆரம்பித்துவிட்ட பின்னர், எவ்வளவு பெருமிதமான அளவில் நடவடிக்கை எடுத்தபோதிலும், அது பயனற்றதாகவே இருக்கும். எனவே, ஒரு திடமான பணக் கைக்கோள் அல்லது அரசிறைக் கைக்கோளுக்கு முன்கூட்டித் தேவையாகவுள்ள இன்றியமையாத பொருள் யாதெனில், நடப்புச் சூழ்நிலையை (current situation) அவ்வப்போதும் சரிநுட்பமாகவும் ஆய்ந்துணர்தலும் (continuing and accurate diagnosis of the current situation), சீர்படுத்து நடவடிக்கைகளை, அவைகளின் தேவை பொது மக்களுக்கு இன்றியமையாதன என்ற நிலை ஏற்படுவதற்கு முன்னரே விரைந்து சென்று அவைகளைச் செயல்படுத்தும் திறனும், மனத்திட்பமும் (ability and moral courage to adopt corrective measures) ஆகும். ஆனால், இது மிகவும் கடினமானதோர் அரிய பணியேயாகும்.

இன்னுமொரு கருத்தினை ஈண்டு மனத்தில் கொள்ளவேண்டும். ஐக்கிய அரசாங்கம் (United Kingdom) போன்ற நாடுகள் தமது உணவுப் பொருள்களுக்கும் கச்சாப் பொருள்களுக்கும் பன்

ளூட்டு வாணிபத்தையே (international trade) பெரிதும் நம்பி யிருக்கின்றன; அப் பொருள்களின்றி அவைகளின் வாழ்க்கையும் தொழிலும் நடைபெறுது. இத்தகைய நாடுகளுக்கு வேலை நிறைவு (full employment) என்பது வெறும் உள்நாட்டுக் கைக் கோளென்பதுமட்டுமல்ல (not merely of domestic policy); வரு மானங்கள் (incomes); வேலை (employment) இவற்றின் நிலை பேற்றினை எய்துகின்ற உள்ளார்ந்த சிக்கல் நிறைந்ததொரு பிரச்சினையாகவும் உள்ளது; இப் பிரச்சினையானது, அக நிலை பேற்றினை (internal stability) புற (வெளிநாடுகளில்) வகை யுடைமையுடன் (external solvency) ஒருங்கிணையுமாறு (reconcile) செய்ய வேண்டிய அவசியத்தினுல் மேற்கொண்டும் சிக்கலாக்கப் படுகிறது. ஆக, நவீனப் பொருளாதார முறையின் இயங்கு முறையைப்பற்றிப் பூரணமாகத் தெரிந்துகொள்ளவேண்டு மாயின், உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளுக்கிடையே நடக்கும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மாற்றுனது (exchange of goods and services) எழுப்புகின்ற பிரச்சினைகளை ஆராய்ந்தாக வேண்டும்.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

Keynes, 'The General Theory of Employment, Interest and Money,' Chs. 18, 21, 22, 24.

Hansen, 'A Guide to Keynes,' Chs. 11 and 12.

Dillard, 'The Economics of J. M. Keynes,' Chs. 6, 9, 10 and 12.

Wilson, 'Inflation' (Blackwell, Oxford, 1961) Chs. II—VII.

'Employment Policy' (Cmd. 6527, H. M. S. O., London, 1944).

'The Economic Implications of Full Employment' (Cmd. 9725, H. M. S. O., London, 1956).

'Incomes Policy: the next step' (Cmd., 1626, H. M. S. O., London, 1962.)

28. குறியீட்டெண்கள்
(Index Number)

1. எவ்விதம் அளவிடுவதென்பது

வருமானங்கள், விலைகள் ஆகியவற்றின் பொது மட்டமானது எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறதென்னும் கோட்பாட்டினை (the theory of the determination of the general level of incomes and prices) முடிக்குமுன்னர், நடைமுறையில் பொது விலை மட்டத்தை அளவிடுவதற்கு எத்தகைய செயல்நுட்ப முறை (technique) கையாளப்படுகிறதென்பதனை ஆராயுமுகத்தான், நாம் பயணம் செய்யும் மேற்கூறப்பட்ட நெடும்பாதையினின்றும் சிறிது விலகிச் சென்று சற்றுக் கொடிப்பாதையில் செல்வோம். 'விலை மட்டம்' (price level) என்னும் சொல்லானது, எல்லா வகையான தனித் தனி விலைகளின் சராசரியை ஒரு வகையில் உணர்த்துவதாகவுள்ளது; அல்லது, குறைந்தபட்சம் ஒரு குறிப்பிட்ட தறுவாயில் (in a particular context) நிலவும் எல்லா விலைகளின் சராசரியை உணர்த்துவதாயுமுள்ளது. இத்தகையதொரு கருத்தானது பெரும்பாலும் ஒரு காலத்தில் பல்வேறு பருவங்களில் (over periods of time) விலைகளின் மாற்றங்கள் சம்பந்தமாகவே எழுவதாகவுள்ளது; அதுவும் மற்றப் பண்டங்களுக்கொப்பீடாக ஒரு பண்டத்தின் விலையானது எவ்வாறு உள்ளது என்பதனை ஆராயும் வேலை அவ்வளவாக இல்லாமல், முற்றுருப் பெற்ற கருத்தில், விலைகள் யாவற்றின் ஒரு பரந்த போக்கினை (broad tendency of all prices in an absolute sense) ஆராய்வதாகவேயுள்ளது.

ஒரு பொருளாதார முறையில் நிலவுகின்ற எல்லாத் தனிப்பட்ட விலைகளையும் மற்றொரு பொருளாதார முறையில் நிலவுகின்ற எல்லாத் தனிப்பட்ட விலைகளோடும் ஒப்பிடுவது ஏன் இயலாதென்பதற்கான காரணத்தை ஆராய்தல் அத்துணைக்

கடினமானதொன்றன்று. ஒவ்வொரு பண்டத்திற்கும் ஒரு விலை உள்ளது. சுமாராக வளர்ச்சியடைந்துள்ள எந்த ஒரு பொருளாதார முறையிலும், பரிவர்த்தனையில் (exchange) ஆயிரமாயிரம் பொருள்கள் இடம்பெறுகின்றன. மேலும், மேற்சொன்ன ஒப்பிடுதல் இயலாமையானது, ஒரே பண்டமானது பன்னிரு வகையான தரங்களையும் (dozens of qualities) சின்னங்களையும் (brands), உருவ மாதிரிகளையும் (types) (ஒவ்வொன்றும் தனித் தனியான விலைகளைக் கொண்ட) உற்பத்தி செய்யக்கூடும் என்பதனை நினைவுகூரும்போது, மேற்சொல்லப்பட்ட பிரச்சினையானது இன்னும் அதிகமாக நடைமுறைக்கொவ்வாததொன்றாக வுள்ளது. இவ் விலைகள் யாவற்றையும் தொகுத்துப் பட்டியல் படுத்துதல் (listing) என்பதே அநேகமாக இயலாததொன்றாக இருக்கும்; பட்டியல் முழுவதும் தயாராவதற்கு முன்னரே அப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள விலைகள் மாற்றமடையும். [இது ஃபோர்த் பாலம் (Forth Bridge)] என்னும் பாலத்தில் வர்ணம் பூசும்போது அப் பாலம் வெகு நீளமானதொன்றாகையால், ஒரு கோடியிலிருந்து வர்ணம் பூசிக்கொண்டு மற்றொரு கோடியை வர்ணம் பூசுபவர்கள் அடையுமுன்னரே முதல் கோடி வர்ணப் பூச்சினை மறுமுறையும் கொடுத்தாக வேண்டியதைப் போன்று உள்ளது.) இதன் காரணமாகத்தான் எந்த ஒரு சமயத்திலும் நிலவுகின்ற எல்லா விலைகளின் பட்டியலையும் தயார் செய்வதென்பது இயலாததொன்றாகவுள்ளது.

அத்தகையதொன்று தொகுக்கப்பட (compiled) இயலுமாயினும், அதனால் உண்மையில் எவ்விதப் பயனுமின்றியே இருக்கும். பல கோணங்களிலும், பல திக்குகளை நோக்கியுமுள்ள ஆயிரமாயிரம் வேறுபட்ட விலைகளுடைய தொகுப்பைக்கொண்டு மனித அறிவாற்றலானது (human mind) சுமாராகச் சரிநுட்பமானதொரு பொதுவான கருத்தை மனத்தில் உருவாக்கிக்கொள்ளுதல் இயலாது. ஆயினும், விலைகள் முழுவதற்குமான முழுவதும் தழுவிய போக்குகளைப்பற்றி நம்பத்தகு கருத்தானது (அதாவது, அவைகளின் போக்கு அளவு பற்றிய) பல நோக்கங்களுக்கு (many purposes) பயன் தருவதாகவும், சில நோக்கங்களுக்கு இன்றியமையாததாகவும் உள்ளது. [அத்தகையதோர் அறிவாற்றலானது சிறப்பாக வேலைமட்டத்தின் எதிர்கால வாய்ப்புகளை (prospects) கணக்கீடு செய்வதற்கும், பன்னாட்டுப் பொருளாதார வளர்ச்சி நிகழ்ச்சிகளை ஆய்வதற்கும் (analysing international

economic developments) முக்கியமானதாக உள்ளது.] குறியீட்டெண்களின் செயல்நுட்ப முறையினை (the technique of index numbers) விலைகளின் போக்கின் குறிப்பிட்ட சூழ்நிலையில் சாதாரண நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதன்மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிகிறது. ஆகவேதான்; அடுத்து வரும் உட்பிரிவானது குறியீட்டெண்களைப்பற்றிப் பொதுவானதோர் ஆய்வினை நிகழ்த்துவதாகவுள்ளது. இதனை அடுத்து வரும் உட்பிரிவில் (section) விலை மதிப்பீட்டின் (price measurement) குறிப்பிட்ட பிரச்சினைக்கு அவற்றை எவ்வாறு பயன்படுத்துவதென்பதானது கூறப்பட்டுள்ளது.

2. குறியீட்டெண்கள் என்பன யாவை?

குறியீட்டெண் என்பது என்ன? குறியீட்டெண் என்பது ஒன்றுக்கொன்று தொடர்புள்ள மாறிலிகளின் (மாற்றமுடைய எண்கள்) சராசரியைக் கண்டுபிடிப்பதற்கான சாதனமாக இருக்கும் எண்ணாகும்; அதாவது, ஒரே எண்ணைக் கொண்டு (a single number) சராசரி மாற்றத்தை அறிவிப்பதற்குப் பயன்படுத்துவதாகும். ஓர் எளிய சான்றினை எடுத்து நோக்குவோம். ஐந்து மனிதர்கள் 1960ஆம் ஆண்டிலும் 1962ஆம் ஆண்டிலும் கீழ்க்கண்டவாறு (பருப்பொருள் அளவில்) உற்பத்தி செய்துள்ளனர் எனக் கொள்வோம் :

மனிதன் (man)	**அலகுகள்** (units)	**உற்பத்தியளவு** (output) 1960	1962
1	நிலக்கரி (டன்களில்)	500	510
2	கோதுமை [புஷல்களில் (Bushels)]	2,000	1,800
3	ஆடைகள் (முழு உடைகளில்)	60	65
4	செங்கற்கள் [அந்தரில் (Cwts)]	800	800
5	எண்ணெய் (காலன்களில்)	9,000	9,500

மேலே காட்டப்பட்டுள்ள உற்பத்தியளவுத் தொகுதி 1960—62 ஆம் ஆண்டுகளின் சராசரி வளர்ச்சியினை (average growth) எவ்விதம் கணக்கிடுவது? இங்கேதான் குறியீட்டெண்ணின் செயல்நுட்பமுறை (the index number technique) பயன்படுகிறது. முந்திய ஆண்டின் ஒவ்வொரு மனிதரின் உற்பத்தியளவையும் 100 எனக்

கொண்டு [இந்த ஆண்டினை 'அடிப்படை ஆண்டு' (base year) எனக் கூறுவர்], பின்னதாகக் கூறப்பட்டுள்ள ஆண்டின் உற்பத்தி யளவினை இத்தனை சதவீதம் கூடுதலாக அல்லது குறைவாக உள்ளதென்று கணக்கிடு செய்வதே குறியீட்டெண்ணின் செயல் நுட்ப முறையாகும். 1962ஆம் ஆண்டிற்கான ஐந்து எண்களை யும் கூட்டி, கூட்டி வரும் தொகையை ஐந்தால் வகுத்து; அதன் மூலம் சராசரி மாற்றம் இவ்வளவு என்பதனைக் கண்டுபிடித்து விடலாம். அத்தகையதொரு கணக்கீடு கீழ்க்கண்டவாறு இருக்கும்:

மனிதர் (Man)	உற்பத்தியளவு (Output) 1960	1962
1	100	102·0
2	100	90·0
3	100	108·3
4	100	100·0
5	100	105·6
மொத்தம் (total)	500	505·9
சராசரி (average)	100	101·2

எனவே, இக் கணக்கீட்டின் துணைகொண்டு, மேற்சொல்லப்பட்ட மனிதர்கள் 1960ஆம் ஆண்டில் உற்பத்தி செய்ததைக் காட் டிலும் 1962ல் சராசரியில் 1·2 சதவீதம் அதிகமாக உற்பத்தி செய்துள்ளனர் எனக் கூறமுடிகிறது.

எளிதான இந்த உதாரணத்தில், சம்பந்தப்பட்ட மாறிகள் (the variables concerned)—வெவ்வேருன ஐந்து மனிதர்களின் உற்பத்தியளவு—சம முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் கருதப் பட்டன; இதனுல் முழுவதும் தழுவியதொரு குறியீட்டு எண்ணை (the overall index number) நேராக ஒரு கணித சராசரியைக் கொண்டே கண்டுபிடித்துவிடலாம். ஆயினும், பல சமயங்களில் மேற்சொல்லப்பட்ட கூட்டத்தின் மாறிகள் (variables) சமன்

கேடான முக்கியத்துவம் (unequal importance) வாய்ந்தனவாக வுள்ளன; இதற்கெனத் தனியாகக் கணிப்புச் சலுகை செய்ய வேண்டியுள்ளது. சான்ருக, தொழில் உற்பத்தியின் (industrial production) குறியீட்டெண் கணக்கிடப்படுகிறதெனக் கொள் வோம்—அதாவது, ஒரு குறிப்பிட்ட கால அளவின்போது தொழில் முழுவதற்குமான உற்பத்தியளவின் சராசரி மாற் றத்தை (average change in the output of industry as a whole over a given period) உணர்த்தும் ஒரே ஓர் எண்ணிக்கையே குறியீட்டெண்ணுகும். நாட்டில் பத்துப் பல்வேறு தொழில்கள், அவைகளின் முக்கியத்துவத்திலும் பல திறப்பட்டனவாக இருக்கின்றனவெனில், நிறையிடும் முறையினைக் (a system of weights) கடைப்பிடிக்க வேண்டிவரும். தொழில் பெரியதாக இருப்பின் அதில் தோன்றும் எந்த ஒரு மாற்றமும், அதனை யொத்ததொரு மாற்றம் சிறு தொழிலில் ஏற்படுத்துவதைக் காட்டிலும் மிக அதிகமான விளைவினை குறியீட்டெண்ணில் ஏற்படுத்தக்கூடுமாதலால், இத்தகையதொரு பளு உண்டுபண் ணும் முறையினை அப் பெருந் தொழில்களில் கையாள வேண்டியுள்ளது. குறியீட்டெண்ணில் சம்பந்தப்பட்டுள்ள தொழில்கள் ஒவ்வொன்றின் தராதர முக்கியத்துவத்தை யும் (relative importance) அளவிடுதற்குகந்த ஏதாவதொரு காரணியின் அடிப்படையில்தான் (based on some factor which can be taken to measure the relative importance of each of the industries) இந் நிறைகளை (weights) ஏற்படுத்தவேண்டும். தொழி லியல் உற்பத்தியைப் (industrial production) பொறுத்தவரை, பல்வேறு தொழில்களின் (different industries) தராதர முக்கியத் துவத்தை உணர்த்துவதற்குப் பொருத்தமானதும், போதிய அள விற்குத் திருப்தியானதுமான வழிகாட்டியானது (guide) ஒவ் வொரு தொழிலிலும் வேலைசெய்கின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையாக இருத்தல்கூடும். சான்ருக, நிறையிடப்படாத (unweighted) ஒரு குறியீட்டெண்ணும், நிறையிட்ட (weighted) ஒரு குறியீட்டெண்ணும் பின்வருமாறு *(அட்டவணை, பக்கம் 187)* கணிக்கப்படக்கூடும்:

நிறையிடப்படாத குறியீட்டெண்கள் (the unweighted index numbers) எவ்வாறு கணிக்கப்படுகின்றனவென்று பார்ப்போம். கட்டங்கள் *(2)*, *(3)* இவற்றிலுள்ள தொகைகளைக் கூட்டி வந்த மொத்தத் தொகையினை 'மாற்றம் அடைவன' ஏத்தனையுள்ள

தொழில் (Industry)	உற்பத்தியளவு (Output)		ஆண்டு 1-ல் வேலைக்கமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை (ஆயிரத்தில்)	தராதர உற்பத்தியளவு (output-relatives)	
	ஆண்டு 1 (Year 1)	ஆண்டு 2 (Year 2)		ஆண்டு 1 [(2)×(4)]	ஆண்டு 2 [(3)×(4)]
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	100	104	2·0	200·0	208·0
2	100	103	4·5	450·0	463·5
3	100	94	1·2	120·0	112·8
4	100	110	5·8	580·0	638·0
5	100	101	3·0	300·0	303·0
6	100	82	2·1	210·0	172·2
7	100	95	0·6	60·0	57·0
8	100	99	1·0	100·0	99·0
9	100	103	1·2	120·0	123·6
10	100	106	3·1	310·0	228·6
மொத்தம்	1000	997	24·5	2450·0	2505·7

னவோ (the number of variables included) அந்த எண்ணிக்கையால்—அதாவது, 10—வகுத்தால் எளிதாக நிறையிடப்படாத குறியீட்டெண்களைக் கண்டுபிடித்துவிடலாம். இதன்படி கணக்கிட்டுப் பார்க்கும்போது (மேலே கொடுத்துள்ள அட்டவணையின் படி) ஆண்டு 1-க்குக் குறியீட்டெண் 100 ஆகவும், ஆண்டு 2-க்குக் குறியீட்டெண் 99·7 ஆகவும் இருக்கும்—தொழில் உற்பத்தி முழுவதற்குமாகப் பார்க்கும்போது குறைந்த அளவு குறைவு

(a slight fall) ஏற்பட்டுள்ளது தெரியவரும். பளு உண்டுபண்ணப் பட்ட குறியீட்டெண் எவ்வாறு கணிக்கப்படுகிறதெனப் பார்ப் போம். கட்டங்கள் (columns) (5), (6) இவற்றிலுள்ள எண் ணிக்கைகளைக் கூட்டி, கூட்டி வரும் தொகையினை எத்தனை பளுக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த எண்ணிக்கை யால் (the sum of the weights used)—அதாவது, கட்டம் (4)-ல் உள்ள எண்ணிக்கையால்—வகுத்து, அதன் வழியாகக் கணக் கிட்டுவிடலாம். இதன்படி கணக்கிட்டுப் பார்த்ததில், (மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி) ஆண்டு 1-க்கு குறியீட் டெண்கள் 100 ஆகவும், ஆண்டு 2-க்குக் குறியீட்டெண்கள் 102·3 ஆகவும் இருக்கும்—தொழில் முழுவதிலும் உற்பத்தி யானது அதிகரித்துள்ளதனை (rise) இது சுட்டுகிறது.

ஆக, குறியீட்டெண்களைக் கணக்கிடுவதில் நிறைகளைத் (weights) தேர்ந்தெடுப்பதென்பது மிக முக்கியம் வாய்ந்ததொன் றாகும். மாறிகளின் ஒரு குறிப்பிட்ட மாற்றங்களின் தொகுதியி னுடைய முழுவதும் தழுவிய போக்கானது அளக்கப்படும்போது, இருவேறு வகையான நிறைகளைக்கொண்டு (two different sets of weights) அளந்தால் கிடைக்கும் குறியீட்டெண்கள் ஒரேவிதமாக இருப்பதுடன்கூட, ஒரே திசையில் வைத்து நோக்கினும் மாற்ற மின்றியே காணப்படும். எனவே, இத்தகையதோர் உண்மை யானது போதிய அளவிற்கு நடைமுறை முக்கியத்துவத்தை யுடையதாகவே இருக்கிறது.

3. சில்லறை விலைக் குறியீடு (The Retail Price Index)

பிரிட்டனில் மிகவும் பழக்கமானதும் அதிகமாகப் பயன்படுத் தப்படுவதுமானது சில்லறை விலைகளின் குறியீடே. இது பொது வாக (அவ்வளவு சரிநுட்பமாக இல்லாவிட்டாலும்) வாழ்க்கைச் செலவுக் குறியீடு (cost-of-living index) என அழைக்கப்படுகிறது. கண்டிப்பாகக் கூறுமிடத்து, எவ்வாறு வாழ்க்கைத்தரம் (the standard of living) என்பதைப் போன்று ஒன்று உண்மையில் இல்லையோ, அதைப்போலவே வாழ்க்கைச் செலவு (the cost of living) என்பதைப் போன்ற ஒரு பொருளும் உண்மையில் இல்லை. ஒரு நியாயமான வாழ்க்கைத்தரம் (a reasonable standard of life) என்பது என்ன என்பதுபற்றி (அதற்கான செலவில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்கு முயலுமுன்னர் இதனைத் தெளிவாகத் தெரிந்துவைத்திருத்தல் அவசியமாகும்) மனிதர்

களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் உள. ஓர் ஆண்டில் எது சிரமமான வாழ்க்கைத்தரம் என்று கருதப்படுகிறதோ, அதுவே மற்றோர் ஆண்டில் சிரமமான வாழ்க்கைத்தரமாகக் கருதப் படுவதில்லை. இன்றைய தினம் எந்த ஒரு பொருள் வாழ்க்கைக்கு இன்றியமையாததொன்ருகக் கருதப்படுகிறதோ, அதே பொருள் முன்பிருந்த சந்ததியர்களால் (previous generations) ஏறக்குறைய ஒரு போகப் பொருளாகக் (something approaching luxury) கருதப்பட்டுவந்திருக்கக்கூடும். இதைப்போன்றே, ஒருவருக்கு மோட்டார் கார்கள் (motor-cars) தமது அன்ருட வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களாக இருக்கும். கார்களின் விலை அதிகரிக்குமாஞல் அவர் அங்கலாய்த்துக்கொள்வார். அதே சமயத்தில், இன்னெருவர், கார்களின் விலை இரட்டிப்பாக அல்லது மும்மடங்காக அதிகரித்துச் செல்லினும், அதனைப்பற்றிய கவலை சிறிதும் கொள்ளாதவராக இருப்பார்—காரணம், காரானது அவர் வாழ்க்கைக்கு அவசியமற்றதாகவோ அல்லது பெற இயலாததொன்ருகவோ இருப்பதுதான்.

ஆக, வாழ்க்கைச் செலவுக் குறியீடென்று (cost-of-living index) அடிக்கடி கூறப்படும் சொல்லானது உண்மையில் அதிக மான அளவில் வரையறுக்கப்பட்ட கருத்தாகவும், செம்மையாக விளக்கம் செய்யப்பட்டதொரு சொல்லாகவும் உள்ளது. இது எவ்வாறு தொகுக்கப்படுகின்றதென்பதனைக் (compiled) காண் போம். சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் (a particular section of the community) வாங்குகின்ற ஆட்பேரான மாதிரிப் (representative sample) பண்டங்கள், பணிகள் இவற்றின் சில்லறை விலைகளில் (retail prices) ஏற்படும் சராசரி மாற்றத்தை (average change) அளவிடும் ஒரு குறியீட்டெண்ணே வாழ்க்கைச் செலவுக் குறியீடாகும். இத்தகையதொரு குறியீட்டெண்ணைத் தொகுக் கும்போது மூன்று முக்கியப் பிரச்சினைகள் எழுகின்றன. முதலா வது, அக் குறியீட்டெண் தழுவுகின்ற சமூக உட்பிரிவு (the section of the community which is to be covered by it); இரண்டாவது, அக் குறியீட்டில் சேர்க்கப்படவேண்டிய பொருள்கள்; மூன்ருவது, பல்வேறு பொருள்களுக்கும் இணைக்கப்பட வேண்டிய நிறைகள் (the weights to be attached) என மூன்றும். பிரிட்டனில் **1892**ஆம் ஆண்டு முதற்கொண்டே அடுத்தடுத்துப் பல சில்லறை விலைக் குறியீட்டெண்கள் தொகுக்கப்பட்டுவந்துள்ளன். ஆயினும், நடப்புக் குறியீடென்று (current index) கருதப்படும் குறியீடு

1963ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதன் முதலாக வெளியிடப்பட்டது. இந்த நடப்புக் குறியீடானது (current index) எவ்வாறு மேற்கூறிய மூன்று பிரச்சினைகளையும் செயல் நடத்துகிறது என்பதனை ஆராய்வோம்.

முதலாவது பிரச்சினை—அதாவது, மக்களுடைய வாழ்க்கைச் செலவை (cost of living) அளவிடுதல்—எளிதானதொன்றுகவே உள்ளது. குறியீட்டெண்ணானது அரசாங்க புள்ளிவிவர நிபுணர்களால் தொகுக்கப்படுகிறது. அரசாங்கம் சிறுபான்மையோரின் வாழ்க்கைப் பிரச்சினையை ஆராய்வதைக் காட்டிலும் பெரும்பான்மையோரின் வாழ்க்கைப் பிரச்சினையை ஆய்வதில் தான் பெரிதும் நாட்டம் கொண்டிருக்குமாதலால், நடப்புக் குறியீடானது (current index) வாரமொன்றுக்கு £ 30 வரை மொத்த வருமானமுடைய குடும்பத் தலைவரைக்கொண்ட வீடுகளின் செலவினை அடிப்படையாகக் கொண்டுள்ளது ; ஆனுல், ஓய்வுச் சம்பளங்கள் (pensions), ஏதாவதொரு வகையில் நாட்டுதவி (national assistance in some form) ஆகியவற்றையே பெரிதும் நம்பி வாழும் வீடுகளை இக் கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்வதில்லை. இதன் காரணமாக, நாட்டில் உள்ள 10-க்கு 9 வீடுகளுடைய செலவினத்தைப் பிரதிபலிப்பதாகக் குறியீட்டெண் விளங்குகிறது. ஆகவே, குறியீட்டெண்ணானது சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பிரிவினரின் வாழ்க்கைச் செலவில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுகின்றதெனக் கூறமுடியாதாயினும், பெருவாரியான மக்களுக்கு முக்கியமாக உள்ள விலைகள் யாவற்றையும் கணக்கிட்டே தொகுக்கப்படுகிறது.

இரண்டாவதாக உள்ள பிரச்சினையானது, எந்தெந்தப் பண்டங்களைக் கணக்கெடுப்பில் சேர்த்துக்கொள்வது என்பதுபற்றியதாகும். ஒரு மூவாயிரம் வீடுகளை அளவாய்விற்கு (survey) எடுத்துக்கொண்டு அவைகள் ஆண்டு முழுதும் செலவிடும் செலவுத் தொகைகளை அளவாய்வு செய்வதன்மூலம் நுகர்ச்சி அமைப்பு (consumption pattern) எவ்வாறு உள்ளதென்பதுபற்றிய செய்திகள் நிறையப் பெறப்படும். ஏற்கெனவே கூறியதுபோன்று, இத்தகைய விவரங்களை, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தனிப்பட்ட பண்டத்தின் ஒவ்வொரு வகையின் விலைகளையும் சேகரிப்பதென்பது, அதிலும் குறிப்பாகக் குறியீட்டெண்ணை ஒவ்வொரு மாதமும் தொகுக்கவேண்டியதாக இருப்பின் அது ஒரு பிரம்மாண்ட

மான வேலையாக இருக்கும். எனவே, இவ் வேலையினைச் சமாளிக்கும் அளவில் இருக்கும்படி செய்யும் பொருட்டு, இவ் வீடுகளின் மொத்தச் செலவானது (total expenditure) பத்துப் பெருந் தொகுதிகளாகப் (ten broad groups) பிரிக்கப்பட்டது ; குறிப்பிட்ட பண்டங்கள் (certain commodities) ஒவ்வொரு தொகுதிக்கும் பிரதிப் பண்டங்களாக (representative commodities) எடுத்துக்கொள்ளப்பட்டன; குறிப்பிட்ட வகைகள் (certain types), குறிப்பிட்ட வணிகச் சின்னங்கள் (certain brands) ஒவ்வொரு பண்டத்திற்கும் பிரதியாக (as representative) எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆகவே, நடப்புக் குறியீட்டில் (current index) சராசரியானதொரு வீட்டின் (the average household) வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறும் எல்லாப் பண்டங்களின் விலைகளும், குறிப்பிட்ட வகை அல்லது தரத்தினைக் (specified type or quality) கொண்ட 350 தனிவேறான பண்டங்களின் (individual commodities) விலைகளால் சரிநுட்பமாக உணர்த்தப்பட்டுள்ளன வென்னும் எடுகோள் (assumption) கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு 350 பண்டங்களைக் கொண்டதொரு செலவின எல்லையானது (range of expenditure) மிகப் பரந்ததாகவுள்ளதென்பது அதில் இடம் பெற்றுள்ள பண்டங்களைப் பார்த்தாலே புரியும்; ரொட்டி, பால், மாமிசம், மீன் போன்ற பண்டங்களேயல்லாமல், தொலைக்காட்சிப் பெட்டிகள் (television sets) சலவைப் பொறிகள் (washing machines), பனிப்பாலேடு (ice-cream), சாக்லெட் பிஸ்கோத்துகள் (chocolate biscuits), தொலைபேசிக்கான வாடகை முதலியனவும் இடம்பெறுவதைக் கொண்டு செலவின எல்லையானது மிகப் பரந்ததொன்று எனக் கண்டுகொள்ளலாம்.

மூன்றாவதாக உள்ள பிரச்சினை குறியீட்டில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு பண்டங்களுடன் (different commodities) சேர்க்கப்படும் நிறைகள் (weights) பற்றியதாகும். சாக்லெட் பிஸ்கோத்துகளில் ஒரு பத்து சதவீத விலை அதிகரிப்பையும், ரொட்டி விலையில் (price of bread) அதே சதவீத விலை அதிகரிப்பையும் ஒன்றாகக் கருதுவது அறிவீனமாகும். இத்தகையதொரு நிலைதான், பண்டங்களின் தனித்தனியான விலைக்குறியீடுகளுக்குக் கணிதச் [அதாவது, நிறையிடாத (unweighted)] சராசரியைக் கணக்கிட்டு, அதன்மூலம் குறியீட்டைக் (index) கண்டுபிடித்தலிலும் ஏற்படும். ஆனால், பல இனங்களுக்கும் பல்வேறு நிறைகள் எதன் அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன (allotted)? ஒவ்

வொரு தொகுதிப் பண்டங்களிலுமுள்ள ஒவ்வோர் இனத்திற்கும் (to each item in the group) ஒவ்வொரு தொகுதிக்கும் (to each group) மேற்சொல்லப்பட்ட ஒரு நிறை (a weight) ஒதுக்கப்படுகிறது—இத்தகைய நிறையானது (weight) வீட்டுச் செலவின் மொத்தத்தில் ஒரு பகுதியைப் பிரதிபலிப்பதாகும். சான்ருக, ஒரு வீடானது வாரமொன்றுக்கு ரொட்டியின்மீது செலவழிக்கும் தொகையானது, அது சாக்லெட் பிஸ்கோத்துகளில் செலவழிப்பதைப்போன்று மூன்று மடங்கு எனில், ரொட்டி விலையும் சாக்லெட் பிஸ்கோத்துகளின் விலையும் ஒரே அளவில் அதிகரிக்கும்போது, ரொட்டி விலை அதிகரிப்பில் அவ் விலை அதிகரிப்பைப் போன்று மும்மடங்கு நிறைகள் சேர்க்கப்படும். அதாவது, சாக்லெட் பிஸ்கோத்துகளில் ஏற்படும் விலையதிகரிப்பைப் போன்று மும்மடங்கு விலையதிகரிப்பு ரொட்டி விலையில் ஏற்பட்டதாகக் கணக்கிடப்படும். எனவே, 3,000 வீடுகள்பற்றிய அளவாய்வானது (survey), குறியீடு (index) எந்தெந்தப் பண்டங்களைத் தழுவியுள்ளதென்பதை உணர்த்துவதுடன்கூட, அவைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள தராதர முக்கியத்துவத்தையும் (relative importance) விளக்குவதாகவுள்ளது.

குறியீடானது (index), ஒரு சராசரி குடும்பம் (average household) வாங்கும் பொருள்களின் செலவில் (cost of things actually bought) ஏற்படும் மாற்றங்களைச் சரிநுட்பமாக (accurately) உணர்த்தவேண்டுமேயாயின், அது காலந்தோறும் (periodically) திருத்தியமைக்கப்பட வேண்டியிருக்கும். செலவுப் பழக்கங்களில் ஏற்படும் மாற்றங்களால் அவ்வப்போது புதிய செலவினங்கள் (new items of expenditure) அதிகமாகக்கூடும்; சில பழைய இனங்களின் செலவு அறுக்கப்படவும் கூடும். ஆகவேதான், குறியீட்டில் சில பண்டங்களுக்குச் செலவழிக்கப்படும் செலவுகளில் அவ்வப்போது மாற்றம் காணப்படுகிறது. (ஆயினும், மாற்றமேதுமில்லாத சில பண்டங்களும் உள்ளன. அத்தகைய பண்டங்களுக்கான செலவினங்களில் அவ்வப்போது மாற்றங்களும் இருப்பதில்லை.) நுகர்ச்சி அமைப்பில் (cousumption pattern) எந்த அளவிற்கு மாற்றம் ஏற்படக்கூடுமென்பதனை 193ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள 1914, 1963ஆம் ஆண்டுகளின் குறியீடுகளைப் பார்த்தால் நன்கு தெரியவரும். முக்கியமான பண்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்பீடான முக்கியத்துவத்தையும் இக் குறியீடுகளிடையே காணலாம்:

குறியீட்டெண்களில் பயன்படுத்தப்பட்டுள்ள நிறைகள் (%)

	1914ஆம் ஆண்டின் குறியீடு	1963ஆம் ஆண்டின் குறியீடு
உணவு	60. 0	31. 9
சாராயம், புகையிலை ...	0. 8	14. 3
குடியிருப்பு, எரிபொருள் (fuel), விளக்கு	24. 0	16. 4
உடை	12. 0	9. 8
குடும்ப நெடுவாழ்வுப் பண்டங்கள் (Durable household goods) ...	0. 5	6. 4
பணிகள், வாகனங்கள் (Services and vehicles) ...	1. 2	14. 8
பல்வகைப் பொருள்கள் (Miscellaneous goods) ...	1. 5	6. 4
மொத்தம்	100. 0	100. 4

இவ்வாறு அடிக்கடி செலவு அமைப்புகளில் ஏற்படும் மாற்றங்களால் பிரிட்டனின் நடப்பிலுள்ள சில்லறை விலைக்குக் குறியீடானது (current retail price index) கடந்த சில்லறை விலைக் குறியீடுகளினின்றும் வேறுபட்டதாகவுள்ளது. நடப்புச் சில்லறை விலைக் குறியீட்டில் (current retail price index) சேர்க்கப்பட்டுள்ள இனங்களும் (items included) இணைக்கப்பட்டுள்ள நிறைகளும் (weights attached to them) குடும்பச் செலவினை அளவாய்வு செய்து, அதன் வழியில் அவ்வப்போது சரிசெய்யப்படுகின்றன. இவ்வாறு அவ்வப்போது சரிசெய்து குறியீடு அமைக்கப்படுவதில் என்ன நன்மை ஏற்படுகிறதெனில், குறியீட்டில் சேர்க்கப்படும் விலைகள், சராசரியான நவீனக் குடும்பம் சம்பந்தப்பட்டுள்ள விலைகளென்பதனை நிச்சயப்படுத்துகின்றன; வழக்கொழிந்த செலவு அமைப்பிலுள்ள பண்டங்களின் விலைகளைக்கொண்டதாக இருக்கவில்லை யென்பதனையும் நிச்சயப்படுத்துவதாக உள்ளன. ஆனால், இதில் ஒரு தீமையும் உள்ளது. மிகவும் பரந்ததொரு இடைவெளியைக்கொண்ட இருவேறு காலங்களின் குறியீடுகளை ஒப்புநோக்குவதில் என்ன நன்மை ஏற்பட்டுவிடப்போகிறதென்பதனைப் பொறுத்ததே அத் தீமையாகும்; சேர்க்கப்படும்

பண்டங்கள் இவ்விருவேறு காலங்களுக்கான குறியீடுகளிலும் வெகுவாக மாறுபட்டனவாக இருக்கும். ஆயினும், மேற்சொல்லப் பட்ட கால இடைவெளியானது மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாக இருப்பின்—இக் கால இடை வெளியில், முப்பது அல்லது நாற்பது ஆண்டுக்கால இடைவெளியில் ஏற்படுவதுபோல் அன்றிச் சேர்க்கப்படும் பண்டங்களில் கணிசமான அளவிற்கு மாற்றம் எதுவும் இருக்காதாகையால்—இயற்றப்படும் குறியீடு நடைமுறை அடிப்படையைக் கொண்டதாக இருக்குமாதலால், அதனால் கிடைக்கக்கூடிய நன்மை அதன் தீமையைக் காட்டிலும் அதிகமாக இருக்கும்.

இது ஒருபுறமிருக்க, இத்தகைய குறியீட்டெண்களில் உள் அளாவிய சில ஆபத்துகளும் உள்ளன; நிலவும் வாழ்க்கைத்தரத் தின் செலவில் ஏற்படும் மாற்றங்களை (to measure the changes in the prevailing standard of living) அளவிடுதற்குக் குறியீடானது பயன்படுத்தப்படும்போது (பெரும்பாலும் இந் நோக்கத்திற்கே பயன்படுத்தப்படுகிறது) உள்அளாவிய சில ஆபத்துகள் ஏற்படு கின்றன. முதலாவதாக, விலைகளில் ஏற்படும் மாற்றங்களைச் சரிக் கட்டும் அளவிற்கு அல்லது அதற்கும் மேலாகப் பண்டங்களின் தரத்தில் (quality) ஏற்படும் மாற்றங்களைச் சரிவரக் கணக்கிடுதல் இயலாது. உதாரணமாக, தொலைக்காட்சிப் பெட்டியின் (television) சராசரி விலை 1960-ஆம் ஆண்டில் இருந்ததைப் போன்று 10 சதவீதம் விலை அதிகமாக 1962ஆம் ஆண்டில் உள்ளதெனக் கொள்வோம். ஆனால், இடையேயுள்ள ஆண்டுகளின்போது சரா சரியான அத் தொலைக்காட்சிப் பெட்டியின் (the average television set) தரம் (quality) உயர்ந்திருக்குமானால், தொலைக் காட்சிப் பெட்டியின் ஒரு குறிப்பிட்ட நுகர்ச்சித் தரத்தின் செல வானது அதிகரிக்காமல் குறைந்து போயிருக்கக்கூடும்.

இரண்டாவதாக, குறியீடானது, வரிவிதிப்பு (taxation), சமூகப் பணிகள் (social services) இவைகளால் ஏற்படும் மாற்றங் களை எப்போதும் பிரதிபலிப்பதாக இல்லாமலும் இருக்கக்கூடும். நுகர்ச்சிப் பண்டங்களின்மீது விதிக்கப்படும் மறைமுக வரிகள் (indirect taxes) அதிகரிக்கப்படுமானால் விலைகள் அதிகரிக்கும்; இதனுடன் குறியீடும் அதிகரிக்கும். இது குறிப்பிட்டதொரு பண வருமானமானது (given money income) குறைவான உண்மை மதிப்பை அடைவதையே உணர்த்தும், வருமானவரியானது

(income tax) அதிகரிக்கப்படும்போது, இதைப் போன்றதொரு குறைவானது ஒரு குறிப்பிட்டதொரு பணவருமானத்தின் வாங்குந்திறனில் (a similar fall occins in the ultimate purchasing power of a given money income) ஏற்படுகிறது; ஆனுல், இத்தகைய மாற்றத்தைக் குறியீடானது சுட்டுவதில்லை. இதற்கு மாருக, சில குறிப்பிட்ட பணிகள் [உதாரணமாக, உடல்நலப் பணிகள் (health services)] பணத்திற்காக அல்லாது இலவசமாகவே அளிக்கப்படும்போது, கொடுக்கப்பட்டுள்ள ஒரு வருமானத்தின் (given income) உண்மை மதிப்பு அதிகரிப்பதைக் குறியீடு உணர்த்துவதேயில்லை. உண்மையில் பார்க்கப்போனுல், இதனுல் கொடுக்கப்பட்டுள்ள பண வருமானத்தோடு தொடர்பு கொண்டுள்ள வாழ்க்கைத்தரம் ஐயமின்றி அதிகரித்திருக்கும்.

கடைசியாக ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். இவ்வகையான குறியீட்டு எண்கள், பரந்த சமூகத் தொகுதிகளின் (broad social groups) செலவு அமைப்பினையே (expenditure pattern) பிரதிபலிக்கக்கூடும்; இத்தகைய பரந்த சமூகத் தொகுதிகளுள் நேர் எதிரிடையான விளைவுகளைக் கொண்ட தனிப்பட்ட தொகுதிகளும் (individual groups) இருக்கக் கூடும். சான்ருக, ஒரு சராசரி குடும்பத்திற்குச் சில்லறை விலைமட்டமானது (retail price level) மாருமல் நிலையாக (constant) இருத்தல்கூடும்; ஆனுல், ஒரு சராசரி குடும்பமென்பதே ஏதோ கருத்தியலானதொன்ருகத்தான் (something of an abstraction) உள்ளதே தவிர வேறில்லை. மேலும், சில குறிப்பிட்ட தொகுதியினருக்கு (to particular groups) தனி முக்கியத்துவம் வாய்ந்த சில பண்டங்களின் விலைகளில் பெருமளவில் மாறுதல்கள் ஏற்படக்கூடும். முதுமை ஓய்வுச் சம்பளக்காரர்கள் (old-age pensioners), அல்லது சிறு குழந்தைகளையுடைய குடும்பங்கள், அல்லது வாழ்க்கைத் தொழில் வகுப்பினரின் (professional classes) பண்டங்களில் இத்தகைய மாறுதல்கள் ஏற்படக்கூடும். எனவே, முழுவதும் தழுவியதொரு சராசரியில் (in an overall average) கணிசமான அளவிற்கு இலாபங்கள் (substantial gains) அல்லது இடர்ப்பாடுகள் (hardships) மறைந்திருக்கின்றன.

ஆயினும், கவனமுடன் அமைக்கப்பட்டால், குறியீட்டெண்ணுனது மிகவும் பயன்தருமொரு சாதனமாக விளங்கும். அது, நுகர்வோரின் பண்டங்கள் முழுவதற்குமான விலைமட்டத்தில்

ஏற்படும் மாற்றங்களைப்பற்றிய பரந்த கருத்தினை (a broad impression of changes in the price level of consumers' goods as a whole) நாம் கொள்ளுதற்குத் துணை புரிகின்றது. இத்தகைய மாற்றங்கள் (such changes) பணவீக்கம் (inflation), பணவடிப்பு (deflation) போன்ற பொருளாதாரக் கோளாறுகளுக்கு (forms of economic indigestion) முக்கிய அறிகுறிகளாக (important symptoms) இருக்கக்கூடும். மேலும், அரசாங்கப் பதிலாண்மைகளுக்கு (government agencies) அது ஓய்வுச் சம்பளங்கள் (pensions), உதவி மானியங்கள் (grants) இவற்றின் உண்மை மதிப்பில் (real value) ஏற்படும் மாற்றங்களை அவ்வப்போது அறிவிக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கக்கூடும். மேலும், சில்லறை விலைக் குறியீட்டை (index of retail prices) அடிப்படையாக வைத்துத் தான் பிரிட்டனில் எண்ணற்ற கூலி உடன்பாடுகள் (a great many wage-agreements) செய்யப்படுகின்றன. இதனால், ஒவ்வொரு முறையும் பொது விலைமட்டம் அதிகரிப்பதனால் தொழிலாளர்களுடைய கூலிகளின் (wages) வாங்குந் திறன் (purchasing power) குறைக்கப் படும்போதெல்லாம் தொழிலாளர்கள் தங்களின் கூலி சமரசங்களை (wage negotiations) புதுப்பித்துக்கொள்ளவேண்டிய (renew) அவசியமில்லாமலிருக்கிறது. [ஆனால், பலமுறை முன்னர் கூறியது போன்று, கூலிகளைத் தன்னியக்கமாக (automatically) பொது விலைமட்டத்துடன் ஒத்தியங்குமாறு செய்வதிலும் தீமைகள் இல்லாமல் இல்லை.] கடைசியாக, குறியீடானது பல்வேறு காலங்களில் கூலிகள், இன்னும் மற்ற வருமானங்களின் உண்மை வாங்குந் திறனை ஒப்பிட்டுப் பார்ப்பதற்குத் துணைசெய்கிறது. மேலும், பொருளாதாரக் கைக்கோளின் குறிப்பிட்ட மாற்றங்களால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கணக்கீடு செய்வதற்கும் [விலையின் போக்குகளால் (price movements) இவ்வாறு கணக்கீடு செய்தல் இயலாமல் தடுத்து] துணைசெய்கிறது.

4. இன்னும் மற்றக் குறியீட்டு எண்கள் (Other Index Numbers)

இந் நூல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பொறுத்தவரையிலும் மிக முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படும் குறியீட்டெண்ணானது, சென்ற உட்பிரிவில் ஆராயப்பட்டுள்ள சில்லறை விலைக் குறியீட்டெண்ணாகும் (retail price index)—இக் குறியீட்டெண்ணே, விலைகளின் பொதுமட்டத்தில் (general level of prices) ஏற்படும் மாற்றங்களை அளவிடுதற்குப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதால்தான் இத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்றுள்

ளது. ஆயினும், சில்லறை விலைக் குறியீட்டெண்ணைப் போன்றே, வேறு வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கக்கூடிய சில குறியீட்டெண்களும் உள. விலைகளின் பலதிறப்பட்ட தொகுதிகளில் (various groups of prices) ஏற்படும் மாற்றங்களை உணர்த்த முயலும் மற்றக் குறியீட்டெண்களையும் ஆராய்தல் பயனுடைத்தாகும்; இத்தகைய குறியீட்டெண்கள் பிரிட்டனில் காலந்தோறும் வெளியிடப்படுகின்றன.

உற்பத்தியாளரைப் பொறுத்தவரையில், அவருக்குத் தன்னுடைய உற்பத்திச் செலவுகளில் ஏற்படும் மாற்றங்கள் (changes in his costs of production) தனது உற்பத்திப் பொருளின் அங்காடி மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் (changes in the market value of his product) எவ்வளவு முக்கியம் வாய்ந்தனவோ, அவ்வளவு முக்கியம் வாய்ந்தனவாகும். கூலிவீதங்களின் (wage-rates) குறியீட்டெண்ணானது உற்பத்திச் செலவின் ஒரு பெரும் பகுதியினுடைய போக்குகளைப் பிரதிபலிப்பதாக உள்ளது; மேலும், இது சமுதாயத்தின் செலவுச் சக்தியின் (spending-power) மிக முக்கியமான ஆதாரமாக உள்ளதொன்றின் வளர்ச்சியை உணர்த்துவதாகவுள்ளது. சில்லறை விலைக் குறியீடானது தொகுக்கப்படும் முறையின் அடிப்படையில்தான் இக் குறியீடும் தொகுக்கப்படுகிறது. பல்வேறு பண்டங்களின் விலைகளுடைய சராசரியைக் கணக்கிடுவதற்குப் பதிலாக இக் குறியீட்டில் பல்வேறு தொழிலாளர்களின் கூலி வீதங்களுடைய சராசரி கணக்கிடப்படுகிறது. ஒவ்வொருவகைக் கூலி வீதங்களுடன் இணைக்கப்படும் நிறைகள் (weights) ஒவ்வொரு தொழிலாளர் தொகுதியில் உள்ள (each labour-group) எண்ணிக்கையின் அடிப்படையில் இணைக்கப்படுகின்றன. சில நோக்கங்களுக்கு, அதிலும் குறிப்பாக, மொத்த ஆள்சார் வருமானங்களின் போக்குகளை ஆராய்வதற்கு (for that of examining movements in total personal incomes), கூலி வீதங்களின் குறியீட்டைவிடச் சராசரி ஈட்டங்களின் குறியீடே (index of average earnings) மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது; இதற்குக் காரணம் என்னவெனில் இத்தகையதொரு குறியீடானது கூலி வீதங்களின் சரிசெய்தல்களின்றும் (changes arising from adjustments in wage-rates) தோன்றும் மாற்றங்களைக் கணக்கீடு செய்வதுடன் மிகுநேர வேலை ஊதியங்கள் (amounts of overtime), விருப்பூதியங்கள் (bonuses) இவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் சேர்த்துக் கணக்கிடுகிறது. இவ்விருவகையான குறியீட்டெண்

களும் மாதந்தோறும் வெளியிடப்படுகின்றன; நாடு முழுவதற்குமாக இவை வெளியிடப்படுவதுடன், முக்கியமான தொழில் தொகுதிகள் பொறுத்தும் இவை வெளியிடப்படுகின்றன.

உற்பத்திச் செலவில் மற்றொரு முக்கிய அங்கமாக இருப்பது மூலப்பொருள்களின் விலையாகும் (price of raw materials); உற்பத்தியில் பெருமளவில் பயன்படுத்தப்படும் பல்வேறு மூலப் பொருள்களின் மொத்த வியாபார விலைகளின் (whole sale prices) போக்குகளை உணர்த்தும் குறியீட்டெண்கள் மாதந்தோறும் வெளியிடப்படுகின்றன. இதைப்போன்றே, பிற தொழில்களுக்கு மூலப் பொருள்களை அல்லது அரைகுறையாக உற்பத்திசெய்யப் பட்ட பொருள்களையும் (materials or semi-finished goods) அளிக்கின்ற முக்கியத் தொழில்களுடைய உற்பத்தியின் (output) விலைகளில் ஏற்படும் மாற்றங்களை உணர்த்தும் குறியீட்டெண்களும் மாதந்தோறும் வெளியிடப்படுகின்றன. இன்னும் பிற குறியீட்டெண்கள் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் ஏற்றுமதிப் பொருள்களின் (exports) சராசரி மதிப்பில் அல்லது நாட்டில் இறக்குமதியாகும் இறக்குமதிப் பொருள்களின் (imports) சராசரி மதிப்பில் ஏற்படும் மாற்றங்களை அளவிட்டு உணர்த்துகின்றன. பிரிட்டனைப்போன்று, அதிக அளவில் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபாடுடையதொரு நாட்டிற்கு ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகியவற்றின் தராதர விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் மிக முக்கியம் வாய்ந்தனவாகும்; எவ்வாறு முக்கியம் வாய்ந்தனவாக உள்ளன என்பதை இந் நூலின் எட்டாம் பாகத்தில் நாம் காண்போம்.

இத்தகைய விலைக் குறியீடுகள் வெளியிடப்படுவது ஒருபுறமிருக்க, கணியங்களில் (விலைகளைக் காட்டிலும்) ஏற்படும் மாற்றங்களை (changes in quantities rather than prices) உணர்த்தும் குறியீட்டெண்களும் மாதந்தோறும் அல்லது காலாண்டு தோறும் வெளியிடப்படுகின்றன. இவைகளில் மிக முக்கியம் வாய்ந்தது மாதந்தோறும் வெளியிடப்படும் தொழில் உற்பத்திக் குறியீடாகும் (index of industrial production). இத்தகைய குறியீட்டின் எளியதோர் உதாரணம் இவ் அத்தியாயத்தின் ஆரம்பத்தில் காட்டப்பட்டது. ஐக்கிய அரசாங்கத்தில் (United Kingdom) வெளியிடப்படுகின்ற தொழில் உற்பத்தியைப்பற்றிய அரசாங்கக் குறியீடானது (official index of industrial production) இத்தகையதொரு குறியீட்டின் சிக்கல் நிறைந்த பதிப்பே

(a more complex version of this) ஆகும். முக்கியத் தொழில் தொகுதிகளுக்கு (major industrial groups) பிரதிநிதிகள்போன்று விளங்கும் சில மாதிரி நிறுவனங்களின் (sample firms) புள்ளிவிவரங்களைத் தாங்கிய அறிக்கைகள் ஒவ்வொரு மாதமும் அரசாங்கப் புள்ளிவிவர நிபுணர்களுக்கு (official statisticians) அனுப்பப்படுகிறது; இவ் அறிக்கைகள், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அறிக்கைக்கு முன்மாதத்தில் அவைகள் உற்பத்திசெய்த உற்பத்தி அளவுமட்டத்தைக் (level of output) குறிப்பிடுகின்றன. உற்பத்தி அளவானது வழக்கமாகப் பருப்பொருளியலான அளவில் (in physical) கணக்கிடப்படுகின்றன—இத்தனை டன்கள் எஃகு, இத்தனை கோடி கால்புதையரணங்கள் (pairs of shoes) என இவ்வாறுகக் கணக்கிடப்படுகின்றன. இத்தகைய புள்ளிவிவரங்களினின்றும், ஒவ்வொரு தொழில் தொகுதிக்கும் (for each industrial groups) ஒரு நிறையிட்ட குறியீட்டெண் (a weighted index number) தொகுக்கப்படுகிறது; ஒவ்வொரு நிறுவனத்தின் (each firm) உற்பத்தியளவோடும் இணைக்கப்படும் நிறையானது அதன் தொகுதியினுடைய மொத்த உற்பத்தியளவில் அதற்குள்ள ஒப்பீடான முக்கியத்துவத்தின் அடிப்படையில் (based on its relative importance in the group's total output) உள்ளது. [இது, அத்தியாயம் 18-ல் 1ஆம் உட்பிரிவில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளதோர் அளவாய்வான உற்பத்திப் புள்ளிவிவரத்தை (census of production) ஆராய்ந்து பார்க்கும்போது, புலப்படுகிறது.] தொழில் உற்பத்திக் குறியீடானது (index of industrial production) ஒவ்வொரு மாதமும் தொகுக்கப்படுகின்ற காரணத்தால், நாட்டின் பொருளாதார அமைப்பின் ஒரு முக்கியப் பகுதியாக உள்ளதொன்றின் நடப்பு வளர்ச்சிகளை (current developments) உணர்த்தும் வெகு முக்கியமானதொரு சுட்டியை (an extremely important indicator) அளிப்பதாகவுள்ளது.

இவ்வாறு கணியத்தன்மையான இன்னும் பிற குறியீட்டெண்களும் மாதந்தோறும் அல்லது காலாண்டுதோறும் வெளியிடப்படுகின்றன. அவைகள் இறக்குமதிகள் அல்லது ஏற்றுமதிகளின் பருப்பொருளியலான அளவினையும் (அவற்றின் மதிப்பை உணர்த்துவதனின்றும் வேறுபட்டவையாக), சில்லறை விற்பனைகளின் மட்டத்தையும் (the level of retail rates), ரயில் போக்குவரத்தின் அளவினையும் (the volume of rail traffic), இன்னும் மற்றப் பொருளாதார மாறிகளின் அளவையும்

உணர்த்துவனவாக உள்ளன. இன்னோரன்ன குறியீட்டெண்கள் ஒவ்வொன்றும், பொருளாதார நடவடிக்கையின் பல்வேறு துறைகளின் போக்குகளை (trends in different spheres of economic activity) அல்லது நாடு முழுவதற்குமான பொருளாதார நடவடிக்கைகளின் போக்குகளை அறிந்துகொள்வதற்கான, எளிதானதும் பயன் தரத்தக்கதுமானதொரு வழிகாட்டியாக (guide) உள்ளது. ஆனால் ஒன்று, இவைகளில் சில சமயங்களில் புள்ளிவிவரக் கணக்கீட்டுக் குறைபாடுகளும், இன்னும் பிற குறைபாடுகளும் இடம்பெறுதல் கூடுமாதலாலும், இக் குறைபாடுகள் இவற்றின் முக்கியத்துவத்தையே புறக்கணித்தல் கூடுமாதலாலும், இவற்றைப் பின்பற்றும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

R. Marris, 'Economic Arithmetic' (Macmillan, London, 1958), Chs 8–9.

Pigou, 'Income' (Macmillan, London, 1948), Ch. 1.

R. G. D. Allen, Statistics for Economists (Hutchinson, London, 1948), Ch. VI.

R. Loveday, 'A First Course in Statistics' (Cambridge University Press, London, 1958), Ch.9.

மடல் VIII

பன்னாட்டுப் பொருளாதாரம்

29. பன்னாட்டு வாணிபத்தின் முக்கியத்துவம்
(The Significance of International Trade)

1. தராதரச் செலவுகள் விதி (The Law of Comparative Costs)

ஒரு நாட்டின் நவீனப் பொருளாதார முறையானது எவ்வாறு உள்நாட்டுத் தேர்ச்சித்திறனின் (specialisation) அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளதோ, அதுபோன்றே, பொருளாதார வாழ்வில் வளர்ச்சியும் பெருக்கமும் நாளடைவில் அதிகரிக்கும் போது உலகம் முழுவதுமே பன்னாட்டுத் தேர்ச்சித்திறன் (international specialisation) என்பதனை நோக்கிப் பயணம் செய்கின்றது. தன்னுடைய நாட்டு மக்களின் ஆக்கத் திறன்களால் (productive activities) தன்னுடைய தேவை முழுவதையும் பூர்த்தி செய்துகொள்ளும் நாடு தற்போது ஒன்றுகூட இல்லையெனலாம். தற்காலங்களில், தன்னிறைவுள்ள நிலை (self-sufficiency) என்பதே எந்த நாட்டிற்கும் இயலாத தொன்றாக இருப்பதுவும் இதற்கு ஓரளவு காரணமாக இருக்கிறது; மேலும், அப்படித் தன்னிறைவு நிலையினை அடைவது சாத்தியமாக இருப்பினும், அது அதனைப் பெற்றுள்ள நாடுகளுக்கு மிகச்சிறந்த நலம்பயப்பதொன்றாக இருக்காது. ஒரு நாட்டில் எவ்வாறு திட்பமும் திறமையும், நாட்டுமக்களிடையே ஒரே சீராக இராமல் சமன்கேடாகப் பரவியுள்ளனவோ, அதுபோன்று உலகத்திலும் மனித சாதனங்களும் மூலப்பொருள் சாதனங்களும் (human and material sources) சமன்கேடாகப் பரவியுள்ளன. சில நாடுகள் விவசாய உற்பத்திக்கு மிகவும் ஏற்றதான தட்பவெப்ப நிலையைப் (climate)

பெற்றுள்ளன; சில நாடுகளுக்கு அத்தகைய தட்பவெப்பநிலை இருப்பதில்லை. சில நாடுகளில் நிறையத் தாதுப்பொருள் சாதனங்கள் (mineral resources) உள்ளன; மற்ற நாடுகளுக்கும் இவை இருப்பதில்லை. சில நாடுகளில் ஏராளமான அளவில் திறம் பெற்ற தொழிலாளர்கள் (skilled labourers) ஏராளமானவர்கள் உள்ளனர்; மற்ற நாடுகளில் அத்தகைய தொழிலாளர்கள் இல்லாத காரணத்தால் தொழில் வளம் குன்றியுள்ளது. இத்தகைய சாதனங்கள் யாவும் முழுமையான பெயர்ச்சித் தன்மையை (fully mobile) உடையனவாக இருப்பின், இவைகளின் ஒன்றுகலந்த திறன் (combined efficiency) எங்கு உச்சமாக இருக்கக்கூடுமோ அங்கு அவைகள் ஈர்க்கப்பட்டிருந்திருக்கும். உற்பத்திக் காரணிகள் நாடுகளுக்குள்ளே எவ்வாறு ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம் பெயராதிருக்கின்றனவோ, அவ்வாறே உலக அரங்கிலும் அவைகளின் இடப்பெயர்ச்சி மிக நுண்ணிய அளவில் மிகவும் குறைந்ததாக உள்ளது. இதன் காரணமாகத்தான், ஒரு குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்வதில் ஏற்படும் உற்பத்திச் செலவானது ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் வெகுவாக வேறுபடுகின்றது; இந்த வேறுபாடு, அந்தப் பொருளை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய சாதனங்களை அந்த நாடுகள் அளிக்கும் வகையினைப் பொறுத்தே ஏற்படுகிறது. எனவே, பொருள்கள் ஒவ்வொன்றையும் அவற்றிற்கு மிகவும் ஏற்றதான இடங்களில் உற்பத்தி செய்து, இவ்வாறு பல்வேறு பகுதிகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு பொருள்களை நாடுகள் ஒன்றுக்கொன்று பரிமாறிக் கொள்ளுமாயின், அவைகள் ஒவ்வொன்றும் சிறந்த நலனை அடைதல் கூடும்.

பன்னாட்டு வாணிபமானது, ஒரு நாடு சில பண்டங்களை உற்பத்தி செய்வதில் மற்ற நாடுகளைக்காட்டிலும் அதிகத் திறமை வாய்ந்திருப்பதனுல் அல்லது மற்றப் பண்டங்களை உற்பத்தி செய்வதில் பிற நாடுகளைக்காட்டிலும் குறைந்த திறமை உடையதாக இருப்பதால்—ஆக இந்த ஒரு காரணத்தால் மட்டுமே பன்னாட்டு வாணிபமானது வளருவதில்லை. பன்னாட்டு வாணிபத்திற்கு இது ஒன்றே காரணமாக இருப்பின், பல்வேறுபட்ட உற்பத்தித் திறன்களையுடைய பல நாடுகளிடையே ஏற்றுமதிகள், இறக்குமதிகளைக்கொண்ட அயல்நாட்டு வாணிபம் (foreign trade) என்பதே நடைபெற இயலாது; மேலும், பல

நாடுகள் தாங்கள் நுகரும் பொருள்கள் யாவற்றையும் தாமே உற்பத்தி செய்துகொள்ளத் தலைப்படவும் கூடும். ஆனால், உண்மையில் அவ்வாறு இருப்பதில்லை; வாணிபத்தின் துணை கொண்டு பல்வேறு பொருள்களும் பிற நாடுகளினின்றும் வரவழைக்கப்படுகின்றன. இதன் அடிப்படையில்தான் அயல்நாட்டு வாணிபமே இயங்கி வருகிறது. இத்தகையதோர் அடிப்படையில் இயங்கி வருவதற்குக் காரணம் என்ன? ஒரு நாடு, தானே குறைந்த உற்பத்திச் செலவில் உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய பண்டங்களை அயல்நாடுகளினின்றும் இறக்குமதி செய்துகொள்வதற்குக் காரணமென்ன ?

இத்தகைய நிகழ்ச்சிக்கான காரணத்தை தராதர உற்பத்திச் செலவுகளின் விதியே (the law of comparative costs) நன்கு விளக்குகின்றன. சம்பந்தப்பட்ட பண்டங்களை உற்பத்தி செய்வதில் நாடுகளுக்கிடையேயுள்ள ஒப்பீடான திறன்களில் (relative efficiencies) ஓரளவிற்கு வேறுபாடு உள்ள அளவும், நாடுகள் ஒன்றுக்கொன்று வாணிபம் செய்துகொள்ளுதலானது, அவைகளுக்கிடையே இலாபமென்னும் நலனை வழங்குவதாக இருக்கும். இது எதனை உணர்த்துகிறது? நாடுகள், தாம், எந்தப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு மிகவும் திறமை வாய்ந்தனவாக உள்ளனவோ, அப் பண்டங்களை உற்பத்தி செய்வதில் செறிந்து முனைதல் (concentrate) வேண்டுமென்பதையும் எந்தப் பண்டங்களை உற்பத்தி செய்வதில் தமக்குக் குறைவான திறமை உள்ளதோ அப் பண்டங்களை உற்பத்தி செய்யாமல், அவைகளைப் பிற நாடுகளினின்றும் இறக்குமதி செய்துகொள்ள வேண்டுமென்பதனையும், அவ்வாறு செய்தால் அது இலாபமானதாக இருக்குமென்பதனையும் உணர்த்துகிறது. வேலைப் பகுப்பிற்கான (division of labour) சிறந்ததோர் உவமையைத் தற்போது காண்போம். ஒருவர் ஒரு முதல்தர பாடகராகவும் (a first rate-musician), முதல்தர மோட்டார்-பொறிக் கம்மியராகவும் (a first rate motor-mechanic) இருக்கின்றார் எனக் கொள்வோம்; அவர் தம்முடைய காரைப் பழுதுபார்க்க வேண்டுமாயின், மோட்டார் பழுது பார்ப்பதையே, தமது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டதொரு மோட்டார்-பொறிக் கம்மியரிடம் விட்டுவிடுவதே இலாபம் பயப்பதாக இருக்கும். இவ்வாறு தமது மோட்டார் காரை அவரிடம் பழுதுபார்க்க விட்டுவிடுதலில் நேரமும் (time) பொருள்களும் தாமே பழுதுபார்த்துக் கொள்ளுதலைக்

காட்டிலும் அதிகமானாலும், இம் முறைதான் அப் பாடகருக்கு இலாபமாக இருக்கும். தமது பாடும் தொழிலில் தான் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்தி அதில் அதிக நேரத்தைச் செலவிடு வாராகில், தமது காரைப் பழுதுபார்த்ததற்கு ஒப்பீடான அதிகச் செலவை ஏற்பதற்கும் மேலாகவே தாம் பொருள் ஈட்டக் கூடும். பன்னாட்டு அரங்கிலும் இத்தகைய நிலையே உள்ளது. சில வகையான பண்டங்களை உற்பத்தி செய்வதில் தனிச் சிறப் பான திறனைப் பெற்றிருக்கும் ஒரு நாடு அப் பண்டங்களை உற்பத்தி செய்வதிலேயே தனது செறிந்த கவனத்தைச் செலுத்து மாயின், தான் இறக்குமதி செய்யும் பண்டங்களுக்கான (இப் பண்டங்களை, அவைகளை அளிக்கும் நாடுகளைக்காட்டிலும் தானே குறைந்த உற்பத்திச் செலவில் உற்பத்தி செய்யக்கூடுமாக இருப்பினும்) கூடுதல் செலவையும் ஏற்கும் அளவிற்கும் மேலாகவே ஈட்டம் செய்தல் (earn) கூடும்.

இதனை ஓர் உதாரணத்தால் நன்கு தெளிவுபடுத்தலாம். அ, ஆ என இரு நாடுகளே உள்ளனவும், ரொட்டிகள், இயந்திரங்கள் (loaves and machines) ஆகிய இரு பொருள்களுமே உள்ளதொரு கற்பிதமான உலகத்தினை எடுத்தாராய்வோம். முதலில் இதி லுள்ள எளிதானதொரு நிலைமையை ஆராய்வோம். 'அ' என்னும் நாடானது 20 ரொட்டிகளை அல்லது 5 இயந்திரங்களைத் தன்னிட முள்ள உழைப்பு அலகுகள் ஒவ்வொன்றாலும் (with each of its units of labour) உற்பத்தி செய்ய முடிகிறதென வைத்துக் கொள் வோம். (ஈண்டு, உழைப்பு என்னும் சொல் [labour] எல்லா உற்பத்திக் காரணிகளின் குறிப்பிட்ட அளவுகளைக் கொண்ட தொரு கலவைக் கற்றை [composite bundle] என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.) இதேபோன்று, 'ஆ' என்னும் நாடானது தன்னிடமுள்ள ஒவ்வோர் உழைப்பு அலகினாலும் (with each units of labour) 18 ரொட்டிகளை அல்லது 6 இயந்திரங்களை உற்பத்தி செய்ய இயலுமென்றும் கொள்வோம். வேறு வழியிற் கூறப்போனால் ரொட்டி உற்பத்தி செய்வதில் 'அ' நாடு அதிகத் திறமை வாய்ந்ததாக இருக்கிறதென்றும், 'ஆ' நாடு இயந்திரங் களை உற்பத்தி செய்வதில் அதிகத் திறமை வாய்ந்ததாக இருக்கிற தென்றும் கூறலாம். ஆக, இவ்விரு நாடுகளில் ஒவ்வொன்றும் தான் எந்தப் பொருளை மிக்க திறமையுடன் உற்பத்தி செய்ய இயலுகிறதோ அதனை உற்பத்தி செய்வதில் தேர்ச்சித் திறனைக் கடைப்பிடித்து உற்பத்திசெய்து மற்றப் பொருளை (other

commodity) இறக்குமதி செய்து கொள்ளுதலே இலாபம் பயக்கு மென்பது தெற்றென விளங்குகிறது. இதனை விடுத்து அவைகள் தன்னிறைவை (self-suffice) நோக்கியும், வாணிபமேதும் செய்யா மலுமிருக்குமானால் அவைகள் ஒவ்வொன்றிலுமுள்ள உழைப்பு அலகுகள் இரண்டினைக் கொண்டு (with two units of labour) கீழ்க் கண்ட வகையில் உற்பத்தியினைச் செய்யும் :

'அ' நாடு	20	ரொட்டிகள்	5	இயந்திரங்கள்
'ஆ' நாடு	18	ரொட்டிகள்	6	இயந்திரங்கள்
மொத்தம்	38	ரொட்டிகள்	11	இயந்திரங்கள்

அந் நாடுகள் தாம் எப் பொருள்களைச் சிறப்பாகச் செய்ய முடியுமோ அவற்றைச் செய்வதில் தேர்ச்சித் திறனைக் காட்டும் போது (specialise), ஒவ்வொரு நாடும் அதே இரு உழைப்பு அலகு களின் செலவீட்டால் (the same outlay of two units of labour) உற்பத்தி செய்யும் பண்டத்தின் அளவு கீழ்க்கண்டவாறு இருக்கும் :

'அ' நாடு	40	ரெட்டிகள்		
'ஆ' நாடு			12	இயந்திரங்கள்

இந்த வகையில் உற்பத்தி செய்யும்போது இரண்டு ரொட்டிகளும் (two loaves) ஓர் இயந்திரமும் (one machine) நிகர இலாபமாகக் கிடைப்பதால் இவற்றை இரு நாடுகளுமே பகிர்ந்து கொள்ள லாம். (இலாபமானது சரியாக எந்த வகையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறதென்பதனைச் சிறிது பின்னதாக ஆராய் வோம்.)

தற்போது, இன்னும் சற்று எளிதானதொரு நிலையை ஆராய் வோம். இந்தச் சூழ்நிலையில் ஒரு நாடு இரண்டு பொருள்களையுமே உற்பத்தி செய்வதில் அதிகத் திறமை வாய்ந்ததாக இருக்கின்ற தெனக் கொள்வோம். உதாரணமாக, தேர்ச்சித் திறனும் (specialisation) அயல்நாட்டு வாணிபமும் (foreign trade) இன்றியே ஒவ்வொரு நாடும் உழைப்பின் இரு அலகுகளைக் கொண்டதொரு செலவீட்டினால் (the outlay of two units of labour in each country) கீழ்க்கண்டவாறு உற்பத்தி செய்தன எனக்கொள் வோம்:

'அ' நாடு	20	ரொட்டிகள்	8	இயந்திரங்கள்
'ஆ' நாடு	18	ரொட்டிகள்	4	இயந்திரங்கள்
மொத்தம்	38	ரொட்டிகள்	12	இயந்திரங்கள்

'அ' நாடானது ஒரு பண்டத்தைமட்டுமே உற்பத்தி செல்வதில் தேர்ச்சித்திறனைக் கடைப்பிடித்து மற்றப்பண்டத்தை இறக்குமதி செய்துகொள்வதில் பொருளேதும் உண்டா? எவ்விதத்தாலும், ஒவ்வொரு பண்டத்தையும் 'ஆ' வைக் காட்டிலும் மலிவாகவே அது உற்பத்தி செய்ய முடிகிறது. ஆனல், ஒப்பீடான செலவுகளைப் (relative costs) பார்ப்போம். 'அ' நாடானது 8 இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கு, 20 ரொட்டிகளை உற்பத்தி செய்வதற்கு எத்தனை அலகுகள் உழைப்பினைத் தேவைப்பட்டதோ அதே அலகுகள் உழைப்பினைத்தான் தேவைப்படுகிறதெனில், இவையிரண்டுக்குமான விகிதம் 20-க்கு 8 என்பதாகிறது—அதாவது $2\frac{1}{2}$-க்கு 1 என்பதாகிறது. 'ஆ' நாட்டில் இவ் விகிதமானது 18-க்கு 4 என்று உள்ளது—அதாவது $4\frac{1}{2}$-க்கு 1 என்பதாகிறது. தராதரச் செலவுகளின் விதியின்படி (the law of comparative costs) 'அ' நாடானது, அதன் ஒப்பீடான திறன் எந்தப் பொருளை உற்பத்தி செய்வதில் மிக அதிகமாக (greatest) உள்ளதோ அதனை உற்பத்தி செய்வதில் தேர்ச்சித்திறனைக் கடைப்பிடித்தால்—அதாவது, இயந்திரங்களை உற்பத்தி செய்வதில்—இரு நாடுகளுமே இலாபமடையக்கூடும். இதன்படி உற்பத்தி செய்யப்பட்டால், இரு நாடுகளில் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள இரு உழைப்பலகுகளின் செலவீடானது (outlay) கீழ்க்கண்டவாறு உற்பத்தியினை அளித்தல்கூடும் :

'அ' நாடு			16	இயந்திரங்கள்
'ஆ' நாடு	36	ரொட்டிகள்		

இயந்திரங்கள் அதிகமாகவும் ரொட்டிகள் குறைவாகவும், இம் முறையில் இருப்பதால் இதில் உள்ள இலாபம் எவ்வளவு என்று தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. 'அ' நாடானது அதன் இயந்திரங்களில் 6 ஐக் கொடுத்துவிட்டுப் பரிவர்த்தனையாக 10 ரொட்டிகளைப் பெறுகிறதென்று வைத்துக்கொள்வோம். இத்தகையதொரு வியாபாரத்தில் ஈடுபட்டதால்தான் 'அ' நாடு இலாபமடைந்ததென்பதனைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். தற்போது 'அ' நாட்டிற்கு 20 ரொட்டிகளையும் 10 இயந்

திரங்களையும் பெற்றுள்ளது; தேர்ச்சித்திறனிலும் வாணிபத்திலும் ஈடுபடாதபோது அது 20 ரொட்டிகளையும் 8 இயந்திரங்களையுமே வைத்திருந்தது. 'ஆ' நாட்டின் நிலையைப்பற்றிப் பார்ப்போம். வாணிபம் இல்லாதபோது அது 18 ரொட்டிகளையும் 4 இயந்திரங்களையும் பெற்றிருந்தது; ஆனால், தற்போது 16 ரொட்டிகளையும் 6 இயந்திரங்களையும் பெற்றுள்ளது—அதாவது, மேற்சொல்லப்பட்ட வாணிபத்திற்குப் பிறகு 2 ரொட்டிகள் நஷ்டமும் 2 இயந்திரங்கள் இலாபமும் அதற்கு ஏற்பட்டுள்ளன. நிலுவையில் கணக்குப் பார்க்கும்போது அதற்கு இலாபம் கிடைத்துள்ளதா இல்லையா? இந்தக் கேள்வியினுக்கு விடை அளிப்பதற்கு, சம்பந்தப்பட்ட பண்டங்களை 'ஆ' நாடானது, தானே உற்பத்தி செய்வதற்கு அதற்குத் தேவைப்பட்டிருக்கும் சாதனங்களைக் கணக்கிட்டு அதன் இலாப நஷ்டங்களைத் தெரிந்து கொள்ளலாம். உழைப்பின் ஓர் அலகைக் கொண்டு (with one unit of labour) அது 18 ரொட்டிகளை அல்லது 4 இயந்திரங்களை உற்பத்தி செய்திருக்கக்கூடும். அதற்கு நஷ்டமாக ஏற்படும் 2 ரொட்டிகள் அதன் உழைப்பலகின் $\frac{1}{9}$ பாகத்திற்குச் சமம் என்பதனை உணர்த்துகின்றன; இதைப்போன்றே இலாபமாகக் கிடைத்த 2 இயந்திரங்கள் அதன் உழைப்பலகின் $\frac{1}{2}$ பாகத்திற்குச் சமமாகும். நிலுவையில் (on balance) கணக்குப் பார்க்கும்போது 'ஆ' நாட்டிற்கு $\frac{1}{2}-\frac{1}{9}$ அல்லது $\frac{7}{18}$ உழைப்பலகு இலாபம் கிடைத்துள்ளது. எனவே, தேர்ச்சித்திறனாலும் (specialisation) அயல் நாட்டு வாணிபத்தாலும், இவ்விரு நாடுகளுமே இலாபமடைந்துள்ளன.

மேற்கூறப்பட்ட உதாரணத்தில் உள்ளதுபோல் இரு நாடுகளைக் கொண்டதும் இரு பொருள்களே உள்ளதுமானதோர் உலகத்திற்கேயன்றிப் பல நாடுகளையும் பல பொருள்களைக் கொண்டதோர் உலகத்திற்கும் தராதரச் செலவுகளின் கோட்பாட்டினைப் பொதுமைப்படுத்தலாம் (generalised). ஒரு தனிப்பட்டதொரு பொருளாதார முறையில் (individual economy) வேலைப் பகுப்பும் (division of labour), நிலவியலையொட்டிய தேர்ச்சித் திறனும் (geographical specialisation), செய்கின்ற வேலையை, நாட்டுத் தேர்ச்சித்திறனும் (National specialisation), அயல்நாட்டு வாணிபமும் (foreign trade) பன்னாட்டுப் பொருளாதார முறையில் (international economy) செய்கின்றன. உற்பத்தித் தராதரச் செலவுகளில் வேறுபாடுகள் (differences in rela-

tive costs of production) நாடுகளுக்கிடையே நிலவும் வரையிலும், தேர்ச்சித் திறனும் (specialisation) வாணிபமும் (trade), உலகம் முழுவதையும், அதன் கிடைப்பருமையான சாதனங்களினின்றும் (scarce resources) உச்சமான உற்பத்தியளவினைப் பெறும்வகையில் துணை செய்யும். ஆனால், ஒரு நிபந்தனை. எல்லா இடங்களிலும், உற்பத்திக் காரணிகள் உத்தம விகிதங்களில் (optimum proportion) ஒன்றிணையாதவாறு உற்பத்திக் காரணிகள் ஒரு நாட்டின் எல்லைகளைக் கடந்து அப்பால் பெயர்ந்து செல்ல இயலாமலோ அல்லது மனமின்றியோ இருக்கவேண்டும்.

இது ஒரு கோட்பாட்டளவானதொரு (theoretical conclusion) முடிவே தவிர, நடைமுறையான முடிவாக இல்லை. நடைமுறை உலகத்தில், ஒவ்வொரு நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகளும் (productive activities) தராதரச் செலவுகள் விதியால்மட்டுமே ஆளப்படுவதாக இல்லை; இன்னும் மற்றக் காரணிகளும் இவற்றை ஆளுகின்றன. முதலாவதாக, தராதரச் செலவுகளின் விதியானது, நடைமுறையில் முற்றுருப்பெற்றதொரு வாணிபத் தன்னுரிமை (complete freedom of trade) நாடுகளிடையே நிலவுகிறது என்னும் எடுகோளினைக் (assumption) கொண்டதாக இருக்கிறது. ஆனால், நடைமுறையில் பார்த்தால் தராதர உற்பத்திச் செலவுகள் (comparative production costs), சுங்க வரிகள் (tariffs), பங்களவுகள் (quotas) இன்னும் பிற கட்டுப்பாடுகளாலும் நீர்மூலமாக்கப்படுகின்றன; தராதர உற்பத்திச் செலவுகள் வாணிபத்தில் ஏற்படுத்தும் விளைவுகளைப்பயனற்றவைகளாகச் செய்துவிடுன்றன (stultify). இரண்டாவதாக, போக்குவரத்துச் செலவுகளின் (transport costs) விளைவும் முக்கியமானதொரு பங்கினை ஆற்றுவதாக உள்ளது; அதனையும் ஆராய்தல் வேண்டும். ஒரு பண்டமானது 'அ' நாட்டில் 'ஆ' நாட்டைக்காட்டிலும் வெகு திறமையாக உற்பத்தி செய்யப்படுவதாக இருக்கலாம். அப் பண்டத்தை 'அ' நாட்டிலிருந்து 'ஆ' நாட்டிற்குக் கொண்டுவருவதில் ஏற்படும் போக்குவரத்துச் செலவு அதிகமாக இருந்து 'அ' வின் உற்பத்தி மேம்பாட்டுத் திறனைச் (productive superiority) சரிக்கட்டுமளவில் இருக்குமானால், 'ஆ' நாடானது, தானே, அப் பண்டத்தை உற்பத்தி செய்வதை (அதனுடைய உற்பத்தித் திறமை குறைவாக இருந்தபோதிலும்) சிறந்ததென்று உணரும். மூன்றாவதாக, உற்பத்தித் திறமையானது பல்வேறு நாடுகளிலும் பலதிறப்பட்டதாகவுள்ளதென்பதே, ஒரு குறிப்பிட்ட நாடு ஒரு குறிப்

பிட்ட பண்டத்தை உற்பத்தி செய்வதில் பூரண தேர்ச்சித்திறன் பெற்றுள்ளமைக்கு (complete specialisation) அது காரணமாகி விடாது; ஏனெனில், உற்பத்தியளவானது ஒரு குறிப்பிட்ட புள்ளிக்குமேல் செல்லுமாயின் குறைந்துசெல் விளைவு விதி யானது (the law of diminishing returns) செயல்பட ஆரம்பிக்கும். ஆக, ஒரு நாடானது ஒரு பண்டத்தை, தான் உற்பத்தி செய்யும் உற்பத்தியளவினை உலகம் முழுவதற்குமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கும் குறைந்த அளவில் உற்பத்தி செய் தால்தான் அப் பண்டத்தை உற்பத்தி செய்வதில் தனது மேம் பாட்டுத் திறனைத் தன்னிடம் பெற்றிருக்க முடியும். இவ்வாறு மேம்பாட்டுத் திறனைத் தன் கையகத்தே வைத்துக்கொள்ள விழை யும் அந் நாடு குறைந்த அளவிலேயே அப் பண்டத்தை உற்பத்தி செய்வதால், மற்ற நாடுகளும் அப் பண்டத்தை உற்பத்தி செய்ய வேண்டிய ஒரு நிலை இருந்துகொண்டே இருக்கும்.

ஆக, நாடுகள், மற்றப் பண்டங்களுக்கொப்பீடாகத் தாம் எந்தப் பண்டங்களை மிகவும் திறமையாக (most efficiently) உற் பத்தி செய்ய இயலுமோ அப் பண்டங்களை உற்பத்தி செய்வதில் தான் தமது தேர்ச்சித் திறனைக் காட்டுகின்றன என்பதைப் பொதுவாகக் கூறலாம். ஆனால், இத்தகைய போக்கின் முழுமை யான இயங்கு திறனானது (full working-out of this tendency) வாணிபத்தில் ஏற்படும் செயற்கைத் தடைகளால் (artificial obstacles) தடுக்கப்பட்டுவிடுகிறது—பண்டங்களைக் கடத்துவதில் ஏற்படும் கடத்துச் செலவுகளாலும் (transport costs), பல்வேறு நாடுகளின் உற்பத்தியளவு மட்டங்களில் ஏற்படும் மாற்றத்தால் அவைகளின் சராசரி உற்பத்திச் செலவுகளில் ஏற்படக்கூடிய மாற்றத்தாலும் (இத்தகைய செயற்கைத் தடைகளால்) தடுக்கப்பட்டுவிடுகிறது. ஆனால், தராதரச் செலவுகளின் விதியானது செயல்படுகின்ற அளவு வரையிலும் நாம் கணக் கிட்டால், ஒரு நாட்டில் வேலைப் பகுப்பானது (division of labour) எவ்விதம் நாட்டின் முழுவதும் தழுவிய உண்மை வருமானத்தை (the overall real income of the country) அதிகரிக் கின்றதோ, அதனைப் போன்றே நாடுகளிடையே நடக்கும் தடையிலா வாணிபமும் (free trade) சமூகத்தின் முழுவதும் தழுவிய உண்மை வருமானத்தை (the over-all real income of the society) எவ்வாறு அதிகரிக்கின்றதென்பதனை நன்கு உணர்த்துவதாகவே உள்ளது.

2. வாணிப மாற்றுவீதம் (The Terms of Trade)

தராதரச் செலவு விதியினை (the law of comparative costs) ஆய்ந்தபோது ஓர் ஓரமாக நிறுத்தி வைத்திருந்ததொரு பிரச்சினையைத் தற்போது நாம் ஆராய்வோம். நாடுகள், குறிப்பிட்ட பொருள்களை உற்பத்தி செய்வதில் தேர்ச்சித்திறனைக் கையாளுகின்றன எனவும் அவைகள் ஒன்றுக்கொன்று வாணிபத்தில் ஈடுபட்டுள்ளன எனவும் கொள்வோம். இவ்வாறு வாணிபம் செய்யப்படும் பண்டங்களின் தராதர மதிப்புகள் (relative values) எவ்விதம் நிர்ணயிக்கப்படுகின்றன ?

சென்ற உட்பிரிவில் (previous section) கூறப்பட்ட முதல் உதாரணத்தை மீண்டும் ஆராய்வோமானால், அவைகள் ஒன்றுக்கொன்று பண்டங்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ளும் வீதத்தில் அறுதியிடப்பட்ட வரையறைகளை (definite limit) ஏற்படுத்துவது, அந் நாடுகள் அப் பண்டங்களை உற்பத்தி செய்யும் உற்பத்தி நிலைமைகள் (conditions of production) என்பது தெற்றென விளங்கும். கருதுகோளான இரு நாடுகளின் உற்பத்தித் திறன்கள் (productive abilities of the two hypothetical countries) மேற்கூறியவாறு அமைந்திருப்பதால் அந் நாடுகள் உழைப்பின் ஓர் அலகினைக் கொண்டு கீழ்க்கண்டவாறு உற்பத்தியினைச் செய்யும் எனலாம்.

'அ' நாடு	20 ரொட்டிகளையும்	5 இயந்திரங்களையும்
'ஆ' நாடு	18 ரொட்டிகளையும்	6 இயந்திரங்களையும்

செய்தல் கூடும். 'அ' நாடானது ரொட்டிகளை உற்பத்தி செய்வதில் தேர்ச்சித்திறனைச் செலுத்துகிறதெனக் கொள்வோம்; அப்போது அஃது ஓர் இயந்திரத்தைப் பெறுவதற்குப் பரிவர்த்தனையாக 4 ரொட்டிகளுக்குமேல் தராது என்பதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். இதற்குக் காரணம் என்னவெனில், அந் நாடு 4 ரொட்டிகளை உற்பத்தி செய்வதற்கான உழைப்பைக் கொண்டு, தானே, ஓர் இயந்திரத்தை உற்பத்தி செய்துகொள்ளக்கூடும். அந் நாடு, ஓர் இயந்திரத்திற்கு 4 ரொட்டிகளுக்குமேல் (more than four loaves for a machine) கொடுக்க வேண்டியதாக இருப்பின், அத்தகையதொரு நிலையில், பன்னாட்டு வாணிபத்தால், அஃது இலாபத்தைக் காட்டிலும் நஷ்டத்தையே அடைதல் கூடும், இதைப்போலவே 'ஆ' நாடானது தன்

னுடைய ஓர் இயந்திரத்தை 3 ரொட்டிகளுக்கும் குறைவாகப் பரிவர்த்தனை செய்துகொள்ள இசையாது; காரணம், அதற்குத் தேவையான ஓர் இயந்திரத்தை 3 ரொட்டிகளைத் தயார் செய்வதற்கான உழைப்பின் அளவைக்கொண்டே அஃது உற்பத்தி செய்துகொள்ளக்கூடும். 6 இயந்திரங்களுக்குப் பரிவர்த்தனையாக 12 ரொட்டிகளைப் பெறுவதைக் காட்டிலும், அது 6 இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான தன்னிடமுள்ள உழைப்பினைக் கொண்டு 18 ரொட்டிகள் செய்வதை விழையக்கூடும். ஆகவே, இதற்குக் கடைசி முடிவு யாதெனில், ரொட்டிகளுக்கும் இயந்திரங்களுக்குமிடையேயுள்ள பரிவர்த்தனை வீதமானது (the rate of exchange) 4-க்கு 1 என்னும் விகிதத்திற்குமேல் இருக்க முடியாது (அப்படியிருப்பின், 'அ' நாடானது வாணிபத்திலிறங்காது); இதைப்போலவே மேற்படி வீதமானது 3-க்கு 1 என்னும் விகிதத்திற்குக் குறைவாகவும் இருக்க முடியாது (அப்படியிருப்பின் 'ஆ' நாடானது வாணிபத்திலிறங்காது).

ஆகவே, பரிவர்த்தனை வீதமானது ஓர் இயந்திரத்திற்கு மூன்று ரொட்டிகள், நான்கு ரொட்டிகள் என்பதில் மூன்று ரொட்டிகளுக்கும் நான்கு ரொட்டிகளுக்கும் இடையேயுள்ள தொரு புள்ளியில் அமையும். இவ்வாறு, வாணிபம் செய்யப்படும் பண்டங்களின் தராதர மதிப்புகள் (relative values) எந்தச் சரியானதொரு புள்ளியில் நிலைபெறுகின்றன—இதுவே, வாணிப மாற்றுவீதம் (terms of trade) என அழைக்கப்படுகிறது—என்பதனைப் பார்ப்போம். இது அவசியமாக தேவை அளிப்பு விதியைப் பொறுத்ததொன்றாகவேயுள்ளது. இந்த உதாரணத்தில் 'அ' நாட்டினின்றும் அளிக்கப்படும் ரொட்டிகளின் அளிப்பானது 'ஆ' நாட்டில் அவைகளைத் தேவைப்படும் தேவைக்கும் அதிகமாக இருப்பின், அத்தகையதொரு சூழ்நிலையில், ஓர் இயந்திரத்தைப் பெறுவதற்கு 'அ' நாடானது கிட்டத்தட்ட 4 ரொட்டிகளை அளித்தே பெறவேண்டியதாக இருக்கும். மற்றொரு வகையில் பார்க்கும்போது, 'ஆ' நாட்டின் ரொட்டிகளுக்கான தேவை (demand for loaves) திடீரென அதிகரிக்கும்போதும், அதேசமயத்தில் ஏதோ ஒரு காரணத்தால் ரொட்டிகளின் அளிப்புக் குறைக்கப்படும்போதும், 'ஆ' நாடானது ஒரு குறிப்பிட்ட அளவு ரொட்டிகளுக்கு அதிக இயந்திரங்களைக் கொடுக்கும்படியாக இருக்கும்; மாற்றுவீதமானது (exchange rate) 3-க்கு 1 என்னும் விகிதத்திற்கு மிக அருகில் நிலைபெறுவதாகும் (fall closer to 3 to 1).

இந்த உதாரணத்தில் உற்பத்தி நிலைகளால் (production conditions) விதிக்கப்படும் வரையறைகள் (limits) மிகவும் குறுகியனவாக இருப்பதால் 'அ' நாட்டிற்கும் 'ஆ' நாட்டிற்குமிடையேயுள்ள வாணிப மாற்று வீதமானது (terms of trade)—ரொட்டிகளின் மாற்று வீதத்தில் இயந்திரங்களின் மதிப்பு—அதிக அளவில் மாற்றத்தைக் கொண்டதாக இருக்காது. ஆயினும், நடைமுறையில் பார்க்கும்போது நிலை வேருகத்தானுள்ளது. உதாரணமாக, ஐக்கிய அரசாங்கத்தை ஆராய்வோமாயின், அதனுடைய பெருவாரியான இறக்குமதிகள் உணவுப் பொருள்களும் (foodstuffs) கச்சாப் பொருள்களுமே (raw materials). பிரிட்டனின் இந்தத் தேவைப் பொருள்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்ளப்படுவதற்கும் அயல்நாடுகளில் உற்பத்தி செய்யப்படுவதற்கும் உற்பத்திச் செலவளவில் நிறைய வேறுபாடு இருக்கின்றது. இதேபோன்று, பிரிட்டனின் முக்கியக் கொள்முதல் நாடுகள் (Britain's major buyers) தாமே தமக்கு வேண்டிய பொறியியல் பொருள்களை (engineering products) உற்பத்தி செய்துகொள்ளவேண்டுமெனில், அவைகளை உற்பத்தி செய்துகொள்வதற்கான உற்பத்திச் செலவானது, தற்போது அந் நாடுகள் அவைகளுக்குக் கொடுக்கும் விலையைக் காட்டிலும் மிக அதிகமாகவேயிருக்கும். எனவே, பிரிட்டிஷ் இறக்குமதிகளுக்கும் ஏற்றுமதிகளுக்குமிடையேயுள்ள மாற்று வீதங்களுக்கு, உற்பத்தி சாத்தியக் கூறுகளால் (production possibilities) ஏற்படுத்தப்படும் வரையறைகள் மிகவும் அதிகமானவைகளாக இருப்பதால், அதன் காரணமாக பிரிட்டனின் வாணிபமாற்று வீதமானது (terms of trade) கணிசமான அளவிற்கு அதிகரிக்கக் கூடும்.

ஏற்றுமதிகளின் சராசரி விலையையும் (the average price of exports) இறக்குமதிகளின் சராசரி விலையையும் ஒப்பு நோக்குதல் மூலம் (comparison) வாணிப மாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றங்களை மிக எளிதாக அளவிடக்கூடும். ஒரு நாட்டின் ஏற்றுமதிகள் அதனுடைய இறக்குமதிகளுக்கொப்பீடாக (relatively to its imports) விலை மலிவாகப் போகுமானல், அப்போது அந்த நாடானது ஒரு குறிப்பிட்ட கணிய இறக்குமதிப் பொருள்களை வாங்குவதற்கு அதிகப் பண்டங்களை ஏற்றுமதி செய்தாக வேண்டும்—இத்தகையதொரு நிலையில் அந்த நாட்டின் வாணிபமாற்று வீதம் சீர்கேடான நிலையிலுள்ளதெனக் கூறப்படுகிறது. இதற்கு

எதிரிடையாக, இறக்குமதிகளை ஒப்பு நோக்கும்போது ஏற்றுமதிகளின் மதிப்பில் ஏற்படும் ஓர் அதிகரிப்பானது—அதாவது வாணிப மாற்று வீதத்தில் ஏற்படும் ஒரு முன்னேற்றமானது—ஒரு நாடானது, ஒரு குறிப்பிட்ட அளவு இறக்குமதிகளை அவற்றிலும் குறைந்த அளவு ஏற்றுமதிகளைக் கொடுத்துப் பெற, அதற்குத் துணை செய்கிறது. இந்த நூற்றுண்டில் ஐக்கிய அரசாங்கத்தின் (United Kingdom) வாணிபமாற்று வீதமானது எந்த அளவிற்கு மாற்றமடைந்துள்ளதென்பதனைக் கீழ்க்காணும் அட்டவணை–16-ன் மூலம் நன்கு தெரிந்துகொள்ளலாம்.

அட்டவணை 16 : ஐக்கிய அரசாங்கத்தின் வாணிப மாற்று வீதம். 1913–61

	ஏற்றுமதிகளின் சராசரி மதிப்பு	இறக்குமதிகளின் சராசரி மதிப்பு	வாணிப மாற்று வீதம் (2÷1)
	(1)	(2)	(3)
1913	68	98	143
1923	130	146	113
1938	100	100	100
1946	196	213	109
1951	319	443	139
1961	354	364	103

ஆதாரம் : லண்டன், கேம்பிரிட்ஜ் பொருளாதாரத் துறையின் செய்திக்கதிர் எண் 41, மார்ச் 1962 (London and Cambridge Economic Service Bulletin, No. 41, March 1962)

மூன்றுவது வரிசையிலுள்ள (in column 3) ‘வாணிபமாற்று வீதக்’ குறியீடானது (the ‘terms of trade’) இறக்குமதிகளின் சராசரி மதிப்பின் குறியீட்டெண்ணை (dividing the index number of the average value of imports) ஏற்றுமதிகளின் சராசரி மதிப்பினுடைய குறியீட்டெண்ணுல் வகுத்துப் பெறப்பட்டதாகும்; ஆகவேதான் வாணிப மாற்று வீதக் குறியீட்டெண்ணில் ஏற்படும் ஓர் அதிகரிப்பானது வாணிப மாற்று வீதத்தின் சீர்கேடான நிலையைச் சித்திரிப்பதாகவுள்ளது—அதாவது, அந்த நாட்டின் இறக்குமதிகளின் விலைகள் அதன் ஏற்றுமதிகளின் விலைகளுக்

கொப்பீடாக அதிகரித்துள்ளதென்று பொருள். இதைப்போன்றே, வாணிப மாற்று வீதக் குறியீட்டெண்ணில் ஏற்படும் குறைவானது நாட்டின் முன்னேற்றத்தைக் குறிக்கும். அட்டவணையைப் பார்த்தால், 1913, 1938 ஆகிய இவ்விரு ஆண்டுகளுக்கிடையேயுள்ள கால அளவில், பிரிட்டன் நாடானது அதன் ஏற்றுமதிகள் இறக்குமதிகள் ஆகியவற்றின் தராதர மதிப்புகளில் (relative values) ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக மிக அதிகமான அளவில் இலாபமடைந்துள்ளதென்பது தெரியவரும்; அந்நாட்டின் ஏற்றுமதிகளின் சராசரி மதிப்பு (average value of her exports) கிட்டத்தட்ட 50 சதவீதம் அதிகரித்திருந்தது; அதன் இறக்குமதி விலைகள் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே இருந்தன. இத்தகைய நிகழ்ச்சிக்கு அடிப்படையான காரணங்கள் பல இருந்தன. அவற்றுள் முக்கியமானவற்றைப் பார்ப்போம். முதல் உலகப்போரின் (First World War) காரணமாகப் பல வாணிப மார்க்கங்கள் தடைப்பட்டிருந்தனவாகையால் பல நாடுகள் விவசாயத்தில் கவனம் செலுத்திவந்ததன் காரணமாக உலக விவசாய உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. மேலும் 1920ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகளிலும் 1930ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகளிலும் ஏற்பட்ட தொழிலியல் வளர்ச்சியின் காரணமாக மூலப்பொருள்களின் (primary products)—விவசாயப் பொருள்கள், சுரங்கப் பொருள்கள், காடுகளினின்றும் கிடைக்கக்கூடிய பொருள்கள், மீன் முதலியவற்றின் விலைகள் குறைந்தன. மேலும் 1930ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட மந்த காலத்தின்போது (depression) மூலப்பொருள்களின் அளிப்பு மிகவும் நெகிழ்வற்றதாக இருந்ததன் (highly inelastic supply) காரணமாக, தேவையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கிணங்க அவற்றின் விலையில் ஏற்ற இறக்கங்களும் அதிகமாக இருந்தன.

1938. 1951 ஆகிய இவ்விரு ஆண்டுகளுக்கிடையேயுள்ள ஆண்டுகளில் மேற் சொல்லப்பட்ட நிலை தலைகீழாக மாறியது. இதற்குக் காரணம் இந்த ஆண்டுகளில் விவசாயப் பொருள்களின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பானது செய்பொருள்களில் (manufactured goods) ஏற்பட்ட அதிகரிப்பைக் காட்டிலும் கணிசமான அளவிற்குக் குறைவாகவேயிருந்தது. விவசாயப் பொருள்களை அளிக்கும் முக்கிய நாடுகளான மலேயா (Malaya), பர்மா (Burma) போன்ற நாடுகளில் அரசியல் கொந்தளிப்புகள் இருந்

தமையும் இதற்கு ஓரளவு காரணமாகும். ஆயினும், மிகவும் முக்கிய மான காரணம், அர்ஜென்டினு (Argentina) ஆஸ்டிரேலியா (Australia) போன்ற நாடுகள்—முன்பு முற்றிலும் விவசாய நாடு களாக இருந்தவை—தங்களது சாதனங்களை அதிக அளவில் செய் பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தியதேயாகும். 1950ஆம் ஆண்டின்போதும் 1951ஆம் ஆண்டின்போதும் இறக்கு மதி விலைகளில் ஏற்பட்ட அதிகமான அதிகரிப்பிற்குக் (sharp rise) காரணம் பல நாடுகள் கொரியப் போருக்குப் பிறகு (after the Korean war), வெள்ளீயம் (tin), ரப்பர் (rubber) போன்ற மூலப் பொருள்களின் இருப்பை நிறைய வைத்துக்கொள்ளவேண்டு மென்று திடீரென விழைந்ததேயாகும்; அந்தச் சமயத்தில் இப் பொருள்களின் நெகிழ்வற்ற அளிப்பானது (inelastic supply) விலைகள் கொடூரமாக அதிகரிப்பதற்குக் (violent increase) காரண மாக இருந்தது. 1951ஆம் ஆண்டு முதற்கொண்டு பிரிட்டனின் வாணிப மாற்று வீதத்தில் (terms of trade) வெகுவான முன் னேற்றம் காணப்பட்டது. ஆயினும், 1961ஆம் ஆண்டில் வாணிப மாற்று வீதமானது, இரண்டாம் உலகப்போர் ஆரம்பிப்பதற்குச் சற்று முன்பிருந்த ஆண்டுகளில் முன்னேற்றமான நிலையில் இல்லாமல், ஏறக்குறைய சாதகமற்ற நிலையில்தானிருந்தது.

ஒரு நாட்டின் வாணிப மாற்று வீதமானது சீர்கேடான நிலையிலிருக்குமானுல் நிச்சயம் அது அந்த நாட்டிற்குப் பாதக மாகவேயிருக்கும். 1961ஆம் ஆண்டில் பிரிட்டன், தான் இறக்கு மதி செய்த பண்டங்களுக்காகச் செலவிட்ட தொகை £ 4,000 மில்லியனுகும். ஏற்றுமதிகளின் விலைகளுக்கொப்பீடாக இறக்கு மதிப் பண்டங்களின் விலையில் ஒரு 10 சதவீதம் அதிகரிக்குமானுல் £ 400 மில்லியன் மதிப்புள்ள ஏற்றுமதிப் பொருள்கள் அதிகரிக்கப் பட வேண்டும். இதனை வைத்துக்கொண்டுதான் முன்பு போலவே இறக்குமதிகளைக் குறையாமல் பெற முடியும். நிச்சய மாக, நாட்டின் பொருளாதார நிலைக்குள்ள சுமையை இது கணிசமான அளவிற்கு அதிகரிப்பதாகவேயிருக்கும். ஆயினும், வாணிப மாற்று வீதத்தில் ஏற்படக்கூடிய சில மறைமுகமான விளைவுகளால் (certain indirect effects of changes in the terms of trade) இந்த நிலை சரிக்கட்டப்படுதல் கூடும். முதலாவதாக, இறக்குமதி விலைகளில் ஏற்படும் அதிகரிப்பால், அந்த இறக்கு மதிப் பொருள்களை அளிக்கும் நாடுகளின் (suppliers) வரு மானங்கள் அதிகரிக்கும். இதனுல் பிற நாடுகள் அவைகளுக்கு

ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கான தேவை பெருகும். எனவே, ஒரு நாட்டின் வாணிப மாற்று வீதத்தில் நிலைமை சீர்கேடாகப் போகுமாயின், சிறிதுகால இடைவெளிக்குப் பிறகு, அந்நாடு ஏற்றுமதி செய்கின்ற பொருள்களின் அளவும் (volume of its exports) விலையும் (pricc) அதிகரிப்பதற்கு வாய்ப்பு ஏற்படு கிறது. அதிகரித்த இறக்குமதிகளுக்கு அது செலுத்தவேண்டிய தொகைகளின் சுமையும் குறையும். இரண்டாவதாக, பிரிட்டனைப் போன்ற நாடுகள், கடந்த இரு நூற்றுண்டுகளாக ஏராள மான அளவு மூலதனத்தை, மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளில் முதலீடு செய்துவைத்துள்ளன. எனவே, மூலப்பொருள்களின், விலையதிகரிப்பால் ஏற்படும் இலாபங்களின் ஒரு பகுதி, அவைகள் அயல்நாடுகளில் முதலீடு செய்துள்ள சொத்துகளினின்றும் கிடைக்கப்பெறும். ஆயினும், இத்தகைய ஈடுசெய்யும் விளைவுகள் (compensating effects) நேரடியாக ஏற்படும் விளைவுகள் முழுவதையும் சரிக்கட்டுவதென்பது (offset) இயலாததாகும். எனவே, வாணிப மாற்றுவீதத்தில் ஏற்படும் நிலைபேறின்மையானது (instability) அயல்நாட்டு வாணிபத் தைப் பெரிதும் நம்பி வாழும் நாடுகளுக்கும் உள்ளார்ந்ததோர் ஆபத்துச் சாதனமாகவே (a potential source of danger) எப்போ தும் இருந்துவருகிறது.

3. பன்னாட்டு வாணிபமும் வேலையும் (International Trade and Employment)

தொகுப்புத் தேவையின் (aggregate demand) கூறுகளைப்பற்றி அத்தியாயம் 25-ல் ஆராய்ந்தபோது, அயல்நாட்டு வாணிபம் என்னும் பிரச்சினையை ஆராயாது ஒரு பக்கமாக நிறுத்தி வைத்தோம். பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் ஏற்றுமதிகள் இறக்குமதிகள் இவைகளுக்கும் வருமானத்தைத் தீர்மானிக்கும் அமைப்பிற்கும் (the pattern of income) தொடர்புபடுத்திக் கூறு வது இங்கு அவசியமாகிறது. முதலீட்டுச் செயலின் பல அம்சங் களில் (many of the features of investment expenditure) ஏற்று மதிகள் இடம் பெறுகின்றன. முதலீட்டைப் (investment) போன்றே, ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியாலும், அதில் சம்பந்தப்பட்ட செய்பொருள் உற்பத்திக் காரணிகள் அளிக்கும் வருமானங்கள் பெறப்படுகின்றன. ஆக, ஏற்றுமதிகளால், முழுவதும் தழுவிய வருமானங்களின் மட்டங்களும், தேவையும் (overall levels of incomes and demand) அதிகரிக்கப்படுகின்றன.

மேலும், ஏற்றுமதிகளின் உற்பத்தியானது (production of exports), முதற்கருவிப்பொருள்களைப் (capital goods) போன்றே, உள் நாட்டு அங்காடியில் (home market) நுகர்வோர் பொருள்களின் அளிப்பில் கூடுதல் எதனையும் நேரடியாக உண்டுபண்ணுவதில்லை. எனவே, ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியானது, அவ்வுற்பத்தியால் கிட்டும் வருமானங்களால் ஏற்படும் அதிகரித்த தேவையினை (increased demand) சரிக்கட்டுமளவிற்கு அளிப்பில் எந்தவித அதிகரிப்பையும் ஏற்படுத்துவதில்லை. ஆகவேதான், முதலீட்டுச் செலவைப்போன்றே (like investment expenditure) ஏற்றுமதிகளில் உற்பத்தியானது பணவீக்கத்தை (inflation) ஏற்படுத்துவதாகவுள்ளது.

மற்றொருபுறம், இறக்குமதிகளைப்பற்றிப் பார்ப்போம். இறக்குமதிகள் இருவகைகளில் எதிரிடையான விளைவுகளைத் தருவதாகவுள்ளன. அவைகளின் உற்பத்தியால் தோற்றுவிக்கப்படும் வருமானங்கள் நாட்டின் வருமான ஓட்டத்தில் வந்து கலப்பதில்லை. அவை வேறு பிற நாடுகளின் உற்பத்திக் காரணிகளால் அடையப்பெறும் வருமானங்களாகவுள்ளன. மற்றொருபுறம், இறக்குமதிகள் உள்நாட்டு அங்காடியில் உள்ள பொருள்களின் அளிப்பிற்குக் (supply of goods available in the home market) கூடுதலை உண்டுபண்ணவே செய்கின்றன. எனவே, அவை தொகுப்புத் தேவையில் (aggregate demand) எந்தவித அதிகரிப்பையும் ஏற்படுத்தாமல் தொகுப்பு அளிப்பில் (aggregate supply) அதிகரிப்பை உண்டுபண்ணுகின்றன. எனவே, இறக்குமதிகள் (imports) பொருளாதார முறையில் ஒரு பணவடிப்பின் விளைவையே உண்டுபண்ணுகின்றன.

அயல்நாட்டு வாணிபத்தை (foreign trade) வருமான நிர்ணய ஆய்வில் இடம்பெறுமாறு புகுத்துவதற்கு ஒரு வழி யாதெனில், ஏற்றுமதிகளிலிருந்தும் இறக்குமதிகளைக் கழித்து வந்த நிகர ஏற்றுமதிகளை முதலீட்டுச் செலவின் ஒரு கூடுதல் தொகையாகக் கருதுவதாகும் (as an addition to investment expenditure)— அல்லது இறக்குமதிகள் ஏற்றுமதிகளைக்காட்டிலும் அதிகமாக இருக்குமாயின் முதலீட்டுச் செலவினின்றும் கழிக்கப்படும் ஒரு தொகையாகக் கருதுதல்வேண்டும். எனவே, வருமான நிர்ணய சமன்பாடானது கீழ்க்கண்டவாறு இருக்கும் :

$$Y=(I+E')\frac{1}{I-C'}$$

இதில் E′ என்பது இறக்குமதிகளைக் காட்டிலும் ஏற்றுமதிகள் அதிகமாக இருப்பதை—அதாவது நிகர ஏற்றுமதிகளை—குறிக்கும். சமன்பாட்டில் உள்ள மற்றக் குறி எழுத்துகள் முன்னர் ஏற்கெனவே கூறப்பட்டபோது எவற்றை விளக்கினவோ அவற்றையே விளக்கும்.

இதனைப்போன்றே இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மீது செலவழிக்கப்படும் வருமானப் பகுதியானது (the fraction of income which is spent on imported goods)—அதாவது சேமிப்பு நாட்டம் (propensity to consume)—வருமான 'ஒழுக்காக' (income leakage) கருதப்படலாம். இதனைச் சேமிப்பிற்கு (savings) சரிநிகராக ஒப்பிடலாம். ஏனெனில், இறக்குமதிகளுக்குச் செல விடுவதானது, நாட்டின் மற்ற அங்கத்தினர்களுக்கு வருமானம் பாய்ந்து செல்வதைத் தடுப்பதால்—சேமிப்பைப் போன்று—இவ்வாறு ஒப்பிடலாம். எனவே, இதன்படி, வருமான நிர்ணய சமன்பாடானது கீழ்க்கண்டவாறு இருக்கும் :

$$Y=(I+E)\ \frac{1}{1-C'+m}$$

இதில் E என்பது ஏற்றுமதிகளின் மொத்த மதிப்பையும் (total value of exports), m என்பது இறக்குமதிப் பண்டங்களின் மீது மக்கள் செலவிடுகின்ற வருமானத்தின் ஒரு பகுதியையும் குறிப்பதாகும். மேற் சொல்லப்பட்ட இரு வாய்பாடுகளுமே (expressions) ஐயமின்றி ஒரே விடையைத்தான் தரும். உதாரணமாக, ஒரு நாட்டில் முதலீட்டு வீதமானது £ 100 மில்லியனாக இருக்கிறதெனக் கொள்வோமானால், ஏற்றுமதிகளின் மட்டம் (level of exports) £ 80 மில்லியனாகவும், இறக்குமதிகளின் மட்டம் £ 60 மில்லியனாகவும், முழுவதும் தழுவிய சராசரி நுகர்ச்சி நாட்டமானது (average propensity to consume) $\frac{4}{5}$ ஆகவும் இருக்கும். முதல் வகை விதி முறையின்படி வருமானமானது கீழ்க்கண்டவாறு இருக்கும் (மில்லியன் பவுண்டுகளில்):

$$Y=(100+20)\ \frac{1}{1-\frac{4}{5}}=600$$

£ 600 மில்லியன் மொத்த வருமானத்தில் இறக்குமதிகள் £ 60 மில்லியன் ஆகையால் இறக்குமதிக்கான நாட்டத்தை (the

propensity to import) $\frac{1}{10}$ எனக் கொள்ளலாமாதலின் இரண்டாவது வகை விதிமுறையைக் கீழ்க்கண்டவாறு அமைக்கலாம்.

$$Y = (100+80)\ \frac{1}{1-\frac{4}{5}+\frac{1}{10}}$$

$$= 180 \times \frac{1}{\frac{3}{10}} = 600$$

இவற்றுள் இரண்டாவது விதிமுறையே வசதியானதாக இருக்கிறது.: காரணம் என்னவெனில், இம்முறையில்தான் இறக்குமதி கொள்முதலின் போக்கிற்குத் தன்னியக்கமாக (automatically) இடமளிக்கப்பட்டுள்ளது. ஆனால், முதலில் கூறப்பட்டுள்ள விதிமுறையில் இறக்குமதிகளின்மீது செலவழிக்கப்படும் மொத்தச் செலவு (total expenditure) இவ்வளவு என்பதைத் தெரிந்திருக்க வேண்டியதாகவோ அல்லது முன்பாகவே அது எவ்வளவு என்பதனைத்தனியே கணக்கீடு செய்துவைத்துக்கொள்ளும்படியாகவோ இருக்கிறது.

ஆக, வருமானங்களின் மட்டம், வேலை மட்டம் (the level of incomes and employment) ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் அயல்நாட்டு வாணிபம் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ளதென்பதானது நன்கு தெளிவாகிறது. உள்நாட்டு முதலீட்டுவீத அதிகரிப்பால் (a rise in the rate of domestic investment) என்ன உள்நாட்டு விளைவுகள் (internal effects) ஏற்படக்கூடுமோ சரிநுட்பமாக அதே விளைவுகள் ஏற்றுமதிகளின் பூரிப்பாலும் (export boom) ஏற்படக்கூடும். ஆயினும், ஏற்றுமதிகள் இறக்குமதிகள் இவைகளுக்கிடையே தொடர்பினை மறக்கலாகாது. உலகம் முழுவதற்குமாகக் கணக்குப் பார்க்கும்போது, ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் மதிப்பில் சமமாகவே இருந்தாக வேண்டும். எனவே, ஒரு நாட்டில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பால் அல்லது இறக்குமதிகள் குறைவதால் ஏற்படும் பணவீக்க விளைவுகள் (inflationary effects) உலகத்தில் ஏதாவதொரு பகுதியில் ஏற்படும் பணவடிப்பு விளைவுகளால் (deflationary effects) சரிநுட்பமாகச் சரிக்கட்டப்பட்டுவிடும். இத்தகையதொரு நிகழ்ச்சி அயல்நாட்டு வாணிபத்தின்மீது விதிக்கப்படும் தடைகளால் (restrictions) ஏற்படும் தராதர நன்மைகளை மதிப்பீடு செய்யும் வகையில் கணிசமான முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இருக்கிறதென்பதனைப் பிறிதோர் இடத்தில் ஆராய்வோம்,

4. தடையிலா வாணிபமும் தொழிற்காப்பும் (Free Trade and Protection)

நாடுகளுக்கிடையே பூரணமாக வாணிபத் தன்னுரிமை (complete freedom of trade) நிலவுமானால், அது பன்னாட்டுத் தேர்ச்சித்திறனை (international specialisation) ஊக்குவிப்பதாகவும், அத் தேர்ச்சித்திறனால் ஏற்படக்கூடிய இயன்ற அளவு நன்மைகள் யாவற்றையும் பயப்பதாகவும் இருக்குமென்னும் ஒரு முடிவை தராதர உற்பத்திச் செலவுகளின் விதி (the law of comparative costs) தெளிவாக உணர்த்தியது. ஆயினும், நடைமுறையில் பார்க்கப்போனால் ஒவ்வொரு நாட்டிலும் அயல்நாட்டு வாணிபத்தின்மீது எண்ணற்றதும் வரையறையற்றதுமான தடைகள் (restrictions) விதிக்கப்பட்டுள்ளன. சுங்கவரிகளாலும் (tariffs)—இறக்குமதிகளின் விலைகளை அதிகரிக்கும் வரிகள் அல்லது பங்கு அளவுகளாலும் (quotas)—அதாவது, ஒரு குறிப்பிட்ட கால அளவில் ஒரு குறிப்பிட்ட பொருள் இன்ன அளவுதான் இறக்குமதி செய்யப்படலாம் என்று வரையறை செய்யும் சட்டங்கள்—இறக்குமதிகள் (imports) வெகுவாகக் குறைக்கப்படுகின்றன. சில சமயங்களில், பண மானியங்களாலும் (subsidies) அல்லது தனி வகையான வரிகளை விதிப்பதாலும் (imposition of special taxes) ஏற்றுமதிகள் ஊக்குவிக்கப்படுகின்றன (encouraged) ; அல்லது தடைசெய்யப்படுகின்றன. பன்னாட்டு வாணிபத்தின் பண முறைக் கோட்பாடுகளைப் பின்னர் நாம் ஆராயும்போது நாம் காணப்போவதைப்போன்று ஒரு நாட்டில், அதற்குக் குறிப்பிட்ட பகுதிகளினின்றும் இறக்குமதியாகும் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் விதிக்கப்படும் தடைகளின் (restrictions) காரணமாக நாடுகளுக்கிடையே நடைபெறும் செலாவணிகளின் மாற்று (exchange of currencies) அடிக்கடி பாதிக்கப்படுகிறது. இத்தகைய தடைகளுக்கும் குறுக்கீடுகளுக்கும் (restrictions and interferences) காரணங்கள் யாவை?

இதற்கான காரணங்களில் பெரும்பாலும் பொருளாதாரக் காரணங்களாக இருப்பதைவிட அரசியல் அல்லது சமூகக் காரணங்களாகவே (political or social reasons) உள்ளன. உதாரணமாக, உழவுத் தொழிலானது (agriculture) பெரிதும் போர்வழிக் காரணங்களுக்காக (for stratagic reasons), இறக்குமதிகளின்மீது விதிக்கப்படும் தடைகளால் அடிக்கடி பாதுகாப்பளிக்கப்படுகிறது. இறக்குமதியாகும் விவசாயப் பொருள்களின்

நிறைந்த போட்டியிலிருந்து அதனை நாட்டின் உழவுத் தொழில் சமாளிக்கவேண்டியதாக இருப்பின் உள்நாட்டு உழவுத் தொழில் உயிர் பிழைத்திருப்பதே அரிதாகிவிடுமென அஞ்சப் படுகிறது. அவ்வாறு, உழவுத்தொழில் அங்கி அருகிப்போகு மாகில், போர்க்காலத்தில் நாடு தனக்கு விவசாயப் பொருள்களை அளித்துவரும் அயல்நாடுகளிலிருந்தும் துண்டிக்கப்பட்டுவிடு மாதலால், அது நாட்டிற்கு சோதனையானதொரு பிரச்சினை யாகவே இருக்கும். இதைப்போன்றே சில தொழில்கள் மக்களின் சமூக வாழ்வில் முக்கியமான இடம் பெற்றுள்ளனவெனக் கருதப் படுமானுல் அத் தொழில்களுக்குத் தொழிற்காப்பு அளிக்கப்பட லாம்; அல்லது, ஒரு தொழிலில் ஈடுபாடுடைய தொழில் முதலாளிகளோ அல்லது தொழிலாளர்களோ தங்களுக்கு அன் னியப் போட்டியால் ஏற்படக்கூடிய இடையூறுகளைக் களைவதற்கு அரசாங்கத்தினிடம் தங்களது அரசியல் செல்வாக்கைப் பயன் படுத்தி, தகுந்தவாறு செயலாற்றுமாறு செய்யக்கூடும்.

பொருளாதாரக் காரணங்களை அடிப்படையாக வைத்துத் தடையிலா வாணிபத்தில் (free trade) குறுக்கிடல் சரியென லாகுமா? பொதுவாக, காரண காரியமாக இதனை ஆராயும் போது சரியில்லை என்னும் முடிவுக்கே வரத் தோன்றுகிறது. அயல் நாட்டு வாணிபம் வளரும்போது, அது ஒரு நாடானது ஒரு குறிப் பிட்ட பண்டத்தை உற்பத்தி செய்வதில் குறைந்தபட்சம் மற்றொரு நாட்டைக்காட்டிலும் ஒப்பீடானதொரு நலனைப் பெற்றுள்ளதென்பதனை உணர்த்துகிறது. மேலும் பண்டங்களின் தடையிலா ஓட்டத்தில் (free flow of goods) தேர்ச்சித்திறனல் (specialisation) கிட்டக்கூடிய சில நன்மைகளைத் தியாகம் செய்த தாகும். மற்றுமொன்றை ஈண்டுக் கூறவேண்டும். தனது இறக்கு மதிகளைத் தடை செய்துகொண்டிருக்கும் ஒரு நாடானது, அத னுடைய சாதனங்களால் (resources) அனுவசியமான அதிகரித்த செலில் (at an unnecessarily high cost) பொருள்களை உற்பத்தி செய்வதால், தனது உண்மை வருமானத்தைக் (real income) குறைத்துக்கொள்கிறது.

ஆயினும், பொருளாதார ரீதியில் மேற்கூறியவற்றிற்கு விதி விலக்காக ஒரு வாதமானது அடிக்கடி கூறப்படுகிறது. அது குழந்தைப் பருவத்திலுள்ள தொழிலுக்கு (infant industry) பாது காப்பளிக்கும் வாதமாகும். சில சமயங்களில் ஒரு நாடானது,

அதற்கு மிகவும் பொருத்தமானதொரு தொழிலைப் பெருக்க முனைதல்கூடும். அத் தொழில் வளம்பெற்று வளருமாகில் அயல் நாட்டு உற்பத்தியாளர்களின் போட்டியையும் வெல்லுமளவிற்கு அது திறன்பெற்று விளங்கக்கூடும். ஆயினும், அத் தொழிலானது அதனுடைய ஆரம்பமான வளர்ச்சி நிலைகளின்போது (in the early stages of its development) அயல்நாட்டுப் போட்டியினைச் சமாளிப்பதென்பது இயலாததாகவே யிருக்கும். அத் தொழில் ஆரம்பத்தில் சிற்றளவு உற்பத்தியின் அடிப்படையில்தான் தொழிலை ஆரம்பிக்க வேண்டியிருத்தலால், அதனால் பேரளவு உற்பத்தியின் சிக்கன நலன்கள் யாவற்றையும் அடைதல் இயலாததாக இருக்கும். தேர்ச்சிமிக்க தொழிலாளர்களை உருவாக்குவதற்கும், தேர்ச்சித் திறன்பெற்ற அங்காடி விற்பனை முறையும் (specialised marketing), அல்லது திறமை மிகு தொழில் முயல்வோரின் திரண்ட அனுபவத்தையும் குழந்தைப் பருவத்திலேயே பெறுவதென்பது இயலாததாகும். எனவே, ஒரு தொழிலின் குழந்தைப் பருவத்தின்போது அதற்குக் காப்பு அளிக்கப்படுவதானது அதனை மேற்கூறிய நலன்கள் யாவற்றையும் அடையச் செய்து, இனிப் பாதுகாப்பே வேண்டப்படாததொரு முதிர்ச்சியடைந்ததும் பூரணமாகப் போட்டியிடக்கூடியதுமானதொரு தொழிலாகச் செய்யும். குழந்தையானது உடல்நலமும் தெம்பும் நிறைந்த ஒரு மனிதனாக வளர்க்கப்படுவதற்கு அக் குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கக் கூடிய தீய சக்திகளினின்றும் அக் குழந்தை கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கப்படுவதுபோன்றே குழந்தைப் பருவத்திலுள்ள தொழிலும் பாதுகாப்பளிக்கப்படல் வேண்டும். கோட்பாட்டளவில் மேற்சொல்லப்பட்ட வாதமானது சிறந்ததாகவே காணப்படுகிறது. இந்த வாதமானது, நடைமுறையான உலகத்தில், மக்களுக்குத் தொழில் வாய்ப்புகளைப்பற்றிய அறிவு நிறை குறைவாக உள்ளதென்பதனையும் (knowledge is not perfect) பொருளாதார வளர்ச்சியானது உடனடியாக நிகழ்கிறதொன்றன்று (economic development is not instantaneous) என்பதனையும் அடிப்படையாகக் கொண்டதாகவுள்ளது. நடைமுறையில் பார்க்கப்போனால், விழையப்படும் பல நன்மைகள் இத்தகைய காப்பு முறையினின்றும் அடையப்பெறுவதில்லை என்பது தெரியவரும். போட்டியினின்றும் (competition) பாதுகாப்பளிக்கப்படும் ஒரு தொழிலானது வளரும் திறனைப் பெறுவதேயில்லை. ஒரு தொழிலுக்குப் பாதுகாப்புப் போர்வை அளிப்பதானது அத்

தொழிலானது தனது உச்சமான திறனை (maximum efficiency) ஆற்றலுடன் தேடிக்கொள்ளாமல் வாளாயிருந்துவிடச் செய்கிறது. மேலும், பாதுகாப்பை அளித்துவிட்டு அதனை நீக்குங் காலையில் அது சம்பந்தப்பட்ட தொழில், முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஊறு விளைவிப்பதாக இருக்கும்; இவர்கள் சிறு கூட்டத்தினரார்கவும் ஒருமித்தவர்களாகவும் (homogeneous) இருப்பதால் மாற்றத்திற்குத் (change) தங்களுடைய ஒன்றுபட்ட எதிர்ப்பை உடனடியாகக் காட்டுதல் இயலும். மற்றொருபுறம் பார்க்கப்போனால், பாதுகாப்பு நீக்கப்படுவதால் பயனடைபவர்கள் நுகர்வோர்களாகவேயிருக்கின்றனர். இத்தகைய நுகர்வோர் கூட்டம் அவர்களுக்குள் எவ்விதக் கூட்டமைப்புமின்றி, பாதுகாப்பினாலும் அதன் காரணமாக அதிக விலைகளைக் கொடுக்க வேண்டியிருப்பதாலும் தாம் அடையும் இழப்பினைப்பற்றி (loss) யாதொன்றும் தெரியாதவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறு, மாற்றங்கள் (changes) உள்ளார்ந்த நஷ்டத்தை அனுபவிப்பவர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பை அளிப்பனவாயும், அவைகளால் நன்மைகளை அடைபவர்களிடமிருந்து யாதொரு நன்றி பாராட்டுதலையும் பெறுமல் இருக்குமாதலால், அத்தகைய மாற்றங்களைச் செய்வது விவேகமான அரசாங்கக் கைக்கோளாகாது எனக் கருதப்படுவதால், ஒரு முறை தொழிற்காப்பளித்துவிட்டால் அக் காப்பினைப் போக்குதலரிது.

பொருளாதாரக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தொழிற்காப்பிற்குச் சாதகமாகக் கூறப்படும் இன்னும் மற்ற வாதங்களும் (other arguments) உண்மை நிலைக்குக் குறைவானதாகவேயிருக்கின்றன. இத்தகைய வாதங்களுள் ஒன்று, அதிகக் கூலி வீதத்தையுடையதொரு நாடானது (a high-wage country) குறைந்த கூலி வீதங்களையுடைய நாடுகளின் (low-wage countries) போட்டியினின்றும்—இத்தகைய போட்டியானது 'முறையற்ற போட்டியென' (unfair competition) கூறப்படுகிறது—தன்னைக் காத்துக்கொள்ளவேண்டுமென்பதாகும். இந்த வாதத்தில் அடிப்படையானதொரு கருத்துக் குற்றம் காணப்படுகிறது. வாணிபத்தில் உற்பத்திப் பொருளின் ஓர் அலகிற்கான கூலிச் செலவுதான் (wage-cost per unit) கருதப்படவேண்டுமே தவிர தனியாகக் கூலிகள் வீதம் (level of wages) மட்டுமே கருதப்படுதல் தவருகும். சான்ருக, உலகத்திலேயே ஐக்கிய அமெரிக்காவில் தான் கூலி வீதம் (wage-level) மிக அதிகமாக உள்ளது. ஆனல்,

அந் நாட்டின் உற்பத்தியளவின் சராசரி ஓர் அலகிற்கான கூலிச் செலவுகள் (labour costs per unit of output) மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது மிகக் குறைந்தே காணப்படுகின்றன. இரண்டாவது, இவ்வாதம் மற்றுமோர் உண்மையைப் புறக்கணிப்பதாகவுள்ளது. குறைந்த கூலியுள்ள நாடுகளின் பொருள்களை வாங்காமல் அவற்றைப் புறக்கணித்தால், அந்நாடுகளின் கூலிவீதம் ஏற்கெனவே உள்ளதைவிட இன்னும் குறைந்து செல்லும். அங்காடிகள் பெருகும்போதும், வேலை நிறைவு உள்ளபோதுந்தான் (only in conditions of expanding markets and full employment) கூலிகள் அதிகரிக்கும். மேலும், இந்த வாதத்தில் உள்ள முக்கியக் குறைபாடு யாதெனில், ஒரு நாடு, குறைந்த விலையில் பொருள்களை வாங்குவதன்மூலமே (இப்படி வாங்குவதன் காரணமாக அதன் உண்மை வருமானம் அதிகரிக்கப்படுவதால்) இலாபமடையக்கூடுமென்னும் கருத்தினைக் கொண்டுள்ளமையாகும்; தனது ஏற்றுமதிகளைப் பெருக்கவேண்டுமென்பதற்காகத் தனது உண்மை வருமானத்தைக் குறைத்துக்கொள்ள ஒரு நாடு விழையுமாயின், நஷ்டம் அவ்வாறு ஏற்றுமதி செய்யும் அந்நாட்டையே சாருமேயல்லாது அதன் வாடிக்கைக்காரர்களைச் சாராது.

மந்த காலங்களில் (periods of depression) பெரும்பாலும் கூறப்படுகின்ற மற்றொரு வாதமானது, உள்நாட்டு வேலை வாய்ப்புகளைத் தூண்டுவதற்குத் தொழிற்காப்பு அளிக்கப்படல் வேண்டுமென்பதாகும். இத்தகையதொரு கருத்தறிவித்தலானது (suggestion) கோட்பாட்டளவில் சரியானதாகத் தோன்றினாலும் (ஏற்கெனவே நாம் பார்த்தபடி) அதனுடைய கருத்து நயம் (attraction) பெரிதும் பொய்ப்பானதாகவே (illusory) உள்ளது. தொழிற்காப்பானது, தன்னியக்கமானதும் (automatic) ஆழ்ந்து ஆராய்ந்து செய்யப்படுவதுமான (deliberate) பழிவாங்கு நடவடிக்கையைத் (retaliation) தோற்றுவிக்கும். ஒரு நாடு தன்னுடைய இறக்குமதிகளைக் குறைத்துக்கொள்ளுமாயின், அவ்விறக்குமதிகளை அளித்துவரும் நாடுகளின் வருமானம் குறையும். இத்தகையதொரு நிலையானது, தொழிற்காப்புச்செய்து நாட்டின் ஏற்றுமதிகளுக்கான தேவையைப் (demand for the protecting country's exports) பாதிக்கும்; அந்த நாட்டின் ஏற்றுமதிப் பொருள்கள் உலக வாணிபத்தில் பெரியதோர் அங்கம் வகிப்பதாக இருக்குமாயின் அந்நாடு வெகுவாகப் பாதிக்கப்படும். (அப்படி அந்த நாடு உலக ஏற்றுமதிகளில் பெரும் பங்கு கொள்வ

தாக இல்லையெனில், தொழிற் காப்பு செய்வதால் அதற்குப் பயன் ஒன்றும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.) மேலும், தொழிற் காப்பு என்னும் விளையாட்டானது ஒருவர்க்கு மேற்பட்ட நபர் களாலும் ஆடக்கூடியதாகும்; தனது இறக்குமதிகளில் ஒரு நாடு தடைகளை ஏற்படுத்துமானால், அந் நாட்டின் ஏற்றுமதிகளின்மீது பிற நாடுகளும் வஞ்ச மனத்தோடு தடைகளை ஏற்படுத்தும். ஆகவே, ஏற்றுமதித் தொழில்களுக்கிழைக்கப்பட்ட நஷ்ட மானது, உள்நாட்டுத் தொழில் சம்பந்தப்பட்ட வேலைக்கு (unemployment) அளிக்கப்படும் எந்த ஓர் ஊக்கியையும் (any stimulus to employment in home industry) அதனைப் பகுதி யாகவோ அல்லது முழுவதுமாகவோ சரிக்கட்டிவிடும். இதனை வேறெதுவும் விளக்கிக் கூறவில்லையெனினும், 1930ஆம் ஆண்டை யடுத்த பத்தாண்டுகளின் நிகழ்ச்சியானது நன்கு விளக்கியது.

ஆக, கோட்பாட்டளவில் பார்க்கும்போது, தொழிற் காப் பினை உண்மை வருமானத்தின் நஷ்டத்தை ஏற்றே கடைப்பிடிக்க இயலும் எனக் கூறலாம். போர்க்காலத்தின்போது பிற நாடு களை நம்பியில்லாததொரு நிலையால் ஏற்படும் இலாபங்கள் அல் லது சமூக இலாபங்கள் (strategic or social gains) இத்தகைய தோர் இழப்பினைச் சரிக்கட்டுவதற்கும் மேலாகவேகூட இருக்கக் கூடும். ஆனால், தடையிலா வாணிபத்தின்மீது ஏற்படுத்தப்படும் தடைகள் (restrictions on free trade), பொருளாதார நோக்குக் கொண்டு பார்க்கும்போது, நியாயமற்றவையாகவே தோன்று கின்றன. அதே சமயத்தில், நடைமுறை உலகத்தில், பல்வேறு நாடுகளுக்கிடையே சாதனங்களின் (resources)—குறிப்பாக, உழைப்பின் (labour)—மறு சரி செய்தலும் (readjustment), மாற்றமும் (transference) வெகு நிதானமாக நடைபெறுவனவாக வும் இடர்ப்பாடு நிறைந்தனவாகவும் உள்ளன. பெரியனவும் உடனடியானவுமான மாற்றங்கள் தேவையாக இருக்கும்போது அரசாங்கத்தின் தலையீடற்ற விலை முறையானது வலுவிழந்த தொன்றாகவும் விரயமானதாகவுமிருக்கும். நிறைவுப் போட்டி யுள்ளதோர் உலகத்தில் முழுமையான தடையிலா வாணிபத் திற்கான வாதமானது, பொருளாதாரக் காரணங்களால் (on economic grounds), எதிர்த்துத் தாக்கப்பட முடியாததாகவே இருக்கிறது. தடைசெய்யப்படா இறக்குமதிகளால் (unrestricted imports) மூலதன விரயமும் (wastage of capital) தொழிலாளர் களின் வேலையின்மையும் ஏற்படக்கூடுமாயினும், பூரணமான

தடையிலா வாணிபத்தால் சமனமான பொருளாதார நலன் கிட்டும் என்றும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஓர் இடை மாறுபாட்டுக் காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உதவியளிக்கும் நோக்கத்துடனும், அக் காலத்தின்போது நேரிடும் இடர்ப்பாடுகளைத் தணிக்கும் நோக்கத்துடனும் திட்டமிடப்படும் தாற்காலிகத் தொழிற் காப்புச் சட்டங்களால் (temporary protective measures) பொருளாதார நலம் குறைக்கப்படுவதைக் காட்டிலும் வளர்க்கப்படவே கூடும். ஆனால், இவ்வாறு தொழிற் காப்பினைக் கடைப்பிடிப்பதில் ஓர் அவல நிலை ஏற்பட்டுவிடுகிறது. தொழிற் காப்பு நடவடிக்கைகள் தாற்காலிகமானவைகளாக இருப்பதற்குப் பதிலாக நிரந்தரமானவைகளாக ஆக்கப்பட்டு, நாட்டின் பொருளாதார, அரசியல் வாழ்வினை விட்டுப் பிரிக்க முடியாதனவாகச் செய்யப்பட்டுவிடுகின்றன; இதன் காரணமாக உண்மை வருமானத்தின் இழப்பு (loss of real income) நிரந்தரமானதாக இருக்கிறது. இத்தகையதோர் இழப்பு மிகவும் வருந்துவதற்குரிய இழப்பாகும்; ஏனெனில், இந்த இழப்பை அனுபவிப்பவர்கள் பொதுமக்களாவர். ஆனால், இழப்பை ஏற்பவர்களின் கண்களுக்கே அது வெளிப்படையாகத் தோன்றுவதில்லை !

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

R. F. Harrod, 'International Economics' (4th ed., Cambridge University Press, London, 1957), Chs. I–III.

Robinson, 'An Introduction to the Theory of Employment', Ch. XI.

P. T. Ellsworth, 'The International Economy' (Macmillan, New York, 1950), Chs, 5–3.

30. அயல் நாட்டு மாற்று

(Foreign Exchange)

1. அயல்நாட்டுச் செலுத்துகளின் செயல்முறை அமைப்பு (The Machanism of Foreign Payments)

பன்னாட்டு வாணிபத்தைப் பண்டமாற்று முறையில் (barter) நடத்தினால், உள்நாட்டு வாணிபத்திற்குப் பண்டமாற்று முறையால் என்னென்ன கெடுதல்கள் நேரிடக்கூடுமோ அவையனைத்தும் ஏற்படும். பல்வேறு நாடுகளிலுமுள்ள உற்பத்தியாளர்கள் தங்களது பண்டங்களை ஒருவர்க்கொருவர் நேரடியாகப் பண்டமாற்றுச் செய்துகொள்ள வேண்டியிருத்தலால், பண்டமாற்று முறையானது பன்னாட்டு வாணிபத்திற்குக் கெடுதல்களை அளிக்கவல்லதாகவே இருக்கும். ஒரே நாட்டின் மக்களுக்கிடையே நடைபெறும் வாணிப பேரங்களில் பணத்தைப் பயன்படுத்துவதானது (the use of money) எவ்வாறு இத் தீமைகளைக் களையப் பயன்படுகிறதோ, அதனைப் போன்றே பல்வேறு நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிப பேரங்களுக்கும் (transactions) பணம் என்னும் மத்திமமானது (medium of money) பயன்படுகிறது. இதனால் பலமுக வாணிபம் (multilateral trade) சாத்தியமாகிறது—அதாவது, ஒரு நாட்டின் பண்டங்களை விற்று அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு அந் நாடு மற்றொரு நாட்டின் பண்டங்களை வாங்கும் முறை சாத்தியமாகிறது. ஆனால், பண்டமாற்று முறையில் பண்டங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் அவைகள் எந்த நாட்டிற்குப் பண்டங்களை விற்பனை செய்கின்றனவோ, அந்த நாட்டிலிருந்தே தங்களது இறக்குமதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். உள்நாட்டு வாணிபத்தில் நிகழ்வது போலவே பன்னாட்டு மாற்று நிலையங்களில் (international exchanges) பணத்தைப் பயன்படுத்துவதானது (the use

of money), உற்பத்தியாளர்களை எது சிறந்த அங்காடியோ (best market) அதில் விற்பனை செய்யவும், எது சிறந்த அங்காடியோ அதில் கொள்முதல் செய்யவும்—அத்தகைய அங்காடிகள் ஒரே நாட்டில் இருக்க நேரினும் அல்லது பிற நாடுகளில் இருப்பினும்—துணைசெய்கின்றது.

ஆயினும், பன்னாட்டு வாணிபத்தில் ஒரு சிக்கல் ஏற்படுகிறது—இத்தகைய சிக்கலானது (complication) ஒரு நாட்டிற்குள்ளேயே நிகழும் நாணய மாற்றுகளில் ஏற்படுவதில்லை. உலகத்திலுள்ள தன்னுரிமை பெற்ற பல நாடுகள் ஒவ்வொன்றும் தங்களுக்கென்று தனி வேறான பெயர்களைத் தாங்கியுள்ள தனித் தனிச் செலாவணிகளைக் கொண்டனவாக இருக்கின்றன. இவைகள் பல்வேறு மதிப்புகளைக்கொண்ட அலகுகளாகவும் (different value units), பல்வேறு மதிப்பு அடித்தளங்களைக் கொண்டும் (bases)—குறிப்பாகப் பல்வேறு உலோகங்களை அடித்தளங்களாகக் கொண்டு—வெளியிடப்படுகின்றன. ஒரே விதமான பெயரைத் தாங்கியுள்ள செலாவணிகள்கூட வகைகளில் பல்வேறுபட்டனவாகவுள்ளன. உதாரணமாக, ஃபிஜி நாட்டின் பவுண்டானது (the Fiji pound) ஐக்கிய அரசாங்கத்தில் (United Kingdom) புழக்கத்திலுள்ள பவுண்டைக் காட்டிலும் வேறுபட்டதாகும். அதேபோன்று, டோங்கா நாட்டுப் பவுண்டானது (the Tongan pound) மேற்சொன்ன இரண்டினின்றும் வேறுபட்டதாகும். இவ்வாறாக ஃபிரெஞ்சு ஃபிராங்குகளும் (French francs), பெல்ஜிய ஃபிராங்குகளும் (Belgian francs) உள்ளன—இவைகள் யாவும் மதிப்பில் வேறுபட்டனவாகும்.

ஆகவே, ஓர் இறக்குமதியாளர் (importer) ஓர் அயல்நாட்டு உற்பத்தியாளரிடமிருந்து பண்டங்களைக் கொள்முதல் செய்யும் போது அவருக்கு அடிக்கடி தோன்றும் பிரச்சினை (எப்போதுமே தோன்றுதுபோயினும்) அப் பண்டங்களுக்குப் பணம் செலுத்த ஓர் அயல்நாட்டுச் செலாவணியைத் தேடிப் பெறுவதாகும். உதாரணமாக, அமெரிக்கக் கோதுமையை இறக்குமதி செய்யும் ஒருவர் தனக்குக் கோதுமை அளிக்கும் ஒருவருக்கு பவுண்டு ஸ்டெர்லிங்கில் (pound sterling) பணம் செலுத்தினால் அவர் ஏற்க மறுப்பதனையே காண்பார். பவுண்டுகள் புழங்காமல் டாலர்கள் புழங்கும் அமெரிக்க நாட்டில் அமெரிக்கரொருவர் தனது தொழிலாளர்களுக்கு டாலர்களில்தான் (Dollors) கூலி

கொடுக்க இயலுமே தவிர, பவுண்டுகளில் கொடுத்தால், தொழிலாளர்கள் ஏற்க மறுக்கக்கூடும். இதேபோன்று அவர் ஒரு புதிய தொழிற்சாலையைக் கட்டுதற்கோ, அல்லது தனது காருக்கு (car) கல்லெண்ணெய் (petrol) வாங்கி நிரப்புதற்கோ பவுண்டுகளைப் பயன்படுத்த இயலாது. இதற்குக் காரணம் என்ன? பணத்தின் முதலாவது தகுதியான பொது ஏற்புத்தன்மையானது (general acceptability) பவுண்டிற்கு அமெரிக்காவில் இல்லாதிருப்பதே. எனவேதான், அவ்விறக்குமதியாளர் தனக்குப் பண்டத்தை அளிப்பவரின் நாட்டினுடைய செலாவணியைப் போதிய அளவில் பெறவேண்டியவராக உள்ளார்.

இத்தகைய செலாவணியை அவர் அயல்நாட்டு மாற்று அங்காடி (foreign exchange market) மூலந்தான் பெறக்கூடும்—இத்தகைய அயல்நாட்டு மாற்று அங்காடியில்தான் உலகத்தின் பல்வேறு செலாவணிகளும் ஒன்றுக்கொன்று மாற்று செய்யப்படுகின்றன. ஈண்டு, அங்காடி (market) என்னும் சொல் ஒரு சிறிதளவு தவறானதொரு கருத்தைத் தரக்கூடியதாகவுள்ளது என்றே கூறவேண்டும்; ஏனெனில், அத்தகைய செலாவணி மாற்றுகளைச் செய்வதற்கு ஒரு தனியொரு நிறுவனமோ (no single institution) அல்லது இடமோ (locality) இருக்கவில்லை. அயல்நாட்டு மாற்று அங்காடியானது, அயல்நாட்டுச் செலாவணிகளில் கொள்முதலும் விற்பனையும் செய்கின்ற (இன்னும் மற்ற வழக்கமான நடவடிக்கைகளையும்) நபர்கள், நிறுவனங்களைக் கொண்டதாக இருக்கிறது. ஆகவே, அதில் மைய (Central), வாணிப (commercial) பாங்குகளும், தன்னியக்கமான தரகர்களும் (independent brokers), பதிலாண்மைகளும் (agents), வாணிப பாங்கு அகங்களும் (merchant banking houses), பொன் வணிகர்களும் (bullion dealers) இடம்பெறுகின்றனர்.

ஒரு சாதாரண இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளர் (an ordinary importer or exporter) அயல்நாட்டுச் செலாவணிகளைத் தனது (தான் கணக்கு வைத்திருக்கும்) பாங்கின்மூலமே பெறுதல் வழக்கம். உதாரணமாக, அவ் வணிகர் தனது பிரிட்டிஷ் பாங்கு வைப்பினின்றும் (British Bank Deposit) ஒரு கட்டை ஃபிரஞ்சு ஃபிரான்குகளில் கொடுக்க விழைகின்றாரென வைத்துக் கொள்வோம். அவரது பாங்கானது பாரீஸில் (Paris) உள்ள தனது கிளைக்கு (branch)—அல்லது அதற்குப் பதிலாண்மையாக

(agent) செயலாற்ற ஒப்புக்கொண்டுள்ளதொரு செயலி பாங்கிற்கு (correspondent bank)—எழுதிக் குறிப்பிட்ட அளவு ஃபிரஞ்சு ஃபிரான்குகளை (French francs) வரவு வைத்துத் தருமாறு (to credit) உத்தரவிடும். வணிகர் தன்னுடையதொரு பாங்கு வைப்பினை (bank deposit) மற்றொரு பிரிட்டிஷ்வாசிக்கு (British resident) எவ்வாறு ஒரு செக்கின்மூலம் மாற்றுவாரோ (transfer), அதனைப் போன்றே இவ் வரவினை அவ் வணிகர் தனது அளிப்போருக்கு மாற்றுவார். பாங்கானது இவ்வாறு தான் அளித்த தொகையினை, பிரிட்டிஷ் பவுண்டுகளுக்கும் (British pounds)—பவுண்டு ஸ்டெர்லிங் (pound sterling)—ஃபிரஞ்சு ஃபிரான்குகளுக்கும் (French francs) இடையேயுள்ள நடப்பு மாற்று வீதத்தைக் (at the current rate of exchange) கணக்கிட்டுச் சமமான பிரிட்டிஷ் பவுண்டுகளைத் தனது கணக்கு ஏடுகளில் உள்ள அவ் வணிகரது வரவிருப்பில் குறைத்துவிடும்.

சாதாரணமாக, இவ் வழியில் பவுண்டுகளை (pounds) ஃபிரான்குகளாக மாற்றும் ஒரு பாங்கானது, ஏறக்குறைய இதற்குச் சமமான வணிகத்தை (a more or less equal amount of business) இதற்கு நிகராகப் பெறும்; அதனுடைய பாரீஸ் கிளையோ (Paris branch) அல்லது செயலி பாங்கோ (correspondent bank) அதனுடைய வாடிக்கைக்காரர்களின் சார்பில் பவுண்டுகளுக்கு மாற்றாக ஃபிரான்குகளை வழங்கும். இத்தகையதொரு நடவடிக்கையில் நிகரான போக்கானது (a net movement) ஒரு திசை நோக்கியே செல்லுமாயின்—உதாரணமாக, அதிகமான ஃபிரான்குகள் (francs) பவுண்டுகளாக (pounds) மாற்றப்படுவதைக்காட்டிலும் அதிகமான பவுண்டுகள் ஃபிரான்குகளாக மாற்றப்படுமானால்—அந்நிலையில், பிரிட்டிஷ் பாங்கானது பாரீஸிலுள்ள தனது இருப்பு (balance) குறைவதைக் காணும், அல்லது அதனுடைய செயலி பாங்காக (correspondent bank) உள்ள ஃபிரஞ்சு பாங்கிற்குத் தான் கொடுக்கவேண்டிய கடன் அதிகரித்துச் செல்வதைக் காணும். எனவே, அது தனது சொந்தக் கணக்கிலுள்ள ஸ்டெர்லிங்குகளை வெளிப்படையான விற்பனை செய்வதன் மூலம் (an outright sale of sterling) தனது ஃபிரான்கு இருப்பை (holdings of francs) மீண்டும் நிரப்பிக்கொள்ளும்.

இதனை, அது, தேர்ச்சித்திறன்பெற்றதோர் அயல்நாட்டு மாற்றுத் தரகரின் மூலம் (through a specialist foreign exchange

broker)—தரகர்கள் என ஈண்டுக் குறிப்பிடுவது ஒரு நபராகவோ அல்லது பல நபர்களைக் கொண்டதொரு தொகுதியாகவோ (an individual or group of individuals) இருக்கக்கூடும்—செய்வது பெரும்பாலும் வழக்கமாக இருக்கிறது. செலாவணிகளைக் கடன் வாங்குதல், கடன் கொடுத்தல் (borrowing and lending of currencies) இத் தரகரின் தொழில் எனக் கூறுவதைக்காட்டிலும், செலாவணிகளைக் கொள்முதல் செய்தல்; விற்பனை செய்தலே இவர்களின் தொழில் எனக் கூறுவது சாலப் பொருத்தமுடைய தாகும். முதலாவதாக, அவர்கள் தங்களது வாடிக்கைக்காரர் களுக்கு வழக்கமுறையான கொள்முதல்களையும் விற்பனைகளையும் (routine purchases and sales) தரகு பெற்றுக்கொண்டு நிகழ்த்து கின்றனர். இரண்டாவதாக, குறுக்கு மாற்றுவீதங்களில் (cross exchange rates) வேறுபாடுகள் தோன்றக்கூடுமானால்; அவற்றி னடிப்படையில் சிக்கலான பல விலை இலாப வணிகம் (arbitrage) செய்கின்றனர்; இதன் வழியில் அத்தகைய வேறுபாடுகளையும் போக்கிச் சமன் செய்கின்றனர். இதனை ஓர் உதாரணத்தால் நன்கு விளக்கலாம். சான்ருக, லண்டன், நியூயார்க் (New York) ஆகிய இவ்விரு இடங்களிலும் பவுண்டு ஸ்டெர்லிங், டாலர்கள் இவற்றிற்கிடையேயுள்ள நடப்பு மாற்று வீதம் (the current rate of exchange between pounds sterling and dollars) £ 1 = \$ 3 ஆக உள்ளதெனக் கொள்வோம். இதே போன்று, லண்டன், பாரீஸ் ஆகிய இரு நகரங்களிலும் ஃபிரான்குகளுக்கிடையேயுள்ள மாற்று வீதமானது (exchange rate) £ 1 = Frs. 15·00 எனவும், நியூ யார்க்கில் டாலர்கள், ஃபிரான்குகளுக்கிடையேயுள்ள மாற்று வீதமானது \$ 1 = Frs. 5.00 எனவும் உள்ளதெனக் கொள்வோம். இது ஒரு சமநிலை (equilibrium) நிலைமையாகும். ஆனால், சில காரணங்களால் நியூயார்க்கில் டாலர்-ஃபிரான்கு வீதமானது (dollar-franc rate) \$1 = Frs. 4.00 என மாறுகிறதென வைத்துக் கொள்வோம். அப்படியானால், தற்போது, லண்டனிலுள்ள பல விலை இலாபத் தொழில் செய்யும் ஒருவர் (the arbitrage operator in London) லண்டனில் £ 1-க்கு 15 ஃபிரான்குகளை வாங்கி, இந்த 15 ஃபிரான்குகளையும் நியூயார்க்கில் \$ 3.75-க்கு விற்றுப் பின்னர் இந்த \$ 3.75-ஐயும் மீண்டும் பவுண்டுகளாக மாற்றுவதன்மூலம் £ 1 5s od-ஐப் பெற முடியும். டாலர்களுக் கெதிராக ஃபிரான்குகளின் விற்பனையும் பவுண்டுகளுக்கெதிராக டாலர்களின் விற்பனையும் வெகுவாக விரைவுபடுத்தப்படுதலான், இச் சமன்கேட்டைக் (discrepancy) களைந்து சீர்செய்யும் வகையில்,

நியூயார்க்கிலுள்ள டாலர்-ஃபிரான்கு வீதமோ (dollar-franc rate) அல்லது டாலர் - பவுண்டு வீதமோ (dollar-pound rate) (அல்லது இரண்டும்) மாற்றமடையும். கடைசியாக, அயல்நாட்டு மாற்றுத் தரகரானவர் (foreign exchange broker) தனது சொந்த முறையில் (on his own behalf) தனி வகையான செலாவணிகளை (single currencies) வாங்கவோ அல்லது விற்கவோ செய்வார்; எந்தச் செலாவணிகளின் மாற்று வீதம் அதிகரிக்கக்கூடும் என்று தான் கருதுகின்றாரோ அச் செலாவணிகளை அவர் கொள்முதல் செய்வார்; எந்தச் செலாவணிகளின் மாற்றுவீதம் குறையக்கூடும் என்று கருதுகின்றாரோ அவற்றை விற்பனை செய்வார். இவ் வழியில் தனக்கு இலாபம் கிடைக்குமென நிச்சயமாக அவர் நம்புகின்றார். இத்தகைய அவருடைய நம்பிக்கைகள் (expectations) பல்வேறு செலாவணிகளின் உள்ளார்ந்த மதிப்புகளின் உண்மையான மதிப்பீடுகளின் அடிப்படையில் (based on genuine assessments of the inherent values of various currencies) அமைந் திருப்பதால் யூகபேர வணிகர்கள் (speculators) செய்யக்கூடிய பயனுள்ளதொரு பொருளாதாரப் பணியினை (valuable economic function) ஆற்றுகிறார் எனக் கூறலாம். முன்னேக்கிய கொள் முதல் முதலியவற்றைச் செய்வதும், அதன் காரணமாக எதிர் காலத்தில் ஏற்படக்கூடும் விலை மாற்றங்களைத் தவிர்ப்பதும் பயனுள்ள நடவடிக்கைதானே! இந்த வகைகளிலெல்லாம் பார்த்தால், அயல்நாட்டு மாற்றுத் தரகருக்கும் (foreign exchange broker) பங்குமாற்றுச் சந்தையின் பங்கு வர்த்தகருக்கும் (the Stock Exchange jobber) இடையே நெருங்கிய ஒருமித்த இயல்புகள் காணப்படுகின்றன.

அயல் நாட்டு மாற்று அங்காடியின் கடைசியாக உள்ள சிறப்பு அம்சம் முன்னேக்கிய மாற்று (forward exchange) எனப் படுவதாகும். வணிகர்களில் பலரும், முதலீடு செய்பவர்களில் பலரும் ஒரு குறிப்பிட்ட அளவு செலாவணியைப் (முன்கூட்டியே தெரிந்துள்ளதொரு வீதத்தில்) பெறுவதற்கானதொரு வாக் குறுதியைத் தாம் அந்தச் செலாவணியைப் பயன்படுத்தப் போகும் தேதிக்கு முன்கூட்டியே பெற்று வைத்துக்கொள்வது நலமெனக் கருதுகின்றனர். ஒப்பந்தம் செய்யப்பட்டதொரு வீதத்தில் ஒரு குறிப்பிட்ட செலாவணியை எதிர்காலத்தில் அளிப் பதற்கானதோர் ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதன்மூலம் குறிப் பிட்ட அந்த எதிர்காலத்தில் மாற்று வீதத்தில் நிகழக்கூடிய

ஏற்றஇறக்கங்களினின்றும் அவர்கள் தம்மைக் காத்துக்கொள்கின் றனர். எனவே, எதிர்காலத் தேதியொன்றில் பட்டுவாடா செய் யும் நோக்கத்துடன் பாங்குகளும் (banks) தரகர்களும் (brokers) அயல்நாட்டுச் செலாவணிகளைக் கொள்முதல் செய்தும் விற்பனை செய்தும் வருகின்றனர். எனவே, இம் முறையின்படி, தற்போதே ஒப்புக்கொள்ளப்பட்டதொரு வீதத்தில் மூன்று மாதகால அள விற்குள் (in three months' time) பவுண்டுகளை டச்சு கில்டர்களாக (pounds into Dutch guilders) மாற்றித் தருவதற்கு நான் ஒரு பாங்கினிடம் ஏற்பாடு செய்துகொள்ளலாம். இவ்வாறு, முன் னோக்கிய மாற்றில் (forward exchange) ஈடுபட்டுள்ள விற்பனை யாளர்கள் (dealers) நடப்பு வீதத்தைக் காட்டிலும் ஓரளவிற்கு பாதகமான வீதங்களையே (somewhat less favourable rates) கோருவர். இதற்குக் காரணம் என்னவென்பதனைப் பார்ப்போம். ஒரு செலாவணியை ஒரு குறிப்பிட்ட வீதத்தில் பட்டுவாடா செய்வதற்கு அவர்கள் வாக்குறுதியளிப்பதால், அந்தத் தேதியின் போது அச் செலாவணியின் விலை கணிசமான அளவிற்கு மாற்ற மடையக்கூடுமாதலால், அதனால் அவர்களுக்கு நஷ்டமேற்படக் கூடும். இத்தகையதோர் ஆபத்தினை அவர்கள் தாங்கவேண்டி யிருப்பதாலேயே சற்று பாதகமான வீதங்களைக் கோரு கின்றனர்.

இதுவே, அயல்நாட்டு மாற்று நடவடிக்கைகளின் செயல் முறையைப் பற்றியதொரு சிறு விளக்கமாகும். இதில் அடிப் படைப் பிரச்சினையானது—ஒரு செலாவணிக்கும் மற்றொரு செலா வணிக்குமிடையேயுள்ள மாற்று வீதமானது எதன் அடிப்படை யில் நிர்ணயிக்கப்படுகிறது என்பதானது இன்றும் விளக்கப்பட வில்லை. அடிப்படையில், ஒரு செலாவணியின் மாற்று வீதமானது கீழ்க்காணும் இரு வகைகளில் ஒன்றினால் நிர்ணயிக்கப்படக் கூடும். விலையுயர் உலோகம் ஒன்றுடன் (அல்லது ஏதாவது மற்றச் செலாவணியுடன்) ஒரு குறிப்பிட்ட தொடர்பு நிலையை ஏற் படுத்தி (at some specified relationship) மாற்று வீதம் நிர்ணயிக் கப்படலாம்; அல்லது தடையிலா அங்காடியொன்றில் (in a free market) அளிப்பு (supply), தேவை (demand) இவற்றின் அன்றாட நெருக்குச் சக்தியினாலும் (pressure) நிர்ணயிக்கப்படலாம். மாற்று வீதங்களை நிர்ணயிக்கும் இவ்விரு முறைகளான, நிலைத்த மாற்று வீதங்கள் முறையும் (the method of fixed exchange rates), மாறும் வீதங்கள் முறையும் (the method of variable exchange rates)

நாட்டின் முன்னேற்றத்திற்கு வெவ்வேறான விளைவுகளைத் தருதலால், அவைகள் தனித்தனியாகவே விளக்கமாக ஆராயப்பட்டுள்ளன.

2. மாற்றுவீதங்களின் பணி (The Role of Exchange Rates)

வாணிபத்தில் ஈடுபடும் ஒவ்வொரு நாடும், நெடுங்காலத்தில், அதன் இறக்குமதிகளுக்கும் ஏற்றுமதிகளுக்குமிடையே ஒருவகை சமநிலையை எய்த உள்ளல் வேண்டும். தொடர்ந்து நெடுங்காலத்திற்கு அது இறக்குமதிகளை அதன் ஏற்றுமதிகளைக் காட்டிலும் அதிகமாகச் செய்துகொண்டிருக்குமானால், அந் நாடானது சேகரித்துவைத்துள்ள சொத்துகள் (accumulated assets) கரைவதுடன், அது ஒரு கடன்கார நாடாகவும் ஆகிவிடும். இத்தகைய தொருமுறை காலவரையறையின்றி நீடிப்பதும் இயலாது. ஈண்டு, இதற்குச் சரிநிகரானதோர் உவமையைத் தற்போது நோக்குவோம். ஒரு தனி நபர் ஒருவர் தான் ஈட்டுவதைக் காட்டிலும் அதிகமான தொகையைத் தொடர்ந்து செலவழிக்கின்றாரெனக் கொள்வோம்; அவர், தனது சேமிப்புகளைப் பயன்படுத்தியோ அல்லது கடன் வாங்கியோதான் இவ்வாறு செலவழிக்க முடியும். [இதேபோன்ற நிலைதான் ஒரு நாட்டிற்கும் உள்ளது. ஒரு நாடு தொடர்ந்து கடன்காரர்களை அனுமதித்துக் கொண்டேயிருக்காது ; அதனுடைய கடன்காரர்கள் அது ஏற்றுமதி செய்த பொருள்களுக்குப் பணம் (அல்லது பொருள்) தரவில்லையெனில், ஏற்றுமதிகள் நிறுத்தப்படும். காரணம், இத்தகையதோர் அவல நிலையை எந்த ஒரு நாடும் காலவரையின்றி ஏற்காது.] ஆகவே, இதனால் விளங்குவது யாதெனில், ஒரு நாட்டின் ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகியவற்றின் விலைகள், குறைந்தபட்சம் அதனுடைய முடிவான வகையுடைமையைக் (ultimate solvency) காப்பாற்றிக்கொள்ளுமளவிற்காவது இருக்க வேண்டுமென்பதாம்.

ஏற்றுமதி, இறக்குமதி விலைகள் இரு பகுதிகளைக் கொண்டனவாகவுள்ளன; ஒன்று, பொருள்களின் பிறப்பிடமான நாட்டில் உள்ள விலைகள்; மற்றொன்று, பிறப்பிடமாகவுள்ள நாட்டின் (the country of origin) செலாவணிக்கும் அப் பொருள்கள் எந்த நாட்டில் கொண்டுபோய் விற்கப்படுகின்றனவோ அந்த நாட்டின் (the country of sale) செலாவணிக்குமிடையேயுள்ள மாற்று வீதமாகும் (the rate of exchange). சான்றாக, பிரிட்டிஷ் மோட்டார்

கார்கள் ஃபிரான்சு நாட்டில் விற்கப்படுகின்றன. ஃபிரான்சு (France) நாட்டில் அக் கார்களை வாங்கும் ஒருவருக்கு அக் கார்களின் விலையானது, (அ) அக் கார்களுக்கான பிரிட்டிஷ் விலை (the British price), (ஆ) பவுண்டு-ஃபிரான்கு (pound-franc exchange rate) ஆகிய இவ்விரண்டும் சேர்ந்ததொரு சேர்க்கை (combination) யாகும். எனவே, இத்தகையதொரு முடிவான விலையில் (final cost) மாற்றம் நேரிடக்கூடுமானால், மேற்கூறப்பட்ட காரணிகளில் எந்த ஒன்று மாற்றமடைவதாலும் (a movement in either factor) ஏற்படக்கூடும். ஃபிரஞ்சு இறக்குமதியாளரொருவருக்கு (a French importer) ஒரு கார் £ 500 விலைக்கு விற்கப்படுகிறதெனக் கொள்வோம். அப்போது, நடப்பு மாற்றுவீதமானது (current exchange rate) £ 1 = Frs. 14.0 ஆக இருப்பதாகக் கொள்வோம். அப்படியானால், அக் காரினை வாங்கும் ஃபிரஞ்சுக்காரருக்கு அந்தக் காரின் விலை 7,000·0 ஃபிரான்குகளாகும். அக் காரின் உற்பத்திச் செலவு, ஒன்று பிரிட்டனில் £ 518 ஆக அதிகரித்தாலோ அல்லது பவுண்டு-ஃபிரான்கு மாற்று வீதமானது (pound-franc exchange rate) £ 1 = Frs. 14.5 என்று மாற்றமடைந்தாலோ, காரின் விலை Frs. 7,250.0 ஆக விலை அதிகரிக்கும். இவை இரண்டில், எந்த ஒரு காரணி செயல்படும்போதும் ஃபிரான்சில் பிரிட்டிஷ் கார்களின் விலை அதிகரிக்கும்; எனவே, அவைகளை வாங்கும் அளவு குறையும்.

ஆக, தனது ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் சுபிட்சப் பாதையைவிட்டு விலகி நிற்பதை ஒரு நாடு அறியும்போது, கீழ்க் காணும் இரு முறைகளுள் ஒன்றினைக் கையாளக்கூடும். ஒன்று, தனது உள்நாட்டு விலைமட்டத்தை (internal price level) போதிய வகையில் சரிசெய்து கொள்ளலாம்; அல்லது, தனது செலாவணியின் மாற்று வீதத்தை மாற்றி அமைத்துக்கொள்ளலாம் (vary the exchange rate of its currency). சான்றாக, பிரிட்டனுடைய பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் இறக்குமதிகள், ஏற்றுமதிகளைக் காட்டிலும் அதிகமாக இருப்பதை உணருமாயின், இந் நிலையினைச் சரிசெய்ய, ஒன்று, அது நாட்டின்கண் உள்ள உற்பத்திச் செலவுகளைக் (costs of production at home) குறைக்க முயலலாம்; அல்லது பவுண்டின் புறமதிப்பை (external value of the pound)—அதாவது, மாற்று வீதத்தை—குறைக்கலாம். உள்நாட்டின் உற்பத்திச் செலவுகள் குறைக்கப்படுமானால், ஏற்றுமதி மலிவாக இருக்கும்; எனவே, இயல்பாக வெளிநாடுகளில் அந்

நாட்டின் பண்டங்களும் பணிகளும் அதிகமான அளவில் விற்கப் படக்கூடும். மற்றொருபுறம், அயல்நாட்டுப் பண்டங்கள் (foreign goods), உள்நாட்டுப் பொருள்கள் மலிவானவையாக ஆக்கப் பட்டதன் விளைவாக, ஒப்பீடாகப் பார்க்கப்போனால் அதிக விலை யுள்ளனவாக இருக்கும். இதனால், இறக்குமதிகள் குறையும். பவுண்டின் (pound) மாற்றுவீதம் குறைக்கப்படும்போதும் இதே விளைவுகளே ஏற்படும். 'பிரிட்டிஷ் வானொலிப் பெட்டிகளை உற் பத்தி செய்வதில் சராசரி ஒரு பெட்டிக்கு உற்பத்திச் செலவு £ 20 ஆகிறது எனவும், அமெரிக்க குளிர்சாதனப் பெட்டிகளை (American refrigerators) உற்பத்தி செய்ய $ 500 ஆகிறதெனவும், அப்போது நடப்பு மாற்று வீதமானது (current exchange rate) £ 1 = $ 3 எனவும் இருக்குமானால், பிரிட்டிஷ் வானொலிப் பெட்டிகள் அமெரிக்காவில் $ 60-க்கும், அமெரிக்க குளிர்சாதனப் பெட்டிகள் பிரிட்டனில் £ 167-க்கும் விற்கப்பட வேண்டியிருக்கும். தற்போது பவுண்டானது மதிப்பிறக்கம் செய்யப்படுமானால் (devalued) (மாற்று வீதமானது £ 1 = $ 2 எனக் குறையுமளவிற்கு), வானொலிப் பெட்டிகளை உற்பத்தி செய்யும் பிரிட்டிஷ் உற்பத்தி யாளர்கள் தங்களது வானொலிப் பெட்டிகளை அமெரிக்காவில் பெட்டி யொன்று $ 40-க்கு விற்பார்கள்; இவ்வாறு விற்பதிலுங் கூடத் தங்களது உற்பத்திச் செலவுகளை அவர்கள் சரிக்கட்டிக் கொள்ள முடியும். அதே சமயத்தில் அமெரிக்க உற்பத்தியாளர்கள் தங்களது குளிர்சாதனப் பெட்டிகளை அமெரிக்காவில் £ 250-க்கு (தங்களது உற்பத்திச் செலவுகளைச் சமாளிப்பதற்கு) விற்க வேண்டியதாக இருக்கும். ஆக, பிரிட்டிஷ் ஏற்றுமதிகள் (British exports) மலிவானவைகளாக இருக்கும்—அதன் காரணமாக அவைகள் அதிகமாக விற்கப்படும். பிரிட்டனில் இறக்குமதி யாகும் பொருள்கள் விலையதிகமானவைகளாகப் போகும்—எனவே, அவைகள் மிகக் குறைவாகவே வாங்கப்படும்.

உள்நாட்டு விலைகளில் (internal prices) அல்லது மாற்றுவீதங் களில் இத்தகைய சரிசெய்தல்கள் (such adjustments) செய்யப்பட வேண்டியிருப்பதற்குக் காரணமென்ன? பல்வேறு செலாவணி களுக்கிடையே ஆரம்பத்திலிருந்தே மாற்றுவீதங்கள் ஒரு குறிப் பிட்ட மட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதெனவும், இம் மட்டத் தில் எல்லா நாடுகளும் தங்களுடைய ஏற்றுமதிகள்,இறக்குமதிகள் ஆகியவைகளுக்கிடையே ஒரு குறிப்பிட்ட விகிதத் தொடர்பைக் கொண்டனவாகவுள்ளன எனவும் கொள்வோம். இந்த வீதங்

கள் ஏன் காலம் நெடுகிலும் (indefinitely) கடைப்பிடிக்கப்படுதல் கூடாது? இதற்கு விடை யாதெனில், பல்வேறு நாடுகளில் உள்ள உள்நாட்டு விலைமட்டங்கள் (internal price levels) ஒன்றுக்கொன்று மாறாத தொடர்பினை (fixed relationship) உடையனவாக இருப்பதில்லை. காரணங்கள் பலவற்றுள் ஒன்றினால் (any one of many reasons) ஒரு நாடானது மற்ற நாடுகளைக் காட்டிலும் தன் உற்பத்தித்திறன் மட்டத்தை (level of productivity) அதிகரித்துக்கொள்ளக்கூடும். மேலும், நாடுகள், அவைகள் கடைப்பிடிக்கும் பணக் கைக்கோள்களை அவ்வப்போது மாற்றியமைத்துக்கொள்ளக்கூடும். இதன் காரணமாக, உற்பத்தித் திறன் வேறுபாடுகள் ஒருபுறமிருக்க, பல்வேறு நாடுகளுக்கிடையே விலைகளின் ஆரம்பமான தொடர்பு (the original relationship of prices in different countries) நிச்சயமாக நிலைகுலையும். எனவே, ஒவ்வொரு நாடும், மற்ற நாடுகளுக்கொப்பீடாக, தனது ஏற்றுமதிகள் காலந்தோறும் விலையதிகம் போய்க்கொண்டிருப்பதையோ அல்லது மலிவாகப் போய்க்கொண்டிருப்பதையோ உணரும். இதன் காரணமாக, ஆரம்ப நிலையிலிருந்த வாணிபச் சமநிலையானது (the initial situation of trade balance), ஓர் இறக்குமதி அல்லது ஏற்றுமதியின் உபரியைக்கொண்டு, மீண்டும் நிலைநாட்டப்படக்கூடும். எனவே, சமநிலையை மீண்டும் கொண்டுவருவதற்கு ஒன்று, உள்நாட்டு விலைமட்டம் (internal price) மாற்றியமைக்கப்படல் வேண்டும் அல்லது அந் நாட்டுச் செலாவணியின் புறமதிப்பு (external value of its currency) மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

3. மாறா மாற்று வீதங்களும், மாறும் மாற்று வீதங்களும் (Fixed Versus Variable Exchange Rates)

மாறா மாற்றுவீதக் கைக்கோள், மாறும் மாற்றுவீதக் கைக்கோள் ஆகியவற்றின் தராதர நன்மைகள் (relative advantages) பெருஞ் சர்ச்சைக்குரியதொரு பிரச்சினையாகவே இருந்துவருகிறது. 1931ஆம் ஆண்டுவரையிலும், அனேகமாக உலகத்திலுள்ள ஒவ்வொரு பெரு வர்த்தக நாடும் (almost every major nation) பொன் திட்டம் எனப் பெயர்பெறும் ஒரு தனிவகையான மாறாவீதக் கைக்கோளினையே (the special form of fixed-rate policy known as the gold standard) கடைப்பிடித்து வந்தன. இந்தக் கைக்கோளின்படி ஒரு செலாவணியின் மதிப்பானது (value of a currency) ஒரு குறிப்பிட்ட அளவு பொன்னின்

எடையில் (in terms of a specified weight of gold) கூறப்பட்டது; மேலும், மைய பாங்கானது (Central Bank), கேட்கப்படும்போது (on demand) அதன் செலாவணியைக் குறிப்பிட்ட மாற்றுவீதத்தில் (at the specified rate of exchange) பொன்னுக மாற்றித்தரும் நிரந்தரமானதொரு பொறுப்பினையோ அல்லது கேட்கப்படும் போது குறிப்பிட்ட மாற்றுவீதத்தில் ஒரு செலாவணியைப் பொன்னுக மாற்றித்தரும் நிரந்தரமானதொரு பொறுப்பையோ ஏற்றது. இத்தகையதொரு முறையானது சிறந்ததொரு நன்மையைத் தரவல்லதாக இருந்தது. முக்கிய செலாவணிகளின் மதிப்புகள் யாவும் (the values of all major currencies) பொதுவாகவுள்ள பொன்னின் மதிப்பில் விளக்கப்பட்டன. அறுதியிடப்பட்டதொரு நிலையான வீதத்தில் (fixed rate) ஒரு செலாவணியை மற்றொரு செலாவணியாக மாற்றிக்கொள்வது எப்போதும் இயலும்படியாக இருந்தது. இது ஒரு நல்ல பயனைத் தந்தது. பலமுக வாணிபம் (free trade) தங்கு தடையின்றிப் பாய்ந்தோடி அதன் எல்லா நன்மைகளையும் வழங்க இது துணையாய் நின்றது.

ஆனல், இம்முறையில் மாற்றுவீதங்களின் பூரண நிலைபேற்றுத் தன்மை (complete stability of exchange rates) தனிச் சிறப்பானதொரு முக்கியத்துவம் வாய்ந்ததொன்ருக இருந்தது. ஏனெனில், அயல்நாட்டு மாற்றங்காடியில் ஏற்படக்கூடும் ஏற்ற இறக்கங்கள் (the possibility of fluctuations in the foreign exchange market) ஏற்றுமதி, இறக்குமதி வாணிபத்திற்கு வெகுவான ஆபத்துகளை விளைவிக்கக்கூடியனவாக உள்ளன. ஒரு சான்றினை நோக்குவோம். பிரிட்டிஷ் துணிகளை இத்தாலிக்கு ஏற்றுமதி செய்யும் ஓர் ஏற்றுமதியாளர், தனது £ 900 அடக்க விலையுள்ள துணி அனுப்பீட்டினை (consignment) 1,800,000 லிராவுக்கு (lire) விற்பதாக ஒப்புக்கொள்கிருரென்றும், அதே சமயத்தில் £1 = 1,900 லிரா என்ற மாற்று வீதம் உள்ளதெனவும் கொள்வோம். இந்தச் சூழ்நிலையில் அவருக்கு நியாயமான அளவிற்கு ஓர் இலாபம் நிச்சயமாகக் கிடைக்கும்; நடப்பு வீதத்தில் 1,800,000 லிராக்களை சுமார் £ 950ஆக மாற்றிக்கொள்ள முடியுமாதலால், செலவு போக அவருக்கு உபரியாக £ 50 கிடைக்கும். இதே போன்று வேருெரு நிலையைப் பார்ப்போம். விற்பனை ஒப்பந்தத்தை அவர் செய்துகொண்டதற்கும் விற்பனை ஆதாயத்தைப் பெறுவதற்கும் இடையிலுள்ள கால இடைவெளியில் மாற்றுவீதமானது £ 1 = 2,100 லிராக்களாக [அதாவது,

இத்தாலிய லிராக்களின் மதிப்பில் பவுண்டு ஸ்டெர்லிங் மதிப் பேற்றம் (appreciation) அடைந்துள்ளது] மாறுகிறதெனக் கொள் வோம். அவரது 1,800,000 லிராக்கள், தற்போது £ 860-களை மாற்றுகப் பெறக்கூடும்; இந்நிலையில் அவருக்கு £ 50 இலாபம் கிடைத்த நிலை போய் £ 40 நஷ்டம் விளையும். ஆகவே, மாற்றுவீத ஏற்ற இறக்கங்களால் (the exchange-rate fluctuations) பன் னுட்டு வாணிபமானது ஓங்கவொட்டாமல் செய்யப்படுவதாக வும் தடுக்கப்படுவதாகவும் உள்ளது.

பொன் திட்டமானது (gold standard) தன்னியக்கமான தொரு சமன நிலையை ஏற்படுத்தித்தரவல்லது என்ற வகையில் முக்கியம் வாய்ந்ததாகவுள்ளது என்பதனை, அதன் ஆதர வாளர்கள் கூறுகின்றனர். கேட்கப்படும்போது (on demand) ஒரு செலாவணியை மாற்றித்தரவேண்டிய கடமையானது (the obligation to convert a currency into gold on demand), உள்நாட் டுக் கடன் வெளியீடானது (the domestic issue of credit) மைய பாங்கின் பொற்காப்பு நிதிகளுடன் (gold reserves) மிக்க நெறி யுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதென்பதை (strictly related to the gold reserves) உணர்த்துகிறது—இக் கருத்து 21ஆம் அத்தியாயத்திலும் முன்னர் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, பிரிட்டன் தான் ஏற்றுமதி செய்ததைக் காட்டிலும் அதிக அளவு இறக்குமதிகளைச் செய்துள்ளதெனக் கொள்வோம். இந்நிலையில் அதிகமான மக்கள் பவுண்டுகளைப் பொன்னுக மாற்றிக்கொள்வர் (பிரிட்டனுக்குப் பொருள்களை விற்பனை செய்ததன்மூலம் கிடைத்த வருமானத்தைத் தங்களது தாயகங்களுக்கு அனுப்பு வதற்கு); ஏற்றுமதிகளால் கிடைத்த பொன்னைக் கொடுத்து பவுண்டுகளைப் பெறும் நிலை இருக்கமாட்டாது. இதன் காரணமாக இங்கிலாந்து பாங்கின் (the Bank of England) பொற்காப்புகள் (gold reserves) குறையும்; அதன் மொத்தப் பொறுப்புகளுக்கு (total liabilities) மரபொழுக்கமாக வைத்துக்கொள்ளவேண்டிய வீதத்தில் மட்டுமே பொன்னை வைத்துக்கொள்ளுமாதலால் (conventional rate of gold), பாங்கானது தனது வைப்புகளைக் (deposits) குறைத்துக்கொள்ளும் ஒரு கட்டாய நிலையில் இருக்கும். இதன் காரணமாகக் கடன் சுருக்கம் (credit contraction) ஏற்படும்; வட்டி அதிகரித்து அதன் காரணமாக முதலீடு குறையும்; பெருக்கியின் (multiplier) அடுத்தடுத்த நிகழ்ச்சி செயல்படுவதால் பண வருமானங்கள் குறையும். இதன் காரணமாக பிரிட்டிஷ்

பொருள்களின் விலைகள் (the prices of British goods) குறையும். இத்தகைய விலை குறைவானது ஏற்றுமதிகளைத் தூண்டி (stimulating exports) இறக்குமதிகளைக் குறையச் செய்யும்; ஒரு சமன நிலை ஏற்படும்வரை (until a balance is restored) இத்தகைய நிலை நீடிக்கும். கோட்பாட்டளவில் பார்க்கும்போது, இத்தகைய பற்றுக்குறை நிலைக்கு எதிராக ஏற்றுமதி உபரியை (export surplus) ஈட்டும் நாடுகள் (இவைகள் பிரிட்டன் இழக்கும் பொன்னைப் பெறும் நாடுகளாம்) இக் கைக்கோளிற்கு எதிரிடையானதொரு கைக்கோளினைப் பின்பற்றும். அவைகள், கடனை அதிகரித்து (expanding credit), முதலீட்டினைத் தூண்டி, வருமானங்களையும் விலைகளையும் அதிகரித்து (raising incomes and prices), இறக்குமதிகளை அதிகரித்து ஏற்றுமதிகளைக் குறைக்கும். ஆகவேதான், பொன் திட்டமானது, 'நிர்மாணிக்கப்பட்டதொரு' (built-in) நிலைபேற்றுச் செயலமைப்பைக் (stabilising mechanism) கொண்டதெனவும், இச் செயலமைப்பே சமநிலையைத் தன்னியக்கமாக எய்த உதவியதாகவுள்ளதெனவும் (automatically maintained equilibrium) கூறப்படுகிறது.

ஆனல், அவப்பேருக (unfortunately) இத்தகையதொரு நிலை, நடைமுறையில், அவ்வளவு அப்பட்டமாக ஏற்படுவதில்லை. முதலாவதாக, பொன்னைப் பெறும் நாடுகள் கடனைப் பெருக்க முடியும். ஆயினும், வருமானங்கள் (income) இன்னும் மற்றவைகளை அதிகரிக்கக்கூடுமாயினும், அவைகள் அவ்வாறு செய்தாக வேண்டுமென்னும் கடப்பாடு (obligation) ஒன்றும் அவைகளுக்கில்லை. உண்மையில் பார்க்கும்போது, பல நாடுகள் பணவீக்கம் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சி மேற்சொன்னவாறெல்லாம் செய்யத் தவறிவிட்டன. கடனாளி நாடுகள் இன்னும் வேறு நிலையில் இருந்தன. இத்தகைய பொன் இழப்பானது (loss of gold) அவைகளின் செலாவணியைச் சுருக்கிக்கொள்ளுமாறு (contraction of credit)—செலாவணிகளைப் பொன்னுக மாற்றித்தரும் கடப்பாடு (the obligation of convertibility) இருப்பதன் காரணமாக—கட்டாயப்படுத்தியது. மற்ற நாடுகள் தங்களின் விலை மட்டங்களை அதிகரிக்கத் தவறியதானது (failure of other countries to raise their price levels) கடனாளி நாடுகளைத் தங்களது நாடுகளில் பணவடிப்பை (deflation) ஏற்படுத்த வேண்டியதொரு நிலையில் ஆழ்த்தியது; மற்ற நாடுகளின் விலைகளோடு பொருந்தும் அளவில் இருப்பதற்கே இத்தகையதொரு

முறை கையாளப்பட வேண்டியிருந்தது. எனவே, இத் திட்டமானது பண வடிப்பிற்கான உள் அளாவியதொரு கவர்ச்சியினைக் கொண்டதாக இருந்தது.

ஆயினும், பொன் திட்டத்தில் வேலை இணக்கம் (price flexibility) உள்ளடங்கியுள்ளதென்னும் எடுகோளானது மிகவும் முக்கியம் வாய்ந்ததொன்றாகும். பொன் இழக்கப்பட்டு பாங்குச் செலாவணி சுருக்கப்பட்டபோது, அதன் காரணமாக நிகழ்ந்த வருமானங்களின் மட்டம் குறைவடைதலாவது (the resulting fall in the level of incomes) உற்பத்திச் செலவுகளிலும் அதனைப் போன்றதொரு குறைவடைதலை (fall) ஏற்படுத்தும் எனக் கருதப்பட்டது. தேவை குறையும்போது தொழிலாளர்கள் குறைந்த கூலிகளை ஏற்பர்; தொழில் முயல்வோர் (entrepreneurs) விலைகளையும் இலாபங்களையும், நில அல்லது கட்டட உரிமையாளர்கள் (landlords) குறைந்த வாடகைகளையும் ஏற்பர். உற்பத்திச் செலவுகளும் (costs) விலைகளும் ஒரே விகிதத்தில் குறையுமானால் அதே பணக்கூலி விகிதத்தில் வேலை மட்டமும் (level of employment) உற்பத்தியளவும் (output) குறையும். ஆயினும், வருமானங்களின் மட்டம் (the level of incomes) இரு வழிகளில் குறையக்கூடும். நிலையான எண்ணிக்கையுள்ள மக்கள் குறைந்த பணக்கூலிகளைப் பெறக்கூடும்; அல்லது, ஒரு குறைந்த எண்ணிக்கையுடைய மக்கள் (a smaller number of people) நிலையான பண வருமானங்களைப் பெறக்கூடும். பொன் திட்டமானது முதலாவதாகக் கூறிய வரிசையினையே நடைமுறையில் நிகழக்கூடியதெனக் கருதுகிறது; ஆனால், நடைமுறையில் பார்க்கும்போது இரண்டாவதாகக் கூறியுள்ளதே நடைபெற்றது. தொழிற்சங்கங்கள் கூலி குறைப்புகளையும் (wage-cuts), வேலையளிப்போரின் சர்வாதீனங்கள் (employer's cartels) விலைகள் குறைப்பையும் இலாபங்களின் குறைப்பையும் (cuts in prices and profit-margins), நெடுங்கால ஒப்பந்தங்கள் (long term contracts), வாடகை, வட்டி இவைகளின் குறைப்பையும் தடுக்கின்றன. உற்பத்திச் செலவுகள் மாறாமல் அப்படியே நெகிழ்வற்று இருப்பதனால் அதன் காரணமாக, பணத்திற்கான தேவை குறைகின்றது; இதனால் வேலையின்மையே விளையும்—உண்மையில், வேலையின்மையே (unemployment) ஏற்பட்டது. கோட்பாட்டின் நியதியைப் போன்று, ஏற்றுமதிகள் அதிகரித்தன; இறக்குமதிகள் குறைந்தன. ஆனால், உற்பத்திச் செலவில் ஏற்பட்ட குறைவினால் இந் நிகழ்ச்சிகள் ஏற்

பட்டுவிடவில்லை; இவை நிகழ்ந்தமைக்குக் காரணம் வேலையிலமர்த்தப்படா காரணிகள் (unemployed factors) பண்டங்களை நுகருவதற்கு வகையில்லை என்பதாகும். இது உள்நாட்டுக்கான பொருள்களை உற்பத்தி செய்பவர்களையும் அயல் நாடுகளுக்கான பொருள்களை உற்பத்தி செய்பவர்களையும் தங்களது பொருள்களை விற்பதற்கான அங்காடிகளை வேறு பிற இடங்களில் தேடிப் பிடிக்குமாறு வலியுறுத்துகின்றது.

ஆக, பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுள்ளதொரு நாடானது, ஒன்று, அதனுடைய மாற்றுவீதத்தில் ஏற்படும் மாற்றங்களையோ அல்லது உள்நாட்டிலுள்ள அதன் வருமானங்களின் மட்டத்தில் (its internal level of incomes) ஏற்படும் மாற்றங்களையோ இசைவுடன் ஏற்றுக்கொள்ளவே வேண்டியுள்ளது; இத்தகையதோர் இணக்க நிலை (flexibility) எங்காவது ஓரிடத்தில் இருந்தே யாகவேண்டும். தற்காலங்களில் காரணிகளின்–ஊதியங்களைக் குறைப்புசெய்வதற்கு, தொழிற் சங்கங்கள் (Trade Union), தொழிற் கழகங்கள் (Trade Associations) போன்றவை தீவிரமான மறுப்புத் தெரிவித்து வருவதால், வருமானங்களின் மட்டத்தில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவதென்றாலே வேலை மட்டத்தில் (level of employment) ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் என்றுதான் பொருள் கொள்ளவேண்டுமே யொழிய, காரணிகளின் ஊதியங்களில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் எனப் பொருள் கொள்ளுவதற்கில்லை. காலத்திற்கேற்ப மாறும் ஆற்றலையுடையதோர் உலகத்தில் மாற்றமும் (change) சரிசெய்தலும் (adjustment) அடிக்கடி ஏற்படுகின்ற சூழ்நிலையில் அயல்நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நாடானது மாற்றுவீதங்களின் பூரண நிலையையும் (complete stability of exchange rates) வேலை மட்டத்தின் பூரண நிலையையும் ஒரே நிலையாகப் (level of employment) பெறுதல் என்பது இயலாது. இதனையே 1930ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகள் கண்டறிந்தன. எனவேதான், அதுபோது, வேலையின்மை என்பது மற்றவைகளைக்காட்டிலும் மிகக் கொடியதொரு தீமை என்பது உணரப் பெற்றது. பொன் திட்டமும் இது காரணமாகத்தான் கைவிடப்பட்டது.

ஈண்டு முக்கியமானதொன்றை மனத்திற்கொள்ள வேண்டும். இறுகாறும் பொன் திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டே நாம் முடிவுகளை ஆராய்ந்து வந்தாலும் அடிப்படையான

முடிவுகள் என்னவோ எந்த ஒரு முறையிலும் (with any system)— அறுதியிடப்பட்ட மாற்று வீதத்தைக் கடைப்பிடிக்கும் எந்த ஒரு முறையிலும் (any system whereby a fixed exchange rate is maintained)—ஒன்ருகத்தானிருக்கின்றன. உதாரணமாக, நடப்பிலுள்ள பிரிட்டிஷ் கைக்கோள் (current British policy) என்னவெனில், £ 1 = $ 2.8 என்னும் மாற்று வீதத்தை எதிர்காலத்தில் காலவரையறையின்றிக் (indefinitely into the future) கடைப்பிடிப்பதாகும். பிரிட்டிஷ் பண முறையானது (British Monetary System) தற்போது பொன்னே அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லையாயினும் ஒன்றுமட்டும் இன்றும் நீடித்துலவும் ஒரு உண்மையாக இருக்கிறது; அதாவது, மாற்றுவீதம் நிலையானதாக இருக்கவேண்டுமெனில் (if the exchange rate is to be fixed) உள்நாட்டிலுள்ள வருமானங்களின் மட்டமானது (the domestic level of incomes), வாணிப நிலைகள் (trade conditions) எப்போதெல்லாம் சமநிலைக்குப் புறம்பானவைகளாக இருக்கின்றனவோ அப்போதெல்லாம் தன்னைச் சரி செய்துகொள்ள வேண்டுமென்பது இதிலும் உண்மையானதொரு கருத்தாகவேயுள்ளது. மாற்றுக் கட்டுப்பாட்டு முறையினுலும் (exchange control), மாற்றுரிமையற்றதொரு முறையினுலும் (inconvertibility) இப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காண்பதியலுமாயினும் (இதனைப் பின்னர் நாம் காணப்போகும் ஓர் உட்பிரிவு, விளக்குவது போன்று) பிரச்சினையில் அடிப்படையாகவுள்ள உண்மையென்னவோ கணிசமான அளவிற்கு மாற்றமடையாமல்தானுள்ளது.

நிலையான வீதங்களுக்கு (fixed rates) எதிராக என்ன வாதங்கள் கூறப்பட்டனவோ அவைகள், ஏற்ற இறக்கங்களைத் தாராளமாகக் கொண்டுள்ள மாற்று வீதங்களை (freely fluctuating exchange rates) ஆதரித்துக் கூறப்படும் வாதங்களைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இவ்வாறு ஆதரித்துக் கூறப்படும் வாதங்களைப் பார்ப்போம். பொன் அல்லது மற்றச் செலாவணியொன்றுடன் அறுதியிடப்பட்ட சமநிலையில் தனது செலாவணியை வைத்துக் கொள்ளும் முயற்சியினைக் கைவிடும் ஒரு நாடானது, கோட்பாட்டளவிலாவது, தனது உள்நாட்டுக் கைக்கோளினை (its domestic policy) உள்நாட்டு வேலை நிறைவை எய்தும் முதன்மையானதொரு நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு வழிவகுத்துக் கொள்ள இயலும் எனக் கூறலாம். (இத்தகையதொரு திறனுக்கு நடைமுறையிலுள்ள வரையறைகள் அடுத்த அத்தியாயத்

தில் ஆராயப்பட்டுள்ளன.) இறக்குமதிகள் ஏற்றுமதிகளைக் காட்டிலும் அதிகரிக்கும்போது அது தனது மாற்றுவீதம் (exchange rate) குறைவதை அனுமதிக்கும்; இதன் காரணமாக அதன் ஏற்றுமதிகள் மலிவாக ஆகி இறக்குமதிகளின் விலை அதிகமாகும்; இதனால் விளையும் வாணிப இடைவெளியினை, அது, தனது உள்நாட்டு வருமானங்களையும் விலைகளையும் (domestic incomes and prices) குறைப்பதன்மூலம் (through reduction), நிரப்ப எவ்வித முயற்சியையும் செய்வதில்லை—அவ்வாறு செய்தால் அது வேலையின்மை வரக்கூடும் என்னும் அச்சத்திற்காவது வழிவகுப்பதாக இருக்கும்.

மைய பாங்கானது அறுதியிடப்பட்டதொரு வீதத்தைக் கையாளாமல் தனது செலாவணியை ஒரு குறிப்பிட்ட வீதத்தில் தாராளமாக மாற்றிக் கொள்வதற்கு அனுமதிக்குமாயின் செலாவணியின் புறமதிப்பானது (the determination of the currency's external value) அங்காடியிலுள்ள தேவை (demand), அளிப்பு (supply) சக்திகளின் விளைவெதிர் விளைவுகளால், எந்த ஒரு விலையைப் போன்றும் நிர்ணயிக்கப்படுவதாக இருக்கும். இந்த ஒரு முறைக்கு இன்றும் சரிநுட்பமானதொரு விளக்கத்தை வாங்குந் திறன் சமநிலைக் கோட்பாடானது (purchasing power parity theory) அளிக்கவல்லதாக உள்ளது. வாங்குந் திறன் சமநிலைக் கோட்பாடானது, அங்காடிச் சக்திகள் தடையில்லாமல் செயல்படும்போது, செலாவணிகளின் புறமதிப்பானது, செலாவணியின் கொடுக்கப்பட்டதோர் அலகின் (a given unit of currency) வாங்குந் திறனானது, அது செலவழிக்கப்படும் எந்த இடத்திலும், ஒரே அளவில் இருக்கும்படி செய்கின்றதொரு மட்டத்தில் அமையும் என்பதனைக் கூறுகிறது. உதாரணமாக, ரொட்டி என்னும் ஒரே ஒரு பண்டம் இருப்பதாகக் கொள்வோம். ஒரு ரொட்டித் துண்டின் (a loab of bread) விலை பிரிட்டனில் 1 ஷில்லிங்காகவும், ஐக்கிய அமெரிக்காவில் 15 சென்ட்டுகளாகவும் (cents), ஃபிரான்சில் 60 சென்ட்டைம்களாகவும் (centimes) இருக்குமானால், பவுண்டுகள் (pounds), டாலர்கள் (dollars), ஃபிராங்குகள் (francs) இவைகளின் மாற்று வீதங்கள் (exchange rates) 13 = 15 சென்டுகள் = 0. 6 ஃபிரான்குகள்—அதாவது, £ 1 = $ 3 = Frs 12·0 ஆக இருக்கும். அவ்வாறு இல்லையெனில், ஒரு நாட்டில் ஒரு பண்டத்தை குறைந்த விலைக்கு வாங்கி மற்றொரு நாட்டில் அதனை அதிக

விலைக்கு மீண்டும் விற்பது இயலும் என்று இக் கோட்பாடு கூறு கிறது. இத்தகைய ஒரே வழி வாணிபம் (one way trade), அளிப்பு (supply), தேவை (demand) இவைகளின் சக்திகள், விலைகளைச் சமமாகக் கொணரும்வரையிலும் (பல்வேறு செலா வணிகளின்படி பார்த்தாலும்) நீடிக்கும்.

ஒரு செலாவணியின் புறமதிப்பானது (the external value of the currency), நெடுங்காலத்தில், முக்கியமாகச் சம்பந்தப்பட்ட நாட்டின் உற்பத்திச் செலவுகள் (costs), விலைகள் (prices) இவை களின் தராதர மட்டத்தால் (relative level) நிர்ணயிக்கப்படும் என்பது ஐயத்திற்கே இடமற்றதோர் உண்மையாகும். ஆயினும், மாற்று வீதங்களை, முழுவதும் தழுவிய வாங்குந் திறனோடு (over all purchasing power) தொடர்புபடுத்திக் கூறுவது நயமற்ற தொரு மிகை-எளிதாக்கமாகும் (gross over-simplification). பொதுவிலை மட்டமானது (the general price level), பன்னாட்டு வாணிபத்தில் இடம் பெறமுடியாத பல பண்டங்கள், பணிகளை யும் தனது எல்லையில் கொண்டுள்ளதாகவுள்ளது. இவைகளின் விலைகளை ஏற்கெனவே குறிப்பிட்ட ஒரே வழி வாணிபத்தின்மூலம் (one-way trade), பல்வேறு நாடுகளிலும் சமமாக இருக்கும்படி செய்வதென்பது இயலாது. இரண்டாவதாக, சுங்க வரிகள் (tariffs) பண மானியங்கள் (subsidies), கடத்துச் செலவுகள் (transport costs), இறக்குமதித் தடைகள் (import restrictions) முதலியன உள்ளமையால், ஒரேவிதப் பண்டங்கள் (same commodities) பல்வேறு நாடுகளிலும் கூறப்படும் விலைகளிலுள்ள நிரந்தர மான வேறுபாடுகள் (permanent discrepancies) தோன்றுகின்றன. ஒரே திசையில் செல்லும் வாணிப ஓட்டத்தின் மூலம் (through the flow of trade in one direction) இவைகளைக் களைவதென்பதும் இயலாது. கடைசியாக, ஒரு செலாவணியின் தேவை, அளிப்பு ஆகியவை விலைமட்டங்கள் (price levels) அல்லது நடப்பு வாணி பம் (current trade) இவற்றுடன் சற்றும் தொடர்பு கொண்டிராத பல காரணங்களால், ஆளப்படக்கூடியனவாக உள்ளன—அவை கள், அரசாங்கமானது அயல்நாடுகளில் செய்யும் செலவு (government expenditure overseas) மூலதனப் போக்குகள் (capital movements), யூகபேரக் கொள்முதல்கள், விற்பனைகள் (speculative purchases and sales) என்பன போன்றவைகளாகும்.

எனவே, இனி சொல்லக் கூடியதெல்லாம் இதுதான். மாற்று வீதங்கள் நிர்ணயிக்கப்படுதல் (the determination of exchange

rates) அங்காடிச் சக்திகளின் தடையற்ற செயலாட்சிக்கு (free play of market forces) விடப்படும்போது, ஒரு செலாவணியின் மதிப்பானது, அயல்நாட்டுச் செலாவணிகளின் கொள்முதல் அல்லது விற்பனையின் கீழுள்ள எல்லாக் காரணிகளையும் பொறுத்த தாகவுள்ளது. நெடுங்காலத்தில் இறக்குமதிகளுக்கொப்பீடாக வுள்ள ஏற்றுமதிகளின் விலையானது ஆதிக்கமானதோர் ஆளுகை யைச் செயலோச்சவே செய்கின்றது. ஒரு நாட்டினால் ஏற்று மதி செய்யப்படும் பண்டங்கள் அதன் இறக்குமதிகளுக்கொப் பீடாக விலை மலிவாக இருக்குமானால் அதன் விளைவாக ஒரு ஏற்றுமதி உபரி (an export surplus) பெறப்படும். அந் நாட்டின் ஏற்றுமதிகளுக்குப் பணம் செலுத்தும் பொருட்டு அயல்நாட்டினர் அதன் செலாவணியைத் தேவைப்படுவது (the demand of foreigner of its currency), அயல்நாட்டுச் செலாவணிகளுக்காக அந் நாட்டின் செலாவணியை அதன் மக்கள் விற்பனை செய் வதைக்காட்டிலும் அதிகமாக இருக்கும்; சமநிலை கொணரப்படும் வரையில் மாற்று வீதம் அதிகரிக்கப்படும். ஒரு நாடானது ஓர் இறக்குமதி உபரியைப் (import surplus) பெறுமானால், அதன் செலாவணியின் புறமதிப்பானது (the external value of its currency) குறைந்து செல்லும். ஆயினும், குறுங்காலத்தில் (in the short run) இத்தகைய அடிப்படையான போக்குகளை (basic tendencies) மூல தன நுழைவு (the flow of capital) வாணிபத் தடைகள் (trade restrictions) அல்லது யூக பேர நிலையங்கள் ஆகியவை சரிக்கட்ட வோ அல்லது இன்னும் கூறப்போனால் தலைகீழாக மாற்றி யமைக்கவோ கூடும்.

மாறும் மாற்றுவீதமானது (variable exchange rate), உள் நாட்டு வேலை மட்டமானது (domestic level of employment) அயல் நாட்டு வாணிப நிலைகளை (foreign trade conditions) எதிர் நோக்கியிருக்கும் அவல நிலையினின்றும் காப்பாற்றுகின்றதொரு பெரிய நன்மையை அளிப்பதாக இருப்பினும், அயல்நாட்டு மாற்று அங்காடியில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் (fluctuation) ஏற்கெனவே கூறப்பட்ட காரணங்களால், பன்னாட்டு வாணி பத்தைத் தடை செய்வதாகவும், அதற்கு ஊறு விளைவிப்பதாக வும் உள்ளதென்பதனை நாம் மறக்கலாகாது. (இவ்வேற்ற இறக் கங்கள் இன்னும் பல தீமைகளை விளைவிப்பனவாக உள்ளன, அவைகளை அடுத்த அத்தியாயத்தில் ஆராய்ந்து விளக்குவோம்.) அயல்நாட்டு மாற்று அங்காடியில் அரசாங்கம் தலையிடுவதன்

மூலம், இத்தகையதொரு நஷ்டம் விளைவிக்கும் நிலைபேறின்மையை (damaging instability) ஓரளவிற்குக் குறைக்க இயலும். இத்தகைய அரசாங்கத் தலையீடு (government intervention) எவ்வழியில் செயல்படக்கூடுமென்பதனை ஆராய்வது பயனுடைத்தாகும்.

4. அயல்நாட்டு மாற்றங்காடியில் அரசாங்கத் தலையீடு (Official Intervention in Foreign Exchange)

தற்காலங்களில் அயல்நாட்டு மாற்றங்காடியில் அரசாங்கமானது இரு வழிகளில் தலையிடுகிறது. முதலாவது வழி, மாற்றுச் சமன் கணக்கு (Exchange Equalisation Account), அல்லது அதனையொத்ததொரு நிறுவனத்தின்மூலம் தலையிடுவதாகும். இத்தகையதோர் அரசாங்கச் செயல் நிறுவனத்தின் நோக்கமானது, நெடுங்காலக் காரணங்களால் அல்லாது, குறுங்காலக் காரணங்களால் ஒரு நாட்டுச் செலவாணியின் புறமதிப்பில் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங்களைக் (even out fluctuations in the external value of a country's currency) களைந்து சமநிலையை உண்டுபண்ணுவதாகும். பருவகால விற்பனைத் தீவிரங்களால் (seasonal selling pressures), அல்லது எதிர்காலத்தில் இன்னும் குறைந்த விலைக்கு அவற்றைத் திரும்பவும் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம் என்னும் நம்பிக்கையில் செய்யப்படும் யூக பேர விற்பனை (speculative sales) காரணமாக மாற்று வீதமானது (exchange rate) ஊசலாடக்கூடும். மாற்றுச் சமன் கணக்கானது உள்நாட்டுச் செலாவணியையும் இன்னும் முக்கியமான அயல்நாடுகளின் செலாவணிகளையும் இருப்பாகக்கொண்டு செயல்படுகிறது. உதாரணமாக, அமிதமான விற்பனைத் தீவிரத்தின் காரணமாக (because of the excess selling pressure) பவுண்டின் மாற்று வீதம் குறையுமானால், அது சமயம் பிரிட்டிஷ் மாற்றுக் கணக்கானது (British Exchange Account) அங்காடியில் புகுந்து தன்னிடமுள்ள அயல்நாட்டுச் செலாவணிகளின் இருப்பினின்றும் கொஞ்சம் எடுத்து அவற்றிற்கு மாற்றாக பவுண்டு ஸ்டெர்லிங்குகளை (pounds sterling) வாங்கும்; இதற்கு மாறாக பவுண்டானது அளவுக்கு மீறிய மதிப்பேற்றத்தை அடைந்து செல்லும்போது (if the pound is tending to appreciate unduely), மாற்றுக் கணக்கானது (Exchange Account) பவுண்டுகளை விற்று அயல்நாட்டுச் செலாவணிகளை வாங்குகின்றது. இவ்வாறு, பவுண்டுகளின் தேவைக்கோ அல்லது அளிப்பிற்கோ கூடுதலான பவுண்டுகளை அளிப்பதன்மூலம், தற்காலிக

ஏற்ற இறக்கங்கள் என நம்பப்படுகின்றவற்றைச் சரிகட்டுகின்றது. அத்துடன் பவுண்டின் புறமதிப்பில் (the external value of the pound) அதிகமான அளவிற்கு நிலைபேற்றினையும் (a high degree of stability) ஏற்படுத்துகிறது.

ஆனால், நெடுங்காலத்தில் என்னவோ, ஒரு நாட்டின் பொருளாதார நிலையின் அடிப்படையான உண்மை நிலைகளினின்றும் (the fundamental realities of a country's economic position) தோன்றும் ஒரு போக்கினை, மாற்றுச் சமன் கணக்கால் நிச்சயமாகத் தடுத்துவிட முடியாது. ஒரு நாடு தொடர்ந்து இறக்குமதி உபரிகளை (import surplus) அடைந்து கொண்டிருக்குமானால், மாற்றுச் சமன் கணக்கானது (Exchange Account) தனது சொந்தச் செலாவணிக்கான தேவைக்கு அச் செலாவணிகளைத் தொடர்ந்து அளிப்பதன்மூலமே மாற்றுவீதத்தில் ஏற்படும் குறைவைத் (a fall in the exchange rate) தடுக்க முடியும்; தனது சொந்தச் செலாவணிக்கு மாற்றாக அயல்நாட்டுச் செலாவணிகளை விற்பதன்மூலமே மாற்றுச் சமன் கணக்கானது இவ்வாறு தேவையைப் பூர்த்தி செய்கின்றது. இத்தகையதொரு முறையைப் பின்பற்றுவதன்மூலம், கடைசியில் அதன் அயல்நாட்டுச் செலாவணிகளின் இருப்புத் தீர்ந்துபோகும்; இத்தகைய இருப்புத் தீர்ந்தால் அதன் அதிகாரங்களும் தேயும். இதன் காரணமாக நாட்டினுடைய செலாவணியின் புறமதிப்பானது (the external value of the country's currency) தவிர்க்க முடியாதவாறு குறையும். மாற்றுச் சமன்கணக்கு முறையிலுள்ள முக்கியமான குறைபாடு யாதெனில் (the major weakness of the Exchange Account system), குறுங்காலப் போக்குகள் எவை? நெடுங்காலப் போக்குகள் எவை என்பதனை, நடைமுறையில், பாகுபாடு செய்வதில் உள்ள இடர்ப்பாடேயாகும்.

ஐக்கிய அரசாங்கமானது (United Kingdom) தற்போது £ 1 = $ 2.8 என்னும் அறுதியிடப்பட்ட நிலையானதொரு வீதத்தைக் கடைப்பிடிக்கும் ஒரு கைக்கோளினைப் பின்பற்றி வருவதால், மாற்றுச் சமன் கணக்கானது முற்றிலும் தாற்காலிகமான போக்குகளைச் (purely temporary movements) சரிக்கட்டும் ஒரு செயல் நிறுவனமாக இருப்பதைக்காட்டிலும் மேற்கூறிய வீதத்தைக் கடைப்பிடிக்கும் ஒரு சாதனமாகவே பணிபுரிகிறது. அது நியூயார்க் (Newyork) அல்லது ஜியூரிச் (Zurich) போன்ற

நிதிய மையங்களிலுள்ள (financial centres) தடையிலா அங்காடி களில் (free markets)—இவைகள் சில சமயங்களில் கருப்புச் சந்தைகள் (black markets) எனவும் அழைக்கப்படுகின்றன— செயல்படுகின்றது. இத்தகைய மையங்களில் பிரிட்டிஷ் மாற்றுக் கட்டுப்பாட்டு விதி முறைகளின் ஆளுகையின்கீழ் இல்லாத மக்கள் ஸ்டெர்லிங்கை (sterling) வாங்கவும் விற்கவும் செய்கின்றனர். மாற்றுச் சமன் கணக்கின் நோக்கம் யாதெனில்,இத்தகைய தடையிலா அங்காடிகளில் விலை கூறப்படும் ஸ்டெர்லிங் வீதமானது (the rate of sterling quoted) அரசாங்க வீதமான £ 1 = $ 2.80 என்னும் வீதத்தினின்றும் கணிசமான அளவில் வேறுபடாமலிருக் கும்படி பார்த்துக்கொள்வதாகும். இத்தகைய அங்காடிகளில் ஸ்டெர்லிங்கின் மாற்றுவீதமானது $ 2.50 ஆகக் குறைந்து விட்ட தென வைத்துக்கொள்வோம்; அப்போது இங்கிலாந்து பாங் கிற்கு டாலர்களைக் கொண்டுவந்து பவுண்டுகளாக மாற்றிக் கொள்ள ஒருவரும்—அவர்கள் அவ்வாறு மாற்றுச் செய்வதைத் தடுத்துக்கொள்ள முடியுமானால்—முன்வரமாட்டார்கள், அவர் கள், தங்களுக்குத் தேவையான ஸ்டெர்லிங்குகளை ‘மலிவு’ வீதத் தில் (cheap rate) வாங்கிக்கொள்ளவே விழைவர். இந்த வகையில், பிரிட்டன் மதிப்பு மிக்க டாலர் காப்புகளை (valuable doller reserves) இழக்க நேரிடுவதால் இடர்ப்பாட்டிற்கு ஆளா கின்றது.

இரண்டாவது வகையான அரசாங்கத் தலையீடானது மாற் றுக் கட்டுப்பாடு (Exchange Control) என்பதாகும். ஒரு நாட்டில் மாற்றுக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதெனில், அந்த நாட்டில் உறையும் மக்கள் (residents) தங்களிடமுள்ள குறிப்பிடப்பட்ட செலாவாணிகள் (specified currencies) யாவற்றையும் கொடுத்து விட்டு அரசாங்க மாற்று வீதத்தில் (the official rate of exchange) அவைகளைத் தாய்நாட்டுச் செலாவணியாக (home currency) மாற்றிக்கொள்ளும்படி, சட்டத்தால் கோரப்படுவர். மேலும், மாற்றுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி, அவர்கள் குறிப்பிட்ட அயல்நாட்டுச் செலாவணிகளை மையபாங்கு (central) அல்லது அர சாங்கக் கருவூலம் (Treasury) இவற்றின் மூலந்தான், அவைகளின் அனுமதி பெற்று, வாங்க இயலும். இத்தகைய மாற்றுக் கட்டுப் பாட்டு விதிமுறை உள்ள காரணத்தால், விதியின் இயல்பான தன்மைக்கேற்ப, தடையிலா மாற்றங்காடியை (free exchange market) அது அழிப்பதாகவே இருக்கிறது.

மாற்றுக் கட்டுப்பாட்டின் முதன்மையான நோக்கம் (primary object) என்னவெனில், தேவை (demand), அளிப்பு (supply) ஆகிய இவ்விரண்டும் தன்னுரிமையுடன் (treedom) செயல்படும்படி விடப்பட்டால் என்ன மாற்றுவீதம் இருக்குமோ அதனைவிட அதிகமான மாற்றுவீதத்தை நிலைநாட்டுவதாகும். அரசாங்க மேலாண்மையாளர்கள் (authorities) முக்கியமாக ஒன்றைக் கருதுதல் வேண்டும். அவர்கள் எந்த வீதத்தை நிலைநாட்ட முயல்கின்றனரோ அந்த வீதத்தில் அயல்நாட்டினர் அச் செலாவணியை வாங்க விழையும் அளவினைக்காட்டிலும் செலாவணியை அந் நாட்டு மக்கள் விற்க விழையும் செலாவணிகளின் அளவு அதிகமாக இருக்கும் என்பதனை அவர்கள் முக்கியமாக நம்புதல் வேண்டும். ஐக்கிய அரசாங்கமானது இறக்குமதி உபரியை (import surplus) அடைந்துகொண்டிருக்குமானால், இதனால் இயல்பாக விளையக்கூடியதான பவுண்டின் மதிப்பிறக்கத்தைக் கீழ்க்காணும் வகையில் தடுக்கக்கூடும். அயல்நாட்டினர், பிரிட்டிஷ் ஏற்றுமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்கு நடப்புக் காலத்தில் தேவைப்படும் அயல்நாட்டுச் செலாவணிகளைக்காட்டிலும் அதிகமான அளவு அயல்நாட்டுச் செலாவணிகளைப் பெறும் பொருட்டு பவுண்டுகள் அதிகமாக விற்கப்படுவதை மறுத்தலின் மூலம் மதிப்பிறக்கத்தைத் தடுக்கக்கூடும். இத்தகையதொரு செயல்முறையானது, ஐக்கிய அரசாங்கத்திற்கு வரும் இறக்குமதிகள் குறைக்கப்படுவதற்கு நிச்சயம் காரணமாக இருக்கும். பிரிட்டிஷ் கொள்முதல்காரர்கள் (British buyers) அயல்நாட்டுப் பொருள்களுக்குப் பணம் செலுத்துவ்தற்கு அயல்நாட்டுச் செலாவணிகளைப் பெற இயலாதபோது, அயல்நாட்டு அளிப்பாளர்கள் (foreign suppliers), தங்கள் பொருள்களுக்குப் பவுண்டுகளைப் பெறுவதற்குத் தயாராக இருந்தால்மட்டுமே, பிரிட்டனுக்குப் பண்டங்களைத் தொடர்ந்து அனுப்பிக்கொண்டிருப்பர். இவ்வாறு அவ் அளிப்பாளர்கள் பெறக்கூடிய பவுண்டுகளை வைத்துக்கொண்டு பிரிட்டனில் பண்டங்களை வாங்கக்கூடுமே யல்லாது அவற்றைத் தங்களது சொந்தச் செலாவணியாகவோ அல்லது வேறு எந்தச் செலாவணியாகவோ மாற்றிக்கொள்ள இயலாது. இத்தகையதொரு நிலை, அயல்நாட்டு உற்பத்தியாளர் பலருக்கு மனநிறைவை அளிப்பதாகாது.

அயல்நாட்டு வாணிபத்தின் தடைகள் யாவற்றையும் போலவே, மாற்றுக் கட்டுப்பாடானது (exchange control)

உண்மை வருமானத்தில் (real income) நஷ்டத்தை உண்டு பண்ணவே செய்யும். ஏனெனில், அது பன்னாட்டுத் தேர்ச்சித் திறனில் (international specialisation) செயற்கையானதொரு தடையை விதிப்பதாகவுள்ளது. ஆயினும், சில குறிப்பிட்ட சூழ் நிலைகளில் மாற்றுக் கட்டுப்பாடானது நியாயமானதாகவும், ஏன், தவிர்க்க முடியாததொன்றாகவும் இருக்கக்கூடும். உதாரணமாக, போரில் ஈடுபட்டுள்ளதொரு நாடு (a country at war) அதில் உறையும் மக்கள் (residents), அதனிடமுள்ள கிடைப்பருமையான அயல்நாட்டு மாற்றுக் காப்புகளை (scarce foreign exchange reserves), எதிரிகளுக்குக் கைமாறச் செய்வதையோ (transfer) அல்லது வீணான கொள்முதல்களுக்குப் (frivolous purchases) பயன் படுத்துவதையோ, நிச்சயமாக அனுமதிக்க இயலாது. போரினால், வாணிபத்தில் நிலைகுலைதல் (dislocation) ஏற்படுத்துமாதலால் அயல்நாட்டுச் செலாவணிகள் கிடைப்பருமையாக இருக்கும்; நாடுகள் தங்களிடமுள்ள மதிப்புமிக்க சொத்துகளைப் (valuable assets) பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவே விரும்பும்; அரசாங்க மேலாண்மையாளர்கள் மாற்றுக் கட்டுப் பாட்டினை (exchange control) ஏற்படுத்தினால்தான் இத்தகைய பயனுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

மாற்றுக் கட்டுப்பாடானது அவசியமெனக் கருதப்படும் மற்றொரு சூழ்நிலை யாதெனில், தற்போது ஐக்கிய அரசாங்கத் திற்கு உள்ள சூழ்நிலையாகும். அதாவது, பிரிட்டன் ஒரு குறிப் பிட்ட செலாவணி (ஐக்கிய அமெரிக்காவின் டாலர்) அதிக மாகத் தேவைப்படுகிறது—அதாவது, அந்தச் செலாவணியைக் கொடுத்துப் பெறக்கூடிய பண்டங்கள் அதற்கு அதிகம் தேவைப் படுகிறதெனலாம். பிரிட்டனுடைய நடப்பு டாலர் ஈட்டங்களைக் கொண்டும் அப் பண்டங்களுக்கு பணம் செலுத்த முடியாமல் மேற்கொண்டும் டாலர்கள் தேவைப்படுகின்றதொரு நிலை இருந்து வருகிறது. மாற்றுக் கட்டுப்பாடு மட்டும் இல்லையெனில், டாலரின் மதிப்பில் பவுண்டானது தீவிரமாக மதிப்புக் குறைப்பு (drastic devaluation) ஒன்றே தகுந்த நிவாரணமாக இருந்திருக்கும். பொதுவாக அரசாங்கமானது (அடுத்த அத்தியாயத்தில் ஆராயப் பட்டுள்ள காரணங்களால்) இத்தகையதொரு நடவடிக்கையை எடுப்பதற்கு விருப்பத்தரம் காட்டுவதில்லை. ஆக, மாற்றுக் கட்டுப்பாடானது (Exchange Control) டாலர்களை இன்றியமை யாத பயன்களுக்குப் பயன்படுத்த வழி செய்கிறது.

கடைசியாக, மாற்றுக் கட்டுப்பாடானது விரும்பத்தகாத மூலதனப் பெயர்ச்சிகளைத் (undesirable capital movements) தடுப்பதற்குப் பயன்படுத்தக்கூடும். ஊகபேர இலாபங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையால் தூண்டப்பட்ட ஏராளமான மூலதனப் பெயர்ச்சிகளால் (large-scale movements of capital) 1930ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகளில் பல செலாவணிகளுக்கு நிலைபேறின்மை ஏற்பட்டது. எதிர்காலத்தில் ஒரு பவுண்டின் மதிப்பானது $ 5-லிருந்து $ 4ஆகக் குறையுமென நான் நம்புவதாகக் கொள்வோம். என்னிடம் £ 10 மில்லியன் இருப்பதாகவும் மேற்சொன்ன என் நம்பிக்கையின் அடிப்படையில் ஊகபேரச் சூதினை ஆட நான் தயாராக இருப்பதாகவும் கொள்வோம். நான், எனது £ 10 மில்லியனை $ 50 மில்லியனுக்கு விற்றுவிட்டு எனது விற்றுமுதலை நியூயார்க்கில் ஒரு பாங்கு வைப்பாக (a bank deposit in New York) வைத்துக்கொள்ள முடியும். பின்னர், புதிய மாற்று வீதப்படி (at new exchange rate) எனது $ 50 மில்லியனை £ 12. 5 மில்லியனுக்கு மாற்றாக விற்றுக்கொள்ள இயலும். இவ் வழியின்மூலம் எனது பாங்கு நிலுவை (bank balance) வளரக்கூடும். ஆனால், எனது செயல் ஐக்கிய அரசாங்கத்திற்கு மிக அதிகமான ஊறு விளைவிப்பதாகும்; இத்தகையதொரு மதிப்புக் குறைப்பானது (devaluation), என் போன்றோர் அது நிகழக்கூடும் என்று எதிர்பார்த்ததாலும் (அல்லது அது நிகழவேண்டும் எனக் கருதியதாலும்) அதற்கேற்பச் செயல் புரிந்தமையாலும், ஆக இத்தகைய காரணத்தால் ஏற்பட்டிருக்கக் கூடும். இத்தகையதொரு நடவடிக்கை நீடிக்குமானால், செலாவணிகளுக்கு, தீமையானதும் (harmful) முற்றிலும் தேவையற்றதுமான (entirely unnecessary) நிலைபேறின்மை (instability) ஏற்படக் கூடும். மாற்றுக் கட்டுப்பாடானது குறைந்தபட்சம் இத்தகைய நிலைபேறின்மையினால் வரும் கேடுகளையாவது குறைப்பதாக இருக்கும்.

5. பன்னாட்டு நிறுவனங்கள் (International Institutions)

அயல்நாட்டு மாற்றங்காடிபற்றிய இச் சிறிய அளவாய்வினை (brief survey of the foreign exchange market) முடிப்பதற்கு முன்னர், இரண்டாவது உலகப்போர் முடிவடைந்த பின்னர் நிறுவப்பட்ட மூன்று பன்னாட்டு நிறுவனங்களைப் (three international institutions) பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். இந் நிறுவனங்களில் முதலாவதாக உள்ளது 1947ஆம் ஆண்டு

நிறுவப்பட்ட பன்னாட்டுப் பண நிதியாகும் (International Monetary Fund). இந்த நிறுவனத்தின் நோக்கம் மாற்றுவீதங்களின் ஒழுங்கான செயல்முறையை ஏற்படுத்துவதாகும். இத்தகையதொரு செயல்முறை நிலையான மாற்று வீதங்களை ஏற்படுத்துவதாக இருக்கும். நிதியானது (fund), அவசியமெனக் கருதியபோதும் சம்பந்தப்பட்ட நாடு கொணரும் மாற்றத்திற்கு (change) சம்மதம் தெரிவிக்கும்போதும், செலாவணி மதிப்புக் குறைப்பிற்கு (currency devaluation) அல்லது மதிப்பேற்றத்திற்கு (appreciation) வழிவகுப்பதாக இருக்கும். 1930ஆம் ஆண்டை அடுத்த பத்தாண்டுகளில் (1930's) மதிப்புக் குறைப்புகள் (devaluation) போட்டி போட்டுக்கொண்டு செய்யப்பட்டபோது, இந்த வழியைப் பின்பற்றுவதன்மூலம் அதிகமான மாற்றுவீத நிலையின்மையைத் (excessive exchange instability) தடுக்க உறுதி கொள்ளப்பட்டது. 1930ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகளில், மதிப்புக் குறைப்புச் செய்தலில் நாடுகளுக்கிடையே ஒரு போட்டி மனப்போக்கு இருந்துவந்தது—தனது வாணிபக் கொடுப்பல் நிலையைச் சீர்பெறச் செய்வதற்கு ஒரு நாடு மதிப்புக் குறைப்புச் செய்யும்; இதற்குச் சரிநிகராகப் பிற நாடுகளும் தங்களது வாணிபநிலை, சீர்கேடான நிலையை (இத்தகைய சீர்கேடான நிலை, முதலில் சொல்லப்பட்ட நாடு தனது நோக்கத்தில் வெற்றி காணும்போது ஏற்படும்) அடைவதைத் தடுக்கும் நோக்கத்துடன் அவைகளது செலாவணிகளையும் உடனுக்குடன் மதிப்புக் குறைப்புச் செய்யும். இவ்வகையான சங்கிலித்தொடர் போன்ற மதிப்புக் குறைப்புகளால் முடிவில் ஒவ்வொரு நாடும் தாம் ஆரம்பத்தில் எந்த நிலையிலிருந்தனவோ அதே நிலையில்தானிருக்கும். ஆனால், ஒன்று, அயல்நாட்டு மாற்றங்காடியில் ஏற்படும் நிலைகுலைதல் காரணமாகப் பன்னாட்டு வாணிபம் முழுவதுமே இடர்ப்படக்கூடும்.

ஆயினும், நிதியின் தனிப்பட்ட அங்கத்தினர்கள் மாற்று வீதங்களில் ஒப்புதல் செய்யப்பட்ட சரிசெய்தல்களைச் செய்து கொள்ள (agreed adjustment in exchange rates) நிதியின் விதிமுறைகளில் இடம் இருந்த காரணத்தால், அயல்நாட்டு வாணிபத்தில் அடிப்படையான சமன்கேட்டினையுடையதொரு நாடு உள்நாட்டு பணவடிப்பை மட்டுமே புகலிடமாகக்கொண்டு அச் சமன்கேட்டினைச் சமாளிக்க முடியும் என்ற நிலை மாறியது. தற்காலத்தில் பணவடிப்பு முறையினைக் கையாளுவது சாத்திய

மில்லை என்பதனைப் பொன் திட்டத்தின் அனுபவம் தெளிவாக உணர்த்தியது. மேலும், நிதியின் விதிமுறைகளின்படி தாற்காலிக வாணிப இடர்ப்பாடுகளைக் கொண்டுள்ள அங்கத்தினர் நாடுகள் (member countries faced with temporary trade difficulties) ஒரு பொது நிதியிலிருந்து (a common pool) அயல்நாட்டுச் செலாவணிகளைக் கடன் வாங்கலாம் என்பது விதிகளில் ஒன்றுகும். நாடுகள், தாற்காலிகமான ஒவ்வோர் இடர்ப்பாட்டிற்கும் (every difficulty of a temporary nature) மாற்றுவீதங்களில் மாற்றங்களைச் செய்துகொண்டிருப்பதைவிட அவைகளை நெடுங்காலப் போக்குகளுக்கு (long-term funds) நிவாரணமாக அடிக்கடி செய்யப்படாத சரிசெய்தல்களைச் (infrequent adjustments) செய்வதற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும் என்பதும் மேற்சொல்லப்பட்ட விதிமுறையில் வலியுறுத்தப்பட்டது. சுருங்கக்கூறின், இந்த நிதியானது பொன் திட்டத்தின் நன்மைகளையும் (செலாவணிகளின் தடையிலா மாற்றுத் தன்மையும் மாற்று வீதங்களில் பொதுவான நிலைபேறும் (free convertibility of currencies and general stability of exchange rates)] இணக்கமான மாற்று வீதங்களால் கிடைக்கும் நன்மைகளையும் [வேலை நிறைவை உள்ளும் திறனும் (the ability to aim full employment)] கொண்டதாக இருந்ததுடன், இவை ஒவ்வொன்றிலும் உள்ள குறைபாடுகளினின்றும் தன்னைத் தடுத்துக் கொள்வதாகவும் இருந்தது.

அவப்பேருக (unfortunately) ப. ப. நி (I. M. F.) யின் செயல் விதிகள் (provisions) முழுவதுமாக செயல்படவேயில்லை. 1950ஆம் ஆண்டினையடுத்த பத்தாண்டுகளின் பிற்பகுதிவரையிலும், மேற்கு ஐரோப்பாவும் (Western Europe) இன்னும் மற்றப் பெரும்பான்மையான டாலர் புழக்கமற்ற நிலப்பகுதிகளும் (most other non-doller areas) தங்கள் செலாவணிகளை மற்ற எல்லா செலாவணிகளாக, குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் டாலர்களாகத் தடையில்லாமல் மாற்றுச் செய்து கொள்வதை (free convertibility) அனுமதிக்கும் அளவிற்கு வலுவான வாணிப நிலையைப் பெற்றிருக்கவில்லை. அந் நாடுகளில் பல ஐக்கிய அரசாங்கம் உட்படப் பன்னாட்டுப் பண நிதியினைத் தங்களது பொற்காப்புகள் திடீரென வற்றிப்போவதைச் சமாளிப்பதற்கு, பொன், டாலர்கள் இவற்றினைத் தாற்காலிகமாக அளித்துவரும் அரியதொரு சாதனம் என்றே கருதி வந்தன. அண்மை ஆண்டுகளில் உலகச் செலுத்துகளிலுள்ள (world payments) இத்தகைய சமன்கேடு

(imbalance) பெரிதும் திருத்தப்பெற்றது; தங்களது செலாவணி களைப் பயன்படுத்துவதில் தீவிரமான வரையறைகளெதனையும் விதிக்காமலேயே (with out the imposition of drastic limitations) பிரிட்டனும் இன்னும் மற்ற டாலர் புழக்கமற்ற நாடுகளும் (non-doller countries) நிலைபேறுள்ள மாற்று வீதத்தை (stable exchange rate) கைக்கொள்ள முடிந்தது. அப்படியும், தங்களது நாட்டுச் செலாவணி அதிகாரத்தை ப. ப. நி (I. M. F.) யைப் போன்றதொரு பன்னாட்டு நிறுவனத்தின் செயலாட்சிக்கு (administration) விட்டுவிட, நாடுகள் தயங்குவது நன்கு புலனா கின்றது. உலகத்திலுள்ள நாடுகள் ப. ப. நி. யின் (I. M. F.) கருத்தாழமும் துணிவாற்றலுமிக்க செயல்விதிகளைக் கொண்ட உரிமைப் பத்திரமானது (charter) செயல்படுவதற்கு முழுமையான தொரு வாய்ப்பினை நல்கும் பொருட்டுத் தங்களது பொருளா தார நிதிய அரசுரிமையை (economic and financial soverignity) விட்டுக் கொடுக்க முன்வர இன்னும் பல ஆண்டுகளாகும்.

இரண்டாவதாக உள்ளதொரு பன்னாட்டு நிறுவனம் மிகவும் வரையறுக்கப்பட்டதோர் எல்லையையுடைய, ஐரோப்பிய செலுத்து ஒன்றியம் (European Payments Union) ஆகும். இது, 1950ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1950ஆம் ஆண்டிற்கு முன்னதாக உள்ள மூன்று ஆண்டுகளில் இத் திட்டம் வளர்ச்சி பெற்று 1950ஆம் ஆண்டில் முற்றுருப்பெற்று நிறுவனமாகியது. ப. ப. நி யைப் (I. M. F.) போலல்லாது, இது நன்கு செயல்பட ஆரம்பித்ததுடன், கணிசமான அளவிற்கு வெற்றியுடனும் செயல் புரிந்தது. ஐ. செ. ஒ வில் (E. P. U) அங்கம் பெறும் உரிமை மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடா தவிர்த்த பிரிட்டிஷ் குடியேற்ற உரிமை நாடுகள் (British Dominions except Canada), குடியேற்ற நாடுகள் (colonies) போன்ற இணைப்புரிமை கொண்ட நிலப்பகுதிகளுக்குமே (affiliated territories) வரையறுக்கப் பட்டது. ஐ. செ. ஒ-வின் உடன்பாட்டின்படி (the E. P. U. agreement) அங்கத்தினர்களுக்கிடையே நடக்கும் எல்லா வாணிப பேரங்களும் மாதம் ஒரு முறை கணக்குத்தீர்வு செய்யப்படல் (monthly settlement) வேண்டுமெனவும், அங்கத்தினர் நாடுகளின் செலாவணிகள் ஒன்றுக்கொன்று மாற்றுச் செய்துகொள்ள முற்றி லும் தடையிலா மாற்று உரிமையைக் கொண்டனவாக இருக்க வேண்டுமெனவும், வாணிப உபரிகளைக் (trade surpluses) கொண் டுள்ள அங்கத்தினர் நாடுகள் வாணிபப் பற்றுக் குறைகளை (trade

deficits) உடைய நாடுகளுக்குக் கடன் வழங்குதல் வேண்டுமெனவும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. செலாவணியின் தடையிலா மாற்றுரிமை (free currency convertibility), வாணிபப் பற்றுக்குறைகளைத் தீர்க்க நிதி பெறுவதற்கான தாற்காலிகக் கடனளிப்பு (temporary loans to finance trade deficits) முதலியவற்றிற்கான வாய்ப்புகளால் ஐ. செ. ஒ. வின் பல்வேறு அங்கத்தினர்களுக்கிடையே வாணிபம் பெருகியது. இது டாலர் நிலப்பகுதியிலுள்ள நாடுகளின் (countries in the doller area) அளிப்புகளையே (supplies) ஐரோப்பா எதிர்நோக்கிக் கொண்டிருந்த நிலையானது குறைக்கப்படுவதற்குப் பெரிதும் உதவியது.

கடன் சம்பந்தமான செயல் விதிகளும் அவ்வப்போது சரி செய்யப்பட்டன. ஐ. செ. ஒ. வினுடைய அங்கத்தினர்கள் தங்களது செலாவணிகளை டாலர்களாகவும் ஐ. செ. ஒ வின் செலாவணிகளாகவும் மாற்றுச் செய்துகொள்வதற்கான பூரண மாற்றுரிமையை (full convertibility) நோக்கிச் சீராகச் செல்வதற்கு இத்தகைய சரி செய்தல்கள் (adjustments) தூண்டின. ஒவ்வோர் அங்கத்தினருக்கும், ஒன்றியத்தினுடைய செயல்விதிகளின்படி, ஒரு பங்களவு (quota) கொடுக்கப்பட்டது. ஒன்றியத்தின் செயல்விதிகளின்படி அங்கத்தினர் நாடு இவ்வளவு மொத்தப் பற்றுக்குறையைத்தான் (total deficit) வைத்திருக்கலாமென்றும் அல்லது இவ்வளவு மொத்த உபரியை வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் இப் பங்களவு விளக்கியது. பங்களவுகள் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. ஒன்று, ஐ. செ. ஒ வினின்றும் கடன் பெறுவது மூலமும் அல்லது அதற்குக் கடன் கொடுப்பது மூலமும் நிதியளிக்கப்படுவது. மற்றொன்று ஐ. செ. ஒ. விற்கு செலுத்தப்படும் பொன்னால் அல்லது ஐ. செ. ஒ. வினின்றும் பெறக்கூடிய பொன் வரவுகளால் (receipts of gold from E. P. U) நிதியளிக்கப்படுவதாகும். (ஒரு அவுன்ஸ் பொன்னை $ 35ஆக மாற்றிக்கொள்ள இயலுவதால் ஐக்கிய அமெரிக்காவின் டாலர்களைக் காட்டிலும் பொன்னே (gold) தற்காலத்தில் வசதியானதாகவுள்ளது.) உதாரணமாக, பிரிட்டன், ஒரு குறிப்பிட்ட மாதத்தில் மற்ற ஐ. செ. ஒ (E. P. U) நாடுகளுக்குத் தான் ஏற்றுமதி செய்ததைக் காட்டிலும் £ 100 மில்லியன் அதிகமான இறக்குமதிகளை அந்நாடுகளினின்றும் பெற்றிருக்குமானால், அதனுடைய இத்தகைய பற்றுக் குறையின் (deficit) ஒரு பகுதியைப் (a part) பொன்னாகத் தரும்படி கோரப்படும்; ஆனால், எஞ்சியுள்ள பற்றுக்

குறைக்கு ஐ. செ. ஒ. (E. P. U.) கடனளிக்கும். இதைப்போன்றே, ஒரு நாடு தான் இறக்குமதி செய்ததைக் காட்டிலும் அதிக அளவு ஏற்றுமதிகளைச் செய்யுமாயின், நிலுவையின் (balance) ஒரு பகுதியைப் பொன்னாகப் பெறும்; எஞ்சியுள்ளதை ஐ. செ. ஒ.வில் (E. P. U.) வரவு இருப்பாகப் (credit balance) பெற்றுக்கொள்ளும்படி கோரப்படும்.

1950, 1958 ஆகிய இரு ஆண்டுகட்கிடையேயுள்ள கால அளவில், பங்களவுகளில் (quotas) பொன்னின் வீதமானது படிப் படியாக உயர்த்தப்பட்டது. ஒன்றியமானது (Union) ஆரம்பிக் கப்பட்ட புதிதில் ஒரு நாடு தனக்கு ஐ. செ. ஒ.வில் உள்ள பற்றுக்குறையில் (deficit) 40 சதவீதத்தை மட்டுமே—அதனுடைய பங்களவுவரையிலும் (up to the extent of its quota)—பொன்னாகக் கொடுக்கும்படி கோரப்பட்டது. 1956ஆம் ஆண்டில் இது 75 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது; இதன்படி ஒரு கடனாளி நாடு தனது பற்றுக்குறைகளில் 25 சதவீதத்தை (இப்படிக் கணக்கிட்டு வரும் தொகை அதற்குக் கொடுக்கப்பட்ட பங்களவிற்குள் இருக்கவேண்டும்) ஐ. செ. ஒ.விலிருந்தும் கடன் வாங்கிச் சரிக்கட்ட முடிந்தது. இவ்வாறு, கணக்குத் தீர்வு செய்துகொள்வது சம்பந்தமான விதிமுறைகள் படிப்படியாகக் கடினமாக்கப்பட்டதானது (progressive stiffening in the terms of settlement), கடன் வாங்கு நாடுகளில், ஐ. செ. ஒ.வின் (E. P. U.) மற்ற அங்கத்தினர்களின் பணத்தில், தங்களது சக்திக்கு மீறிச் செலவு செய்தலைத் தடுத்ததுடன், அவர்களின் செலாவணிக்குப் பூரண மாற்றுரிமையைப் பெறும் (complete convertibility) வழி வகையினை நாடவும் தூண்டியது.

1958ஆம் ஆண்டு இறுதியில் இத்தகையதொரு முறையானது ஐ. செ. ஒ.வினை (E. P. U.) மூடிவிட்டு, அதனிடத்தில் அதைவிடச் சற்றுத் தாராளமான விதிமுறைகளைக் கொண்ட ஐரோப்பியப் பண உடன்பாடு (European Monetary Agreement) என்னும் நிறுவனத்தை நிறுவுவதுதான் சரியானது என்ற சூழ்நிலையை ஏற்படுத்தியது. இதன் காரணமாக, ஐரோப்பியப் பண உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. இந்த உடன்பாட்டின்படி (agreement) ஒவ்வோர் அங்கத்தினர் நாடும் ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் அந்த மாதத்தில் அவைகள் கடைப்பிடிக்கும் செலாவணிகளின் மதிப்புகள் அடங்கிய ஒரு குறுகிய எல்லையை (a narrow range) அறிவிக்கும். ஒவ்வொரு மாத இறுதியிலும், ஒவ்வொரு நாட்டின்

மைய பாங்கும் மற்ற அங்கத்தினர் நாட்டின் மைய பாங்கினிடமுள்ள அதனுடைய செலாவணியை மேற் சொல்லப்பட்ட எல்லைக்கும் குறைவானதோர் அளவில் (a lower limit of the range) தனது செலாவணிகளில் எந்தச் செலாவணியையும் மாற்றுச் செய்து தர முன்வருகிறது; அந்த மாதத்தில், சம்பந்தப்பட்ட செலாவணிக்கான (the currency concerned) அங்காடி விலை கோருதலில் (market quotation) என்ன மாறுதல் ஏற்பட்டபோதும் இவ்வாறு மாற்றுச் செய்துதரும். ஆகவே, பயனளவில் பார்க்கும் போது, இவ்வுடன்பாடானது (agreement) ஓர் அங்கத்தினர் பிற அங்கத்தினர்களுக்கு அளிக்கும் தொடர்ந்த குறுங்கால மாற்று உத்தரவாதங்களாகும் (a succession of short-run exchange guarantees). எனவே, இத்தகைய உத்தரவாதங்கள், அங்கத்தினர்களுக்கிடையே—பழைய ஐ. செ. ஒ.வில் இருந்த அதே அங்கத்தினர்கள்—நடக்கும் வாணிபத்தில் ஏற்படக்கூடிய மாற்று ஆபத்தினைக் (exchange risk) குறையச் செய்கின்றது.

ஐ. செ. ஒ. மூடப்படுந் தறுவாயில் அதனிடமிருந்த சாதனங்களைக்கொண்டு (with the resources remaining in E. P. U.) ஐரோப்பிய நிதி (European Fund) என்ற ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந் நிதியின் பணி யாது? அயல்நாட்டுச் செலுத்துநிலை இடர்ப்பாடுகளையுடைய அதன் அங்கத்தினர்களுக்கு இரண்டாண்டுகள் வரையிலும் காலவரையறைகளைக்கொண்ட கடன்களை (credits of up to two years in duration) அளிப்பதே இந் நிதியின் பணியாகும். இக் கடன் வசதிகளை, கிரீஸ் (Greece), ஐஸ்லாந்து (Iceland), ஸ்பெயின் (Spain), துருக்கி (Turkey) போன்ற சில ஏழ்மையான ஐரோப்பிய நாடுகள் பெற்றுப் பயனடைந்தன. ஆயினும், இந்த உடன்பாடானது ஒரு காப்புறுதித் திட்ட (insurance) அடிப்படையில்தான் இயங்கிவந்தது; ஐரோப்பியச் செலாவணி நிலைபேற்றில் சீர்குலைவு ஏற்படுமானால் அப்போது இக் காப்புறுதித் திட்டம் செயல்படும். ஆனால், அத்தகையதொரு சீர்குலைவு ஒன்றும் ஏற்படாததால், இவ்வுடன்பாட்டில் அடிப்படையான மூலக்கூறாக உள்ள (the basic element of the agreement) மாற்று உத்தரவாத வசதிகள் பயன்படுத்திக்கொள்ளப்படவேயில்லை.

மூன்றாவதாகவுள்ள முக்கிய நிறுவனம் சுங்கவரி, வாணிபப் பொது உடன்பாடாகும் (General Agreement on Tariffs and Trade—G. A. T. T.). இந் நிறுவனமானது ப. ப. நி. (I. M. F.)

அயல்நாட்டு மாற்று எல்லையில் எதனைச் செய்ய முயன்றதோ, அதனையே சுங்கவரிகள் (tariffs) இன்னும் மற்ற வாணிபத் தடைகளுள்ள (other trade restrictions) எல்லையில் (sphere) செய்யத் தலைப்படுகின்றது. சு. வா. பொ. உ. (G A.T.T) 1948ஆம் ஆண்டு செயற்பட ஆரம்பித்தது. அதில் சோவியத் ருஷ்யா தவிர்த்த உலகத்திலுள்ள முக்கியமான வாணிப நாடுகள் யாவும்—அதாவது, இந் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கும் நாடுகள்—அங்கம் வகித்தன. இதனுடைய முக்கிய நோக்கம் யாதெனில், அதனுடைய ஒவ்வோர் அங்கத்தினரும் பிற அங்கத்தினர்களுக்கு 'மிகவும் சலுகை பெறும் நாடு' (most-favoured nation) திட்டத்தின்கீழ் அளிக்கப்பெறும் சலுகைகளை அளிக்கவேண்டும்—அதாவது, ஓர் அங்கத்தினர் நாடு எந்த ஒரு நாட்டினின்றும் அதற்கு இறக்குமதியாகும் இறக்குமதிகளுக்குச் சலுகை நடத்து முறையை (preferential treatment) அளிக்குமானால்—அதாவது, அந்த இறக்குமதிகளின்மீது மிகவும் குறைவான சுங்கவரியை விதிப்பதன்மூலம் அத்தகையதொரு சலுகையை சு. வா. பொ. உ.வில் அங்கம் வகிக்கும் பிற அங்கத்தினர்களுக்கும் வழங்கவேண்டும். சு. வா. பொ. உ. (G.A.T.T.) ஏற்படுத்தப்பட்டதற்கு முன்னர் இருந்த சலுகைகள் தொடர்ந்து நீடிக்க அனுமதிக்கப்பட்டன. ஆனால், 1948ஆம் ஆண்டிற்குப் பிறகு எந்த ஒரு சு. வா. பொ. உ. அங்கத்தினரும் புதிய சலுகைகள் (no new preferences), அச் சலுகைகள் மற்ற அங்கத்தினர் யாவருக்கும் அளிக்கப்பட்டாலொழிய வழங்குதல் கூடாது என விதிக்கப்பட்டது. இத்தகைய விதிமுறையின்கீழ்ச் சலுகைகள் எல்லா நாடுகளின் வாணிபத்திற்கும் அளிக்கப்படுமாதலால், அவைகள் சலுகைகளாகவே இருக்கமாட்டா.

சு. வா. பொ. உ.வின் நோக்கம், சலுகைக் காப்பு வரிகளால் பன்னாட்டு வாணிபத்தில் ஏற்படுத்தப்படும் புதிய ஏடாகோடங்களைத் (new distortions) தடுப்பது மட்டுமல்லாமல், இருக்கின்ற வாணிபத் தடைகளை (existing trade barriers) படிப்படியாகக் குறைப்பதுமாகும். சு. வா. பொ. உ.வின் தனி நபர் அங்கத்தினர்கள் ஒருவர்க்கொருவர் (individual members) செய்துகொள்ளும் பலமுக பேர மாநாடுகளின் (multilateral bargaining sessions between individual members) விளைவாகச் சுங்கவரிகள் குறைக்கப்படுவதால், இவ்வாறு வாணிபத் தடைகள் குறைகின்றன. உதாரணமாக, 'அ' நாடானது 'ஆ' நாட்டினின்றும் இறக்குமதி

யாகும் குறிப்பிட்ட இறக்குமதிகளுக்கு அது விதிக்கும் சுங்க வரிகளைக் குறைப்பதற்கு, 'ஆ' நாடும் அதற்கிணையாக 'அ' நாட்டினின்றும் இறக்குமதி செய்கின்ற அதன் இறக்குமதிகள் சிலவற்றிற்கு ஏறக்குறைய அதே முக்கியத்துவம் வாய்ந்த சுங்க வரிக் குறைப்புகளைச் செய்யுமானால், உடன்படுகிறதெனக் கொள்வோம். இவ்வாறு செய்யப்படும் இந்தக் குறைப்புகள் மற்ற எல்லா அங்கத்தினர் நாடுகளுக்கும் (to all other member countries) பரவலாக்கப்படும். சு. வா. பொ. உ.வினால் நடத்தப் பட்ட பன்னாட்டுச் சுங்கவரி சமரச மாநாடுகளின் (tariff negotiation sessions) உள்ளளாவிய அடிப்படைக் கருத்து யாதெனில், எந்த ஒரு நாட்டினாலும் செய்யப்படும் சுங்கவரிக் குறைப்பால் (reduction of tarriffs by any one country) வரும் ஆபத்தானது, அதனுடன் வாணிபம் செய்யும் மற்ற நாடுகள் யாவும் ஏறக் குறைய இதனையொத்த சுங்கவரிக் குறைப்பைச் செய்யும் போது பெரும்பாலும் மறைந்துபோகின்றது என்பதாகும். பன்னாட்டுச் சுங்கவரிக் குறைப்பில்—சற்றுக் குறைந்த அளவில் வாணிபக் கணியத் தடைகளிலும் (quantitative restrictions on trade)—கணிசமான அளவிற்கு வெற்றி காணப்பட்டிருப்பதா னது மேற்சொல்லப்பட்ட கருத்தின் உண்மையை விளக்குவ தாகவுள்ளது. அப்படியும் சு. வா. பொ. உ. வின் முதன்மையான மதிப்பானது (principal value), ஐரோப்பியப் பண உடன்பாட் டினைப் (European Monetary Agreement) போன்றே, அதனுள் உள்ள 'காப்புறுதி' உறுப்பில் (insurance element) தான்உள்ளது—எவ்விதத்தில் எனில், எதிர்காலத்தில் உலக வாணிபத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகள் (future crises in world trade) 1930ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகளின்போது ஏற்பட்டது போன்று தனிப்பட்ட நாடுகள் (individual countries) பீதியினால் தாக்குண்ட (panic stricken), அவசர நடவடிக்கைகளாலும், ஒன்றையொன்று அழித்துக்கொள்ளும் (mutually destructive) செயல்முறைகளாலும் (measures) ஏற்படமாட்டா என்ற உறுதியை அது அளிப்பதாகவுள்ளது. மேற்கூறிய நிதானமற்ற நடவடிக்கைகள் நெருக்கடியைப் போக்குவதற்குப் பதிலாக அந் நிலையைப் படுமோசமாக ஆக்கிவிடும்.

இத்தகைய பன்னாட்டு நிறுவனங்கள் (international institutions), ஏற்பாடுகள் (arrangements) யாவும் ஒரு வகையில், அவைகளுடைய வசதிகள் வேண்டப்பெறாத ஒரு சூழ்நிலையினை

ஏற்படுத்துவதற்கே செயல்படுகின்றனவென்றே கூறலாம். உலகத்தில் அயல்நாட்டு வாணிபத்திற்கு உலக நாடுகளின் செலாவணிகள் யாவும் கட்டுப்பாடுகளும் (controls) தடைகளுமின்றி (restrictions) பயன்படுத்தப்படும் நல்லதொரு நாளையே இந் நிறுவனங்களும் ஏற்பாடுகளும் எதிர்நோக்குகின்றன. தடையிலாப் பன்னாட்டு வாணிபத்தின் உள்ளார்ந்த சக்திகள் யாவும் வெளிக்கொணரப்பட்டு அவை உச்சமான அளவிற்குப் பயன்படுத்தப்பட வேண்டுமேயானால், அதற்குத் தேவையானவை, ஒன்று பூரண மாற்றுரிமையும் (full convertibility), மற்றொன்று வாணிபத்தின்மீதுள்ள வரித்தடைகளும் கணியத் தடைகளுமாகும். வரித்தடைகள், கணியத்தடைகளென்று ஈண்டுக் குறிப்பிடப்பட்டுள்ளவை எல்லா வகையான சுங்கவரிகளும் (tariffs) பங்களவுகளுமாகும் (quotas). பன்னாட்டு வாணிபத்திற்குத் தன்னுரிமை (freedom) வழங்குவதில் நன்மைகளும் உள்ளன; ஆபத்துகளும் (risks) இடர்ப்பாடுகளும் (difficulties) உள்ளன. தனது உள்நாட்டு சுபிட்சமானது (domestic prosperity) முற்றிலும் அயல்நாட்டு வாணிபத்தின் தயவில் (mercy) இருப்பதற்குத் தற்காலத்தில் ஒரு நாடும் சம்மதிப்பதில்லை. நிறைகுறைப் போட்டி மல்கியுள்ள இவ்வுலகத்தில், இந் நிறுவனங்கள் யாவும் அயல் நாட்டு வாணிபத்தின்மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை, வேலை நிறைவும் விரைவு இயக்க ஆற்றலும் (dynamic) நிறைந்த உள்நாட்டுப் பொருளாதார முறைக்கு (internal economy) உண்மையாக அவைகள் எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு மட்டுமே —அதாவது, குறைந்தபட்ச மட்டத்தில்—வைத்திருக்கக்கூடியதொரு சூழ்நிலையை உருவாக்குகின்றன என்பதே நாம் உச்சமாக எதிர்பார்க்கக்கூடியதொன்றாகவுள்ளது.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

Sayers, 'Modern Banking', Ch. 6.

B. Tew, 'International Monetary Co-operation,' 1945-52, (Hutchinson, London, 1952), Chs. I-II, VI–VIII.

Harrod, 'International Economics,' Chs. V and III.

N. Crump, 'The A B C of the Foreign Exchanges' (11th ed., Macmillan, London, 1951), Chs. VI-XIII.

31. அயல்நாட்டுச் செலுத்துநிலை

(The Balance of Payments)

1. நடப்புக் கணக்கில் உள்ள அயல்நாட்டுச் செலுத்துநிலை (The Balance of Payments on Current Account)

ஒரு கம்பெனியானது ஒவ்வோர் ஆண்டிலும் தனது வரவு செலவு அறிக்கையைத் (a statement of its income and expenditure) தயாரிப்பதுபோல, ஒரு நாடும் அயல்நாடுகளிடம் தான் நிகழ்த்துகின்ற நடப்புப் பேரங்களின் ஆண்டு அறிக்கையினைத் (an annual statement of its current transactions with foreign countries) தயாரிக்கிறது. நாடானது தயாரிக்கும் இத்தகைய அறிக்கையே, அதன் அயல்நாட்டுச் செலுத்துநிலை (balance of payments) எனப்படும். செலுத்துநிலை என்பது அந்த நாட்டிற்கும் அதனுடன் வாணிபம் செய்யும் நாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்பினைக் (relationship) குறிக்கின்றதேயல்லாமல் செலுத்துநிலை என்பது சரிசமமான நிலையானது (exact equality) அவ் வாணிபத்தில் உள்ளதென்பது பொருளன்று; ஏனெனில், ஒரு நாட்டில் உறையும் மக்கள் (residents of a country) வெளிநாடுகளினின்றும் வாங்குகின்ற பண்டங்கள், பணிகள் ஆகியவைகள் (goods and services) அவர்கள் வெளிநாட்டவருக்கு அனுப்பும் பண்டங்கள் பணிகளால் (goods and services) சரிநிகராக ஈடுசெய்யப்படும் என்று கூறுவதற்கில்லை.

அயல்நாட்டுச் செலுத்துநிலையை நடப்புப் பேரங்களின் அடிப்படையில் (on the basis of current transactions)—ஒவ்வோர் ஆண்டிலுமுள்ள வரவுகளும் (receipts) வருமானத்தில் செலவும் (expenditure of income)—அமைக்கக்கூடும், அல்லது அதில் மூலதன பேரங்கள் (capital transactions)—மற்ற நாடுகளுக்கு வழங்கப்படும் கடன்கள், பிற நாடுகளிலிருந்து பெறும் கடன்கள்,

அல்லது ஏற்கெனவே சேமித்து வைத்திருந்த் சொத்துகளின் மாற்றம் (transfers of assets accumulated in the past)—இடம் பெறக்கூடும். ஆக, ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலை அட்டவணையைக் கொண்டு அந் நாடு எந்த அளவிற்கு அதன் நடப்பு வருமானத்திற்கும் உள்ளாகவே செலவு செய்கிறது அல்லது அதற்கு மேற்கொண்டும் செலவு செய்துவருகிறது என் பதனை அந் நாட்டின் நடப்புக் கணக்கிலுள்ள அயல்நாட்டுச் செலுத்துநிலையினைக் கொண்டே (balance of payments on current account) கூறிவிடலாம். நடப்புக் கணக்கிலுள்ள அயல்நாட்டுச் செலுத்துநிலையில் புலனாகும் வாணிபம் (visible trade), புலனாகா வாணிபம் (invisible trade) ஆகிய இவ்விரண்டும் இடம் பெறு கின்றன. புலனாகும் வாணிபம் என்பது நாட்டிலிருந்து ஏற்றுமதி யாகும் அல்லது நாட்டிற்கு இறக்குமதியாகும் தொட்டறியக் கூடிய (tangible) பண்டங்களின் வாணிபமாகும். சான்றாக, ஐக்கிய அரசாங்கத்தின் முக்கிய இறக்குமதிகள், மாமிசம், தானி யங்கள் (grains), பழவகைகள், காப்பிக்கொட்டை, தேயிலை ஆகிய உணவுப் பொருள்களும், குறிப்பாகக் கல்லெண்ணெய் (petroleum), பருத்தி (cotton), கம்பளி (wool), உலோகத் தாதுக்கள் (metal ores) போன்ற கச்சாப் பொருள்களையும் (raw meterials) கொண்டன வாக இருந்தன. பொறிகள் (machinery), கார்கள், லாரிகள் (lorries), இயைபுப் பொருள்கள் (chemical products), எல்லா வகை யான துணிகள் (textiles of all kinds) ஆகியவைகள் பிரிட்டனின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாக இருக்கின்றன. ஒரு நாடா னது, புலனாகும் இறக்குமதிகளுக்குச் செலவிடும் செலவிற்கும் (expenditure on its visible imports), புலனாகும் ஏற்றுமதிகளினால் (visible exports) ஈட்டப்படும் அதன் ஈட்டங்களுக்குமிடையே யுள்ள வேறுபாடே (difference) வாணிபக் கொடுப்பல் நிலை (balance of trade) என வழங்கப்படுவதாகும். ஏற்றுமதிகளின் மதிப்பானது (the value of exports) இறக்குமதிகளின் மதிப்பைக் காட்டிலும் அதிகமாக இருக்குமானால், அது சாதக வாணிபக் கொடுப்பல் நிலை (favourable balance of trade) எனப்படும்; மாறாக, இறக்குமதிகளின் மதிப்பானது ஏற்றுமதிகளின் மதிப் பைக் காட்டிலும் அதிகமாக இருக்குமானால், அது பாதக வாணி பக் கொடுப்பல் நிலை (adverse balance of trade) எனப்படும். [வாணிபக் கொடுப்பல் நிலை என்பது வேறு; வாணிப நிபந்தனைகள் (terms of trade) என்பன வேறு—இவை இரண்டினையும் ஒன்றுக் கொன்று குழப்பிக்கொள்ளுதல் கூடாது. முன்னதாகக் கூறப்

பட்டுள்ளது இறக்குமதிகளுக்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகைகளுக்கும் (total amounts) ஏற்றுமதிகளினுல் பெறப்பட்ட மொத்தத் தொகைகளுக்குமிடையேயுள்ள தொடர்பினைக் (relationship) குறிப்பதாகவும், பின்னதாகக் கூறப்பட்டுள்ளது ஏற்றுமதிகளின் விலைகளுக்கும் இறக்குமதிகளின் விலைகளுக்கு மிடையேயுள்ள தொடர்பினைக் (relationship) குறிப்பிடுவதுமாகும்.

நடப்புச் செலுத்துநிலையில் (current balance of payments), ஒரு நாட்டில் உறையும் மக்களால் பணம் செலுத்தப்படும் பணிகள் (the services paid for by residents of a country) அல்லது அயல்நாட்டினரின் சார்பில் அளிக்கப்படும் பணிகள் நாட்டினுள் நோக்கி, அல்லது நாட்டைவிட்டுச் சென்றுகொண்டிருக்கும் சொத்து வருமானங்கள் (property incomes) ஆகியவை நோக்கி இடம் பெறுகின்றன. இத்தகைய வருமான இனங்களை அல்லது செலவினங்களைப் புலனுகும் வாணிபத்தில் (visible) உள்ள பண்டங்கள் போன்று ஆயத்தீர்வை இடங்களில் (customs barriers) பருப் பொருளியலாகக் (phyically) காணவோ அல்லது கையாளவோ (handl:d) இயலாது. இத்தகைய இனங்களில் முக்கியமானவை, கப்பல், காப்புறுதிப் பணிகளினின்றும் (shipping and insurance services) கிடைக்கும் ஈட்டங்கள் (earnings), பயணர்கள் (tourists) தங்கள் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்று செலவிடும் செலவு (expenditure of tourists), அரசாங்கமானது வெளிநாடுகளிலுள்ள அதன் தூதுவ அலுவலகங்களுக்குச் (embassies) செலவிடும் செலவு, வெளிநாடுகளில் அது வைத்துப் பராமரிக்கும் போர்ப்படைகளுக்கான செலவு (maintenance of troops) முதலியவும் அயல்நாடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள முதலீடுகளினின்றும் கிடைக்கும் வட்டி (interest), இலாப ஈவுகள் (dividends) ஆகியவையும் புலனுகா இனங்களில் (invisible items) இடம் பெறுவனவாகும். இத்தகைய ஒவ்வொரு தலைப்பின்கீழும் ஒரு நாடானது அயல்நாடுகளினின்றும் செலுத்தப்படும் செலுத்துகளைப் பெறக் (receive) கூடும்; அல்லது அயல்நாடுகளுக்குச் செலுத்துகளை அளிக்கக்கூடும் (make payments abroad). சான்ருக, ஐக்கிய அரசாங்கமானது (United Kingdom) பிரிட்டிஷ் கப்பல்களின்மூலம் அயல்நாடுகளுக்குப் பண்டங்களை ஏற்றிச் செல்வதன்மூலம் கணிசமான அளவிற்குக் கப்பற் கட்டணங்களை வருமானமாகப் பெறுகிறது. அதே சமயத்தில், பிரிட்டிஷ் பண்டங்களை அயல்நாடுகளின் கப்பல்களில் கொண்டுபோவதற்கும்

கணிசமான தொகைகளைக் கப்பற் கட்டணங்களாகச் செலுத்து கின்றது. ஆகவே, ஒவ்வொரு தலைப்பின் கீழும் (under each heading) ஒரு நாட்டினுடைய ஈட்டங்களின் நிகர இருப்பானது (the net balance of earnings of a country) நேர்க் கணியத்திலோ (positive) அல்லது எதிர்க் கணியத்திலோ இருக்கக்கூடும்; இத் தகைய இருப்பானது (balance) மற்ற நாடுகளினின்றும் கிடைக் கும் வரவுகளாகவும் (receipts from other countries), மற்ற நாடு களுக்குச் செலுத்தப்படும் செலுத்துகளாகவும் இருக்கக்கூடும்.

புலனாகா ஏற்றுமதிகள், இறக்குமதிகள் (invisible exports and imports) இவைகளின் நிகர வரவுகளுடன் (net receipts) வாணிபக் கொடுப்பல்நிலை (balance of trade) சேர்க்கப்படு மாயின், அதனால் கிடைக்கும் மொத்தத் தொகை நடப்புக் கணக்கில் அயல்நாட்டுச் செலுத்துநிலையாகும் (balance of payments on current account); மொத்த வரவுகள் (total receipts) மொத்தச் செலவுகளைக் காட்டிலும் அதிகமானால் அது சார்தகச் செலுத்துநிலை (favourable balance of trade) எனப்படும்; வரவு களைக்காட்டிலும் செலுத்துகள் அதிகமானால் அது பாதகச் (adverse) செலுத்துநிலை எனப்படும். இதனால், வாணிபக் கொடுப் பல்நிலை (balance of trade) தனியாகக் கணக்கிடப்படுமாயின், அது எவ்வித முக்கியத்துவத்தையும் உடையதாக இருப்பதில்லை என்பது தெளிவாகிறது. ஒரு நாடு தான் இறக்குமதி செய் வதைக் காட்டிலும் அதிகமான பண்டங்களை ஏற்றுமதி செய்வ தாக இருக்கலாம்; அதனுடைய இந்த வாணிப உபரியை (trade surplus) அது புலனாகா இனங்களுக்குச் செலவு செய்யும் நிகரச் செலவானது (net expenditure on invisible items) அவ் உபரியைச் சரிக்கட்டுவதற்கும் மேலாக அதிகமாக இருப்பின், அதனுடைய முழுவதும் தழுவிய நடப்புச் செலுத்துநிலையில் பற்றுக்குறையான நிலை (deficit) இருந்தே தீரும். இதற்கு மாறான நிலையுள்ள ஓர் உதாரணத்தை நோக்குவோம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியக் காலம் முதற்கொண்டு ஐக்கிய அரசாங்கமானது (United Kingdom) பாதக வாணிபக் கொடுப்பல்நிலையில்தான் (adverse balance of trade) இருந்துவந்தது. ஆனால், அண்மைக் காலம்வரை, அதனுடைய புலனாகா ஈட்டங்கள் (invisible earnings), புலனாகும் ஏற்றுமதிகளைக் காட்டிலும் புலனாகும் இறக்கு மதிகள் அதிகமாக இருந்ததொரு நிலையினை ஈடுசெய்வதற்குப் போதிய அளவிற்கும் மேலாகவே இருந்தன.

2. பன்னாட்டு மூலதனப் பெயர்ச்சிகள் (International Capital Movements)

ஒரு நாடு, அதனுடைய நடப்புச் செலுத்துநிலையில் (current balance of payments) முழுவதும் தழுவியதொரு பற்றுக்குறை (overall deficit) ஏற்படுமானால், அத்தகையதொரு பற்றுக்குறைக்கு எப்படியும் நிதி தேவைப்படும். அயல்நாட்டிலிருந்தும் பண்டங்களை அளிப்போர் (foreign suppliers) தங்கள் பண்டங்களுக்குப் பணம் செலுத்தப்படவில்லையெனில் பண்டங்களை அனுப்ப மாட்டார்கள். இந்நிலைக்கு மாறாக ஒரு நாடு நடப்புச் செலுத்துகளால் உபரியைக் கொள்ளுமானால், இவ்வதிகரித்த வருவாய்களை (excess revenues) ஏதாவதொரு வழியில் பயன்படுத்தவே வேண்டும். இதனை வேறு வழியில் கூறப்போனால், நடப்பு அயல்நாட்டுச் செலுத்து நிலையில் (current balance of payments) பற்றுக்குறை (deficit) அல்லது உபரியானது மூலதன மாற்றங்களால் (by means of transfers of capital) நிதியளிக்கப்பட்டேயாகவேண்டும். ஒவ்வொரு கொள்முதலுக்கும் (every purchase), ஒவ்வொரு விற்பனைக்கும் ஏதாவதொரு வழியில் பணம் செலுத்தியே ஆக வேண்டும்; அயல்நாடுகளினின்றும் செய்யும் கொள்முதல்களுக்கு (foreign purchases) ஏற்றுமதிகளினின்றும் கிடைக்கக்கூடிய வரவுகளினின்றே (out of the proceeds of the exports) முழுவதுமாகப் பணம் செலுத்திவிடவும் முடியாது. அவ்வாறு செலுத்தப்பட முடியாமல் எச்சமாக உள்ளவற்றிற்கு மூலதனத்திலிருந்துதான் (capital) பணம் செலுத்தியாகவேண்டும். இதனை வேறு வழியில் கூற வேண்டுமாயின், ஒரு செலாவணியின் தொகையானது (the amount of a currency), இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்காக மாற்றப்படும்போது (being transfered) இவ்வாறு மாற்றப்படும் தொகையானது ஏற்றுமதிகளின்மூலம் ஈட்டப்படும் (earned) அயல்நாட்டுச் செலாவணிகளின் தொகையைக் காட்டிலும் அதிகரிக்குமானால், நிலுவையில் கணக்குப் பார்க்கும்போது (on balance) பற்றுக்குறை நாடானது (deficit country), அதனுடைய அயல்நாட்டுச் செலாவணிகளின் இருப்பு (holdings of foreign currencies), அச் செலாவணிகளை வாணிபம் தவிர்த்த வேறு வழிகளில் பெற்றாலொழியக் குறைந்துபோகும்.

மேற்சொல்லப்பட்ட கடைசி வாக்கியமானது, முழுவதும் தழுவிய, செலுத்துநிலையில் உள்ள உபரி அல்லது பற்றுக் குறைக்கு (surplus or deficit) நிதியளிக்கப் பயன்படும் ஒருவகை

மூலதனப் பெயர்ச்சியைக் (capital movement) குறிப்பிடுகிறது. கடனாளி நாட்டின் காப்பு நிதிகளிலிருந்து (reserves) கடனீவோர் நாட்டின் காப்பு நிதிகளுக்கு (reserves of the creditor country) மாற்றப்படும் அயல்நாட்டுச் செலாவணிகள் (அல்லது எந்த ஓர் அயல்நாட்டுச் செலாவணியையும் வாங்கக்கூடிய பொன்) இம் மூலதனப் பெயர்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றன. இத்தகைய தொரு பற்றாக்குறை தாற்காலிகமானதொன்றாக இருப்பின், (ஏதாவது ஒரு குறிப்பிட்ட காலத்தின்போது மட்டுமே கிரம மாக இத்தகைய பற்றாக்குறை ஏற்படுவதாக இருக்கக்கூடும்) குறிப்பாக, அயல்நாட்டுச் செலாவணிகளின் காப்பு நிதிகள் இழக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் தேவையில்லை. ஆயினும், பற்றாக்குறையானது (deficit) தொடர்ந்து நிலைபெறுமானால் (persists), மற்ற நிவாரணங்களை நாடும்படி இருக்கும். ஒரு நாடா னது, அதன் அயல்நாட்டு மாற்றுக் காப்பு நிதிகளை (foreign exchange reserves) இழந்துகொண்டே யிருக்கவும் முடியாது. ஏனெனில், கடைசியில் அவை யாவும் பயன்படுத்தப்பட்டுவிட்ட தொரு வறண்ட நிலை ஏற்படக்கூடும். [பிரிட்டனுடைய பொன் (gold), டாலர்கள் (dollars) ஆகியவற்றின் இருப்பு—பொன், டாலர்கள் ஆகியவற்றை எந்த ஒரு நாட்டின் செலாவணியாக வும் எளிதாக மாற்றுச் செய்துகொள்ளக்கூடியதாக இருந்த காரணத்தால் பிரிட்டன் தன் அயல்நாட்டு மாற்றுக் காப்பு நிதிகளைப் பொன், டாலர்களாகவே வைத்துக்கொண்டிருந்தது— 1961ஆம் ஆண்டின் இறுதியில் £ 1,185ஆகவே இருந்தது. இந்தத் தொகை அதன் நான்கு மாதப் புலனாகும் இறக்குமதிகளுக்குப் பணம் செலுத்துவதற்கே போதுமானதாக இருந்தது.]

இரண்டாவது வகை நிதியளிப்பு, அயல்நாடுகள் அவ்வப் போது அளிக்கும் கொடைகளைப் (grants) பயன்படுத்துவதால் ஏற்படுகிறது. இக் கொடைகள் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந் தும் அளிக்கப்படுவதாக இருக்கக்கூடும். எனவே, அவைகளை மூலதன வரவுகளாகக் (capital receipts) கருதுவதைக் காட்டி லும் வருமானம் (income) எனக் கருதுவதற்கே பொருத்தமான காரணங்கள் இருக்கின்றன. ஆயினும், அவைகள் ஒரு நாட்டின் செலுத்துகள் அல்லது வரவுகளின் (payments or receipts) நிரந்தரமான அம்சங்களாக இருப்பதரிதாகையால், அவை களை மூலதன இனங்களாகக் (capital items) கருதுவதே சாலப் பொருத்தமுடைத்தாகும். இரண்டாவது உலகப் போர் ஆரம்பித்

தது முதற்கொண்டு இதுவரையிலுமுள்ள கால அளவில் ஐக்கிய அமெரிக்காவின் (United States) அரசாங்கமானது, மேற்கு ஐரோப்பாவிற்கும் இன்னும் பிற நிலப்பகுதிகளுக்கும் (regions) அவைகளின் போருக்குப் பிந்திய காலத்து மறுசீரமைப்பிற்கு (post-war reconstruction) உதவியளிக்கும்பொருட்டு (1948—51 ஆண்டுகளின்போது இருந்த மார்ஷல் திட்டப்படி —Marshall Plan) கணிசமான தொகைகளைக் கொடையாக அளித்துதவியது. மிக அண்மைக் காலத்திலும் வட அட்லான்டிக் உடன்படிக்கை நிறுவனத்தின்கீழ் [வ. அ. உ. நி. (N. A. T. O)] திரும்பவும் படைக்கலம் தாங்குதல் திட்டங்களுக்காகவும் (re-armament programmes), இன்னும் இது போன்ற ஏற்பாடுகளுக்காகவும் உதவி செய்வதற்குக் கொடைகளை அளித்தது. இக் கொடைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றனவெனில், கொடைகள் அளிக்கப்படும் அந்த அயல் நாட்டு அரசாங்கங்களின் பெயர்களில் ஐக்கிய ரிசர்வ் பாங்கியில் (Federal Reserve Bank) வரவு இருப்புகளாக (credit balances) ஏற்படுத்தித்தரப்படுகிறது. இந்த இருப்புகளை (balances), சம்பந்தப்பட்ட நாடுகள், தங்களின் அயல் நாட்டுப் பற்றுக்குறைகளைச் (deficits of foreign exchange) சமாளிப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ளும்.

பற்றுக்குறையானது (deficit) கொடைகளினால் நிதியளிக்கப்பட முடியவில்லை என்னும்போதும், பற்றுக்குறை தாற்காலிகமானதொன்றாக இல்லை எனினும், நிதியளிப்பதற்காக மூன்றாவதொரு சாதனம் பயன்படுத்தப்படவேண்டும். அதுவே வெளிநாடுகளினின்றும் கடன் வாங்குவதாகும் (the raising of loans abroad). ஓர் அரசாங்கமோ (a government) அல்லது ஒரு கம்பெனியோ (a company) அயல்நாட்டு அரசாங்கத்தினிடமோ அல்லது அயல்நாட்டு மூலதன அங்காடியிலோ (foreign capital market) கடன் பெறும்போது, அந் நாடு அயல்நாட்டுச் செலாவணிகளைப் பெறும். இந்த அயல்நாட்டுச் செலாவணிகளை, செலுத்துப் பற்றுக்குறையைச் (payment dificits) சமாளிக்க அந் நாடு பயன்படுத்திக்கொள்ள இயலும். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இறக்குமதிப் பண்டங்களின் நடப்பு நுகர்ச்சிக்கு (current consumption of imports) நிதியளிப்பதற்குக் கடன் வாங்குவது ஆபத்தானதுபோலத் தோன்றக்கூடும். ஒரு தனி மனிதன் எவ்வாறு தனது நடப்புச் செலவுகளுக்கு பாங்கியினின்றும் கடன் வாங்கிப் பணம் செலுத்துதல் ஆபத்தானதோ,

அதனையொத்ததாகவே, மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது, இது காணப்படுகிறது. இருப்பினும், இந்த உதாரணத்தை யொத்த நிலைதான் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. அயல்நாட்டுக் கடன் பெறுதல்மூலம் மூலதன முதலீடு செய்யப் படுமாயின் (capital investment), அந்த முதலீட்டின் ஆக்கத்திறன் களால் (productive powers) தோற்றுவிக்கப்படும் கூடுதல் வரு மானத்தால் (extra income) அக் கடன் திரும்ப அடைக்கப்படுதல் இயலும். ஐக்கிய அமெரிக்கா (United States), கனடா (Canada) போன்ற எல்லாக் கடனீவோர் நாடுகளும் ஒரு காலத்தில் கடனாளி நாடுகளாகவே (debtor countries) இருந்தன. இந் நாடுகள் தங்க ளின் இறக்குமதி உபரிகளுக்கு (import surplesses) அயல்நாடுகளி னின்றும் பெற்ற கடன்களைக் கொண்டே பணம் செலுத்தி வந்தன; அதிகமாகத் தாம் பெற்ற இறக்குமதிகளைத் தமது உற்பத்தித் திறனை அதிகரித்துக்கொள்ளப் பயன்படுத்தின. ஆயினும், ஒரு நாடு தனது நடப்பு நுகர்ச்சிக்குப் பணம் செலுத்து வதற்காகக் கடன் வாங்கியும், இதனை ஈடு செய்யும் வகையில் கடன் வாங்கிய தொகையால் முதலீடொன்றும் செய்யாமலும் இருக்குமாயின், அது அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக் கின்றதென்று பொருள்; அந் நாடானது, தான் கடன் வாங்கி யுள்ள நாட்டிற்கு வட்டிச் செலுத்துகளையும் (interest payments) கடன் வாங்கிய முதலினைத் திருப்பி அடைப்பதிலும் ஏராளமான அளவு பணம் செலுத்த வேண்டியிருக்குமாதலால், எதிர் காலத்தில் அதன் அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பிரச்சினை யானது கட்டுக்கு மீறியதாக இருக்கும்.

ஏற்கெனவே கூறியது போன்று, மாற்றுவீதங்களின் மாற்றங் களால் (movements in exchange rates) கிடைக்கக்கூடிய ஊக வணிக இலாபங்களை (speculative gains) எதிர்நோக்கி மூலதனமானது (capital) ஒரு நாட்டிலிருந்தும் மற்றொரு நாட்டிற்குப் பெயர்ந்து செல்லக்கூடும். இதேபோன்று, பல்வேறு நிதிய மையங்களிலு முள்ள அதிகமான வட்டி வீதங்களின் இலாபத்தைப் பெறும் நோக்கத்துடன் குறுங்கால மூலதனமானது (short-term capital) ஒரு நாட்டைவிட்டு இன்னொரு நாட்டிற்கு இடம் மாறிச் செல் லும். இத்தகைய பெயர்ச்சியானது, அயல் நாட்டுச் செலுத்து நிலையைப் பொறுத்தவரையில் எவ்வித முக்கியத்துவத்தையும் உடையதாக இல்லை. ஏனெனில், இவ்வகையில் எந்த அளவிற்கு முதலானது நாட்டைவிட்டு வெளியேறுகின்றதோ, அந்த அள

விற்கு அயல்நாடுகளிலுள்ள அதன் சொத்துகள் (foreign assets) அதிகரிப்பதால் இதனுல் நஷ்டம் ஒன்றுமில்லை—அந் நாட்டில் உறையும் மக்கள் (residents of the country) அவ்வாறு வெளியேறும் முதலினை அயல்நாட்டு நகரங்களில் உள்ள தங்களின் பாங்கு வைப்புகளை (bank deposits) அல்லது பிணையங்களை (securities) அதிகரித்துக்கொள்வதற்குப் பயன்படுத்துவதால் நஷ்டம் ஒன்றும் இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆனல், இத்தகைய குறுங்கால மூலதனப் பெயர்ச்சிகளில் (short-term capital movements) உள்ள முதன்மையான முக்கியத்துவம், ஒரு நாட்டின் செலாவணியின் மாற்று வீதத்தில் (exchange rate of a country's currency) அவைகள் ஏற்படுத்தக்கூடிய விளைவே (possible effect) ஆகும். இந்த வகையில், நாம் ஏற்கெனவே ஆராய்ந்தறிந்ததுபோன்று, குறுங்கால மூலதனப் பெயர்ச்சிகள் மிகவும் அருவருக்கத்தக்க விளைவுகளைத் தருவனவாக இருக்கும்.

3. ஐக்கிய அரசாங்கத்தின் அயல்நாட்டுச் செலுத்துநிலை (The Balance of Payments of the United Kingdom)

முன்னர் விளக்கிய அயல்நாட்டுச் செலுத்துநிலை (balance of payments) என்னும் பொதுவானதொரு விளக்கத்தினை, ஐக்கிய அரசாங்கத்தின் அண்மை ஆண்டுகளின் அயல்நாட்டுச் செலுத்து நிலையோடு தொடர்புபடுத்திக் கூறுவது பயனுடைத்தாகும். அட்டவணை 17ஐப் பார்த்தால் முழுவதும் தழுவிய இருப்பின் (overall balance) முக்கியக் கூறுகள் (main features) நன்கு தெரியவரும். பிரிட்டிஷ் அயல்நாட்டு வாணிபக் கொடுப்பல்நிலையானது (British balance of trade) பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகப் பாதகநிலையில் (adverse) இருந்துவந்தது. 1946-61 ஆகிய ஆண்டுகளுக்கிடையேயும் இந் நிலையில் அதிகமான மாற்றம் ஒன்றும் காணப்படவில்லை. ஆயினும், பிரிட்டனின் புலனுகும் வாணிபத்தின் நிர்ணய மதிப்பானது (absolute value of Britain's physical trade) இந்தக் கால அளவின்போது மும்மடங்காகியது. இதற்கு, உலக விலைகளில் குறிப்பிடும்படியான அதிகரிப்பு ஏற்பட்டமை ஒரு பகுதி காரணமாகவும், பிரிட்டிஷ் அயல் நாட்டு வாணிபத்தின் அளவில் ஏற்பட்ட கணிசமான பெருக்கம் (a substantial expansion in the volume of British foreign trade) ஒரு பகுதி காரணமாகவும் இருந்தது. ஆயினும், போர்க்காலம் முதற்கொண்டு புலனுகா வாணிபக் கணக்கின் இருப்பில் (balance on invisible account) மிகவும் முன்னேற்றம் காணப்பட்டது. 1946ஆம்

அட்டவணை 17 : ஐக்கிய அரசாங்கத்தின் முழுவதும் தழுவிய அயல்நாட்டுச் செலுத்துநிலை (Overall Balance of Payments) **1946—1961** (மில்லியன் £-களில்)

	1946	1954	1961
1. நடப்பு இருப்பு (Current balance)			
இறக்குமதிகள் (புலனாகும்)	1082	3009	4006
ஏற்றுமதிகள் (புலனாகும்)	917	2817	3863
வாணிபக் கொடுப்பல்நிலை	–165	–192	–143
நிகரப் புலனாகா ஈட்டங்கள் (net invisible earnings) :			
கப்பற் கட்டணம்	+28	+150	–56
வட்டியும் இலாபங்களும்	+62	+73	+247
சுற்றுப்பயணம் (Tourism)	—29	–6	–22
அயல்நாடுகளில் அரசாங்கத்தின் செலவு	–323	–174	–338
பிற (other)	+129	+304	+235
மொத்தப் புலனாகா ஈட்டங்கள்	–133	+347	+66
2. மூலதனப் பெயர்ச்சிகள் (Capital movements)			
காப்பு நிதிகளின் இழப்பு (— = அதிகரிப்பு)	—54	—87	—31
ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்பு உதவி	—	+50	—
நெடுங்காலக் கடன் வாங்குதல் (+) அல்லது அளித்தல் (—)	+324	—201	+26
குறுங்காலக் கடன் வாங்குதல் (+) அல்லது அளித்தல் (—)	+28	+83	+82
மொத்தம்	+298	—155	+77

ஆதாரம் : 1946—54 : ஆண்டுதோறும் வெளியிடப்படும் 1956ஆம் ஆண்டின் புள்ளிவிவர அறிக்கை, அட்டவணைகள் 266–267 [லண்டன் மாட்சிமை தங்கிய அரசியின் புள்ளிவிவரத் துறையினரின் (H. M. S. O.) 1956ஆம் ஆண்டின் அறிக்கை].

1961ஆம் ஆண்டு: மாதாந்தரப் புள்ளிவிவரக் கதிர் (Monthly Digest of Statistics), எண் 204 (மா. அ. பு. வி. துறை, லண்டன், டிசம்பர், 1962), அட்டவணை 133.

ஆண்டில் பிரிட்டனின் புலஞகா வாணிபம் பாதக நிலையில்தான் இருந்தது. இதற்குக் காரணம் பிரிட்டன் வெளிநாடுகளில் செலவு செய்துவந்த போர்த்துறைச் செலவுகள் (military expenditure) அதிகரித்தமையும், அதனுடைய வாணிபக் கப்பல்களின் ஈட்டங்கள் குன்றியிருந்தமையுமேயாகும். ஆயினும், 1954ஆம் ஆண்டின் போது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வெளிநாட்டுச் செலவுகள் (overseas expenditure) கணிசமான அளவிற்குக் குறைக்கப்பட்டது (அயல்நாட்டுச் செலுத்துநிலையில் இன்றும் அச் செலவு ஒரு கணிசமான சுமையாக இருப்பினும்); அதே சமயத்தில் அதனுடைய வாணிபக் கப்பல்கள் (merchant marine), போருக்கு முன்னர் இருந்த நிலையான 'ஒரு முக்கியப் பன்னாட்டுக் கடத்தி' (a major international carrier) என்னும் நிலையை மீண்டும் பெற்றுத்தந்தன. மற்றொரு முக்கியமான முன்னேற்றம், அயல் நாடுகளில் செயல் படும் பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பெனிகளின் உரிமைத் தொகை ஈட்டங்களில் (the royalty earnings of the British oil companies abroad) அதிகரிப்புக் காணப்பட்டது; அட்டவணையில் இந்த இனங்கள் 'பிற' (other) எனக் காட்டப்பட்டுள்ளன. இந்தத் தலைப்பில் பிரிட்டிஷ் பாங்குகளின் பிற நாட்டு ஈட்டங்களும் (the foreign earnings of the British Banks), காப்புறுதிக் கம்பெனிகள் (insurance companies) வானூர்திக் கம்பெனிகள் (air lines) ஆகியவற்றின் ஈட்டங்களும் இடம்பெற்றுள்ளன.

1946-54 ஆகிய ஆண்டுகட்கிடையேயிருந்த இத்தகைய முழுவதும் தழுவிய செலுத்துநிலையில் ஏற்பட்ட மாற்றத்திற்கு மூலதனக் கணக்கே (capital account) பெரிதும் காரணமாகும். 1946ஆம் ஆண்டில் நடப்பு இருப்பில் £ 300 மில்லியன் அளவிற்கு இருந்த பற்றுக்குறையானது நெடுங்காலக் கடன் வாங்குவதால் தான் சரிக்கட்டப்பட்டது. இத்தகைய கடன்கள் குறிப்பாக, ஐக்கிய அமெரிக்கா (Uuited States), கனடா போன்ற நாடுகளினின்றும் வாங்கப்பட்டன; பிரிட்டன் தனக்கு அயல்நாடுகளில் சொந்தமாக உள்ள சொத்துகளை (British assets abroad) விற்றதன் மூலமும் இப்பற்றுக் குறையைச் சரிக்கட்டுவதற்கு நிதி திரட்டப்பட்டது. 1954ஆம் ஆண்டில் பிரிட்டன் தன்னுடைய நடப்பு உபரியைத் (current surplus) தன்னுடைய அயல் நாட்டு மாற்றுக் காப்புகளையும் (its reserves of foreign exchange), அதனுடைய நெடுங்காலச் சொத்துக்களையும் (long-term assets) அதிகரித்துக் கொள்வதற்காகப் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. இந்

நிகழ்ச்சியானது ஓர் உண்மையை வலியுறுத்தித் தெளிவுபடுத்தியது. அதாவது, பிரிட்டன் சரிவர வளர்ச்சியடையாத குடியேற்ற நாட்டுரிமைப் பகுதிகள் உள்ளிட்ட அயல்நாடுகளிலும் இன்னும் வேறு எங்கு வேண்டுமாலுைம் (in overseas countries, including under developed countries in the common wealth and elsewhere) முதலீடு செய்யவேண்டுமாயின், அது இறக்குமதி செய்வதைவிட அதிகமான அளவு பண்டங்களையும் பணிகளையும் ஏற்றுமதி செய்தாக வேண்டுமென்பதாகும். எனவே, பிரிட்டிஷ் பொதுமக்கள் ஓர் உண்மையை நன்கு உணர வேண்டும். மற்ற நாடுகளின் வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டுமெனில், தங்களது நடப்பு நுகர்ச்சிக்கான வருமானத்தின் (income in current consumption) ஒரு பகுதியை அல்லது உள்நாட்டு முதலீட்டின் ஒரு பகுதியைத் தியாகம் செய்யவே வேண்டும்.

1955ஆம் ஆண்டு முதற்கொண்டே பிரிட்டனின் அயல் நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்பட்ட இத்தகைய சீர்குன்றிய நிலைக்கான காரணத்தை 17ஆம் அட்டவணையிலுள்ள புள்ளி விவரங்கள் தெற்றெனக் காட்டுகின்றன. இத்தகைய சீர்கேட்டிற்குக் காரணம், நடப்பு உற்பத்தியில் உள்நாட்டுத் தேவையானது பெரும் பகுதியையும் கோரியதேயாகும்; நுகர்ச்சிக்கும் உள் நாட்டு முதல் ஆக்கத்திற்கும் (domestic capital) மிக அதிகமான சாதனங்கள் (too many resources) பயன்படுத்தப் பட்டு வந்துள்ளன. 1950ஆம் ஆண்டினையடுத்த பத்தாண்டுகளின் பிற்பகுதியில் (during the later 1950's) வாணிப நிலையில் கணிசமான அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிராது போனால்—இந்த முன்னேற்றம் 16ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது—புலனாகும் வாணிபத்தின் நிலையில் உண்மையில் பெரியதொரு விளைவு ஏற்பட்டிருக்கும். இருப்பினும், பிரிட்டனின் கப்பற் கட்டண ஈட்டங்களில் ஏற்பட்ட குறைவும் (the decline in Britain's shipping earnings) வெளிநாடுகளில் அரசாங்கத்தின் அதிகரித்த செலவும் (the increased government expenditure overseas) முக்கியமான செயல் புரிவனவாக இருந்தன. எனினும், பிரிட்டனின் நடப்பு வாணிபநிலையைச் சித்திரிப்பதற்கு 1961ஆம் ஆண்டைக் காட்டிலும் 1954ஆம் ஆண்டே தகுதியானது என்று நம்புவதற்குத் தகுந்த காரணங்கள் பல உள்ளன. பிரிட்டனின் நடப்புச் செலுத்து நிலையானது (current payments balance) 1954ஆம் ஆண்டில் £ 155 மில்லியன் உபரியாக (surplus)

இருந்த நிலையொழிந்து 1961ஆம் ஆண்டில் £ 77 மில்லியன் பற்றுக்குறையாக (deficit) இருந்த, நிலையானதொரு நிகழ்ச்சியானது, இன்னும் அதன் வெளிவகையுடைமையில் (external solvency) நிலையானதொரு நிலைமை ஏற்படவில்லையென்பதனையே தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. ஆகவே, செலுத்து நிலையிலுள்ள பற்றுக்குறையினைப் போக்குவதற்கு ஏற்ற நிவாரண நடவடிக்கைகள் (remedial measures) எவை எனக் கூறுவது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது.

4. மதிப்புக் குறைப்பு (devaluation), பணவடிப்பு (deflation), இறக்குமதிக் கட்டுப்பாடுகள் (import controls)

முன் அத்தியாயத்தில் நிலையான மாறு (fixed), மாறும் (variable) மாற்று வீதங்களின் (exchange rates) தராதர நன்மைகளும் தீமைகளும் நெடிது ஆராயப்பட்டன. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது நவீன காலத்து உலகத்திற்கு (modern world), மாறு மாற்றுவீதங்களுக்கு எதிராகக் கூறப்படும் வாதமே மிகவும் வலிமை மிக்கதாகக் காணப்படுகிறது. அயல்நாட்டுச் செலுத்து நிலையிலுள்ள பற்றுக்குறையானது (deficit) பணவடிப்புக் கைக்கோளைக் (policy of deflation) கடைப்பிடிப்பதனுல் மட்டுமே சீர்செய்யப்படும் என்ற நிலையிருக்குமானுல், மாறு வீதங்கள் இத்தகைய கைக்கோளிற்குத் தடைக் கற்களாக இருக்குமாதலால், அவைகள் தற்காலத்திற்கு ஒவ்வாதனவாகவே கருதப்படுகின்றன. ஆயினும், 1949ஆம் ஆண்டின்போதும் அதற்குப் பிறகும் ஏற்பட்ட அனுபவமானது, இத்தகைய கைக்கோளிற்கு மாருக உள்ள மற்ருெரு கைக்கோளான செலாவணி மதிப்பிறக்கத்தில் (currency devaluation) உள்ள குறைபாட்டையும் ஆபத்துகளையும் நாட்டிற்கு நன்கு உணர்த்தியது. அந்த ஆண்டில், பிரிட்டனும் இன்னும் பிற நாடுகளும் குறிப்பாகக் கடுமையான செலுத்துநிலை இடர்ப்பாடுகளைப் பெற்றிருந்தபடியால், அவைகள் தங்களது செலாவணிகளை மதிப்புக் குறிப்புச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பவுண்டு ஸ்டெர்லிங்கும் (the pound sterling) இன்னும் மற்றச் செலாவணிகளும் (other currencies) ஐக்கிய அமெரிக்காவின் டாலருக்கு நிகராக அவற்றின் மதிப்பில் 30 சதவீதம் மதிப்புக் குறைப்புச் செய்யப்பட்டன.

ஆனுல், இத்தகையதொரு கைக்கோளானது, ஏற்கெனவே வலியுறுத்திக் கூறியதுபோன்று, அயல்நாட்டு மாற்றங்காடியில்

(foreign exchange market) விரும்பத்தகாத நிலைபேறின்மையைப் (undesirable instability) புகுத்து நின்றது. 1949ஆம் ஆண்டிலும் அதற்குப் பிறகும் ஏற்பட்ட அனுபவமானது மாறும் மாற்று வீதங்களைப் (varying exchange rates) பின்பற்றும் கைக்கோளில் உள்ள மற்றக் குறைபாடுகளையும் நன்கு வலியுறுத்தி உணர்த்தியது. முதலாவது குறைபாடு யாதெனில் ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகியவற்றின் தேவை நெகிழ்ச்சிகள் (elasticities of demand) சம்பந்தமாக மிகவும் நம்பிக்கை தோய்ந்த எடுகோள்களை (implicit assumptions) இக் கைக்கோள் கொண்டுள்ளது. மதிப்புக் குறைப்பானது (devaluation) ஒரு நாட்டின் ஏற்றுமதிகளை நிச்சயமாக மிகவும் மலிவானவைகளாகச் (cheaper) செய்துவிடும். ஆனால் அது, நாட்டின் மொத்த ஏற்றுமதி ஈட்டங்களை (the contry's total export earnings) அதிகரிக்கும். இவ்வாறு ஈட்டங்கள் அதிகரித்தல் ஏற்றுமதி செய்யப்படும் பண்டங்களின் கணியம் (the quantity of goods exported) ஓர் அதிகமான விகிதத்தில் (in a greater proportion) அதிகரிக்கும்போதுமட்டுமே ஏற்படும்—அதாவது, அதனுடைய ஏற்றுமதிகளுக்கான தேவையின் நெகிழ்ச்சி (elasticity of demand for its exports) ஒன்றுக்கும் மேலாக அதிகரிக்கும்போதுமட்டுமே (is greater than unity) இவ்வாறு அதிகரிக்கும். ஏற்றுமதிகளின் விலைகள் 30 சதவீதம் குறைந்தும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் கணியம் (the quantity exported) 20 சதவீதம் அதிகரித்தும் காணப்படுமானால், ஏற்றுமதியின் மொத்த ஈட்டங்கள் (total export earnings) 16 சதவீதம் குறையும்; எனவே, மதிப்புக் குறைப்பானது (devaluation) நாட்டின் மொத்த ஏற்றுமதி ஈட்டங்களைக் குறைப்பதாக இருக்கும். இதைப்போன்றே மதிப்புக் குறைப்பானது இறக்குமதிகளின் விலைகளை அதிகரிக்கும். ஆனால், இறக்குமதிகளுக்கான தேவையின் நெகிழ்ச்சி, கணிசமான அளவில் ஒன்றுக்கும் அதிகமாக் அதிகரித்திருக்கும்போதுமட்டும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் கணிசம் (the quantity of goods imported) கணிசமான அளவிற்குக் குறையும். எப்படியாயினும், பிரிட்டனைப் போன்றதொரு நாட்டிற்கு, சம்பந்தப்பட்ட இந் நெகிழ்ச்சிகள் (relevant elasticities) மதிப்புக் குறைப்பின் விளைவாக, குறிப்பிடும்படியான முன்னேற்றத்தை விளைவிப்பதாகவே உள்ளன.

மதிப்புக் குறைப்பினால் ஏற்படக்கூடிய மற்றுமோர் இடர்ப்பாட்டினை நோக்குவோம். மதிப்புக் குறைப்பினால் உள்நாட்டு

உற்பத்தியாளர்கள் (home producers) இறக்குமதி செய்யும் பொருள்களின் விலை அதிகரிக்கும். இவ்வாறு அவர்கள் இறக்குமதி செய்யும் பண்டங்கள் அவர்கள் ஏற்றுமதி செய்வதற்கான செய்பொருள்களை (manufactured goods) உற்பத்தி செய்வதற்குத் தேவையான கச்சாப் பொருள்களாகவும் இருக்கக்கூடுமாதலால் ஏறுமதிப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கக்கூடும். எனவே, மதிப்புக் குறைப்பினுல் கிட்டக்கூடிய நலனை ஏற்றுமதிகளின் விலைகளில் ஏற்படக்கூடிய இவ்வதிகரிப்பு, தன்னியக்கமாகக் (automatically) குறைத்துவிடக்கூடும். கடைசியாக, எல்லாவற்றிலும் முக்கியமானதொரு விளைவினைப் பார்ப்போம். மதிப்புக் குறைப்புச் செய்யப்படுவதால், இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பானது, பொதுவான வாழ்க்கைச் செலவில் (general cost of living) குறிப்பிடும்படியானதொரு விளைவை உண்டுபண்ணுவதால், கூலிகள் அதிகமாகத் தரப்படவேண்டுமென்னும் கோரிக்கைகளை (demands for wage increases) உடனடியாகக் கிளப்புகிறது. இது, நாம் நன்கறிந்துள்ள, கூலி-விலை திருகு சுருளுக்கு (wage-price spiral) முற்ருய்ப்பு வைப்பதாக இருக்கும்; மேலும், இது உற்பத்திச் செலவுகள், விலைகள் ஆகியவற்றின் பொதுவான விலைமட்டத்தை (a general rise in the level of costs and prices) அதிகரிக்கும். இவ்வதிகரிப்பானது மதிப்புக் குறைப்பால் (devaluation) அயல்நாட்டு அங்காடிகளில் கிடைக்கும் ஆரம்பான நன்மையைச் சரிக்கட்டுமளவிற்கு, ஏன், அந் நன்மையைப் போக்கியே தீமையையுண்டு பண்ணுமளவிற்கும், அதிகமான பலனை விளைவிக்கக்கூடும்.

ஐக்கிய அரசாங்கம் (United Kingdom), மேற்கு ஐரோப்பாவிலுள்ள இன்னும் பிற நாடுகள் ஆகியவற்றின் போருக்குப் பிந்திய காலத்து அனுபவமானது (post-war experience), மதிப்புக் குறைப்புக் கைக்கோளினுல் ஏற்படக்கூடிய இத் தீமைகள் யாவற்றையும் தெளிவாகச் சுட்டிக்காட்டியது. 1949ஆம் ஆண்டில் மதிப்புக் குறைப்புச் செய்யப்பட்ட பிறகும்கூட, 1951ஆம் ஆண்டில் பிரிட்டன் மிகக் கொடூரமான செலுத்துநிலை நெருக்கடியைச் (a balance of payments crisis of near severity) சமாளிக்க வேண்டியிருந்தது. இதற்குக் காரணம் இந்த இரண்டாண்டுகளுக்கிடையே கூலிகளிலும் (wages) விலைகளிலும் (prices) ஏற்பட்ட அதிகரிப்பானது மதிப்புக் குறைப்பின் விளைவுகளை (in effects of devaluation) கணிசமான அளவிற்குப் போக்கின. இவ்வாறு

கூலிகளும் விலைகளும் மதிப்புக் குறைப்பினுல் அதிகரிக்கப் பட்டன. மதிப்பிக் குறைப்பின் விளைவுகள் செயலற்றுப் போவ தற்கு இதுவே பெரிதளவும் காரணமாக இருந்தது. ஆக, பண வடிப்பின் (deflation) மூலம் வருமான மட்டங்களில் செய்யப் படும் சரிசெய்தல்கள் (adjustments) சாத்தியமில்லை என்னும் நிலை ஏற்படும்போதும், மதிப்புக் குறைப்பானது (devaluations) இத் தகைய திட்டவட்டமான தீமைகளைக் கொணரும்போதும், செலுத்து நிலையில் ஏற்படும் பற்ருக்குறைகள் சரிசெய்யப்படுவது எவ்வாறு?

பொதுவாகக் கூறுமிடத்து, அத்தகையதொரு பிரச்சினையை தீர்வுகாண முடியாததொன்று எனவே ஒப்புக்கொள்ளவேண்டும். ஒரு நாடானது, செலுத்து நிலையில் பற்ருக்குறையை அடைந் துள்ளபோது, அது கடினமாகவும், மகிழ்ச்சியற்றதொன்ருகவும் இருப்பினும், உள்நாட்டு விலையினைச் சரிசெய்வதற்கு ஏதாவ தொரு வழியினைக் கண்டுபிடித்தேயாகவேண்டும்; மாற்று வீதத்தை மாற்றுவதால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை அது ஏற்க விரும்பவில்லையாயின் இது ஒன்றே சிறந்த வழியாகும். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இவ் வழியானது ஏதோ சிதைவு வந்தகாலத்து, தாறுமாருக எடுக்கப்படும் முடிவுபோன்று தோன்றினுலும் (a verdict of despair) இது அத்தகைய முடிவல்ல. உலகம் முழுவதுமே பண வருமானங்கள், விலைகள் ஆகியவற்றின் மேல் நோக்கிய போக்குத் தொடர்ந்து நீடிக்கும்வரையிலும்—தற்சமயத்தில் இத்தகைய போக்கிற்கு எவ்வித அறிகுறியும் இல்லை—ஒரு கடனுளி நாடானது (debtor country) தனது விலை மட்டத்தை மாருமல் நிலையானதாக வைத்திருப்பதன்மூலம் (by simply holding its price level constant) தனது உற்பத்திச் செலவுகளை பழைய மட்டத்திற்குக் கொண்டுவர முடியும். அதே சமயத்தில் கடனீவோர் நாடுகள் (creditors countries) பண வருமானங்களின் மட்டம் (the level of money incomes) பூரண மாகக் குறைக்கப்படுவதற்கான தேவையேதுமின்றி, விலையானது அதிகரித்துக்கொண்டே செல்லும். இதனுல் ஏற்றுமதிகள் ஒப் பீடாக மலிவானவைகளாக ஆக்கப்படும். உதாரணமாக, உலக விலைகள் பொதுவாக 10 சதவீதம் அதிகரித்துள்ளபோது, ஒரு நாடு தனது வருமானங்கள் (incomes), விலைகள் (prices) ஆகிய வற்றை நிலையான மட்டத்தில் வைத்துக்கொண்டிருக்கிறது எனக் கொள்வோம். அப்படியாயின், அதனுடைய ஏற்றுமதிப்

பொருள்கள், உலகத்தின் மற்றப் பகுதிகளின் ஏற்றுமதிப் பொருள் களைக்காட்டிலும், 10 சதவீதம் மலிவானவைகளாக இருக்கும். அதே சமயத்தில் அதனுடைய ஏற்றுமதிப் பொருள்களில் உள்ளபடிக்கு எவ்வித விலை இறக்கமும் ஏற்படாது. இதைப் போன்றே, பெரும்பாலான நாடுகளில் உற்பத்திச் செலவுகளின் மேல்நோக்கிய போக்கு (upward trend) நிலையானதாக இருக்கும் போது, அந் நாட்டின் ஆக்கத்திறன் (productivity) அதிகரிக்கு மானல், உற்பத்திக் காரணிகளின் வருமானங்களில் அதிகரிப்பு ஏற்படுவதைத் தடுப்பதன் மூலம் உற்பத்திச் செலவுகளைக் குறைக்க இயலும்—இதன் காரணமாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் சராசரி ஓர் அலகின் உற்பத்திச் செலவானது, பணக்கூலிகள் (money wages), இலாபங்கள் (profits) ஆகிய வற்றின் நிர்ணய மதிப்பில் (absolute terms) எவ்விதக் குறைப்பு மின்றிக் குறைக்கப்பட இயலும். ஆனல், ஒன்று உலகத்தின் மற்ற நாடுகளில் விலைகள் அதிகரித்துச் செல்லும்போது விலைகளின் நிலைபேற்றினைக் (stability of prices) கடைப்பிடித்தலென்பதோ அல்லது ஆக்கத்திறனை (productivity) அதிகரிப்பதென்பதோ மிகவும் கடினமானதொரு செயலாக இருக்கும். மற்றுமொன்றை யும் ஈண்டு நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். இவ்வாறு விலைகளின் நிலைபேற்றினைக் கடைப்பிடிப்பதில் அல்லது ஆக்கத்திறனை அதி கரிப்பதில் இதுவரை எந்த ஒரு நாடும் வெற்றி கண்டுள்ளதென் பதற்கு தகுந்த ஆதாரமில்லை என்பதனை ஒப்புக்கொண்டே யாகவேண்டும். இருப்பினும் நிர்ணயிக்கப்பட்ட வருமானங்களைக் (prices in absolute terrns) குறைக்கின்ற பணியினைக்காட்டிலும், மேற்சொல்லப்பட்ட செயல் நடைமுறைக்கு மிகவும் நெருங்கிய தாகவேயுள்ளது; பன்னாட்டு வாணிபத்தில் நியாயமான அளவிற் குத் தன்னுரிமையையும் (freedom) நிலைபேற்றினையும் (stability) மீண்டும் நிலைநிறுத்த வேண்டுமாயின் இத்தகையதொரு செய லானது நிறைவேற்றப்படவே வேண்டும்.

இத்தகைய கைக்கோள்களில் (policies of the kind)—புறப் பணவீக்கம் (external inflation) அல்லது அதிகரித்துச்செல்லும் ஆக்கத்திறன், உள்ளதொரு சமயத்தில் விலை நிறைபேற்றின் மூலம் (price stability) ஒரு பற்ருக்குறை நிலையைச் சரிசெய்த லில்—இருக்கின்ற இடர்ப்பாடு யாதெனில் இவற்றில் வெற்றி காண்பதற்கு, கணிசமான அளவிற்குக் காலம் பிடிக்கும். உலக விலைகள் (world prices) ஆண்டொன்றுக்கு 4 அல்லது 5 சதவீதம்

அதிகரிக்கும்போது, அல்லது ஆக்கத்திறனானது (productivity) 2 அல்லது 3 சதவீதம் அதிகரித்துச் செல்லும்போது, விலை நிலை பேற்றினைக் கடைப்பிடிக்கும் நாட்டின் உற்பத்திச் செலவுகள் உலகத்திலுள்ள மற்ற நாடுகளின் உற்பத்திச் செலவுகளுக் கொப்பீடாக (in relation to the costs of the rest of the world) மிக மெதுவான வீதத்தில் (at a pretty slow rate) குறையும். இத்தகையதொரு செயல் முறையானது செலுத்து நிலைப் பற்றுக் குறையைக் கணிசமான அளவிற்குப் போக்குவதற்குப் பல ஆண்டுகளாகக்கூடும். ஒரு நாட்டின் மாற்றுக் காப்புகள் (exchange reserves) அந் நாட்டை விட்டு வெளியேறும் மாற்றுகளைச் சரிக்கட்ட இயலாதவாறு மிகவும் குறைவாக இருந்து (too small to sustain the out flow) அத்தகையதொரு நிலை நீடிக்குமாயின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் (import controls)—குறிப்பிட்ட இறக்குமதிப் பொருள்களின்மீது நேரடியான கணியத்தடைகளை (quantitative restrictions) விதிப்பதன்மூலமோ அல்லது மாற்றுக் கட்டுப்பாட்டுச் சட்டங்களைக் (exchange control measures) கையாளுவதன்மூலமோ—தோற்றுவிக்கப்படும்.

இத்தகைய கட்டுப்பாடுகளின் நன்மை யாதெனில், அவைகள் ஒரு நாடு நடப்புக் காலத்தில் தான் எவ்வளவு இறக்குமதி செய்தல் இயலுமோ, அந்த அளவிற்கே இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தித் தருவனவாக உள்ளன. மேலும், அவ்வாறு அனுமதிக்கப்படும் இறக்குமதிகளும் சமூகம் முழுவதற்கும் மிக அதிகமான நன்மையைப் பயப்பனவாக இருக்கும். போர்க்காலத்தில் அயல்நாட்டுச் செலாவணிகள் போர் முயற்சிகளுக்குப் (war efforts) பயன்படுத்தப்படுதல் போல, சமாதான காலத்தில் நேரடிக்கட்டுப்பாடுகள் (direct controls) அயல்நாட்டுச் செலாவணிகளின் குறைவான அளிப்பை, போகப் பொருள்களை (luxury goods) வாங்குவதற்குப் பயன்படுத்துவதைக்காட்டிலும் இன்றியமையாத உணவுப் பொருள்களையும் (essential food stuffs) கச்சாப் பொருள்களையும் (raw materials) வாங்குவதற்கே பயன்படுத்துவதை நேரடிக் கட்டுப்பாடுகள் வலியுறுத்துகின்றன. மாற்றுக் கட்டுப்பாடானது (exchange control) பிரிட்டனிலும், இன்னும் பிற இடங்களிலும் டாலர் எல்லையினின்றும் (dollar area), நாட்டின் பொருளாதார முறை முழுவதற்குமே துணையாக உள்ள இன்றியமையாப் பொருள்களை (essential goods) வாங்குவதற்குமட்டுமே செல

வானது (expenditure) கட்டுப்படுத்தப்படுகிறது; இத்தகைய பொருள்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களால் அல்லது டாலர் எல்லேகளல்லாத இடங்களினின்றும் இறக்குமதியாகும் பொருள்களால் ஈடு செய்ய முடியாதனவை யாகவும் இருக்கும்.

நாட்டின் பொருளாதார முறையில், மறு சரிசெய்தலே (re-adjustment) ஏற்படுத்தும் ஒரு குறுங்காலத் திட்டமாக (short-term measure) இறக்குமதிக் கட்டுப்பாடுகள் (import controls) பயன்படுகின்றன. கிடைப்பருமையாகவுள்ள அயல்நாட்டுச் செலாவணிகளே கெடில்லாக் (cadillac) போன்ற விலையுயர்ந்த கார்களே வாங்குவதிலும், நைலான் பின்னல் காலுறைகளே (nylon stockings) வாங்குவதிலும் (கோதுமையின் இருப்பு மிகக் குறைவாக இருந்து, ரொட்டிப் பங்கீடு செய்யப்பட வேண்டிய தொரு சூழ்நிலேயில், அல்லது கச்சாப் பொருள்கள் இன்மையால் நாட்டின் தொழில் இயங்காவண்ணம் தடைப்படும் சூழ்நிலேயில்) விரயம் செய்வதைத் தடுப்பதற்கு, இறக்குமதிக் கட்டுப்பாடுகளேத்தவிர வேறு சிறந்த சாதனம் இல்லேயென்றே கூறலாம். ஆயினும், பொருளாதார முறையில், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் (import controls) நிரந்தர அம்சமாக செய்யப்படுமாயின், முன்னர் தொழிற் பாதுகாப்புபற்றி ஆராய்ந்தபோது கூறிய தீமைகள் யாவும் ஏற்படும். குறிப்பாகச் சொல்லவேண்டுமாயின், அவைகள் உள்நாட்டுத் தொழில்களின் திறமையின்மையை வளர்ப்பனவாக இருக்கும். அயல்நாடுகளின் பொருள்கள் நாட்டிற்குள் வந்து போட்டியிடுமானுல், உள்நாட்டுத் தொழில்கள் (home industries) தங்களது உற்பத்திச் செலவுகளே மிகக் குறைந்தபட்சமாக வைத்திருப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும். எவ்விதத்துப் பார்க்கிலும், கட்டுப்பாடுகள் (controls) பற்ருக்குறையானது (deficit) ஏற்படுவதற்கு அடிப்படையாகவுள்ள காரணங்களேப் போக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளதொரு கைக்கோளுக்குக் (policy) கட்டுப்பாடுகளேத் (controls) தவிர்த்து வேறு எவையும் பொருத்தமுடையனவல்ல. இறக்குமதிகளேக் குறைப்பதில் (in reducing imports) அவை வெற்றிகாணும் வரையிலும், வேலே நிறைவு, (full employment) உள்ளதொரு சமயத்தில், உள்நாட்டு அங்காடியில் கிடைக்கக்கூடிய பண்டங்களின் அளிப்புக் (supply of goods available in the home market) குறைக்கப்படும்; இதன் காரணமாக, அப் பண்டங்களுக்கான தேவையானது

திண்மை பெறும். ஆக, நாடானது எந்த அளவிற்குப் பொருள்களை அளிக்க இயலுமோ, அந்த அளவிற்கு உள்நாட்டுத் தேவையினை (internal demand) நேரடியாகவும் நேர்மையாகவும் கட்டுப்படுத்துதலை நோக்கமாகக் கொண்டுள்ளதொரு கைக்கோளுக்குக் கடைசிப் புகலிடமாக உள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகள்தான் என்பதிலும் அவைகளுக்குப் பதிலிப் பொருளாக (substitute) வேறு ஒன்றும் இல்லையென்பதிலும் ஓரளவிற்கு நியாயம் உள்ளதென்றே கூறவேண்டும்.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

Harrod, 'International Economics', Chs. VI—VII.

Tew, 'International Monetary Co-operation', Chs. III—IV.

Meade, 'Planning and the Price Mechanism', Ch. V.

W. A. Lewis, 'The Principles of Economic Planning', (Dobson, London, 1948), Ch. V.

32. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம்
(European Economic Community)

1. **போருக்குப் பிந்திய காலத்துச் சூழ்நிலை** (The Post-War Background).

ஐரோப்பாவின் நவீனகால வரலாற்றை ஆராய்வோமாஞல், அதனுடைய பல தன்னுரிமையான நாடுகள் அதிகமான அளவில் அரசியல், பொருளாதார ஐக்கியத்தை அடைய பலமுறையும் முயன்றமை நன்கு தெரியவரும். போரின்போது அந் நாடுகள் ஒவ்வொன்றும் மற்றென்றின்மீது விதித்திருந்த தடைகளாலும், கொண்டிருந்த பகைமையாலும் ஏராளமான அளவிற்கு மனித இழப்புகளும் பருப்பொருளியலான இழப்புகளும் (human and physical losses) ஏற்பட்டன. இவ்விழப்புகளே அவைகளிடம் ஒரு ஒற்றுமையுணர்ச்சி கலந்த அரசியல் நோக்கத்தை எழுப்பியது. ஆக, இரண்டாவது உலகப் போரினல் விளைந்த அளவிட முடியாத இன்னல்களும், போருக்குப் பின்னர் ஐரோப்பாவின் பாதுகாப்பற்ற நிலையும் (insecurity), மேற்கு ஐரோப்பாவிலுள்ள வெவ்வேறுன நாடுகளை ஒருவகை அரசியல் ஐக்கியத்தை (political unity) ஏற்படுத்திக்கொள்ளும் முயற்சிகளை மேற்கொள்ளுமாறு தூண்டின.

ஆயினும், ஐரோப்பாவில் போருக்குப் பிந்திய காலத்தில் ஒரு அரசியல் அல்லது பொருளாதார ஒன்றிப்பு (a political or economic union) ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகளுள், ஒன்றைத் தவிர்த்து, மற்றவை யாவும் பயனற்றுப் போயின. விதிவிலக்கான அந்த முயற்சியே, பெல்ஜியம் (Belgium), லக்ஸம்பெர்க் (Luxemberg). நெதர்லாந்து (Netherlands) ஆகிய நாடுகளுக்கிடையே 1943, 1946 ஆகிய இவ்விரு ஆண்டுகட்கிடையே

படிப்படியாகச் செய்துகொள்ளப்பட்ட உடன்பாடாகும் (agreement). இந் நாடுகள் தங்களுக்கிடையே ஒரு சுங்கச் சமுதாயத்தை (a customs community) அமைத்துக் கொள்ளவும் அதன் வழியாக முழுமையானதொரு பொருளாதார ஒன்றியத்தை (a full economic union) ஏற்படுத்திக்கொள்ளவும் உடன்பாடு செய்து கொண்டன. இவ்வாறு, ஐரோப்பிய ஐக்கியத்திற்கான முயற்சிகளில் பெனிலக்ஸ் (Benelux) என்றழைக்கப்படும் இம் முயற்சி ஒன்றுதான் உருப்பெற்றெழுந்தது. பொதுவாக, நெடிது வந்த மரபொழுக்கமாகிய (long tradition) தன்னுரிமையான அரசியல் அரசுரிமையும் (independent political sovereignty) பல தலைமுறைகளாக நாடுகளுக்கிடையே யிருந்த பகைமையும், அவ்வப்போது காலத்திற்கேற்பச் செய்துகொள்ளும் அரசியல் ஐக்கியமென்னும் ஒருவித குறிக்கோளான திட்டங்களால் (somewhat idealistic plans) தீமை நிகழும் என அச்சுறுத்தின.

ஆயினும் 1948ஆம் ஆண்டுக்குப் பிறகு, ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு அமைப்பு (organisation for European Economic Co-operation)—ஐ. பொ. கூ. அ. (O. E. E. C.) ஏற்படுத்தப்பட்ட பிறகு இது வகையில் கணிசமான அளவு முன்னேற்றம் காணப்பட்டது. இந்த அமைப்பின் பெயர் பொருளாதாரக் கூட்டுறவும் பெருக்கத்திற்குமான அமைப்பு (Organisation for Economic Co-operation and Development [O, E. C. D.]) என்று 1961ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. இந்த அமைப்பில் மேற்கு ஐரோப்பாவிலுள்ள பதினேழு நாடுகள் (பின்னர், பதினெட்டு நாடுகள்) அங்கம் வகித்தன. மேலும், இதில் ஐக்கிய அமெரிக்காவும் (United States) கனடாவும் (Canada) இணை அங்கத்தினர்களாக ஐரோப்பிய மீட்சித் திட்டத்தை (மார்ஷல் திட்டத்தின் கீழ்) செயற்படுத்தும் நோக்கத்திற்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஐரோப்பிய மீட்சித் திட்டம் என்னும் இத் திட்டத்தின் கீழ், ஐக்கிய அமெரிக்காவானது, ஐரோப்பியப் பொருளாதாரச் சீரமைப்பிற்கு உதவும் பொருட்டு (construction of the European economy), தொடர்ந்து ஆண்டு தோறும் ஏராளமான அளவு டாலர்களை உதவிக் கொடைகளாக (a series of large annual dollar grants) வழங்கியது. இந்த அமைப்பின் காரணமாக ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு அமைப்பில் (O.E.E.C.) அங்கம் வகித்த நாடுகள் தங்களுக்கிடையே இருந்த வாணிபத் தடைகளைச் சிறிது சிறிதாகத் தளர்த்தி, தடைகளை நீக்கும் ஒரு

திட்டத்தைச் செயற்படுத்த முனைந்தன—அதாவது, ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டுறவு அமைப்பில் அங்கம் வகித்த நாடுகளி லிருந்தும் இறக்குமதியாகும் இறக்குமதிப் பொருள்களின் மீதுள்ள கணிசத் தடைகளை (quantitative restrictions) அவை ஒன்று சேர்ந்து நீக்கின. 1956ஆம் ஆண்டில், இத்தகையதொரு திட்டத்தால் ஐ. பொ. கூ. அ. (O. E. E. C.) நாடுகளுக்கிடையே நடைபெற்று வந்த வாணிபத்தில் 90 சதவீதம் தடைகள் நீங்கிய தாக இருந்தது.

எனவே, இத்தகையதொரு திட்டமானது ஐரோப்பியப் பொருளாதார முறையானது (European economy) வாணிபத் தடைகளை உடைத்தெறிந்து முன்னேறுவதை நன்கு உணர்த் திற்று. ஆயினும், இத் திட்டமானது சிதறுண்டு கிடந்த பல்வேறு பொருளாதார முறைகளையும் ஒருங்கிணைக்கும் செயலை நோக்கிச் செல்லவில்லை; இத்தகைய ஒருங்கிணைப்புதான் உயர்ந்தபட்ச நிலைபேற்றினையும் (maximum potential stability) சுபிட்சத்தை யும் (prosperity) அளிக்கும் ஒரே சாதனம் என்று ஐரோப்பாவி லுள்ள பெரும்பாலான நாடுகள் கருதின. முழுமையானதொரு அரசியல் ஐக்கியத்தை நோக்கிச் செல்லும் எந்த ஒரு முயற்சியும் நடைமுறைக்கொவ்வாததாக இருக்கின்ற காரணத்தால், ஐரோப்பாவின் ஒருங்கிணைப்பு (integration) இயக்கத்தின் தலைவர் களின் பெரு முயற்சியின் விளைவாக 1952ஆம் ஆண்டில், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கு மிடையே 'உற்பத்தித் துறைக்கு உற்பத்தித் துறை' (sector to sector) பிணைப்புத் தொடர்பினை ஏற்படுத்தும் திட்டம் மெதுவாக ஆரம்பிக்கப்பட்டது. இதன் விளைவாக ஐரோப்பிய நிலக்கரி, எஃகு சமுதாயம் (European Coal and Steel Community)—ஐ. நி. எ. ச. (E. C. S. C.)—ஏற்படுத்தப்பட்டது. இதன்படி ஃபிரான்சு (France), ஜெர்மனி (Germany), இத்தாலி (Italy), பெனிலக்ஸ் நாடுகள் (Benelux countries) ஆகிய ஆறு நாடுகளும் தமது நிலக்கரி, எஃகு தொழில்களை ஐரோப்பியப் பொதுச் சபைக்குக் கடமைப்பட்ட ஒரு தன்னுரிமை பெற்ற உயர்மட்ட மன்றத்தின் (an independent high authority responsible to a Europeon Parliament) ஆளுகையின்கீழ் வைத்தன; பொதுச்சபை யானது இத் திட்டத்தில் பங்கு பெறும் ஆறு நாடுகளின் அங்கத் தினர்களையும் கொண்டதாக இருந்தது. நிலக்கரி, எஃகு ஆகிய இவ்விரண்டினுக்கு இந்த ஆறு நாடுகள் முழுவதற்கும் ஒரே அங்

காடி (a single market) ஏற்படுத்தப்பட்டது; ஆறு தனித்தனி அங்காடிகளாகவும், சில சமயங்களில் ஒன்றின் எல்லையில் மற்றொன்று செயற்படுவதாகவும் இரு அங்காடிகள் ஒரே எல்லையில் செயற்படுவதாகவும் இல்லாமல், ஆறு நாடுகளுக்கும் சேர்ந்து ஒரே அங்காடி ஏற்படுத்தப்பட்டது.

ஐரோப்பிய நிலக்கரி, எஃகு சமுதாயம் ஆரம்பிக்கப்படுவதற்கான சமரசப் பேச்சுகள் நிகழ்த்தப்படும்போதெல்லாம் ஐக்கிய அரசாங்கமானது அவற்றில் பங்கு கொண்டது. ஆனால், கடைசியில் அச் சமுதாயம் அமைக்கப்பட்டதும், அதில் சேர அந் நாடு மறுத்துவிட்டு விலகிக்கொண்டது. இதற்கான அடிப்படைக் காரணம் தெளிவாகவே காணப்படுகிறது. ஐ. பொ, கூ. அ. வினைப் (O. E. E. C.) போலன்றி, ஐ. நி. எ. ச. வானது (E C.S.C.) அதன் அமைப்பில் நாட்டுரிமைக்குமட்டும் இடமளிப்பதாக இல்லாமல் அதற்கும் மேம்பட்டதாக இருந்தது (supra-national). ஐ. பொ. கூ. அ.-வில் (O. E. E. C.) அங்கம் வகிக்க விரும்பும் நாடானது மற்ற அரசுரிமை நாடுகளுடன் (with other sovereign states) சமரசப் பேச்சு வார்த்தையும், உடன்பாடும் செய்து கொள்ள வேண்டியிருப்பதோடல்லாமல், ஐ. பொ. கூ. அ. முழுவதும் எடுத்துள்ள முடிவுகளை (the decisions of O E.E.C. as a whole) அதில் அங்கம் பெறும் ஒவ்வொரு நாடும் மறுதளித்து, அவற்றைத் தடை செய்யும் அதிகாரத்தினைப் (veto) பெற்றிருந்தன. ஆனால், ஐ. நி. எ. ச.வில் (E. C. S. C,) நிலை வேறாக இருந்தது. நாட்டின் ஓர் உற்பத்தித் துறையின் நிருவாகமானது (management of a sector of the economy) உயர்மட்ட மன்றமென்னும் (High Authority) ஒரு சபையின் கையில் ஒப்படைக்கப்பட்டது. இச் சபையின்மீது அங்கத்தினர் நாடுகளின் அரசாங்கங்களுக்கு (member countries) எவ்வித அதிகாரமும் இல்லை; உயர்மட்ட மன்றம் ஓர் ஐரோப்பியப் பொதுச் சபைக்கே (an European Parliament) கட்டுப்பட்டதாகும். இச் சபை பெரும்பான்மையோரின் வாக்குரிமையைப் பின்பற்றியே செயலாற்றி வந்தது. ஐ. நி. எ. ச.வில் (E. C.S. C.) அங்கம் கொள்ளும்போது நாட்டின் அரசுரிமையானது (sovereignty) தியாகம் செய்யவேபடுகின்றது. இத்தகைய நிபந்தனையை ஏற்க ஐக்கிய அரசாங்கம் முன்வரவில்லை.

1950ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகளின் பிற்பகுதியில் ஐரோப்பாவில், முற்றிலும் தனித்தனியான இரு இயக்கங்கள்

செயற்பட்டுக் கொண்டிருந்தன. ஆயினும், ஐ. பொ. கூ. அ.-வின் திட்டமாகிய, வாணிபத்தின் மீதுள்ள கணிசத் தடைகளின் நீக்கமானது (in removal of quantitative restrictions on trade) அதன் வரையறையை அடைந்துவிட்டிருந்தது. மேலும், ஐ. பொ. கூ. அ.-வின் வழியாக ((via O.E.E.C.) ஒருங்கிணைப்பில் மேற்கொண்டும் அடையும் முன்னேற்றமானது, மற்ற முக்கிய வகையான வாணிபத் தடையில்—அதாவது சுங்க வரிகளில்—செய்யப்படும் குறைப்பின்மூலம் (through reduction) மட்டுமே ஏற்படக்கூடியதாக இருந்தது, ஆயினும், இவ்வகையிலும், ஐ. பொ. கூ. அ-வின் (O.E.EC.) 'நிதானக்' கைக்கோளிற்கு (gradualist approach) அடிப்படையானதோர் இடர்ப்பாடு (a fundamental difficulty) ஏற்பட்டது. ஒரே ஒரு நாட்டைத் தவிர்த்து, எல்லா ஐ.பொ.கூ.அ.-வில் அங்கம் வகித்த நாடுகளனைத்தும் ஏற்கெனவே சு. வா. பொ. உ.-வில் (G.A.T.T.) அங்கம் வகித்த நாடுகளே எனவே, அவைகள், இந் நூலின் 30ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள சு. வா. பொ. உ.-வின் விதியினைப் (rule) பின்பற்ற வேண்டியனவாக இருந்தன—அதாவது ஓர் அங்கத்தினர் நாடு மற்றோர் அங்கத்தினர் நாட்டிற்கு ஒரு சலுகையை அளிக்கும் போது (அதாவது சுங்கவரிக் குறைப்பின்மூலம், அதேசமயத்தில் சு. வா.பொ. உ.-வில் அங்கம் வகிக்கும் எல்லா நாடுகளுக்கும் (to all G. A.T.T. member) அச் சலுகையை அது அளித்தாக வேண்டும். சு. வா. பொ. உ.-வில் (G.A.T.T,) அங்கம் வகித்த எல்லா நாடுகளுமே, ஐரோப்பிய நாடுகளல்லவாதலின், சுங்கவரிகளின் குறைப்பின்மூலம் நெருங்கிய ஐரோப்பிய ஒருங்கிணைப்பு என்னும் பிரச்சினையை (the problem of closer European integration) பெரும்பாலும் ஒரு தீராப் பிரச்சினையாக ஆக்கியது.

ஆயினும் சு. வா. பொ. உ.வின் (G.A T.T.) புதிய சலுகையொன்றும் தரப்படுதல் கூடாதென்னும் விதிக்கு ஒரு முக்கிய விதிவிலக்கு ஒன்று உள்ளது. சு. வா. பொ. உ. (G. A. T. T.)-வில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட நாடுகளிலிருந்தும் இறக்குமதியாகின்ற இறக்குமதிப் பொருள்களுக்கான சுங்க வரிகளைக் குறைக்கலாம். சம்பந்தப்பட்ட நாடுகளுக்கிடையே சுங்க வரிகள் யாவற்றையும் விலக்கும் (the removal of all tariffs) ஒரு திட்டத்தை—அதாவது அந் நாடுகளுக்கிடையே தடையிலா வாணிபத்தை (free trade) ஏற்படுத்துதல், அல்லது சுங்க ஒன்றியத்தை (customs union) ஏற்படுத்துதல்

போன்றதொரு திட்டத்தை —அச் சுங்க வரிகளின் குறைப்பானது ஏற்படுத்துமானல், அவைகள் அவ்வாறு சுங்கவரிச் சலுகையை மேற்கூறியவாறு அளிக்கலாம். ஐ. பொ. கூ. அ. (O. E. E C.) வானது தாராள திட்டத்தின் (llberalisation programme) ஓர் எல்லேக்கே வந்துவிட்ட காரணத்தால் ஏற்படக்கூடியதொரு நிலேயை முன்கூட்டியே அறிந்திருந்த அதில் அங்கம் வகித்த அரசாங்கங்கள்—இவற்றில் ஐரோப்பிய ஒருங்கிணைப்பு (integration) தேவை யென்று கோரிய நாடுகள் பெரும்பான்மையும் அங்கம் வகித்திருந்த காரணத்தால் இத்தகைய நோக்கத்திற் கான அவைகளின் செல்வாக்கும் அதிகமாக இருந்தது—அவை களுக்கிடையே ஒரு சுங்க ஒன்றியத்தை (customs union) ஏற் படுத்துவதற்கு தொடர்ந்து சமரசப் பேச்சு வார்த்தைகளே நிகழ்த்தின. இதன் விளேவாக ரோம் உடன்படிக்கை (Treaty of Rome) 1957ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டது.

இத்தகையதோர் உடன்பாட்டில் சேர்ந்துகொள்ள ஐக்கிய அரசாங்கம் இசையவில்லே ; அதனேப்போன்றே ஐ. நி. எ. ச. (E.C.S.C.)-வில் அங்கம் வகித்த ஆறு நாடுகளேத் தவிர்த்து, மற்ற ஐ. பொ. கூ. அ. நாடுகளும் இதில் பங்குபெற விரும்பவில்லே. ரோம் உடன்படிக்கை என்னும் மிகவும் சிக்கலானதோர் அமைப்பு முறையினே மிக எளிதாக விளக்குவதென்பது அறிவீன மாகும். ஆனல், இதன் சாராம்சத்தை (essence) உற்று நோக்கும் போது ஐ. நி. எ. ச. (E. C. S. C.)-வைப் போன்றே, இதில் பதில் பெறும் நாடுகளும் தங்களது அரசுரிமையைத் (sovereignty) தியாகம் செய்யவேண்டிய சூழ்நிலே ஏற்பட்டது. இதனேக் கார ணங் காட்டியே, இதில் பங்கு பெருத நாடுகள், தாம் அரசுரிமை யைத் தியாகம் செய்வதற்குத் தயாராக இல்லேயென்று கூறி, இதில் சேர மறுத்துவிட்டன. 1961ஆம் ஆண்டில் ஐக்கிய அர சாங்கமும் (United Kingdom) இன்னும் மற்ற ஐரோப்பிய நாடு களும் இதில் சேரப்போகும் பிரச்சினே மீண்டும் தோன்றியது. ஆயினும் இச் சமரச பேச்சுவார்த்தைகள் மீண்டும் தோல்வி யடைந்தன. இதில் பிரிட்டனுக்குண்டான தனிவகைப் பிரச்சினே கள் பின்னருள்ளதோர் உட்பிரிவில் (in a later section) சுருங்கக் கூறப்பட்டுள்ளது. ஐக்கிய அரசாங்கத்தினே உள்ளிட்டதாகவோ அல்லது ஐக்கிய அரசாங்கத்தினேக் கொண்டதாக இல்லாததாக வோ (with or without the United Kingdom) ரோம உடன்படிக் கையின் காரணமாக எழுந்ததோர் இவ்வமைப்பு முறையானது,

இந்த இருபதாம் நூற்றாண்டில், பொதுவாக உலகப் பொருளாதார முறையின் வளர்ச்சிக்கும், குறிப்பாக ஐரோப்பியப் பொருளாதார முறையின் வளர்ச்சிக்குமான முக்கியமானதொரு காரணமாக இருந்தது. அத்தகையதோர் அமைப்பு முறையை நன்கு ஆராய்தல் நலம்.

2. ரோம் உடன்படிக்கை (The Treaty of Rome)

1957ஆம் ஆண்டின்போது ஒரே தொகுதியைச் சேர்ந்த நாடுகளே இரண்டு உடன்படிக்கைகளில் (two treaties) கையொப்பமிட்டன. இவ்வுடன்படிக்கைகளில் ஒன்று ஐரோப்பிய அணுச் சமுதாயத்தை (Euratom) உருவாக்கியது. ஐ. நி. எ. ச. (E.C.S.C.) வானது, எவ்வாறு, அதில் கையொப்பமிட்டுள்ள நாடுகளின் நிலக்கரி, எஃகு தொழில்களிடையே ஓர் ஒருங்கிணைப்பை (integrations) ஏற்படுத்தும் நோக்கத்தினைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனவோ, அது போன்றே ஐரோப்பிய அணுச் சமுதாய நாடுகளும் தங்களிடையே ஓர் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தன. பொதுவாக 'ரோம் உடன்படிக்கை' என்பது ஐ. நி. எ. ச. (E. C. S. C.)வையும், ஐரோப்பிய அணுச் சமுதாயத்தினையும் தன்னகத்தே கொண்ட ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தையே (E. E. C.) பெரும்பாலும் குறிக்கும். அடிப்படையில் பார்க்கும் போது, ஐ. பொ. ச. (E.E C) வானது ஓர் அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டதாகவே இருக்கின்றது. ரோம் உடன்படிக்கையின் முகவுரையில் (preamble) 'ரோம் உடன்படிக்கையின் முக்கிய நோக்கம் ஐரோப்பிய மக்களிடையே என்றும் பிணைந்துள்ள ஓர் ஒன்றியத்தினை (an ever closer union) ஏற்படுத்துவதற்கான அடித்தளங்களை அமைத்தலே' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், நமது இந் நூலின் நோக்கம் அதன் பொருளாதார அம்சத்தை ஆராய்வதேயாகும். எது எவ்வாறாயினும், இவ்வுடன்படிக்கையின் அரசியல் நோக்குகள் (political intentions) மிகப் பரந்த கருத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளனவாதலின், ஐ. பொ. ச. (E E.C.)வில் பங்குபெறும் நாடுகளிடையே, அவைகள் முடிவாக எந்தவித அரசியல் பிணைப்பினைக் கொண்டனவாக இருக்கவேண்டும் என்பதுபற்றிக் கருத்து வேறுபாடுகள் (differences of opinion) இன்னும் இருந்துகொண்டு தானுள்ளன. இதில் ஒரு சில நாடுகள், ஐ. பொ. ச.-வில் அங்கம் பெறும் நாடுகள் தனித்த அரசாங்கங்களாகவே இயங்கவேண்டு

மென்றும், உடன்படிக்கையின் பொருளாதார நோக்குகளுக்கு மட்டுமே அவைகள் தங்களது அரசுரிமையை (sovereignty) ஒருங் கிணைத்துப் பயனைப் பகிர்வு செய்து கொள்ளுதல் வேண்டுமென் றும் கருதுகின்றன. இதிலுள்ள மற்ற நாடுகள் ஐக்கிய அமெரிக்கா வைப் போன்று ஐக்கிய ஐரோப்பிய நாடுகளைத் (United States of Europe) தோற்றுவிக்கும் அரசியல் பிணைப்பும் வேண்டுமென்றும், உடன்படிக்கையின் பொருளாதார விதிமுறைகள் மட்டுமே போதா எனவுமான தீவிர நோக்கத்தைக் கொண்டனவாக வுள்ளன; அப்படிப்பட்டதோர் அரசியலமைப்பில் அங்கம் பெறும் நாடுகள் தங்களது தனி அரசுரிமையை நிலைநாட்டுதல் இயலாது.

இவ்வுடன்படிக்கையின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு நான்கு முக்கிய நிறுவனங்களைக் கொண்ட தோர் (four main institutions) அமைப்பு ஏற்படுத்தப் பட்டது. அவற்றில் ஒன்று அமைச்சர்கள் அவை (council of ministers) ஆகும். இதில் ஆறு அரசாங்கங்களும் ஒவ்வொன் றும் ஓர் அமைச்சரை நியமித்தன. இரண்டாவதாக உள்ள நிறுவனம் ஐரோப்பியக் குழு (European commission) ஆகும். இதில் ஒன்பது அங்கத்தினர்கள் இருந்தனர். ஓரளவு பெரிய தொரு செயலாட்சியகத்தினையும் (a fairly large secretariat) இக் குழு கொண்டிருந்தது. இந்த ஒன்பது ஆணையர்களும் (nine commissioners) அங்கத்தினர். அரசாங்கங்களின் (members governments) பொது உடன்பாட்டின் (general agreement) அடிப் படையில் நியமிக்கப்பட்டனர். ஒரு அங்கத்தினர் நாட்டிலிருந்தே இரண்டிற்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் நியமிக்கப்படுதல் கூடாது. இவ்வாணையர்கள் (commissioners) தங்களது நாட்டின் அரசாங்கங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகச் செயல்புரியாமல் தம்முரிமையாகவே (independent) செயலாற்றி வந்தனர். அங்கத் தினர் நாடுகளுக்கிடையே, இத்தகைய சபையும் (council) குழுவும் (commission) ஐ. பொ. சா-வின் (E. E. C.) அமைப்பு முறையி னுடைய இன்றியமையாத அம்சங்களாக உள்ளன. பரந்த நோக்கில் பார்க்கும்போது, இவையிரண்டும் முறையே, தன் னுரிமையுள்ளதொரு நாட்டின் அரசாங்கம் (government), சிவில் துறை (civil service) போன்றனவாகவேயுள்ளன—இதில் ஒரு விதிவிலக்கு யாதெனில் பெருவாரியான பிரச்சினைகளில் குழுவின் பரிந்துரைக்குப் பின்னரே (after the recommendation) அவை யானது (council) முடிவுகளைச் செய்தது என்பதும், சில குறிப்

பிட்ட விவகாரங்களில் (in certain matters) குழுவானது (நாட்டின் சிவில் துறையினைப் போலல்லாது) அவையினைக் கலந்தாலோசிக்காமலேயே முடிவுகளை எடுக்கக்கூடியதாக இருந்ததுமாகும். மூன்றாவது நிறுவனம் சட்ட மன்றம் (assembly) அல்லது ஐரோப்பியப் பாராளுமன்றமாகும். (European Parliament). இதில் அங்கத்தினர் நாடுகளின் 142 பாராளுமன்ற அங்கத்தினர்கள் இடம்பெற்றிருந்தனர். இவ்வங்கத்தினர்கள், அங்கத்தினர் நாடுகளின் சம்மதிக்கப்பட்ட விகிதத்தில் (in agreed proportions) நியமிக்கப்பட்டனர். கோட்பாட்டளவில், இந்த அவையும் (council) குழுவும் (commission), ஐ. நி. எ. கூ. உயர்மட்ட மேலாண்மையையும் ஐரோப்பிய அணுசக்தி ஒன்றியத்தையும் போன்று (like the E.C.S.C. High authority and euratom), இச் சட்ட சபையின் ஆளுகைக்கு உட்பட்டனவாக இருந்தன. நடைமுறையில் பார்க்கும்போது அதன் அதிகாரங்கள் மிகவும் கடுமையாக வரையறுக்கப்பட்டேயிருந்தன. எனவே, இன்னும் சில காலத்திற்கு அது ஓர் அறிவுறுத்தும் சபை (advisory) என்பதற்கும் மேலாகவே, அதிகாரங்களைப் பெற்றிருக்கக்கூடும் என்பது நிச்சயமாகத் தெரிகின்றது. கடைசியாக, ரோம் உடன்படிக்கையின் விதிமுறைகளினின்றும் எழுகின்ற வழக்குகளுக்குத் தீர்ப்புக் கூறவும் அல்லது அவ்வுடன்படிக்கையின் எந்த ஒரு நிறுவனத்தின் (any of the institutions) நடவடிக்கையாலும் எழுகின்ற வழக்குகளுக்குத் தீர்ப்புக் கூறவும் ஐரோப்பியத் தலைமை நீதிமன்றம் (Court of Justice) என்னும் ஒரு நிறுவனமும் நிறுவப்பட்டது.

ஐ. பொ. ச.-வில் (E. F. C.) உள்ள இன்றியமையாத அம்சமானது உடன்படிக்கையின் விதிமுறைகளிலும் இடம்பெற்றுள்ளது. அதாவது ஒரு சுங்க ஒன்றியத்தினை (customs union) நிறுவுவதற்கான திட்டம் விதிமுறைகளில் இடம்பெற்றிருந்தது. சுங்க ஒன்றியத்தில் இரு அம்சங்கள் உள்ளன. ஒன்று, சுங்க ஒன்றியத்தின் எல்லையில் முற்றிலுமாகத் தடையிலா வாணிபம் (completely free trade) அமல் நடத்தப்படுவதும், இரண்டாவதாக சுங்க ஒன்றியத்தின் எல்லையில் இறக்குமதியாகும் எந்த ஒரு பொருளுக்கும் ஓரேவிதமான சுங்க வரிகளே விதிக்கப்படுவதுமாகும். இரண்டாவதாகக் கூறியுள்ளதை நிறைவேற்றவில்லையெனில் முதலாவதாகக் கூறியுள்ளதை செயல்படுத்துவதென்பது (இவ்வாறு செயல்படுத்துவது இயலாது என்று கூறுவதற்கில்லையாயினும்) இடர்ப்பாடாக இருக்கும். சுங்க ஒன்றியத்தின் ஒரு பகுதி

யில், மற்ற பகுதிகளைக்காட்டிலும், இறக்குமதி வரிகள் அதிகமாக இருக்குமெனில், பொருள்கள் தாழ்வான சுங்கச் சுவரினை (low traffic wall) உடைய பகுதிகளுக்கே பாய்ந்துவந்து குவியும். இப் பொருள்கள் பின்னர் அவற்றிற்கு அதிகமான இறக்குமதி வரிகளை யுடைய பகுதிகளுக்கு மீண்டும் அனுப்பப்படுதல் கூடும். (தடை யிலா வாணிபம் செயல்படுகின்ற காரணத்தால்)

ஐ. பொ. ச. அங்கத்தினர்களிடையே தடையிலா உள்நாட்டு வாணிபத்தை நிலைநாட்டுவதற்கு எளிதான விதிமுறைகள் ரோம் உடன்படிக்கையில் இடம்பெற்றிருந்தன. முதலாவதாக ஓர் அங்கத்தினர் நாடானது, வேறு எந்த ஓர் அங்கத்தினர் நாட்டி னுடனும் செய்கின்ற வாணிபத்தின் மீது எந்த ஒரு புதிய வரியை யும் விதிக்கக்கூடாது என்னும் விதிமுறை இருந்தது. இரண்டாவ தாக, மற்ற ஐ. பொ. ச. (E. E. C.) நாடுகளினின்றும், 1959ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியன்று இறக்குமதி செய்யப் பட்ட இறக்குமதிப் பொருள்களின் அளவினைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதில் 10 சதவீதத்தை ஒவ்வொரு நாடும் குறைத்துக் கொண்டன. இதற்குப் பின்னர் இத்தகையதோர் அங்கத்தினர் நாடுகளுக்கு முழுவதுமான இறக்குமதி வரிகளின் குறைப்பானது பொதுவாக 18 மாதங்களுக்கு (இந்தக் கால அளவிற்கு மேற் படாமல்) ஒரு முறை, திரும்பத்திரும்பச் செய்யப்பட்டு வந்தது. இவ்வாறு செய்வதன் நோக்கம் என்னவெனில், ஐ. பொ. கூ.-வில் அங்கம் வகிக்கும் எல்லா நாடுகளுக்கிடையேயும் நடக்கும் வாணிபமானது, குறைந்தது 1973ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதியின் போதாவது, தீர்வைகள் நீங்கிய வாணிபமாக இருக்க வேண்டுமென்பதேயாகும். இவ்வாறு முதலில் தீர்வை களை குறைத்த காலத்திற்கும் (1959) பின்னர் முற்றிலும் அவை களை நீக்கிய காலத்திற்கும் இடையேயுள்ள காலம் ஓர் 'இடை மாறுபாட்டுக் காலம்' (transitional period)என அழைக்கப்பட்டது. இத்தகையதோர் இடை மாறுபாட்டுக் காலமானது எந்தச் சூழ்நிலையிலும் பதினைந்தாண்டுகட்குமேல் இருக்கக்கூடாதென உடன்படிக்கையில் கூறப்பட்டிருந்தது.

சுங்கத் தீர்வை ஒன்றியத்தின் (customs union) மற்றொரு முக்கிய அம்சம் யாதெனில், இதில் அங்கம் வகிக்கும் எல்லா அங்கத்தினர்களும், உலகத்தின் பிற பகுதிகளினின்றும் இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு (imports from the rest of the world)

பொதுவானதொரு சுங்க வரியினைக் கடைப்பிடித்தமையே. இத்தகையதொரு பொதுவான சுங்க வரி எவ்விதம் கணக்கிடப்பட்டதெனில் 1957-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் தேதியன்று அங்கத்தினர் நாடுகள் ஒவ்வோர் இறக்குமதிப் பொருளுக்கும் என்ன சுங்க வரியினை விதித்தனவோ அவ் வரிகளின் கணித சராசரியானது கணக்கிடப்பட்டு அதுவே, பொதுவான சுங்க வரியாக நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும், உடன்படிக்கையின் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெருவாரியான பண்டங்களுக்கு. வசூலிக்கப்படும் சுங்கவரியானது எவ்விதத்தும், கூறப்பட்டுள்ள அதிகபட்ச வீதங்களுக்குமேல் (stated maximum rates) இருக்கக்கூடாதென்று விதிமுறைகள் கூறப்பட்டிருந்தது, இப் பண்டங்கள் பெரும்பான்மையும் அடிப்படையான கச்சாப் பொருள்களாக (basic raw materials) இருந்த காரணத்தால் இவற்றின்மீது முடிவாக வசூலிக்கப்படும் சுங்க வரிகளும் ஒப்பீடாகக் குறைவாகவேயிருக்கவேண்டுமென்ற நியதி, விதிமுறைகளில் கூறப்பட்டது. அப்படியில்லையெனினும் சுங்கவரிகளை விதிப்பதுபற்றி உடனடியாகச் சமரசப் பேச்சு வார்த்தைகளால் முடிவு செய்யவேண்டுமென்றும் கூறப்பட்டது. உள்நாட்டுத் தீர்வைகளைப் (internal duties) போக்குவதைப்போன்றே பொதுவான சுங்க வரியினை விதிக்கும் திட்டமும் (இத் திட்டத்தினல் சில நாடுகளுக்குச் சுங்க வரிகளை அதிகரிக்கச் செய்வதும் மற்றும் பிற நாடுகளுக்குச் சுங்க வரிகளைக் குறைப்பதும் நேரிட்டது.) ஒரே இடை மாறுபாட்டுக் காலத்தின்போதே (over the same transitional trade) பல கட்டங்களில் (stages) நடைபெற்றது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதால் நாடுகளுக்கு ஏற்படும் தனிவகையான இடர்ப்பாட்டிற்கு பலவகையான உதவி அளிக்கும்பொருட்டு குழுவுக்கு (commission) அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த வகையில், உடன்படிக்கையில் (treaty) கூறப்பட்டதைக்காட்டிலும் அதிகமான முன்னேற்றத்தை வெகு விரைவுடன் ஐ. பொ. கூ. (E. E. C.) வானது மேற்கூறப்பட்ட இரு வழிகளாலும் அடைந்து காட்டியது. 1961ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், உள்நாட்டுத் தொழில் வாணிபத்தின்மீது (internal industrial trade) விதிக்கப்பட்ட தீர்வைகளின் 1957ஆம் ஆண்டின் போதிருந்த தீர்வைமட்டத்தில் 70 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. (விவசாயப் பொருள்களின் மீது விதிக்கப்பட்ட வரிகளின் குறைப்பானது சற்று நிதானமாகவே செய்யப்பட்டது.) அதேசமயத்தில் பொதுவான சுங்க வரிக்கான (common tariff) முதல் நடவடிக்கை (first step) உடன்

படிக்கை குறிப்பிட்டிருந்த கால அளவிற்கு ஓராண்டிற்கும் முன்னதாகவே எடுக்கப்பட்டது.

மேற்சொல்லப்பட்ட உடன்படிக்கை சம்பந்தப்பட்ட எல்லையில், தீர்வைகளும், பங்களவுக் கட்டுப்பாடுகளும் (duties and quota restrictions) இல்லாமலிருக்க வேண்டுமென்பது ஒரு புறமிருக்க அந்த எல்லையிலுள்ள நாடுகளுக்கென ஒரு பொது அங்காடி (a common market) இருப்பது மிகவும் அவசியமான தாகக் கருதப்பட்டது. எனவேதான், ரோம் உடன்படிக்கை யின் விதிமுறைகளில், அவ்வுடன்படிக்கையில் பங்கு பெறும் நாடு களுக்கிடையே யிருந்த 'செயற்கையான' (artificial) வேறுபாடு களைப் போக்குவதற்கான நோக்கங்களைக் கொண்டனவாக இருந்தன. உடன்படிக்கையில் அங்கம் வகிக்கும் நாடுகளுக் கிடையே மக்கள் அல்லது மூலதனம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பெயர்ந்து செல்வதற்கான எல்லாத் தடைகளும் (all restrictions) நீக்கப்படல் வேண்டுமென அவ் விதிமுறைகளில் கண்டிருந்தது. ஓர் அங்கத்தினர் நாட்டின் தொழில் நிறுவன மானது (enterprise) வேறு எந்த ஓர் அங்கத்தினர் நாட்டினுடைய உள்நாட்டுத் தொழில் நிறுவனத்துடனும் சம உரிமை பெற்றுத் தொழில் நடத்துவதற்கு அந்நாடு தாராளமாக அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் விதிமுறைகளில் கூறப்பட்டிருந்தது. நியாய மான ।போட்டி (fair competition) என்றழைக்கப்படும் போட்டி யினை நிலைநாட்டுவதற்குத் தொடரான விதிமுறைகள் இயற்றப் பட்டன—அதாவது, வெளிநாடுகளில் பண்டங்களை விலை குறைத்து விற்பனை செய்தலையும் (dumping)—(அதாவது, பிறநாட் டுப் பொருள்களோடு போட்டியிடும் நோக்கத்துடன் உண்மை யான சராசரி உற்பத்திச் செலவைக்காட்டிலும் குறைந்த விலைக் குப் பொருள்களை விற்பனை செய்யும் முறை), வேறொரு நாட்டுத் தொழில்களுக்கல்லாது ஒரு நாட்டுத் தொழில்களுக்குமட்டுமே வெளிப்படையான அல்லது மறைமுகமான (open or concealed) பணமானியங்களை அளித்தலைத் தவிர்த்தல், வேறுநாட்டுப் பண் டங்களுக்கு உள்நாட்டுப் பண்டங்களுக்கான கடத்துச் செலவுகளி னின்றும் வேறுபட்ட கட்டணங்களை வசூலித்தல் மூலம் பேதங் காட்டுதலைத் தவிர்த்தல், சர்வாதீனத்திற்கெதிராக இயற்றப் படும் சட்டத்தால் விளையும் வேறுபாடுகளைத் தவிர்த்தல் போன்ற வழிவகைகளால் இத்தகைய நியாயமான போட்டியினை ஏற்படுத்த தொடர்ச்சியான சட்டங்கள் இவ் விதிமுறைகளில்

திட்டப்பட்டுள்ளன. இதைப் போன்றே, ஒருமித்த சமூக நலக் கைக்கோள்களை நிலைநாட்டுவதையும் இவ்விதிமுறைகள் வலியுறுத்தின—அதாவது, ஆண்கள் பெறும் கூலிகளுக்குச் சமமாகப் பெண்கள் கூலிபெறுதல், ஒரு நாட்டிலிருப்பது போன்றே இத் திட்டத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் முழுவதும் ஒரேவிதமான சமூகநலப் பாதுகாப்பு உதவிகளை (social security benefits) ஏற்படுத்துதல், ஓர் அங்கத்தினர் நாட்டில் ஒருவர் பெற்றுக் கொண்டிருக்கும் சமூகநலப் பாதுகாப்பு உதவிகளை மற்றோர் அங்கத்தினர் நாட்டில் சென்று அவர் வேலை செய்தாலும் அவற்றைத் தொடர்ந்து பெறுவதற்கான ஏற்பாடுகள், தொழிலாளர்களின் சமூகநலப் பாதுகாப்புப் பங்குத் தொகைகள் (employees' social security contribution) முதலியவற்றில் ஒரேவிதமான கைக்கோளைக் கடைப்பிடித்தல் முதலியனவற்றைச் சம்பந்தப்பட்டதாகும்.

இச் சிறப்பு விதிகளின் முக்கிய அம்சம் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதொன்றாகும். அதாவது, குழுவானது (commission) ஒரு பொதுவான விவசாயக் கைக்கோளைக் (common agricultural policy) கடைப்பிடிக்க வேண்டும் என்றதொரு நிபந்தனை ரோம் உடன்படிக்கையில் புகுத்தப்பட்டது. இத்தகைய பொதுவான கைக்கோளானது மெதுவாக அங்கத்தினர் நாடுகளிலுள்ள விவசாயக் கைக்கோள்களை நீக்கி, அவைகளிடத்தில் அது இடம்பெறலாயிற்று. விவசாயமானது எப்போதுமே, அதன் இயல்பு காரணமாக, சுபீட்ச நிலையில் துக்க் கொடூரமான ஏற்ற இறக்கங்களைக் கொண்டனவாக இருந்து வந்தது—இதற்கு முக்கியக் காரணம் விவசாயப் பொருள்களுக்கான தேவை நெகிழ்வற்றதாக (inelastic demand) இருப்பதுவும், அப்பொருள்களின் அளிப்பு மிகவும் நெகிழ்வற்றதாக இருப்பதுவும் (highly inelastic supply), இப் பொருள்களை நம்பி ஏராளமான சிற்றளவுத் தொழில்கள் (small scale enterprices) உள்ளதுமாகும். இதன் காரணமாகவும், அரசியல் சமூகக் காரணங்களுக்காகவும் (for political and social reasons) அரசாங்கக் கைக்கோளினால், வழக்கத்திற்கும் புறம்பாகவே மிக அதிகமான அளவில் விவசாயமானது ஒழுங்குபடுத்தப்படுகிறது (regulated to an unusual degree). குழுவானது (commission) முக்கியமான விவசாயப் பொருள்கள் (major agricultural products) சம்பந்தமாக நீண்டதொரு அறிக்கையைத் தயாரித்து அதனை சபைக்குச் (council) சமர்ப்பித்தது. சபையும்

அதனை அங்கீகரித்தது. ஒவ்வொரு பொருளுக்கும் மிகத் திறம் பட நிருவகிக்கப்படும் தொடர்புபடுத்தப்பட்ட அங்காடி ஏற்பாடுகளையும் (highly organised marketing arrangements) இக் கைக்கோள் ஏற்படுத்தியது; உத்தரவாதம் அளிக்கப்பட்ட குறைந்தபட்ச விலைகளை நிர்ணயிப்பதன்மூலம் விவசாயிக்கு குறைந்தபட்ச விலைகளை (minimum) ஏற்படுத்தித் தருதலையும் பிறநாடுகளிலிருந்தும் இறக்குமதியாகும் இறக்குமதிப் பொருள் களுக்கு பல்வேறுன இறக்குமதி வரிகளை விதிப்பதன் மூலம் விவ சாயிக்குப் பாதுகாப்பு அளிப்பதையும் இவ்வேற்பாடுகள் அளிப் பனவாக இருந்தன. இத்தகைய ஏற்பாடுகள் ஐ. பொ. ச. (E. E. C.) வில் சேரவிருக்கும் ஐக்கிய அரசாங்கத்திற்கு தனிவகை யானதொரு பிரச்சினையை (special problem) ஏற்படுத்துவதாக இருந்தன இதனைப் பின்னர் நாம் பார்ப்போம்.

3. பொது அங்காடியினுல் வரும் நன்மைகள் (Gains from the Common market).

முன்னர்க் கூறிய உட்பிரிவானது (previous sections) ஒரு சிக்கலான அமைப்பு முறையினை—அதாவது, காலத்திற்கேற்பத் தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கும் ஓர் அமைப்பு முறையினை— சுருக்கமாக விளக்கியது. ரோம் உடன்படிக்கையின் (Rome Treaty) நோக்கமெல்லாம், ஆறு தனித்தனியான நாடுகளை, பொருளாதார நோக்கங்களுக்காக ஒன்ருகப் பிணைத்து அவற்றை ஒரே அங்காடியாக மாற்றுவதேயாம். இத்தகைய பிணைப்பி னின்றும் நிகழக்கூடிய நன்மைகள் யாவும் கோட்பாட்டளவில் பார்க்கும்போது, மிகத் தெளிவாகவே காணப்படுகின்றன. எவ் வாறு, தராதர உற்பத்திச் செலவு விதியானது (the law of the comparative costs) பன்னுட்டு வாணிபத்தில் வேலைப்பகுப்பு (division of labour). என்பதனை ஏற்படுத்துகின்றதோ அதனைப் போன்று, பொது அங்காடியின் படைப்பானது (the creations of a common market) அதில் பங்கு பெறும் ஒவ்வொரு நாடும், தராதர உற்பத்திச் செலவு விதியினை அல்லது தொழில் தேர்ச்சித் திறனை (specialisation) செயல்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கும் எல்லை யினை, விரிவுபடுத்திக்கொள்ளத் துணை செய்வதாக உள்ளது. மேலும், இத்தகையதொரு முறையில் உற்பத்திச் சாதனங்களின் அளவு அதிகப்படுத்தப்பட்டு அவைகள் தடையின்றிச் செயல்படு வதற்கு -தடைகள் யாவும் நீக்கப்படுவதால், தடையிலா விலை முறையிலும், (free working of price mechanism) தேர்ச்சித் திறனி

லும் (specialisation) கிடைக்கக்கூடிய நன்மைகள் யாவும் அதிக அளவிலேயே கிட்டக்கூடும்.

நன்மைகளின் சாராம்சம் இதுவே. இத்தகையதொரு கைக் கோளை ஐரோப்பிய பொது அங்காடி (European Common Market) எனக் குறிப்பிட்ட செயல் வடிவில் கொணருவதானது; இந்த உட் கருத்தை வேறு விதங்களில் செயல்படுத்துவதே தவிர வேறு ஒன்றுமில்லை. சான்ருக, ஐ. பொ.ச. வில் (E. E. C.) பங்குபெறும் நாடுகள்; அவைகளுக்குப்பொது அங்காடி ஏற்படுத்தப்படுவதால், தங்களது தொழில்களுக்கான அதிகரித்த பெரியதோர் அங்காடி கிடைக்கப் பெறுகிறது என்று கூறப்படுகிறது. தனித் தனி அங்காடிகளில் செயல்படுவதொழிந்து, ஒவ்வொரு தொழி லும், அட்டவணை 18-ல் காட்டப்பட்டிருப்பது போன்று ஐக்கிய அமெரிக்காவிற்கு கிட்டத்தட்ட சமமானதொரு மக்கள் தொகை யையும், ஐக்கிய அரசாங்கத்தையும் சேர்க்கப்பட்டிருக்குமானல், ஐக்கிய அமெரிக்காவைக்காட்டிலும் அதிகமான மக்கள் தொகை யைக் கொண்டதொரு தனியொரு அங்காடியைப் (single market) பெறக்கூடியதாக இருக்கும். இத்தகையதோர் அங்காடி கிடைப்பதன் பயனுக, ஐரோப்பிய தொழிலானது (european industry) பேரளவு உற்பத்தி நலன்கள் (economies of scale) யாவும் கிட்டுமளவிற்குத் தங்களது உற்பத்தியளவுகளைத் (output levels) திட்டமிடக்கூடியதாக இருக்கும்.

இரண்டாவதாக, பொது அங்காடியின் (common market) பயனுக அங்கத்தினர் நாடுகளுக்கிடையே மிக அதிக அளவில் தேர்ச்சித் திறனுனது (a high degree of specialisation) வளர்க்கப் படுகிறதென்று கூறப்படுகிறது. ஒன்றுபட்ட ஒரே அங்காடி (a single and united market) உள்ளதன் பயனுக எந்தப் பகுதியில் எந்தத் தொழிலைத் திறம்படச் செய்ய முடியுமோ அங்கு அத் தொழில்களைச் செய்வதன்மூலம் பல்வேறு பண்டங்களின் உற்பத்தியானது, அவற்றிற்கேற்ற இடங்களில் செறிவாக அமையும். பொது அங்காடி அமைக்கப்படுவதற்கு முன்னர் இருந்தது போன்று நாடுகளின் தொழில்கள் மிக அதிகமான வேறு பாட்டினையுடைய பல்வேறு உற்பத்தித் திறன்களுடன் செயல் படும் இரட்டிப்பு வேலை தவிர்க்கப்படுகிறது.

கடைசியாக, நாடுகளுக்கிடையேயுள்ள எல்லைத்தடைகள் (the removal of national barriers) நீக்கப்படுதலாலும், ஒரே

அங்காடி (a single market) ஏற்படுத்தப்படுவதாலும், நாடுகளின் போட்டித்திறனனது அதிகரிக்கப்பட்டு அவைகளின் திறமையும் வளர்க்கப்படுகிறதெனக் கூறப்படுகின்றது. இவ்வாறு பெரிய தோர் அங்காடியில் தமது உற்பத்தியைச் செய்து விற்பதன் காரணமாக, முற்போக்கானதொரு பெருக்கம் தொழில்களில் ஏற்பட்டுப் பொருளாதார முறை முழுவதுமே வளர்ச்சியடைவதற்கான சூழ்நிலையும் ஏற்படுகிறது. பொது அங்காடியின் வளர்ச்சி நிலை இன்னும் ஆரம்ப நிலையில்தான் உள்ளதெனினும், பின்னதாகக் கூறப்பட்ட விளைவானது, ஏற்கெனவே ஐ. பொ. ச. (E E. C.) நாடுகளிடையே தெற்றெனவே காணப்பட்டது.

அட்டவணை 18: பொது அங்காடி, 1960ஆம் ஆண்டு.

	மக்கள் தொகை (Population) 1960 (மில்லியனில்)	நாட்டு வருமானம் (National Income)	
		1960ஆம் ஆண்டின் மொத்தம் £ (மில்லியனில்)	நாட்டின் உண்மையான தலா உற்பத்திக் குறியீடு, 1960ஆம் ஆண்டு (Index of per capita national product) (1957=100)
பெல்ஜியம்	9·15	3,194	104
லக்ஸம்பெர்க்	0·32	132	105
ஃபிரான்ஸ்	45·54	15,614	108
மேற்கு ஜெர்மனி	53·37	18,360	115
இத்தாலி	49·36	8,948	118
நெதர்லாண்ட்ஸ்	11·48	3,286	111
ஐ. பொ. கூ. நாடுகளின் மொத்தம் (Total E E.C.)	169·22	49,534	112
ஐக்கிய அரசாங்கம்	52·38	20,300	106
ஐக்கிய அமெரிக்கா	180·67	147,080	102

ஆதாரங்கள் : 1962ம் ஆண்டு மார்ச் மாதத்திய, ஐக்கிய நாடுகளின் மாதாந்தரப் புள்ளிவிவர அறிக்கையும் (United Nations Monthly Bulletion of Statistics, March 1962), ஐ. பொ. கூ. அ. வின் (O. E. E. C.) பாரிசிலிருந்து வெளியிடப்படும் 1961ஆம் ஆண்டின், பனிரெண்டாவது ஆண்டுக்கு பொருளாதார ஆய்வுத் தொகுப்பின், நான்காம் அட்டவணை: நாடுகளின் உற்பத்திப் பொருள்கள் (national products) 1960-ம் ஆண்டின் சராசரி அயல்நாட்டுச் செலாவணி மாற்றுவீதத்தில் பவுண்டுகளாக (pounds) மாற்றப்பட்டுள்ளன.

இத்தகையதொரு கருத்தானது சிக்கலானதுதான் என்றாலும், அட்டவணை 18-ல் இது உண்மையானதென்று எண்பிப்பதற்கான சான்று தென்படுகிறது.

தொகுத்துக் கூறுமிடத்து, ஐ. பொ. ச. (E. E. C.) இருக்க வேண்டுமென்று வாதிடுவோரின் கருத்தினை, ஈண்டுக் கூறவேண்டியுள்ளது. அதாவது, பொது அங்காடி முறையினால், செயல்படும் எல்லை, அதிகரித்திருப்பதாலும் (increased scale of operation), அதிக அளவில் தேர்ச்சித்திறன் (a higher degree of specialisation) அடையப்பெறுவதாலும், இதில் பங்குபெறும் நாடுகளின் மக்கள் தொகைகளின் உண்மை வருமான மட்டமானது (level of real income for the populations) விரைவாக அதிகரிக்கின்றது. வேறு வழியிற் கூறப்போனால், 14ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள, நலங்கள் யாவும், தடையிலா அங்காடிப் பொருளாதார முறையானது செயல்படுவதனால் ஏற்படும் எனக் கூறலாம்.

4. பொது அங்காடியினால் விளையும் தீமைகள்

முற்றிலும் கோட்பாட்டளவியதான அடிப்படையில், ஐ. பொ. ச. விற்கு (E. E. C.) ஆதரவாகக் கூறப்படும் வாதங்களை எதிர்த்து. ஒரு வாதத்தைக் கூறமுடியும். ஐ. பொ. கூ. வைப் போன்றதொரு சுங்கவரி ஒன்றியமானது (a customs union) உள்நாட்டுத் தீர்வைகளை நீக்குவதாக இருப்பதால், அது அங்கத்தினர் நாடுகளிடையே நடக்கும் வாணிபத்தை நிச்சயமாகத் தூண்டுவதாக உள்ளது. ஆனால், அது வாணிபத்தை ஒரு பக்கமாகத் திருப்பிவிடக்கூடுமாதலால் (divert trade), இதனால் விளையும் நிகர விளைவுகள் (the net balance of effects) முழுவதற்குமாகக் கணக்கிடும்போது சாதகமாக இல்லாமல் இருக்கக்கூடும்.

உதாரணமாக, அ. ஆ என்ற இரு நாடுகளும் தாம் இறக்குமதி செய்யும் டிரான்சிஸ்டர் வானொலிப் பெட்டிகளுக்கு 50 சதவீதம் சுங்கவரியினை விதிப்பதாகக் கொள்வோம்; 'ஆ' நாடும் 'இ' என்ற மூன்றாவது நாடும் டிரான்சிஸ்டர் வானொலிப் பெட்டிகளை உற்பத்தி செய்வதாகவும் இவற்றுள் 'இ' நாடானது 'ஆ' நாட்டைக் காட்டிலும் 20 சதவீதம் உற்பத்திச் செலவில் குறைவாக இருக்கும்படி மிகத் திறமையாக அவ் வானொலிப் பெட்டிகளை உற்பத்தி செய்கின்றதெனவும் கொள்வோம். ஆரம்பத்தில், 'அ' நாடும் 'ஆ' நாடும் தன்னுரிமையான நாடுகளாக இருக்கும்போது 'அ' நாடு தனக்குத் தேவையான டிரான்சிஸ்டர் வானொலிப் பெட்டிகளை 'இ' நாட்டினின்றும் இறக்குமதி செய்துகொள்வது இயல்பாகும். தற்போது, 'அ'வும் 'ஆ'வும் ஒரு பூரணமான சுங்கவரி ஒன்றியத்தில் சேருகின்றன எனக் கொள்வோம். 'அ' நாடானது 'ஆ' நாட்டினின்றும் இறக்குமதியாகும் டிரான்சிஸ்டார் வானொலிப் பெட்டிகளுக்கு இறக்குமதி வரிகளை ஒன்றும் விதிக்காது; அதேசமயத்தில் 'இ' நாட்டினின்றும் இறக்குமதியாகும் டிரான்சிஸ்டர் வானொலிப் பெட்டிகளுக்கு 50 சத வீதம் இறக்குமதி வரிகளை விதிக்கும். 'அ' நாட்டின் நுகர்வோர்கள் (consumers) 'ஆ' நாட்டின் வானொலிப் பெட்டிகள் 'இ' நாட்டின் வானொலிப் பெட்டிகளைக் காட்டிலும் விலை மலிவாக இருப்பதையுணர்வர். இதன் காரணமாக, இறக்குமதி வாணிபமானது 'இ' நாட்டிலிருந்து 'ஆ' நாட்டிற்குத் திரும்பும். ஆக, சுங்கவரிகளின் ஒன்றியமானது மிகவும் திறமையான உற்பத்தி நாடான 'இ'யின் உற்பத்தியைக் குறைத்துத் திறமை குறைவான 'ஆ' நாட்டின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதாக உள்ளது. ஆக, ஏற்கெனவே ஆரம்பத்தில் இருந்த நிலையைக் காட்டிலும், சுங்க ஒன்றியம் தோன்றிய பிறகு சாதனங்கள் திறமையைக் குறைக்கும் வகையில் பங்கீடு செய்யப்படுகின்றனவென்பது தெளிவாகின்றது.

ஐ. பொ. ச. விற்கு இத்தகையதொரு வாணிபத்திருப்ப விளைவானது (trade diverting effect) எந்த அளவிற்கு முக்கியம் வாய்ந்ததாக இருக்க முடியுமென்று திட்டவட்டமாகக் கூற முடியாது. ஆயினும், இதன் காரணமாகச் செய்பொருள் பண்டங்களின் (manufactured products) வாணிபத்தில் சில திருப்பங்கள் (some diversion) ஏற்படுவது இயல்பாகும். இதன் காரணமாகத்தான் ஐக்கிய அமெரிக்கா இத்தகைய வாணிப ஆட்டத்தைக் கண்டு கவலை கொண்டதாக இருந்தது. பிரிட்ட

னும்—அது இச்சுங்க ஒன்றியத்தில் சேராது வெளியே இருக்குமாயின்—இதனுல் வரும் விளைவுகளை நிச்சயமாக உணரும். ஆயினும், விவசாயப் பொருள்கள் (agricultural products) சம்பந்தமாகத்தான் அதிகமான கவலை கொள்ளப்படுகிறது. இத்தகைய திட்டத்தின் காரணமாக எழும் ஐ. பொ. கூ. வின் விவசாயக் கைக்கோளினுல் (agricultural policy) ஐரோப்பிய விவசாயச் சமூகமானது (european agricultural community) தழைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டு, திறமையான உற்பத்திக்கே முதலிடம் கொடுக்கும் கோட்பாடு கைவிடப்படுமானுல், இதன் விளைவாக, வழக்கமாக விவசாயப் பொருள்களைக் குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்யும் ஐரோப்பிய நாடுகள் அல்லாத நாடுகளினின்றும் விவசாயப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படாது, அதிக உற்பத்திச் செலவுகளைக் கொண்ட ஐரோப்பிய நாடுகளின் விவசாயப் பொருள்களே வாங்கப்படக் கூடுமாதலால், அது ஐரோப்பிய நாடுகளல்லாத நாடுகளில் (non-european countries) சுபிட்ச விளக்கை அணைத்துவிட்டு, ஐரோப்பிய நாடுகளின் சுபிட்ச விளக்கை ஏற்றுவதாகும். இந்த நிகழ்ச்சியானது பிரிட்டன் ஐ. பொ. கூ. வில் சேருமானுல், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்முக—இருக்கக்கூடும். தற்போது, பிரிட்டனே, உலகநாடுகளில், உணவுப் பொருள்களை மிக அதிகமாக இறக்குமதி செய்யும் நாடாக உள்ளது; தற்போது அதனுடைய இறக்குமதி வரிகள் ஐ. பொ. ச. (E. E. C.) நாடுகளுடன் ஒப்பிடும்போது சுன்னமாகவோ அல்லது மிகவும் குறைவாகவோ (either zero or very low) உள்ளன. எனவே, ஐக்கிய அரசாங்கமானது மிகக் குறைந்த இறக்குமதி வரிகளையுடைய நாடாக இல்லாமல் அதிக இறக்குமதி வரிகளையுடைய நாடாக மாறுமானுல் (high-tariff country) உலக உணவு உற்பத்தி அமைப்பில் மிகத் தீவிரமான விளைவுகள் ஏற்படக்கூடும்; குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு அப்பாற்பட்ட நாடுகளினின்றும் இறக்குமதியாகும் விவசாயப் பொருள்களை இது மிகவும் பாதிக்கும்.

இரண்டாவதாக, நாட்டின் எல்லைகட்டு அப்பாலும் தடையிலா அங்காடியைப் (free market) பரவலாக்குவதானது பல முக்கிய வகைகளில் நாட்டின் அதிகாரங்கள் இழக்கப்படுவதற்குக் காரணமாக உள்ளது. பொன்திட்டத்தைப்பற்றி நாம் ஆராய்ந்தபோது, அத்தகையதொரு முறையானது, பன்னுட்டுச்

சமநிலையைக் (international equilibrium) கடைப்பிடிப்பதற்காக விலை மட்டங்களில் போதிய அளவு இணக்கம் (flexibility) கொணரப்படக்கூடும் என்னும் எடுகோளைக் கொண்டிருந்ததெனக் கூறப்பட்டது. பொது அங்காடிக்குள்ளேயும் இதே நிலை உண்மையானதாக இருக்கக்கூடும். ஓர் அங்கத்தினர் நாட்டில் மற்ற அங்கத்தினர் நாட்டைக் காட்டிலும் உற்பத்திச் செலவுகளும் (costs) விலைகளும் (prices) மிக விரைவாக அதிகரிக்குமானால், பண்டங்கள் பிற பகுதிகளினின்றும் நிச்சயமாகப் பாய்ந்து வந்து உட்புகும். தடையிலா வாணிபம் அமலில் உள்ள காரணத்தால், இத்தகைய உட்புகுதலைத் தடுப்பதற்கு அப் பண்டங்களின்மீது இறக்குமதி வரிகளையும் விதித்தல் இயலாது. முடிவில், அதிக உற்பத்திச் செலவு உள்ள எல்லையில் உற்பத்தியளவும் (output) வேலையும் (employment) இத்தகைய விலை வேறுபாடு திருத்திச்சமன் செய்யப்பட்டாலொழியக் குறைய ஆரம்பிக்கும். வேறு வழியிற் கூறப்போனால், ஒவ்வொரு நாடும் தன்னுரிமையாக பணவீக்கம் (inflate) அல்லது பணவடிப்பு (deflate) செய்துகொள்ளும் அதிகாரத்தினை இழக்க நேரிடுகிறது. வருமானக் கைக்கோளும் (income policy) உற்பத்தி அளவு கைக்கோளும் (output policy) எல்லா அங்கத்தினர் நாடுகளுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டியுள்ளது; அத்தகையதொரு கைக்கோள் நாட்டுக் கைக்கோளாக செயல்படுத்த முடிவதில்லை. சான்றாக, பிற நாடுகளுக்குப் பணம் செலுத்தும் வகையில் இடர்ப்பாடுகள் நேரிடும்போது, ஒரு நாடு பண வடிப்புக் கைக்கோளினைக் (deflationary policy) கடைப்பிடிக்கும்படியான கட்டாயத்திலாழ்த்தப்படும்; அந்நாடு தன்னுரிமையைக் கொண்டதொரு நாடாக இருப்பின் (as an independent country), அது பணத்தை மதிப்புக் குறைப்புச் செய்தல் (devaluation), அல்லது இறக்குமதித் தடைகளை (import restriction) ஏற்படுத்துதல் போன்ற முறைகளைக் கையாள இயலும். ஆனால், பொது அங்காடியில் அங்கம் வகிப்பதன் காரணமாக இத்தகைய நாட்டுத் தன்னுரிமையானது (national freedom) இழக்கப்படுகிறது. மேலும், அங்கத்தினர் நாடுகளிடையே, வேலை நிறைவைக் (full employment) கடைப் பிடிப்பதிலும், விலை நிலைபேற்றினை (price stability) நிலைநாட்டுவதிலும் ஒப்பீடான முக்கியத்துவத்தை (relative importance) அளிப்பதில் கருத்து வேறுபாடு எழுமானால், ஒவ்வொரு நாடும் பெரும்பான்மைக் கருத்தினையே (majority view) ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இது, பொது அங்காடியினுல் விளையக்கூடிய மூன்ருவதான ஆபத்திற்கு வழிகோலுவதாக உள்ளது. சென்ற கருத்தினைப் போன்றே இது ஒரு கோட்பாடென்பதைக்காட்டிலும் கைக்கோள் என்றே கூறவேண்டும். ஐ. பொ. ச.வானது (E.E,C.) தடையிலா அங்காடிப் பொருளாதார முறையினின்றும் (a free market economy) பெறக்கூடிய நன்மைகளை எந்த அளவிற்குப் பெறுகின்றது என்பது பெரும்பாலும் நிறுவனங்களுக்கான சட்டங்கள் எந்தப் பரந்த தத்துவத்தின் அடிப்படையில் கையாளப் படுகின்றன என்பதனையே பொறுத்துளது. சான்ருக ஒரு பெரிய அங்காடியில் (a large market) சர்வாதீனத்திற்கு எதிரான விதிகள் (anti–monopoly provisions) வலுவின்றிச் செயல்படுத்தப் படுமானுல் அது, அவ்வங்காடியானது சர்வாதீனம் (monopoly), கார்ட்டெல் (cartel) ஆகியவையாகப் பெருகுவதற்குக் காரணமாக அமையும். சான்ருக, விவசாயக் கைக்கோளானது விவசாயிகளுக்குச் சாதகமாகவும் அதே சமயத்தில் நுகர்வோர்களுக்குப் பாதகமாகவும் இருப்பதாகச் செயல்படுத்தப்படக் கூடும். இறக்குமதி வரிகள் போன்றவைகளே இல்லாத காரணத்தால், நாட்டிற்கு வருமானம் குறையக்கூடுமாதலால் சமூகநலப் பாதுகாப்புத் திட்டங்கள் மிகவும் குறைந்த அளவில்தான் நிறைவேற்றப்படக்கூடும். ஒரு நாட்டில் பொது அங்காடியின் விதிமுறைகளில் அப்படியே மாற்றங்கள் செய்யப்பட்டாலும் அரசியல் தேவைகளுக்காகவே செய்யப்படுமே தவிரப் பொருளாதார அடிப்படையில் செய்யப்படமாட்டா. மேற்கூறிய யாவும் கருத்துப்பற்றிய கூற்றுகளே தவிர ஆய்வின் விளைவாக எழுந்த கூற்றுகள் எனக் கூறமுடியாது. கவலைக்கிடமளிக்கக்கூடிய அக்கூற்றுகள் எந்த அளவுக்கு உண்மையில் கவலைக்கிடமானவையென்பதை அனுபவம்தான் முடிவு செய்ய வேண்டும்.

5. பிரிட்டனும் ஐ. பொ. ச.வும் (Britain and E. E. C.)

மேற்கூறப்பட்ட கருத்துகள் யாவும், அரசாங்கமானது (United Kingdom) ரோம் உடன்படிக்கைக்கான சமரசப் பேச்சு வார்த்தைகளினின்றும் விலகிக்கொள்வதென அது முடிவு செய்ததற்கும், பின்னர், அது, 1961ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் ஐ. பொ. ச. வில் சேருவதற்கு மீண்டும் பேச்சுவார்த்தைகளை நடத்திபதற்கும் காரணமாக இருந்தன. ஏற்கெனவே கூறப்பட்டது போன்று, இவ்விரு நிகழ்ச்சிகளுக்கும் முதன்மையாக உள்ள காரணங்கள், பொருளாதாரக் காரணங்களாக இருப்பதைக்

காட்டிலும், அரசியல் காரணங்களாகவே யிருந்தன. 1962-63-ல் நிகழ்ந்த இரண்டாவது சமரசப் பேச்சு வார்த்தைகள் தோல்வி யுற்றது அரசியல் காரணங்களாலேயே (political causes) எனக் கூறலாம். அக் காரணங்கள் யாவற்றையும் ஈண்டு ஆராய்வது இயலாது. பிரிட்டனைப் பொறுத்தவரையில், அது ஐ. பொ. ச.வில் (E. E. C.) சேருவதில் அரசியல் பிரச்சினைகள் ஒருபுற மிருக்க. மூன்று தனிச் சிறப்பான பொருளாதாரப் பிரச்சினைகள் எழுந்தன.

இப் பிரச்சினைகளில் முதலாவது பிரச்சினை விவசாய மாகும். ஐ. பொ. ச.வின் விவசாயக் கைக்கோளானது (agricultural policy) அயல்நாடுகளின் விவசாயப் பொருள்களது போட்டியினைத் தடுக்கும் பொருட்டு உயரமான சுங்கவரிச் சுவர் களைக் கொண்ட திறம்பட அமைக்கப்பட்டதோர் அங்காடி முறை (highly organised marketing system) என்பது முன்னர் சுருக்கமாக விளக்கப்பட்டது. இந்த அங்காடி முறையில் நுகர் வோர் (consumer) உணவுப் பொருள்களுக்கு அதிக விலை கொடுப் பதன் மூலம் தனது நாட்டு விவசாயத்தை ஆதரிக்க வேண்டி யுள்ளது. மேலும், பிரிட்டனில் சுங்க வரியானது, ஒரு சில தோட்டப்பயிர் விளைபொருள்களைத் (horticultural products) தவிர்த்து, மற்றப்படி விவசாயப் பொருள்களை, பிற நாடுகளின் விவசாயப் பொருள்களின் இறக்குமதியால் ஏற்படும் போட்டியி னின்று பாதுகாக்கும் பொருட்டு விதிக்கப்படுவதாக இல்லை. அங்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட விலைகள் விவசாயப் பொருள்களுக்கு ஒவ்வோர் ஆண்டிலும் நிர்ணயிக்கப்படுகின்றன. இப் பொருள்களுக்கான அங்காடி விலைகள் (market prices) உத்தர வாத மளிக்கப்பட்ட விலைகளைக் காட்டிலும் (guaranteed prices) குறைவாக இருக்குமேயானல் அப்போது அவ்விழப்பினை ஈடு செய்யுமளவிற்கு விவசாயிகளுக்குப் பணமானியங்கள் (subsidies) வழங்கப்படும். இதன் விளைவாக விவசாயிகள் அதிக விலைகளால் ஆதரிக்கப்படாது—இதற்கு எதிரிடையாக, பிரிட்டனில் உணவுப் பொருள்களின் விலை ஒப்பீடாக மிகவும் குறைவாகவே உள்ளது— பொது வரிவிதிப்பின் ஆதாயங்களிலிருந்தும் (the proceeds of the general taxation) கொடுக்கப்படும் பணமானியங்களாலேயே (subsidies) ஆதரிக்கப்படுகின்றனர். இத்தகைய இரு திறப்பட்ட விவசாயக் காப்பு முறைகளை (agricultural protection) ஆதரிப்பன வும் எதிர்ப்பனவுமான வாதங்கள் உள்ளன. இவ்வாதங்களை

யெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, பரந்த எல்லையையுடைய ஐ. பொ. கூ. (E. E. C.) விற்கு ஏற்ற வகையில் விவசாயக் காப்பளித்தல் என்பது ஒரு கடினமான பிரச்சினையேயாகும்.

இரண்டாவது வகைப் பிரச்சினையானது ஐரோப்பியத் தடையிலா வாணிப எல்லையால் (European Free Trade Area) ஐ. த. வா. எ. (E.F.T.A.) எழுவதாக உள்ளது. இதில். 1957ஆம் ஆண்டில் ஐ. பொ. ச. (E. E. C.) வில் சேருவதற்கு சம்மதிக்காத ஏழு நாடுகள் அங்கம் வகித்தன. இவற்றுள் பிரிட்டனும் ஒன்று. இவைகள் யாவும் தடையிலாத் தொழில் வாணிபத்தை (free industrial trade) நிலைநாட்டும்பொருட்டு ஒன்றுசேர முனைந்தன. வெளி உலகத்தினின்றும் வருகின்ற இறக்குமதிப் பொருள்களுக்கு ஒரு பொதுவான வெளிப்புறச் சுங்க வரியினை (external tariff) இவைகள் கைக்கொள்ளவில்லை. எனினும், ஐ. பொ. ச.வினுடைய வாணிபத் திருப்ப விளைவுகள் (trade-diverting effects) தங்களது தற்கால ஏற்றுமதி அமைப்பைப் பாதிக்கா வண்ணம் அவைகளைச் செயலற்றுப் போகும்படி ஒரு தற்காப்பு நடவடிக்கையை இவைகள் மேற்கொண்டன. பிரிட்டன், இத்தகையதொரு உடன்பாட்டில் சேர்ந்துவிட்ட பிறகு, ஐ. பொ. கூ. வில் தனது பழைய இடத்திற்குத் திரும்புவது என்பது, பிரிட்டன் ஐ. பொ. கூ.வில் சேருவதால் ஐ. த. வா. எ.யின் (E. F. T. A.) மற்ற நாடுகளின் வாணிப நலன்கள் பாதுகாக்கப்படுவதற்கான திருப்தியான ஏற்பாடுகள் செய்யப்பட்டாலொழிய மற்றப்படி, இயலாததாக இருந்தது.

கடைசியாக உள்ள பிரச்சினை காமன்வெல்த் (commonwealth) பிரச்சினையாகும். 1932.ஆம் ஆண்டு முதற்கொண்டு, காமன்வெல்த் நாடுகள் (commonwealth countries) ஒரு சுங்க வரி முறையினைக் கையாண்டு வந்தன. இதன்படி காமன்வெல்த் நாடுகளினின்றும் இறக்குமதியாகும் பொருள்களுக்கு காமன் வெல்த் இல்லாத மற்ற நாடுகளினின்றும் இறக்குமதியாகும் பொருள்களுக்கெதிராகச் (குறைந்த இறக்குமதி வரிகளை விதிப்பதன் மூலம்) சலுகை காட்டும் முறை (preferential treatment) வழங்கப்பட்டது. இத்தகையதொரு முறை ஒன்றுதான் (பேரரசு நாடுகளுக்கான சலுகை முறை—(imperial preference system) காமன்வெல்த் நாடுகளுக்கிடையே பல்வேறு அரசியல், பொருளாதார பண்பாட்டுத் தொடர்புகளை (political,

economic and cultural ties) இதுவரையிலும் பிணைத்து வைத்துள்ளது. இப் பிணைப்பு இணக்கமானதாக (flexible) இருப்பினும் உண்மையான ஒற்றுமையை, (real unity) அது, ஏற்படுத்தியே வந்தது. வேறுவிதமான தனிச்சிறப்பான சட்டங்கள் இயற்றப் பட்டாலொழிய, பிரிட்டன் ஐ. பொ. ச. வில் அங்கம் வகிப்பதானது, அதற்கு ஏற்றுமதிகளைச் செய்யும் காமன்வெல்த் நாடுகளின் தகுதியை வேறுவிதமாக மாற்றி யமைப்பதாகவே இருக்கும். அதாவது, அந்நாடுகளுக்களிக்கப்பட்ட 'சலுகை நடத்து முறை' என்னும் தகுதி ஒழிந்து, பிரிட்டன் அவற்றிற்கு 'பேதங் காட்டி விலக்கும் வகையில் நடத்துவதாக' (discriminated against) இருக்கும். அந்நாடுகளின் பண்டங்களுக்கு ஐ. பொ. ச. (E. E. C.) பொதுவான அயல் சுங்கவரியினை (common external tariff) விதிக்கும். அதேசமயத்தில் ஐ. பொ. கூ. நாடுகளிலிருந்தும், மற்ற ஐ. பொ. கூ. நாடுகளுக்கு இறக்குமதி செய்யப்படும் அதே வகைப் பண்டங்களுக்கு சுங்கவரிகள் விதிக்கப்படமாட்டா. இத்தகைய சலுகையானது, ஐ. பொ. கூ. நாடுகளில் அல்லது அவைகளின் அயல்நாட்டு நிலப்பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டு பிற ஐ. பொ. கூ. அங்கத்தினர் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உணவு பொருள்களுக்கு மிகுந்த நன்மையைப் பயப்பதாக இருக்கும். காமன்வெல்த் நாடுகளினின்றும் ஐக்கிய அரசாங்கத்திற்கு ஏற்றுமதியாகும் பொருள்களில் பெரும்பங்கு உணவுப் பொருள்களாகும். எனவே, பிரிட்டன், ஐ. பொ. ச. வில் சேருமானுல், காமன்வெல்த் உறவு நீடிக்குமா எனப் பலர் ஐயுறுகின்றனர்.

கோட்பாட்டளவில் பார்க்கும்போது, இப் பிரச்சினைகளில் எதுவுமே தீர்க்கமுடியாத பிரச்சினையாக இல்லை; மற்ருெருபுறம் நோக்குமிடத்து, இவைகளைச் சிறிய தடைகள்தான் எனக் கருதி வாளாவிருப்பதற்கில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, ஆழமானதோர் அரசியல் பிரச்சினை வேறு, இதில் அடங்கியுள்ளது. அதாவது ஐக்கிய அரசாங்கமானது (United Kingdom) ஐ. பொ. ச.வில் அங்கத்தினராகச் சேருமானுல் தன்னுடைய அரசுரிமையைத் (Sovereignty) தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்குமா என்பதே அப்பிரச்சினையாகும்—இவ்வாறு அரசுரிமையை விட்டுக்கொடுக்கும் தியாகத்திற்கு எதிர்காலத்தில் இன்ன வரம்புதான் இருக்கும் என்று கூறவும் இயலாமலுள்ளது. எவ்வாருயினும், ஏற்கெனவே கூறப்பட்டது போன்று, பிரிட்டன் ஐ. பொ. ச. வில் அங்கம் வகித்தாலும் அல்லது வகிக்காவிட்டாலும்

20

ஐ. பொ. கூ. வின் தோற்றமானது இருபதாவது நூற்றுண்டின் பிற்பகுதியில் ஐரோப்பியப் பொருளாதார வளர்ச்சிக்கும் (development of the European economy), உண்மையில் பார்க்கப் போனுல், உலகப் பொருளாதார வளர்ச்சிக்கும், அடிப்படையானதோர் ஆளும் சக்தியாக இருப்பது உறுதி.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

J. Pinder, 'Britian and the Common Market' (The Cresset Press, London 1961)

I. Frank, 'The European Common Market' (Stevens, London, 1961).

Meade, U. K., 'Commonwealth and common Market' (Institute of Economic Affairs, London, 1962).

J. F. Deniau, 'The Common Market' (Barrie and Rockliff, London, 1962).

33. உலகப் பொருளாதாரத்தில் பிரிட்டன்

(Britain in the World Economy)

1. போருக்கிடையேயுள்ள ஆண்டுகள் (Inter-war years)

பன்னாட்டுப் பொருளாதார அரங்கில், முதல் உலகப்போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஐக்கிய அரசாங்கமானது முதன்மையானதோர் இடத்தைப் பெற்றிருந்தது. உலக நாடுகளில் அதுவே தலையானதொரு தொழில் நாடாகவும் வாணிப நாடாகவும் திகழ்ந்தது. வெளிநாடுகளில் அது ஒவ்வோர் ஆண்டிலும் £ 100-லிருந்து £ 150 வரை (தற்கால விலைகளின் அமைப்பில் இந்தத் தொகையை £ 350 லிருந்து £ 500 வரை எனக் கொள்ளலாம்). இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஐக்கிய அரசாங்கத்தின் ஒப்பீடான மதிப்பானது (relative importance) குறைவதற்கான அறிகுறிகள் தோன்றினவென்றுலும், பன்னுட்டுப் பொருளாதார நிதிய விவகாரங்களில் (in international economic and financial powers) லண்டனின் தலைமைப்பீடமானது அசைக்க முடியாத நிலையிலேயேதான் இருந்து வந்தது. ஆயினும், 1914-18ஆம் ஆண்டுகளின்போது நடந்த போரினால பன்னுட்டுப் பொருளாதார அரங்கில் பிரிட்டனுக்கு இருந்த நிலையானது மாறியது. முதலாவதாக, பிரிட்டன், போரில் மும்மரமாக ஈடுபட்டிருந்த காரணத்தாலும், போக்குவரத்தில் ஏற்பட்ட தடைகளாலும் அயல்நாட்டு அங்காடிகளை இழக்க நேரிட்டது. இந்த அங்காடிகள் தமக்கு வேண்டிய தேவைகளை வேறு நாடுகளினின்றும் பெறத்தலைப்பட்டன. மேலும், இது சமயத்தில் பிரிட்டனினின்றும் இறக்குமதிப் பொருள்கள் இந்த நாடுகளுக்கு வந்து சேராத காரணத்தால், இந் நிலையானது அந் நாடுகளின் உள்நாட்டுத் தொழில்கள் ஊக்குவிக்கப்படுதற்குக் காரணமாக இருந்தது. இரண்டாவதாக, அயல்நாடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த தொகைகளில் கணிசமான பகுதி போர் முயற்சிகளுக்

காக விற்கப்பட்டுவிட்டன. இதன் காரணமாக, அவைகளினின்றும் கிடைத்து வந்த வருமானம் நிரந்தரமாக இழக்கப்பட்டுவிட்டதால், பிரிட்டனின் புலனுகா வாணிபச் செலுத்துநிலைக் கணக்கில் (the invisible account of the balance of payments) இருப்புக் குறைந்தது. மூன்றுவதாக, போரில் ஈடுபட்டுள்ள நாடுகளுக்கு தவிர்க்கமுடியாத வகையில் ஏற்படுவதுபோல், பிரிட்டனிலும் பணவீக்கம் ஏற்பட்டது. கடைசியாக, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியை நோக்குவோம். ஐக்கிய அமெரிக்காவானது (United States), போரின் விளைவாக, தொழிலிலும் விவசாயத்திலும் வெகுவாக முன்னேற்றமடைந்து உலகத்தின் முக்கியக் கடனீயும் நாடாக (world's major creditor) ஆகியது.

முதல் உலகப் போரையடுத்த பத்தாண்டுகளில் (in the decade following in the first world war), ஐக்கிய அரசாங்கமானது தனது புற வகையுடைமை (external solvency) மீண்டும் பெற பாடுபட்டுக் கொண்டிருந்தது—அதாவது, 1913ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படும்போது, தனக்குப் படுமோசமான வாணிபநிலையிருந்ததோர் உலகத்தில் அந்நிலையினைமாற்றி அவ்வுலகத்தில் தனது வகையுடைமையை மீண்டும் நிலை நாட்டப் பாடுபட்டுக் கொண்டிருந்தது. ஐக்கிய அரசாங்கமானது 1925ஆம் ஆண்டில் போருக்கு முன்னரிருந்த பவுண்டு டாலர் சமன்பாட்டினைக் கொண்டதாகிய பொன் திட்டத்தை (gold standard at the pre-war parity between the pound and the dollar) மீண்டும் கைக்கொண்டது; இந்த நிகழ்ச்சி அதன் பிரச்சினையை மேலும் இடர்ப்பாடானதாக ஆக்கியது. பிரிட்டிஷ் விலைகள் (british prices) அதிகரிக்கப்பட்டனவாயும், அதே சமயத்தில் ஐக்கிய அமெரிக்காவின் ஆக்கத்திறன் (productivity) பேரளவில் அதிகரித்ததாயுமுள்ளதொரு சமயத்தில், பிரிட்டன் மேற்கூறியவாறு போன்திட்டத்தைக் கைக்கொண்டதானது, முதல்தரமான தவருக இருந்தது. எரிகின்ற தீயில் எண்ணெ வார்த்ததுபோன்று, மேலும் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது, பிரிட்டனின் தொன்றுதொட்ட ஏற்றுமதிப் பொருள்களான நிலக்கரி, பருத்தி நெசவுப் பொருள்கள் (cotton goods) இவற்றில் பொதுவான சீர்குலைவு ஏற்பட்டது. பிரிட்டனின் நிலக்கரி வாணிபமானது, கல்லெண்ணெ (oil), புதியதாக ஐரோப்பிய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட நிலக்கரிச் சுரங்கங்களினின்றும் வெட்டியெடுக்கப்பட்ட நிலக்கரி இவற்றால் போட்டியிடப்பட்டுக் கைப்பற்றப்பட்டது.

பிரிட்டன், தனது, பவுண்டு ஸ்டெர்லிங்கை (pound sterling) முறையற்ற வகையில் மிகை மதிப்பு (high valuation) செய்த தானது, பிரிட்டிஷ் ஏற்றுமதித் தொழில்களுக்கு பெரும்பாலும் ஒரு தீராப் பிரச்சினையை (insoluable problem) ஏற்படுத்தி விட்டது. ஆனால், 1930ஆம் ஆண்டினையடுத்த பத்தாண்டுகளில் நிலை சற்று மாறியது. பிரிட்டன் 1931ஆம் ஆண்டில் பொன் திட்டக் கைக்கோளினின்றும் விலகியதும் புதிய ஏற்று மதித் தொழில்களில் (new export industries) வளர்ச்சியடைந்த தும்—குறிப்பாக வாகனங்கள் (vehicles), உயர்தரப் பொறியியல்; இயைபுப் பொருள்கள் ஆகியவற்றில் (high quality engineering and chemical products)—நிலையை ஓரளவிற்கு சுமுகமாக் கியது. இவ்வாறு 1920-ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகளில் பிரிட்டிஷ் வாணிபத்தில் பிரும்மாண்டமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லையெனில்—1928, 1938 ஆகிய ஆண்டுகட் கிடையே இத்தகைய முன்னேற்றமானது, 20 சதவீதமாக இருந் தது—பிரிட்டனின் அயல்நாட்டு செலுத்து நிலையானது (British balance of payments) போருக்கிடையேயுள்ள ஆண்டுகள் முழு வதும் (inter-war years) நம்பிக்கையை கைவிடும் வகையில் பலவீனமுற்றே இருந்தது.

ஆக, 1930ஆம் ஆண்டையடுத்த பத்தாண்டுகளில் பிரிட்டன் வெளிநாடுகளுக்கு எந்த ஒரு முக்கிய அளவிலும் (on any significant scale) ஒரு கடனளிக்கும் நாடாக (lender to the outside world) இருப்பது ஒழிந்தது. தொன்றுதொட்டு இருந்துவந்த ஏற்றுமதி அங்காடிகளை (export markets) இழந்ததன் காரண மாகவும், தொழிலாளர்கள், வேலையளிப்போர் (employers) இவர் களின் சங்கங்களினால் பொருளாதார முறையில் இருந்துவந்த மும்முரமான விறைப்பு நிலையும் (increasing rigidity) தொடர்ந்த வேலையின்மை (chronic unemployment) என்னும் பிரச்னையை உட்புகுத்தியது. 'சுபிட்ச' ஆண்டாகிய (booms year) 1937ஆம் ஆண்டின்போதும், ஐக்கிய அரசாங்கத்தில் (United Kingdom) காப்புறுதி பட்டத் தொழிலாளர்களில், (insured labour force) 11 சத வீதம் வேலையின்றியிருக்க நேரிட்டது.

2. போருக்குப் பிந்திய பிரச்சினைகள் (The Post-war Problems).

நிரந்தரமான விளைவுகளைப் பொறுத்த வரையில் 1939-45 ஆகிய ஆண்டுகளின் போது நடைபெற்ற போரின் விளைவுகளும் 1914-18 ஆகிய ஆண்டுகளின்போது நடைபெற்றப் போரின்

விளைவுகளுக்குச் சமமானவையே எனக் கூற இயலும். இன்னும் கூறப்போனால் இரண்டாவது உலகப் போரின் விளைவுகளுடைய நிரந்தரமான தன்மை முதல் உலகப் போரின் விளைவுகளுடைய நிரந்தரமான தன்மையைக் காட்டிலும் அதிக அளவில் இருந்தன எனக் கூறலாம். மீண்டும் ஒரு முறை, ஏற்கெனவே கைப்பற்றப் பட்டிருந்த அங்காடிகள் (established markets), இழக்கப்பட்டன. ஏற்கெனவே பிரிட்டிஷ் பொருள்களை இறக்குமதி செய்து கொள்வதில் திருப்தி அடைந்திருந்த நாடுகளின் தொழில் உற்பத்தியானது (industrial production) மீண்டும் ஒரு முறை தூண்டப் பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார நிலையானது, பிரிட்டிஷ், ஐரோப்பியத் தொழில்களைப் போன்று, சீர்குலைவு, கவனிப்பின்மை (damage and neglect) போன்றவற்றால் சீர் கேடடையாமல், போரினால் மீண்டும் ஒரு முறை ஊக்குவிக்கப் பட்டது. பிரிட்டனின் அயல்நாட்டு முதலீடுகள் (British investments abroad) மீண்டும் ஒரு முறை வெறுமையாக்கப்பட்டன. (depleted); அதன் புலனாகா ஈட்டங்களும் (invisible earnings) இழக்கப்பட்டன.

பிரிட்டனின் 1945ஆம் ஆண்டுக்குப் பிந்திய பொருளாதார நிலையின் மூன்று தனிச் சிறப்பான அம்சங்கள் (three special features) ஈண்டு கவனிக்கத் தக்கவையாகும். அவற்றுள் முதலாவது சிறப்பான அம்சம், பிரிட்டிஷ் வாணிபத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும். 1947 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் வாணிபமானது 1938ஆம் ஆண்டின்போதிருந்த வாணிபத்தைக் காட்டிலும் 16 சத வீதம் சாதகக் குறைவாக (less favourable) இருந்தது. இதன் காரணமாக, அதனுடைய நடப்பு இறக்குமதிப் பொருள்களுக்குப் பணம் செலுத்தும் பொருட்டு பிரிட்டன் 1947ஆம் ஆண்டினை அடுத்த ஓர் ஆண்டில் £ 250 மில்லியன் மதிப்புள்ள அதிகமான ஏற்றுமதிப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டியதாக இருந்தது—அதாவது, பிரிட்டிஷ் வாணிபமானது போருக்கு முந்திய காலத்து மட்டத்தில் (at the pre-war level) இருந்திருக்குமானால் எவ்வளவு ஏற்றுமதிப் பொருள்களை ஏற்றுமதி செய்திருக்க வேண்டுமோ அதைவிட £ 250 மில்லியன் மதிப்புள்ள ஏற்றுமதிப் பொருள்களை அதிகமாக ஏற்றுமதி செய்ய வேண்டியதாக இருந்தது. ஏற்கெனவே இந்நூலில் நாம் கண்டறிந்தவாறு ஐக்கிய அரசாங்கத்தின் வாணிப நிலையானது 1938ஆம் ஆண்டில் இருந்ததைக்காட்டிலும் தற்போது மிகக் குறைந்த அளவில்தான் சாதகக் குறைவாக (less favourable) இருந்தது.

இரண்டாவது முக்கிய அம்சமானது, 1940ஆம் ஆண்டினை யடுத்த பத்தாண்டுகளிலும் (1940's) 1950ஆம் ஆண்டினையடுத்த பத்தாண்டுகளிலும் (1950's) டாலர் இடைவெளியானது (dollar gap) கணிசமான அளவிற்குத் தொடர்ந்து நீடித்துக் கொண்டே யிருந்தது. அதாவது டாலர் பிரதேசத்தோடு (குறிப்பாக, வடக்கு—north, மத்திய—central, அமெரிக்காவோடு) ஒப்பிடப் படும்போது அதனுடைய அயல் நாட்டுச் செலுத்துநிலையானது (balance of payments) சமன்கேடான நிலையில் (disequilibrium) இருந்தது. 18-ஆம் அட்டவணை சுட்டுவது போன்று, அண்மை ஆண்டுகளில் பிரிட்டன் ஸ்டெர்லிங் பிரதேசத்தில் உள்ள மற்ற நாடுகளுடன் வாணிபம் செய்ததன் விளைவாக தொடர்ந்து உபரி யைப் (surplus) பெறுவதாக இருந்தது. ஆயினும், உலகத்தின் மற்ற நாடுகளுடன்—குறிப்பாக டாலர் பிரதேசத்துடன் செய்துவந்த வாணிபத்தில் 1950ஆம் ஆண்டினையடுத்த பத்து ஆண்டுகளின் இறுதிவரையிலும் (until the end of the 1950's) கணிச மான அளவிற்குப் பற்றுக்குறையினைத் (substantial deficit) தொடர்ந்து அடைந்து கொண்டே வந்தது.

அட்டவணை 18: ஐக்கிய அரசாங்கத்தின் நடப்புக் கணக்கில் காணப்படும் பிரதேச செலுத்து நிலைகள் [1](Regional Balances of Payments on Current Account of the U. K.)

	ஸ்டெர்லிங் பிரதேசத்தில் உள்ள மற்ற நாடுகளுடன்	மற்ற எல்லா பிரதேசங் களுடனும்	முழுவதும் தழுவிய
1949	+299	—261	+38
1951	+320	—739	—419
1953	+152	+ 27	+179
1955	+200	—292	— 92
1957	+360	—131	+229
1959	+279	—168	+111
1961	+276	—353	— 77

ஆதாரம்; ஆண்டுப் புள்ளி விவர அறிக்கை, எண் 97, 1960ஆம் ஆண்டு [மாட்சிமை தங்கிய அரசியாரின் புள்ளி விவரத் துறை (H. M. S. O.) லண்டன், 1960] அட்டவணை 272ம், 1962ஆம் ஆண்டின் அயல்நாட்டுச் செலுத்து நிலைபற்றிய வெள்ளையறிக்கையும்.

அநேகமாக ஒவ்வொரு டாலர் பிரதேசத்தைச் சாராத நாட்டினுலும் வெவ்வேறு அளவில் அடையப் பெற்று இருந்த இத்தகைய டாலர் பற்ருக்குறைக்கான காரணங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார நிலையானது (the United States economy) இரண்டு போர்களினுல், நன்கு ஊக்குவிக்கப்பட்டது. மற்ற நாடுகளின் பொருளாதார நிலையோ மேற் சொல்லப்பட்ட இரண்டு போர்களினுலும், அங்காடிகளின் இழப்பு, போர் உற்பத்திக்கான பேரளவு முதலீட்டு மாற்றங்கள், சரிவர பராமரிப்பின்மை, தேய்ந்த பாகங்களை மாற்ற இயலாமை ஆகியவற்ருல் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட முதல் விரயம், (capital wastage), பொருள் விரயம் முதலியவற்ருல் ஏற்பட்ட கொடூரமான அதிர்ச்சிகளால் அல்லலுற்றன. ஆயினும், ஈண்டு ஒன்றை ஆழ்ந்து ஆராய வேண்டும். போர்கள், அமெரிக்கப் பொருளாதாரத்தின் உற்பத்தி மேம்பாட்டினை இறக்கச் செய்தனவே தவிர உற்பத்தி மேம்பாட்டிற்கு அவைகள்தான் காரணம் என்று சொல்வதற்கில்லை. அத்தகைய மேம்பாடானது (that superiority) ஐக்கிய அமெரிக்காவின் பரந்த இயற்கைச் சாதனங்களாலும் (vast natural resources), ஓரளவிற்கு பேரளவு உற்பத்தி முறையில் உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் அதன் பரந்த உள்நாட்டு அங்காடியாலும், அந்நாட்டின் தொழிலாளர்களிடையேயும் தொழில் முயல்வோர்களிடையே (labour force and enetrepreneurs) உள்ள இடம் பெயர் தன்மையாலும் (mobility) இணக்கமான தன்மையாலும் (flexibility) ஏற்பட்டுள்ளது; இந்த இரு போர்களுமே மூண்டிராவிட்டாலும், உலக வாணிபத்தில் அமெரிக்காவின் சிறப்பை மேற்கூறிய காரணங்கள் உயர்த்தியிருக்கக் கூடும்.

பிரிட்டனின் அயல்நாட்டுச் செலுத்துநிலை வரலாற்றில் ஸ்டெர்லிங் பிரதேசமல்லாத பகுதிகளுடன், தொடர்ந்த பற்ருக்குறையினை (continuing deficit) அடைந்திருப்பதென்பது புதியதொரு சரித்திர நிகழ்ச்சியல்ல; அத்தகையதொரு பற்ருக்குறையானது போருக்கு முன்பேகூட இருந்தது. ஆயினும், முன்பெல்லாம், பிரிட்டன் தனது டாலர் பற்ருக்குறையினை, தான் மற்றப் பகுதிகளில் ஈட்டிய டாலர் உபரியைக் (dollar surplus) கொண்டு, ஈடு செய்துவந்தது; மேற்கூறிய மற்றப் பகுதிகள் (other regions) டாலர் பிரதேசத்திலிருந்தும் டாலர் உபரியைப் பெற்றிருந்தமை

யால் அந்நாடுகளினின்றும் பிரிட்டன் பெற்ற உபரியை டாலர்க ளாக மாற்றி டாலர் பிரதேசத்திற்குக் கொடுத்தல் அதற்கு சாத்தியமாக இருந்தது. வேறு வழியிற் கூறப்போனல், டாலர் பற்றுக் குறையானது, முக்கோண வடிவ வாணிபத்தால் (triangular trade), ஈடு செய்யப்பட்டதெனலாம். ஒரு சான்றினைக் கொண்டு இக் கருத்தினை நாம் விளக்கலாம். பிரிட்டன் தான், ஐக்கிய அமெரிக்காவுடன் செய்த வாணிபத்தின் விளைவாக £ 20 மில்லியன் பற்றுக்குறையினைப் பெற்றதென்றும் ஆனல் பெல்ஜியத்துடன் அது செய்த வாணிபத்தின் காரணமாக £ 20 மில்லியன் உபரியைப் பெற்றதெனவும் கொள்வோம். பெல்ஜிய மானது (Belgium) ஐக்கிய அமெரிக்காவிடம் உபரியைப் பெற் றிருக்கும் பட்சத்தில் (அல்லது வேறு எந்த வழியிலாவது டாலர் களை வசதியான அளவில் அது பெற்றுக் கொண்டிருக்கும் போதோ) பிரிட்டன், தான், பெல்ஜியத்துடன் செய்த வாணிபத் தின் விளைவாகப் பெற்ற £ 20 மில்லியனுக்குச் சமமான பெல் ஜிய ஃபிரான்குகளை (Belgian francs) டாலர்களாகவே அதனிட மிருந்து பெற்று ஐக்கிய அமெரிக்காவிற்கு, தான், கொடுக்க வேண்டிய டாலர்களைக் கொடுத்துவிட இயலும். போருக்கு முந் திய ஆண்டுகளில் பிரிட்டன் ஸ்டெர்லிங் பிரதேசத்தின் மற்ற பகுதிகளினின்றும் உபரியை ஈட்டியது (இதனைப்பற்றி பின் வரும் ஓர் உட்பிரிவில் ஆராயப்பட்டுள்ளது); ஸ்டெர்லிங் பிரதேசத் தின் மற்ற நாடுகள் டாலர் பிரதேசத்தினின்றும் உபரியை ஈட்டி வந்தமையால், இத்தகைய டாலர் உபரியினுல் பிரிட்டன் தனது டாலர் பற்றுக்குறையினை ஈடு செய்வதற்கு (ஸ்டெர்லிங் பிர தேசத்தின் மற்ற நாடுகளில் தான் பெற்றுள்ள ஸ்டெர்லிங் உபரியை டாலர்களாக மாற்றி) இயன்றது. போருக்குப்பிந்திய ஆண்டுகளில், ஸ்டெர்லிங் பிரதேசத்தின் மற்ற நாடுகள் டாலர் உபரிகளை ஈட்டுவதாக இல்லை. அவைகள் ஈட்டக்கூடிய டாலர் உபரிகளைக்கொண்டு பிரிட்டனுக்கு அவைகள் செலுத்தவேண்டிய வற்றை டாலர்களாகச் செலுத்தக்கூடும்; இந்த் டாலர்களைக் கொண்டு பிரிட்டன் டாலர் பிரதேசத்திற்கு, தான், செலுத்த வேண்டிய டாலர்களைச் செலுத்தி தனது செலுத்து நிலையை சமாளிக்க முடியும். ஆனல், ஸ்டெர்லிங் பிரதேசத்தின் மற்ற நாடுகள் டாலர் உபரிகளை, போருக்குப் பின்னர், ஈட்டுவதாக இல்லையாதலின், போருக்குக்குப் பிந்திய ஆண்டுகளில் இடர்ப் பாடுகள் தோன்றியுள்ளன.

பிரிட்டனின் இத்தகைய ஸ்டெர்லிங்-தவிர்த்த செலாவணிப் பற்றுக் குறையானது (non-sterling gap), பவுண்டு ஸ்டெர்லிங் கிற்கு பூரண மாற்றுரிமை வழங்குவதற்கு தொடர்ந்து இயலாத படி செய்துள்ளது. டாலருக்குப் பூரண மாற்றுரிமையை (full convertibility) பிரிட்டன் வழங்குமாயின், அதில் உறையும் மக்க ளில் (residents) பெரும்பாலோர் ஐக்கிய அமெரிக்காவினின்றும், தற்போது வாங்குவதைக் காட்டிலும், அதிக அளவில் பொருள் களை வாங்கத் தலைப்படுவர். இதன் காரணமாக பவுண்டுகளை (pounds) டாலர்களாக மாற்றிக்கொள்ள மக்கள் ஒருவர்க் கொருவர் முந்திக்கொண்டு விரைவர்; இது போன்றே, தாம் தற்போது ஸ்டெர்லிங் பிரதேசத்தில் வாங்கும் பொருள்கள் யாவற்றையும் டாலர் பிரதேசத்தில் வாங்கிக் கொள்வதற்கும் விரைந்து முனைவர். இத்தகையதொரு சூழ்நிலை ஏற்படுமாயின் பிரிட்டனின் டாலர் காப்புகள் (british dollar reserves) தொடர்ந்து வறட்சியடையும்; சிறிது காலம் சென்ற பின்பு டாலர் காப்புகள் (dollars) முற்றிலும் இல்லாமலேயே போகும். எனவே, பிரிட்டனும், பவுண்டினைத் தமது செலாவணியாகப் பயன்படுத்தும் பிற நாடுகளும் (the other countries using the pound as their currency), டாலர் பிரதேசமல்லாத மற்ற பிர தேசங்களுடன் செய்யும் வாணிபத்தில் தொடர்ந்து உபரியை ஈட்ட இயலும்போது மாத்திரமே—இந்த உபரியைக்கொண்டு அந்நாடுகள் டாலர் பிரதேசத்திற்குத் தாம் கொடுக்கவேண்டிய டாலர்களைக் (அதாவது. தமது டாலர் பற்றுக்குறையினை) கொடுத்து இத்தகைய செலுத்து நிலையைச் சரிக்கட்டிக்கொள்ள முடியும்.

மூன்றுவதும், மிகவும் அடிப்படையானதுமானப் பிரச்சினை, போருக்குப் பிந்திய பிரிட்டனுடைய நிலைக்கும் அதற்கு முன்னர் இருந்த நிலைக்குமிடையேயுள்ள, வேறுபாடாகும். இத்தகைய வேறுபாட்டின் காரணமாக பிரிட்டன், உள்நாட்டில் வேலை நிறைவிற்குக் குந்தகம் ஏற்படாவண்ணம், அயல்நாட்டு வாணி பத்தில் வகையுடைமையை (solvence) நிலை நாட்டும் அரியதொரு பணியினை நிறைவேற்ற தற்போது பாடுபட வேண்டியுள்ளது. இத்தகைய இரட்டை நோக்கம் வாய்ந்த பொருளாதாரக் கைக் கோள் (dual aims of economic policy) இதற்கு முன்னர் இருந்த தில்லை; இக் கைக்கோளானது, முன் அத்தியாயங்களில் விலைகள் (prices) அயல் நாட்டு வாணிபம் (foreign trade) இவைபற்றி

விவாதித்தபோது, அவ் விவாதங்கள் முழுமையும் இடம்பெற்றிருந்தது. அயல்நாட்டுச் செலுத்துநிலையில் (balance of payments) ஏற்படும் பற்றுக்குறையினை (deficit) பணவடிப்பினுல் (deflation) ஈடு செய்ய முடியாது; ஏனெனில், பணவடிப்பானது வேலை நிறைவிற்கு (full employment) குந்தகம் விளைவிப்பதாக இருக்கும். மற்றொருபுறம் வேறொரு கைக்கோளான பண மதிப்புக் குறைப்பு செய்தலானது (devaluation), சென்ற அத்தியாயத்தின் இறுதியில் ஆராய்ந்தவாறு கூலி-விலை திருகுச் சுழல் (wage-price spiral) ஏற்படுத்துமாயின், அதன் பயன்தரு திறன் (effectiveness) பெரிதும் இழக்கப்பட்டுவிடுவதாக உள்ளது. வேலை நிறைவின் நலன்களைத் துய்க்கும் தொழிற் சங்கங்களும் வேலையளிப்போர்களும் (trade unions and employers) அந் நலன்களை, உற்பத்தி மட்டத்தைப்பற்றியே கருதாது கூலிகளையும் (wages) இலாபங்களையும் (profits) தொடர்ந்து அதிகரித்துக்கொள்ளப் பயன்படுத்திக்கொள்ளத் தலைப்படுவார்களேயாகில், வேலை நிறைவானது நிச்சயமாக, திரும்பத் திரும்ப நிகழ்கிற பண வீக்கத்தினுல் ஏற்படும் (recurring inflation) தீமைகளைக் கொணரும். பண வீக்கச் சூழ்நிலையுடன் சேர்ந்துள்ள அதிகரித்த தேவையானது அதிகரித்த இறக்குமதிகளையும், ஏற்றுமதிகளின் குறைப்பையும் ஏற்படுத்தும்; பண வீக்கத்தால் கிளர்ச்சியூட்டப்பட்ட உள்நாட்டு அங்காடிக்கு (the buoyant home market) பொருள்கள் நிறைய வெளிநாடுகளினின்றும் தருவிக்கப்படுவதால் இத்தகைய நிலை ஏற்படும்.

ஆக, இவ் வாதமானது விலைகளின் ஒப்பீடான நிலைபேற்றுடன் (relative stability of prices) வேலை நிறைவை எவ்வாறு ஒத்தியங்குமாறு செய்வதென்னும் அடிப்படையான பிரச்சினைக்கே (fundamental problem) மீண்டும் வந்தமைகின்றது—இப்பிரச்சினையானது முன்னருள்ள பக்கங்களில் பலமுறையும் தலைதூக்கியுள்ளது. தனது எல்லைக்குள்ளேயே தன்னுடைய தேவைகளில் பெரும்பாலானவற்றையும் நிறைவேற்றிக்கொள்ள இயலும் ஒரு நாடானது, அதனுடைய குடிமக்கள் தானடங்குதலைக் (self-restraint) கடைப்பிடிப்பதற்கானதொரு வழியினைக் கண்டுபிடிக்க இயலாதவர்களாகவோ அல்லது விரும்பாதவர்களாகவோ இருப்பின், அத்தகைய நாடு பண வீக்கத்தின் தீமைகள் (evils of inflation), வேலையின்மையால் வரும் தீமைகள் (evils of unemployment) ஆகிய இவ்விரு தீமைகளில் குறைந்தபட்சம்

ஏதாவதொன்றினைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கும்—அதே சமயத்தில், அந் நாட்டு மக்கள் தானடங்குதலைக் (self-restraint) கடைப் பிடிப்பதற்கானதொரு வழியினைப் பின்பற்றுபவர்களாக இருப்பார்களேயாகில் மேற்கூறிய இரு வகை தீமைகளையுமே தவிர்த்தல் இயலும். ஆயினும், தனது அவசியமான உணவுப் பொருள்களுக்கும் (food stuffs) கச்சாப் பொருள்களுக்கும் (raw materials) இறக்குமதியை நம்பி வாழ்கின்ற பிரிட்டனைப் போன்றதொரு நாட்டிற்கு, இத்தகைய தொரு தெரிதல் முறையானது (choice) ஒன்றும் செய்தல் இயலாது. ஏற்றுமதி ஈட்டங்களை (export earnings) பெரிதும் நம்பி வாழும் ஒரு நாட்டிற்கு முற்றிய (chronic) பணவீக்கத்தைக் (மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது) கைக்கொள்வதென்பது நடைமுறைக்கு ஒவ்வாததொன்றாகும். முடிவாக, அத்தகைய நாடானது தனது மக்களுக்கு ஒன்றை நன்கு அறிவுறுத்துதல் வேண்டும்; அதாவது, தனது பொருள்களுக்கு அல்லது தனது உழைப்புச் சக்திக்கு (labour) உறைவிடமாகவுள்ள அங்காடியை தனது உள்துறை நலன்களுக்காக சுரண்டுதலானது, திருட்டு அல்லது தீயிடல் (arson) போன்ற சமூக விரோதமான செயல்களுக்கு ஒப்பான செயலென்று அறிவுறுத்துதல்வேண்டும். எனவே, இத்தகைய உண்மையை எடுத்து அறிவுறுத்திய பின்னர், உள்ள பிரச்சினை எதுவெனில் அவ்வுண்மையினை செயல் திறமான கைக்கோளாக வடித்தெடுப்பதே.

3. ஸ்டெர்லிங் பிரதேசம் (The Sterling Area)

சென்ற உட்பிரிவினை ஆராய்ந்தபோது பலவிடங்களில் ஸ்டெர்லிங் பிரதேசத்தைப்பற்றிய (sterling area) குறிப்புகள் தோன்றின. ஸ்டெர்லிங் பிரதேசம் என்பது, அதன் பெயருக்கேற்ப, ஒன்று அல்லது மற்ற வகையில் பவுண்டு ஸ்டெர்லிங்கை (pound sterling) தமது செலாவணியாகப் பயன்படுத்தும் நாடுகளைக் குறிக்கின்றது. பொன் திட்டமானது 1931–ஆம் ஆண்டு முறிவடைந்தது. அதற்கு முன்னர் ஸ்டெர்லிங் பிரதேசம் (sterling area) என்ற ஒன்று இருந்ததாகக் கூறமுடியாது. அப்போதெல்லாம், எல்லா செலாவணிகளுமே ஒவ்வொன்றும் மற்ற ஒரு செலாவணியாக நிர்ணயிக்கப்பட்ட மாற்றுவீதங்களில் (fixed exchange rates) குறுகிய வரையறைகளுக்குள் (within narrow limits) தடையின்றி மாற்றிக்கொள்ளக்கூடியனவாக இருந்தன. இதன் காரணமாக, ஓர் ஏற்றுமதியாளர் தனது ஏற்றுமதிப்

பொருள்கள் எந்த செலாவணிக்கு விற்கப்படினும் அதனைப்பற்றி சற்றும் பொருட்படுத்தாதவராகவே இருந்தார்—எந்த செலாவணிக்கு அவைகள் விற்கப்பட்டபோதிலும் வேறுபாடு ஒன்றுமில்லை என்பதே இதற்குக் காரணமாக இருந்தது.

ஆயினும், பொன் திட்டம் (gold standard) முடிவடைந்த பின்னர், தங்களது செலாவணிகளின் மதிப்பானது மாற்றங்காடிகளில் (exchange rates) ஏறி இறங்கிக் கொண்டிருப்பதை அனுமதித்துக் கொண்டிருப்பதா அல்லது பொன் (gold) அல்லது மற்ற முக்கியமானதொரு செலாவணியுடன் நிலைபேறுள்ளதொரு தொடர்பினை ஏற்படுத்திக்கொள்வதா (to maintain them in some stable relationship within gold or another major currency) என்பதனை முடிவு செய்ய வேண்டியவைகளாக இருந்தன. இவற்றுள் பெருவாரியான நாடுகள்—குறிப்பாக, காமன்வெல்த் நாடுகள், பவுண்டு, ஸ்டெர்லிங்குடன் நிர்ணயிக்கப்பட்டதொரு தொடர்பினை (fixed relationship) ஏற்படுத்திக்கொள்வதென்று தீர்மானித்தன. இவ்வாறு ஒரு தொடர்பினை அவைகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியம் என்ன? இதற்கு அடிப்படையான காரணம் என்னவெனில், குறிப்பாக அவைகள், ஐக்கிய அரசாங்கத்தினுடன் தொன்றுதொட்டு வைத்துக் கொண்டிருந்த நெருங்கிய பொருளாதாரத் தொடர்புகளே யாகும். ஆக, ஐக்கிய அரசாங்கத்தினோடு—பவுண்டு ஸ்டெர்லிங்குடன்—நிர்ணயிக்கப்பட்டதொரு சமன்பாட்டில் (fixed parity) தமது செலாவணிகளை ஏற்பாடு செய்துகொள்வதானது குறைந்தபட்சம் அவைகளுடைய அயல்நாட்டு வாணிபத்தின் ஒரு பகுதிக்கு (வழக்கமாக ஒரு முக்கிய பகுதிக்கு) நிலைபேறுள்ளதொரு மாற்றுவீதத்தின் (a stable exchange rate) எல்லா நலன்களையும்—அதாவது பொன் திட்டம் முடிவடைந்ததன் காரணமாக உலக முழுவதும் இழந்ததான நலன்களை—அளிக்கவல்லதாக இருந்தது.

ஸ்டெர்லிங் பிரதேச நாடுகளுக்கு ஐக்கிய அரசாங்கமே முக்கிய அங்காடியாகவும் (major market), முக்கிய அளிப்போர் நாடாகவும் (major supplier) இருந்தபோதிலும், அந்நாடுகள் ஐக்கிய அரசாங்கத்துடன் வைத்திருந்த தொடர்பானது ஏற்றுமதிகளுக்கானதோர் அங்காடியின் தொடர்பாகவும் (a market for exports) இறக்குமதிகளுக்கானதோர் ஆதார நாடாகவும்

மட்டுமே இராமல், வேறு சிறப்பு அம்சத்தைக் கொண்டதாகவும் இருந்தது. ஸ்டெர்லிங் பிரதேசத்தின் பல பகுதிகள் பிரிட்டிஷ் குடியேற்ற மக்களால் (British Colonists) விருத்தி செய்யப் பட்டன. அம் மக்கள் அந் நாடுகளினின்றும் பெற்ற தமது இலாபங்களை பிரிட்டிஷ் பாங்குகளிலும் (British Banks), நிதியகங் களிலும் (finance houses), காப்புறுதிக் கம்பெனிகளிலும் செலுத் தியும் அவைகளின்மூலம் தமது வணிக நடவடிக்கைகளை நிகழ்த்தி யும் வந்தன. எனவே, லண்டன் பாங்கானது இந் நாடுகள் பெரும்பாலானவைகளுக்கு பாங்காகப் (banker) பணிபுரியலா யிற்று. இவ்வாறு அந்நாடுகளின் முக்கிய அயல்நாட்டுச் சொத் துகள் யாவும் லண்டனில் ஸ்டெர்லிங் கடன் பத்திரங்களாக (sterling securities) வைக்கப்பட்டிருந்தன. மேலும், முக்கியமான பண்ட அங்காடிகள் (the major commodity markets) ஐக்கிய அரசாங்கத்தில் இருந்துவந்தன—லிவர்ப்பூல் பருத்தி பங்கு மாற்று நிலையம் (The liverpool Cotton Exchange), லண்டன் தகர தேயிலைப் பங்குமாற்று நிலையங்கள் (the London tin and tea exchanges) முதலியவைகள் முக்கியமான பண்ட அங்காடிகளாக செயல்புரிந்து வந்தன. இதன் காரணமாக, இந் நாடுகளின் ஏற்று மதிகள் பெரும்பாலும் லண்டன் மூலமாகவே—அந்த ஏற்று மதிப் பொருள்கள் சேரவேண்டிய நாடுகள் வேறு எங்கோ இருப்பினும்—ஸ்டெர்லிங் கணக்கில் மதிப்பிடப்பட்டு, விற்கப் பட்டு வந்தன. கடைசியாக. இந் நாடுகள் யாவும் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் மூலதனத்தால் (British capital) விருத்தி செய்யப் பட்டன. இதன் காரணமாக, அவைகள், தம்மை, மேற்கொண்டும் முன்னேற்றம் அடையச்செய்வதற்கு, மூலதனத்தைப் பெறுவ தற்கு, பிரிட்டனையே முக்கிய ஆதாரமாக நம்பியிருந்தன. அந் நாடுகளின் வாணிபத்தின் பெரும்பகுதிகளும், சொத்துகளும், (assets), கடன்களும் (debts) ஸ்டெர்லிங் அளவையில் கணக்கிடப் பட்டதன் காரணமாக, இந் நாடுகள் தம்முடைய செலாவணி களுக்கு (currencies) பவுண்டு ஸ்டெர்லிங்குடன் நிலைபேருள்ள தொரு தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளுதல் நலம் விளைவிப்ப தாக இருந்தது.

1939-ஆம் ஆண்டின்போது போர் துவங்கியபோது, அப்போது நிறுவப்பட்ட ஐக்கிய அரசாங்க மாற்றுக் கட்டுப்பாட்டு நிலை யத்திற்கு (United Kingdom exchange control), ஸ்டெர்லிங் பிரதே சத்தின் சரிநுட்பமான எல்லையினை நிர்ணயிப்பது அவசியமான

தாக இருந்தது; அது முதற்கொண்டு, அதனுடைய அங்கத்தினர்களின் தொகையில் கணிசமான மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. தற்போது ஸ்டெர்லிங் பிரதேசத்தில் கானடா தவிர்த்த எல்லா பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளும், ஐஸ்லாந்து (Iceland), ஈராக் (Iraque), ஐரிஷ் குடியரசு (Irish Republic). ஜார்டன் (Jordon), லிபியா (Libya) ஆகிய நாடுகளும் அங்கம் வகிக்கின்றன. 1960ஆம் ஆண்டின்போது, உலக நாடுகளின் வாணிபத்தில் காற்பங்கு (a quarter), ஸ்டெர்லிங் பிரதேசத்தின் கையிலிருந்தது.

வாணிபத் தடைகளும் (trade restrictions), மாற்றுக் கட்டுப்பாடும் (exchange control) மங்கியிருந்த போருக்குப் பிந்திய உலகத்தில் ஸ்டெர்லிங் பிரதேசத்தைச் சார்ந்த நாடுகள், கணிசமான அளவில் நன்மை அடைந்து வந்தன. இதில் அங்கம் வகித்த எல்லா அங்கத்தினர் நாடுகளும் ஸ்டெர்லிங்குடன் நேரடியான தொடர்பினைக் கொண்டதாகிய செலாவணிகளை (currencies which are directly conneeted with sterling) உடையனவாக இருந்த காரணத்தால், ஸ்டெர்லிங் பிரதேசத்திற்குள் மாற்றுவீத ஏற்ற இறக்கங்கள் (exchange-rate fluctuations) ஏற்படுவதற்கு இடமில்லாமல் போயிற்று; ஐக்கிய அரசாங்கமானது (United Kingdom) 1949ஆம் ஆண்டு பவுண்டை (pound) மதிப்புக் குறைப்பு செய்தபோது, ஸ்டெர்லிங் எல்லையின் மற்ற அங்கத்தினர் நாடுகளும் (பாகிஸ்தானைத் தவிர்த்து) தங்களது செலாவணிகளை ஏறக்குறைய அதற்குச் சமமாகவே மதிப்புக் குறைப்பு (devaluation) செய்தன. இதன் காரணமாக அவைகளுக்கிடையேயிருந்த ஒப்பீட்டு நிலையானது நிலைபிறழாமலிருந்தது. மேலும், ஸ்டெர்லிங் பிரதேச நாடுகளுக்கிடையே, ஒரு நாட்டின் செலாவணியை மற்றொரு நாட்டின் செலாவணியாக மாற்றிக்கொள்வதற்கு, தடைகளேதுமில்லாதிருந்த காரணத்தால், ஸ்டெர்லிங் பிரதேசத்திற்குள் நடைபெறும் நடப்பு அல்லது மூலதனப் பேரங்களுக்குப் (current or capital transactions) பணம் செலுத்துவதற்கு தடையேதுமின்றி, சரளமான சூழ்நிலையிலிருந்தது. வாணிபத்தின் மீதும் செலாவணிகளை மாற்று செய்வதன்மீதும் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளினால் பன்னாட்டு வாணிபமானது பொதுவாக தடைபட்டும் (hampered) சீர்குலைந்தும் இருந்த சமயத்தில் ஒப்பீடான மாற்றுவீதங்களில் ஏற்படுத்தப்பட்ட பூரண நிலைபேறு (complete stability of relative exchange rates), தடையிலா மாற்றுரிமை (free convertibility) ஆகிய இவ்விரண்டும், ஸ்டெர்

லிங் பிரதேசத்தின் அங்கத்தினர் நாடுகளுக்கிடையே பலமுக வாணிபத்தை (multilateral trade) பெரிதும் ஊக்கின. ஸ்டேர்லிங் பிரதேசத்தின் மற்றுமோர் அம்சத்தினை நோக்குவோம். ஸ்டேர் லிங் பிரதேசத்தின் அங்கத்தினர் நாடுகள் தமது பொன், டாலர் காப்புகளை (gold and dollar reserves) தமது சொந்த மைய பாங்கு களில் (central banks) தனித்தனியே இருப்பு வைத்துக்கொள்வ தற்குப் பதில் லண்டனிலுள்ள ஒரு மைய தேக்கத்தில் (central pool in London) இருப்பு வைத்துக்கொண்டிருந்தன. இதனால், ஸ்டேர் லிங் எல்லையின் காப்புநிதிகளை (reserves of the area) மிக்ச்சிறந்த பயனுக்குப் பயன்படுத்திக்கொள்வது இயன்றது; பல கிளை நிலை யங்களைக் கொண்டதொரு பாங்கானது எவ்வாறு ஒரு பிரதேசத் தின் கிளையினுடைய வழக்கத்திற்குப் புறம்பான அதிக செலவு களை (unusual outgoings) மற்ற பிரதேசங்களிலுள்ள அதன் கிளை களின் வரவுகளின் மூலமாகச் சரிக்கட்டிக்கொள்ள முடி வதனால் தனது ரொக்கக் காப்புகளை (cash reserves) சிக்கனமாக விரயமின்றிப் பயன்படுத்திக்கொள்வதுபோல, ஸ்டேர்லிங் பிரதேசமும் மைய தேக்கத்திலுள்ள ரொக்கக் காப்புகளைப் பயன் படுத்திக்கொள்ள முடிகின்றது. ஸ்டேர்லிங் பிரதேசத்தின் ஒவ் வோர் அங்கத்தினர் நாடும் தனக்கு நெருக்கடி ஏற்படும்போது, இவ்வாறு அப் பிரதேசம் முழுவதற்குமாகச் சேர்த்துவைக்கப் பட்ட காப்புநிதிகளை பயன்படுத்திக்கொள்ள முடிந்தது.

ஆயினும், ஸ்டேர்லிங் பிரதேசத்திற்கு பிரிட்டன் நடுநாயக மாக விளங்கும் இந்த நிலைக்கு அண்மை ஆண்டுகளில் பழுது ஏற்பட்டு வந்துள்ளது. பவுண்டு ஸ்டேர்லிங்கை (pound sterling) டாலர்களாக மாற்று செய்துகொள்ளுதல் இயலாமலிருப்பதன் காரணமாக (the inconvertibility), லண்டனின் இருப்புகளுக்கு, அவை பன்னாட்டு ஏற்புத்தன்மை வாய்ந்ததொரு சொத்து (internationally accepted asset), என்னும் சிறந்ததொரு கவர்ச்சி அம்சம், குறையலாயிற்று. மேலும், ஸ்டேர்லிங் பிரதேசத்தில் அங்கத்தினர்களாக இருந்த சில நாடுகள் டாலர் பிரதேசத்தில் தாம் நடத்திவந்த வாணிபத்தின் காரணமாக டாலர் உபரி களைப் பெற்றன. இந் நாடுகள், ஸ்டேர்லிங் பிரதேசத்தின் மைய தேக்கத்திற்கு (central pool), பொன்னையும் (gold), டாலர்களையும் (dollars) செலுத்திவிட்டு அவற்றிற்குப் பதிலாக குறுகிய பயன் களைமட்டுமே யுடைய ஸ்டேர்லிங்குகளைப் பெறுதலில் தங்களுக்கு என்ன நன்மைகள் உள்ளதென்று கேட்கலாயின. [அவ்வபேறுக,

லாயின. [அவப்பேருக, குடியேற்ற நாடுகளே மிகவும் பெரிய டாலர் ஈட்டும் நாடுகளாக (the biggest dollar-earners) இருந்தன; அதேசமயத்தில் குடியேற்ற உரிமை நாடுகள் (Dominions) மிகப் பெரிய டாலர் செலவழிக்கும் (dollar-spenders) நாடுகளாக இருந் தன. இதன் காரணமாகச் செல்வமிக்க நாடுகள், ஏழ்மை மிக்க நாடுகளுக்கு உதவுதல் என்னும் இயற்கை நியதி தலைகீழாக மாற்றியமைக்கப்பட்டுவிட்டது). மேலும், கடந்த காலங்களிலெல் லாம், பிரிட்டன் ஸ்டெர்லிங் பிரதேச அங்கத்தினர் நாடுகளின் வளர்ச்சிக்குக் கடன் கொடுக்க இயன்ற காரணத்தாலேயே அப் பிரதேசத்தின் தலைமைப் பீடமாக இருக்க முடிந்தது. இதனுல் ஐக்கிய அரசாங்கமானது கடந்த காலங்களில் முழுவதும் தழுவிய அயல்நாட்டுச் செலுத்துநிலையில் உபரியை வைத்திருந்தது (a surplus on the overall balance of payments) என்பது தெளிவாகிறது. ஆனுல், தற்போதோ, அதன் நிலை வேருக உள்ளது; இன்னும் சரிவர வளர்ச்சியடையாத காமன்வெல்த் அங்கத்தினர்களுக்குத் தேவையான போதிய மூலதனத்தைக் கொடுத்துதவக்கூடிய தகுதி வாய்ந்ததொரு கடனீவோராக (a consistant creditor) அதனுல் இருப்பது அரிதாக உள்ளது. தற்போது ஐக்கிய அமெரிக் காவே, உலகத்தின் மிக முக்கிய கடனீயும் நாடாக (the world's major international lender) உள்ளது. எனவே, பெருமளவில் மூல தனத்தைக் கடனுகத் தொடர்ந்து பெற்றுக்கொண்டே யிருக்க விழையும் ஸ்டெர்லிங் பிரதேச அங்கத்தினர்கள், தமது செலா வணிகளை டாலருடன் தொடர்புபடுத்திக்கொள்ளுதல் அவை களுக்கு அதிக நன்மைகளைப் பயப்பதாக இருக்குமே என்னும் சிந்தனையிலாழ்வதற்கு இது காரணமாக உள்ளது.

இத்தகையதொரு நெருக்கடியான நிலை, முற்றிலும் ஒரு புறமானதாகவும் (entirely one-sided) இருக்கவில்லை. ஸ்டெர்லிங் பிரதேசத்தின் மையமாக இருப்பதில் (as the centre of the Sterling Area) பிரிட்டனுக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது. ஸ்டெர்லிங் பிரதேசத்தின் மற்ற நாடுகளுக்கு அதன் மூலதன அளிப்பு நிலைபேறற்றதாக இருந்துவந்தபோதிலும், குறிப்பாகப் போருக்குப் பிந்திய ஆண்டுகளில் அத்தகைய அளிப்புப் போதாததாக இருந்தபோதிலும், அது, அங்கத்தினர் நாடுகளுக்கு ஏற்றுமதிகளின் வாயிலாகப் பெருந் தொகைகளைக் கடனுகக் கொடுத்தே வந்தது. இந்த ஏற்றுமதிகளுக்கு ஈடாக, பிரிட்டன் அந்த அங்கத்தினர் நாடுகளினின்றும் இறக்குமதிப் பொருள்

களைப் பெறவில்லை. காரணம் என்னவெனில், அந் நாடுகள், பிரிட்டனிலிருந்தும் தாம் பெற்ற பொருள்களுக்கு மாற்றாக அதற்குப் பொருள்களை அனுப்பி ஈடு செய்யாமல், அவைகள் பிரிட்டனில் இருப்பு வைத்திருந்த ஸ்டெர்லிங் இருப்புகளினின் றும், தாம் பிரிட்டனின் மேற்கூறிய ஏற்றுமதிப் பொருள்களுக் குப் பணம் செலுத்தி வந்தன. மார்ஷல் உதவித் திட்ட ஆண்டு களின்போது (during the years of the Marshall Aid Programme) இத்தகைய 'கைம்மாறு பெரு ஏற்றுமதிகளின்' (unrequited exports) மூலம் ஸ்டெர்லிங் பிரதேசத்தின் மற்ற நாடுகளுக்கு அதிக அளவு மூலதனத்தை வழங்கியுள்ளது ; இந்தத் தொகை மார்ஷல் உதவித் திட்டத்தின்கீழ் பிரிட்டன் பெற்ற தொகை யைக் காட்டிலும் அதிகமே. இத்தகைய மூலதன வெளியோட்ட மானது (capital outflow) ஐக்கிய அரசாங்கத்தின் பொருளாதார முறைக்கு, உள்நாட்டு இடர்ப்பாடுகளையும் வெளிநாட்டு இடர்ப் பாடுகளையும் (internal and external difficulties) கணிசமான அள விற்கு அதிகரிப்பதாக இருந்தது.

மேலும், பவுண்டு ஸ்டெர்லிங்கின் (pound sterling) தொடர்ந்த மாற்றுரிமையற்ற நிலையானது (the continued inconvertibility) பிரிட்டன் ஸ்டெர்லிங் பிரதேசம் முழுமைக்கும் பாங்கராக (banker) இருக்கும் நிலைக்குப் பெரிதும் பாதகமாயுள் ளது. ஏற்கெனவே நாம் பார்த்தது போன்று மிகவும் அண்மை யாகவுள்ள ஆண்டுகளில் அது நடத்திய வாணிபத்தால் பிரிட்டன் முழுவதும் தழுவியதோர் உபரியைப் (surplus) பெற்றது. டாலர் அல்லாத உலகத்தில் (அதிலும் குறிப்பாக ஸ்டெர்லிங் பிரதேசத் தின் மற்ற நாடுகளில்) அது பெற்ற உபரியைப் பொன்னாகவும் டாலர்களாகவும் (gold and dollars) பெற்றிருக்குமேயாகில், அதன் டாலர் பற்றுக்குறையானது (dollar gap) எளிதாக நிரப்பப்பெற் றிருந்திருக்கும்; அதனுடைய செலாவணியின் மாற்றுரிமையும் பாதுகாக்கப்பட்டிருக்கும். நிலைமை இவ்வாறிருந்தபோதிலும், லண்டனில் உள்ள பொன் இருப்புகளைக்கொண்டு, ஐக்கிய அரசாங்கமானது டாலர் பொருள்களை (dollar goods) வாங்குவத னாலும், ஸ்டெர்லிங் பிரதேசத்தின் எல்லா அங்கத்தினர் நாடு களும் செய்யும் செலவீடுகளாலும் (outlays) ஏற்படும் டாலர் பற்றுக்குறையினைச் சமாளிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, பவுண்டானது மாற்றுரிமையை அடையவேண்டு மாயின் ஐக்கிய அரசாங்கமும் மற்ற ஸ்டெர்லிங் பிரதேச நாடு

களும், தமது டாலர் செலவுகளைச் சமாளிப்பதற்குப் போதிய அளவு டாலர்களை ஈட்டினால்தான், பவுண்டானது மாற்றுரிமையைப் பெறமுடியும். ஆகவே, ஐக்கிய அரசாங்கமானது (United Kingdom) வலிமை படைத்த நிலையையும், வகையுடைமையையும் (solvency) பெற்றபோதிலும், ஸ்டெர்லிங் பிரதேசத்தின் முக்கிய அங்கத்தினர்களின் திறமையற்ற கைகோள்களால் (unsound policies) பவுண்டின் பூரண மாற்றுரிமையானது தடுக்கப்படவே கூடும். ஆக, ஓரிரு ஸ்டெர்லிங் பிரதேச நாடுகள் பிடிவாதமாக அதிகமாகச் செலவழித்துக்கொண்டிருப்பதன் காரணமாக, பவுண்டானது தொடர்ந்து மாற்றுரிமையற்றிருக்கும் நிலையால் ஏற்படும் நஷ்டங்களையும் இடர்ப்பாடுகளையும் பிரிட்டன் ஏற்பதென்பது, உண்மையில், பயனுறு செயலாகுமா? இரண்டு போர்களினால் வலுவிழந்தும் கடுமையான உள்நாட்டு நெருக்கடிகளைத் தாங்கிக்கொண்டுமிருக்கிற பிரிட்டிஷ் பொருளாதார முறை, ஸ்டெர்லிங் பிரதேசத்திற்குத் தலைமை தாங்குவதால் ஏற்படும் நெருக்கடிகளைத் தாங்கவல்லதா?

அது, தாங்குதல்கூடும் ; தாங்கும் என்றே நம்பப்படுகிறது. ஸ்டெர்லிங் பிரதேசம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, வாணிபமானது நன்கு ஊக்குவிக்கப்பட்டதன் காரணமாகவும், அந் நாடுகள் தமக்குள்ளே தொடர்ந்து கருத்துகளைப் பரிமாறிக்கொண்டும், தங்களது எல்லைக்குள் ஒத்தியங்கக்கூடிய கைகோளினைப் பின்பற்றியமையாலும்—இவற்றில் நிறைகுறைவான நிலைமட்டுமே காணப்பட்டதெனினும்—ஸ்டெர்லிங் பிரதேசம் முழுமையுமே கடந்த காலங்களில் நன்மை அடைந்து வந்துள்ளது. ஸ்டெர்லிங் பிரதேசத்தின் அடிப்பீடத்தில், அரசியல் பிணைப்புகளைக் கொண்டதொரு பொருளாதார அமைப்பு உள்ளது. இத்தகைய அரசியல் பிணைப்புகளை அதன் அங்கத்தினர் நாடுகள் மேற்கொள்கின்றன. ஆக, இத்தகையதொரு பிணைப்பானது அந் நாடுகளை நவீன உலகத்தில் சக்திவாய்ந்தனவாக இருப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதாக உள்ளது. பிரிட்டன் ஸ்டெர்லிங் பிரதேசத்தில் தனது தலைமையை விட்டு விலகிக்கொள்ளுமாயின், அதற்குப் பதிலாகத் தலைமை தாங்கும் தகுதி வேறு எந்த அங்கத்தினருக்கும் இல்லை—அதாவது, காமன்வெல்த் நாடுகள் முழுவதும் ஏற்கக்கூடிய வகையில் எந்த ஓர் அங்கத்தினருக்கும், பிரிட்டனுக்குள்ளது போன்று, வரலாற்று, பொருளாதார சம்பந்தமான அல்லது சட்டபூர்வமான தகுதி இல்லை. மற்றொருபுறம் நோக்குமிடத்து,

ஸ்டேர்லிங் பிரதேசத்தின் மையமாக விளங்கும் தனது தகுதியைக் கொண்டு, பன்னாட்டுப் பொருளாதார விவகாரங்களில் தற்போது பிரிட்டன் பெற்றுள்ள அதிகாரங்களைத் தனியாக நின்று ஓச்சுதல் என்பதும் இயலாது.

4. வளர்ச்சிப் பிரச்சினை (The Problem of Growth)

உலகப் பொருளாதாரத்தில், எதிர்காலத்தில் ஐக்கிய அரசாங்கத்தினுடைய பங்கு எத்தகையதாக இருக்கும் என்னும் இப் பிரச்சினையில் மற்றுமொரு முக்கியப் பொருளாதாரப் பிரச்சினையும் அடங்கியுள்ளது. இந்நூலின் ஆரம்பப் பகுதியில், பொருளாதாரக் கைகோளிற்கு மூன்று பரந்த நோக்கங்கள் உண்டென்று கூறப்பட்டது. அவைகளில், முதலாவது நோக்கம், பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் உற்பத்தியளவை அதிகபட்சமாக்குதலாகும். இரண்டாவது, உற்பத்தியளவு வருமானங்கள் ஆகியவற்றின் மட்டத்தை (the level of output and incomes) நிலைபெறுக்குதலாகும். மூன்றாவதாக, நாட்டு மக்களிடையே, பண்டங்கள், பணிகள் ஆகியவற்றைச் சமமாகப் பகிர்வு செய்தலாகும் (equitable distribution). போருக்குப் பிந்திய கைகோளானது (post-war policy) கடைசியாகச் சொல்லப்பட்ட இரண்டு நோக்கங்களையும் அதிகமாக வலியுறுத்துவதாக இருந்ததுடன், அவற்றை நிறைவேற்றுவதிலும் ஐயமின்றிப் பேரளவில் வெற்றியே கண்டது. ஆயினும், அண்மை ஆண்டுகளில், முதலாவதாகக் கூறப்பட்ட தலைப்பினை பிரிட்டன் சரிவர நிறைவேற்றவில்லை என்பதில் அதிகமான சிந்தனை மேற்கொள்ளப்பட்டது— அதாவது, குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டுகளின்போது, ஒப்பீடான மிகக் குறைவான வீதத்திலேயே அதன் முழுவதும் தழுவிய உற்பத்தியானது பெருகியுள்ளது என்பதில் அதிக சிந்தனை செலுத்தப்பட்டது. சான்றாக, 1950ஆம் ஆண்டினையடுத்த பத்தாண்டுகளில், பிரிட்டனில், உண்மையான மதிப்பில், மக்கள்தொகையில், நாட்டின் தலா உற்பத்தியளவானது (national output per head of the population) 23 சதவீத அளவிற்கே பெருக்கமடைந்துள்ளது. அதே சமயத்தில் ஃபிரான்சிலும் நெதர்லாண்டிலும் (France and Netherlands) 40 சதவீதமும், இத்தாலியில் கிட்டத்தட்ட 70 சதவீதமும், மேற்கு ஐரோப்பாவில் 85 சதவீதத்திற்குக் குறையாமலும் நாட்டின் தலா உற்பத்தியளவானது இருந்து வந்துள்ளது.

ஈண்டு நாம் ஒன்றை நன்கு கவனத்தில் கொள்ளவேண்டும். பிரிட்டிஷ் பொருளாதார அமைப்பில் சில நெடுங்காலக் காரணிகள் (long-run factors) அமைந்திருப்பதுதான் அதன் ஒப்பீடான குறைந்த வீத வளர்ச்சிக்குக் (low rates of growth) காரணமாக உள்ளது. முதலாவதாக, பல நாடுகளில் உள்ளதைப்போலல்லாது, பிரிட்டனின் மக்கள்தொகை விரைவாக அதிகரிப்பதாக இல்லை. தொழில் பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ள ஒரு நாட்டிற்கு ஆற்றல் பொருந்திய விரைவானதொரு தூண்டு விசையாக (a dynamic impetus) இருப்பது மக்கள் தொகையின் பெருக்கமே. இரண்டாவதாக, ஐக்கிய அரசாங்கமானது, ஐரோப்பியத் தொழில் நாடுகளில் மிகவும் பழமையானதாகும். உற்பத்தி அளவின் அதிகமான மட்டத்தை ஏற்கெனவே அடைந்துவிட்ட நாட்டைக்காட்டிலும் குறைந்த உற்பத்தியளவு மட்டத்தையுடைய நாட்டில் வளர்ச்சி வீதங்களை (rates of growth) அதிக விகிதங்களில் அடையப் பெறுவது மிகவும் எளிதாக இருக்கும். (இதற்கு 1948ஆம் ஆண்டினையடுத்த ஆண்டின் போது ஏற்பட்ட மேற்கு ஜெர்மனியின் மீட்சி (the recovery of West Germany) ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். கடைசியாக இக் கருத்தினை மிகவும் ஒட்டியதாகவுள்ள மற்றொன்றைப் பார்ப்போம். தற்காலப் பொருளாதார அமைப்பில் (modern economy) உள்ள வளர்ச்சி முறையின் (the process of growth) பெரும்பகுதியும் தொழிலாளர்கள், தலா உற்பத்தியளவு குறைவாக உள்ள விவசாயத்தைக் கைவிட்டுச் சென்று, தலா உற்பத்தியளவானது அதிகமாகவுள்ள தொழில்துறையை (industry) நாடிச் செல்வதுபற்றியதாகவே உள்ளது. இத்தகையதொரு வளர்ச்சி முறையின் வரம்பினை (limits) பிரிட்டன் ஏறக்குறைய அடைந்துவிட்டதென்றே கூறவேண்டும். பிரிட்டனில் மக்கள்தொகையில் 5 சதவீதத்தினர்தாம் பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் மக்கள்தொகையில் பெரும்பாலோர் இன்றும் விவசாயத்திலேயே ஈடுபட்டுள்ளனர்.

இரண்டாவதாக பிரிட்டனைச் சூழ்ந்துள்ள அரசியல் காரணிகள் (political factors) தம்முடைய பொருளாதாரத்திற்கு, குறிப்பாகத் தம் அயல்நாட்டுச் செலுத்துநிலைக்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சுமைகளை ஏற்றிவைத்துள்ளன. இவைகளுள் ஒன்று பிரிட்டனின் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் தேவைப் பொருள்களாகும். இத்தகைய தேவையினால் பிரிட்டனின்

மதிப்புமிக்க உள்நாட்டுச் சாதனங்கள் செலவழிக்கப்படுவதுடன் அதன் அயல்நாட்டுச் செலவுகளும் அதிகரித்துள்ளன. மற்றும் ஒன்று சென்ற உட்பிரிவில் (previous section) கூறப்பட்டவாறு பிரிட்டன் ஸ்டெர்லிங் பிரதேசத்திற்குத் தலைமை தாங்குவதால் அதற்கு ஏற்பட்டுள்ள வெளிநாட்டு நெருக்கடியாகும் (external strains). மூன்றுவது, காமன்வெல்த்தைச் சார்ந்த மற்ற நாடுகளுக்கு பிரிட்டன் அளித்து வரும் உதவிக் கொடைகளாலும் (grants) அந்நாடுகளில் அது தனது மூலதனத்தை முதலீடு செய்வதாலும் ஏற்படும் இடர்ப்பாடாகும். இத்தகைய காரணிகள் விளையத்தக்கனவா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, இக்காரணிகள் பிரிட்டனின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையை இவைகள் நீடிப்பதில் பெரும்பங்கினை ஆற்றிவந்துள்ளன. இத்தகைய இக்கட்டான அயல்நாட்டுச் செலுத்துநிலையானது உள்நாட்டிலுள்ள தேவையின் பெருக்கத்திற்கு (expansion of demand) — அதன் காரணமாக முதலீட்டிற்கும் உற்பத்தியளவிற்கும்—தடைகளை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டனின் சூழ்நிலையில் இத்தகைய சிக்கல் நிறைந்த அம்சங்கள் இருப்பினும், அண்மை ஆண்டுகளில் பிரிட்டனின் நிலைமைக்கு இவைகள்மட்டுமே காரணம் என்றும் கூறிவிட முடியாது. பிரிட்டிஷ் தொழில்துறையில் (British industry) முதலீட்டு வீதமானது (rate of investment) மிகவும் குறைவாகவும் (பிரிட்டனில் தொழில்கள் மற்ற நாடுகளைக்காட்டிலும் வெகு முன்பாகவே வளர்ச்சியடைந்த காரணத்தால் பழைய இயந்திரங்களும், இன்னும் மற்றத் தொழிற் சாதனங்களும் அதன் தொழில்களில் நிறைந்திருந்ததனுல்), நடப்பு நுகர்ச்சி வீதமானது (the rate of current consumption) வெகு அதிகமாவும் இருந்து வந்ததென்று பலர் விளம்புகின்றனர். (போருக்குப் பிந்திய ஆண்டுகளில் உள்நாட்டு முதலாக்கத்திற்கு ஐக்கிய அரசாங்கமானது தனது நாட்டு வருமானத்தில் ஒருசிறிய அளவையே பயன்படுத்தியது. இவ்வாறு நாட்டு வருமானத்தினின்றும் அது பயன்படுத்திய விகிதம், இத்தகைய முதலாக்கத்திற்குப் பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகள் பயன்படுத்தியுள்ள விகிதத்தைக் காட்டிலும் மிகவும் குறைவானதாகும்.) இன்னும் பிறர், பிரிட்டனில் 'சமூக' மூலதனமாகிய (social capital) வீடுகள், பள்ளிகள் முதலியவற்றிற்கு முதலீட்டில் அதிகமான பகுதி செலவிடப்படுகிறதென்றும், செய்பொருள் தொழிலுக்கு (manufacturing

industry) முதலீட்டில் மிகக் குறைந்த விகிதமே முதலீடு செய்யப் படுகிறதென்றும் கூறுகின்றனர்.

இன்றும் மற்ற வாதங்கள் மனிதர்களுக்கே முக்கியத்துவம் அளிப்பதாக உள்ளன. இத்தகைய வாதங்கள் தொழிலின் இரு திறப்பட்ட பகுதிகளுக்கும், தொடர்ந்த வேலை நிறைவினாலும் (continued full employment) அதன் காரணமாகத் தடைகளையும் (restriction) திறமையின்மையையும் (inefficiency), ஏன் பொறுப் பற்ற தன்மையையும் (irresponsibility) ஏற்கவேண்டியதாக இருப்பதாலும், அளிக்கப்படுகிற வாய்ப்புபற்றி வலியுறுத்துவன வாக உள்ளன. மக்கள் நல நாடு என்னும் தத்துவமானது (welfare state)—மக்கள் நல நாட்டின் கைகோளைச் செயற்படுத்துவதற்கு உயர்மட்ட வரிவிதிப்பு (high level taxation) தேவைப்படும்—அங்காடிப் பொருளாதாரம் (market economy) இயங்குவதற்குக் காரணமாக உள்ள ஒருவர் தண்டனை-மற்றவர் ஊதியம் (punishment-reward) என்றும் இன்றியமையாத செயல் முறையை (mechanism) விலக்கிவிட்டது என்று கூறப்படுகிறது. அது, ஒரு புறம், வேலையின்மைக்கான காரணங்களைப் போக்கியது; மற்றொருபுறம் வருமானங்களை நிறையச் சேர்த்து வைத்துக் கொள்ளுவதையும் தீவிரமாகக் குறைத்தது. இது, நாட்டின் ஆக்க சக்தியையும் (energy) தொழில்துணிவையும் (enterprise) குறைத்ததாகுமா என்னும் வினாவினை எழுப்புகின்றது.

இன்னும் சில வாதங்கள் வளர்ச்சியின் தன்மையை (nature of growth) அடிப்படையாகக் கொண்டனவாக உள்ளன. அதாவது, ஒரு தொழில் நாடானது வளர்ச்சியில் ஒரு குறிப் பிட்ட முதிர்ச்சி நிலையினை அடைந்துவிட்ட பிறகு, மேற் கொண்டும் வளர்ச்சி அடைவதானது, உற்பத்தியளவினை அதி கரிப்பதற்குப் பதிலாக, அதிகரித்த ஓய்வையும் (increased leisure), மிக மட்டு மிஞ்சிச் செலவாகின்ற பணிகளையும் (more lavish expen-ditures), குறைவாக வேலைவாங்கப்படும் வேலைகளையும் (a less exacting pace of work) ஏற்படுத்துவதாக உள்ளது. இத்தகைய தொரு நிலையினை பிரிட்டன் அடைந்துவிட்டதா?

இப் பிரச்சினை சிக்கலானதொன்று என்பது நமக்குத் தெளி வாகப் புரிகின்றது. இப் பிரச்சினையை ஆராய்வதும் அது சம்பந்த மான அறிவுரை கூறுதலும், நாட்டுப் பொருளாதாரப் பெருக்கக்

குழுவின் (National Development Council) பணியாக உள்ளது. ஆனால், இப் பிரச்சினையானது பொருளாதாரத்தை மட்டுமே தழுவிய ஆய்வின்பாற்படும் (pure economic analysis) ஒரு நேரடியான பிரச்சினையாகாது. பொருள்களின் பயன்களைச் சீர்தூக்கி ஆராயும்போது அவைகளுடைய தராதர நன்மைகளையும், அவைகளுக்குக் கொடுக்கவேண்டிய தராதர முதன்மையளிப்பையும் கருத வேண்டியுள்ளது. இதுபோன்றே, மக்கள் நலத் திட்டங்கள் (welfare measure) வளர்ச்சியினைக் குறைப்பதாக இருக்குமாயின், எவ்வளவு மக்கள் நலன் எத்தனை அளவு வளர்ச்சிக்குச் சமம் என்பதனை எதனைக் கொண்டு அளவிட்டுத் தெரிந்துகொள்வது? உற்பத்தியளவில் நிலைபேறு இருக்கவேண்டுமா அல்லது அதிக நிலைபேறு இருக்கவேண்டுமா என்னும் பிரச்சினையும் எழுகின்றது. மேலும், இருக்கின்ற எல்லாப் பிரச்சினைகளுமே உள்நாட்டுப் பிரச்சினைகளாகவும் இல்லை. பிரிட்டனின் உற்பத்தித்திறன் மற்ற நாடுகளைக் காட்டிலும் குறைவான வேகத்தில் அதிகரித்துச் செல்லுவதாக இருப்பின், தொடர்ந்து நீடித்துக்கொண்டேயிருக்கும் அயல் நாட்டுச் செலுத்துநிலைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுதல் சாத்தியமாகுமா? ஆக, இப் பிரச்சினை மற்றுமொரு பிரச்சினையை எழுப்புவதாகவுள்ளது. அதாவது, பிரிட்டன் இத்தகையதொரு வலுவிழந்துள்ளதோர் அயல்நாட்டுச் செலுத்துநிலையினைக் கொண்டு இன்றும் சரிவர முன்னேற்றம் அடையாத நாடுகளுக்கு (under-developed countries) உதவி செய்வது எவ்வாறு? முதன்மையளிக்கப்பட வேண்டிய பல்வேறு பிரச்சினைகளில் இது மற்றுமோர் இடர்ப்பாடான பிரச்சினையாக வுள்ளது.

இப் பிரச்சினைகளில் ஐக்கிய அரசாங்கத்தின் பன்னாட்டு நிலை (international position) பெரிதும் சம்பந்தப்பட்டுள்ளது. ஒப்பீடானதொரு பொருளாதார வலிமையைப் பெற்றிருப்பதில் பின் தங்கியதாக இருக்கும் எந்த ஒரு நாடும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு பன்னாட்டு அரசியல் செல்வாக்கினைத் தொடர்ந்து தன்னகத்தே வைத்துக்கொண்டிருத்தல் என்பதியலாது. ஐக்கிய அரசாங்கமானது இத்தகையதோர் அரசியல் செல்வாக்கை இழந்து வருவதற்கு, ஐக்கிய அரசாங்கத்தின் நவீனகாலச் சூழ்நிலைகள் காரணம் எனக் கூற இயலுமா? இன்னும் சிலர், பிரிட்டனின் பன்னாட்டுக் கடமைகள் மிகவும் அதிகமாகிவிட்டனவென்றும், பன்னாட்டுப் பொருளாதார அரங்கில் (அதன் காரணமாக அரசியல் அரங்கிலும்) பிரிட்டனின்

செல்வாக்குக் குறைதலானது பொதுவாக உலகத்திற்கும் குறிப்பாக ஐக்கிய அரசாங்கத்திற்கும் விழையத்தக்கதொரு நிகழ்ச்சியாகவே இருக்கிறதெனவும் கூறுகின்றனர். இக் கருத்தினை, ஐக்கிய அரசாங்கத்தின் பெருவாரியான மக்கள் ஏற்காமல் போகக்கூடும். இத்தகையதொன்று நிகழுமாயின், இருபதாம் நூற்றாண்டின் வருங்கால ஆண்டுகளில் பிரிட்டனின் தலைவிதியை நிர்ணயிப்பதில் முக்கியமாகவுள்ளதொரு காரணிக்குப் பொருத்தமான வகையில் உடனடியாக முதன்மையளித்தலை அவசியம் மேற்கொண்டொழுகவேண்டும்.

மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்

Lewis, 'Economic Survey', 1919–1939 (Allen & Unwin, London, 1949), Chs. V, X1-XIII.

Sir Dennis Robertson, 'Britain in the World Economy' (Allen & Unwin, London, 1954).

A. Shonfield, 'British Economic Policy since the War' (Penguin Books, London, 1958).

F. W. Paish, 'Studies in an Inflationary Economy' (Macmillan, London, 1962), Ch. 17.

A. K. Cairncross, 'Factors in Economic Development' (Allen & Unwin, London, 1962).

Political And Economic Planning, 'Growth in the British Economy' (Allen & Unwin, London, 1960).

கலைச்சொல் அகராதி

(ஆங்கிலம் — தமிழ்)

A

Absolute	—	நிர்ணயிக்கப்பட்ட
Acceptance Houses	—	ஏற்பகங்கள்
Acceptability	—	ஏற்புத்தன்மை
Accurate	—	சரிநுட்பம்
Actual	—	உள்ளபடியான
Additional	—	கூடுதலான
Advances	—	முன் பணம் (அ) கடன் தொகைகள்
Adverse	—	பாதகமான
Advisory Board	—	அறிவுறுத்தும் சபை
Agent	—	பதிலாண்மை
Aggregate	—	தொகுப்பு
Agreement	—	உடன்பாடு
Agriculture	—	விவசாயம் (அ) பயிர்த் தொழில்
Algebra	—	குறிக் கணக்கியல்
Anticipation	—	எதிர்பார்த்தல்
Appreciate	—	மதிப்பேற்றம் அடைதல்
Argument	—	வாதம்
Artificial	—	செயற்கையான
Assembly	—	சட்டமன்றம்
Assets	—	சொத்துகள்
Assets, existing	—	இருக்கின்ற சொத்துகள்
Assumption	—	எடுகோள்
Attraction	—	கவர்ச்சி
Authorities	—	மேலாண்மையாளர்கள்
Automatically	—	தன்னியக்கமான
Automatic transfer machinery	—	தன்னியக்க மாற்ற இயந்திரத் தொகுதி
Availability	—	கிடைப்பு

B

Backing	— தாங்குதல்
Backwardation	— பின் ஒத்திவைப்புக் கட்டணம்
Baker	— ரொட்டி தயாரிப்பாளர்
Balance	— இருப்பு (அ) நிலுவை
Banker's Bank	— பாங்கர்களின் பாங்கு
Bank charter	— பாங்கு உரிமைப் பத்திரச் சட்டம்
Banking crises	— பாங்கு நெருக்கடிகள்
Banking Department	— பாங்கியல் துறை
Balance of payment	— அயல்நாட்டுச் செலுத்துநிலை
Balance of payments, favourable	— சாதகமான, அயல்நாட்டுச் செலுத்துநிலை
Balance of payments invisible accounts of	— புலனாகா வாணிபச் செலுத்து நிலைக் கணக்கு
Balance of trade	— வாணிபக் கொடுப்பல் நிலை
Balance of trade, favourable	— சாதக வாணிபக் கொடுப்பல் நிலை
Balance of trade, unfavourable	— பாதக வாணிபக் கொடுப்பல் நிலை
Bank credit	— பாங்குச் செலாவணி (அ) பாங்குக் கடன்
Bank of England	— இங்கிலாந்து பாங்கு
Barter	— பண்டமாற்று முறை
Basic year	— அடிப்படை ஆண்டு
Basic tendencies	— அடிப்படையான போக்குகள்
'Bears'	— கரடித் தரகர்கள் (விலை இறக்கும் தரகர்கள்)
Benefit	— பயன்
Benelux countries	— பெனிலக்ஸ் நாடுகள்
Beoyancy of the market	— அங்காடியின் தெம்பூட்டும் திறன்
Bid	— ஏலங்கேட்டல் (அ) விலைக்குத் தருமாறு கேட்டல்
Big five	— பேரைந்து
Bill of exchange	— மாற்று உண்டியல்
Bill market	— உண்டியல் அங்காடி
Board of Trade	— வர்த்தக சபை

Bond — பிணைப்பத்திரம்
Bonus — விருப்பூதியம்
Book-keeping entry — பதியவியல் பதிவு
Boom year — சுபிட்ச ஆண்டு
Borrowers — கடன் பெறுவோர்
Brands — வாணிகச் சின்னங்கள்
Broad groups — அகண்ட தொகுதிகள்
Broker — தரகர்
Building Societies — கட்டடச் சங்கங்கள்
'Bulls' — காளைத் தரகர்கள் (விலை ஏற்றுத் தரகர்கள்)
Bulletin — செய்திக் கதிர்
Buying — வாங்குதல்

C

Cancel — தள்ளுபடி செய்தல்
Capital — மூலதனம்
Capital Issues Committee — மூலதன வெளியீட்டுக் குழு
Capital formation — முதலாக்கம்
Capital flow — மூலதன ஓட்டம்
Capital goods — முதற்கருவிப் பொருள்கள்
Capital market — மூலதன அங்காடி
Cartel — 'கார்ட்டல்' எனப்படும் ஒரு வகை சர்வாதீனம்
Cash reserve — ரொக்கக் காப்பு
Central — மைய
Central Bank — மைய பாங்கு
Changes — மாற்றங்கள்
Charter of Incorporation — நிறுவன அமைப்பு உரிமைக் கட்டணம்
Changes in treatments — நடத்தப்படுதலின் ஏற்படும் மாற்றங்கள்
Chancellor of the Exchequer — கருவூல வேந்தர்
Cheque — செக்
Circular flow — வட்ட ஓட்டம்
Claims — உரிமைகள்
Clearing Banks — தீர்வு பாங்குகள்
Colony — குடியேற்ற நாடு

Columns — கட்டங்கள்
Combined efficiency — ஒன்றுகலந்த திறன்
Combined returns — கூட்டறிக்கை
Commercial Banks — வர்த்தக பாங்குகள்
Commercial bills — வாணிப உண்டியல்கள்
Commission — குழு
Commissioners — ஆணையர்கள்
Committee — குழு
Comparative costs — தராதரச் செலவுகள்
Comparative cost, the law of — தராதரச் செலவு விதி
Compensating effect — ஈடு செய்யும் விளைவுகள்
Competition, fair — நியாயமான போட்டி
Competition, perfect — நிறைவுப் போட்டி
Complex — சிக்கலான
Components — உறுப்புகள்
Compulsory — கட்டாயமான
Concentrate — செறிந்து முனைதல்
Confidence — நம்பிக்கை
Concious — உள்ளார்ந்த
Consignment — அனுப்பீடு
Constant — நிலையான
Constantly — இடையறுமல் (அ) தொடர்ச்சியாக
Consumption behaviour — நுகர்ச்சி நடத்தை
Consumption pattern — நுகர்ச்சி அமைப்பு
Contango — கொள்முதல் மாற்ற ஒத்திவைப்புக் கட்டணம்
Contract — ஒப்பந்தங்கள்
Contraction — குறைப்பு (அ) சுருக்கம்
Controls — கட்டுப்பாடுகள்
Conventional — மரபொழுக்கம்
Convenience — வசதி
Convertibility — மாற்றுத்தன்மை (அ) மாற்றுரிமை
Conversely — மாறுக
Copper — செம்பு
Corresponding — இணையான

Correspondent Bank — செயலி பாங்கு
Cost of living — வாழ்க்கைச் செலவு
Cost of living index — வாழ்க்கைச் செலவுக் குறியீடு
Council of Ministers — அமைச்சர்களின் குழு
Court of Justice — தலைமை நீதிமன்றம்
Crash — பு:றிவு
Credit — வகைமை(அ) கடன் (அ) செலாவணி
Creditors — கடனீவோர்கள்
Credit power — செலாவணிச் சக்தி
Current index — நடப்புக் குறியீடு
Current Production — நடப்பு உற்பத்தி
Customs Union — சுங்க ஒன்றியம்
Current Treasury Bill rate — நடப்புக் கருவூல உண்டியல் வீதம்

D

Dealers — விற்பனையாளர்கள்
Default — தவக்கம்
Deficit — பற்றுக்குறை
Deflation — பண வடிப்பு
Deliberate — ஆழ்ந்தாராய்ந்து செய்யப்பட்ட
Demand — தேவை
Depositors — வைப்பாளிகள்
Depression — மந்தகாலம்
Descrepancy — சமன்கேடு
Destiny — தலைவிதி
Devaluation — மதிப்புக் குறைவு
Development — வளர்ச்சி (அ) பெருக்கம்
Diagnosis — ஆய்ந்துணர்தல்
Differences of opinion — கருத்து வேறுபாடுகள்
Difficulties — இடர்ப்பாடுகள்
Digest — செய்தித் தொகுப்பு (அ) செய்திக் கதிர்
Diminishing returns the law of குறைந்துசெல் விளைவு விதி
Discounts — கழிவுகள்

Disequilibrium — சமன்கேடு
Diversion — திருப்பம்
Diverting effect — திருப்பு விளைவு
Dividends — இலாப ஈவுகள்
Disproportinate — ஏறுமாறான விகிதம்
Divisible — பகுக்கப்படத்தக்க
Division of labours — தொழிற் பகுப்பு
Dollar Area — டாலர் பிரதேசம்
Domestic expenditure — உள்நாட்டுச் செலவு
Dominions — குடியேற்ற உரிமை நாடுகள்
Doubts — ஐயங்கள்
Drastic — தீவிரமான
Dumping — வெளிநாடுகளில் பண்டங்களை விலை குறைத்து விற்பனை செய்தல்
Durable — நீடித்து உழைக்கக்கூடிய (அ) நெடு வாழ்வுடைய
Durable consumers' goods — நுகர்வோர் நெடுவாழ்வுப் பண்டங்கள்

E

Earnings — ஈட்டங்கள்
Economic activity — பொருளாதார நடவடிக்கை
Economic indigestion — பொருளாதாரக் கோளாறு
Economies of scale — பேரளவு உற்பத்திச் சிக்கன நலன்கள்
Effect — விளைவு
Effectiveness — திட்பம்
Elastic — நெகிழ்வுள்ள
Electric-light bulbs — மின் விளக்குக் குமிழ்கள்
Electric current — மின்சக்தி
Element — கூறு
Emergency — அவசர நிலை
Employee's social security — தொழிலாளர்களின் சமூக நலப் பாதுகாப்புப் பங்குத் தொகை
Employers — வேலையளிப்போர்

Employment, theory of —	வேலைக்கோட்பாடு
Endorse —	புறக்குறிப்புச் செய்தல்
Engineering products —	பொறியியல் பொருள்கள்
Entrepreneur —	தொழில் முயல்வோன்
Entertainments —	களியாட்டங்கள்
Equality —	சமநிலை
Equation —	குறிக்கணக்கு
Equilibrium —	சமநிலை
Equipment —	சாதனம்
Equity —	அறமுறை
Erosion —	அரிப்பு
Essential goods —	இன்றியமையாப் பொருள்கள்
Estimates —	மதிப்பீடுகள்
Euratom —	ஐரோப்பிய அணுச் சமுதாயம்
European Coal and Steel Community (E.C.S.C.) —	ஐரோப்பிய நிலக்கரி எஃகு சமுதாயம் (ஐ.நி.எ.ச.)
European Economic Community —	ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம்
European Free Trade Area (E.F.T.A.) —	ஐரோப்பியத் தடையிலா வாணிப எல்லை
European Monetary Agreement.	ஐரோப்பியப் பண உடன்பாடு
European Payments Union (E.P.U.) —	ஐரோப்பியச் செலுத்து ஒன்றியம்
Exchange —	பரிவர்த்தனை (அ) மாற்று
Exchange equalisation Account—	மாற்றுச் சமன் கணக்கு
Exchange, widespread —	பரவலான மாற்று
Excise duties —	ஆயத்தீர்வைகள்
Expansionary directions —	பெருக்கத்துறைகள்
Expectations —	எதிர்காலத்தைப்பற்றிய எண்ணங்கள்
Expenditure —	செலவு
Export market —	ஏற்றுமதி அங்காடிகள்
Export surplus —	ஏற்றுமதி உபரி
Exports unrequited —	கைம்மாறு பெறா ஏற்றுமதிகள்
Expression —	வாய்பாடு
External value —	புறமதிப்பு
Extra income —	கூடுதல் வருமானங்கள்

F

Factors — காரணி
Factor costs — காரணிச் செலவுகள்
Factories — தொழிற்சாலைகள்
Factor of enterprise — தொழில்துணிவு என்னும் காரணி
Factors of production — உற்பத்திக் காரணிகள்
Fall — இறக்கம்
Features — அம்சங்கள்
Federal Reserve Bank — ஐக்கிய ரிசர்வ் பாங்கு
Fiduciary issue — நம்பிக்கை வெளியீடு
Financial crises — பண முறிவுகள்
Finance House — நிதியகம்
Fiscal policy — அரசிறைக் கைக்கோள்
Fixed capital — நிலைமுதல்
Fixed income receivers — நிலையான வருமானத்தைப் பெறுபவர்கள்
Fixed rate — அறுதியிட்ட [(அ) நிலையான (அ) மாறு] வீதம்
Flexible — இணக்கமான
Floating debts — குறுங்காலக் கடன்கள்
Fluctuations — ஏற்ற இறக்கங்கள்
Foreign trade — அயல்நாட்டு வாணிபம்
Formy — வடிவம்
Forward exchange — முன்னோக்கிய மாற்று
Fountain pen — ஊற்றுப் பேனு
Franc — ஃபிராங்கு
Freedom — தன்னுரிமை
Free trade — தடையிலா வாணிபம்
Full employment — வேலை நிறைவு
Full value — முழு மதிப்பு
Furniture — தட்டுமுட்டுச் சாமான்கள்

G

Gains — நலன்கள் (அ) இலாபங்கள்
G.A.T.T. — சுங்கவரி வாணிபப் பொது உடன்பாடு (சு.வா.பொ.உ.)

Genaralise — பொதுமைப்படுத்துதல்
Generations — சந்ததியார்கள்
Geographical factors — நிலவியலான காரணிகள்
Get rid off — விட்டொழித்தல்
Gold reserves — பொற்காப்புகள்
Goldsmiths — பொற்கொல்லர்கள்
Gold standard — பொன் திட்டம்
Goods — பண்டங்கள்
Grants — உதவித் தொகைகள் (அ) உதவி மானியங்கள்
Group — பிரிவினர் (அ) தொகுதி
Group of industries — தொழிற் கூட்டம்
Growth — வளர்ச்சி
Guide — வழிகாட்டி
Gilt-edged — உத்தரவாதம் அளிக்கப்பட்ட

H

Hardship — இடர்ப்பாடு
High Authority — உயர்மட்ட மன்றம்
Hints — குறிப்புகள்
Hire purchase business — தவணைக் கொள்முதல்முறை வாணிபம்
Homogenous — ஒருமித்த தன்மை
Holdings — இருப்புகள்
Harticultural products — தோட்டப்பயிர் விளைபொருள்கள்
Houses for aged — முதியோர் இல்லங்கள்
Human mind — மனித அறிவாற்றல்
Hundred weight — அந்தர்

I

I. O. U. — கடன் வாக்குறுதி
Ice-cream — பனிப்பாலேடு
Idle funds — பயன்படுத்தப்படாத நிதிகள்
Illusory — பொய்ப்பான
Import controls — இறக்குமதிக் கட்டுப்பாடுகள்
Income flow — வருமான ஓட்டம்

Income formation	—	வருமான ஆக்கம்
Income level	—	வருமான மட்டம்
Income, level of	—	வருமானங்களின் மட்டம்
Index numbers	—	குறியீட்டெண்கள்
Index, Official	—	அரசாங்கக் குறியீடு
Indifinite	—	காலவரையறையின்றி
Individual investors	—	முதலீடு செய்கின்ற தனிநபர்கள்
Industry	—	தொழில்
Industrial and Finance Corporation	—	தொழில் நிதியக் கார்ப்பொரேஷன்
Inflation	—	பணவீக்கம்
Inflation, external	—	புறப் பணவீக்கம்
Inflationary gap	—	பணவீக்கப் பிளவு
Infant industry	—	குழந்தைப்பருவத் தொழில்
Inherent	—	உள்ளார்ந்த
Inperfect	—	நிறை குறையான
Instability	—	நிலைபேறின்மை
Institutions	—	நிறுவனங்கள்
Instrument	—	பத்திரம்
Insurance	—	காப்புறுதி
Integration	—	ஒருங்கிணைப்பு
Interdependence	—	ஒருவர்க்கொருவர் கொண்டுள்ள சார்பு
Intermediary	—	இடையாள்
Interest, theory of	—	வட்டிக் கோட்பாடு
Internal duties	—	உள்நாட்டுத் தீர்வைகள்
Internal effects	—	உள்நாட்டு விளைவுகள்
International carrier	—	பன்னாட்டுக் கடத்தி
International institutions	—	பன்னாட்டு நிறுவனங்கள்
Interval	—	இடைவேளை
Intervention	—	தலையீடு
Inter-war Years	—	போருக்கிடையேயுள்ள ஆண்டுகள்
Invention	—	புதிய கண்டுபிடிப்புகள்
Investment	—	முதலீடு
Investment expenditure	—	முதலீட்டுச் செலவுகள்
Investor	—	முதலீடு செய்பவர்
Invisible trade	—	புலனாகா வாணிபம்

Issuing Houses — வெளியீட்டகங்கள்
Issue Department — வெளியீட்டுத்துறை
Items — இனங்கள்

J

Jobbers — பங்கு வர்த்தகர்கள்

L

Labour — உழைப்பு
Labourers, skilled — திறம்பெற்ற தொழிலாளிகள்
Land — நிலம்
Large scale production — பேரளவு உற்பத்தி
Laundry — சலவையகம்
Leak — ஒழுக்கு
Legal tender — சட்டச் செலுத்து
Level of activity — செயல்திற மட்டம்
Liabilities — பொறுப்புகள்
Limit — வரையறை
Liquidity — நீர்மை (அ) ரொக்க நிலை
Liquidity ratio — நீர்மை(அ) ரொக்க நிலை விகிதம்
Listing — பட்டியல்படுத்துதல்
Long-term — நெடுங்கால
Long-term trends — நெடுங்காலப் போக்குகள்
Luxury — போகப் பொருள்

M

Majority — பெருவாரியான
Manager — மேலாளர்
Manufactured goods — செய்பொருள்கள்
Manufactured products — செய்பொருள் பண்டங்கள்
Marginal propensity to consume இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம்
Marginal revenue — இறுதிநிலை வருவாய்
Market, unified — ஒன்றுபட்ட அங்காடி
Marshell Plan — மார்ஷல் திட்டம்
Material thing — சடப் பொருள்கள்
Maximum — அதிகபட்ச

Machanic — பொறிக்கம்மியர்
Medium — மத்திமம்
Metal ores — உலோகத் தாதுக்கள்
Mineral resources — தாதுப்பொருள் சாதனங்கள்
Minimum — குறைந்தபட்ச
Mixture — கலவை
Mobile — பெயர்ச்சித்தன்மை
Mobility — பெயர்ச்சி
Monetary authorities — பண மேலாண்மையாளர்கள்
Monetary policy — பணக் கைக்கோள்
Monetary risk — பணவழி ஆபத்து
Monetary system — பணமுறை
Money market — பண அங்காடி
Mop up — ஒத்தியெடுத்தல்
Moral power — அறவழி அதிகாரம்
Moral suasion — அறவழியில் இணங்கச் செய்தல்
Multilateral trade — பலமுக வாணிபம்
Multiplier — பெருக்கி

N

Nationalise — நாட்டுரிமையாக்குதல்
N.A.T.O. — வட அட்லான்டிக் உடன்படிக்கை நிறுவனம்
National debt — நாட்டுக் கடன்
National Incomes Commission — நாட்டுவருமானங்களின் குழு
Negative — எதிர்க்கணிய
Net gain — நிகர இலாபம்
Nominal value — பெயரளவிலான மதிப்பு
Non-dollar areas — டாலர் வழக்கற்ற பகுதிகள்
Normal — இயல்பான
Normal times — இயல்பான காலங்கள்
Notes — நோட்டுகள்
Numerical sequence — எண் தொடர் வரிசை

O

Obligation — கட்டுப்பாடு
Occassional — இடை நிகழ்வனவாக

O.E.E.C.	—	ஐ. பொ. கூ. அ.
Offset	—	சரிக்கட்டுதல்
Oil	—	கல்லெண்ணெ
Open market operation	—	வெளி அங்காடி நடவடிக்கை
Optimism	—	ஆர்வ நோக்கு
Organisation for Economic Co-operation and Development	—	கூட்டுறவும், முன்னேற்றத் திற்குமான (அ) பெருக்கத் திற்கான அமைப்பு
Organisation for European Economic Co-operation	—	ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு அமைப்பு
Original creditors	—	ஆரம்பக் கடனீவோர்
Oscillations	—	ஊசலாட்டங்கள்
Other	—	பிற
Outflow	—	வெளியேற்றம்
Outstanding orders	—	நிலுவையாகவுள்ள கோரிக்கைகள்
Outer fringes	—	வெளி ஓரங்கள்
Outlay	—	செலவீடு
Output	—	உற்பத்தியளவு
Overdraft	—	மிகுபற்றுச் சீட்டு
Overseas Expenditure	—	வெளிநாட்டுச் செலவுகள்
Overall	—	முழுவதும் தழுவிய
Over simplification	—	மிகை எளிதாக்கம்

P

Panic	—	பீதி
Parallel	—	இணையான
Partnership	—	கூட்டு நிறுவனம்
Peculiar	—	புதுமையான
Penal rates	—	தண்ட வீதங்கள்
Pensions	—	ஓய்வுச் சம்பளங்கள்
Perfect	—	நிறைவான (அ) நிறைவு
Perfectly elastic	—	முற்றிலும் நெகிழ்வுள்ள
Period of prosperity	—	சுபிட்ச காலம்
Periodically	—	காலந்தோறும்
Personal incomes	—	நபர்வாரி வருமானங்கள்
Persuade	—	இணங்கச் செய்தல்

Pessimism — சோர்வு நோக்கு
Petrol — கல்லெண்ணை
Physical — பகுப்பொருளியலான
Plans — திட்டங்கள்
Ploughed back profits — மடித்து உழப்பட்ட இலாபங்கள்
Pool — தேக்கம்
Population — மக்கள்தொகை
Police man — காவல்துறையாள்
Political intentions — அரசியல் நோக்குகள்
Policies, unsound — திறமையற்ற கைக்கோள்கள்
Positive — நேர்க்கணிய
Possibility — சாத்தியக் கூறு
Port — துறைமுகம்
Post — அஞ்சல்
Postulated change — கருதுகோளான மாற்றம்
Post war problems — போருக்குப் பிந்தியப் பிரச்சினைகள்
Post-war reconstruction — போருக்குப் பிந்தியகாலத்து மறுசீரமைப்பு
Pound — பவுண்டு
Pound sterling — பவுண்டு ஸ்டெர்லிங்
Precautionary motive — எச்சரிக்கை நோக்கம்
Preferential treatment — சலுகை காட்டும் முறை
Pressure — நெருக்கச் சக்தி (அ) அமுக்கம்
Pressure of demand — தேவையின் அமுக்கம்
Price level — விலை மட்டம்
Price stability — விலை நிலைபேறு
Priority — முதன்மையளிப்பு (அ) முதலிடமளித்தல்
Problem — பிரச்சினை
Proceeds — ஆதாயங்கள்
Process — முறை
Productive resources — ஆக்கச் சாதனங்கள்
Productive efficiency — உற்பத்தித் திறன்
Productive possibility — உற்பத்தி சாத்தியக் கூறு
Productive superiority — உற்பத்தி மேம்பாட்டுத் திறன்

Professional classes	—	வாழ்க்கைத்தொழில் வகுப்பினர்
Profitability	—	இலாபத்தன்மை
Profits tax, differential rate of	—	வேறுபாட்டு வீதமுடைய இலாபங்களின் வீதம்
Projects	—	திட்டங்கள்
Propensity to save	—	சேமிப்பு நாட்டம்
Proportion	—	விகிதம்
Prospective supply	—	வருங்கால அளிப்பு
Prospects	—	எதிர்கால வாய்ப்புகள்
Prosperity	—	சுபிட்சம்
Protective measures	—	காப்புச் சட்டங்கள்
Provincial cities	—	மாநில நகரங்கள்
Psychological factors	—	உளப்பாங்கான காரணிகள்
Public Administration	—	பொது ஆட்சிமுறை
Public Corporations	—	பொதுக் கார்ப்பரேஷன்கள்
Public deposits	—	அரசாங்க வைப்புகள்
Public utilities	—	பொது வசதி நிலையங்கள்
Purchase, original	—	ஆரம்பக் கொள்முதல்
Purchasing power	—	வாங்குந்திறன்
Purchasing Power Parity Theory	—	வாங்குந்திறன் சமநிலைக் கோட்பாடு

Q

Quality	—	தரம்
Quantity of money	—	பணத்தின் கணியம்
Quotas	—	பங்களவுகள்

R

Range	—	எல்லை
Re-adjustment	—	மறுசரி செய்தல்
Real income	—	உண்மை வருமானம்
Reasonable	—	கிரமமான
Receipt	—	இரசீது
Recession phase	—	பின்னிடல் முகப்பு
Recovery	—	மீட்சி

Recovery phase — மீட்சி முகப்பு
Re-discount — மறுகழிவு செய்தல்
Re-distribution — மறு பகிர்வு
Regions — நிலப் பகுதிகள்
Regular — ஒழுங்காக
Relative importance — ஒப்பீடான முக்கியத்துவம்
Relative values — தராதர மதிப்புகள்
Renew — புதுப்பித்தல்
Repercussions — எதிர் விளைவுகள்
Replenish — நிரப்புதல்
Representatives — பிரதிநிதிகள்
Residence — நாட்டில் உறையும் மக்கள்
Resources — சாதனங்கள்
Restrictions — தடைகள்
Retail index — சில்லறை விலைக்குறியீடு
Retail prices — சில்லறை விலைகள்
Retaliation — பழிவாங்கு நடவடிக்கை
Revenue surplus — வருவாய் உபரி
Reward — ஊதியம்
Rigidity — விறைப்பு நிலை
Risk — ஆபத்து
Road transport — சாலைப் போக்குவரத்து
Routine — வழக்கமான
Run — பீதி

S

Salaries — சம்பளங்கள்
Satisfaction — மன நிறைவு
Saving — சேமிப்பு
Scarce — கிடைப்பருமை
Secretariat — செயலாட்சியகம்
Section — உட்பிரிவு
Sector-to-sector — உற்பத்தித்துறைக்கு உற்பத்தி துறை
Securities — பிணையங்கள் (அ) கடன் பத்திரங்கள்
Selling — விற்றல்

Self-restraint	—	தானடங்குதல்
Self-sufficiency	—	தன்னிறைவு
Selective Credit Controls	—	தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாடுகள்
Sevices	—	பணிகள்
Settlement Day	—	தீர்வு நாள்
Sequence	—	தொடர்வரிசை
Significance	—	முக்கியத்துவம்
Shape	—	உருவம்
Share	—	பங்கு
Shells	—	சிப்பிகள்
Shift	—	இடமாற்றம்
Shoes	—	காற்புதையரணப்கள்
Sinknig Funds	—	கடன் தீர்வு நிதிகள்
Slumps	—	மந்த காலங்கள்
Social investment	—	சமூக முதலீடு
Social Security Benefits	—	சமூகநலப் பாதுகாப்பு உதவிகள்
Solvency	—	வகையுடைமை
Solvency, external	—	புறவகையுடைமை
Sound reputation	—	மிகவும் நன்மதிப்பு
Sovereigny	—	அரசுரிமை
Specialisation	—	தேர்ச்சித் திறன்
Specialised marketing	—	தேர்ச்சித் திறனுடைய அங்காடி விற்பனை முறை
Special position	—	சிறப்பு நிலை
Speculative looms	—	யூகபேர பூரிப்புநிலைகள்
Speculation	—	யூகபேரம்
Speculative demand	—	யூக இலாபத் தேவை
Speculative motive	—	யூக இலாப நோக்கு
Speculators	—	யூகபேர வணிகர்கள்
Spiral	—	திருகு சுழல்
Stability	—	நிலைபேறு
Stage	—	கட்டம்
Standard of living	—	வாழ்க்கைத்தரம்
Step	—	நடவடிக்கை
Sterling Area	—	ஸ்டெர்லிங் பிரதேசம்

Stocks — பங்குப் பத்திரங்கள்
Stockings — பின்னல் காலுறைகள்
Stock exchange — பங்குமாற்றுச் சந்தை நிலையம்
Store of wealth — செல்வத்தின் நிலைக்களன்
Stultify — பயனற்றதாகச் செய்தல்
Strategic reasons — போர்வழிக் காரணங்கள்
Sub-clause — துணை விதி
Subsidy — பண மானியம்
Substance — உறுபொருள்
Substantial — கணிசமான அளவிற்கு
Substitute — பதிலிப்பொருள்
Supply — அளிப்பு
Surplus — உபரி
Survey — அளவாய்வு
Swings — ஊசலாட்டங்கள்
Symbolic language — அறிகுறி மொழி

T

Top Bills — குறைவை உண்டியல்கள்
Tariff wall — சுங்கச் சுவர்
Tariff Negotiation Sessions — சுங்க வரி சமரச மாநாடுகள்
Tastes — விருப்பச் சுவைகள்
Taxation — வரிவிதிப்பு
Technological development — தொழில்நுணுக்க வளர்ச்சி
Teehnique — செயல்முறை
Television set — தொலைக்காட்சிப் பெட்டி
Tender Bills — விலைகூறு உண்டியல்கள்
Terms of trade — வாணிப நிபந்தனைகள்
Theoretical — கோட்பாட்டளவின தான
Time-lag — கால இடைவெளி
Trade cycle — வாணிபச் சகடம்
Trade risk — வாணிப ஆபத்து
Trade Union Movement — தொழிற்சங்க இயக்கம்
Transactions — பேரங்கள்
Transaction Motive — பேர நோக்கு
Transport — கடத்து நிலை

Transport costs — கடத்துச் செலவுகள்
Transfers — மாற்றங்கள்
Transitional period — இடைமாறுபாட்டுக் காலம்
Treasury — கருவூலம்
Treaty of Rome — ரோம் உடன்படிக்கை

U

Ultimate — முடிவான
Uncertaintly — நிலையின்மை
Under-writers — காப்புறுதியளிப்பவர்கள்
Unemployment — வேலையின்மை
Unemployment, chromic — தொடர்ந்த வேலையின்மை
Unemployed factors — வேலையிலமர்த்தப்படாக் காரணிகள்
Unfortunate — அவப்பேறு
Unit — அலகு
Unlimited — வரையறையற்ற
Unmatched — இணை பெறாத
Upward trend — மேல்நோக்கிய போக்கு
Utility — பயன்பாடு

V

Variables — மாறிலிகள்
Vault — இருப்பறை
Verdict of despair — சிதைவுற்றபோது தாறுமாறாக எடுக்கப்படும் முடிவு
Vertical curve — செங்குத்துக் கோடு
Visible trade — புலனாகும் வாணிபம்
Volatile — மாற்றுந் தன்மையுடைய
Volume — அளவு
Volume of credit — கடன் அளவு

W

Wage — கூலி
Wage agreement — கூலி உடன்பாடுகள்
Wage cut — கூலிக் குறைப்பு

Wage earner — கூலியாள்
Wage-price spiral — கூலி-விலைச் சுழல்
Wants — விருப்பங்கள்
War efforts — போர் முயற்சிகள்
Washing machines — சலவைப் பொறிகள்
Wealth — செல்வம்
Weekly return — வார அறிக்கை
Weight — எடை
Weighting — நிறையிடுதல் (அ) பளு உண்டு பண்ணுதல்
Weights, system of — நிறையிடும் முறை
Wireless telegraphy — கம்பியில்லாத் தந்திமுறை
Working Capital — நடைமுறை முதல்
Working rules — செயல் விதிகள்

Y

Yield — வருவாய்

Z

Zero — சுன்னம்

கலைச்சொல் அகராதி

(தமிழ்—ஆங்கிலம்)

அ

அகண்ட தொகுதிகள் — Broad groups
அங்காடியின் தெம்பூட்டுந் திறன் — Buoyancy of the market
அதிகபட்ச — Maximum
அஞ்சல் — Post
அடிப்படையான போக்குகள் — Basic tendencies
அடிப்படை ஆண்டு — Basic year
அமச்சர்கள் அவை — Council of ministers
அம்சங்கள் — Features
அயல்நாட்டு வாணிபம் — Foreign trade
அரசாங்கக் குறியீடு — Index, offlcial
அரசாங்க வைப்புகள் — Public deposit
அரசியல் நோக்குகள் — Political intentions
அரசிறைக் கைக்கோள் — Fiscal policy
அரசுரிமை — Soverignty
அரிப்பு — Erosion
அலகு — Unit
அவசர நிலை — Emergency
அவப் பேறு — Unfortunate
ஆழ்ந்தாராய்ந்து செய்யப்பட்ட Deliberate
அளவாய்வு — Survey
அளவு — Volume
அளிப்பு — Supply
அறமுறை — Equity
அறவழியதிகாரம் — Moral power
அறவழியில் இணங்கச் செய்தல் - Moral suasion
அறிகுறி மொழி — Symbolic language
அறிவுறுத்தும் சபை — Advisory board

அறுதியிட்ட (அ) நிலையான (அ) மாறு வீதம் — Fixed rate

ஆ

ஆக்கச் சாதனங்கள் — Productive resources
ஆணையர்கள் — Commissioners
ஆதாயங்கள் — Proceeds
ஆபத்து — Risk
ஆயத்தீர்வைகள் — Excise duties
ஆய்ந்துணர்தல் — Diagnosis
ஆரம்பக் கடனீவோர் — Original creditors
ஆரம்பக் கொள்முதல் — Purchase, original
ஆர்வநோக்கு — Optimism

இ

இங்கிலாந்து பாங்கு — Bank of England
இடமாற்றம் — Shift
இடர்ப்பாடு — Hardship (or) difficulty
இடைநிகழ்வனவாக — Occassional
இடைமாறுபாட்டுக் காலம் — Transitional period
இடையாள் — Intermediary
இடையறுமல் தொடர்ச்சியாக — Constantly
இடைவேளை — Interval
இணக்கமான — Flexible
இணங்கச் செய்தல் — Persuade
இணைபெருத — Unmatched
இணையான — Parallel
இணையான — Corresponding
இயல்பான — Normal
இயல்பான காலங்கள் — Normal times
இரசீது — Receipt
இருக்கின்ற சொத்துகள் — Assets, existing
இருப்பறை — Vault
இருப்பு (அ) நிலுவை — Balance
இருப்புகள் — Holdings

இலாபத் தன்மை	—	Profitability
இலாப ஈவுகள்	—	Dividends
இறக்கம்	—	Fall
இறக்குமதிக் கட்டுப்பாடுகள்	—	Import controls
இறுதிநிலை நுகர்ச்சி நாட்டம்	—	Marginal propensity to consume
இறுதிநிலை வருவாய்	—	Marginal revenue
இனங்கள்	—	Items
இன்றியமையாத பொருள்கள்	—	Essential goods

ஈ

ஈடு செய்யும் விளைவுகள்	—	Compensating effect
ஈட்டங்கள்	—	Earnings

உ

உடன்பாடு	—	Agreement
உட்பிரிவு	—	Section
உண்டியல் அங்காடி	—	Bill market
உண்மை வருமானம்	—	Real income
உதவிக் கொடைகள் (அ) உதவி மானியங்கள்	—	Grants
உத்தரவாதம் அளிக்கப்பட்ட	—	Gilt-edged
உபரி	—	Surplus
உயர்மட்ட மன்றம்	—	High authority
உரிமைகள்	—	Claims
உருவம்	—	Shape
உலோகத் தாதுக்கள்	—	Metal ores
உழைப்பு	—	Labour
உளப்பாங்கான காரணிகள்	—	Psychological factors
உள்ளபடியான தேவை	—	Actual demand
உள்ளார்ந்த	—	Conscious (or) inherent
உள்நாட்டுச் செலவுகள்	—	Domestic expenditures
உள்நாட்டுத் தீர்வைகள்	—	Internal duties
உள்நாட்டு விளைவுகள்	—	Internal effects
உறுபொருள்	—	Substance
உறுப்புகள்	—	Components

உற்பத்திக் காரணிகள் — Factors of production
உற்பத்தித் துறைக்கு, உற்பத்தித் துறை — Sector-to-sector
உற்பத்தி சாத்தியக்கூறு — Production possibility
உற்பத்தித் திறன் — Productive efficiency
உற்பத்தி மேம்பாட்டுத்திறன் — Productive superiority
உற்பத்தியளவு — Output

ஊ

ஊசலாட்டங்கள் — Swings (or) oscillations
ஊதியம் — Reward
ஊற்றுப் பேனு — Fountain pen

எ

எச்சரிக்கை நோக்கம் — Precautionary motive
எடுகோள் — Assumption
எடை — Weight
எண்தொடர் வரிசை — Numerical sequence
எதிர்க்கணிய — Negative
எதிர்கால வாய்ப்புகள் — Prospects
எதிர்பார்த்தல் — Anticipation
எதிர்விளைவுகள் — Repercussions
எல்லை — Range
எதிர்காலத்தைப்பற்றிய எண்ணங்கள் — Expectations

ஏ

ஏலங்கேட்டல் (அ) விலைக்குத் தருமாறு கேட்டல் — Bid
ஏறுமாறுன விகிதம் — Disproportionate
ஏற்பகங்கள் — Acceptance houses
ஏற்புத்தன்மை — Acceptability
ஏற்ற இறக்கங்கள் — Fluctuations
ஏற்றுமதி அங்காடிகள் — Export markets
ஏற்றுமதி உபரி — Export surplus

ஐ

ஐக்கிய ரிசர்வு பாங்கு — Federal Reserve Bank
ஐ. பொ. கூ. அ. — O.E.E.C.
ஐயங்கள் — Doubts
ஐரோப்பிய அணுச் சமுதாயம் — Eurotons
ஐரோப்பிய செலுத்து ஒன்றியம் — European Payments Union (E.P.U.)
ஐரோப்பியத் தடையிலா வாணிப எல்லை (ஐ.த.வா.எ) — European Free Trade Area (E.F.T.A.)
ஐரோப்பிய நிதி — European Fund
ஐரோப்பிய நிலக்கரி – எஃகு சமுதாயம் (ஐ. நி. எ. ச) — European Coal and Steel Community (E.C.S.C.)
ஐரோப்பியப் பண உடன்பாடு — European Monetary Agreement
ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவு அமைப்பு — Organization for European Economic Co-operation (O.E.E.C.)
ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் — European Economic Community

ஒ

ஒத்தி எடுத்தல் — Mop up
ஒப்பந்தங்கள் — Contracts
ஒப்பீடான முக்கியத்துவம் — Relative importance
ஒருமித்த தன்மை — Homogeneous
ஒருவர்க்கொருவர் கொண்டுள்ள சார்பு — Interdependence
ஒழுக்கு — Leak
ஒருங்கிணைப்பு — Integration
ஒன்று கலந்த திறன் — Combined efficiency
ஒன்றுபட்ட அங்காடி — Unified market

ஃ

ஃபிரான்கு — Franc

க

கடத்துதல்	—	Transport
கடத்துச் செலவுகள்	—	Transport costs
கடப்பாடு	—	Obligation
கடனீவோர்கள்	—	Creditors
கடன்கள்	—	Advances
கடன் அளவு	—	Volume of credit
கடன் தீர்வு நிதிகள்	—	Sinking funds
கடன் தொகைகள்	—	Advances
கடன் பெறுவோர்	—	Borrowers
கடன் வாக்குறுதி	—	IOU
கட்டங்கள்	—	Columns
கட்டம்	—	Stage
கட்டடச் சங்கங்கள்	—	Building Societies
கட்டாயமான	—	Compulsory
கட்டுப்பாடுகள்	—	Controls
கதிர்	—	Digest
கணிசமான அளவு	—	Substantial
கம்பியில்லாத் தந்தி முறை	—	Wireless telegraphy
கரடித் தரகர்கள் (விலை இறக்கும் தரகர்கள்)	—	' Bears '
கருவூலம்	—	Treasury
கருவூலவேந்தர்	—	Chancellor of the Exchequer
கருதுகோளான மாற்றம்	—	Postulated change
கருத்து வேறுபாடுகள்	—	Differences of opinion
கலவை	—	Mixture
கல்லெண்ணெய்	—	Oil (or) petrol
கவர்ச்சி	—	Attractiveness
கழிவுகள்	—	Discounts
களியாட்டங்கள்	—	Entertainments
கறவை உண்டியல்கள்	—	Tap Bills
காப்புச் சட்டங்கள்	—	Protective measures
காப்புறுதி அளிப்பவர்கள்	—	Under-writers
கார்ட்டல் எனப்படும் ஒருவகை சர்வாதீனம்	—	Cartel
கால்புதையரணங்கள்	—	Shoes

காப்புறுதி	—	Insurance
காரணி	—	Factor
காரணிச் செலவுகள்	—	Factor costs
கால இடைவெளி	—	Time lag
காலந்தோறும்	—	Periodically
கால வரையறையின்றி	—	Indefinite
காவல் துறையாள்	—	Policeman
காளைத் தரகர்கள் (விலையேற்றும் தரகர்கள்)	—	' Bulls '
கிடைப்பு	—	Availability
கிடைப்பருமை	—	Scarce
கிரமமாக	—	Regular
கிரமமான	—	Reasonable
குடியேற்ற உரிமை நாடுகள்	—	Dominions
குடியேற்ற நாடு	—	Colony
குழந்தைப் பருவத் தொழில்	—	Infant industry
குழு	—	Committee (or) commission
குறிக்கணக்கியல்	—	Algebra
குறிக்கணக்கு	—	Equation
குறியீட்டெண்கள்	—	Index numbers
குறிப்புகள்	—	Hints
குறுங்காலக் கடன்கள்	—	Floating debts
குறைந்தபட்ச	—	Minimum
குறைந்துசெல் விளைவு விதி	—	The law of Diminishing Returns
குறைப்பு (அ) சுருக்கம்	—	Contraction
கைம்மாறு பெறு ஏற்றுமதிகள்	—	Unrequited exports
கூட்டறிக்கை	—	Combined return
கூடுதல் வருமானம்	—	Extra income
கூடுதலான	—	Additional
கூட்டு நிறுவனம்	—	Partnership
கூலி	—	Wage
கூலி உடன்பாடுகள்	—	Wage agreements
கூலிக்குறைப்பு	—	Wage-cut
கூலி-விலைச் சுழல்	—	Wage-price spiral
கூலியாள்	—	Wage-earner
கூறு	—	Element

கொள்முதல் மாற்ற ஒத்தி வைப்புக் கட்டணம்	—	Contango
கோட்பாட்டளவான	—	Theoretical

ச

சடப்பொருள்கள்	—	Material things
சட்டச் செலுத்து	—	Legal tender
சட்டமன்றம்	—	Assembly
சந்ததியார்கள்	—	Generations
சமன்கேடு	—	Discrepancy (or) disequilibrium
சமநிலை	—	Equilibrium (or) equality
சமூக முதலீடு	—	Social investment
சமூகநலப் பாதுகாப்பு உதவிகள்	—	Social security benefits
சம்பளங்கள்	—	Salaries
சரிக்கட்டுதல்	—	Offset
சரிநுட்பமான	—	Accurate
சலவையகம்	—	Laundry
சலவைப் பொறிகள்	—	Washing machines
சலுகை காட்டும் முறை	—	Preferential treatment
சாதக வாணிபக் கொடுப்பல் நிலை	—	Favourable balance of trade
சாதனம்	—	Equipment (or) resource
சாத்தியக்கூறு	—	Possibility
சாலைப் போக்குவரத்து	—	Road transport
சிக்கலான	—	Complex
சிதைவுற்றபோது தாறுமாறாக எடுக்கப்படும் முடிவு	—	Verdict of despair

டா

டாலர் பிரதேசம்	—	Dollar area
டாலர் வழக்கற்ற பகுதிகள்	—	Non-dollar areas

த

தடைகள்	—	Restrictions
தடையிலா வாணிபம்	—	Free trade

தண்ட வீதம்	Penal rates
தட்டுமுட்டுச் சாமான்கள்	Furniture
தரகர்	Broker
தரம்	Quality
தராதரச் செலவுகள்	Comparative costs
தலைமை நீதிமன்றம்	Court of Justice
தலையீடு	Intervention
தலைவிதி	Destiny
தவக்கம்	Default
தவணைக் கொள்முறை வாணிபம்	Hire purchase business
தள்ளுபடி செய்தல்	Cancel
தன்னியக்க மாற்ற இயந்திரத் தொகுதி	Automatic transfer-machinery
தன்னிறைவு	Self-sufficiency
தன்னுரிமை	Freedom
தாங்குதல்	Backing
தாதுப்பொருள் சாதனங்கள்	Mineral resources
தராதரச் செலவு விதி	Comparative cost, the law of
தானடங்குதல்	Self-restraint
திட்டங்கள்	Projects (or) plans
திட்பம்	Effectiveness
திருகுசுழல்	Spiral
திருப்பம்	Diversion
திருப்ப விளைவு	Diverting effect
திறமையற்ற கைக்கோள்கள்	Policies, unsound
திறம் பெற்ற தொழிலாளர்கள்	Labourers, skilled
தீர்வு பாங்குகள்	Clearing Banks
தீர்வு நாள்	Settlement day
தீவிரமான	Drastic
துணைவிதி	Sub-clause
துறைமுகங்கள்	Ports
தேக்கம்	Pool
தேர்ச்சித்திறன்	Specialisation
தேர்ச்சித்திறன் உடைய அங்காடி விற்பனைமுறை	Specialised marketing

தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் கட்டுப்பாடுகள்	—	Selective credit controls
தேவை	—	Demand
தேவையின் அழுக்கம்	—	Pressure of demand
தொகுப்பு	—	Aggregate
தொகுப்புத் தேவை	—	Aggregate demand
தொடர்வரிசை	—	Sequence
தொடர்ந்த வேலையின்மை	—	Unemployment, chronic
தொழில்	—	Industry
தொழில் நிதியக் கார்ப்பரேஷன்	—	Industrial and Finance Corporation
தொழில்நுணுக்க வளர்ச்சி	—	Technological development
தொழில்முயல்வோன்	—	Entrepreneur
தொழிலாளர்களின் சமூக நலப் பாதுகாப்புப் பங்குத் தொகை	—	Employees' Social Security contributions
தொலைக்காட்சிப் பெட்டி	—	Television set
தொழிற்கூட்டம்	—	Group of industries
தொழிற்சங்க இயக்கம்	—	Trade Union Movement
தொழிற்சாலைகள்	—	Factories
தொழில்துணிவு என்னும் காரணி	—	Factor of enterprise
தொழிற் பகுப்பு	—	Division of labour
தோட்டப் பயிர் விளை பொருள்கள்	—	Horticulturalproducts

ந

நடத்தப்படுதலில் ஏற்படும் மாற்றங்கள்	—	Changes in treatments
நடப்பு உற்பத்தி	—	Current production
நடப்புக் கருவூல உண்டியல் வீதம்	—	Current Treasury Bill
நடப்புக் குறியீடு	—	Current index
நடவடிக்கை	—	Step
நடைமுறை முதல்	—	Working capital
நபர்வாரி வருமானங்கள்	—	Personal incomes
நம்பிக்கை	—	Confidence
நம்பிக்கை வெளியீடு	—	Fiduciary issue

நலன்கள் (அ) இலாபங்கள்	—	Gains
நாட்டில் உறையும் மக்கள்	—	Residents
நாட்டுக் கடன்	—	National debt
நாட்டுரிமையாக்குதல்	—	Nationalise
நாட்டு வருமானங்களின் குழு	—	National Incomes Commission
நிகர இலாபம்	—	Net gain
நிதியகம்	—	Finance House
நியாயமான போட்டி	—	Competition, fair
நிரப்புதல்	—	Replenish
நிர்ணயிக்கப்பட்ட	—	Absolute
நிலப்பகுதிகள்	—	Regions
நிலம்	—	Land
நிலவியலான காரணிகள்	—	Geographical factors
நிலுவையாக உள்ள கோரிக்கைகள்	—	Outstanding orders
நிலைபேறின்மை	—	Instability
நிலைபேறு	—	Stability
நிலைமுதல்	—	Fixed capital
நிலையான	—	Constant
நிலையான வருமானத்தைப் பெறுபவர்கள்	—	Fixed income receivers
நிலையின்மை	—	Uncertainty
நிறுவன அமைப்பு உரிமைப் பத்திரம்	—	Charter of incorporation
நிறுவனங்கள்	—	Institutions
நிறைவானதாக	—	Perfect
நிறைகுறையான	—	Imperfect
நிறையிடுதல் (அ) பளு உண்டு பண்ணுதல்	—	Weighing
நிறையிடும் முறை	—	Weights, system of
நீடித்து உழைக்கக்கூடிய	—	Durable
நீர்மை (அ) ரொக்க நிலை	—	Liquidity
நீர்மை விகிதம்	—	Liquidity ratio
நுகர்ச்சி	—	Consumption
நுகர்ச்சி அமைப்பு	—	Consumption pattern
நுகர்ச்சி நடத்தை	—	Consumption behaviour
நுகர்வோர் நெடுவாழ்வுப் பண்டங்கள்	—	Durable consumers' goods

நெகிழ்வற்ற	—	Inelastic
நெகிழ்வுள்ள	—	Elastic
நெடுங்கால	—	Long-term
நெடுங்காலப் போக்குகள்	—	Long-term trends
நெருக்குச் சக்தி (அ) அமுக்கம்	—	Pressure
நேர்க்கணிய	—	Positive
நோட்டுகள்	—	Notes

ப

பகுக்கப்படத்தக்க	—	Divisible
பங்களவுகள்	—	Quotas
பங்கு	—	Share
பங்குமாற்றுச் சந்தை (அ) பங்குமாற்று நிலையம்	—	Stock exchange
பங்கு வர்த்தகர்கள்	—	Jobbers
பங்குப் பத்திரங்கள்	—	Stocks
பட்டியல்படுத்துதல்	—	Listing
பண அங்காடி	—	Money market
பணக் கைக்கோள்	—	Monetary policy
பணத்தின் கணியம்	—	Quantity of money
பணமானியம்	—	Subsidy
பணமுறிவுகள்	—	Financial crashes
பணமுறை	—	Monetary system
பண மேலாண்மையாளர்கள்	—	Monetary authorities
பணவடிப்பு	—	Deflation
பணவழி ஆபத்து	—	Monetary risk
பணவீக்கம்	—	Inflation
பணவீக்கப் பிளவு	—	Inflationary gap
பண்டங்கள்	—	Goods
பண்டமாற்று முறை	—	Barter
பணிகள்	—	Services
பதிலாண்மை	—	Agent
பதிலிப் பொருள்	—	Substitute
பத்திரம்	—	Instrument
பயனற்றதாகச் செய்தல்	—	Stultify
பயன்	—	Benefit

பயன்படுத்தப்படாத உண்டியல்கள்	Idle funds
பயன்பாடு	Utility
பரவலான மாற்று	Widespread exchange
பரிவர்த்தனை (அ) மாற்று	Exchange
பருப்பொருளியலான	Physical
பலமுக வாணிபம்	Multilateral trade
பவுண்டு	Pound
பவுண்டு ஸ்டெர்லிங்	Pound sterling
பழிவாங்கு நடவடிக்கை	Retaliation
பற்றுக்குறை	Deficit
பனிப்பாலேடு	Ice-cream
பன்னாட்டுக் கடத்தி	International carrier
பன்னாட்டு நிறுவனங்கள்	International Institutions
பாங்கர்களின் பாங்கு	Banker's Bank
பாங்கு உரிமைப் பத்திரச் சட்டம்	Bank charter
பாங்கியல் துறை	Banking department
பாங்குக் கடன்	Bank credit
பாங்கு நெருக்கடிகள்	Banking crises
பாதகமான	Adverse
பாதக வாணிபக் கொடுப்பல் நிலை	Unfavourable balance of trade
பிணைப்பத்திரம்	Bond
பிணையங்கள் (அ) கடன் பத்திரங்கள்	Securities
பிரச்சினை	Problem
பிரதிநிதிகள்	Representatives
பெனிலக்ஸ் நாடுகள்	Benelux countries
பேரளவுஉற்பத்திச் சிக்கன நலன்கள்	Economies of scale
பேரநோக்கு	Transaction motive
பேரைந்து	Big five
புலனாகா வாணிபம்	Invisible trade
பொது ஆட்சி முறை	Public administration
பொதுக் கார்ப்பரேஷன்கள்	Public corporations
பொதுமைப்படுத்துதல்	Generalise

பொது வசதி நிலையங்கள்	—	Public utilities
பொய்ப்பான	—	Illusory
பொருளாதாரக் கோளாறு	—	Economic indigestion
பொருளாதாரக் கூட்டுறவுக்கும் பெருக்கத்திற்குமான அமைப்பு	—	Organisation for Economic Co-operations and Development
பொருளாதார நடவடிக்கை	—	Economic activity
பொறிக்கம்மியர்	—	Mechanic
பொறியியல் பொருள்கள்	—	Engineering products
பொறுப்புகள்	—	Liabilities
பொற்காப்புகள்	—	Gold reserves
பொற்கொல்லர்கள்	—	Goldsmiths
பொன் திட்டம்	—	Gold standard
போகப்பொருள்கள்	—	Luxury goods
போட்டியாளர்கள்	—	Competitors
போருக்கிடையேயுள்ள ஆண்டுகள்	—	Inter-war years
போருக்குப் பிந்திய பிரச்சினைகள்	—	Post-war problems
போருக்குப் பிந்திய காலத்து மறுசீரமைப்பு	—	Post-war reconstruction
பிரிவினர்	—	Group
பிற	—	Other
பின் ஒத்திவைப்புக் கட்டணம்	—	Backwardation
பின்னல் காலுறைகள்	—	Stockings
பின்னிடல் முகப்பு	—	Recession phase
பீதி	—	Panic
பீதி நெருக்கடிகள்	—	Runs
புதிய கண்டுபிடிப்புகள்	—	Inventions
புதுப்பித்தல்	—	Renew
புதுமையான	—	Peculiar
புலனாகா வாணிபம்	—	Invisible trade
புலனாகா வாணிபச் செலுத்து நிலைக் கணக்கு	—	Balance of payments, invisible account of
புறக்குறிப்பு	—	Endorse
புறப்பணவீக்கம்	—	Inflation, external
புறமதிப்பு	—	External value
புறவகையுடைமை	—	Solvency, external

பெருக்கம் (அ) முன்னேற்றம்	—	Development
பெருக்கத் துறைகள்	—	Expansionary directions
பெருக்கி	—	Multiplier
பெயரளவியலான மதிப்பு	—	Nominal value
பெயர்ச்சி	—	Mobility
பெயர்ச்சித் தன்மையான	—	Mobile
பெருவாரியான	—	Majority
பேரங்கள்	—	Transactions
பேரளவு உற்பத்தி	—	Large-scale production
போர்முயற்சிகள்	—	War efforts
போர்வழிக் காரணங்கள்	—	Strategic reasons

ம

மக்கள்தொகை	—	Population
மதிப்பீடுகள்	—	Estimates
மதிப்புக் குறைப்பு	—	Devaluation
மதிப்பேற்றமடைதல்	—	Appreciate
மத்திமம்	—	Medium
மடித்து உழப்பட்ட இலாபங்கள்	—	Ploughed back profits
மந்தகாலம்	—	Depression (or) slump
மரபொழுக்கம்	—	Convention
மறுகழிவு செய்தல்	—	Re-discount
மறுசரிசெய்தல்	—	Re-adjustment
மறுபகிர்வு	—	Re-distribution
மனநிறைவு	—	Satisfaction
மனித அறிவாற்றல்	—	Human mind
மாநில நகரங்கள்	—	Provincial cities
மார்ஷல் திட்டம்	—	Marshall Plan
மாறிகள்	—	Variables
மாறுந்தன்மையதான	—	Volatile
மாறாக	—	Conversely
மாற்றங்கள்	—	Transfers (or) changes
மாற்று உண்டியல்	—	Bill of Exchange
மாற்றுச் சமன் கணக்கு	—	Exchange Equalisation Account

மாற்றுந் தன்மை (அ) மாற்றுரிமை — Convertibility
மிகவும் நன்மதிப்பு — Sound reputation
மிகுபற்றுச்சீட்டு — Overdraft
மிகை எளிதாக்கம் — Over-simplification
மின்சக்தி — Electric current
மின்விளக்குக் குமிழ் — Electric-light bulb
மீட்சி — Recovery
மீட்சி முகப்பு — Recovery phase
முக்கியத்துவம் — Significance
முதலாக்கம் — Capital formation
முதலீடு செய்பவர் — Investor
முதலீடு — Investment
முதலீடு செய்கின்ற தனி நபர்கள் — Individual investors
முதலீட்டுச் செலவு — Investment expenditure
முதன்மையளிப்பு (அ) முதலிடம் — Priority
முதற்கருவிப் பொருள்கள் — Capital goods
முதியோர் இல்லங்கள் — House for the aged
முழு மதிப்பு — Full value
முழுவதும் தழுவிய — Overall
முறிவு — Crash
முறை — Process
முற்றிலும் நெகிழ்வுள்ள — Perfectly elastic
முன்னோக்கிய மாற்று — Forward Exchange
மூலதனம் — Capital
மூலதன அங்காடி — Capital market
மூலதன ஓட்டம் — Capital flow
மூலதன வெளியீட்டுக் குழு — Capital Issues Committee
மேலாண்மையாளர்கள் — Authorities
மேலாளர் — Manager
மேல்நோக்கிய போக்கு — Upward trend
மைய — Central
மைய பாங்கு — Central Bank

வ

வகையுடைமை (அ) கடன் (அ) செலாவணி	—	Credit
வகையுடைமை	—	Solvency
வசதி	—	Convenience
வட அட்லான்டிக் உடன்படிக்கை நிறுவனம்	—	N.A.T.O.
வடிவம்	—	Form
வட்ட ஓட்டம்	—	Circular flow
வட்டிக் கோட்பாடு	—	Interest, theory of
வணிகச் சின்னங்கள்	—	Brands
வரிவிதிப்பு	—	Taxation
வருங்கால அளிப்பு	—	Prospective supply
வருமான ஆக்கம்	—	Income formation
வருமான ஓட்டம்	—	Income flow
வருமான மட்டம்	—	Income level
வருமானங்களின் மட்டம்	—	Incomes, level of
வருவாய்	—	Yield (or) revenue
வருவாய் உபரி	—	Revenue surplus
வர்த்தக சபை	—	Board of Trade
வர்த்தக பாங்குகள்	—	Commercial Banks
வரையறை (அ) வரம்பு	—	Limit
வரையறையற்ற	—	Unlimited
வளர்ச்சி	—	Growth
வழக்கமான	—	Routine
வழிகாட்டி	—	Guide
வாங்குதல்	—	Buying
வாங்குந்திறன்	—	Purchasing power
வாங்குந்திறன் சமநிலைக் கோட்பாடு	—	Purchasing power parity theory
வாணிப ஆபத்து	—	Trade risk
வாணிப உண்டியல்கள்	—	Trade bills

வாணிபச் சகடம் — Trade cycle
வாணிப நிபந்தனைகள் — Terms of trade
வாதங்கள் — Arguments
வாய்பாடு — Expression
வாழ்க்கைத்தரம் — Standard of living
வாழ்க்கைத் தொழில் வகுப்பினர் — Professional classes
வாழ்க்கைச் செலவு — Cost of living
வாழ்க்கைச் செலவுக் குறியீடு — Cost of living index
வார அறிக்கை — Weekly return
விகிதம் — Proportion
விட்டொழித்தல் — Get rid off
விருப்பங்கள் — Wants
விருப்பச் சுவைகள் — Tastes
விருப்பூதியம் — Bonus
விலைகூறு உண்டியல்கள் — Tender bills
விலை நிலைபேறு — Price stability
விலை மட்டம் — Price level
விளைவு — Effect
விவசாயம் — Agriculture
விற்றல் — Selling
விறைப்பு — Rigidity
விற்பனையாளர்கள் — Dealers
வெளி அங்காடி நடவடிக்கைகள் — Open market operations
வெளி ஓரங்கள் — Outer fringes
வெளிநாட்டுச் செலவுகள் — Overseas expenditure
வெளிநாடுகளில் பண்டங்களை விலை குறைத்து விற்றல் — Dumping
வெளியீட்டகங்கள் — Investing houses
வெளியீட்டுத் துறை — Issue Department
வெளியேற்றம் — Outflow

வேலைக்கோட்பாடு	—	Employment, theory of
வேலைநிறைவு	—	Full employment
வேலையளிப்போர்	—	Employers
வேலையில் அமர்த்தப்படாக் காரணிகள்	—	Unemployed factors
வேலையின்மை	—	Unemployment
வேறுபாட்டு வீதமுடைய இலாப வரிகள்	—	Profit tax, differential rate of

ஸ்

ஸ்டெர்லிங் பிரதேசம்	—	Sterling Area

பொருட்குறிப்பு அகராதி

(INDEX)

(எண்-பக்க எண்)

ச

ட

த

ம

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	11	இருக்கும். யாராவது	இருக்கும் யாராவது
7	13	வளர்ச்சி தானிருக்கும்	அளவிற்கே இருக்கும்
21	19	மேலும் படித்தற்குரிய நூல்கள்	மேற்சென்று படித்தற்குரிய நூல்கள்
44	20	தொடந்து	தொடர்ந்து
63	24, 25	தொழில்நிதிக் கார்ப்பரேஷன்(industrial and finance corporation)	தொழில் வாணிப நிதிக் கார்ப்பரேஷன் (industrial and commercial finance corporation)
68	29, 30	விற்கவோ இவ்வாறு இலாபம் அடைவர் எனவும்	விற்கவோ செய்வர் இவ்வாறு இலாபமடைவர் எனவும்
69	32	(monetary)	(monetary authorities)
90	7, 12	கணிசமானது	கணியமானது
90	20	பணக்கணிசத்தை	பணக்கணியத்தை
92	28, 29	ரொக்கக் காப்புகள்	ரொக்கக் காப்புகளில்
110	5	உதவியுரையினை	அறவுரையினை
123	8, 9	சேமிப்பு நாட்டமானது	நுகர்ச்சி நாட்டமானது
130	31	குறிப்பிடத்தக்க மகிழ்ச்சியாக	குறிப்பிடத்தக்க—நிகழ்ச்சியாக
140	6	£ 91	£ 90
144	17	சேமிப்பு நாட்டம்	நுகர்ச்சி நாட்டம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
163	2	கொள்ளப்படும்	கொள்ளும்
165	22,23	(obsollesence)	(obsolesence)
173	19	திட்டத்துட ணிருப்பது	திட்டத்துடன் வைத்திருப்பது
178	26	கேட்டினையே அவர் கள் அடைவர்	கேட்டினையே அடைவர்
192	26	அறுக்கப்படவும்	நீக்கப்படவும்
218	8,9	சேமிப்பு நாட்டம் (Propensity to consume)	—இறக்குமதி நாட்டம் (Propensity to im- port)
218	16	$Y=(I+E)\frac{1}{1-c+m}$	$Y=(I+E)\frac{1}{1-c+m}$,
235	4, 5	பவுண்டு- பிரான்கு ஆகிய இவ்விரண்டும்	பவுண்டு- பிரான்கு மாற்று வீதம் ஆகிய இவ்விரண்டும்
238	15	(free trade)	(multilateral trade)
254	10	(long term funds)	(long term trends)
274	29	குறிப்புச்	குறைப்புச்
275	21, 30	கணிசம்	கணியம்
276	6	ஏறுமதிப்பொருள் களின்	ஏற்றுமதிப் பொருள்களின்
279	14	கணிசத்தடைகளை	கணியத் தடைகளை
284	4	கணிசத் தடைகளை	கணியத் தடைகளை
289	18,19	செயலாட்சி அகத்தினையும்	செயலகத்தினையும்
309	12	1920 ஆம் ஆண்டை	1930 ஆம் ஆண்டை
,,	14	1928	1929
,,	31	காப்புறுதிபட்ட	காப்புறுதி அளிக்கப்பட்ட

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
314	31	(solvence)	(solvency)
319	5	(Iraque)	(Iraq)
322	8	கைம்மாறு பெரு ஏற்றுமதிகள்	கைம்மாறு பெரு ஏற்றுமதிகள்
324	32	நெதர்லாண்டிலும்	நெதர்லாண்ட்சிலும்
326	12	நிலையை இவைகள் நீடிப்பதில்	நிலையை நீடிப்பதில்
329	8	முதன்மை யளித்தலை அவசியம் மேற் கொண்டொழுக வேண்டும்	முதன்மை யளித்தலை வளர்ச் சிப் பிரச்சினை அவசியம் மேற் கொண்டொழுக வேண்டும்
331	2	பின் ஒத்திவைப்புக் கட்டணம்	பின் ஒப்படைப்புக் கட்டணம்

II. நீக்கப்பட வேண்டியவை

322 30 'எனவே' என்ற இச் சொல்லுக்குப் பின்வரும் 'பவுண்டானது மாற்றுரிமை அடையவேண்டுமாயின்' என்னும் சொற்றொடரை நீக்கிக் கொள்க.

III. சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவை

7 5 'அம்சங்களில் பெரும்பாலானவை' என்னும் சொற்றொடருக்குப் பின் 'வேலைப்பகுப்பு' (division of labour) என்னும் சொற்றொடரைச் சேர்த்துக்கொள்க.

219 21 'ஏற்படக்கூடும்' என்று முடிவடையும் வாக்கியத்திற்குப் பிறகு கீழ்க்கண்ட வாக்கியத்தைச் சேர்த்துக்கொள்க :

அதே போன்று நுகர்வோர், அயல்நாட்டுப் பொருள்களுக்குச் செலவிடுவதைவிட உள்நாட்டுப் பொருள்களையே வாங்கி அவற்றிற்காகச் செலவிடும்போது, சேமிப்பு நாட்டத்தில் குறைதல் என்னும் ஓர் உள்நாட்டு விளைவினை ஏற்படுத்தும்.

308 இப் பக்கத்திலுள்ள கடைசி வாக்கியத்திற்குப் பின் கீழ்க்கண்ட வாக்கியத்தையும் இணைத்துக்கொள்க :

அதுபோது பிரிட்டனுக்கு இருந்துவந்த ஓரிரு வெளிநாட்டு அங்காடிகளிலும் ஜப்பானும் இந்தியாவும் போட்டியிடத் தலைப்பட்டன.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை–9

1966வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

*1.	பொருளாதாரம்–II	சி. வேலாயுதம்	9—00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	திருமதி ஆர். தாமரஜாட்சி	12—00
3.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்-I	தி. சி. மோகன்	12—00
4.	,, II	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	10—75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	க. முத்தையன்	7—00
*6.	பணவியலும் பாங்கியலும்-II	சி. வேலாயுதம்	11—50
7.	நவீன பாங்கு இயல்	க. வெற்றிவேல்	7—50
*8.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	பி. வி. ஸ்ரீநிவாசன்	5—50
*9.	அரசாங்க நிதி இயல்	அர. சேஷாசலம்	4—25
10.	இந்தியப் பொருளியல்-I	எம். பாலசுப்பிரமணியன்	10—00
11.	,, II	எம். லூர்துநாதன்	4—25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை-1	சி. சுந்தரராஜன்	10—75
13.	,, II	எஸ். குழந்தைநாதன்	10—50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-I	கீ. சீ. இராமசாமி	6—00
15.	,, II	,,	6—00

*மூலநூல் (Original Book)

பொருளாதாரம்—தொடர்ச்சி

16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி ...	தி. சி. மோகன் ...	5—00
17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு-I ...	மு. க. சுப்பிரமணியம் ...	11—00
18.	,, II ...	பி. வி. சீனிவாசன் ...	6—00
19.	,, III ...	,, ...	6—50
20.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்-I ...	மா. குமாரசாமி ...	10—00
21.	,, II ...	அர. சேஷாசலம் ...	9—50
22.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி–I ...	தே. வேலப்பன் ...	10—00
23.	,, II ...	ஜி. சிதம்பரம் ...	8—00
24.	பணம்—சிறு விளக்கம்	கோ. இராதாகிருஷ்ணன் ...	10—00
*25.	வணிக இயலின் தத்துவங்கள் ...	கு. ஆளுடைய பிள்ளை ...	9—50
26.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில்–வாணிபப் புரட்சி ...	சு. ரா. கறுப்பண்ணன் ...	11—00
27.	பென்ஹாம் பொருளாதாரம்-I ...	ஏ. குழந்தை ...	11—00
28.	,, II ...	எஸ். குழந்தைநாதன் ...	7—00
*29.	வரவு செலவுத் திட்டம்	ஆர். ரங்காச்சாரி ...	6—00

வரலாறு

*30.	பிரிட்டன் வரலாறு-I	கி. ர. அனுமந்தன் ...	10—00
*31.	,, II	,, ...	9—75
*32.	ஐரோப்பிய வரலாறு–I	டி. வி. சொக்கப்பா ...	4—50
33.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம் ...	வை. விருத்தகிரீசன் ...	15—00

34.	இங்கிலாந்து வரலாறு-I	இரா. அண்ணாமலை	13—00
35.	,, II	பா. மாணிக்கவேலு	13—00
36.	,, III	என். ஜே. ராஜகோபால்	8—00
37.	,, IV	,,	8—00
38.	இங்கிலாந்தின் வரலாறு-I	க. த. திருநாவுக்கரசு	15—00
39.	,, II	எம். எக்ஸ். மிராண்டா	8—00
40.	,, III	,,	5—00
41.	இந்தியாவின் சிறப்பு வரலாறு–I	தி வெ. குப்புசாமி	7—50
42.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	9—00
43.	,, III	அ. பாண்டுரங்கன்	11—00
44.	கிரேக்க நாட்டு வரலாறு-I	சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன்	7—50
45.	,, II	,,	7—00
46.	,, III	பி. இராமானுஜம் தேவதாஸ்	7—75

அரசியல்

*47.	இந்திய அரசியலமைப்பு	வீ. கண்ணையா	4—75
48.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	டி. செல்லப்பா	8—50
49.	தற்கால அரசியல் அமைப்புகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	8—50
50.	பன்னாட்டு அரசியல்–I	திருமதி நூர்ஜஹான் பாவா	16—00
51.	பொதுத்துறை ஆட்சி இயல்-I	வீ. கண்ணையா	9—00
52.	,, II	அ. ஜெகதீசன்	7—25
53.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்-I	வீ. கண்ணையா	7—50
54.	,, II	டி. செல்லப்பா	7—50

*மூலநூல் (Original Book)

உளவியல்

55.	குழந்தை உளவியல்–I	கி. ர. அப்புள்ளாச்சாரி	8—00
56.	,, II	,,	7—00
57.	உட்கவர் மனம்	சி. ந. வைத்தீஸ்வரன்	7—00
58.	இளையோர் உளவியல்-I	தி. இரா. அரங்கராசன்	12—00
59.	,, II	,,	9—00
60.	சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	9—25
61.	பிறழ்நிலை உளவியல்	அ. பெசென்ட் கிரீப்பர் ராஜ்	11—00
62.	பித்தரின் உள்ளம்	,,	3—00
*63.	குமர உள்ளம்	டாக்டர் மு. அறம்	6—25

தத்துவம்

64.	இந்துசமயத் தத்துவம்	ஞா. ராஜாபகதூர்	5—50
*65.	அறிவு ஆராய்ச்சி இயல்	ஆர். இராமானுஜாச்சாரி	3—50
*66.	மேலைநாட்டுத் தத்துவம்	ஆர். எஸ். தேசிகன்	3—50
67.	அத்துவித தத்துவம்	ஜி. எம். காந்தி	6—50
68.	ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	5—50
69.	இந்தியத் தத்துவம்	வ. அ. தேவசேனபதி, பா. நா. சண்முகசுந்தரம்	3—50

அறவியல்

70.	அறவியல்—ஓர் அறிமுகம்	கோ. மோ. காந்தி	8—50

அளவையியல்

71.	அளவை இயல்—தொடக்க நூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	2—50

மானிடவியல்

*72.	மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன் ...	4—75
73.	பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியன் ...	5—50
74.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை ...	எஸ். இலட்சுமி ...	3—50

சமூகவியல்

75.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜெ. நாராயணன் ...	10—00

புவியியல்

76.	ஆசியா-I	கொ. சேஷ. நரசிம்மன் ...	9—50
77.	,, II	,, ...	8—75
78.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல் ...	ஏ. எஸ். நாராயணன் ...	8—50
*79.	தென்கிழக்கு ஆசியா	ஜி. கிருஷ்ணமூர்த்தி ...	8—50
*80.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு ...	8—25
*81.	தென் அமெரிக்கா	எம். என். பத்மநாபன் ...	9—00
*82.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா ...	திருமதி எச். நியூமன் ...	4—00
*83.	,, —ஆஃப்பிரிக்கா ...	எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர் ...	3—25
*84.	புவிப்புறவியல்–II	நா. அனந்தபத்மநாபன் ...	6—00
*85	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன் ...	9—00
*86.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன் ...	6—25
*87	சமுத்திரவியல்	கோ. இராமசாமி ...	6—50

*மூலநூல் (Origin 1 Book)

புவியியல்—தொடர்ச்சி

88.	காலநிலை இயல்-I ...	... கொ. சேஷ. நரசிம்மன்	... 10—00
89.	,, II ...	... ,,	... 5—00
90.	வளியியலுக்கு ஓர் அறிமுகம் ...	... கோ. இராமசாமி	... 11—00
*91.	புவி அமைப்பு இயல் ...	... சி. விசுவநாதன்	... 4—75

புள்ளியியல்

*92.	புள்ளியியல்—அறிமுகம் ...	... சு. வைத்தியநாதன்	... 10—00
93.	புள்ளியியல் முறைகள்-I ...	... கோ. சண்முகசுந்தரம்	... 10—00
94.	,, II ...	... கே. ஆர். இராஜகோபாலன்	... 14—00
95.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	.. தி. வி. லட்சுமிநரசிம்மன்	... 6—50

உயர்கணிதம்

*96.	ஆயத்தொலை வடிவகணிதம்	... டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை	... 12—50
*97.	வகை நுண்கணிதம் ...	... ,,	... 8—00
*98.	தொகை நுண்கணிதம் ...	... தி. கோவிந்தராசன்	... 9—00

விலங்கியல்

*99.	விலங்கியல் ...	... பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன்	... 12—00

பௌதிகவியல்

100.	ஒளி நூல் ...	... ச. சம்பத்து	... 10—00

விஞ்ஞானம்

*101.	வானவெளி வெற்றி ...	... டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	... 6—00
*102.	ரேடியோ ...	... ,, பி. திருஞானசம்பந்தம்	... 4—75

*103.	எக்ஸ்-கதிர்கள்	பெ. நா அப்புஸ்வாமி, ஜே. பி. மாணிக்கம்	4—50
*104.	பாம்புகள்	பெ. மா. அண்ணாமலை	3—50
*105.	தாவரம்—வாழ்வும் வரலாறும்	டாக்டர் கு. சீனிவாசன்	8—00
*106.	கரும்பு	கு. பெரியசாமி	4—00
மருத்துவம்			
*107.	நீரிழிவு-க்ஷயரோகம்	டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன்	2—50
108.	மகப்பேறும் மாதர் நோயும்	டாக்டர் (குமாரி) மணிமேகலை	8—25
*109.	பாக்டீரியா	சு. சுந்தரம்	2—50
பொறியியல்			
110.	நீங்களே வீட்டைக் கட்டலாம்	கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம், ஆர். இராமசாமி, கே. வேணுகோபால்	8—50
சட்டம்			
*111.	குற்றவியல் சட்டம்	எம். சண்முகசுப்பிரமணியம்	10—00
பொது நூல்கள்			
112.	மகாத்மா காந்தி	சரஸ்வதிதங்கையன்	3—25
113.	விவசாயப் புரட்சி	வி. கார்த்திகேயன்	8—00
114.	சேமக் கை-நூல்	ஆ. சுப்பிரமணியம்	2—50
*115.	முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்	எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்	9—00
*116.	உணவும் ஊட்டமும்	தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்	4—50

*மூலநூல் (Original Book)